பி.இரயாகரன்



# மனித சாரத்தை மறுக்கும் உலகமயமாக்கம்

www.tamilarangam.net

# மனித சாரத்தை மறுக்கும் உலகமயமாக்கம்

பி. இரயாகரன்

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
✆:044-28412367

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

❑ மனித சாரத்தை மறுக்கும்
உலகமயமாக்கம் ❑ பி.இரயாகரன்
❑ *முதற்பதிப்பு:* டிசம்பர் 2006 ❑ *வெளியீடு:* கீழைக்காற்று,
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.
✆: 044-28412367 ❑ *அச்சாக்கம்:* எழில் பிரிண்ட்ஸ்,
63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 24
❑ *நூலாக்க விபரம்:* 1/8 டெம்மி,
N.S. மேப்லித்தோ,
256 பக்கங்கள்

❑ விமர்சனங்களுக்கு:
P. RAYAKARAN,
32, RUE TROUILLET DEREL
92600 ASNIERES SUR - SEINE FRANCE.
Website: www.tamilcircle.net
email: tamilcircle@tamilcircle.net

❑ *உரிமை:* © ஆசிரியருக்கு

விலை: **ரூ. 100.00**

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 01. | கட்டுரையைப் புரிந்து கொள்வதற்குத் தேவையான அடிப்படைத் தரவுகள். ..... | 05 |
| 02. | முன்னுரை: உலகமயமாக்கம் என்பது அடிமைத்தனத்தையும், மிருகத்தனத்தையும், காட்டுமிராண்டித்தனத்தையுமே ஆதாரமாகக் கொண்டது. ..... | 07 |
| 03. | சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் முதிர்வே உலமயமாதலாகும் ..... | 21 |
| 04. | சமூக உறவுகளின் முழுமையை மறுத்தலே உலகமயமாக்கம் ..... | 25 |
| 05. | தனிப்பட்ட நபர்களின் செல்வக் குவிப்பே, உலகமயமாதலுக்கான சமூக அடிப்படையை உருவாக்குகின்றது. ..... | 36 |
| 06. | உலகளாவிய மூலதனங்களையும், மனித உழைப்பையும் கைப்பற்றி ஒன்று குவிப்பதே உலகமயமாதலுக்கான அஸ்திவாரம். ..... | 82 |
| 07. | உலகை முழுவீச்சில் சூறையாடவே மூலதனங்கள் தமக்கிடையில் ஒன்று சேருகின்றன. ..... | 121 |
| 08. | மூலதனத்துக்கு பைத்தியம் முற்றும் போது, ஏகாதிபத்திய யுத்தங்கள் அரங்கேறுகின்றன. ..... | 125 |
| 09. | மனித உழைப்பு சீனாவில் உயர் வீதத்தில் சுரண்டப்படுவதால், உலகளாவிய மூலதனத்தையே அதிர்வுக்குள்ளாக்குகின்றது ..... | 152 |
| 10. | தேசம் கடந்த பன்னாட்டு மூலதனங்கள், தேச எல்லைகளையே அழிக்கின்றன. ..... | 176 |
| 11. | மக்களின் சமூக வாழ்வைச் சூறையாடுவதே சர்வதேச வர்த்தகமாகும். ..... | 216 |
| 12. | மனித உழைப்பு சார்ந்த உற்பத்திகள் மீது, பன்னாட்டு நிறுவனங்களின் ஏகபோகம். ..... | 232 |
| 13. | மனித குலத்தை நலமடிப்பதற்காகக் கட்டமைக்கப்பட்டதே உலகமயமாக்கம். ..... | 249 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூல் ஆசிரியரின் பிற நூல்கள்

- தேசியம் எப்போதும், எங்கும் முதலாளித்துவக் கோரிக்கையே ஒழிய, பாட்டாளி வர்க்கக் கோரிக்கையல்ல. (மே, 1998)
- ஆணாதிக்கமும் பெண்ணியமும் (டிசம்பர் 2001) (இருப்பு இல்லை)
- இலங்கை யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கலின் படையெடுப்பும் (ஆகஸ்டு 2002)
- ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும் (டிசம்பர் 2002)
- ஆணாதிக்கமும் மார்க்சியமும் (டிசம்பர் 2003)
- ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் கீழ் இலங்கை (டிசம்பர் 2004)
- இலங்கை: இயற்கைப் பேரழிவு தேசத்தின் சீரழிவு (டிசம்பர் 2005)

## தமிழ்நாட்டில் நூல்கள் கிடைக்குமிடம்

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா தெரு,**
**எல்லீசு சாலை,**
**சென்னை** - 600 002.
✆: 044-28412367

## பிரான்சில் நூல்கள் கிடைக்குமிடம்

P. RAYAKARAN
32, RUE TROUILLET DEREL
92600 ASNIERES SUR - SEINE
FRANCE.
Website: www.tamilcircle.net
email: tamilcircle@tamilcircle.net

# மனித சாரத்தை மறுக்கும் உலகமயமாக்கம்

**பி. இரயாகரன்**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா தெரு,**
**எல்லீசு சாலை,**
**சென்னை - 600 002.**
**✆:044-28412367**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கட்டுரையைப் புரிந்து கொள்வதற்குத் தேவையான அடிப்படைத் தரவுகள்

எண்களுக்குரிய சர்வதேச அலகுகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. நான் இந்த நூலை எழுதுவதற்காக வாசித்த நூற்றுக்கணக்கான நூல்களில், இந்த முறையை பலர் சரியாகக் கையாளவில்லை. எண்களைப் பல இடங்களில் எடுத்துக் கையாளும்போது குழப்பியடித்துள்ளனர். எந்த அலகைப் பயன்படுத்தினர் என்ற குறிப்பு தரப்படவில்லை. உதாரணமாகச் சர்வதேச ரீதியாகப் புள்ளி விபரங்களை எடுத்துக் கையாளும்போது டிரில்லியன், பில்லியன் எனப் பல்வேறு எண் அலகுகளை எடுத்துப் பயன்படுத்திய போது, புள்ளி விபரங்கள் ஒன்றுக்கு ஒன்று குழப்பமாகவே காணப்படுகின்றது. இயன்றவரை எனது நூலில் அவற்றைச் சரிபார்த்துப் பயன்படுத்தியுள்ளேன். சரிபார்க்க முடியாதவைகளை இந்த நூலில் பயன்படுத்தவில்லை. சில இடங்களில் அடைப்புக்குறியுடன் பயன்படுத்தியுள்ளேன். கீழே சர்வதேச அலகுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**சர்வதேச அலகுகள்**

**ஐரோப்பிய அலகு**

| | | | |
|---|---|---|---|
| *டிரில்லியன்* | *10,000 கோடி கோடி* | $(10^{18})$ | *(1 000 000 000 000 000 000)* |
| *பில்லியன்* | *1,00,000 கோடி* | $(10^{12})$ | *(1 000 000 000 000)* |
| *மில்லியன்* | *100 கோடி* | $(10^{9})$ | *(1 000 000 000)* |

**அமெரிக்க அலகு**

| | | | |
|---|---|---|---|
| *டிரில்லியன்* | *1,00,000 கோடி* | $(10^{12})$ | *(1 000 000 000 000)* |
| *பில்லியன்* | *100 கோடி* | $(10^{9})$ | *(1 000 000 000)* |

**பொதுவானது**

| | | |
|---|---|---|
| *மில்லியன்* | *10 இலட்சம்* | *(10,00,000)* |
| *நூறுஆயிரம்* | *1 இலட்சம்* | *(1,00,000)* |
| *பத்தாயிரம்* | *10 000* | |
| *ஆயிரம்* | *1000* | |
| *நூறு* | *100* | |
| *பத்து* | *10* | |
| *ஒன்று* | *1* | |

இக்கட்டுரையில் குழப்பத்தைத் தவிர்க்க கோடி, இலட்சம், ஆயிரம் என்ற பழக்கமானதும், விளங்கக் கூடியதுமான சொற்களையே பயன்படுத்தியுள்ளேன். இதன் சர்வதேச அலகுகளைப் புரிந்துகொள்ள அவற்றுக்குரிய அட்டவணையை தந்துள்ளேன். உலகமயமாதல் ஒரு சர்வதேசப் பிரச்சினையாக உள்ளதால், சர்வதேச அலகில் எண் பற்றிய தெளிவு அவசியமானது. உலகமயமாதலை எதிர்த்த போராட்டத்தில், நிலைமையைப் பூரணமாக புரிந்து கொள்வதற்கு, எண்கள் பற்றிய அடிப்படை அறிவு அவசியமானதாகும்.

| | | |
|---|---|---|
| *கோடி* | *1,00,00,000* | *(100 இலட்சம்)* |
| *லட்சம்* | *1,00,000* | *(100 ஆயிரம்)* |
| *ஆயிரம்* | *1,000* | *(100 பத்து)* |

நிலங்களின் பரப்பைப் புரிந்து கொள்ள, கீழ் உள்ள அலகை தெரிந்து கொள்வது அவசியம்.

*ஹெக்டேர்* *10,000 சதுர மீட்டர்*

இக்கட்டுரையில் ரூபா என பயன்படுத்தியுள்ள அனைத்தும் இந்திய ரூபாயைக் குறிக்கின்றது. மற்றவை குறித்த நாட்டின் பணப் பெயரால் குறிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

## 2. முன்னுரை

**உலகமயமாக்கம் என்பது அடிமைத்தனத்தையும், மிருகத்தனத்தையும், காட்டுமிராண்டித்தனத்தையுமே ஆதாரமாகக் கொண்டது**

நாம் எப்படி இருந்தோம், எப்படி இருக்கின்றோம், எப்படி இருக்கப் போகின்றோம் என்பதை உலகமயமாதல் ஒவ்வொருவர் முன்னாலும் கேள்வி எழுப்புகின்றது. உலகமயமாதல் உலகில் உள்ள அனைத்தையும் ஒற்றைப் பரிணாமத்தில் கட்டமைக்கின்றது. சுதந்திரச் சந்தையும், சுதந்திர வாணிபமுமே அனைத்துக்குமான சமூக அடிப்படையாகிவிட்டது. அதாவது **மனித உழைப்பையும், வாழ்வையும் சூறையாடுவதே உலகமயமாதல்.** இதனடிப்படையில் தனிமனித சமூக அமைப்பே உலகம் என்ற கோட்பாட்டு முதன்மை பெற்று, உலகில் உள்ள அனைத்தையும் தனிமனித நலனை மையப்படுத்தி அழிக்கின்றது. இதன் மூலம் அடிமைத்தனத்தையும், மிருகத்தனத்தையும், காட்டுமிராண்டித்தனத்தையுமே மனிதருக்கிடையிலான ஒரேயொரு சமூக உறவாக்கிவிடுகின்றது. இதன் மூலம் சமூக நலனுக்கு எதிரான தனிமனித நலன் என்பது, உலகின் அனைத்துச் செல்வமும் ஒருவனின் தனிப்பட்ட சொத்தாக மாறும் வக்கிரத்தை அடிப்படையாகக் கொண்டே உலகமயமாதல் இயங்குகின்றது.

நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பில் மன்னர்களும், கோயில்களும் நாட்டின் அனைத்துச் செல்வத்தையும் தமதாக்கும் வகையில், மக்களைத் தனக்குச் சேவகம் செய்யும் ஒரு சமூக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்தது. உலகமயமாதலோ ஒரு தனிமனிதனிடம் உலகத்தின் அனைத்துச் செல்வமும் குவிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு அடிமைத்தனத்தையும், மிருகத்தனத்தையும், காட்டுமிராண்டித் தனத்தையும் சமூக உறவாக்குகின்றது. உலகில் உள்ள மக்கள் வளர்ப்பு மந்தைக்குரிய நிலைக்கு தரம் தாழ்ந்து, அடிமைகளாக வாழும் இழிநிலையை உருவாக்குகின்றது. குவிந்து வரும் செல்வத்துக்கும், அதைச் சுற்றி உள்ள மனித விரோத லும்பன்களுக்கும் சேவை செய்பவர்களாக, மக்களின் வாழ்வு ஒழுங்கமைக்கப்படுகின்ற உலகளாவிய நிகழ்ச்சிப் போக்கு சார்ந்த சமூக உறவுதான் உலகமயமாதல்.

மனிதக் கலைகள், மனித இயல்புகள், மனித அறிவுகள், மனிதப் பண்பாடுகள், மனித மொழிகள், மனித கலாச்சாரங்கள், மனித நாகரிகங்கள்.... என அனைத்தும் மனித உழைப்பு சார்ந்து உருவாகின. இந்த மனித வரலாற்றின் பன்மைத் தன்மைகளையே உலகமயமாதல் மறுதலிக்கின்றது. இவற்றைப் படிப்படியாக அழித்தொழிக்கின்றது. மனித இனம் கடந்து வந்த கரடுமுரடான நீண்ட பாதைகளில், பல மனிதச் சிதைவுகளைக் கண்ட போதும் இன்று மனித இனம் காணும் அழிவுகள் மிகப் பிரம்மாண்டமானது. அது இயற்கை முதல் மனித உயிர்கள் வரை எதையும் விட்டு வைக்கவில்லை. வளர்ப்பு மந்தைக்குரிய அடிமைத்தனத்தையும், மிருகத்தனத்தையும் காட்டுமிராண்டித்தனத்தையும் உலகமயமாதல் தனது பண்பாக்கி, அதையே மனித இயல்பாக்குகின்றது. இப்படிச் சூறையாடும் முதலாளித்துவமும், அதன் ஆன்மாவாக உள்ள ஜனநாயகமும் வக்கிரம் பிடித்த நிலையில், மனித இனத்துக்கு எதிராகவே தன்னையும் தனது ஆன்மாவையும் வெளிப்படுத்தி பேயாட்டம் ஆடுகின்றது. இதையே **மார்க்ஸ்** வார்த்தைகளில் கூறுவதானால் **அவை உரிமைகளை விட்டுவிட்டு அடிமைத்தனத்தை மட்டும், சமூக உறவுகளின் பண்புகளை விட்டுவிட்டு மிருகத்தனத்தை மட்டும், பண்பாட்டை விட்டுவிட்டு காட்டுமிராண்டித்தனத்தை மட்டும் வெளிப்படுத்துகின்றன.** தனிமனித சொத்துரிமையை மனித இனத்துக்கு எதிராகவே, நிலை நிறுத்தும் மூலதனத்தின் வேட்கை எல்லையற்றது. மற்றொருவனிடம் கடைசித் துளியாக எஞ்சியுள்ள சுய மனித உழைப்பும், தனிச் சொத்துரிமையும் உள்ளவரை, பேயாட்டம் ஆடுவதை மூலதனம் நிறுத்திவிடப் போவதில்லை.

மனித இனம் வரலாறு தெரிந்த காலம் முதல் நடந்த அனைத்துப் போராட்டங்களும், வர்க்கப் போராட்டங்களாகவே இருந்துள்ளது.



இந்த வர்க்கப் போராட்டம் என்பது மனித உழைப்பைச் சுரண்டியவனுக்கும், சுரண்டப்பட்டவர்களுக்கும் இடையிலானதாக இருந்துள்ளது. இதற்குள் தான் நீதி, ஒழுக்கம், பண்பாடு, கலாச்சாரம் முதல் ஜனநாயகம் வரை அனைத்தும் குதியாட்டம் போடுகின்றது. உலகமயமாதல் இதற்கு வெளியில் எந்தவிதத்திலும் தன்னைத் தகவமைத்துவிடவில்லை. இதைச் சுரண்டலுக்கு அப்பாற்பட்ட முற்போக்கான ஒன்றாகத் திரித்தும் புரட்டியும் காட்டும் சந்தர்ப்பவாத உலகமயமாதல் ஆதரவு அறிவாளிகளும் இருக்கின்றார்கள். அவர்கள் உலகமயமாதலை முதலாளித்துவத்தில் இருந்தும் வேறுபட்ட ஒன்றாகவே காட்டமுயல்வதன் மூலம், உலகமயமாதலை எதிர்புரட்சிகர வழிகளில் பாதுகாக்க முனைகின்றனர். ஆனால் முதலாளித்துவப் புரட்சிக்குப் பிந்திய ஒரு சமூக அமைப்பில் நீடித்த இயங்கியல் போக்கில் இருந்து, உலகமயமாதல் எந்த விதத்திலும் தன்னை மாற்றிக் கொண்டதில்லை. உலகமயமாதல் முதலாளித்துவத்தின் ஒரு நீட்சியாக, அதன் கொடூர வடிவங்களில் ஒன்றாகவே தொடருகின்றது. வர்க்கப் போராட்டத்தினால் முதலாளித்துவம் கடுமையான உள் முரண்பாட்டையும், வெளி முரண்பாட்டையும் தொடர்ச்சியாகச் சந்தித்தது, சந்தித்து வருகின்றது. முதலாளித்துவத்தின் வளர்ச்சி, அதாவது சொத்துகளைக் குவிப்பது படிப்படியான ஒரு சீரானதும், சீரற்றதுமான குறுக்குநெடுக்கு பாதைகள் ஊடாகவே கடந்து வந்தது. இதன் தொடர்ச்சியில் வர்க்கப் போராட்டங்கள் முன்பைவிட கூர்மையாகியுள்ள இன்றைய நிலையில், அது அமைப்பு ரீதியான பலத்தைக் கொண்டிருக்காத நிலையில், முதலாளித்துவம் முன்பைவிட வேகமாக மூலதனத்தைக் குவிக்க தொடங்கியுள்ளது. இதன் சிறப்பான, குறிப்பான வடிவமே உலகமயமாதல் ஆகும்.

இந்த உலகமயமாதல் மனித இனத்துக்கு எதிரான ஒரு சமூக விரோதியாக, ஒரு குற்றவாளியாக எப்படி செயல்படுகின்றது என்பதை விளக்குகிறது இந்த நூல்.

மறுபக்கம் எனது இந்த முயற்சி கடுமையான போராட்டத்தின் ஊடாகவே நடத்தவேண்டியுள்ளது. சமூக அடித்தளங்கள் அற்ற நிலையில், சமூக ஆதரவு அற்ற நிலையில் தனிமனிதனாகப் போராடும் வாழ்க்கை என்பது, மிகவும் துயரமிக்கதாக உள்ளது. ஈழத் தமிழர் மத்தியில் அன்னியமாகியுள்ள ஒரு நிலையில், சமூக முன்னெடுப்புகளையும், சமூக அங்கீகாரங்களையும் பெறமுடியாத ஒரு நிலையில், உளவியல் ரீதியான நெருக்கடிகள் முதல் வாழ்வுக்காகவும் போராட வேண்டியுள்ளது. நூல்களை வெளிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு வரவும், எனது குடும்ப வாழ்வுக்காகவும் நானே கடுமையாக உழைத்து வாழவேண்டிய நிலையில் உள்ளேன். இந்த நிலைமையைப் புரிந்து கொண்டவர்களாக கூறக் கூடியவர்கள் கூட, எனது ஒரு நூலை வாங்கி ஆதரவு தருவதில்லை. நான் மரணித்தால் 100 இரங்கல் அஞ்சலிகளைக் கூட இவர்கள் வெளியிட்டு விடுவார்கள். ஆனால் எனது நூலின் பத்து பிரதியைக் கூட இவர்களிடையே விற்பது என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது. நூலை வெளியிடவே உழைப்பின் ஒரு பகுதியைப் பயன்படுத்தும் ஒரு நிலையில், நூலை விற்று அதை மீட்க முடியாத போது புதிய வெளியீட்டுக்காக மீண்டும் உழைக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் சாதியம், கலாச்சாரம், இலக்கியம், மலையக மக்கள், இலங்கை முஸ்லீம்கள், இலங்கை இடதுசாரிய வரலாறு மீதான விமர்சனம் என்று பலதுறை சார்ந்த பல பக்கக் குறிப்புகளை அன்றாடம் தொகுத்துள்ளேன். இதை அடிப்படையாகக் கொண்டு அவற்றை நூலாக்க முடியாத அளவுக்கு, இதற்கான நேரத்தை ஒதுக்க முடியாத நிலையில் உள்ளேன். முழுநேரமும் எழுத்துப் பணியில் ஈடுபடுவதன் மூலம் தான் இதைப் பூர்த்தி செய்யமுடியும், ஆனால் அதற்கான சமூக அடிப்படையின்மை, உளவியல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சமூக நலன் அடிப்படையில் காலத்தைச் செலவு செய்து சேகரித்த குறிப்புகள் கூட, எனது கடின உழைப்பைத் தாண்டி வீணாகிவிடுமோ என்ற அச்சம், இயல்பாகவே மிக வேதனையைத் தரக்கூடியது. எட்டு மணி நேரம் கட்டாயம் உழைத்து வாழவேண்டிய நிலையில் இருந்தும், மற்றொரு எட்டு மணி நேரம் இதற்காக உழைக்கும் நிலையில் இருந்தும், சமூக ஆதரவின்மையால் எனது உழைப்பின் பலனை முழுமையாக வெளிக் கொண்டு வரமுடியாத நிலையில் உள்ளேன். அத்துடன் சமகால சமூக நிகழ்ச்சிகள் மீதும் தொடர்ந்து கருத்தை முன்வைப்பது மிக அவசியமானதாக உள்ளது. இதனால் உயிர் ஆபத்துடன் கூடிய அச்சுறுத்தல் பின் தொடரும் நிலையில், போராட்டம் என்பது மேலும் கடுமையானதாக மாறுகின்றது. இந்தக் கடுமையான பல தொடர் நெருக்கடியான நிலைமையின் ஊடாகவும், எனது தனிப்பட்ட வாழ்வை இதற்காக முழுமையாக அர்ப்பணித்த நிலையில் தான், இந்த நூல் உங்களுக்கு கிடைக்கின்றது.

இயல்பானதும் இயற்கையானதுமான மனிதப் போராட்டத்தில், எல்லையற்ற நீடித்த வரலாற்றில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். **நாம் என்று சிந்திக்கும் ஒவ்வொருவரும், மக்களின் வாழ்க்கை என்ன? என்ற ஒரு பரந்த தளத்தில் உலகைப்**



**பகுத்தாராயக் கற்றுக் கொள்வதும், அதற்காகப் போராடுவதுமே மிக உயர்ந்த மனித ஒழுக்கமாகும்.** உலக மக்களுக்காக, நாம் அவர்களுடைய அன்றாட வாழ்வில் இணைந்து, ஒரே சமூக அமைப்பாகப் போராடுவது தான் உயர்ந்த ஒரு ஜனநாயகமாகும். இதை அடிப்படையாகக் கொண்டே லெனின் **மனித ஒழுக்கத்தின் சிறந்த கூறுகளே இலட்சியங்கள்** என்றார். மற்றவனைப்பற்றி அக்கறைப்படாத இலட்சியங்கள், ஒழுக்கக்கேட்டின் மிக மோசமான பண்புக் கூறாகும். இது சமூக விரோதத் தன்மை கொண்டது. தன்னைப் பற்றி மட்டுமே அக்கறைப்படும் ஜனநாயகமும், அதற்கான சுதந்திரமும் எப்போதும் மற்றவனுக்கு அதை மறுப்பதை அடிப்படையாகக் கொண்டது. உண்மையில் ஜனநாயக விரோதத்தின் மொத்த ஆன்மாவே முதலாளித்துவம் தான். இதற்கு மாற்று எதுவும் உலகத்தில் கிடையாது. மனித சமூக சாரம் என்பது, தனிமனித விருப்பங்கள், அவனின் தனிப்பட்ட உணர்வுகள் அல்ல. மாறாக, மனிதர்க்கு இடையிலான சமூக உறவுகளே மனித சமூக சாரமாகும். உலகமயமாதல் இதைத்தான் மறுதலிக்கின்றது.

உண்மையான ஜனநாயகம் என்பதும், உண்மையான சுதந்திரம் என்பதும், மக்கள் பற்றிய பொதுவான சமூக நடைமுறைகளில் இருந்துதான் தெரிந்து கொள்ளமுடியும். அலங்காரமான வார்த்தை ஜாலங்களாலோ, ஏமாற்றுக்களாலோ எதையும் எதார்த்த வாழ்வின் மீது மெய்ப்பித்து விட முடியாது. **மாவோ** கூறியது போல் **''உலகத்திலே காணப்படும் எல்லாப் பொருட்களைக் காட்டிலும் மக்கள் தாம் விலைமதிப்பில்லாதவர்கள்; உயர்ந்தவர்கள்.''** இதைத் தாண்டி உலகத்தில் யாரும் எதையும் படைக்க முடியாது. மக்கள் பற்றிய அடிப்படைக் கோட்பாடுதான், மனித நாகரிகத்தின் உயர்வு பற்றி பேசுவதற்குரிய ஒரேயொரு சமூக அடிப்படையாக உள்ளது. இது மனித சமூக சாரத்தை அடிப்படையாகக் கொண்டது.

இன்று மனித உழைப்பின்றி யாரும் உயிர்வாழ முடியாது. ஆனால் உழைப்பவனுக்கு உண்ண உணவு இல்லை. உழைப்பவன் இயற்கையான நீரைக் கூட குடிக்கும் உரிமை மறுக்கப்படுகின்றது. நீர் கூட சந்தைப் பொருளாகிவிட்டது. இவனுக்குச் சுதந்திரம், ஜனநாயகம் என எதுவும் இல்லை. இந்த அமைப்பால் உன்னதமானதாகக் கூறப்படும் எதையும், உழைப்பவன் பெறமுடியாது. யார் உழைப்பதை மறுக்கின்றானோ, யார் உழைப்பை இழிவானதாகக் கருதுகின்றானோ, அவன்தான் உழைப்பினால் கிடைக்கும் அனைத்து உற்பத்தியையும் நுகர்கின்றான். யார் உழைப்பவனை இழிவாக்கி அவர்களது உழைப்பைத் தனதாக்குகின்றானோ, அவனுடைய இழிவான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்க்கை முறைமை தான், உலகின் உன்னதமான நாகரிகமாகி விடுகின்றது. சமுதாயத்தில் உழைக்கும் மக்களுக்கு ஜனநாயகம் இல்லாத இன்றைய எல்லா நிலையிலும், கட்டமைக்கப்படும் ஜனநாயகப் பீற்றல்கள் அனைத்தும், உழைப்பவனின் ஜனநாயகத்தை மறுப்பதை அடிப்படையாகக் கொண்டது. அனைவருக்கும் ஜனநாயகம் இருந்தால், ஜனநாயகம் ஒரு கருதுகோலேயல்ல அல்லவா? இதற்கு மாறாக ஒருவனுக்கு ஜனநாயகம் இல்லாதபோதுதான், மற்றொருவனுக்கு ஜனநாயகம் இருக்கும். இதுவே இன்றைய எதார்த்தம். இதையே உலகமயமாதல் தனது அடித்தளமாகவும் ஆதாரமாகவும் கொள்கின்றது.

இப்படி உருவாகும் ஜனநாயகத்தின் மூலம் உழைக்கும் மக்களின் உழைப்பைச் சுரண்டியே அன்றாடம் கொழுக்கும் உலகமயமாதல், உழைக்கும் மக்களின் அடிப்படையான சமூகத் தேவைகளைக் கூட மறுக்கின்றது. உழைக்கும் மக்களை இழிவாகக் கருதும் தனிமனித சமூக உருவாக்கமே, உலகமயமாதலின் உயிர் நாடியாக உள்ளது. இங்கு ஜனநாயகம், சுதந்திரம் என எதுவும் மக்களுக்குக் கிடையாது. இந்த உலகமயமாதலின் வக்கிரத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள, உலகவங்கி சீனாவுக்கு வழங்கிய விசேட கடன் ஒன்று, அந்த மக்களின் ஆயுளைக் குறைக்கும் வழிகாட்டுதல் நிபந்தனையுடன் வழங்கப்பட்டது. உலக மக்களின் சராசரி ஆயுளைவிட சீனா மக்களின் சராசரி ஆயுள் இரண்டு வருடம் அதிகமாக இருப்பதை மூலதனத்தால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இரண்டு வருடங்கள் சராசரி ஆயுளைக் குறைக்கக் கோரி உலக வங்கி உத்தரவு இட்டதுடன், அதற்கும் கடன் வழங்கியுள்ளது. உணவு மாற்றத்தின் ஊடாக இயற்கை மரணத்தை அதிகரிக்கக் கோரி, எந்த உணவை அதற்காக வழங்க வேண்டும் என்ற அடிப்படை நிபந்தனையுடன், அதுவும் இறக்குமதி செய்தே உணவு வழங்க வேண்டும் என்ற இரண்டாவது நிபந்தனையுடன் கடன் வழங்கியது. இது தான் உலகமயமாதல்.

மற்றொரு உதாரணத்தைப் பார்ப்போம். 1980-இல் உலக வங்கியின் தலைமை பொருளாதார நிபுணரும், அமெரிக்கக் கருவூலத் துறையின் தலைவருமான லாரன்ஸ் சம்மர்ஸ், 1992-ஆம் ஆண்டு உலக வளர்ச்சி அறிக்கையை எழுதும் பொறுப்பில் இருந்தார். இவர் 1991-இல் ஒரு கடிதத்தை உலகவங்கியின் ஊழியர்களுக்கு வழிகாட்டுவதற்காக எழுதினார். அதில் அவர், குறைந்த வளர்ச்சி உடைய நாடுகளுக்கு அசுத்தமான தொழிற்சாலைகளை மாற்றுவதை உலக வங்கி ஏன் ஊக்குவிக்கக்கூடாது? என்று கேள்வியெழுப்பி வழிகாட்டினார். அக்கடிதத்திலேயே அவர் மேலும் குறிப்பிட்டதாவது,



1. மூன்றாம் உலக நாட்டில் கூலி குறைவானது. மாசுக் கேட்டினால் நோய் மற்றும் மரணம் ஏற்படின் குறைந்த செலவே ஏற்படும்.

2. மூன்றாம் உலக நாட்டில் குறைந்த மாசுக்கேடே ஏற்பட்டுள்ளது. இதனால் மாசை அங்கு நகர்த்துவது சிறப்பானது. ஏனெனில் அங்கு வீசும் காற்று லாஸ் ஏஞ்சல்ஸை விட உயர்தரமானது.

3. ஏழைகள் ஏழைகள் தான். ஆகவே சுற்றுச்சூழல் பற்றி கவலைப்படுவது அவர்களுக்குச் சாத்தியமில்லை. ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் மரணம் 200 சதவீதமாக இருக்கும் போது, மார்பு புற்றுநோய்க்கு இரசாயன நஞ்சு காரணம் என்று கவலைப்பட மாட்டார்கள் என்றார். உலக வங்கியின் கொள்கை இப்படித்தான் உலக மக்களுக்கு எதிராக வகுக்கப்படுகின்றது.

இந்த உலகவங்கியும் அதன் வழிகாட்டலுக்கு உட்பட்டு மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கிய கடனுக்காக 2001-ஆம் ஆண்டு வட்டியாகவும் கடன் மீள் கொடுப்பனவாகவும் 38,000 கோடி டாலர் ஏழைகளின் பிணங்களின் மேலாகவே பறித்தெடுத்தனர். இப்படி உலகில் உள்ள அனைத்தையும் அழித்து கைப்பற்றும் இந்த உலகமயமாதல் என்ற அமைப்பு வடிவமே சர்வாதிகாரமானது. இங்கு ஜனநாயகம், விவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. பாசிச சமூக அமைப்பில் சுரண்டும் வடிவம் சார்ந்த நடைமுறை கோட்பாட்டையே ஆதாரமாகக் கொள்கின்றது. தேச எல்லைகளை பலாத்காரமாக அழித்தொழிக்கும் சட்டதிட்டங்களில் கையெழுத்திட்டபோது, மூன்றாம் உலக நாடுகளுக்கு அதில் என்ன இருக்கின்றது என்று தெரியாத கைநாட்டுகளாக கையெழுத்திட்டனர். அதில் என்ன இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே கையெழுத்திட்டனர். அவர்கள் சொல்வதை இவர்கள் செய்யவேண்டும். இப்படித் தான் உலகமயமாதலின் அடிப்படை கோட்பாடு உருவானது. இந்த உலகமயமாதல் உலக ஒழுங்கை அமல் செய்யப் போவதையிட்டு, எந்த நாடும் மக்களிடம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பைக் கூட நடத்தவில்லை. ஏன் இது பற்றி பாராளுமன்றங்களில் விவாதங்கள் கூட நடத்தப்படவில்லை. ஜனநாயகப்பூர்வமான எந்த அடிப்படையும் இன்றி, சர்வாதிகாரமாக ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்பட்டன. பாராளுமன்றங்களில் இந்தப் பொருளாதாரக் கொள்கை மீது ஒரு வாக்கெடுப்பு கூட நடத்தப்படவில்லை. மேல் இருந்து கீழாக ஒரு பாசிசச் சர்வாதிகாரக் கட்டமைப்புத் தான் ஏகாதிபத்திய நலன்கள் சார்ந்து உலகமயமாதலாக பரிணமித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது தேச எல்லைகளையே அழிக்கின்றது. அனைத்து வகையான சமூகப் பண்பாட்டுக் கூறுகளையும் அழிக்கின்றது. உலகளவில் தனிமனிதனை அடிப்படையாகக் கொண்ட, மனித விரோதக் கூறுகளைத் தக்கவைத்து ஒருங்கிணைக்கின்றது. மக்களின் சமூகப் பொருளாதாரப் பாரம்பரியக் கூறுகளை ஈவிரக்கமின்றி குறிவைத்து அழிக்கின்றது. பன்மைத் தன்மை வாய்ந்த மனிதனின் சமூக அறிவியல் கூறுகளை அழிக்கின்றது. இப்படி மனிதனின் வாழ்வுடன் தொடர்புடைய அனைத்தையும் விழுங்கி ஏப்பமிட வழி வகுப்பதுதான் உலகமயமாதல் ஒப்பந்தம்.

குவியும் மூலதனத்தின் உயர்ந்தபட்ச நலன் என்ற ஒரேயொரு வரையறைக்குள், அனைத்தையும் அழித்தொழித்து விடுகின்றது. இந்த உலகமயமாதல் என்பது திடீரென இந்தச் சமூக அமைப்பில் உதித்தது அல்ல. மாறாக இது முதலாளித்துவ அமைப்பின் ஒரு நீட்சியாகும். இதை மார்க்சியம் தனது புரட்சிகரமான நடைமுறை சார்ந்த வரலாற்றுப் பாதையில் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டி வந்துள்ளது. லெனின் இது பற்றிக் கூறும் போது தெளிவாகவே **நிதி, சொத்துரிமை மற்றும் பகுதி அளவு உற்பத்தி ஆகியவற்றில் தொழிலின் அனைத்துக் கிளைகளிலும் ஒரு தனிநாட்டில் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் ஏகபோகங்கள் எடுத்துக் கொள்கின்றன** என்றார். தனிப்பட்ட நபர்களின் கையில் குவிந்துள்ள மூலதனம் என்றுமே தனக்குள் தான் முடங்கிக் கொள்வதில்லை. மாறாக உலகில் உள்ள மனிதர்களின் உழைப்பு படைக்கும் அனைத்துவிதமான உற்பத்தியையும், தனதாகக் கைப்பற்றும் வரை ஓய்வின்றி இயங்குகின்றது. இது தேசத்தின் எல்லைகளை மட்டுமின்றி, மற்றொரு பூமியில் உழைக்க ஓர் உயிரினம் இருந்தால் அங்கும்கூட சென்றுவிடும்.

மனித உழைப்பின் இறுதி மூச்சுவரை மனிதனைச் சுரண்டுவதை மூலதனம் நிறுத்துவதில்லை. மார்க்ஸ் தெளிவாக ஏங்கெல்ஸ்க்கு எழுதிய கடிதத்தில் இதை எடுத்துக் காட்டுகின்றார். **ஒரு துண்டுச் சதை, ஒரு நரம்பு, ஒருதுளி இரத்தம் இருக்கும் வரை கதையில் வருகின்ற உயிருள்ள மனிதனின் இரத்தத்தை உறியும் பணம் போன்று, மூலதனமானது அவனை முழுதும் சுரண்டாமல் அவன்மீது தான் கொண்ட பிடிப்பைத் தளர்த்தாது** என்றார். உலகில் பேய் பற்றிய கற்பனையான புனைவுகள் எதுவாக இருந்தாலும், எதார்த்தத்தில் எது பேயாக இருக்கின்றதோ அதை மார்க்ஸ் தெளிவாகவே படம் படித்துக் காட்டுகின்றார். அந்தப் பேய், தனிநபர்களின் கையில் குவிந்து கிடக்கும் மூலதனமாகும். அந்தப் பேய் கோடானுகோடி மக்களின் வாழ்வை அன்றாடம் பலியெடுக்கும் மூலதனமேயாகும்.



இந்த மூலதனப் பேய் மனித உழைப்பை உயர்ந்த பட்சம் சுரண்டுவதற்கு இசைவாகவே, எப்போதும் தொழில் நுட்பத்தை நோக்கி ஆடுகின்றது. மனிதனை உயர்ந்தபட்சம் சுரண்டுகின்ற அதிநுட்பமான தொழில் நுட்பம் நோக்கி மூலதனம் பேயாட்டம் போடும் போது, இதைத் தொழில்நுட்பப் புரட்சியாகக் காட்டி சிலர் உலகமயமாதலை ஆதரிக்கின்றனர். இது உருவாக்கும் சமூக அமைப்பை, முதலாளித்துவத்தில் இருந்து விலகிய ஒரு புதிய சமூக அமைப்பாகச் சிலர் திரித்துக் காட்டுகின்றனர். உலகமயமாதல் உந்துதலுக்கு உதவும் உயர்ந்த தொழில் நுட்பம் ஒரு புரட்சியாக இருப்பதால், இந்தப் புரட்சியை ஆதாரமாக கொண்டு மக்கள் மேலான சுரண்டல் அமைப்பை ஆதரிக்கின்ற கோட்பாடுகளை அறிவுத்துறையினர் சமூகத்தின் மேல் நஞ்சாக செலுத்துகின்றனர். சமூக அவலத்தை திரித்துக் காட்டுகின்றனர். இதை மார்க்சியம் முன்பு எதிர்கொள்ளாத ஒன்று என்றும், இது புதிதான ஒன்று என்றும் சத்தியம் செய்கின்றனர். உலகமயமாதலை மார்க்சிய வரையறைக்குள்ளேயே பகுத்தாராய முடியாது என்று சத்தியம் செய்கின்றனர். புதிய தத்துவங்கள் அவசியம் என்கின்றனர். இந்தப் போக்கு உலகமயமாதலை எதிர்ப்பதாக பாசாங்கு செய்தபடி பற்பல கோட்பாடுகள் மூலம், உலகமயமாதலின் எதிரணியில் நின்று மக்களின் வாழ்வில் சிறிது சிறிதாக நஞ்சிடுகின்றனர். இந்த கும்பல்களில் யாரும் மக்களுக்காக நடைமுறையில் வீதியில் இறங்கி போராடுபவர்கள் அல்ல.

தொழில்நுட்பம் என்பது உழைப்பின் சுரண்டலை தீவிரப்படுத்தவே உருவாக்கப்படுகின்றது. இந்தத் தொழில்நுட்பத்தைக் கண்டறியும் தனிநபர்கள், இக்கண்டுபிடிப்பு மூலம் தமது தனிப்பட்ட வாழ்க்கையில் பணத்தைக் குவிக்கும் வேட்கையில் இருந்துதான், இந்தப் புரட்சியை மக்களின் பிணங்களின் மேல் நடத்துகின்றனர். மக்களின் அடிப்படை வாழ்க்கையின் நலன்கள் என்ற அடிப்படையில், இந்தத் தொழில்நுட்ப புரட்சி மக்களுக்கு எதிரான நிலையில், எதிர்ப்புரட்சிகரப் பாத்திரத்தையே சமூக இயக்கத்தில் பங்காற்றுகின்றது. இந்த மூலதனத்தின் வக்கிரத்தை மூலதனம் என்ற நூலில் எடுத்துக்காட்டும் மார்க்ஸ் **''உற்பத்தித் திறனைப் பெருக்குதல் வேண்டும். அதன் வாயிலாகச் செய்பண்டங்களின் மதிப்பை வீழ்த்துதல் வேண்டும். அதனால் தன் மிகை மதிப்பைப் பெருக்குதல் வேண்டும் ... செய்பண்டங்களின் மதிப்பை மலிவாக்கிப் பாட்டாளியையே மலிவாக்குதல் வேண்டும்''** என்று தெளிவுபடவே மூலதனத்தின் நோக்கத்தை எடுத்துரைக்கின்றார். தொழிலாளி வர்க்கத்தை மலிவாக்குவது மட்டுமல்ல, உற்பத்திக்குள் உள்ள உழைப்பாளியை ஒழித்துக் கட்டவும், தொழில் நுட்பம் தயங்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்ஸ் கூறுவது போல் ''...ஒவ்வொரு முதலாளிக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. உழைப்பின் உற்பத்தித் திறனை வளர்ப்பதன் மூலமாகச் சரக்குகளின் விலைகளை மலிவாக்குதல் வேண்டும்.'' உழைப்பாளியின் உற்பத்தி திறனை வளர்ப்பதன் மூலம் அதிகம் சுரண்ட முடியும் என்பதால், தொழில் நுட்பம் முதன்மை பெறுகின்றது. மனித உழைப்பில் மனிதனின் ஒரு உறுப்பை இயக்குவதற்குப் பதில், அனைத்து உடல் உறுப்புகளையும் இயங்க வைத்து பிழிந்தெடுக்கும் கலைதான், உழைப்பின் மீதான மூலதனத்தின் தொழில் நுட்பம். மனித உழைப்புதான் தொழில் நுட்பத்தின் உயிர்நாடியாக இருக்கின்றது. ஆனால் தொழில் நுட்பம் மனிதனின் உழைப்பை இயந்திரமயமாக்கியதுடன், அதன் ஒருபாகமாக்கிச் சுரண்டும் ஒரு நுட்ப கருவியாக்கியுள்ளது. மறுபக்கம் சந்தையைப் போட்டி மூலதனத்திடம் இருந்து கைப்பற்றும், உத்தியிலும் கூட நவீன தொழில் நுட்பத்தை புகுத்துகின்றனர்.

தொழில்நுட்பம் சார்ந்து உற்பத்திக் கருவிகள், சுயமாக மனிதஉழைப்பு இன்றி தன்னியல்பாக இயங்கக் கூடியவையல்ல. மார்க்ஸ் மூலதனத்தில் கூறுவது போல் ''.... இயந்திர சாதனங்களைக் கொண்டு நடத்தப்படும் தொழில்களின் பெருக்கமும், புதிய உற்பத்திக் கிளைகளில் இயந்திர சாதனங்களின் படையெடுப்பும் தொழிலாளர் வர்க்கத்தின் வளர்ச்சியைப் பொறுத்தவையாய் இருந்தன. சமுதாயத்தில் வர்க்கத்தின் தோற்றங்களின் பின்னால் வர்க்கப் போராட்டம்தான் உற்பத்தி சக்தியின் வளர்ச்சியை உந்தித் தள்ளுகின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு வர்க்கப் போராட்டம் கூர்மையடைகின்றதோ, அந்தளவுக்குச் சமுதாயம் வர்க்க இருப்பைப் பாதுகாக்க உற்பத்தி சக்தியில் நவீனத்தைப் புகுத்துகின்றது. இந்த நவீனத் தொழில் நுட்பத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டம் மற்றும் இடைஞ்சல் இல்லாது இருப்பின் தொழில் நுட்பம் பாய்ந்து சென்று விடுமா? என்று மார்க்ஸ் கிண்டலாகவே தொழில்நுட்பப் புரட்சி அடிவருடிகளைக் கேலி செய்கின்றார். முதலாளித்துவ அமைப்பில் அதன் நாடி நரம்பாகவே செயல்படும் தொழில் நுட்பப் புரட்சி, வர்க்கப் போராட்டங்களின் எதிர் வினையாகத்தான் உயிர் பெற்றெழுகின்றது. இது மனிதகுலத்துக்கு எதிராகவே, மனித உழைப்பைச் சிறுமைப்படுத்தும் நோக்கில் களத்தில் குதிக்கின்றது. இதன் மூலம் மனிதனின் தன்மான உணர்வையே நலமடித்து விடுகின்றது.

மார்க்ஸ் மூலதனத்தில் கூறுவது போல் ''முதலாளிகள் எந்திரங்களைப் புகுத்துதல் பாட்டாளியின் வேலைநாள் நேரத்தை எல்லை மீறி நீடிக்கும் விளைவை உண்டாக்குகின்றது. உழைப்பு முறையையும் சமுதாய உழைப்பு அமைப்பையும் தீவிரமாக



மாற்றியமைக்கிறது. மூலதனம் செய்பண்டங்களின் உற்பத்தியிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது முதலாளிகளின் இப்போக்கைப் பாட்டாளிகள் எதிர்த்தால் அவ்வெதிர்ப்பைத் தகர்க்க வேண்டிய படைக்கலங்களையும் வைத்திருக்கின்றது மூலதனம். இவ்விளைவுகளால் சமுதாயத்தில் முதலாளிகள் கனவிலும் புரிய முடியாததொரு பாட்டாளிக் கூட்டம் உருவாகின்றது அதுதான் வேலை தேடியலையும் பாட்டாளிக் கூட்டம்'' இதுவே இன்றைய எதார்த்தம். மக்கள் சொத்திழந்த நிலையில், உழைப்பை விற்கும் சந்தையில் குவிந்து கிடக்கின்றனர். விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் கையில் வரைமுறையின்றி சொத்துக்கள் குவிகின்றன. குவிந்து செல்லும் சொத்துக்களும் சரி, அதை இழக்கும் மக்கள் கூட்டமும் சரி, மனித வரலாற்றில் இன்று நடக்கும் வேகத்தில் என்றுமே நடந்தது கிடையாது. மிகப் பெரிய பஞ்சங்கள் கூட, இந்த வேகத்தில் இதைச் செய்துவிடவில்லை. தங்கம் தனது மதிப்பை சில பிரதேசங்களில் இழந்த போது கூட, இப்படி ஒரு சொத்துக் குவிப்பு நடக்கவில்லை. இந்தக் கொள்ளையை தொழில்நுட்பப் புரட்சி என்று போற்றிப் பூசிக்க, வாழ்வை இழந்து வரும் எந்த மக்கள் கூட்டமும், ஒருநாளும் முன்வராது.

தொழில் நுட்பம் தன்னளவில் (மனித வரலாற்றில்) ஒரு புரட்சியாக இருந்தபோதும், உழைக்கும் மக்களின் வாழ்வுக்கு பயன்படுவதைவிடவும், மனித வாழ்வை மேலும் அவலமாக்கும் மூலதனத்தின் கைப்பொம்மையாகி, அதன் நுட்பக் கருவியாகி விட்டது. தொழில்நுட்பப் புரட்சி எதிர்ப்புரட்சிகரமான பாத்திரத்தையே, மனிதனின் சமூக வாழ்வில் ஏற்படுத்தி விடுகின்றது. தேச எல்லைகளையும் கடந்து மனிதனைச் சுரண்டும் ஒரு உறுப்பாகி விட்டது. உலகமயமாதலின் வரலாற்றில் தொழில் நுட்பம், ஒரு இழிவான சமூகப் பாத்திரத்தை மனித இனத்துக்கு எதிராகக் கையாளுகின்றது.

இது உழைக்கும் பரந்துபட்ட மக்களின் அதிகாரத்துக்குப் பதில், ஒரு சிலரின் அதிகாரத்துக்கு ஏற்ற ஒரு சர்வாதிகார உறுப்பாகி விட்டது. இந்தக் கோட்பாட்டை மறுத்து நிற்கும் அறிவுத்துறையினர், தொழில்நுட்பப் புரட்சி என்று வாய்கிழிய குரல் கொடுத்து, புரட்சியின் விசுவாசமிக்க ஆதரவாளராக தம்மை இனங்காட்டிக் கொள்கின்றனர். எந்தப் புரட்சியும் உழைக்கும் மக்களின் வாழ்வுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அவர்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டும். இதுதான் சமூகப் புரட்சி. அது இல்லாதவரை எதிர்ப்புரட்சிப் பாத்திரத்தையே மக்களுக்குப் பரிசளிக்கின்றது. இதனடிப்படையில் தொழில்நுட்பப் புரட்சி மனித இனத்துக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரான நிலையில் செயலாற்றுவதால், எதிர்ப்புரட்சிப் பாத்திரத்தை வகிக்கின்றது. ஒரு தொழில்நுட்பப் புரட்சி கூட மக்களின் அதிகாரத்தில் மட்டும் தான் மக்களின் வாழ்வுக்குப் பங்காற்றுகின்றது. மார்க்ஸ் மூலதனத்தில் கூறியது போல் ''**உற்பத்தித் துறைகள் மீது பாட்டாளிகளின் பொது அமைப்பு கட்டுப்பாடு செய்யவேண்டும் என்ற கருத்தை எதிர்க்கும் முதலாளித்துவச் சிந்தனையாளர்கள், சமுதாயம் முழுவதையும் அடிமைப்படுத்தும் ஒரு மாபெரும் தொழிற்சாலை அமைப்பாக மாற்ற விரும்புகின்றனர்.**'' இதன் ஒரு சிறப்பான, எடுப்பான வடிவம் தான் உலகமயமாதல். உலகமயமாதலை ஏதோ ஒரு விதத்தில் ஆதரிக்கும் எல்லாவிதமான தர்க்க நியாயவாதங்களும், இதற்கு வெளியில் ஒரு மில்லிமீட்டர் கூட நகர்ந்துவிடுவதில்லை.

அமெரிக்க அரசின் முக்கியக் கொள்கை வகுப்பாளரும், முக்கிய மந்திரியுமாக இருந்த கொலின் பாவெல் நறுக்குத் தெரித்தது போல் உலகமயமாதலைப் பற்றி எடுப்பாகவே கூறிவிடுகின்றார். ''**தனிச் சொத்துரிமையை மதிப்பது மனித கௌரவத்தின் அடையாளம்; இதில் சமரசம் செய்து கொள்வது கூடாது.**'' இதுதான் உலகமயமாதலின் எடுப்பானதும், தெளிவானதுமான முரண்பாடற்ற ஒரு காட்சியாகும். மனித கௌரவம் தனிச் சொத்துரிமையை அங்கீகரிப்பதில் இருக்கின்றது. இதுதான் உலகமயமாதல் கொள்கையை வகுத்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிலை. இதுதான் தனிச் சொத்துரிமையை பாதுகாக்கும், அதன் கொள்கைகளை வகுக்கும் அனைவரினதும் நிலை. இதன் அடிப்படையில்தான் கொலின் பாவெல் **உலகின் எல்லாவிதமான ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் உள்ளடக்கத்தை உலகமயமாதல் வரையறுக்கின்றது**'' என்றார். அதை அவர் அழகுபடவே ''**சுதந்திரச் சந்தையும், சுதந்திர வாணிபமும் நமது தேசியப் பாதுகாப்புத் திட்டத்தில் முன்னுரிமை பெறுகின்றது**'' என்றார். இதற்கு வெளியில் ஜனநாயகம் மற்றும் மனித சுதந்திரம் பற்றி இன்றைய சமூக அமைப்புக்கு வேறுபட்ட கோட்பாடுகள் எதுவும் கிடையாது.

அறிவுத்துறையினர் என்று கூறிக் கொள்பவர்கள் உழைக்கும் மக்களின் ஜனநாயகத்தை மறுத்து, அவர்களின் சுதந்திரத்தை மறுத்தே கொக்கரிக்கின்றனர். இந்த அறிவுத்துறையினர் மக்களின் அடிமைத்தனங்களின் மேல்தான் சவாரி செய்கின்றனர். தங்களை மேதைக்குரிய நிலையில் தக்கவைத்துக் கொண்டு, சமூகத்தையே திரித்துப் புரட்டுகின்றனர். மாவோ கூறியது போல் ''**மேதைக்கு அறிகுறி சராசரி அறிவை விட சற்று அதிகமான அறிவுடையதாகும். ஆனால் மேம்பட்ட அறிவு என்பது ஒரு தனி மனிதனையோ அல்லது ஒரு சில மக்களையோ சார்ந்திருப்பது அல்ல. இது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்கும் ஒரு கட்சியைச் சார்ந்திருக்கிறது. ஒரு சரியான அரசியல் வழியையும் மக்களின் ஒட்டு மொத்தமான அறிவையும் சார்ந்திருக்கிறது...**'' மக்களின் அறிவை மழுங்கடிக்கும், சமுதாயத்தின் உண்மைகளை திரித்துக் காட்டும் போக்கு எப்போதும் மக்கள் விரோதத் தன்மை கொண்டது. மக்களின் முதுகில் சவாரி செய்வதாகும். எதார்த்த உண்மைகளை அறிவியல்பூர்வமாக எடுத்துக்காட்டாது, திரித்துக் காட்டுகின்ற அறிவு மக்கள் விரோதத் தன்மை கொண்டது. உலகமயமாக்கலின் சுதந்திரச் சந்தைக்கும், சுதந்திர வாணிபத்துக்கும் காலாற சேவை செய்பனவாக உள்ளது.

உலகமயமாதலின் ஆதாரவாளர்களும், அங்கும் இங்குமாகத் தம்மை இனம் காட்டும் உலகமயமாதலின் கள்ளக் குழந்தைகளும் இணைந்து செய்யும் மனித விரோத நடத்தைகளை, நாம் இன காணவேண்டியுள்ளது. உலகமயமாதலில் பல சாதகமான நல்ல அம்சங்கள் உண்டு என்று எடுத்துக் காட்டி (உதாரணமாக தொழில்நுட்ப புரட்சி), அதனால் உலகமயமாதலை எதிர்க்க முடியாது என்ற சந்தர்ப்பவாதப் பொறுக்கிகளையும் நாம் இனம் காணவேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் உள்ளோம். உதாரணமாக ஜெர்மனிய நாஜி கோயரிங் கூறியது போல் ''தலைவர்கள் தாம் விரும்பயபடி யெல்லாம் மக்களை ஆட்டுவிக்க முடியும்... நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். நாம் தாக்கப்படுகிறோம் என்று சொல்லுங்கள். சமாதானம் பேசுபவர்களுக்கு நாட்டுப்பற்று இல்லையென்றும், நாட்டை ஆபத்துக்கு உள்ளாக்குகிறார்கள் என்றும் தூற்றுங்கள். இந்தச் சூத்திரம் எந்த நாட்டிலும் வேலை செய்யும்.'' இந்த அணுகுமுறையைத்தான், உலகமயமாதலின் எல்லாக் கூறுகளிலும் மக்களுக்கு எதிராக கையாளுகின்றனர். மக்களை வெறும் மந்தைக் கூட்டங்களாக தம்பக்கம் அணிதிரட்டுகின்றனர். மனித அடிமைத்தனத்தையும், காட்டுமிராண்டித்தனத்தையும், மிருகத்தனத்தையும் அடிப்படையாகக் கொண்ட சமூக உணர்வுகளை உலகமயமாதல் படைக்கின்றது. இதற்காக பொய்யையும், புரட்டையும் உள்ளடக்கிய பரபரப்புகளூடாக மனித அறிவையே மலடாக்குகின்றனர். சுயசிந்தனை முறையையும், கேள்வி கேட்கும் விமர்சன சுயவிமர்சன முறையையும் தகர்க்கின்றனர்.

''நான் விரும்பியதை அடையும் வரை
என்னால் அமைதியாகச் செயல்பட முடியாது,
நான் எதையும் என்றும் சுலபமாகக்
கொள்வதில்லை, ஓய்வு ஒழிவின்றிப்
பாடுபட்டாக வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே நமது அனைத்தையும் இழக்கத் தயாராவோம்
நமக்கு ஓய்வில்லை, ஒழிவில்லை, நாம் சோர்வறியோம்
செயல்பாடோ அல்லது ஆழ்ந்த விருப்பமோ இன்றி
மயான அமைதியில் அல்ல, மந்தகதியில் அல்ல.
வலியென்னும் நுகத்தடியின் கீழே
ஏக்கமோ தன்னைத்தானே நுணுகிப் பார்ப்பதோ இல்லை

எனவே
அந்த அபிலாசை, அந்தக் கனவு, அந்தச் செயல்
நமக்கு நிறைவேறாத ஒன்றாகவே இருக்கட்டும்.''

இது எதுவாக இருந்தாலும் மனித குலத்தின் விடுதலை என்ற உன்னதமான இலட்சியத்துக்காக கடுமையாக உழைக்க வேண்டியதை 1841-ஆம் ஆண்டு ஒரு இலக்கியச் சஞ்சிகையில் மார்க்ஸ் கவிதை வடிவில் கூறியுள்ளதையே, நாம் எமது வழியாகக் கொண்டு போராடுகின்றோம். இந்த மண்ணில் ஒரு சொர்க்கத்தை படைக்க போராடுகின்றோம். இதுவே எமது இலட்சியம் மட்டுமல்ல அனைத்துமாக உள்ளது. இதுவே எனது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக எனது ஆன்மாவாகவும் உள்ளது.

லெனின் கூறியது போல் **''மடிமை, கவனமின்மை, துப்புரவின்மை, காலத்திட்பமின்மை, அமைதியிழந்த அவசரக் கோலம், செயலுக்கு பதில் விவாதத்தையும், வேலைக்குப் பதில் பேச்சையும், மாற்றிச் செய்யும் விருப்பம், எதையும் முழுமையாக செய்து முடிக்காமல், உலகில் உள்ள சகலத்தையும் செய்வதற்கான விருப்பம் படித்தவர்களின் இனப்பண்புகளாகும். விடாமுயற்சி, சலியாத உழைப்பு, எந்தப் பொருளையும் நூறு முறைகள் சோதனை செய்யவும் அவற்றை நூறு தடவைகள் திருத்திக் கொள்ளவும் தேவையான விருப்பம், உறுதி, திறமை, எது வந்தபோதிலும் இலட்சியத்தை அடைந்தே தீருவது இவை பாட்டாளி வர்க்கம் பெற்றிருக்கிற குணங்களாகும். பாட்டாளி வர்க்கத்தின் இந்த குணங்களே பாட்டாளி வர்க்கம் வெற்றியடையும் என்பதற்கு உறுதிகூறும்''** மனித குலத்தின் விடுதலைக்காக விடாமுயற்சியுடன், நாங்கள் கடுமையாகவே சமரசமின்றிப் போராடுவோம். எனது நூல் இந்த உணர்வுகளுடன்தான், உங்களை செயலுக்கான வழிகாட்டியாக அழைத்துச் செல்கின்றது.



## 3. சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் முதிர்வே உலகமயமாதலாகும்.

மனித சமூக சாரத்தை நாம் உள்ளது உள்ளபடி புரிந்து கொள்வதற்கு, ஒட்டுமொத்தமாகவே இயற்கை சார்ந்து முழுமையாக ஆராயவேண்டும். மாவோ கூறியது போல் **''ஒரு விசயத்தைப் பூர்த்தியாக அதன் முழுமையில் பிரதிபலிக்க வேண்டுமானால், அதன் சாராம்சத்தையும் அதில் உறைந்து கிடக்கும் விதிகளையும் பிரதிபலிக்க வேண்டுமானால், புலன் உணர்வுகளின் மூலம் கிடைக்கும் ஏராளமான விவரங்களில் கொச்சையானதைத் தள்ளி, சாராம்சத்தை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டு பொய்யானதை அகற்றிவிட்டு உண்மையானதை வைத்துக் கொண்டு, ஒரு அம்சத்திலிருந்து இன்னொரு அம்சத்திற்குத் தொடர்பு கொண்டு, புறத்திலிருந்து உட்பொருளுக்குச் சென்று ஆராயவேண்டும். அவ்வாறு செய்து அவ்விசயம் பற்றி ஒரு கருத்தமைப்பையும், கோட்பாட்டு அமைப்பையும் உருவாக்குகின்றோம். புலன் அறிவிலிருந்து பகுத்தறிவுக்குப் பாய்வது அவசியமாகும்.''** நாம் உலகமயமாதலை புரிந்துகொள்ள கையாளும் விதி என்பது, ஒட்டுமொத்த எதார்த்தம் சார்ந்த உண்மைகளைக் காண்பதில் இருந்து தொடங்க வேண்டியுள்ளது. கவர்ச்சிகரமான சொல் அலங்காரமான பிரதிபலிப்புகளையும் கடந்து, போலியான ஜனநாயகமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரமான கொச்சையான புலம்பல்களை உதறி எறிகின்றபோது, நமக்கு கிடைப்பது அதிர்ச்சியூட்டுவதாகவே எப்போதும் இருக்கின்றது.

மனித இனம் சுதந்திரமாக முன்னேறுகின்றது என்றும் ஜனநாயகம் மக்கள் மயமாகி விழிப்புறுகின்றது என்ற எண்ணற்ற உலகமயமாதல் பற்றிய விளக்கங்ளை கடந்து, மனித இனம் அடிமை நிலைக்குள் சிதைந்து விட்டதையும், ஜனநாயகம் என்பது மறுக்கப் பட்டு அவை பரந்துபட்ட பொதுமக்களுக்கு, வெறும் சொற்களுக்கு வெளியே அவசியமற்ற ஒன்று என்பதை எதார்த்தம் நிறுவி வருகின்றது. உயர்ந்தபட்சம் மக்களை சூறையாடுவதற்கு ஏற்றவர்கள் யார் என்பதை வாக்கு போட்டு தெரிவு செய்யும் உரிமையே, உன்னதமான ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் என்று நம்ப வைக்கப்பட்டுள்ளது. மக்களின் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பறிக்க, மக்களே அதற்கு வாக்களிக்கும் உரிமையே சுதந்திரம் ஜனநாயகம் என்பது மாற்ற முடியாத மூலதனத்தின் அடிப்படை விதியாகிவிட்டது. இதைத் தாண்டி மக்களின் சுதந்திரம், ஜனநாயகம் சார்ந்த எந்த தேர்வுகளும், எதார்த்தத்தில் மனித குலத்துக்கு இருப்பதில்லை.

சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் பரிசளித்து இருப்பதாக ஏகாதிபத்தியங்கள் தாங்களாகவே மார்தட்டுகின்றனர். இதற்கு எதிரானவற்றை ஒடுக்க, உலகக் காவலராக தாம் இருப்பதாகக் கூறுவதுடன், உலகெங்கும் போலீஸ்கார வேலையைச் செய்கின்றனர். ஆனால் உண்மை எப்போதும் ஜனநாயக மறுப்பாகவே இருந்து வருகின்றது. பரந்துபட்ட மக்களிடம் இருந்த கொஞ்ச நஞ்ச ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் பறித்தெடுப்பதே உலகமயமாதலின் அடிப்படை உள்ளடக்கமாகும். இதைச் செய்வதே, மக்கள் தேர்ந்தெடுத்த அரசுகளின் விதியாகின்றது. இதற்கு வெளியில் சுதந்திரம், ஜனநாயகம் என்பதற்கு, இந்த உலகமயமாதல் அமைப்பில் வேறு விளக்கம் எதுவும் இருப்பதில்லை.

ஜனநாயகம், சுதந்திரம் என்பதின் அரசியல் உள்ளடக்கம், மனிதனை சுரண்டும் உரிமையை அங்கீகரிப்பதைத் தாண்டி இதற்கென வேறு விளக்கம் கிடையாது. அனைத்து மக்களுக்கும் சுதந்திரமும், ஜனநாயகமும் இருக்குமாயின், அவை உண்மையில் அதற்கேயுரிய தூய அர்த்தத்தில் இருந்தே அது செயல் இழந்துவிடும்;. ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் மறுக்கும் போதே, அங்கு சுதந்திரம் ஜனநாயகம் என்ற கோசம் எழும்புகின்றது. அதனால் ஒரு மனிதன் சுரண்டப்படும் வரைதான், சுதந்திரமும், ஜனநாயகமும்



உயிர் வாழமுடியும். இதற்கு வெளியில் சுதந்திரம், ஜனநாயகம் என்பன சுயேச்சையானவையல்ல. சுரண்டல் உள்ளவரை, ஜனநாயகமும், சுதந்திரமும் சுரண்டப்படுபவனுக்கு இருப்பதில்லை. இதை சுட்டிக் காட்டும்போது, ஜனநாயகத்தின் எதிரிகள் என்கின்றனர், சுதந்திரத்தின் எதிரிகள் என்கின்றனர். பயங்கரவாதிகள் என்கின்றனர். இது இந்த உலகமயமாதலின் சமூக அமைப்பின், அடிப்படையான சித்தாந்தமாக உள்ளது. அதாவது இது மூலதனத்தின் அச்சாகவும், அதன் சித்தாந்தமாகவும் உள்ளது.

உலகமயமாதல் சுரண்டலை உலகமயமாக்கும் போது, தனது சுதந்திரம், ஜனநாயகம் என்ற அடிப்படைக் கோசத்தில் இருந்தே தன்னை ஆயுதபாணியாக்குகின்றது. உலகளவில் உழைக்கும் மக்களைச் சுரண்டும் அடிப்படை சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் உலகளாவிய சட்டமாக்குவதில், ஒவ்வொரு நாட்டின் சட்ட திட்டத்திலும் மாற்றங்களை உலகமயமாதல் செய்து வருகின்றது. அதை விசுவாசமாக வாலாட்டிச் செய்யும் அரசுகளையே, மக்கள் சுதந்திரமான வாக்களிப்பு மூலம் ஜனநாயகபூர்வமாக தெரிவு செய்வதாகப் பாசாங்கின்றி நியாயப்படுத்துகின்றனர். இன்று உலக மக்களை விரல்விட்டு எண்ணக்கூடிய பன்னாட்டு தேசங்கடந்த நிறுவனங்கள் சுரண்ட அனுமதிப்பதே, ஒவ்வொரு நாட்டினதும் சுதந்திரமான ஜனநாயகமாகிவிட்டது. இதுவே உலகமயமாதல். இந்த எல்லையைத் தாண்டி சுதந்திரத்துக்கும், ஜனநாயகத்துக்கும் வேறு விளக்கம் எதுவும் உலகத்தில் அங்கீகரிக்கப்படுவதில்லை. உலகில் ஜனநாயகம் என்ற பெயரில் மக்களைக் கொண்டு போட வைக்கும் வாக்குச் சீட்டுகள் அனைத்தும், உலகமயமாதல் என்ற சுரண்டலுக்கு வெளியில் சுதந்திரமாகவும் ஜனநாயகப்பூர்வமாகவும் செயல்படுவதில்லை. உலகமயமாதலை நிறைவு செய்யும் அரசியல் பொம்மைகளையே வாக்குச் சீட்டுகள் உலகெங்கும் உருவாக்குகின்றன. இன்றைய உலகளாவிய அரசுகள், அவர்கள் உருவாக்கும் சட்ட திட்டங்கள் முதல் பண்பாடுகள், கலாச்சாரங்கள் எல்லாம் உலகமயமாதலுக்குள்தான் அடங்குகின்றன.

ஜனநாயகம் உருவாக்கும் சுதந்திர உலகமயமாதல் என்ற உலகளாவிய சுரண்டல், அடிப்படையில் பரந்துபட்ட மக்களை சுரண்டும் ஆற்றல் சார்ந்து சிறிய மற்றும் இடைப்பட்ட பொருளாதார கட்டமைப்பையே அழிக்கின்றது. தேசிய அரசு சார்ந்த பொருளாதாரத்தை சூறையாடி அழிக்கின்றது. பரந்துபட்ட ஏழை மக்களின் சிறு உற்பத்தி சார்ந்து இருந்த குறைந்தபட்ச வாழ்வை அழிப்பதன் மூலம், எஞ்சிக் கிடந்த தனிமனித ஜனநாயகத்தையும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரத்தையும் அழிக்கின்றது. சொத்துக்கள் இழந்த எதுவுமற்ற ஏழைகளுக்கு சுதந்திரம், ஜனநாயகம் என எதுவும் இந்த சமூக அமைப்பில் இருப்பதில்லை. கையெடுத்துக் கும்பிடவும், கையேந்தி இறைஞ்சிக் கேட்கும் எல்லைக்குள்தான் சுதந்திரம் எஞ்சிக் கிடக்கின்றது. இதையும் உழைக்கும் மக்களுக்கு அனுமதிக்கப் போவதில்லை என்ற சுதந்திர பிரகடனத்தின் மூலம், உலகமயமாதல் ஒற்றைக் காலில் நிற்கின்றது. தேசிய எல்லைகளை அழித்து முன்னேறி வரும் உலகமயமாதல், ஜனநாயகம் சுதந்திரம் என்ற கோசத்தை முன்வைத்து இன்று எதையெல்லாம் சாதிக்க முனைகின்றதோ, அதை பரந்துபட்ட உலக மக்களுக்கு மறுப்பதை அடிப்படையான கொள்கையாகவே பிரகடனம் செய்துள்ளது. சுதந்திரமான சுரண்டல், அதை உருவாக்கும் ஜனநாயகம் என்பன பரந்துபட்ட மக்களின் உரிமையல்ல என்பதையே, உலகமயமாதல் நடைமுறையில் நிறுவி வருகின்றது. பரந்துபட்ட மக்களின் சொத்துக்கள் எப்படி விரல்விட்டு எண்ணக் கூடிய தனிநபர்களின் கையில் குவிந்து வருகின்றது என்ற தெளிவு, இயல்பாகவே ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் கடைகெட்ட நிலையை அம்பலப்படுத்தி விடுகின்றது.



## 4. சமூக உறவுகளின் முழுமையை மறுப்பதே உலகமயமாக்கம்

மனித வரலாற்றில் தனிச்சொத்துரிமை அமைப்பு உருவானது முதலே, சக மனிதர்களின் உழைப்பைச் சுரண்டுவது தனிமனித உரிமையாகியது. இதுவே மனிதனின் ஜனநாயகமாகவும், சுதந்திரமாகவும் இருப்பதுடன், மனித நாகரிகத்தின் பண்பாட்டுச் சின்னமாகவும் கொழுவேற்றுள்ளது. இது சட்டதிட்டங்களினால் மட்டும் சுரண்டல் அமைப்பை கட்டமைத்துவிடவில்லை. சட்டதிட்டங்களைச் சுற்றியுள்ள சமூக ஒழுக்கங்களும், சமூகப் பண்பாடுகளும், சமூக கலாச்சாரங்களும் கூட, இதற்குள்தான் கட்டமைக்கப்பட்டுள்ளன. முழு சமூக உறவுகளின் தோற்றமும் இதற்குள் இருந்து தான் பிறக்கின்றது. இதன் மூலம் சக மனித உழைப்பை தனிமனிதர்கள் சுரண்டும் உரிமையையே, ஜனநாயகமாகவும், சுதந்திரமாகவும் கூட பூச்சூட்டப்பட்டது. தனிச்சொத்துரிமை அமைப்பு உருவானது முதலே, மனிதகுலம் இதனடிப்படையில் இரண்டாகப் பிளவுற்றே வளர்ச்சியுற்றது, வளர்ச்சியுறுகின்றது. இதனுல் மனித குலத்தை, பல பிரிவுகளாக பிளந்து சின்னாபின்னமாக்கியுள்ளது. இந்த தனிச்சொத்துரிமை அமைப்பு சில நேரங்களில் அமைதியாக இருந்த போதும், மற்றைய நேரங்களில் கொந்தளிப்பான ஒரு சமூக வன்முறை சார்ந்த போராட்டமாகவே எப்போதும் இருந்து வந்தது, இருந்து வருகின்றது. சக மனிதனின் உழைப்பை மற்றொரு மனிதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுரண்டும் அடிப்படையில் ஏற்பட்ட சமூகப் பிளவே, வர்க்கப் பிளவாகியது. இந்தச் சமூகப் பிளவு ஒட்ட முடியாத எதிர்நிலைத் தன்மையில், நேர் எதிர்த் திசைகளில் பயணிக்கின்றது. இதை கட்டிப் பாதுகாக்கும் சமூக அமைப்பு எப்போதும் எங்கும் வன்முறையிலானது.

அதாவது வர்க்க மோதல்கள் இல்லாத எந்த சமுதாயமும், தனிச் சொத்துரிமை அமைப்பில் கிடையாது. இதற்கு மாறாக எதிர்நிலையில் மனித பிளவுகளற்ற ஒரு சமூக அமைப்பு உருவாகும் போது, தனிச்சொத்துரிமை என்பது இருக்காது. அனைத்து மனிதப் பிளவுகள், சக மனிதனின் உழைப்பை சுரண்டுவதில் இருந்தே தொடங்குகின்றது. மனித உழைப்பைச் சுரண்டும் சமூக அமைப்பு உருவாகும் முன்பு, சமுதாயத்தின் உழைப்பு முதல் அனைத்தும் சமுதாயத்தின் சொத்தாக பொதுவில் இருந்தது. இதனால் பிளவுகளற்ற சமுதாய உணர்வு மேலோங்கி இருந்தது.

இங்கு தனிமனித உணர்வுகள் சமுதாய உணர்வுக்கு உட்பட்டு இருந்தது. இதனால் தனிமனித நலன்கள், சமுதாய நலனுக்கு உட்பட்டு இருந்தது. தனிமனித முரண்பாடுகள் சமுதாய நலனுக்குட்பட்டு செயலாற்றியது. சமுதாய நலனுக்கு எதிரான முதலாவது தனிமனித முரண்பாடு, தனிச்சொத்துரிமைக் கண்ணோட்டத்தில் இருந்தே உருவாகியது. அதாவது இதன் போதே தனிமனித நலன், சமுதாய நலனுக்கு எதிரானதாக உருவாகியது. இப்படி உருவாகிய தனிச்சொத்துரிமைக் கண்ணோட்டம், எப்போதும் சக மனிதனின் உழைப்பைத் தனதாக்கும் இழிவான ஒரு கண்ணோட்டம் சார்ந்தே உருவாகியது. இந்த இழிவான மனித (சமூக) விரோத போக்கு, அனைத்து மனித உழைப்பையும், தனதாக்கும் உணர்வை அடிப்படையாகக் கொண்டது. இந்த சமூக விரோத உணர்வின் முதிர்வே உலமயமாதலாகும். இவை உலகளாவிய சமுதாய உணர்வாகவும், பண்பாடாகவும், கலாச்சாரமாகவும் உள்ளது. மற்றைய மனிதனின் உழைப்பைச் சுரண்டித் தனதாக்கும் செயல், இயல்பில் உலகில் அனைத்தையும் தனதாக்கும் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டது. இது தனிச்சொத்துரிமை உருவானது முதலே, அதனை இறுதி இலட்சியமாகக் கொண்டு செயலாற்றுகின்றது.

மனிதர்களைச் சுரண்டி வளர்ச்சியுற்ற தனிச்சொத்துரிமை அமைப்பு, படிப்படியாக மூலதனத்தின் குவிப்பாக மாறியது. எவ்வளவு மனிதர்களின் உழைப்பை சுரண்ட முடிகின்றதோ, அதற்கு ஏற்ப மூலதனம் தனிமனிதனை நோக்கிக் குவிவது அதிகரித்தது. உழைக்கும் மக்கள் அடிமைவாழ்வை நோக்கிச் செல்வது இதன்



அடிப்படை விதியாகியது. இதன் மூலம் அதிக மனிதர்களைச் சுரண்டுவது என்ற சமூகக் கண்ணோட்டம் சார்ந்து, மனிதர்களை அடிமைப்படுத்த சமுதாய அமைப்புகள் நெகிழ்வுத் தன்மையுடையதாக மாற்றப்படுகின்றது. இந்த நெகிழ்வுத் தன்மை உள்ள அமைப்பை, வன்முறை மூலமே சாதிக்க முடிகின்றது. இந்த வன்முறை சார்ந்து உருவான தனிச்சொத்துரிமை அமைப்பைப் பாதுகாக்கவே, அதிகார அமைப்புகளை உருவாக்கின. இது ஆரம்பத்தில் சொந்தக் குழுவுக்கு வெளியில் உள்ள குழுக்களுக்கு எதிரானதாக இருந்ததால், இந்த அதிகார அமைப்பை இலகுவாகவே நிறுவமுடிந்தது. இந்த தனிச்சொத்துரிமையை பாதுகாக்கும் அதிகார அமைப்பு, சொந்தக் குழுவில் தனிமனிதர்கள் சுரண்டப்படுவதை கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்படவில்லை. மாறாக மனித உழைப்பு சுரண்டப்படுவதை உறுதி செய்து, அதைப் பாதுகாக்கும் கட்டமைப்புகளை அடிப்படையாகக் கொண்ட அதிகார நிறுவனங்களாகவே அரசுகள் உருவாகியது. அன்று முதல் இன்று வரை அரசுகள் எவையும், மனிதச் சுரண்டலை எதிர்த்து உருவாக்கப்படவில்லை. 20-ஆம் நூற்றாண்டில் உருவான ஒரு சில அரசுகளைத் (சீனா, சோவியத் போன்றன தனிச் சொத்துரிமையை ஒழிக்கும் வர்க்கப் போராட்டத்தை நடத்தின. சொத்துகளை சமூக சொத்துரிமையாக்கின) தவிர, அனைத்தும் தனிச்சொத்துரிமை சுரண்டல் அமைப்பை பாதுகாத்த, பாதுகாக்கின்ற அரசுகளாகவே இந்தத் தனிச் சொத்துரிமை அமைப்பு நீடிக்கின்றது. இந்த தனிச் சொத்துரிமை சமூக அமைப்பில் இதற்கு வெளியில், ஜனநாயகம் பற்றியும் சுதந்திரம் பற்றியும் எந்தவிதமான விளக்கங்களும் கிடையாது. அடிமைத்தனத்தையும் மிருகத்தனத்தையும், காட்டு மிராண்டித்தனத்தையும் மூலதனம் தனது பண்பாடாகவும், பொருளாதாரமாகவும், அரசியலாகவும் கொண்டே உலகை அடக்கியாள முனைகின்றன.

இந்த தனிச் சொத்துரிமை அமைப்பை தொடர்ச்சியாக, ஒரே வடிவில் நீடித்த வகையில் பாதுகாக்க முடிவதில்லை. தனிச் சொத்துரிமையின் சொந்த முரண்பாடே, அதை மாற்றக் கோருகின்றது. உழைப்பல் இருந்து உருவாகும் மூலதனம் தனிமனிதன் கையில் குவியும் போது, சுரண்டும் ஆற்றல் பெறுகின்றது. இது மேலும் சுரண்டிக் கொழுக்க, பெரும் மக்கள் கூட்டத்தைக் கோருகின்றது. இது விரிந்த தளத்தில் எல்லைகளைக் கடந்து செல்லுகின்றது. காலத்துக்கு காலம் இதனடிப்படையில் சமுதாய அமைப்பு முறைகள் மாறிவந்தன. பெரிய மக்கள் கூட்டத்தை தனது நேரடிச் சுரண்டலுக்கு உட்படக் கூடிய வடிவங்களுக்கு ஏற்ப, மாற்றங்கள் அவசியமாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதாவது தனக்கு போட்டியாக சந்தையில் மோதும், போட்டிச் சுரண்டல் பிரிவை ஒழித்துக் கட்டுவதில் இருந்தே, இது தொடங்கியது. இது அமைதியாகவும், வன்முறையாலும் தொடர்ச்சியாக இடைவிடாது சாதிக்கப்படுகின்றது. இதுவே உலகில் நடந்த அனைத்து யுத்தங்களுக்குமான அடிப்படையாக இருந்தது.

சுரண்டலுக்கு உள்ளாகும் பெரும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும், பலம் பொருந்திய அதிகார மையங்கள் உருவாகின. சொந்த மக்களை அடக்கியாளவும், புதிதாக மக்களை வென்று அடக்கவும் நிரந்தரமான படைகள் அவசியமாகியது. யுத்தங்கள் மூலதனத்தின் வெற்றிக்கு நெம்புகோலாகியது. மக்கள் இந்த தனிச் சொத்துரிமை சுரண்டல் கொடுமைகளில் இருந்து மீள முனைவதைத் தடுக்க, இயல்பாக உருவாகி வளர்ந்த பண்பாட்டு கலாச்சார அலகுகளை குறுகிய வடிவில் பிளந்தனர். பண்பாட்டு கலாச்சார அடுக்கில் சமுதாய நலனுக்கு எதிரான வகையில் வக்கிரமான பிளவுகளை உருவாக்கினர். இதை நியாயப்படுத்த அறிவியலுக்கு மாறான பல்வேறு கோட்பாடுகளை முன்தள்ளினர். இதற்குள் மனித மோதல்களை தொடர்ச்சியாகக் கட்டமைத்தனர். அறிவியலுக்குப் புறம்பான நம்பிக்கைகளையும், சமுதாய நலனுக்குப் புறம்பான பண்பாடுகளையும், கலாச்சாரங்களையும் முன்வைத்து, தனிமனித சொத்துரிமைக் கண்ணோட்டத்தில் மனித குலத்தைப் பிளந்தனர். இதனடிப்படையில் மனிதர்களுக்கு இடையிலான மோதல்களை அகலமாக்கி, சொத்துரிமைக் குவிப்புக்கான யுத்தங்களை இலகுவாக விரிவாக்கினர். தனிச் சொத்துரிமை அமைப்பின் பிறப்பு முதலே யுத்தங்கள் இன்றி உயிர் வாழ முடியாது என்ற விதி அதன் உயிருள்ள ஆன்மாவாகியது.

சமுதாய ரீதியான தனிச்சொத்துரிமை முரண்பாட்டை மூடிமறைத்து, குறுகிய உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட மோதல்களை வெற்றிகரமாக சமுதாயமயமாக்கி விடுகின்றனர். இந்த தனிச்சொத்துரிமை அமைப்பின் நீடித்த இருத்தலுக்கு, இவை சதையுள்ள உடலாகி விடுகின்றது. இங்கு தனிச்சொத்துரிமை நலன்கள் என்ற அடிப்படையான சமூகக் கண்ணோட்டம், அனைத்தினதும் ஆணிவேராக இருந்தது, இருந்து வருகின்றது. மனிதகுலம் எங்கும் இதற்குள்ளான மோதலே முதன்மைப் பொருளாகியது. இதன் மூலம் சொத்துக் குவிப்பு என்பது விரிவாகிச் சென்றது. கடந்த 2000 முதல் 3000 ஆண்டு காலத்தில் மனிதகுலம் இந்த எல்லைக்குள் தான் முன்னேறி வந்தது. சொத்துக் குவிப்பை அடிப்படையாகக் கொண்ட போட்டி, தவிர்க்க முடியாது, நவீன



தொழில் நுட்பத்தை வேகமாகவே முன்தள்ளியது. அதிக சுரண்டல் என்ற தனிச்சொத்துரிமை உணர்வு, நவீன தொழில் நுட்பத்தின் உயிருள்ள ஆன்மாவாகியது. அத்துடன் தனிச்சொத்துரிமைக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்கப் போராட்டங்களை எதிர்கொண்டு சமரசம் செய்ய அல்லது தகர்க்க, நவீன தொழில் நுட்பம் நெம்புகோலாகியது. மறுபக்கத்தில் நவீன தொழில் நுட்பம் மூலம், மேலும் அதிக மக்களை சுரண்டக் கோரியது. எல்லை கடந்த உலகளாவிய சுரண்டல் என்பது, இதன் உயர்ந்த குறிக்கோளாகியது. மூலதன வேட்டைக்காக பூமியைக் கடந்து செல்லவும் விரும்புகின்றது. பூமி அல்லாத வேறு ஒரு கோளில், அடிமைகளை உருவாக்கிச் சுரண்டவும், இல்லாது போனால் மற்றொரு உழைக்கும் உயிரினம் இருப்பின் அதை அடிமை கொண்டு சுரண்டவும் கூட மனித நாகரீகம் காட்டுமிராண்டித்தனமாகவே விரும்புகின்றது. மனிதனை மனிதன் உண்ணும் காட்டுமிராண்டியின் நிலையில் வாழ்ந்த மனிதனிடத்தில் (அப்போது மற்றைய மனிதனை மனிதனாக அல்ல, மற்றொரு மிருகமாகவே பரஸ்பரம் கருதினான்.) இருந்து எந்த மாற்றமும் இன்றி, நாகரீக மனிதர்கள் சுரண்டுவதன் மூலம் தனது ஆடம்பரமான வாழ்க்கைத் தேர்வை பூர்த்தி செய்கின்றான். கொடிய சுரண்டலால் வாழவழியற்ற நிலையில் கொடுமைக்குள்ளாகி இறந்து போகும், கோடிக்கணக்கான மக்களின் உடல்களை இயற்கை மரணமாகக் காட்டி புதைத்து விடுகின்றனர் இன்றைய நாகரீக காட்டுமிராண்டிகள். இந்தப் பூமியில் எல்லா மனிதர்களையும் ஒரு மனிதன் சுரண்டும் எல்லை வரை, தனிச் சொத்துரிமைக் கோட்பாடு முரண்பாடு இன்றி தன்னைத் தான் தகவமைத்துள்ளது. இதைத்தான் மனித சுதந்திரத்தின் கடைசி எல்லை என்கிறது இன்றைய ஜனநாயகம். இதைத்தான் ஜனநாயகத்தின் சொர்க்கம் என்கிறது. அதாவது, எல்லா மனிதர்களும் ஒரு மனிதனுக்கு அடிமையாதலை நோக்கி, இந்தத் தனிச்சொத்துரிமை அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது.

தனிச் சொத்துரிமை என்ற சமூக அமைப்பில், இதற்கு வெளியில் எந்த விளக்கமும் இருப்பதில்லை. சுதந்திரம், ஜனநாயகம் என்பது இதைத் தாண்டி விளக்கப்படுவதில்லை. எந்த தனிமனிதனும் இதற்கு வெளியில் உயிர் வாழ முடியாது. அனைத்துக் கோட்பாடுகளும் இதற்கு வெளியில் உருவாவதில்லை. இதை எதிர்த்து அல்லது ஆதரித்து உருவாகும் அனைத்து விதமான கோட்பாடுகளும், இந்த எல்லைக்குள் தான் தம்மை வேறுபடுத்துகின்றன. கோட்பாடுகளும், நடைமுறைகளும் இந்த எல்லைக்கு வெளியில் எதையும் படைப்பதில்லை. இதற்கு வெளியில் எதையும் படைப்பதாக யாரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறுவமுடியாது. இப்படி படைக்க முடியும் என்றால், மக்களின் அறியாமை சார்ந்த முட்டாள் தனத்தை மட்டும் மூலதனமாகக் கொண்டு, தம்மைத் தாம் அலங்கரிக்கின்றனர்.

உலகமயமாதல் என்ற அமைப்பு சொத்துக் குவிப்பில் ஒரு வடிவம் மட்டும் தான். கடந்து வந்த தனிச்சொத்துரிமை அமைப்பில் நீடித்து வந்த வடிவங்களில் ஏற்பட்ட, ஒரு பண்பு மாற்றம் தான் இன்றைய உலகமயமாதலாகும். உலகம் முழுக்க சில தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டும் கட்டமைப்புக்குரிய காலகட்டமே, இன்றைய உலகமயமாதலாகும். அறிவியல்பூர்வமாக சிந்திக்க விரும்பும் ஒருவன், இன்று எது உலகமயமாகின்றது என்ற கேள்வியை எழுப்பின், எப்போதும் உண்மையை நிர்வாணமாக்கி விடுகின்றது. சுரண்டல் என்பது உலகளவிலானதாகின்றது. சொத்துக் குவிப்பு உலகளவிலானதாகின்றது. பண்பாடு கலாச்சாரங்கள் உலகளவிலானதாகின்றது. ஒற்றைப் பண்பாடு, ஒற்றைக் கலாச்சாரம், ஒற்றைப் பொருளாதாரம், ஒற்றை மொழி என்று பல்துறை சார்ந்து நடக்கும் மாற்றம் தான் உலகமயமாதல். அதாவது பன்மைப் பண்பாட்டு அழிப்பு, பன்மைக் கலாச்சார அழிப்பு, சிறு மற்றும் பெரு உற்பத்தித் துறைகளை அழித்தல், பன்மை மொழி அழிப்பு, இயற்கையின் பன்மைத் தன்மை அழித்தல், சிறிய சொத்துரிமை அழித்தல் என்று எல்லை கடந்த இயற்கை மற்றும் மனிதனின் பன்மைத் தன்மையை அழித்தலே உலகமயமாதலாகும். அதாவது மனிதனின் அடிமை நிலையை உருவாக்குவதே உலகமயமாதலாகும். மனித அடிமைத்தனத்தை, மனித மிருகத்தனத்தை, மனிதக் காட்டுமிராண்டித்தனத்தை உருவாக்குவதன் மூலம் உழைப்பைச் சுரண்டுவதே உலகமயமாதலாகும். மனிதர்கள் அடிமையாக ஒரு நிறுவனத்திடம் தனது உழைப்பை விற்றுப் பிழைக்கும் அடிமை நிலைவரை, இந்த உலகமயமாதல் வீறு கொண்டு செயல்படுகின்றது. உழைப்பை சுதந்திரமாக விற்க முடியாத, போட்டி மூலதனமற்ற நிலையை உலகமயமாதல் உருவாக்குகின்றது. தனிமனிதனின் உழைப்புத்திறன் உட்பட, அவனின் சிறப்புத் தகுதிகளைக் கூட அழிக்கின்றது. இதன் மூலம் ஒரு தனிமனிதனிடம் உலகத்தின் அனைத்துச் சொத்துக்களும் குவியும் நிலையை வந்தடைய, பல இடைக்கட்டங்கள் தேவைப்படலாம். ஆனால் அதுவே மூலதனத்தின் உயர்ந்தபட்ச இலட்சியமாகும். அதுவே அதன் உயர்ந்தபட்ச சுதந்திர உணர்வாகும். அதுவே அதன் உயர்ந்தபட்ச ஜனநாயகமாகும்.



இந்த உலகமயமாதலின் விளைவு, பண்ணையில் வாழும் மந்தைக்குரிய நிலையில் மனிதர்களை இட்டுச் செல்வதைத் தாண்டி எதுவுமல்ல. பண்ணைகளில் மந்தைகள், எப்போதும் கீறிய கோட்டைத் தாண்ட அனுமதிக்கப்படுவதில்லை. போடப்படும் உணவை உண்ணவும், தன்னை தேவைக்கு ஏற்ப பயன்படுத்தும் எல்லைக்கு அப்பால், வாழ்வின் நோக்கம் எதுவும் சுயேச்சையாக இருப்பதில்லை. இயற்கையான அனைத்து இயல்பும் நலமடிக்கப்பட்டு, மலடாக்கப் பட்டு, அழிக்கப்படுகின்றது. இது போன்று மனிதர்கள் பூமி என்ற பண்ணையில் அடைக்கப்படுவதை உறுதி செய்வதே உலகமயமாதலாகும். விரல்விட்டு எண்ணக் கூடிய சில பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தில் உலகம் இயங்கவும், அவர்களின் உற்பத்திகளை நுகர கட்டமைப்பதே உலகமயமாதலாகும். இதற்கு ஏற்ப அடிமைத் தனத்தை இயல்பாக ஏற்றுக் கொள்ளும் மரபு மாற்றத்தைக் கூட, மனிதனில் ஏற்படுத்தத் தயங்காத வக்கிரபுத்தி கொண்ட மூலதனத்தின் நலன்கள் தான் இன்றைய ஜனநாயகத்தின் உயர்ந்தபட்ச குறிக்கோளாக உள்ளது. பண்ணையில் அடைத்து வைக்கப்பட்ட மந்தைக்குரிய தாழ்நிலைக்கு, மனிதனை தரம் தாழ்த்துவதே உலகமயமாதல் ஜனநாயகத்தின் உன்னதமான குறிக்கோள். உதாரணமாக பன்மை உணவை அழித்து, ஒரு சில உணவை உண்ணக் கட்டமைக்கப்படும் பண்பாட்டுச் சிந்தனை உணர்வுகள் முதல், மொத்தப் பொருளாதாரக் கட்டமைப்பும் இதற்கு இசைவாக உருவாக்கப்படுகின்றது. பண்ணை வாழ் மந்தைக்குரிய நிலையைத் தாண்டி, எதையும் உலகமயமாதல் நடைமுறைப் படுத்துவதில்லை. பல தெரிவுகள் என்ற பன்மைத்தன்மை சார்ந்த உற்பத்தியை அழிப்பதற்கே, உலகத்தின் ஜனநாயகமும், சுதந்திரமும் விபச்சாரம் செய்கின்றது. தெரிவுகளின் எண்ணிக்கையை அழிப்பது, உலகமயமாதலின் அடிப்படைக் கோட்பாடு. உணவு, உடை, முதல் எல்லா உற்பத்திக் கட்டமைப்பிலும் இதை உருவாக்குவதே உலகமயமாதலாகும். உலக மக்களை பண்ணை வாழ் மந்தைகள் போல், மூலதனம் பயன்படுத்தும் இழிநிலைக்கு ஒரு அடிமையாய், ஒரு காட்டுமிராண்டியாய், ஒரு மிருகமாய் மக்களை மாற்றுவதே உலகமயமாதலாகும்.

இந்த வகையில் உலகம் மாற்றி அமைக்கப்படுகின்றது. இதுவே உலகமயமாதல். இன்று இந்த இழிநிலையை உருவாக்குவதே ஏகாதிபத்தியத்தின் ஒரே இலட்சியமாக உள்ளது. இன்று ஒன்றுக்கு மேற்பட்ட ஏகாதிபத்தியங்களை உருவாக்கியுள்ள முதலாளிகளுக்கு இடையிலான மோதல், ஒன்றுபட்ட இலக்கை நோக்கி நகர்வதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெருக்கடியை உருவாக்குகிறது. தனித்தனி எகாதிபத்தியத்தை வெவ்வேறு மூலதனங்கள் உருவாக்கி பாதுகாப்பதால், இவற்றுக்கு இடையிலான மோதல் ஐக்கியம் என்ற இரு போக்குகள் அரங்கில் எப்போதும் பிரதிபலிக்கின்றன. தொழிலாளர் வர்க்கம் அமைப்பாகி வர்க்கப் போராட்டம் கூர்மையாகும் போது ஐக்கியமும், வர்க்கப் போராட்டம் தணியும் போது மோதலும் அரங்கில் எழுகின்றது. இக்காலகட்டம் உலகளவில் ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான உலக யுத்தமற்ற அமைதியான யுத்த தயாரிப்பு கால கட்டத்தில் நடக்கின்றது. ஆனால் விதிவிலக்காக கடும் உள்நாட்டு வர்க்க நெருக்கடிகளின் போது, ஏகாதிபத்திய மோதல் போக்கு முதன்மைப்பண்பை பெற்றுவிடும்போது, இதுவே ஒரு உலக யுத்தமாக மாறிவிடுகின்றது.

உலகைச் சுரண்ட வெவ்வேறு மூலதனத்தைப் பிரதிபலிக்கும் ஏகாதிபத்தியங்கள், தமக்கு இடையிலான மூலதனச் சுரண்டல் போட்டியில் கடுமையாக ஈடுபடுகின்றன. இதனால் ஏற்படும் மோதலைத் தவிர்க்க உலகை தமக்கு இடையில் சமரசமாக இடைவிடாது தொடர்ச்சியாக பங்கிடுகின்றனர். இது அமைதியான காலகட்டமாக இருந்தாலும், மூலதனத்தின் சுரண்டும் வீச்சு, புதிய மோதலை மீண்டும், மீண்டும் உருவாக்குகின்றது. உலகை முழுமையாகச் சுரண்ட தவிர்க்க முடியாமல் மோதுகின்றது. இதில் தோல்விபெறும்போது, மறுபங்கீடு நடக்கின்றது. இது இடைவெளியற்ற அலையலையான மோதல், பிரதான முரண்பாடாகி, உலகை யுத்தம் என்ற நிலைக்குள் நகர்த்திவிடுகின்றது.

உலகமயமாதலை பூர்த்தி செய்ய ஏகாதிபத்தியங்கள் காலனிகள், அரைக்காலனிகள், நவகாலனிகள், மறுகாலனியாக்கம் என்று பல்வேறு வடிவங்களில் உலகை அடக்கி சுரண்டியாளுகின்றன. உலகம் எங்கும் கடுமையான நெருக்கடிக்கூடாகவே நகர்ந்து செல்லுகின்றது. மனித குலத்தின் பிரதான எதிரியை இனம் காணமுடியாத வகையில், மக்கள் கூட்டத்துக்கு இடையில் முரண்பாடுகள் உருவாக்கப்பட்டு, மக்களை மோதவிட்டுள்ளனர். மதம், சாதி, இனம், பால், நிறம், கலாச்சாரம், பண்பாடு, தனியுரிமை சிந்தனை என்ற எண்ணற்ற முரண்பாடுகளை முதன்மைப்படுத்தி, மோதல்கள் மூலம் உலகமயமாதலைப் பாதுகாக்கின்றனர். மனிதகுலத்துக்கு உலகமயமாதலால் ஏற்படும் அழிவுகளில் இருந்து மூலதனம் தப்பிப் பிழைக்க, உதிரியான கும்பல்களின் நலன் சார்ந்து இந்த மோதல்கள் கட்டமைக்கப்படுகின்றன. முழுமையில் ஏகாதிபத்திய நலன்களைப் பேண இது அடிப்படையான



அஸ்திவாரமாக, உலகமயமாதலின் விதியாக அமைந்துள்ளது. உலகளவில் அரசியல் கூட மனித குலத்தைப் பிளக்கும் வக்கிரபுத்தியுடன் தான், தன்னைத் தகவு அமைக்கின்றது. எங்கும் மக்களின் அடிப்படையான பிரச்சனைகளில் இருந்து அரசியல் பேசப்படுவதில்லை. மக்களை பிளக்கும் அரசியல், உலகளாவிய போக்காகியுள்ளது. ஜனநாயகம் மனிதனைப் பிளந்து போடும் அரசியலாகி, அதற்குள் வக்கரித்து நிற்கின்றது. மனிதப் பிளவையும், மோதலையும் ஊக்குவிப்பதே உலகமயமாதலின் அடிப்படையான சித்தாந்தம். இது உலகமயமாதலின் வேகமான சொத்துக் குவிப்பு என்ற வெற்றிக்கு, நெம்புகோலாகவும், அச்சாகவும் உள்ளது.

இந்த வகையில் உலகமயமாதல் எப்படி முன்னேறி வந்தது, வருகின்றது என்பதை நாம் தெரிந்து கொள்வதன் மூலம்தான், உலகமயமாதலை எதிர்கொண்டு முறியடிக்க முடியும். முதலில் நீ எப்படி வாழ்கின்றாய்? என்ற அறிவு அவசியமானது. நீ எப்படி முன்பு வாழ்ந்தாய்? என்ற அறிவும் அவசியமானது. நீ எப்படி வாழப் போகின்றாய்? என்ற அறிவும் அவசியமானது. அதாவது மனிதகுலம், தன்னைப் பற்றி அறிந்து கொள்வது அவசியமானது. தனது வாழ்வு சார்ந்த உண்மை என்ன என்ற அறிவு முதன்மையானது. முதலில் சமுதாய உணர்வை நாம் ஒவ்வொருவரும் பெறுவது அவசியமானது. தனிமனித சமூகப் பொருளாதார வக்கிரங்களை, நிராகரிக்கத் தெரிந்து கொள்வது அவசியமானது. அவை எப்படி சமுதாயத்தில் நீடிக்கின்றன என்ற அறிவும் முதன்மையானது. ஒட்டுமொத்த மக்களின் மகிழ்ச்சியான வாழ்வை, குறைந்தபட்சம் கனவு காணத் தெரிந்து கொள்ளவேண்டும். நனவு பூர்வமாக இதை அடைய, நாம் நம்மையும், நமது அறிவையும், சமுதாய அறிவையும் உருவாக்கும் ஒரு சிறிய புள்ளியில் இருந்தே நாம் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

சினிமா நடிகைகள் நடிகர்கள் பற்றியும், பாலியல் வக்கிரங்கள் பற்றியும், புகைக்கும் வகைபற்றியும், மார்க் பொருட்கள் பற்றியும், கார்களின் வகை பற்றியும், தொலைபேசிகளின் வகைகள் பற்றியும், கம்யூட்டரின் வகைகள் பற்றியும், இதுபோன்ற பல அறிவியலுக்கு புறம்பான, விளம்பரச் சந்தை சார்ந்து நாம் தெரிந்து கொள்வதில் இருந்து முதலில் வெளியே வந்தாக வேண்டும். எதற்கும் உபயோகமற்றவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளும் நமது சமுதாய சிந்தனைத் தளம், உப்புச்சப்பற்றது. உண்மையில் இவை எல்லாம் பன்னாட்டு நிறுவனங்களின் லாபநட்ட கணக்கிற்கு உட்பட்டவையே. இவை அனைத்தும் அவர்களின் சொந்த வக்கிரங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையாகக் கொண்டவை. மனிதனை மூளைச் சலவை செய்து வாங்கக் கோரும், சந்தையின் எல்லைக்குட்பட்ட வெறும் பொருட்கள் பற்றியதே இவை. இவை அறிவு சார்ந்தவை அல்ல.

மனித குலத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? என்று கேட்டுப் பார்க்க வேண்டும். சமுதாய வாழ்வியல் முறையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? என்ற வினாவைத் தொடுத்துப் பார்க்க வேண்டும். உனது அடிப்படைத் தேவையையும், உனது ஆடம்பர பொருட்களைப் படைக்கும் மனிதனின் வாழ்க்கை என்ன என்று உனக்குத் தெரியுமா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உன்னைப் போன்ற மனிதர்கள் இந்த சமூதாயத்தில் எப்படி வாழ்கின்றனர் என்று உனக்குத் தெரியுமா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதைத் தெரிந்து கொள்வதுதான் அனைத்துக்குமான அடிப்படை அறிவாகும். மனிதகுலத்துக்கு வெளியில் அறிவியல் எதுவும் இருப்பதில்லை. அவை சிந்தனைக்கு அப்பாற்பட்ட இயல்பு சார்ந்த இயற்கையானதே. எமது சிந்தனை சார்ந்த அறிவியல் மனித சமூக சராத்தையே அடிப்படையாகக் கொள்வது, அனைத்தையும் ஒட்டு மொத்த மனித வாழ்வின் மீது பாகுத்தாய்வது அவசியமாகின்றது.

கார்ல்மார்க்ஸ் குறிப்பட்டது போல் ''மனித சமூக சாரம் என்பது, ஒவ்வொரு தனி மனிதனிடமும் இயல்பாக உள்ளார்ந்திருக்கும் சாரம் என்பதல்ல, அதன் எதார்த்தத்தில், அது சமூக உறவுகளின் முழுத் தோற்றம் ஆகும்.'' இந்த உண்மையைக் கண்டறியும் போது, உலகம் உனதாகிவிடுகின்றது. உன்னை நீ முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் நீ யார்? என்பதையும், நீ எப்படி வாழ்கின்றாய்? என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதில் இருந்து உனக்கு வெளியில் மக்கள் எப்படி சூறையாடப்படுகின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ள முனைவதே அறிவியலாகும். மனித குலம் எப்படி அடிமையாகியது என்பதைத் தெரிந்து கொள்வதே அறிவியலாகும். வெறும் பொருட்களின் கருவியாக எப்படி மனிதன் மாற்றப்பட்டான் என்பதைத் தெரிந்த கொள்வதே அறிவியலாகும். தொழில் நுட்பத்தில் நீ ஒரு இயங்கியாகி மலடாகிப் போய்விட்டாய் என்பதை முதலில் வெட்கத்தை விட்டு தெரிந்து கொள்ள வேண்டும். இதை மாற்றுவது எப்படி என்பதைச் சிந்திப்பதே அறிவியல். இவற்றை எல்லாம் நாம் தெரிந்து கொள்வதே உலகமயமாதல் பற்றிய நமது அறிவாகும். இந்த அறிவின்பாலான மனித உணர்வே, வாழ்வின் மேலான உண்மையான சமூக இயக்கமாகும். இந்த சமூக இயக்கமே உலகை மாற்றி அமைக்கின்றது. உற்பத்தியாகின்ற ஒவ்வொரு பொருட்களிலும் மனித உழைப்பு மறைந்து கிடக்கின்றது



என்ற உண்மையைக் கண்டறிவதே மனித அறிவியலின் முதல் படியாகும். உனது உழைப்பும், உலக மக்களின் உழைப்பும்தான் சந்தையில் குவிந்து கிடக்கும் அனைத்தும். இதுதான் மனித துயரத்துக்கும் வித்திடுகின்றது. உனது வறுமைக்கும், உனது சமூகப் பிரச்சனைக்கும் காரணம், பொருட்களில் மறைந்து கிடக்கும் உழைப்பு உன்னிடம் உள்ளதா? இல்லையா? என்பதை அடிப்படையாக கொண்டே ஏற்படுகின்றது. மிகப் பெரும் ஆடம்பர வாழ்வும் கூட, உற்பத்தியான பொருளில் மறைந்து கிடக்கும் மனித உழைப்பை மறுப்பதில் இருந்து கட்டமைக்கப்படுகின்றது. மனிதன் தான் ஒரு உழைப்பாளியாக இருந்து உற்பத்தி செய்ததை மட்டுமின்றி, உற்பத்தித் திறனையும் பிறரிடம் இழந்துவிட்ட நிகழ்வு மனித துயரங்கள் அனைத்தினதும் மூலமாகவுள்ளது. உழைப்பு சார்ந்த வாழ்வு என்பது, வாழ்வதற்காக என்ற நிலையைக் கடந்து மனித துயரத்துக்கான மூலதனமாகி நிற்கின்றது. இதைத் தெளிவுபடுத்தும் வகையில், மூலதனம் மனித அடிமைத்தனத்தையும், துயரத்தையும் மேலும் எப்படி உலகமயமாதலூடாக வேகப்படுத்தி உள்ளது என்பதைப் பார்ப்போம். இந்த வகையில் நாம் உலகமயமாதல் எப்படி மக்களின் அடிப்படையான பொருளாதார வாழ்வைச் சூறையாடுகிறது எப்படி உலகத்தை சிலர் தமக்கு சொந்தமாக்கி வருகின்றனர் என்பதை பல்வேறு புள்ளிவிபரங்களூடாக விரிவாகப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 5. தனிப்பட்ட நபர்களின் செல்வக் குவிப்பே, உலகமயமாதலுக்கான சமூக அடிப்படையை உருவாக்குகின்றது

உன்னதமானதாகக் காட்டப்படும் உலகமயமாதல் என்ற சுதந்திரமான, ஜனநாயகமான, நாகரிக சமூக அமைப்பில், மனிதர்கள் சுயசிந்தனையற்ற நிலையில் அடைத்து வைக்கப்பட்ட மந்தைக் கூட்டமே. இங்கு பண்ணை அடிமைகளாக, பண்ணை மந்தைகளைப் போல் வாழவே கற்றுக் கொள்கின்றோம். சமூக அடிமைத்தனத்தையும், மிருகத்தனத்தையும் ஒருங்கே கொண்ட காட்டுமிராண்டிகளாக மனிதர்களை மாற்றுவதில்தான் உலகமயமாதலின் வெற்றி அடங்கியுள்ளது. இதையே உலகமயமாதலின் நாகரிகமாக நாம் வரித்து கொண்டுள்ளோம். உலகமயமாகும் உன்னதமான நாகரிக உலகின் ஏழ்மையும் மனித அவலங்களும் நாளுக்குநாள் பெருகி வருகின்றது. கிடைக்கின்ற புள்ளிவிபரம் ஒன்று 1820-இல் இருந்தைப் போல் அல்லது பல மடங்கு மோசமானதாக இருப்பதை உறுதி செய்கின்றது. இந்த நாகரிகமான, உன்னதமான உலகமயமாதல் சமூக அமைப்பில் ஒரு நிமிடத்துக்கு பசியால் மட்டும் 17 பேர் உலகில் கொல்லப் படுகின்றனர். அதாவது நாள் ஒன்றுக்கு பசியால் 24,000 பேர் வீதம், வருடம் 86 லட்சம் பேர் கொலை செய்யப்படுகின்றனர். இவை சிலர் அனுபவிக்கும் தனிமனித சுதந்திரம் மற்றும் தனிமனித ஜனநாயகத்தின் விளைவுகள். மனிதன் உயிர் வாழ்வதற்கு தேவையான அடிப்படையான தடுப்பு



மருந்தை, உன்னதமான உலகமயமாதலின் ஏகபிரதிநிதிகள் மக்களுக்கு மறுப்பதால், வருடம் 5.5 கோடி பேர் கொல்லப்படுகின்றனர். அதாவது நிமிடத்துக்கு 95 பேர் கொல்லப்படுகின்றனர். ஐந்து வயதுக்கு உட்பட்ட 1.2 கோடி குழந்தைகளை, துடிதுடிக்க, மூலதனம் என்ற சுதந்திர ஜனநாயகத்துக்காகவும் சுதந்திரத்தின் வெற்றிக்காவும் வருடாந்தரம் பலியிட்டுக் கொன்று புதைக்கின்றனர்.

மனிதர்களின் அடிப்படையான சமூகத் தேவைகள் சிலரின் நலன் சார்ந்து மறுக்கப்படுவதால், வருடாந்தரம் கோடிக்கணக்கான மக்கள் இயற்கையாகவே கொல்லப்படுகின்றனர். இவை இயற்கை மரணங்கள் அல்ல. ஆனால் அப்படித்தான் இன்றைய சமூகக் கட்டமைப்பு நியாயப்படுத்தி, நீடிக்கின்றது. மூலதனம் நடத்தும் இந்த மனிதப்படுகொலைகளை, கௌரவமான முறையில், சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் பெயரில் இவற்றை எல்லாம் இயற்கை மரணங்களாக முத்திரை குத்திப் புதைக்கின்றனர். இவை எல்லாம் உலகெங்கும் ஜனநாயகபூர்வமாக மக்களின் பெயரில் தெரிவு செய்யப்பட்ட அரசுகளின் மேற்பார்வையின் கீழ், அன்றாடம் நடக்கின்றது. இந்த மனிதப் படுகொலைகளை நடத்தும் அரசுகளை, ஜனநாயகம் என்ற பெயரில் மக்களின் பெயரில் மூலதனம் தெரிவு செய்கின்றது. மனிதனின் அடிப்படைத் தேவையை மறுக்கும் உலக பன்னாட்டு மூலதனத்தின் சூறையாடும் உலகளாவிய ஜனநாயகக் கொள்கையால்தான், வருடாந்தரம் கோடிக்கணக்கான மக்கள் தம் உயிரை மூலதனத்துக்காக பலியிடுகின்றனர். உலகமயமாதல் என்னும் மூலதனக் குவிப்புக் கொள்கையால், நேரடியாக வருடாந்தரம் பல்வேறு காரணங்களால் கொல்லப்படும் 10 கோடிக்கும் மேற்பட்ட மக்களின் சுதந்திரமான உயிர்வாழும் உரிமையை இட்டு, இந்த ஜனநாயகத்தைப் போற்றும் யாரும் அக்கறைப்படுவதில்லை. மரணங்களை இயற்கையானதாகக் காட்டி வக்கரித்து கிடக்கின்றனர்.

### மனித உழைப்பை சூறையாடும் மனிதவிரோதக் கும்பல்கள்

இப்படி மக்களைக் கொன்று புதைத்து உருவாகியுள்ள பணக்காரக் கும்பலே, உலக நாகரிகத்தின் உயர் சின்னங்களாகப் பவனிவருகின்றனர். இப்படி 1998-இல் உலகில் உருவானவர்களில் முதல் மூன்று செல்வந்தர்களின் சொத்து 48 நாடுகளின் தேசிய வருமானத்தைவிட அதிகமாக இருந்தது. 1999 ஐ.நா அறிக்கை ஒன்றின்படி அடிப்படை சுகாதாரம், சத்துணவு, அடிப்படைக் கல்வி, குடிநீர், இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரம் மற்றும் குடும்பக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுப்பாட்டை ஏற்படுத்த 4,000 கோடி டாலர் தேவை என்று கூறுகின்றது. உலகில் அதிக செல்வம் வைத்திருந்த 200 பேரின் சொத்தில் ஒரு சதவீதத்தைக் கொண்டு, அதாவது 700 கோடி டாலரைக் கொண்டு உலகம் முழுவதும் ஆரம்பக் கல்வியைப் புகட்டமுடியும். 200 செல்வந்தர்களின் செல்வத்தில் ஐந்து சதவீதத்தைக் கொண்டு அனைத்து அடிப்படையான சமூகத் தேவையையும் உலகம் முழுக்க பூர்த்தி செய்யமுடியும். இதன் மூலம் வருடாந்தரம் மூலதனத்தின் வெறியாட்டத்துக்கு இரையாகும் பத்து கோடி மக்களின் உயிரையும் கூட நாம் காப்பாற்ற முடியும். உண்மையில் சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண வழி என்ன என்பதை, இது இலகுவாக எடுத்து இயம்புகின்றது. மனித துயரங்கள் ஏற்படுத்தும் அவலங்களின் பட்டியல் நீண்டவை. அதை பின்னால் தனியாக விரிவாகப் பார்ப்போம். இந்த மனிதர்களின் துயரத்துக்கு காரணமானவர்களின் சுதந்திரம், ஜனநாயகம் என்ன என்பதை, முதலில் நாம் தெரிந்து கொள்வோம்.

2004-இல் உலகிலேயே அதிக நுகர்வை நுகர்பவர்களும், உலக மக்கள் தொகையில் 20 சதவீதமானவர்களும் உலக செல்வத்தில் 86 சதவீதத்தை தனதாக்கி நுகரும் ஜனநாயகமே இன்று உலகமயமாதலாக உள்ளது. உலக மக்கள் தொகையில் அடியில் உள்ள 20 சதவீதமான ஏழைகள் உலக செல்வத்தில், வெறுமனே ஒரு சதவீதத்தையே நுகர்கின்றனர். இதுவே இன்றைய நாகரிக அமைப்பால் பீற்றப்படும் ஜனநாயகம். இதுவே இன்றைய சுதந்திரத்தின் இரத்தக் கொப்பளிப்பு. இதுவே இன்றைய உலகமயமாதல். இதற்கு அரசியல் ரீதியான வேறு விளக்கம் எதுவும் கிடையாது.

மக்களைப் பட்டினி போட்டு, உயிர் வாழ்வதற்கான அவசியமான அடிப்படைகளை எல்லாம் கொள்ளையிட்டு, கொன்று போடும் உலகமயமாதல் அமைப்பில் சிலர் நலன் மட்டுமே பாதுகாக்கப் படுகின்றது. அந்த வகையில் 2001-இல் உலகளவில் பத்து லட்சம் டாலருக்கு அதிகமான தனிப்பட்ட சொத்துடைய மக்கள் விரோதிகளின் எண்ணிக்கை 71 லட்சமாக இனம் காணப்பட்டது. இது 2000-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, இரண்டு லட்சமாக அதிகரித்துள்ளது. 2001-இல் இந்த மனித விரோதிகளின் தனிப்பட்ட சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 26,20,000 கோடி (2.62 லட்சம் கோடி டாலராகும்) டாலராக இருந்தது. 2003-இல் பத்து லட்சம் டாலருக்கும் அதிகமான தனிப்பட்ட சொத்தை உடைய மக்கள் விரோதக் கும்பல் முன்பைவிட பெருகியுள்ளது. இந்த வகையில் 77 லட்சம் பேர் உலகில் இனம் காணப்பட்டுள்ளனர். இது 2002-யைவிட 5 லட்சம் அதிகமாகும். உலகமயமாதலில் பணக்காரக் கும்பல்



பெருகுவதுடன், அவர்களின் சொத்துக்கள் குவிகின்றன. இதை அன்றாடம் இழப்பவர்கள் உலகில் உள்ள பரந்துபட்ட மக்கள் கூட்டங்களே.

2003-இல் உலக மொத்தப் பணக்காரர்களில் 32 சதவீதம் பேர் அமெரிக்காவில் இருந்தனர். இதுவும் சென்ற வருடத்தை விட 13.6 சதவீதம் அதிகமாகும். 13.6 சதவீத அதிகரிப்பு 850 கோடி டாலரை பிரதிநிதித்துவம் செய்கின்றது. 3 கோடி டாலருக்கும் அதிகமான சொத்தை வைத்திருந்தோர் எண்ணிக்கை 70,000 பேராவர். இது 2002-இல் 58,000 மட்டுமே. 1975-இல் அமெரிக்காவில் 10 லட்சம் டாலருக்கும் அதிகமான வருமானம் உடையோர் 4,500 பேர் மட்டுமே இருந்தனர். 1979-இல் அமெரிக்க லட்சாதிபதிகள் எண்ணிக்கை 5.2 லட்சமாக இருந்தது. இது மொத்த மக்கள் தொகையில் 0.4 சதவீதமாகும். இன்று இவை பல பத்து லட்சமாகி விட்டது.

இந்த சமூகவிரோதக் கும்பல்கள், உலக மக்களின் செல்வங்களைக் கவருவதும், அதை தனிப்பட்ட தனிமனிதனின் சொத்தாக்குவதும், இன்றைய நாகரிக அமைப்பின் சுதந்திரம் மட்டுமின்றி இதுவே ஜனநாயகமாகவும் உள்ளது. இதைப் பாதுகாக்கவும், பெருக்கவும் உருவான நவீன வடிவமே உலகமயமாதலாகும். பணக்கார சமூக விரோதக் கும்பல்களின் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட உலகத்தில் நாம் இன்று வாழ்கின்றோம். அவர்களின் நலன்கள் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பில்தான் நாம் உயிர் வாழ்கின்றோம். இது சூக்குமமான இணைப்புகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் மக்களை அடிமைப்படுத்தி, கொள்ளையிட்டு கொழுக்கும் சமூகவிரோதக் கும்பலைச் சேர்ந்த 475 முன்னணி உலக பணக்காரக் கும்பல்களின் தனிப்பட்ட சொத்து, 1999-இல் உலகில் அடிநிலையில் உள்ள 50 சதவீதமான மக்களின் வருடாந்தர வருமானத்துக்குச் சமமானதாக இருந்தது. உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒரு சதவீதம் பேரின் வருமானம், உலக மக்களில் அடிநிலையில் உள்ள 57 சதவீதம் பேரின் வருமானத்துக்குச் சமமானதாக இருந்தது. எவ்வளவு கேவலமான ஒரு சமூக அமைப்பில், நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அமெரிக்காவில் 100 கோடி டாலருக்கும் அதிகமான சொத்தை வைத்திருந்தோர் 1989-இல் 13 பேர் மட்டும் தான். இது 1996-இல் 149 யாக உயர்ந்தது. உலகமயமாதல் மட்டுமின்றி, உலகமே எப்படி எதற்காக சுற்றுகின்றது என்பதையே இது நிர்வாணமாக்குகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1997-இல் முதல் பணக்காரனின் தனிப்பட்ட சொத்து 26 வறிய நாடுகளின் மொத்த தேசிய வருமானத்துக்குச் சமமானதாக இருந்தது. அதேநேரம் முதல் 200 பணக்காரக் கும்பலின் சொத்து அடிநிலையில் உள்ள 40 சதவீதமான உலக மக்களின் வருமானத்துக்கு நிகரானதாக இருந்தது. 1994-க்கும் 1998-க்கும் இடையில் உலகின் முதல் 200 பணக்காரர்களின் சொத்து 44,000 கோடி டாலரில் இருந்து 1,00,000 கோடி டாலராக அதிகரித்தது. அதாவது இது உலக மக்கள் தொகையில் 41 சதவீதமானவர்களின், அதாவது 246 கோடி மக்களின் மொத்த வருமானத்துக்குச் சமமாக இருந்தது. முதல் 4 பேரின் தனிப்பட்ட சொத்துக்கள் 48 வறிய நாடுகளின் தேசிய வருமானத்தை விட அதிகமாக இருந்தது. 1998 ஐ.நா அறிக்கை ஒன்றில் உலகில் உள்ள முதல் மூன்று பணக்காரனின் சொத்து, 48 நாடுகளின் உள்நாட்டு உற்பத்தியைவிட அதிகமாக இருப்பதை எடுத்துக் காட்டியது. ஆப்பிரிக்காவின் சகாராப் பகுதியின் வருமானத்தை விட உலகின் முதல் 15 பணக்காரர்களின் சொத்து அதிகமாக இருந்தது. தெற்காசிய நாட்டு மக்களின் சொத்தை விட முதல் 32 பணக்காரரின் சொத்துக்கள் அதிகமாக இருந்தது. சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் சமநிலைத் தன்மை என்ன என்பதை இது நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. உலகில் உள்ள அனைத்துச் செல்வங்களும் தனிமனித சுதந்திரம், தனிமனித ஜனநாயகம் என்ற அடிப்படையில், அனைத்தையும் தனிப்பட்ட தனிநபர்களின் சொத்தாக்குகின்றனர். சமூகத்தின் சுதந்திரம், சமூகத்தின் ஜனநாயகம் என்பது மறுக்கப்படும் போதுதான், உலகமயமாதலின் சுதந்திரம், ஜனநாயகம் என்பதே உயிர் வாழ முடிகின்றது. அந்த உலகமயமாதல் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் தமதாக்கி அனுபவித்து கொழுக்கும், உலகில் தனிப்பட்ட சொத்தைக் கொண்ட முதல் 200 தனிப்பட்ட பணக்காரர்களின் மொத்த சொத்துக்கள் எப்படி அதிகரித்து வருகின்றது எனப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| 1990 | 46,300 | கோடி டாலர் |
| 1991 | 51,400 | கோடி டாலர் |
| 1992 | 51,500 | கோடி டாலர் |
| 1993 | 52,300 | கோடி டாலர் |
| 1994 | 58,700 | கோடி டாலர் |
| 1995 | 67,800 | கோடி டாலர் |
| 1996 | 77,400 | கோடி டாலர் |
| 1997 | 79,800 | கோடி டாலர் |
| 1998 | 87,900 | கோடி டாலர் |
| 1999 | 1,00,000 | கோடி டாலர் |
| 2004 | 1,28,800 | கோடி டாலர் |



1990 உடன் ஒப்பிடும் போது உலகமயமாதல் மூலம், 1999-இல் தனிப்பட்ட நபர்களின் சொத்துக் குவிப்பு இரண்டு மடங்காகியுள்ளது. 1990-யை 2004-யுடன் ஒப்பிடும் போது இது மூன்று மடங்காகி உள்ளதை உலகமயமாதல் பளிச்சென்று வெளிப்படுத்தி நிற்கின்றது. இப்படி சொத்துக் குவிப்பு ஏற்படும் போது, யாரோ நிச்சயமாக அதை இழந்தேயாக வேண்டும். இந்த பணக்காரக் கும்பலிடம் சொத்துக்களை இழப்பது உலக மக்கள் தான். இதற்கென்று வேறு வழி எதுவும் கிடையாது. அதாவது மக்களின் அடிப்படை வாழ்வியல் ஆதாரங்களையும் ஒட்டச் சுரண்டுவதே, உலகமயமாதலின் இலட்சியமாகி விட்டதையே இது ஒளிவுமறைவின்றி எடுத்துக்காட்டி விடுகின்றது. உலகமயமாதலில் செல்வம் மிகப்பெரிய பணக்காரக் கும்பலிடம் குவிந்து வந்ததையும், வருவதையும் புள்ளிவிபரங்களே சந்தேகத்துக்கு இடமின்றி நிறுவி விடுகின்றது. 1994-இல் உலக நாடுகளின் தேசிய வருமானத்தை எடுத்து ஆராய்ந்தால், 2004 முதல் 200 பணக்காரர்களின் மொத்தச் சொத்தை விட, நான்கே நான்கு நாடுகள் மட்டுமே அதிக வருமானத்தைப் பெற்று இருந்தன. இதை 1994-யுடன் எடுத்து ஆராய்ந்தால் ஏழு நாடுகள் மட்டுமே, முதல் 200 பணக்காரக் கும்பலின் சொத்துக்களைவிட அதிக தேசிய வருமானத்தைப் பெற்று இருந்தன. இதுவே, இன்றைய உலகமயமாதலின் வெட்டுமுகம்.

## செல்வம் தனிப்பட்டவரிடத்தில் குவியும் போது ஏழைகள் பெருக்கெடுக்கின்றனர்.

செல்வங்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய தனிப்பட்ட நபர்களிடம் எப்படி எங்கிருந்து குவிகின்றது? உலகமயமாதல் பற்றிய அடிப்படைப் புரிதலுக்கு இது ஒரு அடிப்படையான கேள்வியாகும். இதை ஒவ்வொருவரும் கேட்காத வரை உலகமயமாதலைப் புரிந்து கொள்ளமுடியாது. பணம் தனிப்பட்ட ஒருவனிடம் குவிகின்ற போது, மற்றவன் நிச்சயமாக அதை இழக்கவேண்டும், இழந்தேயாக வேண்டும். இது பணம் குவிதலில் உள்ள அடிப்படையான ஒரு இயங்கியல் விதி. இதை எடுப்பாகவும் இயல்பாகவும் நாம் புரிந்து கொள்ளமுடியாதவகையில், சூட்சுமமாகவே உலகம் காட்சியளிக்கின்றது. பணம் என்பது வெறுமனே வெற்றுத் தாள்களைக் (பேப்பர்களைக்) கொண்டவையல்ல. மனித உழைப்பை குறிப்பதற்கான அளவுகோலை அடிப்படையாகக் கொண்டே, பணத்தாள் அச்சடிக்கப் படுகின்றது. பணம் என்பது அதாவது செல்வம் என்பது உழைப்பை அளவுகோலாகக் கொண்டு அளக்கப்படுகின்றது. எவ்வளவு பணம் குவிந்து கிடக்கின்றதோ, அந்தளவுக்கு மக்களின் உழைப்பை சுரண்டிக் குவித்துள்ளனர் என்பதே இதன் அர்த்தம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்ஸ் தனது ஆய்வில் ''வாழ்க்கைச் சாதனங்களுக்குச் சொந்தக்காரன் அங்காடியிலே உழைப்பாற்றலை விற்க வரும் பாட்டாளியைச் சந்திக்கும் போதுதான் முதலாளித்துவம் உயிர் பெற்றெழுகின்றது'' என்றார். முதலாளித்துவம் எப்படி உயிர் பெறுகின்றதோ, அதேபோல்தான் செல்வம் குவியும் போது உழைக்கும் மக்கள் அதை இழந்தேயாக வேண்டும். இப்படி இருக்கும் போது தனிப்பட்ட முதல் 200 பணக்காரர்களின் சொத்துக்கள், எப்படி அவர்களின் சொந்த, தனிப்பட்ட உழைப்பில் இருந்து குவிய முடியும். உலகளாவிய மக்களை வரைமுறையின்றி சூறையாடிய போதே, கடந்த 10 வருடத்தில் தனிப்பட்டவர்களின் சொத்துக்கள் இரட்டிப்பாகியது. 15 வருடத்தில் இதுவே மூன்று மடங்காகியது. அதாவது மனித சமூகத்தின் அடிப்படையான சமூகத் தேவைகள் மறுக்கப்படும் போதே, சொத்துக் குவிப்பு நிகழ்கின்றது. உலகளவில் மனித உழைப்பை வரைமுறையின்றி சூறையாடப்படும்போது, அது தனிநபர்களிடம் பல மடங்காகவே குவிகின்றது. இவை உலகளவில் பரந்த தளத்தில் நடக்கின்றது. பணம் குவிந்து செல்லும் போது, ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையில் உள்ள இடைவெளிகள் அதிகரிக்கின்றது. இதையே சுதந்திரமான உலகமயமாதல், தனது ஆன்மாவாகக் கொண்டு தனது சொந்த ஆணையில் வைக்கின்றது. பணக்காரனுக்கும் ஏழைக்கும் உள்ள இடைவெளியை ஆராயும் போது, இவை அதிர்ச்சிகரமான உண்மைகளாக வெளிப்பட்டு நிர்வாணமாகி விடுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1820 | 1 பணக்காரனுக்கு | 3 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 1870 | 1 பணக்காரனுக்கு | 5 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 1913 | 1 பணக்காரனுக்கு | 11 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 1950 | 1 பணக்காரனுக்கு | 35 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 1970 | 1 பணக்காரனுக்கு | 40 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 1973 | 1 பணக்காரனுக்கு | 44 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 1990 | 1 பணக்காரனுக்கு | 60 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 1992 | 1 பணக்காரனுக்கு | 72 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 1997 | 1 பணக்காரனுக்கு | 727 | ஏழைகளே உலகில் இருந்தனர். |
| 2001 | 1 பணக்காரனுக்கு | 845 | ஏழைகளே உலகில் இருந்தனர். |

எப்படி உலகம் பரந்துபட்ட உழைக்கும் மக்களுக்கு எதிரானதாக மாறி வருகின்றது என்பதையே ஒளிவுமறைவின்றி இவை எடுத்துக் காட்டுகின்றது. உழைக்காதவன் உழைக்கும் மக்களுக்கு எதிராக குவிக்கும் செல்வத்தின் அளவையே இது எடுத்துக்காட்டுகின்றது. இதனடிப்படையில் 2004-இல் உலகமயமாதலின் கீழ் பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையில் உள்ள இடைவெளி, மேலும் பல மடங்காகி இருக்கும் என்ற உண்மையை, பணக்குவிப்பு எடுத்துக்காட்டி விடுகின்றது. நாம் சில உண்மைகளை விரும்பியோ அல்லது விரும்பாவிட்டாலும் கூட புரிந்து கொண்டேயாக வேண்டும். மக்களிடையே செல்வம் பரவிக் கிடந்த நிலை என்பது, ஜனநாயகம் சுதந்திரத்தின் பெயரில் எப்படி படிப்படியாக மறுக்கப்பட்டு, பறிக்கப்பட்டு வருகின்றது என்பதையே, மேலே உள்ள அடிப்படைத் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. நவீன சுதந்திரம், ஜனநாயகம் என்பது பணம் சிலரிடம் குவிவதையும், ஏழைகள் பெருகி வருவதையும் அடிப்படையாகக் கொண்டது. இங்கு உலகமயமாதல் என்பது தேசிய எல்லைகளை சுதந்திரமாகக் கடந்து சென்று பணக்குவிப்பை வேகப்படுத்துகின்றது. உலகளவில் ஏழைகள் பெருகி வருவதையும், மக்கள் விரோத புல்லுருவிக் கூட்டம் ஒன்று உருவாகி வருவதையும், அவர்கள் மக்கள் மேல் வக்கரித்து எப்படி உருவாகின்றனர் என்பதையுமே இவை எடுத்துக் காட்டுகின்றது. இந்த வக்கிரமான நிலையை மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால், இதன் விளைவை மேலும் நெருக்கி நுணுக்கமாகவே பார்க்கமுடியும். உலகில் ஏழை மற்றும் பணக்காரர்களின் எண்ணிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| 1820 | 26.7 | கோடி பணக்காரனுக்கு | 80.10 | கோடி ஏழைகள் இருந்தனர். |
| 1950 | 7.08 | கோடி பணக்காரனுக்கு | 247.91 | கோடி ஏழைகள் இருந்தனர். |
| 1973 | 8.75 | கோடி பணக்காரனுக்கு | 385.09 | கோடி ஏழைகள் இருந்தனர். |
| 1992 | 7.45 | கோடி பணக்காரனுக்கு | 536.64 | கோடி ஏழைகள் இருந்தனர். |
| 1997 | 80.02 | லட்சம் பணக்காரனுக்கு | 583.68 | கோடி ஏழைகள் இருந்தனர். |
| 2001 | 71.00 | லட்சம் பணக்காரனுக்கு | 600.30 | கோடி ஏழைகள் இருந்தனர். |

1997-இல் உலக மக்கள் தொகையில் 99.77 சதவீதம் பேர் ஏழைகளாக உள்ளனர். இங்கு ஏழைகள் என்பது மத்தியதர வர்க்கத்தையும் உள்ளடக்கியது. மத்தியதர வர்க்கம் தனது சொந்தத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் விளிம்பில் வாழ்பவர்கள். இவர்கள் அன்றாடம் உழைத்தால் தான், தமது வாழ்நிலையை தக்க வைக்கமுடியும் என்ற நிலையில் உள்ளவர்கள். இதற்கு இவர்களிடம் எந்த மாற்றும் கிடையாது. இவர்களை பணக்காரர்கள் என்று வரையறுக்க முடியாது. பணக்காரன் என்பவன் தேவைக்கு அதிகமாக சொத்துக் குவித்து அதில் ஆடம்பரமாக வாழ்பவன். இவன் உழைத்து வாழவேண்டிய அவசியமில்லை. உழைப்பைச் சுரண்டுவதே இவனின் சிறப்புப் பணியாக உள்ளது. இதற்கு மாறாக 0.23 சதவீதம் பேர் உலகின் அனைத்து செல்வத்தினதும் சொந்தக்காரராக இருந்தனர். இந்த சமூக விரோத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புல்லுருவி வர்க்கத்தின் நலன்களே, இன்றைய சுதந்திரமும் ஜனநாயகமாகும். இதைத்தாண்டி யாரும் இதற்கு வேறு விளக்கம் தரவேமுடியாது. உண்மையில் சொத்துடமை மறுப்பும், சொத்துடமை குவிப்பும் உள்ளடக்கி சமூக அமைப்பை நியாயப்படுத்தி வக்கரிப்பதே ஜனநாயகத்தின் உயர்ந்தபட்ச கோட்பாட்டு விளக்கமாகும். பரந்துபட்ட மக்களுக்கு சொத்துரிமையை மறுப்பதே சுதந்திரத்தின் வரைவிலக்கணமாகும். இதை உலகளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்துவதே, உலகமயமாதலின் உள்ளடக்கமாகும்.

## சமூக எதார்த்தம் உழைப்பவனுக்கு எதிராகவே பயணிக்கின்றது.

உலகமயமாதல் என்றால் என்ன என்ற பொருளை எதார்த்தம் நடைமுறையில் நிறுவுகின்றது. 1997-க்கு பின் 100 கோடியை விட அதிக சொத்துடையவர்களின் சொத்து 66.4 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் மூலம் ஏழைகளின் அதிகரிப்பை உலகமயமாதல் இயல்பாகவே எடுப்பாக எடுத்து இயம்புகின்றது. ஏழைகளின் பிணங்களின் மேலான அஸ்த்திவாரத்தில்தான், நவீன உலகமயமாதல் சுதந்திரமாகவும், ஜனநாயகமாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டமைப்பின் வெட்டுமுகம் மிகவும் இழிவானது. 1960-இல் உலகில் முன்னணி 20 சதவீத பணக்கார நாடுகளின் வருமானம், அடியில் உள்ள 20 சதவீதமான ஏழைநாடுகளை விட 30 மடங்கு அதிகமாக இருந்தது. இது உலகமயமாதலின் பண்பாக 1990-இல் 60 மடங்காகியுள்ளது. உலகில் என்ன நடக்கின்றது என்பதை இது தெளிவாகவே நிர்வாணமாக்கி விடுகின்றது. 1989-1999-க்கும் இடையில் ஒரு நபருக்கு 1.5 முதல் 1.8 சதவீதம் என்ற அளவில், உலகில் உற்பத்தி அதிகரித்தது. ஆனால் இந்த பத்து வருடத்தில் 80-க்கு மேற்பட்ட நாடுகளில் இருந்ததை விட குறைந்து வந்துள்ளது. 50 நாடுகளில் ஒவ்வொரு வருடமும் குறைந்து வருகின்றது.

நாம் இந்த உலகத்தின் சூட்சுமத்தைக் கடந்து, சில உண்மைகளை புரிந்து கொண்டேயாகவேண்டும். உழைப்பாளியின் சொந்த உழைப்பின் இழப்புதான், பெரும் பணக்காரக் கும்பலை ஒவ்வொரு கணமும் உருவாக்குகின்றது. பரந்துபட்ட உலக மக்களின் சொந்த இழப்புதான், தனி மனிதர்களை மிதப்பாக்குகின்றது. இந்த பணக்காரக் கும்பலின் கட்டமைப்பை கட்டிப்பாதுகாக்கும் சுதந்திரம்தான், ஜனநாயகமாகின்றது. இதற்கு வெளியில் எந்த விளக்கமும் இருப்பதில்லை. உலகளவில் கம்யூனிசம் ஏற்படுத்திய தாக்கம் மற்றும் பாதுகாப்பும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட போலிக்



கம்யூனிசமும் தகர்ந்தபோது, ஏழைகள் பெருகிச் சென்றதையே மேலே உள்ள தரவுகள் பளிச்சென்று உண்மைகளைப் போட்டு உடைக்கின்றது. இந்த தனிப்பட்ட சொத்துக் குவிப்பின் பின் உள்ள வக்கிரத்தை மேலும் விரிவாகப் பாப்போம்.

1982-இல் உலகில் 100 கோடிக்கும் அதிகமாக தனிப்பட்ட சொத்தை வைத்திருந்தோர் 12 பேர் மட்டுமே. ஆனால் 2004-இல் 587 பேராக அதிகரித்தது. 2005-இல் இது 691-யாக பெருக்கெடுத்துள்ளது. 1982 முதல் பணக்காரனின் சொத்து 200 கோடியாக இருந்தது. ஆனால் 1999-இல் முதல் பணக்காரனின் சொத்து 8,500 கோடி டாலராகியது. 2003-இல் முதல் பணக்காரரின் சொத்து 10,300 கோடி டாலராகியுள்ளது. உலகமயமாதல் எதைத்தான் இந்த உலகுக்கு உருவாக்கி கொடுக்கின்றது என்பதை இந்த பணக்கார வர்க்கத்தின் வெட்டுமுகம் தெட்டத் தெளிவாகவே எடுத்துக்காட்டுகின்றது.

இந்த சமூக விரோத செல்வக் குவிப்பு வெளிப்படுத்தும் வக்கிரம் விரிவான ஒன்று. 1997-இல் 149 அமெரிக்கர்கள் 100 கோடி டாலருக்கும் அதிகமான சொத்துக்களை வைத்து இருந்தனர். இது 1996-இல் 96 பேர் மட்டுமே. 2000-ஆம் ஆண்டில் உலகளவில் 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துடையவர்களின் மொத்தச் சொத்து 1,10,000 கோடி டாலராக இருந்தது. இது 1999 உடன் ஒப்பிடும் போது 10,000 கோடி டாலராக அதிகரித்திருந்தது. 1999-இல் முதல் 200 மிகப்பெரிய பணக்காரர்களின் சொத்துக்கள் 200 கோடி டாலருக்கும் அதிகமாக இருந்தது. இவர்களின் மொத்தச் சொத்தின் பெறுமதி 1,00,000 கோடி டாலருக்கும் அதிகமாகும். இவர்களின் சொத்தை 1990 உடன் ஒப்பிடும் போது 53,700 கோடி டாலராக அதிகரித்தது. 2000-ஆம் ஆண்டில் முதல் 400 பணக்காரர்களின் மொத்தச் சொத்துக்கள் 2,00,000 கோடி டாலராக இருந்தது. 2001-இல் 538 பேர் 100 கோடிக்கு அதிகமான சொத்தைக் கொண்ட கொழுத்த மக்கள் விரோத, சமூக விரோதிகளாக இனம் காணப்பட்டனர். 2000-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துடைய 216 பேர் புதிதாக உருவாகியிருந்தனர். இவர்கள் 46 நாட்டைச் சேர்ந்தவர்கள். முதல் 500 பணக்காரரில் 271 மக்கள் விரோதிகள் அமெரிக்கராவர். இவர்களின் சராசரி சொத்து 320 கோடி டாலராக இருந்தது. அண்ணளவாக இது 1,72,160 கோடி டாலராகியது. இதை 2000 ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒரே வருடத்தில் 62,000 கோடி டாலராக அதிகரித்திருந்தது.

2002-ஆம் ஆண்டில் 497 பேர் 100 கோடி டாலருக்கும் அதிகமான சொத்துடைய மக்கள் விரோத கும்பல் என்று இனம் காணப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களின் மொத்தச் சொத்து 1,56,555 கோடி டாலராகும். இது 2001-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சற்றுக் குறைவுதான். ஆனால் 2000-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 46,000 கோடியாக அதிகமாகும். அதாவது 2000-ஆம் ஆண்டு நுகர்ச்சி வெறி சார்ந்த சந்தைக் கொண்டாட்டம் திடீர் அதிர்வை உருவாக்கியது. இது ஏற்படுத்திய வீக்கம் பின்னால் படிப்படியாக சீரடைவதை பிந்திய நிலைமை காட்டுகின்றது. 2002-இல் புதிதாக 28 பேர் 100 கோடி டாலருக்கு சொந்தக்காரர்கள். அதேநேரம் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான சர்வதேச நெருக்கடிகளால், 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துடைய பணக்காரர்களின் சராசரிச் சொத்துக்கள் 320 கோடியில் இருந்து 310 கோடி டாலராக வீழ்ச்சி கண்டது. மீண்டும் 2003-இல் 48 பேர் புதிதாக 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துடையோர் கும்பல் ஒன்று புதிதாக உருவாகியது. இதன் மூலம் 476 பேர் 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துடைய மக்கள் விரோதக் கும்பல் என்று இனம் காணப்பட்டது. இவர்களின் மொத்தச்சொத்து 1,40,000 கோடி டாலராகியது. அதாவது பிரிட்டனின் மொத்த தேசிய வருமானத்துக்குச் சமமானதாக இது இருந்தது.

தொடர்ச்சியாக 2004-ஆம் ஆண்டில் 100 கோடிக்கு அதிகமான சொத்துடைய மக்கள்விரோதக் கும்பல் 587 பேர் இனம் காணப்பட்டனர். இவர்கள் மக்களைக் கொள்ளையிட்டு சேகரித்த மொத்தச் சொத்தின் பெறுமதி 1,90,000 கோடி டாலராக இருந்தது. 2002-க்கும் 2004-க்கும் இடைப்பட்ட இரண்டு வருடத்தில் உலக பணக்காரர்களின் மக்கள் விரோதச் சொத்து 50,000 கோடியாக அதிகரித்தது. இது 2000-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 80,000 கோடி டாலராக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 1997-இல் இருந்த உலகளாவிய முதல் 200 பணக்காரரின் மொத்தச் சொத்துக்குச் சமமானதாக 2000-க்கும் 2004-க்கும் இடையில் வீங்கி வெதும்பி நிற்கின்றது. எங்கும் மனித இனத்தை நிர்வாணமாக்கி கொள்ளையடிப்பதன் மூலம் கொழுப்பு ஏறுகின்றது. இதுவே 2005-இல் மேலும் வெம்பியது. மொத்தமாக 691 பேர் 100 கோடிக்கு அதிகமான சொத்தை குவித்தனர். இதன் மொத்தப் பெறுமானம் 2,20,000 கோடி டாலராகியது. 2004-யுடன் ஒப்பிடும் போது 2005-இல் 30,000 கோடி டாலரால் மிகப் பெரிய மக்கள் விரோதக் கும்பலின் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்தது. இதை 2000-யுடன் ஒப்பிடும் போது 80,000 கோடி டாலரால் தனிப்பட்ட சொத்துக்கள் அதிகரித்தது. இதை இழந்தவர்கள் உலகெங்கும் உள்ள கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள்தான்.



2004-இல் அதிக சொத்து அதிகரிப்பு பெற்ற மக்கள் விரோதியான வாரன்புவ்பெகற் (Warren Buffett) என்பவன், ஒரே வருடத்தில் 1,240 கோடி டாலரை புதிதாக தனது கணக்கில் சேர்த்துக் கொண்டான். இதன் மூலம் தனது தனிப்பட்ட சொத்தை 16,000 கோடி டாலராக்கினான். இலக்கியம் என்ற பெயரில் Harry Potter series எழுதி விற்ற Joanne Kathleen Rowling என்ற மக்கள் விரோத எழுத்தாளர், (இவர் ஒரு பெண்) மக்கள் விரோத பணக்காரக் கும்பல் வரிசையில் 18-வது இடத்தைப் பெற்றுள்ளார். இவர் முன்னர் சமூக நல உதவிப்பணம் பெற்றே வாழ்ந்தவர். இவர் சிறுவர்களுக்கு வன்முறை சார்ந்த மனித விரோதக் கதைகளை எழுதிய பின்னரே, அந்தக் குழந்தைகளின் பெற்றோரிடம் இருந்த பணத்தைப் பிடுங்கியே முதல்தரமான கோடீஸ்வரரானவர். அத்துடன் இந்த குழந்தைக் கதைகள் மூலம் பண்பாட்டுச் சீரழிவுகளை உருவாக்கி, பலவிதமான பண்பாடுகளையும் அழித்தொழித்தவர். சுதந்திரமான இலக்கியமும், சுதந்திரமான சந்தையும் காதல் கொண்ட போது, கோடி கோடியாக மக்களின் உழைப்பைப் பிடுங்கி எடுத்தவர். இப்படியும் உலகின் செல்வங்கள், சிலர் கையில் குவிகின்றது, குவிந்து வருகின்றது.

100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துடைய கும்பலை 2003-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2004-இல் 64 பேர் புதியவர்கள். இதில் ருசியாவை எடுத்தால் 2003-இல் 17 பேராக இருந்த எண்ணிக்கை, 2004-இல் 25-ஆக அதிகரித்துள்ளது. 2005-இல் 36 பேராக மாறியுள்ளது. பணக்காரர்கள் எண்ணிக்கை அடிப்படையில் அமெரிக்கா மற்றும் ஜெர்மனிக்கு பின்னால் ருசியா புதிதாக இணைந்துள்ளது. கம்யூனிசத்தின் அடிப்படைகள் அனைத்தையும் துடைத்தெறிந்து கழுவேற்றிய பிறகு, ருசியப் பணக்கார வர்க்கத்தின் சொர்க்கம் களைகட்டி நிற்பதையே காட்டுகின்றது. உழைக்கும் மக்கள் தமது அடிப்படையான சமூக வாழ்வை இழந்து விடுவது துரிதமாகவே அரங்கேறிவிடும் போது, ருசியாவின் புதிய பணக்காரர்கள் உலகம் தெரிய வக்கிரமாகவே உருவாகிவிடுகின்றனர்.

2002-இல் ருசியாவில் 10 லட்சம் தனிப்பட்ட முதலாளிகளும், 20 லட்சம் வர்த்தகர்களும், 6 லட்சம் நிலப்பிரபுக்களையும் கொண்ட ஒரு சமூக விரோதக் கும்பலே உருவாகியிருந்தது. இவர்கள் 14 கோடி மக்களின் தலைவிதியையே கேள்விக்குள்ளாக்கி நிற்கின்றனர். சராசரியாக மாத வருமானம் 140 டாலர் என்ற நிலைக்குள் ருசியா சரிந்து வீழ்ந்துள்ளது. 1991-இல் மிகச் செல்வம் கொழித்த 10 சதவீதமானோரின் வருமானம், ஏழைகளை விட 4.5 மடங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகமாகவே காணப்பட்டது. இது 2000-இல் 14.3 மடங்காகியுள்ளது. ருசியாவில் உள்ள 2 சதவீத பணக்காரர்கள் நாட்டின் வருமானத்தில் 33.5 சதவீதத்தை பெறும் நிலைக்கு நாடு மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. வறுமையில் உள்ள பத்து சதவீதத்தினர் வருமானமோ மொத்த தேசிய வருமானத்தில் 2.4 சதவீதம் என்ற அளவுக்கு ஏழ்மையை ஜனநாயகமாகியுள்ளது. 2001-இல் ருசியாவில் வாழ குறைந்த பட்சம் ஒருவருக்கு மாதம் 55 டாலர் தேவை என அரசாங்கம் அறிவித்தது. ஆனால் ருசியாவில் வாழும் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இதைவிடக் குறைவாகப் பெற்ற பரம ஏழைகளாகி உள்ளனர். 2005-இல் ருசியாவில் 90 லட்சம் குழந்தைகள் மிக மோசமான வறுமையில் வாழ்வதாக யுனிசேவ் அறிவித்தது. இதே நிலையில் 2.98 கோடி மக்கள் வாழ்வதாக கூறுகின்றனர். ருசியா மீட்டதாகக் கூறும் ஜனநாயகம் இதுதான். இது எதிர்மறையில் 2003-இல் 100 கோடி டாலருக்கும் அதிகமான சொத்துடைய 17 பேர் கொண்ட சமூக விரோதக் கும்பல் ஒன்றை உருவாக்கியது. ஜனநாயகம் என்பது சமூக விரோதிகள் உயிர்உள்ள ஆன்மாவாகியுள்ளதையே, தரவுகள் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. உண்மையில் அரசு சொத்துக்களை சிலர் தமதாக்கியதன் மொத்த விளைவே இது. சோசலிச கட்டமைப்பில் இருந்த ருசியாவில் சட்டப்படி தனிச் சொத்துரிமை ஒழிக்கப்பட்டு இருந்தது. இன்று இந்த நாட்டில் நூறு கோடிக்கும், பல பத்து கோடிகளுக்கும் சிலர் சொந்தக்காரராக உள்ள நிலைமை, அந்த மக்களின் சொத்துக்களை திருடியதன் விளைவால் தான் ஏற்பட முடியும். இதைத் தான் ஜனநாயகம் என்றும், சுதந்திரம் என்றும் பீற்றுகின்றனர். இதுவே சீனாவிலும் நடந்து வருகின்றது. மக்களின் உழைப்பைத் திருடுவதே ஜனநாயகமாகியபோது, சொத்துக்குவிப்பே சுதந்திரமான ஜனநாயகப் பூங்காவாகியது.

இப்படி பூங்காவாகியதன் விளைவு பயங்கரமானது. 2004-இல் ருசியாவில் முதல் 100 கோடீஸ்வரர்களின் சொத்து 14,000 கோடி டாலராகியது. முதல் 10 பணக்காரர்களின் சொத்து 400 கோடி டாலருக்கும் அதிகமாகியது. 1997-இல் நான்கு பேர் மட்டும் தான் 100 கோடிக்கும் அதிகமான சொத்துக்களை வைத்திருந்தனர். இது 2004-இல் 36-யாக மாறியுள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தக் கும்பல் திருடிச் சேகரித்தச் சொத்து, அமெரிக்காவில் திருடிய அளவைவிடவும் அதிகமாகும். இந்த 36 பேரும் ருசிய மக்களிடம் திருடிய சொத்து, ருசியாவின் மொத்த வீட்டு உற்பத்தியில் 24 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. அதாவது மொத்த ருசியாவின் உள்நாட்டு வீட்டு உற்பத்தியான 45,800 கோடி டாலரில், இந்த 36 பேரின் சொத்து 11,000 கோடி டாலராக இருந்தது. ஆனால்



அமெரிக்காவில் 100 கோடிக்கு அதிகமான மக்களின் உழைப்பை திருடிய 277 பேரின் சொத்து, அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு வீட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தையே பிரதிநிதித்துவம் செய்தது. அதாவது அமெரிக்காவில் மொத்த வீட்டு உற்பத்தியான 11,00,000 கோடி டாலரில் இந்த 277 பேரின் சொத்து 65,100 கோடி டாலராக மட்டுமே இருந்தது. இப்படி மக்களின் உழைப்பை திருடும் திருட்டுக் கூட்டமே, உலகெங்கும் திருடும் ஜனநாயகத்தின் காவலராக உள்ளனர். அமெரிக்காவுக்கு அடுத்து அதிக திருடர்களைக் கொண்ட நாடாக ஜெர்மனி மாறியுள்ளது. இப்படி 52 பேர் உருவாகியிருந்தனர்.

இப்படி உலகெங்கும் உள்ள அதேநேரம் முன்னாள் சோசலிச நாடுகளில், திருட்டின் சதவீதம் தலை கீழ் தெரியாத அளவில் அதிகரிக்கின்றது. ருசியாவில் உள்ள 23 மிகப் பெரிய தொழில்துறை, மொத்த தொழில்துறை உற்பத்திகளில் 57 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. இதன் மூலம் சிறு உற்பத்திகள் மீட்சிக்கு இடமற்ற நிலையை அடைந்துள்ளது. முன்பு அரசுகளின் சொத்தாக இருந்தவை, மிகக் குறுகிய காலத்தில் தனியார் சொத்தாகியது. கொள்ளைகளில் மிகவும் சிறப்பான எடுப்பான வடிவமாக இது காட்சியளிக்கின்றது. இது சீனாவிலும் நிர்வாணமாகிவிடுகின்றது.

சீனாவை எடுத்தால் இன்று புதிதாக உலகமயமாதல் சந்தையில் குதித்துள்ள சீனாவில் தனிப்பட்ட சொத்தை உடைய புதிய பணக்காரக் கும்பல் ஒன்று வேகமாகவே கொழுக்கத் தொடங்கியுள்ளது. 2003-இல் 400 முன்னணி சீனப் பணக்காரர்களின் சொத்து 30,110 கோடி டாலராகியுள்ளது. சராசரியாக 70 கோடி டாலரைக் கொண்ட 400 பேரின் செல்வ இருப்பே இது. கம்யூனிசத்தை குழிதோண்டிப் புதைத்து, அதை அத்திவாரமாகக் கொண்டு கம்யூனிசத்தின் பெயரால் ஆட்சியில் உள்ள பாசிஸ்டுகளின் செல்வத்தைப் பெருக்கிக் குவிக்கின்றது. நவீன சீனா கம்யூனிசத்தைக் கைவிட்டு உலகமயமாதல் என்ற சந்தைக்குள் புகுந்தது முதலே, இது உருவாகி வளர்ந்து வருகின்றது. 2004-இல் முதல் நூறு பேரின் ஆகக் குறைந்த சொத்து 14.1 கோடி டாலராக இருந்தது. இது 2003-இல் 10 கோடி டாலராக மட்டுமே இருந்தது. 2002-இல் 8.4 கோடி டாலராக இருந்தது. 2001-இல் இது 6 கோடி டாலராக இருந்தது. 2000-இல் 4.2 கோடி டாலராக இருந்தது. 1999-இல் வெறும் 60 லட்சம் டாலர் மட்டுமே. இது மக்களின் உழைப்பையும், மக்களின் சொத்தையும் திருடிக் கொழுத்த முதல் தரமான பணக்காரக் கும்பலின் மாஃபியாத் தனத்தையே எடுத்துக் காட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏழைகளுக்கும் பணக்காரருக்கும் இடையில் ஜனநாயகம் வழங்கிய சுதந்திரத்தில் இடைவெளிகள் பாதாளமாகியுள்ளது. இதன் விளைவு சில துறைகளில் அப்பட்டமாகவே பிரதிபலிக்கின்றது. சீனா அரசு அறிக்கை ஒன்றில் ஒத்துக் கொண்டபடி வயது வந்த 7.1 சதவீதமான இளைஞர்களில், 22.1 சதவீதம் பேர் அதிக நிறையை உடையவராக மாறியுள்ளனர். அதாவது 2 கோடி பேர் இப்படி மாறியுள்ளனர். இந்த அளவு அமெரிக்காவுடன் ஒப்பீடும் போது அதிகரித்துச் செல்லுகின்றது. அமெரிக்காவில் நிறை அதிகரிப்பு 65 சதவீதமாக உள்ளபோது அதிக கொழுப்பு 35.5 சதவீதத்தாலேயே அதிகரித்து. இது சீனாவில் நிறை அதிகரிப்பு 1992-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 39 சதவீதத்தால் அதிகரிக்க, உடலின் கொழுப்பு 97 சதவீதத்தால் அதிகரித்து. சீனத் தலைநகரமான பீக்கிங்கில் 60 சதவீதமானவர்கள் அதிக நிறையுடையவராக மாறியுள்ளனர். இந்த கொழுப்பு உடையவர்களின் பிரதான உணவு அமெரிக்கா மக்டொனல் மற்றும் அமெரிக்காவின் பீசாவாக மாறியுள்ளது.

சோசலிச சமூகத்தில் மக்களின் உழைப்பு உருவாக்கிய சொத்துக்கள் தேசிய சொத்தாகவே இருந்தன. இதை களவாடவே உருவாக்கிய ஜனநாயகமும் சுதந்திரமும், மக்களின் சொத்துக்களை தமது தனிப்பட்ட சொத்தாக்கினர். இதன் மொத்த விளைவையே மேலுள்ள வக்கிரம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. உலகமயமாதல் என்பது மக்களின் உழைப்பை திருடிக் குவிப்பதைத் தாண்டி, இதற்கு என்று வேறு அர்த்தம் எதுவும் எதார்த்தத்தில் கிடையாது.

பொதுவாக உலகில் மிகப் பெரிய பணக்காரரில் 10-க்கு 8 பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். 2005-இல் அமெரிக்காவின் முதல் 400 பணக்காரனின் சொத்து 1,00,000 கோடி டாலராகியுள்ளது. இது சென்ற வருடத்தை விடவும் 4,500 கோடி டாலராக அதிகரித்துள்ளது. ஏழை-பணக்கார வீதத்தை 1997-யை அடிப்படையாகக் கொண்டு ஆராயும்போது, மற்றொரு உண்மை அம்பலமாகிவிடுகின்றது. 1997-இல் உலகில் இருந்த 80 லட்சம் உலக பணக்காரரில் 64 லட்சம் பேர் அமெரிக்காவில் இருக்க, மற்றைய நாடுகளில் மீதமான 16 லட்சம் பேர் எஞ்சிக் கிடந்தனர். சொத்துக் குவிப்பும் மக்கள் விரோத அமெரிக்காவை நோக்கி இருப்பதை மேலும் இது தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இதனால் தான் அமெரிக்கா சொர்க்க உலகம் என்று நக்கிப் பிழைப்பவர்கள் கூறுகின்றனர். இதனால் பணத்துடன் சொர்க்கத்தை நோக்கி ஒடுகின்றனர். 1994-இல் 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை வைத்திருந்தவர்களில், மெச்சிகோவைச் சேர்ந்த 24 பேர் இருந்தனர். இது 2001-இல் 13-ஆக குறைந்தது. இது



பணத்தைக் கொண்டு ஒரேநாளில் தப்பிஓடியது மட்டுமல்ல, சொத்துக் குவிப்பு அமெரிக்கா மற்றும் மேற்கு நோக்கி நகர்வதையே இது துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது.

உலகெங்கும் கொள்ளையடித்த பணத்துடன், சுதேசிய வேடமிட்டிருந்த பணக்காரக் கும்பல் அமெரிக்காவை நோக்கி வேகமாக ஒடுகின்றனர். குறைந்தபட்ச முதலீட்டைச் செய்யக் கூடிய சொத்துடையவருக்கான விசேட விசா வழங்கும் திட்டத்தைக் கூட, வருடாந்திரம் அமெரிக்கா நடைமுறைப்படுத்துகின்றது. இதனடிப் படையில் அமெரிக்கா வருடாந்தரம் 5 லட்சம் பேருக்கு விசேட விசாவை வழங்குகின்றது. இவை பெருமளவில் அமெரிக்க பொருளாதார நலனைச் சார்ந்ததாகவே கையாளப்படுகின்றது. 1998-இல் இதை ஆராய்ந்தால், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், தனியார் உற்பத்தியில் உயரதிகாரிகள் என 40,000 பேருக்கு அமெரிக்கா செல்ல விசா வழங்கியது. இதைவிட உயர்ந்த கல்வித் தரமுள்ளவர்கள் 40,000 பேருக்கும், வேலையில் உயர் தகுதியுடையவர்கள் 30,000 பேருக்கும் அமெரிக்கா விசா வழங்கியது. 5 லட்சம் டாலரை முதலீடு செய்யக் கூடியதும், தனிப்பட்ட ரீதியில் விசேட உற்பத்தி செய்யும் தனிநபர்கள் 10,000 பேருக்கும், 10 லட்சம் டாலர் முதலிட்டு 10 பேருக்கு வேலை வழங்கக் கூடியவர்களான 10,000 பேருக்கும் விசேட விசா வழங்கினர். இந்த முதலீட்டு விசா மூலம் குறைந்த பட்சம் 1,000 கோடி டாலரை மூன்றாம் உலக நாடுகளில் இருந்து நேரடியாகவே, அமெரிக்காவுக்குள் 1998-இல் கடத்திச் சென்றனர். கொள்ளையடிப்பில் அறிவின் வளம், உழைப்பின் திறன், மூலதனம் என்ற அடிப்படையில் அமெரிக்கா வருடாந்தரம் 5 லட்சம் பேரை உள்வாங்குகின்றது. இதன் மூலம் அமெரிக்காவில் அறிவு குவிவதுடன், செல்வக் குவிப்பையும், உலகளாவிய சமூகச் சிதைவையும் உருவாக்குகின்றனர்.

உலகில் 100 கோடி டாலருக்கு அதிகமான, தனிப்பட்ட, தனிநபர் சொத்துடைய மக்கள் விரோதக் கும்பலை அதிகம் கொண்ட பிரதான ஏகாதிபத்தியங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் விரிவாக அவற்றை ஆராய்வோம். இப்புள்ளி விபரங்கள் எல்லாம் உத்தியோகப் பூர்வமாக அறிவிக்கப்பட்டதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை. அட்டவணையில் உள்ள அனைத்துப் பெறுமானங்களும் கோடி டாலரில் உள்ளது.

100 கோடி டாலருக்கு அதிகமான தனிப்பட்ட சொத்தை உடைய, உலகளாவிய, மக்கள் விரோத பணக்காரக் கும்பலின் சொத்துக்கள் கோடி டாலரில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துக்களை வைத்திருந்தோர் எண்ணிக்கை | 587 | 476 | 497 | 538 | 322 | 298 | 230 | 259 | 423 |
| உலகில் முதல் பணக்காரர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் | 4,660 | 4,070 | 5,280 | 5,870 | 6,000 | 9,000 | 5,100 | 3,800 | 1,850 |
| உலகில் முதல் பத்து பணக்காரர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் | 25,500 | 21,720 | 26,625 | 26,700 | 27,520 | 27,025 | 17,190 | 35,834 | 12,050 |
| உலகில் முதல் இருபத்தி ஐந்து பணக்காரர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் | 46,970 | 38,850 | 45,500 | 47,400 | 45,610 | 43,110 | 42,660 | 51,960 | 21,860 |
| 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்து வைத்திருந்த பணக்காரர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் | 1,90,000 | 1,40,000 | 1,56,555 | 1,72,160 | 1,10,000 | 1,00,000 | - | - | - |

உலகில் 100 கோடி டாலருக்கு அதிகமான தனிப்பட்ட சொத்துடையோர் எண்ணிக்கை 2004-இல் 587 பேராக அதிகரித்துள்ளது. இது 1996-இல் 423 ஆகவும், 1997-இல் 259ஆகவும் இருந்தது. 2005-இல் 100 கோடிக்கு அதிகமான சொத்துடைய 691 பேர் இனம் காணப்பட்டனர். இது 2004-யை விட 104 பேர் அதிகமாகும். இவர்களின் மொத்தச் சொத்து 2,20,000 கோடி டாலராகியது. முதல் பணக்காரனின் சொத்து 4,650 கோடி டாலராகியது. முதல் பத்து பணக்காரக் கும்பலின் சொத்து 26,220 கோடி டாலராகியது. சொத்துக்கள் தனிப்பட்ட நபர்களிடம் தொடர்ந்து பெருகிச் செல்லுகின்றது. உலகளவில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான பொருளாதார நெருக்கடிகள், நவீன தொழில் நுட்பங்கள், நவீன நுகர்வுப் பண்பாடுகள், திடீர் களியாட்ட நுகர்வுவெறிக்



கொண்டாட்டங்கள் அலை அலையாக உலகளாவிய சந்தையை உலுக்கியது, உலுக்கிவருகின்றது. இதன்போது சொத்துடைய வர்க்கம் மேலும் கீழுமாக உருண்டு ஒடியது. இது தேச எல்லையைத் தாண்டி அங்கும் இங்குமாக அலைபாய்ந்தது. உலகமயமாதல் மூலம் ஏகாதிபத்திய மூலதனப் பகை முரண்பாட்டை பின்தள்ள வைக்கும் உள்ளடக்கத்தினுள், ஏகாதிபத்தியங்கள் தன்னை மீள்நிர்மாணம் செய்து கொண்டது. உலகைச் சூறையாடுவதன் மூலம், மூலதனத்தின் செழிப்பை மீள் உருவாக்கம் செய்தது. இதன் மூலம் ஏகாதிபத்திய மூலதனங்கள் தனது சொந்த அதிர்வுகளில் இருந்து மீண்டன. இதன் மூலம் பணக்காரக் கும்பல் தனது சொந்தச் சரிவுகளில் இருந்து மீண்டும் மீண்டும் செழிப்படைகின்றனர்.

இந்தச் செழிப்பை தக்கவைத்துக் கொண்டு மேலும் கொழுக்க மூலதனம் மிகவும் சூழ்ச்சித்திறன்மிக்க மக்கள்விரோத நடவடிக்கையை அடுக்கடுக்காக உலகெங்கும் எடுத்தது, எடுத்து வருகின்றது. மக்களின் சேமிப்புகளில் கைவைத்ததுடன், அதற்கு வழங்கிய வட்டிவீதத்தை படிப்படியாக, தொடர்ச்சியாகக் குறைத்தன. இதன் மூலம் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், பணக்காரக் கும்பலின் செல்வக் குவிப்பாகியது. இதேபோன்று ஓய்வூதியப் பணத்தையும் கூட கைவைத்ததன் மூலம், தேசிய அரசுகள் திவாலாகிவிட்டன. மக்களின் சேமிப்புக்களை எடுத்து மிக உயர்ந்த வட்டி விகிதத்தில் அந்த மக்களுக்கே கடன் கொடுத்து தேசங்களையே அடிமையாக்கி விடுகின்றனர். அத்துடன் உலகை உறிஞ்சிக் கொழுத்த மக்கள்விரோத பணக்காரக் கும்பலுக்குச் சாதகமாக முன்வைக்கும் வரிக்குறைப்பு, இயல்பில் பணக்காரக் கும்பலின் செல்வக் குவிப்புக்கு கைகொடுத்து தூக்கிவிடுகின்றனர். வரிக் குறைப்பின் பின்னுள்ள எதார்த்தம் என்ன எனப்பார்ப்போம்.

## பணக்காரக் கும்பலுக்கு வழங்கும் சலுகைகளே உலகமயமாதலில் சட்டங்களாகின்றன

2000-இல் அமெரிக்காவைச் சேர்ந்த 400 முன்னணி பணக்காரக் கும்பல் அரசுக்கு கட்டிய வரி 7,000 கோடி டாலராக மட்டுமே இருந்தது. இது 1992 உடன் ஒப்படும் போது இரண்டு மடங்காகியது. பணக்காரக் கும்பலுக்கு ஏற்படும் வரி மூலமான இழப்பை குறைக்க கோரும் உள்ளடக்கம்தான், உலகெங்கும் வரி குறைப்பிற்கான நடைமுறை சார்ந்த சட்டத் திருத்தங்களை செய்கின்றனர். சிறப்பு வரிச்சலுகைகளை அமுல் செய்கின்றனர். அதாவது பணக்காரன் கட்டும் வரியின் அளவைக் குறைப்பதே, அடிப்படையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகமாகியுள்ளது. பணக்காரன் மேலும் பணக்காரனாவதை உறுதி செய்வதை அடிப்படையாகக் கொண்ட, வரி குறைப்பே இன்றைய உலகமயமாதல் வரிச் சட்டங்களாக உள்ளன.

இன்று ஐரோப்பாவில் பணக்காரர்கள் மீதுள்ள வரியைக் குறைக்கும் மறைமுகவழியாக, ஐரோப்பிய இணைவு சாதகமாக்கியுள்ளது. ஐரோப்பிய இணைவின் ஊடாக பணக்காரர் வரி குறைந்த நாட்டுக்கு, தமது சொத்துக்களை மாற்றி விடுகின்றனர். இதன் மூலம் செல்வத்தைக் குவிக்கின்றனர்.

இன்று ஐரோப்பாவில் பெரும் பணக்காரர் மீதுள்ள வரி

| வரி | பாரீஸ் | லண்டன் | புரூசல்ஸ் | ஜெனிவா |
|---|---|---|---|---|
| மொத்த வரவு 30 லட்சத்துக்கு | 13 லட்சம் | 11 லட்சம் | 20 லட்சம் | - |
| 10 கோடி சொத்துக்கு | 11 லட்சம் | 0 | 0 | - |
| கூடுதல் பெறுமதியுடைய 5 கோடிக்கு | 1.3 கோடி | 30 லட்சம் | 0 | 4 லட்சம் |
| 10 கோடி பரம்பரைச் சொத்துக்கு | 3.7 கோடி | 1 கோடி | 2.4 கோடி | 50 லட்சம் |

ஏற்றத்தாழ்வான ஐரோப்பிய வரிக் கொள்கை பணக்காரக் கும்பலுக்கு ஒவ்வொரு நாட்டிலும் சாதகமாகவே உள்ளது. இருந்த போதும் வரி குறைந்த நாட்டுக்கு செல்வத்தை நகர்த்துவதன் மூலம், ஐரோப்பிய இணைவு மேலும் சாதகமாக மாறியுள்ளது. இதைக் கடந்து பொதுவாகவே பணக்காரர் மீதுள்ள வரியைக் குறைக்க சட்டங்கள் முதல் வரிக் கொள்கைகள் அனைத்தும் உலகமயமாதலுக்கு இசைவாக மாற்றப்படுகின்றது. வரிக் குறைப்பால் ஏற்படும் அனைத்துவிதமான இழப்பும், மக்களின் முதுகின் மேல் சுமத்தப்படுகின்றது. உழைப்பின் அளவு கூட்டப்படுவதுடன், சமூக உதவித் தொகை மீதான வெட்டை பொதுவாக்குகின்றனர். மக்களின் மேலான பொது வரி அதிகரிக்கப்படுகின்றது. இன்று தமது சொந்த வருமானத்தை குறைத்துக் காட்டி, வரி கட்டுவதைத் தவிர்த்து பெரும் கொள்ளை அடிக்கும் வகையிலும் சட்டம் இசைவாக உள்ளது. பிரான்சில் தமது சொந்த வருமானத்தை மறைத்தால், அதற்கான குற்றப்பணம் வெறுமனே 1500 ஈரோக்கள் மட்டுமே. பணக்காரர் களின் மோசடிகளுக்கு இது மட்டுமே போதுமான அளவு உதவி செய்கின்றது. ஒருபுறம் மோசடிக்கு வசதியும் வாய்ப்பும், மறுபக்கம் வரி குறைப்பு என்ற நனவான உலகமயமாதலில் மக்கள் தமது வாழ்வின் அனைத்து சமூக அடிப்படைகளையும் இழக்கின்றனர்.



வரிக் குறைப்பு மூலம், படிப்படியாக தேசத்தில் உள்ள ஏழைகளுக்கு கிடைத்த அற்பசொற்ப வாழ்க்கையையும் பறிப்பதன் மூலம், பணக்காரனின் செல்வம் குவிகின்றது. தொடர்ந்தும் பணவீக்கம் மூலம் ஒரு செழிப்பான உலகத்தை உருவாக்கினர். சர்வதேச நாணயமாக டாலர் இருந்ததால் டாலரின் வீழ்ச்சியால், பெரும் பணக்காரக் கும்பலின் அசையாத சொத்துக்களின் பெறுமானத்தை உயர்த்திக் கொண்டனர். உலக பங்குச் சந்தைகள் மற்றும் உலகளாவிய நிதி மூலதனங்கள் மீதான ஆதிக்கம் மற்றும் வாரி வழங்கும் கடன் மூலம் கிடைக்கும் வட்டி பணக்காரக் கும்பலை வக்கரிக்க வைக்கின்றது. பரந்த தளத்தில் மக்களின் அடிப்படை வாழ்வாதாரம் மீதான இழப்புகளை உருவாக்கி, அதை தனிப்பட்ட மக்கள் விரோதக் கும்பல் தமதாகக் குவிப்பதையே நாம் எதார்த்தத்தில் சந்திக்கின்றோம். இந்தக் கொழுத்த கும்பலின் சொகுசுகள் அனைத்து, உலக மக்களின் முதுகுத் தோலின் மேல் நிர்மாணம் செய்யப்படுகின்றது.

மறுபக்கத்தில் நவீனத் தொழில்நுட்பம் சந்தையை தன்வசப்படுத்தியன் மூலம், உலக மக்களின் சேமிப்புகளை உறிஞ்சத் தொடங்கியது. நுகர்வு வெறிச் சந்தைப் பொருளாதாரமாகிய பண்பு, சந்தை சதிராட்டம் போடுகின்றது. பணக்கார வர்க்கம் செல்வச் செழிப்பில் தலைகால் தெரியாது பணத்தைக் குவிக்கின்றது. ஏழைகள் உலகெங்கும் பெருக்கெடுத்து வருகின்றனர். உலகின் வர்க்க ரீதியான பிளவு அகலமாகி வருகின்றது. இதன் மூலம் ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான முரண்பாட்டை உலகமயமாதல் தற்காலிகமாக பின்தள்ளியுள்ளது. சொத்துக் குவிப்பு வர்க்கப் போராட்டத்தை முன்னிலைக்கு கொண்டு வந்துள்ளது. ஏழை பணக்காரப் பிளவு மேலும் துல்லியமாக அகலமாக்கி வருகின்றது. இது உலகளாவிய ஒரு நிகழ்ச்சிப் போக்காகும்.

## தனிப்பட்ட சொத்துக் குவிப்புகள் சீராகவும் பாய்ச்சலாகவும் அதிகரிக்கின்றது.

1995-இல் கம்ப்யூட்டர் துறையில் (windows) வின்டோஸ் 95-யும், 98-யும் ஏற்படுத்திய தாக்கம், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட திடீர் எழுச்சியும் தொடர்ந்த வீழ்ச்சியும் தனிப்பட்ட முதல் பணக்காரனின் தனிப்பட்ட சொத்துக்களைக் குறைத்த போதும், தொடர்ந்து அது சீராகி வருகின்றது. அதைத் தொடர்ந்து தொலைபேசியும், நவீன சந்தைக் களத்தில் சதிராட்டம் போடுகின்றது. வக்கரித்த நுகர்வு வெறியும், கவர்ச்சியும் ஏற்படுத்தும் தாக்கம் சந்தையையே தலைகால் தெரியாது வீங்க வைக்கின்றது. இது பற்றாக்குறையையும், தேக்கத்தையும் அடுக்கடுக்காக கொண்டு வருகின்றது. இதன் மூலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணக் கொழுப்பும், சமூகச் சிதைவும் ஏற்படுகின்றது. பணம் சிலரிடம் குவிவதையே, இது கூர்மையாக்குகின்றது. இவை சார்ந்து உலகமயமாதலின் உலகளாவிய போக்கு சீரடைந்த போது, உலகளாவிய பணக்காரர்களின் எண்ணிக்கை சீராக அதிகரிக்கின்றது. அவர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் வேகமாக அதிகரித்து வருவதையே மேலே உள்ள அட்டவணை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இருந்தபோதும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையே நடக்கும் மோதல்கள், சர்வதேச மாற்றத்தை உருவாக்கும்போது, நாடுகளுக்கு இடையிலான பணக்காரக் கும்பலின் சொத்துக்களின் வீழ்ச்சியை உருவாக்குகின்றது. குறிப்பாக ஜப்பான், ஜரோப்பா, அமெரிக்காவுக்கு இடையில் மூலதனத்தைக் கைப்பற்றுவதில் ஏற்பட்ட மாற்றங்கள் பாரிய தன்மை கொண்டவை. இன்று ருசியாவும், சீனாவும் கூட இதற்குள் இணைந்துள்ளது. இது தனிப்பட்ட உலகப் பணக்காரர்களின் சொத்துக் குவிப்பில் அதிர்வைக் கொடுத்தது, கொடுத்து வருகின்றது. 2000-ஆம் ஆண்டுப் பிறப்பை சந்தைக் கொண்டாட்டமாக்கிய போது, சந்தையில் ஏற்பட்ட வீக்கம் 2001-இல் எதிர்மறையான தேக்கத்தையே உருவாக்கியது. 2001-இல் டாலருக்கு போட்டியாக களமிறங்கிய ஈரோ நாணயத்தின் வருகையை அடுத்து, மீண்டும் உலகச் சந்தை தளும்பியது. 2001, 2002 உலக பொருளாதாரத்தில் ஏற்படுத்திய அதிர்வும், 2003-இல் ஈராக் யுத்தம் ஏற்படுத்திய சர்வதேச அதிர்வும், மிகப் பெரிய பணக்காரர்களின் சொத்துக்களையும் அதிர வைத்தது. இது உலகளாவிய பணக்காரர் களின் சொத்துக்களை குறைத்தது. ஆனால் 2004-இல் இது மீட்சி பெறத் தொடங்கியுள்ளது. அமெரிக்கப் பணக்காரர்களின் சொத்துக்கள் குவிவதை, புதிய உலகப் பங்கீடு துரிதப்படுத்தியுள்ளது. பிரதான ஏகாதிபத்தியங்களை தனித் தனியாக ஆராயும் போது, மேலும் துல்லியமாக இதன் சூட்சுமத்தை இனம் காணமுடியும்.

100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை உடைய மக்கள் விரோத ஆஸ்திரேலிய பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் கோடி டொலரில்:

| | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய ஆஸ்திரேலிய பணக்காரனின் சொத்து | 500 | 420 | 250 | 250 | 250 | 380 | 370 | 320 | 240 | 180 |
| மிகப் பெரிய ஐந்து ஆஸ்திரேலிய பணக்காரர்களின் சொத்து | 1220 | 1060 | - | - | - | - | - | - | - | - |



ஆஸ்திரேலியாவில் 100 கோடிக்கு அதிகமான சொத்துடையவர்கள் 1996-க்கும் 2003-க்கு இடையிலான காலத்தில் ஐந்துக்கும் குறைவானவர்களே இருந்துள்ளனர். ஆனால் 2004-இல் அது ஐந்துக்கும் மேற்பட்ட மக்கள் விரோத பணக்காரக் கும்பல் உருவாகியுள்ளது. முதல் பணக்காரனின் சொத்து 1996 முதல் சீராக அதிகரித்த போதும், 2001 முதல் 2003-இல் வீழ்ச்சி கண்டது. ஆனால் மீண்டும் 2005-இல் இது பெருக்கெடுத்துள்ளது. செல்வத்தின் குவிப்பு முதல் பணக்காரனை மட்டுமல்ல, ஒட்டு மொத்தமாகவே நிலைமையை மாற்றி அமைத்துள்ளது. ஆஸ்திரேலியப் பணக்கார வர்க்கம் ஈராக் மீதான ஆக்கிரமிப்பில் வலிந்து காட்டிய ஆர்வம் முதல், நேரடியாக ஆக்கிரமிப்பில் ஈடுபட்டதன் மூலம், ஏகாதிபத்திய முரண்பாட்டில் தனது அணியை பலப்படுத்திக் கொண்டனர். இந்த ஆக்கிரமிப்பின் மூலம் மறுசீராக்கப்பட்ட உலகப் பங்கீட்டின் அடிப்படையில், தனிப்பட்ட சொத்துடையோர் வர்க்கம் தனது செல்வக் குவிப்பை உலகச் சந்தை ஊடாக உறுதி செய்து கொண்டனர். இங்கு 20 சதவீதமான பணக்காரர்கள் நாட்டின் செல்வத்தில் 40 சதவீதத்தை செலவு செய்கின்றனர். அடியில் உள்ள 20 சதவீதமான ஏழைகள் நாட்டின் செல்வத்தில் 6 சதவீதத்தையே செலவு செய்கின்றனர். சமூகப் பிளவுக்கு இடையிலுள்ள இடைவெளி உலகளவில் மட்டுமல்ல, சொந்த ஏகாதிபத்திய நாட்டிலும் ஆழமாகி அகலமாகின்றது.

100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை உடைய மக்கள் விரோத கனடாப் பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் கோடி டொலரில்

| | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய கனடாப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 1790 | 1720 | 1400 | 1490 | 1640 | 1610 | 1190 | 1440 | 1100 | 740 |
| மிகப் பெரிய ஐந்து கனடாப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 4200 | 3770 | 2870 | 2820 | 3090 | 3220 | 2320 | - | - | 1580 |
| மிகப் பெரிய பத்து கனடாப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 5550 | 4920 | 3810 | 3750 | 3990 | 4220 | - | - | - | - |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கனடாவில் 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துடைய பணக்காரக் கும்பலின் சொத்துக்கள் படிப்படியாக அதிகரித்து வந்திருப்பதையே அட்டவணை காட்டுகின்றது. 2001, 2002, 2003-இல் பாதகமான நிலையே காணப்பட்ட போதும், 2004-இல் இந்த பணக்காரக் கும்பல் மீளவும் பெருமளவில் உலகளவில் கொள்ளை அடிக்கத் தொடங்கியுள்ளது. கனடாவின் முதல் பணக்காரனின் சொத்து 1996-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.5 மடங்காகப் பெருக்கெடுத்துள்ளது. இது முதல் 5 பணக்காரனின் சொத்துக்கும் நிகழ்ந்துள்ளது. 1999-ஆம் ஆண்டு வரை 100 கோடிக்கு அதிக சொத்துடைய 10 பணக்காரக் கும்பல் கனடாவில் இருக்கவில்லை. 2000-ஆம் ஆண்டில் 10-க்கும் மேற்பட்ட ஒரு கும்பல் உருவானது. முதல் பத்து பணக்காரனின் சொத்துக்கள் 2000-க்கும் 2005-க்கும் இடையில் 1,000 கோடி டாலரால் அதிகரித்துள்ளது. சர்வதேச ரீதியாக அமெரிக்கா ஏகாதிபத்திய அணியில் நின்று, உலகை மறுபங்கீடு செய்வதன் மூலம், உலகை கொள்ளையிடவும் மறுபங்கீடு செய்யவும் பின்நிற்கவில்லை. இதன் மூலம் பணக்காரக் கும்பல் தன்னை தக்கவைத்து கொழுக்க முனைகின்றது.

100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை உடைய மக்கள் விரோத பிரெஞ்சுப் பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய பிரெஞ்சுப் பணக்காரனின் சொத்து | 1720 | 1880 | 1450 | 1490 | 1560 | 1520 | 1390 | 1000 | 840 | 570 |
| மிகப் பெரிய ஐந்து பிரெஞ்சுப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 5330 | 4770 | 3210 | 3510 | 4300 | 4700 | 4250 | 2560 | 2740 | 2070 |
| மிகப் பெரிய பத்துபிரெஞ்சுப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 6820 | 6050 | 4200 | 4600 | 5900 | 6170 | 6180 | - | 3600 | 3040 |

1998, 2001, 2002, 2003-இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் பாதகமான நிலை காணப்பட்ட போதும், மீட்சி பெற்று வந்ததைக் காட்டுகின்றது. முதல் பணக்காரனின் சொத்து 1996-க்கும் 2005-க்கும் இடையில் ஒப்பிடும் போது 3 மடங்கு மேலாக



அதிகரித்துள்ளது. முதல் ஐந்து மற்றும் பத்து பணக்காரனின் சொத்துக்கள் இரண்டு மடங்கிற்கு மேலாகப் பெருகியுள்ளது. மரபுரீதியாக 200 வருடங்களுக்கு மேலாக, காலனிகளை சூறையாடிக் கொழுத்த பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தில், உலகில் மிகப் பெரிய பணக்காரக் கும்பல் ஒன்று குவிந்து காணப்படுகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனான ஏகாதிபத்திய முரண்பாட்டில் எதிரணியில் நின்று தனது சொத்துக்களைப் பெருக்கிப் பாதுகாக்க முனைகின்றது. கடுமையான ஏகாதிபத்திய முரண்பாடுகளுக்கு இடையில், தன்னை தக்கவைக்க முனையும் எதிரணியில் முன்னணியில் நிற்கின்றது. இதற்காகவே ஒன்றுபட்ட ஐரோப்பா என்ற அடிப்படையில் போட்டி ஏகாதிபத்தியமாக தன்னை தகவமைக்கின்றது.

இந்த போட்டியில் மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளையடிக்க, பிரெஞ்சு உழைக்கும் மக்களின் வாழ்க்கையை சூறையாடுவது அதிகரிக்கின்றது. பிரெஞ்சு தேச மக்களின் வாழ்க்கைத் தரம் கடுமையானதும், தொடர்ச்சியானதுமான வீழ்ச்சியை காண்கின்றது. 1980-இல் பிரான்சில் கிடைத்த மொத்த தேசிய வருமானத்தில் உழைப்பாளிக்கு கிடைத்தது 68.3 சதவீதமாக இருக்க முதலாளிக்கு கிடைத்தது 25.8 சதவீதமாகும். இதுவே 1996-இல் முதலாளிக்கு 33.5 சதவீதமாக அதிகரிக்க, உழைப்பாளிக்கு கிடைப்பது 60.3 சதவீதமாக குறைந்து போனது. பிரான்சில் 1962-இல் ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையிலான இடைவெளி 74 மடங்காக இருந்தது. இது 1975-இல் 1000 மடங்காகியது. இது உலகின் பொதுவான எதார்த்தமாகியுள்ளது. ஏகாதிபத்தியம் உலக மக்களை மட்டுமல்ல, சொந்த நாட்டு மக்களையும் கூட அதிகமாகச் சுரண்டுவதன் மூலம் தான் கொழுக்கின்றது.

இதை மேலும் விரிவாகப் புரிந்து கொள்வோம். 1997-இல் பிரான்சின் முதல் 500 பணக்காரரின் மொத்தச் சொத்து 10,290 கோடி ஈரோவாகும். இது 1996-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 28 சதவீதம் அதிகமாகும். ஒரே வருடத்தில் தனது தனிப்பட்ட சொத்தை 500 பேர் கொண்ட பிரெஞ்சு பணக்காரக் கும்பல் 28 சதவீதத்தால் அதிகரிக்க வைத்துள்ளது என்றால், கொள்ளையடிப்பின் செழிப்பையே இது காட்டுகின்றது. தொடர்ச்சியாக 1999-ஆம் ஆண்டில் முதல் 500 பணக்காரக் கும்பலின் மொத்தச் சொத்து 12,200 கோடி ஈரோவாகியது. இது 2000-ஆம் ஆண்டில் 19,200 கோடி ஈரோவாகியது. 1996 உடன் ஒப்பிடும் போது தனிப்பட்ட சொத்துக் குவிப்பு, இரு மடங்கையும் கடந்து கொழுத்தது. இந்தத் தொகையை பிரான்சில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் 7,000 ஈரோப் படி பங்கிட முடியும். அதாவது இந்தத் தொகை பிரான்சின் வரவு செலவில் மூன்றில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு பங்காகும். 2000-ஆம் ஆண்டில் முதல் 15 பணக்காரக் கும்பலின் சொத்து மட்டும் 10,000 கோடி ஈரோவாக அதிகரித்தது. அதாவது இது முதல் 500 பணக்காரரின் சொத்தில் அரைவாசியாக இருந்தது. இந்த 15 பணக்காரனின் சொத்து பிரான்சின் வரவுசெலவில் மூன்றில் ஒன்றுக்கு சமமானதாகவும் இருந்தது. இது 1999-இல் 6,000 கோடி ஈரோவாக இருந்தது. 1999-க்கும் 2000-க்கும் இடையில் 4,000 கோடி டாலரால் தனது தனிப்பட்ட சொத்தை முதல் 15 பணக்காரக் கும்பல் பெருக்கிக் கொண்டது.

1999-இல் பிரான்சில் தனிப்பட்ட சொத்தையுடைய கோடீஸ்வரர்கள் 799 பேர் இனம் காணப்பட்டனர். பிரான்சின் முதல் பணக்காரப் பெண்ணின் சொத்து 1,082 கோடி ஈரோவாகும். ஐரோப்பாவில் பிரிட்டிஷ் ராணிக்கு அடுத்ததாக, மிகப் பெரிய பெண் பணக்காரியாவார். உலகில் 100 கோடி டாலருக்கும் அதிகமான சொத்துடைய 587 பேரில் 53 பேர் பெண்களாவர். இது எந்தவிதத்திலும் பெண் விடுதலையைத் தந்து விடுவதில்லை. ஆணாதிக்கத்தை பாதுகாக்கும் சுரண்டல் அமைப்பையே ஆணையில் கொண்டு உலகமயமாதலின் பாதுகாவலராக உள்ளனர். 1997-இல் பிரான்சில் மக்களைக் கொள்ளையடிக்கும் மிகப் பெரிய நிறுவனங்களின் முதன்மை அதிகாரிகளின் சம்பளம் 9,820 ஈரோ முதல் 32.94 லட்சம் ஈரோ வரை நீண்டு காணப்பட்டது. முதன்மை அதிகாரியின் செல்வச் செழிப்புக்காகவே, தொழிலாளி நாள் கணக்காக உழைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த கொடுப்பனவுக்காக ஒரு தொழிலாளி 10 நாட்கள் முதல் 3300 நாட்கள் உழைக்க வேண்டியிருந்தது.

பிரான்சில் மிகப் பெரிய சம்பளம் பெறும் 30000-க்கு மேற்பட்டோரின் வருடாந்தர சம்பளம் 2 லட்சம் ஈரோவுக்கும் அதிகமாகும். இது சாதாரண தொழிலாளியின் அடிப்படைச் சம்பளத்தை விடவும் 20 மடங்கு அதிகமாகும். இப்படி உழைப்பைச் சுரண்டி உறியும் போது, செல்வத்தின் இருப்பிடம் வக்கரிப்பது எதார்த்தமாகி விடுகின்றது. உலகின் மக்களின் பாரம்பரியமான குடிவகைகளை அழித்துவரும் கொக்கோகோலா தலைவருக்கு, 2003-இல் வழங்கிய வருடாந்தர சம்பளம் 15 லட்சம் கோடி டாலராகும். மக்களைச் சூறையாடிக் குவிக்கும் அவரின் திறமைக்கு 2003-இல் அவருக்கு வழங்கிய ஊக்குவிப்புத் தொகை 30 லட்சம் டாலராகும். இப்படி உருவாகும் பணக்காரக் கும்பல், அதைப் பாதுகாக்கும் உயர் அதிகார வர்க்கம் உள்ளடங்கிய கும்பல் என்ற ஒரு சமூக அமைப்பின் கொழுப்பே, முதலாளித்துவத்தின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் சகோதரத்துவமாகும்.



அடுத்து 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை உடைய, மக்கள் விரோத ஜெர்மனிய பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய ஜெர்மனிய பணக்காரர்களின் சொத்து | 1850 | 2300 | 2560 | 2680 | 2500 | 2000 | 1360 | 1170 | 1170 | 900 |
| மிகப் பெரிய ஐந்து ஜெர்மனிய பணக்காரர்களின் சொத்து | 5820 | 6470 | 4810 | 6280 | 6560 | 5650 | 5010 | 3760 | 4910 | 3540 |
| மிகப்பெரிய பத்து ஜெர்மனிய பணக்காரர்களின் சொத்துக்கள் | 9160 | 9580 | 7140 | 8510 | 9040 | 8250 | 8040 | 6310 | 7310 | 5620 |
| மிகப்பெரிய இருபத்தைந்து ஜெர்மனிய பணக்காரர்களின் சொத்துக்கள் | 15720 | 15370 | 13870 | 12840 | 13540 | 14160 | 14780 | - | 9710 | 11630 |

1997, 1998, 2002 2003-ஆம் ஆண்டுகளில் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட நெருக்கடி, ஜெர்மனிய பணக்காரக் கும்பலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஆனால் மற்றைய ஏகாதிபத்தியங்களுடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டளவில் குறைவானதாகவே அமைந்தது. 100 கோடிக்கு மேல் அதிக சொத்துடைய 25 மேற்பட்ட கும்பலைக் கொண்ட ஒரு ஏகாதிபத்தியமாக, அமெரிக்காவுக்கு வெளியில் முதன்மை பெற்று நிற்கின்றது. தனிப்பட்டோரின் சொத்துக் குவிப்பு 1996-ம் ஆண்டுக்கும் 2005-க்கும் இடையில் ஒப்பிடும் போது, மேல் இருந்து கீழாக மடங்கின் தன்மை குறைந்து வருகின்றது. மிகப் பெரிய பணக்காரனின் சொத்து மடங்குகளால் அதிகரிக்க, கீழ் உள்ளவர்களின் சொத்துக்கள் அதை ஏற்படுத்திவிடவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு போட்டியாகவும், ஐரோப்பிய யூனியனுக்குள் பிரான்சையும் மீறி தலைமை தாங்கும் நாடாக உள்ளது. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் ஈராக் ஆக்கிரமிப்புக்கு ஊடாக உலகைத் தனக்குச் சாதகமாக மாற்ற முனைந்தபோது, பிரான்சுடன் சேர்ந்து ஊசாலாட்டத்துடன் கூடிய தற்காப்பை மேற்கொண்டன. இதன் மூலம் பெரும் பணக்காரக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும்பல் தமது சொத்துரிமையை பாதுகாக்க முனைந்தனர். எதிர்காலத்தில் அமெரிக்காவை எதிர்த்து நிற்க இராணுவ ரீதியான தற்காப்பு என்ற நிலையை நோக்கி தயாரிப்பில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

அடுத்து 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை உடைய மக்கள் விரோத இத்தாலியப் பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் கோடி டொலரில்

| | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய இத்தாலிய பணக்காரனின் சொத்து | 1200 | 1000 | 590 | 720 | 1030 | 550 | 400 | 700 | 490 | 500 |
| மிகப்பெரிய ஐந்து இத்தாலிய பணக்காரர்களின் சொத்துக்கள் | 4340 | 2730 | 2180 | 2350 | 2860 | 3240 | - | - | 1480 | 1440 |
| மிகப்பெரிய பத்து இத்தாலிய பணக்காரர்களின் சொத்துக்கள் | 5320 | 3700 | 2860 | 3160 | 3740 | - | - | - | - | - |

1998, 1999, 2002, 2003-ஆம் ஆண்டுகளில் இத்தாலிய மூலதனத்துக்கு ஏற்பட்ட நெருக்கடி பணக்காரரின் இழப்பால் ஏற்பட்ட சரிவை புள்ளிவிபரம் எடுத்துக்காட்டுகின்றது. 2001-க்கு பின்னால் இத்தாலிய மூலதனம் உலகமயமாதல் ஊடாக மூலதனக் குவிப்பு ஈடுபட்டதையும், 100 கோடி டாலருக்கு மேற்பட்ட சொத்துடைய புதிய பிரிவுகள் உருவானதைக் காட்டுகின்றது. 1996 உடன் ஒப்பிடும் போது 2005-இல் தனிப்பட்ட பணக்காரனின் சொத்து இரண்டு மடங்குக்கு மேலாக மாறியதைக் காட்டுகின்றது. ஐரோப்பிய யூனியனுக்குள் இத்தாலி இருந்த போதும், உலகை பங்கிடும் போட்டியில், அமெரிக்காவுக்கு சார்பாக நடந்து கொண்டது. இத்தாலியின் மிகப்பெரிய பணக்காரனே, இத்தாலியின் பிரதமராக இருக்கின்றான். ஈராக் ஆக்கிரமிப்பில் பங்கு கொள்வதன் மூலம், தனது தனிப்பட்ட செல்வச் சேகரிப்பு குவிவதை அடிப்படையாக கொண்டு, அமெரிக்க ஆக்கிரமிப்பாளனுடன் கூடி கொள்ளையடிக்கத் தொடங்கியுள்ளான். குறிப்பான அவனின் தனிப்பட்ட நலன்கள், ஐரோப்பாவில் ஒரு முரண்பாட்டை கூட



உருவாக்கியது. இத்தாலியின் பிரதமரும், இத்தாலியின் மிகப்பெரிய பணக்காரனுமான இவன், இத்தாலிய மக்களை மட்டுமல்ல, உலகத்தையே சூறையாடுவதில் தனது குறிப்பான நலனை முதன்மைப்படுத்துவதில் இருந்தே அனைத்து முடிவுகளையும் சர்வதேச ரீதியாக எடுக்கவும் பின்நிற்கவில்லை. தனது தனிப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்தும் பெருகுவதை அடிப்படையாக கொண்டே, இத்தாலிய மக்களின் மேலான சட்ட திட்டங்களையும், முடிவுகளையும் தனிப்பட்ட ரீதியில் இன்றைய பிரதமர் கையாளவும் தயங்கவில்லை.

100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை உடைய மக்கள் விரோத ஜப்பானியப் பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய ஜப்பானியப் பணக்காரர்களின் சொத்து | 580 | 690 | 500 | 860 | 830 | 1940 | 780 | 570 | 800 | 920 |
| மிகப்பெரிய ஐந்து ஜப்பானியப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 2650 | 2810 | 2440 | 2450 | 3240 | 4780 | 3050 | 2380 | 2670 | 2700 |
| மிகப்பெரிய பத்து ஜப்பானியப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 4680 | 4450 | 3650 | 3820 | 5270 | 7050 | 4990 | 3690 | 3640 | 4220 |
| மிகப்பெரிய இருபத்திஐந்து ஜப்பானியப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 7490 | - | - | 5920 | 8510 | 10910 | 7930 | - | - | 7240 |

ஒப்பீட்டளவில் அமெரிக்க, ஐரோப்பிய பணக்காரக் கும்பலுக்கு ஏற்பட்ட சர்வதேச நெருக்கடியை விட, ஜப்பானிய பணக்காரக் கும்பலுக்கு பலத்த அதிர்வை ஏற்படுத்தியுள்ளது. ஜப்பானிய மூலதனம் தொடர்ச்சியாகக் கடும் நெருக்கடியை சந்திக்கும் போது, தனிப்பட்ட சொத்தையுடைய வர்க்கம் ஆட்டம் காண்பது அதிகரிக்கின்றது. மற்றைய ஏகாதிபத்தியங்கள் அனைத்தும், ஜப்பானிய வீழ்ச்சியில் மிதப்பதைக் காணமுடியும் உலகச் சந்தை கைமாறும் நிகழ்ச்சிப் போக்கை இது அழகாகவே எடுத்துக் காட்டுகின்றது. 1996-க்கு முன் 100 கோடி டாலருக்கு மேல் தனிப்பட்ட சொத்துடைய 25-திற்கும் மேற்பட்ட பணக்காரக் கும்பல் செழித்து இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் 1997, 1998 இல் திடீரெனக் காணாமல் போனுர்கள். 1999, 2000, 2001, 2002-இல் மீண்ட போதும், 2003, 2004-இல் மீண்டும் காணாமல் போய்விட்டனர். 2005-இல் மீட்சி பெறுகின்றனர். 1996-இல் பணக்காரக் கும்பல் கொண்டிருந்த சொத்தின் நிலையை தொடர்ந்தும் 2004-இல் காப்பாற்ற முடியாது ஊசலாடுகின்றது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்திய மூலதனங்கள் நெருக்கடியைச் சந்தித்த போது, ஜப்பான் மிதப்பாக முனைந்ததையும், ஜப்பான் நெருக்கடியைச் சந்திக்கும் போது அமெரிக்க ஐரோப்பிய மூலதனங்கள் மிதப்பாகியதையும் காட்டுகின்றது. ஏகாதிபத்திய முரண்பாடுகள் தொடர்ச்சியாகவே, சர்வதேச நெருக்கடியை ஆணையில் நிறுத்தியிருப்பதை துல்லியமாகவும் எடுப்பாகவும் இது எடுத்துக் காட்டுகின்றது. நுகர்வும், சந்தையின் இடமாற்றமும் பணக்காரக் கும்பலின் வீழ்ச்சியையும், செழிப்புகளும் இடம் மாறியதைக் காட்டுகின்றது. ஜப்பானிய ஏகாதிபத்திய பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள், ஒப்பீட்டளவில் மற்றைய ஏகாதிபத்திய பணக்காரர்களின் சொத்தைவிட பெறுமதியில் குறைந்ததாக உள்ள அதே நேரம், அது பகிரப்பட்டும், செறிந்தும் காணப்படுகின்றது.

100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை உடைய மக்கள் விரோத பிரிட்டிஷ் பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய பிரிட்டிஷ் பணக்காரனின் சொத்து | 630 | 870 | 750 | 670 | 650 | 550 | 490 | 290 | 250 | 410 |
| மிகப் பெரிய ஐந்து பிரிட்டிஷ் பணக்காரர்களின் சொத்துக்கள் | 2320 | 2420 | 1810 | 1770 | 1570 | 1740 | 1530 | 980 | 960 | 1220 |
| மிகப்பெரிய பத்து பிரிட்டிஷ் பணக்காரர்களின் சொத்துக்கள் | 3510 | 3480 | 2550 | 2530 | 2340 | 2630 | 2180 | - | - | 6640 |
| மிகப்பெரிய பிரிட்டிஷ் இருபத்திஐந்து பணக்காரர்களின் சொத்துக்கள் | 5080 | - | - | - | - | - | - | - | - | 6640 |



உலகை நீண்ட பல காலமாக காலனியாக சூறையாடி பிரிட்டிஷ் பணக்காரக் கும்பல் இன்று சந்திக்கும் நெருக்கடிகளைக் கடந்தும் பெரும் பணக்காரக் கும்பலாகவே உள்ளனர். பிரிட்டனில் உள்ள தனியார் சொத்தில் 75 சதவீதத்தை 5 சதவீதமானோரே சொந்தமாக வைத்திருந்தனர்.

இன்று ஜப்பானிய நெருக்கடியைப் போல் பிரிட்டிஷ் மூலதனமும் கடும் நெருக்கடியை சந்திக்கின்றது. பிரிட்டிஷ் மூலதனம் சந்திக்கும் சர்வதேச நெருக்கடி பிரிட்டிஷ் பணக்காரர்களின் நிலையை தடம்புரள வைக்கின்றது. 1997, 1998, 2001-ஆம் ஆண்டுகள் பிரிட்டிஷ் மூலதனம் கடுமையாகவே ஆட்டம் கண்டது. 1998, 1997 ஆண்டுகளில் 100 கோடிக்கும் அதிகமான சொத்துடைய பத்துக்கு மேற்பட்ட பணக்காரக் கும்பலின் எண்ணிக்கை பிரிட்டனில் வீழ்ச்சி கண்டது. பத்துக்கு மேற்பட்ட கும்பலின் சொத்து 1996 உடன் ஒப்படும் போது 2004-இல் அரைவாசியாக குறைந்து போயுள்ளது. முதல் பணக்காரன் மற்றும் முதல் ஐந்து பணக்காரர்களின் சொத்துக்கள் இரட்டிப்பான போதும், கடும் நெருக்கடி ஊடாகத்தான் தன்னைத் தக்கவைக்க முடிகின்றது. அமெரிக்காவுடன் கூடிய சர்வதேச சந்தையைக் கைப்பற்றவும், மீளவும் பகிரவும் கோருகின்றது. ஈராக் யுத்தம் மூலமே மீட்சி காணத் துடிக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கும் உலக ஆதிக்கத்துக்கான அமெரிக்காவுக்கு போட்டியான நிலைப்பாடுகள் பலவற்றுக்கு முட்டுக்கட்டை போடுவதுடன், அமெரிக்கா சார்பு நிலையைத் தக்கவைக்கின்றது.

ஈராக் யுத்தத்தின் அடிப்படையே ஏகாதிபத்திய முரண்பாடுகள் தான். ஈராக்கில் யுத்தம் தொடங்கு முன்பே, அமெரிக்கா மற்றும் அமெரிக்கச் சார்பு அல்லாத பிற ஏகாதிபத்தியங்களுடன் ஈராக் செய்திருந்த அன்னிய ஒப்பந்தின் மொத்தப் பெறுமானமே 1,10,000 லட்சம் கோடி டாலராகும். இதைக் கைவிட மறுத்தபோதே யுத்தமும், யுத்தயெதிர்ப்பு நிலைப்பாட்டை சில ஏகாதிபத்தியங்கள் கையில் எடுத்தன. ஐ.நாவுக்கான ரஷ்ய அதிகாரி அமெரிக்காவின் யுத்தத் தயாரிப்பு பற்றி வெட்டவெளிச்சமாகவே தமது ஏகாதிபத்திய நிலைப்பாட்டை கூறிவிடுகின்றார். ''எமது அரசாங்கத்தின் கவலையெல்லாம், ஈராக்கிற்கும் பிற நாடுகளின் கணக்கற்ற நிறுவனங்களுக்குமிடையே உருவாக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் ஓரங்கட்டப்பட்டு, அமெரிக்க நிறுவனங்கள் புகுந்து அந்த ஒப்பந்தங்களை பெருமளவில் கைப்பற்றிக் கொள்ளுமோ என்பதுதான்... ஆம்! என்று நீங்கள் கூறினால், அது அமெரிக்காவின் எண்ணெய்க் கொள்ளையாகவே இருக்கும்'' இது தான் ஈராக் யுத்தத்திற்கான அடிப்படையும், எதிர்ப்பிற்கான அடிப்படையுமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யார், ஈராக்கை, எப்படிக் கொள்ளை அடிப்பது என்பதிலேயே இவர்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதில் இருந்தே அமைதி வழிக் கொள்கையும், யுத்த வழிக் கொள்கையும் அவர்களுக்கு இடையில் தெரிவாகியது.

இதையே எதிர்மறையில் சி.ஐ.ஏ இயக்குனர் ஒருவர் தெளிவாக்கி விடுகின்றார். ஈராக்கில் எண்ணெய்க் கம்பெனிகளையும், அதன் மூலமான ஆதாயங்களையும் பிரெஞ்சும் ரஷ்யாவும் பெற்றிருக்கின்றன. ஈராக்கில் ஒரு நாகரீகமான ஆட்சி அமைவதற்கு அவர்கள் உதவுவார்களேயானால், அமையப் போகும் புதிய அரசாங்கமும் அமெரிக்க நிறுவனங்களும் அவர்களுக்கு நெருக்கமாக இருக்கும் என்பதை நாங்கள் எல்லாவகையிலும் உறுதிப் படுத்துகிறோம். இதை அவர்களுக்குத் தெரிவிக்கவும் வேண்டும் கொள்ளை அடிக்கத் தடையாகவுள்ள யுத்த எதிர்ப்பைக் கைவிடக் கோரும் அமெரிக்கா, வெளிப்படையாகவே மற்றைய ஏகாதிபத்தியத்திடம் உலகை அமைதியாக கெடுபடியின்றி தன்னிடமே விட்டுக்கொடுத்து பங்கிடக் கோருகின்றது. மறுபக்கத்தில் ஈராக்கில் அமெரிக்காவால் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட பொம்மைக் கைக்கூலிகள், இதையே அழகாக எலும்புகளுக்காக வாலாட்டிய போது கூறிவிடுகின்றனர். ஈராக் எண்ணெய்க் கிணறுகளில் அமெரிக்கக் கம்பெனிகளுக்குப் பெரும் புதையல் கிடைக்கும் என்றனர். ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான மோதல் மூலம், மக்களை சுரண்டிக் கொழுப்பதன் மூலம் தான், தனிப்பட்ட சொத்துக்களை வரைமுறையின்றி குவிக்கின்றனர்.

யுத்தத்தின் மூலம் தனது மூலதனத்தைப் பாதுகாக்கவே பிரிட்டிஷ் பணக்காரர்கள் முனைகின்றனர். உலகமயமாதல் என்ற போக்கில் அமெரிக்க மூலதனம் கொண்டுள்ள உலக ஆதிக்கத்தை, ஒன்றிணைந்த ஐரோப்பா, கடுமையான எதிர்ப்பின் ஊடாகவே தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முனைகின்றது. இந்த நிலையில் ஐரோப்பாவில் உள்ள முக்கியமானதும், மிகப் பலம் பொருந்திய மூலதனத்தைக் கொண்ட பிரிட்டனின் நிலைப்பாடு, சர்வதேச ரீதியாக சந்தையை கைப்பற்றுவதில் ஒரு தடைக்கல்லாகவே உள்ளது. இது வெற்றிகரமாக பிரிட்டனின் நலன்களை பூர்த்தி செய்ய முடியாத போதும், அமெரிக்க நலன்களுக்குச் சாதகமாகவுள்ளது.

100 கோடி டாலருக்கு அதிகமான சொத்தை உடைய மக்கள் விரோத அமெரிக்கப் பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் கோடி டாலரில்



| | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய அமெரிக்கப் பணக்காரர்களின் சொத்து | 4650 | 4660 | 4070 | 5280 | 5870 | 6000 | 9000 | 5100 | 3640 | 1850 |
| மிகப்பெரிய ஐந்து அமெரிக்கப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 14820 | 15050 | 12400 | 15730 | 16620 | 18060 | 19200 | 16650 | 11481 | 5420 |
| மிகப்பெரிய பத்து அமெரிக்கப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 23690 | 24220 | 20110 | 25420 | 25710 | 25470 | 25510 | 21850 | 15931 | 7850 |
| மிகப்பெரிய இருபத்திஐந்து அமெரிக்கப் பணக்காரர்களின் சொத்துக்கள் | 39360 | 38580 | 33310 | 38330 | 40400 | 36850 | 31820 | 22980 | 23201 | 12030 |

உலகில் அதிக பணக்காரர்களைக் கொண்ட நாடு அமெரிக்காவே. 100 கோடி டாலருக்கு அதிகமான சொத்துடையோரில் அரைவாசி பேருக்கு மேல் அமெரிக்கர்களே. 2000, 2001, 2002, 2003-களில் அமெரிக்கா மூலதனம் உலகச் சந்தையில் கடும் நெருக்கடியைச் சந்தித்தது. இந்த மீட்சிக்கு ஈராக் யுத்தம் அவசியமாகியது. யுத்த பொருளாதாரம், உலகை மிரட்டி அடிபணிய வைக்கும் சந்தைப் பொருளாதாரம் என்ற விரிந்த தளத்தில் அமெரிக்கா மூலதனம் களமிறங்கியுள்ளது. 1996-உடன் 2005-யை ஒப்பிடும் போது பணக்காரக் கும்பலின் சொத்துக்கள் மூன்று மடங்கால் அதிகரித்துள்ளது. 2000-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் முதல் 400 பணக்காரக் கும்பலின் தனிப்பட்ட மொத்தச் சொத்துக்களின் பெறுமானம் 1,20,000 கோடி டாலராகும். இது 1999-இல் 1,00,000 கோடி டாலராக மட்டுமே இருந்தது. அமெரிக்காவில் உள்ள முதல் 400 பணக்காரரின் சொத்து 2002-க்கும் 2003-க்கும் இடையில் 10 சதவீதத்தால் அதிகரித்தது.

## ஒரு வர்க்கத்தின் சொர்க்கம், நரகங்களின் மேல் தான் நிர்மணிக்கப்படுகின்றன

தனிமனித செல்வக் குவிப்பு, அமெரிக்காவில் உயர்ந்த கட்டத்தை அடைந்துள்ளது. 2004-இல் அமெரிக்காவின் முதல் 500



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகப் பெரிய நிறுவனங்களின் தலைவர்கள் வருடாந்தரம் குறைந்தபட்சம் ஒரு கோடி டாலருக்கு மேல் சம்பளமாக பெற்றனர். மிகப் பெரிய 25 நிறுவனங்களின் தலைவர்கள் குறைந்த பட்சம் 3.5 கோடி டாலரை சம்பளமாக பெற்றனர். இதை எங்கிருந்து எப்படி பெறுகின்றனர் என்றால் மக்களின் அன்றாட உழைப்பு தான். 1979-இல் அமெரிக்கா லட்சாதிபதிகள் எண்ணிக்கை 5.2 லட்சமாகும். மொத்த மக்கள் தொகையில் 0.4 சதவீதமாகும். 1996-இல் 13 லட்சம் பேர் லட்சாதிபதிகளாக இருந்தனர். இவர்கள் அமெரிக்கச் சனத் தொகையில் ஒரு சதவீதம் பேராவர். இவர்கள் அமெரிக்க நிலத்தில் 22 சதவீதத்ததை வைத்திருந்தனர். படிப்படியாக மக்களை சூறையாடுவதன் மூலம், கோடீஸ்வரர்கள் பெருக்கெடுக்கின்றனர். அமெரிக்காவில் ஒரு கோடி டாலருக்கு மேல் சொத்துடைய சமூக விரோதிகள் எண்ணிக்கை 1995-இல் 1.19 லட்சமாகியது. இது 1998-இல் 2.75 லட்சமாகியது. இந்த மூன்று வருடத்தில் கோடி டாலருக்கும் அதிகமான சொத்துடையோர், இரண்டு மடங்கையும் தாண்டிக் கொழுத்துள்ளனர். இதே மூன்று வருடத்தில் அமெரிக்காவில் வீடுகளின் எண்ணிக்கை 3 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனால் 10 லட்சம் பெறுமதியுடைய மாடமாளிகைகளின் எண்ணிக்கை 10 லட்சத்தால் அதிகரித்தது. மேல் இருக்கும் உயர் வர்க்கத்தின் படிநிலைக் கட்டமைப்பு செல்வக் குவிப்பு மேல் நோக்கி நகர்த்துகின்றது. கீழ் உள்ள சமூகக் கட்டமைப்பின் படிநிலையில் செல்வம் படிப்படியாக அகன்று விடுகின்றது. செல்வம் மேலும் கீழுமாக, நேர்எதிர்வீதத்தில் நாள் தோறும் மறுபங்கீட்டைச் செய்கின்றது.

இதன் விளைவு மேல்நோக்கி கொழுக்க, கீழ்நோக்கி ஏழைகளின் புதைகுழிகள் நிர்மாணிக்கப்படுகின்றன. அமெரிக்காவில் உள்ள 14 ஆயிரம் மிகப் பெரிய பணக்காரக் குடும்பங்களின் ஆண்டு வருமானம், அமெரிக்காவில் அடிநிலையில் உள்ள 2 கோடி குடும்பங்களின் மொத்த வருமானத்துக்குச் சமமானதாகும். இது சமூகப் பிளவின் வீச்சையே எடுத்துக்காட்டுகின்றது. உண்மையில் 1999-இல் அமெரிக்காவில் இருந்த முதல் 400 பணக்காரரின் சொத்தின் பெறுமானம் 1,00,000 கோடி டாலராக இருந்தது. இது முந்திய வருடத்தில் 73,800 கோடி டாலராகவே இருந்தது. இந்த அதிகரித்த தொகையில் ஐந்தில் ஒன்றைக் கொண்டு, அதாவது 4,800 கோடி டாலரைக் கொண்டு அமெரிக்காவில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் 15 சதவிகிதத்தினரின் வறுமையை அகற்றி, அவர்களை வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கொண்டு வரமுடியும். மறுபக்கத்தில் அமெரிக்காவில் பணக்காரர்களின் செல்வம் அதிகரிக்க, ஏழைகளின் கூலி வீதம் குறைவது அதன் அடிப்படை விதியாகின்றது.



1998-இல் அமெரிக்காவின் உண்மைக் கூலிவீதம், 1973-இல் இருந்ததை விட 7 சதவீதம் குறைவானதாகியது. அமெரிக்காவில் வசதி உள்ளவனை விட ஏழை மக்கள் நோய்க்கு உள்ளாவது ஏழு மடங்கு அதிகமாகும். 2000-க்கு முந்திய பத்தாண்டுடன் ஒப்பிடும் போது, அமெரிக்காவில் வறுமை 50 சதவீகித்தால் உயர்ந்துள்ளது. 1980-க்கும் 1985-க்கும் இடையில் கல்விக் கட்டணம் 256 சதவீதம் உயர்ந்தது. அதேநேரம் குடும்பத்தின் வருமான உயர்வு 95 சதவீதம் மட்டுமே. இது கூட அமெரிக்க அரசாங்கத்தின் புள்ளிவிபரமே. ஆனால், இந்த 95 சதவீதத்தை மேல் இருந்து கீழாக ஆராயும் போது, வருமானம் குறைந்து வருமான அதிகரிப்புக்கு பதில் குறைவே ஏற்படுகின்றது.

உண்மையில் அமெரிக்காவில் என்ன நடக்கின்றது. அமெரிக்க மக்களின் 90 சதவீதமானவர்களின் சொத்தைவிட ஒரு சதவீதம் பணக்காரக் கும்பலின் சொத்து அதிகமாகும். 1967-க்குப் பின் பெரும் செல்வந்தர்களின் தனிப்பட்ட சொத்து, 1997-இல் 46 சதவீதம் உயர்ந்தது. அதே நேரம், ஊதியம் 14 சதவீதமே உயர்ந்தது. 1996-இல் அமெரிக்காவில் மேலே உள்ள 20 சதவீதத்தினர் ஒட்டு மொத்த அமெரிக்க வருமானத்தில் 46 சதவீதத்தை நுகர்ந்த போது, கீழே உள்ள 20 சதவீகித்தினர் அமெரிக்காவின் ஒட்டு மொத்த வருமானத்தில் 1.8 சதவீதத்தையே நுகர்ந்தனர். அமெரிக்கா என்ற சொர்க்க பூமியில், 2003-இல் அமெரிக்காவில் 90 சதவீதமான கீழ்மட்ட மக்களின் வருமானத்தை விட, 400 மிகப் பெரிய பணக்காரர்களின் வருமானம் 15 மடங்காக அதிகரித்தது. சொர்க்கம் யாருடையது என்பதையே, தரவுகள் தெளிவுபடுத்தி விடுகின்றது.

1962-இல் அமெரிக்காவில் அடிமட்டத்தில் வாழ்ந்த 90 சதவீதமான மக்களின் வருமானம் மொத்த தேசிய வருமானத்தில் 69 சதவீதமானதாக இருந்தது. இது 1992-இல் 59 சதவீதமாக வீழ்ச்சி கண்டது. பணக்காரனின் செல்வம் அதிகரித்துச் சென்றதையே இது சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது. அமெரிக்காவில் ஒரு சதவீதமான செல்வந்தர்களிடம் குவியும் பணத்தின் அளவு, ஆண்டுக்கு 70,000 கோடி டாலராக அதிகரித்துள்ளது. செல்வக்குவிப்பு பிரமிப்பான எல்லையை தொடர்ந்தும் கடந்து செல்லுகின்றது. 100 கோடிக்கு அதிக சொத்து வைத்திருந்த முன்னணி அமெரிக்க பணக்காரரின் சொத்துக்கள் 1997-க்கும் 1999-க்கும் இடையில் சராசரியாக 94 கோடி டாலராக அதிகரித்தது. மறுபக்கத்தில் 1983-1995-க்கும் இடையில் அடியில் இருந்த அமெரிக்க மக்களின் சொத்துக்கள் 80 சதவீதத்தால் குறைந்து போனது. இதுவே ஒரு சுதந்திரமான ஜனநாயகமான இந்த சமூக அமைப்பின் உள்ளடக்கமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த பணக்காரக் கும்பல் உருவாக்கமே, மக்களின் மந்தைத் தனத்தை அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொள்கின்றது. உலகின் முதல் பணக்காரனின் சொத்து (window சேர்ந்த Bill Gates) வின்டோஸ் மென்பொருளின் வருகையுடன் தொடங்கியது. கடந்த 10 வருடமாக உலகின் மிகப் பெரிய மக்கள் விரோதியாக Bill Gates நீடிக்கின்றான். Bill Gates குவித்த செல்வம், 1999-இல் உச்சத்தை எட்டி பின் சீராகி வருகின்றது. வின்டோஸ் சர்வதேச ரீதியாக நவீன கணினி அறிவியல் தொழில் நுட்பத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், உலகில் மிகப் பெரிய பணக்காரன் தனது சொத்தைத் தக்கவைக்க முனைகின்றான். சர்வதேச ரீதியாக அமெரிக்க நீதிமன்றம் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றமும் வின்டோஸ்சின் அராஜகத்துக்கு எதிராக தீர்ப்புகளையும், அபராதங்களையும் விதித்தபோதும், தொழில்நுட்ப ரீதியான கட்டுப்பாட்டைத் தொடர்ச்சியாக கணினியில் கட்டுப்படுத்துவதன் மூலமே, உலகில் முதல் பணக்காரன் கொழுத்து நிற்கின்றான். உலகில் அறிவியல் தொழில் நுட்பத்தைத் தமது தனிப்பட்ட சொத்தாக்கியதன் மூலம், உற்பத்தி மீதான கட்டுப்பாட்டைத் தனிமனிதச் சொத்தாக்கி உலகையே சூறையாடுகின்றனர். தனிமனிதனை நோக்கி, செல்வத்தின் பெரும் பகுதி இப்படி வரைமுறையின்றி திரளுகின்றது. உழைப்பின் ஆற்றலையும், உழைப்பின் திறனையும், தனிமனிதர்கள் தமது தொழில் நுட்பம் மூலம் வரைமுறையின்றி சூறையாடுவதால், எங்கும் செல்வக் குவிப்பில் அராஜகம், மக்களுக்கு எதிராகத் தலைவிரித்தாடுகின்றது.

செல்வக்குவிப்பின் ஏற்றயிறக்கம் சர்வதேச பொருளாதார ஏற்றயிறக்கத்துடன் நேரடியாகத் தொடர்புடையதாகவே இருந்தது, இருந்து வருகின்றது. சர்வதேச நெருக்கடிகள் ஏற்படுத்தும் ஏகாதிபத்திய முரண்பாட்டை, உலகமயமாதல் ஊடாக அமைதியாகவே நகர்த்த முனைகின்றது. மூலதனங்களுக்குச் சொந்தக்காரர்களான பெரும் பணக்காரக் கும்பல், சொத்து இழப்பை அனுமதிக்கும் எந்த ஒரு நிலையையும் சகித்துக் கொள்வதில்லை. இதில் இருந்து மீள அனைத்துவிதமான மக்கள் விரோத வழிகளையும் கையாள்வதில் வக்கிரமாகவே செயலாற்றுகின்றது. இந்த வகையில்

1.வன்முறை சார்ந்த யுத்தம் மூலமான பங்கீட்டைச் செய்தல் ஒரு வடிவமாகும். ஈராக் நெருக்கடி கூட ஏகாதிபத்திய பங்கீட்டையே கோரியது. ஏகாதிபத்தியங்கள் ஈராக் யுத்தத்தில் காட்டிய எதிர்ப்பும், ஆதரவும் கூட இதற்கு உட்பட்டதே.

2.சர்வதேச ரீதியான பொருளாதார நெருக்கடியை அடுத்து, பணக்காரக் கும்பலின் சொத்திழப்பைத் தடுக்க உலகளவில்



மக்களின் சேமிப்பு மீதான வட்டிக் குறைப்பு ஒரு குறிப்பான தாக்குதலாக இருந்தது. வட்டிக் குறைப்பின் மூலம் பெரும் மூலதனங்கள் திடீர் லாபத்தைப் பெற்றன. வட்டியைக் குறையக் கொடுத்ததன் மூலம், செல்வம் திடீரெனக் குவிந்தது. பரந்துபட்ட மக்கள் பெரும் சொத்திழப்பைச் சந்தித்தனர். வட்டியைப் பெறும் மூலதனம் மிகக் குறைவாகச் செலுத்தியதன் மூலம், மக்களின் சேமிப்புகளுக்குக் கிடைத்த வட்டி திடீரெனக் குறைந்து போனது. இதில் கிடைத்த லாபம் சில தனிப்பட்ட நபர்களிடம் குவிந்தன. உதாரணமாக அமெரிக்காவில் மக்களின் சேமிப்புக்கு வட்டியைக் குறைத்த போது, 8.4 கோடி மக்களுக்கு வட்டிப் பணமாக கிடைக்க வேண்டிய 4,000 கோடி டாலரை இழந்தனர். ஆனால் மூலதனம் இதை நேரடியாகவே தனதாக்கியது.

3.அண்மையில் ஏற்பட்ட டாலரின் பெறுமதி இழப்பு, தனிப்பட்ட பணக்காரனின் அசையாத சொத்துக்களின் பெறுமதியை உயர்த்தியது. இதன் மூலம் தனிப்பட்ட பணக்காரனின் சொத்துக்கள் திடீரென உயர்ச்சி பெற்றன.

4.உலகளவில் வரிக்குறைப்பு, நடைமுறை ரீதியான செயல் பூர்வமான செல்வக் குவிப்பின் ஒரு நினைவுபூர்வமான வடிவமாகியுள்ளது. கீழ் உள்ளவர்கள் வரி கட்டவே முடியாத வறுமையில் உள்ள போது, மேல் உள்ளவர்களிடம் பணம் குவியும் போது வரிக் குறைப்பு என்பது செல்வக் குவிப்புக்கு மேலும் இசைவானதாகி வருகின்றது. ஏழைகள் உள்ளடக்கிய நுகர்வின் மேலான பொதுவரியை உயர்த்துவதன் மூலம், வருமானம் மீதான வரியை குறைப்பது உலகளாவிய ரீதியில் செல்வக் குவிப்பின் மற்றொரு அடிப்படையாக உள்ளது.

5.உலகளவில் நிதி மூலதனம் பரவிப் பாய்வதால், பின்தங்கிய நாடுகளில் இருந்து ஏகாதிபத்தியம் நோக்கித் தாவும் பணத்துக்கு வரைமுறையற்ற சலுகைகள் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் செல்வத்தின் இருப்பு மேலும் சிலரை நோக்கிக் குவிந்து வருகின்றது. வரிகள் அற்றதும், சலுகைகளைக் கொண்டதுமான நிதியின் ஊடுருவல், பெரும் தனிப்பட்ட கும்பலின் பணக்குவிப்பை துரிதமாக்குகின்றது.

6.மக்கள் விரோத பணக்காரக் கும்பலின் நிதி, நிதிச் சந்தையைக் கட்டுப்படுத்துவதால், தேசிய நிதியாதாரங்களை தமது தனிப்பட்ட சொந்த நிதியாதாரங்களாக கைமாற்றுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பணக்காரக் கும்பலுக்கு சேவை செய்வதால் கொழுப்பேறும் அதிகாரவர்க்கம்

இந்த அமைப்பைப் பாதுகாக்கும் சட்டதிட்டங்களும், அதைக் கையாளும் நீதிபதிகள் கூட பெரும் பணக்காரக் கும்பலே. 1997-இல் புதிதாக நியமிக்கப்பட்ட 25 நீதிபதிகளின் சராசரியான தனிநபர் சொத்து, 18 லட்சம் டாலருக்கும் அதிகமாகும். அமெரிக்காவில் உள்ள நீதிபதிகளில் 34.1 சதவீதம் பேர் 10 லட்சம் டாலருக்கும் அதிகமான சொத்துடைய பணக்காரக் கும்பலே. பொதுச் சட்ட திட்டங்கள் பணக்கார நலன்களைத் தாண்டி, எதையும் மக்களுக்காக வழங்குவதில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இப்படி செல்வம் குவிவது என்பது தனிப்பட்ட நபர்களிடம் வரைமுறையின்றி வக்கரித்து வருகின்றது. உலகமயமாதல் இதையே தனது சொந்த ஆணையில் வைக்கின்றது. உலகை மிஞ்சும் பெரும் பணக்காரக் கும்பலை உருவாக்கி அதைப் பாதுகாக்க முனைகின்றது. இதை உருவாக்கிப் பாதுகாக்கும் அரசு தலைவர்கள் முதல், நாட்டை ஆளும் வர்க்கங்கள் பெரும் செல்வத்தின் சொந்தக்காரர்களாகவும் இருக்கின்றனர். இதற்குள் 100 கோடிக்கும் அதிகமான சொத்துடைய பிரிவுகளும் அடங்கும். ஆளும் பிரிவுகள் பணக்காரக் கும்பலாக இருப்பது, இன்றைய ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் இரத்தக் கொப்பளிப்பாகியுள்ளது. 2000-ஆம் ஆண்டில் இத்தாலிய பிரதமர் சில்வியோ பலஸ்கோனி உலக பணக்காரக் கும்பலில் 29 இடத்தில் இருந்ததுடன் 1,030 கோடி டாலருக்குச் சொந்தக்காரனாக இருந்தான். இவன் 1997-இல் 700 கோடி டாலருக்கு மட்டுமே சொந்தக்காரனாக இருந்தவன். இவனின் சொத்து 1998-இல் 800 கோடி டாலராகியது. 2004-இல் இவனின் சொத்து 1,000 கோடி டாலராகியது. 2005-இல் 1200 கோடி டாலராகியுள்ளது. இவனே இத்தாலியின் மிகப் பெரிய பணக்காரனுமாவான்.

இந்த உலகையே உலகமயமாக்கி சுரண்டிக் கொழுக்கும் ஏகாதிபத்திய நாடுகளின் தலைவர்கள் கூட கோடீஸ்வரர்கள் அல்லது லட்சாதிபதிகள்தான். 2004-இல் உலகை அடக்கியாளும் பிரதானமான ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த ஜி-7 நாட்டு தலைவர்களின் தனிபட்ட சொத்துக்களின் விபரங்களைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| இத்தாலிய பிரதமரின் சொத்து | 1200 கோடி டாலர் (2005 இல்) |
| கனடா பிரதமரின் சொத்து | 22.5 கோடி டாலர் |
| அமெரிக்க ஜனாதிபதியின் சொத்து | 1.5 கோடி டாலர் |
| பிரான்ஸ் ஜனாதிபதியின் சொத்து | 90 லட்சம் டாலர் |
| பிரிட்டிஷ் பிரதமரின் சொத்து | 30 லட்சம் டாலர் |
| ஜப்பானிய பிரதமரின் சொத்து | 20 லட்சம் டாலர் |
| ஜெர்மனிய பிரதமரின் சொத்து | 10 லட்சம் டாலர் |



இவர்கள் அனைவரும் உலகப் பணக்காரர் பட்டியலில் உள்ளவர்களே. உலகமயமாதலை பாதுகாக்கும் இந்தக் கும்பல், மக்களின் வாக்குரிமையில் அதிகாரத்துக்கு வருகின்றனர். இன்றைய ஜனநாயகம் என்பது பணக்காரக் கும்பலுக்கு மட்டுமானதே. பணக்காரர் மட்டும் அல்லது பணக்காரருக்கு சேவை செய்து பிழைக்கக் கூடியவர்கள் மட்டுமே இந்த ஜனநாயகம் மூலம் அதிகாரத்துக்கு வரமுடியும். மக்களால் தேர்ந்து எடுத்து அதிகாரத்துக்கு வந்ததாகக் கூறுபவர்களே தமக்குத்தாமே எடுத்துக் கொள்வது என்பது, ஒரு அடிப்படைச் சம்பளம் பெறும் தொழிலாளியை விட (அடிநிலைத் தொழிலாளி சராசரியாக 12000 ஈரோவையே வருடம் பெறுகின்றான்) பல மடங்காகும். இது 25 மடங்கு வரை செல்லுகின்றது. பிரதான ஏகாதிபத்தியங்களில் ஆளும் வர்க்கம் தாம், தமக்கே எடுத்துக் கொள்ளும் கொள்ளையின் அளவைப் பார்ப்போம்.

| | பிரதமர் | மந்திரிகள் |
|---|---|---|
| பிரிட்டன் | 2,60,000 ஈரோ | 1,90,000 ஈரோ |
| அமெரிக்கா | 2,11,800 ஈரோ | 1,83,200 ஈரோ |
| பெல்ஜியம் | 1,80,000 ஈரோ | 1,50,000 ஈரோ |
| ஜெர்மனி | 1,74,884 ஈரோ | 1,39,944 ஈரோ |
| பிரான்ஸ் | 1,22,000 ஈரோ | 91,500 ஈரோ |
| இத்தாலி | 1,05,500 ஈரோ | 80,500 ஈரோ |

சட்டபூர்வமாக அவர்கள் கூறும் ஜனநாயகத்தின் ஊடாக சம்பளமாக பெறுவது இவை. ஆனால் இதை விட பற்பல சலுகைகள், மானியங்கள், வசதிகள் என பலவற்றைத் தாமே தமக்கு எடுத்துக் கொள்கின்றனர். இதை எடுத்துக் கொள்வதையே தமது ஜனநாயகம் என்கின்றனர். இவர்கள் தான் ஒரு தொழிலாளியின் சம்பளம் அதிகம் என்று கூறுவது மட்டுமின்றி, அவர்களின் சம்பளத்தைக் குறைப்பதற்கான உரிமையை, மக்கள் தமது வாக்கு மூலம் தமக்குத் தந்துள்ளதாகக் கூறும் வக்கிரம் தான் இன்றைய ஜனநாயகமாக உள்ளது.

2003-இல் அமெரிக்கா செனட் சபைக்கு தேர்ந்தெடுத்த 100 பேரில் குறைந்தபட்சம் 40 பேர் கோடீஸ்வரர்களாக இருந்தனர். சிலர் பல பத்து கோடிகளுக்குச் சொந்தக்காரர்கள். இந்த 40 பேரில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 22 பேரும், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 18 பேரும் கோடீஸ்வரராக இருந்தனர். அமெரிக்க ஜனநாயகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது இரண்டு கோடீஸ்வரக் கும்பலுக்கு இடையிலான போட்டியே ஒழிய வேறு ஒன்றுமல்ல. உலகை எப்படி அடக்கியாள்வது என்பதும் இதற்கு உட்பட்டதே. அதிகுறைந்த சொத்துடைய 40வது கோடீஸ்வரரின் சொத்து 11.1 கோடி டாலராகும். இரண்டாவது பெரிய பணக்கார செனட்டரான ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக இருந்த ஜோன் கெரியின் சொத்து 16.4 முதல் 21.1 கோடி டாலராகும். இவருக்கு 75 பரஸ்பர நிதி நிறுவனங்களும், அவர் மனைவிக்கு (Heinz company) இரண்டு பரஸ்பர நிதி நிறுவனங்களும் சொந்தமாக இருந்தன. இவை எல்லாம் அவர் சமர்ப்பித்த அறிக்கையில் உள்ளவையே. கணக்கில் காட்டப்படாத நிதிகள் முதல் விதிவிலக்குகள் கூட உண்டு. இதைவிட அமெரிக்காவின் செனட்டர்களின் வருமானம் பற்றிய தகவல் தெரிவிக்கும் சட்டமூலத்தை தெளிவில்லாத வகையில் தமக்குத்தாமே ஓட்டையாகவே தயாரித்துள்ளனர். இதன் மூலம் சொத்துக்களை முழுமையாகக் காட்டுவதில்லை. உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனின் மனைவி தனது சொத்தை 3.52 லட்சம் என குறைந்தளவிலும் கூடியளவு 38 லட்சம் என்றே அறிக்கை செய்திருந்தார். ஆனால் பல இடங்களில் கணவர் பற்றி உரையாற்றிய போது, அதற்குக் கட்டணமாகப் பெற்றதே 90 லட்சம் டாலர். வாழும் வரலாறு என்ற தனது நூலுக்கு மட்டும் 80 லட்சம் டாலரைப் பெற்று இருந்தார். இருந்த போதும் இவர் செனட்டருக்கான கோடீஸ்வரர் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆண்டு ஊதியம் மட்டும் 1.55 லட்சம் டாலராகும். இங்கு தலைமையில் இருப்பவர்களுக்கு சம்பளம் 1.72 லட்சம் டாலராகும். செனட்டைக் கடந்து பாராளுமன்றத்தில் உள்ள 435 பேரில் பலர் கோடீஸ்வரர்கள். அதாவது பன்னாட்டு நிறுவனங்கள் முதல் பல சொத்துக்களின் அதிபதிகளாகவும் பங்காளியாகவும் உள்ளனர்.

இதே போன்று 2004-இல் உலகின் ஆட்சி பீடங்களில் இருந்த அரசர்கள் மற்றும் கௌரவ அரச பரம்பரையைச் சேர்ந்த சிலரின் சொத்து விபரங்களைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| சவுதி மன்னன் | 2500 கோடி டாலர் |
| ஐக்கிய எமிரட் மன்னன் | 2000 கோடி டாலர் |
| புறூண்டி (புரூனே) மன்னன் | 1430 கோடி டாலர் |
| துபாய் மன்னன் | 1000 கோடி டாலர் |
| லிசெஸ்தெயின் மன்னன் | 220 கோடி டாலர் |
| தாய்லாந்து பிரதமர் | 140 கோடி டாலர் |
| பிரிட்டிஷ் மகாராணி | 66 கோடி டாலர் |
| நெதர்லாந்து மன்னர் | 26 கோடி டாலர் |
| பாலஸ்தீனத்தின் ஜனாதிபதியாக இருந்த அராபத் | 20 கோடி டாலர் |



## பணக்காரக் கும்பலின் வாழ்க்கை முறைமை சமூக விரோதத்தையே அடிப்படையாகக் கொண்டது.

இப்படி உலகை ஜனநாயகத்தின் பெயரிலும், சுதந்திரத்தின் பெயரிலும் ஆளுகின்ற பலர் கோடீஸ்வரர்களாகவும், லட்சாதிபதிகளாகவும் இருக்கின்றனர். இந்த ஆளும் வர்க்கமும், அதைச் சுற்றி உள்ள அதிகாரவர்க்கமும் கூட பெரும் பணக்காரக் கும்பலானதே. இந்தக் கும்பல் ஏழை மக்களின் நலனையிட்டு ஒரு நாளும் ஒரு கணமும் சிந்திக்கப் போவதில்லை. மக்களின் நலனுக்காகச் செயல்பட வேண்டும் எனின், தமது சொந்தச் செல்வத்தின் இழப்பை அங்கீகரிக்க வேண்டும். எந்தப் பணக்காரனாவது தனது சொந்த சொத்து இழப்பை அங்கீகரிக்க போவதில்லை. உதாரணமாக உலகின் முதல் பெண் பணக்காரியான பிரிட்டிஷ் அரியணையில் இருக்கும் எலிசபெத் தனது உடைக்காக மட்டும் வருடம் 8.7 லட்சம் இலங்கை ரூபாவையும், பூக்களுக்கு வருடம் 5.2 லட்சம் இலங்கை ரூபாவையும் செலவு செய்கின்றார். இதை அவர் இழக்கத் தயாராக இருப்பதில்லை. மாறாக பச்சை இடவும், தமது சமூக அந்தஸ்துக்காக குறைந்த பட்சம் தமது செல்வத்தில் ஒரு சில சில்லறைகளை வீசியெறிவதன் மூலம், பெரும் கொள்ளைகளை அடிப்பதே இன்றைய ஜனநாயகம் மட்டுமின்றி இதை நியாயப்படுத்துவதுமே இன்றைய நவீன அரசியலுமாகும். மூலதனத்துக்கு சலுகைகளை வாரி வழங்குவதன் மூலம் ஏழ்மையைப் பெருக்குவது அரசுகளின் பொதுக் கொள்கை. இதற்குக் கூலியாகவே தன்னையும், தன்னைச் சுற்றியுள்ளவர்களின் சதையுள்ள கொழுப்பு மூலம் மக்களை அடக்கியாளுகின்றனர்.

இப்படிப் பல வழிகளில் பணக்காரக் கும்பலின் செல்வக் குவிப்பு என்றுமில்லாத போக்காகியுள்ளது. பணம் என்ற வகையில் அதை நோக்கி, உலகின் அனைத்தையும் இழுத்தெடுக்கின்றது. மக்கள் விரோதக் கும்பலின் தனிப்பட்ட சொத்துக்கள் சர்வதேச வருமானத்தில் மிகப் பெரிய ஒன்றாகி விட்டதால், அதைச் சுற்றியே ஒரு சமுதாய இருப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. மிகப் பெரிய பணக்காரக் கும்பலின் சொகுசு வாழ்க்கைக்கு ஏற்ற, மிகப் பெரிய வக்கிரமான கட்டமைப்பு உருவாக்கப்படுகின்றது. இந்தச் செல்வத்தைக் கொண்டு, இந்தப் பணக்காரக் கும்பல் ஒரு வேளை சோற்றையும், ஒரு கறியையும் உண்டு வாழவில்லை. மாறாக இந்தப் பணத்தைக் கொண்ட நுகர்வு என்பது, கவர்ச்சிகரமான, இழிவான பண்பாட்டை அடிப்படையாக கொண்ட வக்கிரத்தால் தன்னை அலங்கரிக்கின்றது.

மக்கள் விரோத பணக்காரக் கும்பலின் ஆடம்பரமான வக்கிரத்துக்கு ஏற்ற வகையில், உலகம் தலைகீழாகவே சுற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைக்கப்படுகின்றது. குவியும் பணத்தைக் கொண்டு அவர்கள் வாழும் ஆடம்பரமான வாழ்க்கை மூடு மந்திரமாகவே எப்போதும் உள்ளது. அதை தனிமனித உரிமை என்ற பெயரில், சாயம் பூசி மூடப்படுகின்றது. இதை கண்டு கொள்வது, கேள்வி கேட்பது தனிமனித உரிமைகளில் தலையிடும் அநாகரிகம் என்ற கற்பிக்கப் படுகின்றது. பொதுவாகவே, சமூகத்துக்கு எதிரான தனிமனித வக்கிரங்கள் புனிதமாக்கப் படுகின்றன. எல்லோரும் தெரிந்து கொள்ள முடியாத, இரகசியமான, சூக்குமத்தால் மூடப்பட்டுள்ளது. இந்தப் பணக்காரக் கும்பல் உலகில் உள்ள அனைத்தையும் வாங்கி நுகரும் வக்கிரமான அனைத்துத் திறனைக் கொண்டதாக உள்ளது. சுதந்திரம், ஜனநாயகம் இதன் தாராளமான விரிந்த கடைகெட்ட எல்லையாக உள்ளது.

இந்தப் பணக்காரக் கும்பலின் வக்கிரங்கள் வக்கரிக்கும் போது, அவர்களின் நுகர்வுகள் சில சந்திக்கு வருகின்றன. சில உதாரணங்கள் மூலம் இதைப் பார்ப்போம். இந்தியாவைச் சேர்ந்த சஹாரா குருப் முதலாளியான சுப்ரஹ்டா ரோயின் இரண்டு பிள்ளைகளுக்கு 2004 பெப்ரவரி மாதம் திருமணம் ஒன்றை அடுத்தடுத்து நடத்தினர். அண்ணனின் திருமணக் கூத்துக்கு 1,500 வி.ஐ.பி.க்கள் உட்பட உலகிலேயே வக்கிரம் பிடித்த சமூக விரோதிகளான 5,000 பேர் கலந்து கொண்டனர். இந்திய மக்களை ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் நடிகர்கள், நடிகைகள், அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள் உள்ளடங்கிய சமூக விரோதிகள் புடைசூழவே இவை நடைபெற்றது. இவர்களின் வருகைக்காக விசேட விமானங்கள், இலவச பயணங்களை நடத்தியது. லக்னோவ் இரண்டு ஹோட்டல்களின் எல்லா அறைகளும் இந்த பொறுக்கி கும்பலால் நிரம்பி வழிந்தது, 100 பென்ஸ் கார் அங்கும் இங்குமாக ஓடியது. இறக்குமதி செய்யப்பட்ட சமையல்காரர்கள் மூலம் சீன, இத்தாலி, லெபனான், மெக்சிகோ, மொங்கோலியா உணவு என்று பல விதமாக, கொழுப்பேறிய சமூக விரோதிகளின் வாயின் ருசிக்கு ஏற்ப விரும்பியவாறு பரிமாறப்பட்டது. பல வகையான விதவிதமான குடிபானங்கள் தனி. 4000 சொந்த ஊழியர்கள் உட்பட 7000 பேர் திருமண வேலைகளுக்கென அமர்த்தப்பட்டனர். இதை விமர்சிப்பதைத் தடுக்க, 1.40 லட்சம் ஏழைகளுக்கு ஒரு வாரம் தொடர்ச்சியாக உணவு வழங்கப்பட்டது. 101 ஏழைகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

இவரின் தம்பியின் திருமணம் பெப்ரவரி 14-ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் கூத்துக்கு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் வருவதாக இருந்தது. இறுதியில் அவர் வரவில்லை. இவரின் திருமணத்துக்கான வரவேற்பு மண்டபத்தை அலங்கரிக்க 500 பேர் அமர்த்தப்பட்டனர். 10,500 சமூக விரோதிகள்



திருமணத்துக்கான விசேட அழைப்பைப் பெற்றனர். இவர்களின் வருகைக்காக விசேட விமானப் பறப்புகள் ஒருபுறம், மறுபக்கத்தில் விருந்தினருக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டு மூலம் தங்க நாணயங்கள் பரிசாக வழங்கப்பட்டன. 110 விதம் விதமான உணவு வகைகளை உற்பத்தி செய்ய, 1800 சமையல்காரர்கள் கூலிக்கு அமர்த்தப் பட்டனர். இந்த அரங்கைப் பாதுகாக்க 2000 பேர் கொண்ட பயிற்சி பெற்ற பாதுகாப்பு பிரிவு ஒன்று கூலிக்கு அமர்த்தப்பட்டது. வெளிநாட்டில் இருந்து கூலிக்கு மாரடிக்கும் இசைக் கலைஞர்கள், வாய்ச் சுவைக்காக பலவிதமான இறக்குமதி செய்யப்பட்ட உயர்ரகப் பொருட்கள் குவிக்கப்பட்டது. வாசனை மெழுகுவர்த்தியை 10 லட்சம் இந்தியா ரூபா செலவில், முன்னாள் நடிகையும் இன்னாள் முதலாளியாக உள்ள ஒருத்தி இறக்குமதி செய்து அன்பளிப்பாக வழங்கினார். இப்படி வாசனையைக் கக்கிய மெழுகுவர்த்திகளின் மொத்த எண்ணிக்கை 56,000 ஆகும். இந்தத் திருமணத்தை நடத்திய பணக்காரனின் சொத்து 370 கோடி பவுண்டுகளாகும். இந்தியா ரூபாவில் 65,800 கோடி ரூபாவாகும். இந்தத் திருமணத்துக்காக 2 முதல் 5 கோடி பவுண் வரை செலவாகியது. அதாவது 335 முதல் 885 கோடி இந்திய ரூபா செலவாகியது. தனிநபருக்கு 3,000 பவுண்டு வீதம், அதாவது ஒருவருக்கு 5.32 லட்சம் இந்தியா ரூபா செலவு செய்யப்பட்டது. இந்த பணக்காரனுக்கு 33,000 ஏக்கர் நிலம் மற்றும் வீடுகள் சொந்தமாக உள்ளது. 7 இலட்சம் ஊழியர்கள் இவரின் கீழ் வேலை செய்கின்றனர். தனிப்பட்ட விமானம், இரண்டு தொலைக்காட்சி நிலையங்கள், ஒரு ஞாயிறு செய்திப் பத்திரிகை என்று பல இவரிடம் உண்டு. இதைக் கொண்டு மக்களை அடக்கியாளவும், அடிமைப்படுத்தி சிறுமைப்படுத்தும் பண்பாடு தான், இது போன்ற பணக்காரனின் பண்பாடு.

உலக செல்வங்களையே தமதாக்கி அதையே நாகரிகமாக்கி விடும், தனிப்பட்ட சொத்துடைய வர்க்கத்தின் பிரதிநிதிகளின் ஆடம்பரங்களும், ஆர்ப்பாட்டங்களுடன் கூடிய வக்கிரத்தை உள்ளடக்கிய அவர்களின் வாழ்க்கை முறைக்கு இவைகள் ஒரு எடுத்துக்காட்டு. இந்தப் பணக்காரக் கும்பல் ஆபாசமாகவும் வக்கிரமாகவும் திண்டதைப் பேளும் போது, அதை சுத்தம் செய்யவே பெரும் தொகையைச் செலவு செய்பவர்கள். உலக மக்களை உலகமயமாதலூடாக சூறையாடிப் பெறும் பணத்தை, இந்த கும்பல் பெட்டியில் அடுக்கி வைப்பதில்லை. நுகர்வு வெறியினால் வக்கிரம் பிடித்துவிட, விதவிதமாக வக்கரித்து அலைகின்றனர். இந்த நுகர்வின் பொதுதன்மையைச் சுற்றி ஒரு உலகத்தையும், ஒரு சந்தையையும் கட்டமைக்கின்றனர். மூன்றாம் உலகநாடுகள் மேற்கு நோக்கி தமது உற்பத்தியை எப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒழுங்கமைத்து மேற்கு நாட்டவர்களுக்கு சேவை செய்கின்றனரோ, அதேபோன்று இந்த பணக்காரக் கும்பலுக்கு சேவை செய்யும் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பாக உலகம் மாறிவருகின்றது. தனிப்பட்ட பணக்காரர்களின் சொத்தே பல உலக நாடுகளின் தேசிய வருமானத்தை மிஞ்சும் போது, அந்தப் பணத்தைச் சுற்றி உற்பத்தி முறையே மாறத் தொடங்கி விடுகின்றது. உழைக்கும் மக்களின் உழைப்பு இவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் ஒரு வரையறைக்குள், உற்பத்தி முறைகளே மாற்றி அமைக்கப்படுகின்றது. அதாவது பணம் உள்ளவனின் தேவைக்கு ஏற்ற உற்பத்தி, என்பதே உலகமயமாதலின் அடிப்படை நிபந்தனை. பணத்தை அதிகம் செலவு செய்யத் தயாரான ஒரு வர்க்கத்துக்குத் தேவையான உற்பத்தியும், அதைச் சார்ந்த உழைப்புமே உலகமயமாதலாகும்.

இந்தப் பணக்காரக் கும்பலின் ஆடம்பரங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு மேலும் சில மாதிரிகளைப் பார்ப்போம். 1999-இல் பிரான்சில் மிகப் பெரிய பணக்காரக் கும்பல் 6 முதல் 12 கோடி ஈரோ பெறுமதியுள்ள 22,000 மாடமாளிகளை சொந்தமாக வைத்திருந்தனர். இதிலும் குறிப்பாக 10 முதல் 15 வீடுகள் மிகப் பெரிய அரண்மனைகளாகும். இதன் பரப்புகள் 20,000 முதல் 40,000 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டவை. பிரெஞ்சு பணக்காரக் கும்பல் எப்படி வக்கரித்து இருக்கின்றனர் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஆனால் பிரான்சில் வீடுகளற்ற நிலையில், வீதியில் வசிப்போர் எண்ணிக்கையோ 5 லட்சமாகும். இதைவிட மோசமான அடிப்படை வசதிகளற்ற நிலையில், வீடுகள் தேடியபடி 20 இலட்சம் குடும்பங்கள் வாழ்கின்றனர்.

பிரெஞ்சு பணக்கார வர்க்கம் அரண்மனைகளில் வாழ்கின்றனர் என்றால், இதுவே உலக பணக்காரரின் பொது ஒழுக்கமாக உள்ளது. இது போன்ற வீடுகளில் ஒன்று, உலகிலேயே அதியுயர் விலைக்கு அண்மையில் லண்டனில் விற்பனையாகியது. இதன் பெறுமதி 7 கோடி பவுணாகும். அதாவது இலங்கை பணத்தில் 1,245 கோடி ரூபாவாகும். இதை வாங்கியவன் இந்தியரான லஷ்மி மித்தலாவான். 12 படுக்கை அறைகளைக் கொண்ட இந்த வீடு, பொதுவான வீடுகளை விட 55 மடங்கு பெரியவை. அந்த வீட்டின் வாகன இருப்பிடத்தில் 20 கார்கள் நிறுத்த முடியும். இவனின் தனிப்பட்ட சொத்து 1996-இல் 150 கோடி டாலராக இருந்தது. ஆனால் 2004-இல் உலகில் 62-வது பெரிய பணக்காரனானதுடன், இவனின் தனிப்பட்ட சொத்து 620 கோடி டாலராகியது. 2005-இல் இவனின் சொத்து திடீர் வீக்கம் கண்டது. தனிப்பட்ட சொத்து 2,500 கோடி டாலராகியது. அத்துடன் உலகில் மூன்றாவது மிகப் பெரிய பணக்காரனானான்.



இவனுக்கு லண்டனில் மற்றொரு வீடு உள்ளது. இதன் பெறுமானம் 90 லட்சம் பவுண்ட்டாகும். அதாவது 160 கோடி இலங்கை ரூபாவாகும். இது போன்று 1997-இல் கொங்கொங்கில் 6.27 கோடி பவுணுக்கு மற்றொரு வீடு விற்பனையாகியது.

வீடுகள் தான் இப்படி என்றால் அதிர்ஷ்ட எண் என்ற ஒன்றை வாங்கவும், இந்தப் பணக்காரக் கும்பல் தண்ணியாக செலவு செய்யத் தயங்குவதில்லை. சீனாவைச் சேர்ந்த பணக்காரன் ஒருவன், அதிர்ஷ்ட எண் என்ற ஒன்றை வாங்க, 10 கோடி இலங்கை ரூபாவை செலவு செய்துள்ளான். இவற்றை மனித சமுதாயத்தின் ஒழுக்க விதியாகக் காட்டுவதே இன்றைய ஜனநாயகமும் சுதந்திரமுமாகும்.

இந்தத் திமிர் பிடித்த சொகுசு வாழ்க்கைக்கு பின்னால், உண்மைகள் அதிர்ச்சிகரமானதாகவே எதார்த்தத்தில் உள்ளது. 1987 டாலர் பெறுமதியை அடிப்படையாக கொண்டு ஆராய்ந்தால் 1970-க்கும் 2000-க்கும் இடையில் ஒப்பிடும் போது உலகளவில் சராசரி தலா வருமானம் 2,900 டாலரில் இருந்து 3,600 டாலராக அதிகரித்தது. சராசரியாக 25 சதவீதத்தால் இது அதிகரித்தது. ஆனால் வறிய நாடுகளில் இது 287 டாலரில் இருந்து 245 டாலராகக் குறைந்துள்ளது. அதாவது சராசரியாக வருமானம் 15 சதவீதத்தால் குறைந்துள்ளது. 1975-க்கும் 1997-க்கும் இடையில் ஏகாதிபத்திய நாடுகளின் சாராசரி வருமானம் வருடத்துக்கு 12,598 டாலரில் இருந்து 19,283-யாக அதிகரித்தது. ஏழை நாடுகளின் உள்ளே புகுந்து பார்த்தால், ஏழ்மையின் வக்கிரம் மனித துயரங்களால் வக்கரித்து கிடக்கின்றது. நமீபியாவை எடுத்தால் 5 சதவீதமான வெள்ளையர்கள் நாட்டின் 70 சதவீதமான செல்வத்தை நுகரும் அதேநேரம், 55 சதவீதமான கறுப்பர்கள் கஞ்சிக்கே வழியற்ற கையேந்தி வாழும் ஏழைகளாக உள்ளனர். இது சுதந்திரம் பெற்ற நமீபியா சுதந்திரத்தினதும், ஜனநாயகத்தினதும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

இதற்கு மாறாக சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் வக்கிரம் தெவிட்டத் தயங்குவதில்லை. உலகில் அதி உயர் கட்டணத்தை அறவிடும் தங்கு விடுதியின் (hotel) ஒரு இரவுக்கான செலவு 33,243 டாலராகும். இது ஜெனிவாவில் உள்ள வின்சன் விடுதியாக உள்ளது. பணக்காரக் கும்பலால் உபயோகிக்கப்படும், உலகிலேயே அதிக செலவு உள்ள காரின் பெறுமானமோ 21 இலட்சம் டாலராக உள்ளது. இந்த பணக்காரக் கும்பல் தமது வீட்டை அலங்கரிக்கப் பயன்படுத்தும் பொருட்களின் ஒரு சிலவற்றின் விலைகளை ஆராயும் போது, அதன் வக்கிரத்தை எடுத்துக் காட்டுவனவாக உள்ளது. இந்தப் பணக்கார கும்பல் வீட்டுச் சுவரை அலங்கரிக்கப் பயன்படுத்தும் சுவருக்கு ஒட்டும் பேப்பரின் விலை 40,000 டாலராகும். இந்த மனித விரோதக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும்பல் பயன்படுத்தும் தொலைக்காட்சிப் பெட்டியின் விலையோ 2.5 லட்சம் டாலர்களாகும். இவர்கள் சமைக்காது அலங்காரமாகப் பாவிக்கும் வீட்டு அடுப்பு, 14 ஆயிரம் ஈரோவுக்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்படி பற்பல. இந்தக் கும்பல் சுவைக்க பிரான்சில் விசேடமாகவும், குறைந்த பட்சம் விலையான 650 ஈரோ பெறுமதியான விசேட வைன்கள் 6,000 போத்தல் வருடாந்தரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. வக்கிரம் பிடித்த இந்த வர்க்கம் போடும் ஒரு காலணியின் (சாப்பத்தின்) விலை 2,500 ஈரோவாக (அண்ணளவாக 3 லட்சம் இலங்கை ரூபா) உள்ளது. இப்படி இந்த பணக்காரக் கும்பல், மனித அவலத்தின் மேல் வக்கிரமாகவே தன்னைச் சுற்றி ஒரு உலகத்தையே படைக்கின்றனர். உலக மக்களின் பணங்களின் மேல், அவர்களின் உழைப்பைப் பிழிந்து கிடைக்கும் இரத்தத்தைக் குடித்தே, இந்தப் பணக்காரக் கும்பல் சொக்கிக் கிடக்கின்றது. இதுவே உலகமயமாதலின் உயர்ந்த இலட்சியமாகவும், அதன் ஒழுக்கமாகவும், அதன் பண்பாடாகவும் உள்ளது.

இந்த வக்கிரமான ஒழுக்கம் சார்ந்த சொர்க்கத்ததைச் சுற்றியே, தனிநபர்களின் சமுதாயமாக உலகம் மாற்றப்படுகின்றது. இதில் தனிநபர்கள் கூட கவர்ச்சிகரமான சந்தைப் பொருளாகின்றனர். கவர்ச்சி சார்ந்த பாசிச வக்கிரமே, தனிநபர் கதாநாயகர்களை உருவாக்குகின்றது. மலட்டுத்தனமான சிந்தனைத் தளத்தில் மக்களை மந்தைகளாக்கி, தனிநபர்களைச் சுற்றி தனிநபர் பிம்பங்களைக் கட்டமைக்கின்றனர். இந்தத் தனிநபர் பிம்பங்கள் மக்களை மேய்க்கும் இடையர்களாகி விடுகின்றனர். அவர்கள் உலகமயமாதலின் சந்தையைக் கவர்ச்சியாக்கி, அதையே நுகர்வு வெறியாக்கி, மக்களை அடிமைப்படுத்தும் நபர்களாகி விடுகின்றனர். இந்த நபர்களின் தனிப்பட்ட விலையோ பல கோடிகளைத் தாண்டிவிடுகின்றது. உதாரணமாக உலகிலேயே அதியுயர் விலை கொண்ட மனிதர்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் விளம்பரங்களில் தோன்றுபவராகவே உள்ளனர். இப்படித் தோன்றும் முதல் 10 நபர்களின் சராசரி விலை, 2003-இல் 4.90 கோடி டாலராகும். இது 2002-இல் 4.84 கோடி டாலராக இருந்தது. இப்படி கோடிக்கணக்கான பெறுமதியில் விலை போகும் நபர்கள், செய்யும் விளம்பரங்கள் உலக மக்களையே மலட்டு மந்தையாக்குகின்றது. இந்த மந்தைத் தனத்தில் மக்கள் சிக்கிவிடும் போது, மக்களின் உழைப்பை அவர்களே அறியாமல் பிடுங்கிவிடுவது உலகமயமாதலின் சந்தைவிதி. இதில் சில துளிகளை வீசியெறியும் போதே, கோடிக்கணக்கான விலையுள்ள உலகமயமாதலின் பிம்பங்கள் உருவாகின்றனர். இதன் மூலம் குறித்த ஒரு பொருளை, உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் வருடத்தில் ஒரு டாலர் லாபம் கிடைக்கும்



வகையில் விற்றுவிட்டால், 600 கோடி டாலர் திடீரென்று ஒரு வருடத்துக்கு கிடைத்துவிடும். இது தனிப்பட்ட நபர்களின் சொத்தாகின்றது. இந்த உள்ளடக்கம் தான் உலகமயமாதல்.

இதன் மூலம் மனித சமூகத்துக்கு எதிராக, ஒரு சிலர் எப்படி வாழ்கின்றனர் என்பதின் எடுப்பான சிறப்பான வடிவம் தான் இது. சமூகத்துக்கு எதுவெல்லாம் மறுக்கப்படுகின்றதோ, அதை நுகர்வதும் அதைக் கொண்டு வக்கரிப்பதுமே செல்வச் செருக்கின் உயிர் உள்ள துடிப்பான ஆன்மாவாக உள்ளது. மூலதனம் என்ற நூலில் மார்க்ஸ் ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் இருந்து எடுத்துக் காட்டுவது, இன்றும் இந்த பணக்காரக் கும்பலின் வக்கிரத்தைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் பொருத்தமான வரிகளாகவே உள்ளது.

தங்கம், மஞ்சள் நிறமாய் மின்னும் தங்கம்!
அருமையும் பெருமையும் என்னென்ன செய்திடும்!
கறுப்பை வெள்ளையாக்கும், கெட்டதை நல்லதாக்கும்!
தவறென்றானதை சரியென்றாக்கிடும்!
இழிந்ததை சிறந்ததாய் உயர்த்தி வைத்திடும்!
கிழவனைக் குமரனாய், அஞ்சி நடுங்கும்
கோழையைத் தீரனாய் மாற்றி வைத்திடும்!
.. என்னே இது, விண்ணுறை தெய்வங்காள்!
அர்ச்சகரை, அடியாரை உம்மிடமிருந்தே கவர்ந்து கொள்ளுமே!
மல்லர்தம் தலையணை தட்டிச் செல்லுமே!
இம்மஞ்சள் அடிமை என்னென்ன செய்திடும்?
மதங்களைப் பிணைக்கும், சிதைக்கும்!
படுபாவிக்கும் அருள் பாலிக்கும்!
தொழுநோயென்றும் பாராது குலாவச் செய்திடும்!
கொள்ளையர் தம்மை அவையிலமர்த்தி,
பட்டமும் பாராட்டும் பெற்றுத் தந்திடும்!
வதங்கிய விதவையை மணவறையில் அமர்த்திடும்!
... வினை வைக்க வந்த மண்மகளே!
மனிதனைவர்க்கும் வாய்த்த விலைமகளே!

இங்கு பணம் தங்கமாக உள்ளது. எல்லாவிதமான சமூக விரோத வக்கிரங்களையும் செல்வம், தனது காலடியில் இருந்து உற்பத்தி செய்கின்றது. தனிநபர்களின் வக்கிரத்துக்காக மனித சமூகத்தையே தரம் தாழ்த்துவது, உலகமயமாதலின் உள்ளடக்கமாகும். மக்கள் கூட்டம் சிலருக்காக சேவை செய்யக் கோருவதை உலகமயமாதல் ஒழுக்கமாக, பண்பாடாகக் கட்டமைக்கப்படுகின்றது. மக்களின் சுயசிந்தனைத் திறனை முடக்குவது, அதை மலடாக்குவது உலகளாவிய பொதுவான உலகமயமாதல் உத்தியாகவும் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 6. உலகளாவிய மூலதனங்களையும், மனித உழைப்பையும் கைப்பற்றி ஒன்று குவிப்பதே உலகமயமாதலுக்கான அஸ்த்திவாரம்

தனிமனிதர்களின் வாழ்வியல் பிளவுகளில் ஏற்பட்டுவரும் இடைவெளிகளினால் ஏற்படும் மனிதஅவலம், சமூகப் பிறழ்ச்சியாகி வக்கரிக்கின்றது. சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள் தொடர்ச்சியாகவே பிளவுறுவதுடன், இவை விரிந்து அகன்று வருகின்றது. இது பல்வேறு சமூகப் பிரிவுகளில் வேறுபட்டு பிரதிபலிக்கின்றது. குறைந்த வருமானம் உடைய பொருளாதாரத்துக்கும் உயர் வருமானமுடைய பொருளாதாரத்துக்கும் இடையிலான தனிமனித வருமான பகிர்வு வீதம், 1970-இல் 1-க்கு 28 யாக இருந்தது. இது 1990-இல் 1-க்கு 50 யாக அதிகரித்தது. கிடைக்கும் வருமானம் பகிரப்படும் வீதமே, முன்பை விடவும் அகலமாகி வருகின்றது. செல்வத்தை நோக்கி செல்வம், காதல் கொண்டு பறந்தோடுகின்றது. இவை எல்லாம் ஏகாதிபத்தியம் சார்ந்தே விரிவாகின்றது. உலக மக்களில் 20 சதவீதமான ஏகாதிபத்திய (பணக்காரர்களைக் கொண்ட) நாடுகள், உலக வருமானத்தில் தான் பெறும் பங்கை தொடர்ந்தும் அதிகரிக்கும் வகையில், சூறையாடலை விரிவாக்கியே வந்துள்ளது, விரிவாக்கி வருகின்றது. ஏகாதிபத்தியங்கள் 1960-இல் இருந்து 1989-க்கும் இடையிலான காலத்தில் தனது பங்கை 70.2 சதவீதத்தில் இருந்து 82.7 சதவீதமாக அதிகரிக்கும் வண்ணம் பெரும் சூறையாடலை மூன்றாம் உலக நாடுகள் மீது நடத்தியது. இதே காலப் பகுதியில் 20 சதவீதம் மீதான மிக வறிய (ஏழைகளைக் கொண்ட) நாடுகள், உலக வருமானத்தை தாம் பெற்ற 2.3 சதவீதத்தை



இழந்து 1.4 சதவீதமாக குறைந்து போனது. மனித அவலமே ஜனநாயகமாகி, சமூகத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத எல்லைக்குள் கையேந்திப் பிழைக்கவே உலகமயமாதல் மனித இனத்தை வழிகாட்டி நிற்கின்றது.

மனிதனை மனிதன் சூறையாடுவதைத் தனிமனித உரிமையாக்கி, அதையே சுதந்திரம் ஜனநாயகம் என்ற பெயரில் மூலதனம் உலகெங்கும் அரங்கேற்றுகின்றது. இருப்பவனுக்கும், இல்லாதவனுக்கும் இடையில் உள்ள இடைவெளி, நேர் எதிர் திசைகளில் வேகமாகவே பயணிக்கின்றது. எந்தத் தொழில் நுட்பமும், இந்த சமூக அமைப்பிலான எந்தத் தீர்வும், இந்த இடைவெளியைத் தடுத்து நிறுத்தாது, மேலும் சூறையாடுவதற்கு இசைவான திசையில் இயங்குகின்றது. இதன் நெம்புகோலாக இன்று இருப்பது உலகமயமாதலே. இந்த உலகமயமாதல் அமைப்பு என்பது தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களையும், தேசங்கடந்து செல்லும் நிதிகளையும் சார்ந்து சதிராட்டம் போடுகின்றது.

### பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கும் ஆதிக்கப் பண்பாடு

ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள ஒருசில பன்னாட்டு நிறுவனங்கள், உலகளாவிய மூலதனங்களையும் மனித உழைப்பையும் தமதாக்கி ஒன்று குவிப்பதே உலகமயமாதலாகும். இதன் மூலம் தனிப்பட்ட சிலரின் சொத்துக்கள் வரைமுறையின்றிக் குவிகின்றது. இப்படிக் குவியும் தனிப்பட்ட நபர்களின் சொத்துக்களே, ஆடம்பரமாகி மனிதனுக்கு எதிரான வக்கிரங்களாக வக்கரிக்கின்றன. இதுவே சமூகப் பண்பாடாகி உலகமயமாகின்றது. இன்றைய சமூக அமைப்பு என்பது, தனிப்பட்ட நபர்களின் செல்வக் குவிப்பை அடிப்படையாகக் கொண்டது. இதை இலட்சியமாகக் கொண்ட சமூக அமைப்பில், இதைப் பாதுகாக்கும் பொதுக் கோட்பாடாகவே சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் உள்ளது. இதன் முதிர்வே உலகமயமாகியுள்ளது. இதை மேலும் ஒழுங்குபடுத்தவும், முழு உலக மக்களையும் அடிமைப்படுத்தவும் உருவாக்கிய கட்டமைப்பே உலகமயமாதல் என்ற சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பாகும். இந்த உலகமயமாதல் என்பது மூச்சுக்கு மூச்சு, மூலதனக் குவிப்பை அடிப்படையாகக் கொண்டது. அதாவது உலகளவில் மனித உழைப்பை மையப்படுத்தி அதிகமாகச் சுரண்டிச் சூறையாடுவதை அடிப்படையாக கொண்டது. தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களும், நிதி மூலதனங்களும் தேச எல்லைகளைக் கடந்து நடத்தும் சதிராட்டமே உலகமயமாதலின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளடக்கமாகும். இதன் மூலம் தேசிய உற்பத்தி அழிந்திடும் போது, மக்களின் அடிமைத்தனம் நிரந்தரமாகவே முதுகில் செதுக்கப்படுகின்றது. உற்பத்தியில் அராஜகத்தைக் கையாளவும், தேசத்தை நிரந்தரமாக அடிமைப்படுத்தி விடவும், பெருமெடுப்பில் நிதி மூலதனமும் உலகெங்கும் வெள்ளமாகவே பாய்கின்றது. இவற்றை நாம் முழுமையாகத் தெரிந்து கொள்ளாத வரை, உலகமயமாதலை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது.

முதலில் தேசங்கடந்த தொழில் நிறுவனங்களின் கிளைகள் பெருமளவில் வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகளிலேயே புகுந்தன. இந்த வகையில் 65 சதவீதமான அமெரிக்க நிறுவனமும், 70 சதவீதமான பிரெஞ்சு நிறுவனமும், 75 சதவீதமான பிரிட்டிஷ் நிறுவனமும், 80 சதவீதமான மேற்கு ஜெர்மனி, கனடா, நெதர்லாந்து (டச்சு) மற்றும் பெல்ஜியம் நிறுவனங்கள் தமது கிளைகளை, சக ஏகாதிபத்திய நாடுகளில் தான் உருவாக்கின. இதன் மூலம் ஏகாதிபத்திய நாடுகளில் காணப்பட்ட தேசிய எல்லைக்குள்ளான சிறு உற்பத்திகளை விழுங்கி ஏப்பமிட்டன. பெரும் உற்பத்திகள் தமக்கு இடையில் ஒன்று சேர்ந்தது மட்டுமின்றி, போட்டி உற்பத்திகளை முடமாக்கின. ஏகாதிபத்திய நாடுகளில் உற்பத்தியில் ஏக போகத்தையும், அராஜகத்தையும் வரைமுறையின்றி ஏற்படுத்தியதுடன், ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் மிகப் பெரும் நிறுவனங்கள் போட்டியில் குதித்தன. இதனால் நாடுகள் தமக்கு இடையில் ஒன்று சேர்வதைத் துரிதப்படுத்திய அதே நேரத்தில், உலகைக் கைப்பற்றும் போட்டி விரைவாக உலகமயமாதலாகியது.

இந்த தேசங்கடந்த பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் 1980-இல் பல்வேறு நாடுகளின் தேசிய உற்பத்தியில் பெரும் பகுதியை கைப்பற்றியிருந்தன. சிங்கப்பூரில் 83 சதவீதத்தையும், மெக்சிகோ, பிரேசில், பெரு, கொலம்பியா, மலேசியாவில் 40 முதல் 44 சதவீதத்தையும், அர்ஜென்டினாவில் 33 சதவீதத்தையும், சிலியில் 25 சதவீதத்தையும் கட்டுப்படுத்தின. இது போன்று கனடாவில் 50 சதவீதத்தையும், பிரிட்டன், இத்தாலி, மே.ஜெர்மனி, பிரான்சு, ஆஸ்திரியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் 20 சதவீதத்தையும் கட்டுப்படுத்தின. பிரிட்டனின் 30 தொழில் நிறுவனங்களும், அமெரிக்காவின் 180 தொழில் நிறுவனங்களும் அந்த நாடுகளின் 40 சதவீதமான தேசிய உற்பத்தியைக் கட்டுப்படுத்தின. ஒரு தேசத்தின் தலைவிதியை ஒரு சில நிறுவனங்களே சொந்தமாக்கிக் கொண்டன. உற்பத்தியில் பன்மைத் தன்மையை அழித்து, ஒற்றைத் தன்மையை அடிப்படையாக கொண்ட ஒரு வரைமுறை ஒன்றை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர். பன்மைப் பரிணாமம் கொண்ட உற்பத்திகளை



அழித்து, ஒற்றைப் பரிணாம உற்பத்திகளைச் சந்தையில் குவித்தனர். இதன் மூலம் சமூகப் பன்மைத்துவம் மேலும் சிதைந்து, தனிமனித வக்கிரமே சமூகத் தன்மையாகியது. மனித உறவுகள் வர்த்தக உறவின் விதிக்குள்ளானதாக மாறிவிட்டது. இதைத் தாண்டி எதையும் இன்றைய அமைப்பு உருவாக்கிவிடவில்லை.

**''தொழிற் பிரிவினையானது உழைப்பின் விளைபண்டத்தைச் சரக்காக மாற்றுகின்றது''** என்று மார்க்ஸ் மூலதனத்தில் குறிப்பிட்டது போன்று, உலகமயமாதலில் மனித உறவுகளே வர்த்தக உறவாகி விட்டது. சமூகத் தன்மை முற்றாகவே அழித்தொழிக்கப்பட்டு விட்டது, அழித்தொழிக்கப்படுகின்றது. மனிதனை மனிதன் விலைபேசி விற்கும் நிலைக்கு, சமூக உறவுகள் காட்டுமிராண்டி நிலைக்குத் தாழ்ந்து சென்றுவிட்டது, செல்கின்றது. எச்சசொச்சமாக எஞ்சிக் கிடக்கும் மனிதனின் மனிதத்தன்மையுள்ள சமூக உறவுகளையும், அது சார்ந்த உற்பத்திகளை அழிப்பதில், உலகமயமாதல் தனது வானளாவிய அதிகாரத்தை உலகெங்குமுள்ள மக்கள் மேல் நிறுவி வருகின்றது. உற்பத்தி ரீதியான மாற்றம், அது சார்ந்த அதிகாரத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலமே இது அரங்கேறுகின்றது. உற்பத்தி ரீதியான அதிகாரத்தை தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் சார்ந்த உற்பத்திகளே ஏற்படுத்துகின்றது. மனித இனத்துக்கு எதிரான அவற்றின் வரலாறு என்ன என்பதைத் தெரிந்து கொள்வது உலகமயமாதலுக்கு எதிரான போராட்டத்தில் மிக முக்கியமானது.

1985-இல் 3500 கோடி டாலருக்கு மேல் வருடாந்தம் வரவு செலவு செய்த 400 தேசங் கடந்த தொழில் நிறுவனங்கள் இருந்தன. இவை உலகளாவிய மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒன்றையும், உலகளாவிய அந்நிய வர்த்தகத்தில் பாதியையும், கனரக மற்றும் தொழில் நுட்பத்தில் 80 சதவீதத்தையும் கட்டுப்படுத்தின. 1990-இல் உலகில் இருந்த முதல் 500 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் உலகளாவிய வர்த்தகத்தில் 70 சதவீதத்தை கட்டுப்படுத்தியது. முதலீட்டில் 80 சதவீதத்தையும், உலகளாவிய தேசிய உற்பத்தியில் 30 சதவீதத்தையும் கட்டுப்படுத்தின. 1990-இல் உலகளவில் தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனமும் உலகளாவிய வகையிலான தனியார் மற்றும் அன்னிய முதலீட்டில் 90 சதவீதத்தைக் கட்டுப்படுத்தின. விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில நிறுவனங்கள், உலகின் தலைவிதியை இப்படித் தான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரத்தொடங்கின. இதுவே சுதந்திரம், இதுவே ஜனநாயகம் என்ற வரையறையை தாண்டி, இன்றைய சமூக அமைப்பு வேறு விளக்கத்தை மனித இனத்துக்கு வழங்கிவிடவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1985-இல் ஜப்பானின் நான்கு பெரும் தொழில் நிறுவனங்கள் அந்த நாட்டின் 96 தொழில்களில் 60 சதவீதத்தைக் கட்டுப்படுத்தின. 67 தொழில்களில் 70 சதவீதத்தையும், 46 தொழில்களில் 80 சதவீதத்தையும் கட்டுப்படுத்தின. பிரிட்டனின் இரண்டு தொழில் நிறுவனங்கள் 75 சதவீதமான கணினிப் பொறி உற்பத்தியைக் கட்டுப் படுத்தின. இத்தாலியில் கார் உற்பத்தியை ஒரு தொழில் நிறுவனமே 90 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. இன்னொரு நிறுவனம் 94 சதவீதமான வார்ப்பு இரும்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தியது. உற்பத்திகளை சொந்த நாட்டில் அழித்து அதை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் அதேநேரம், இதை மற்றைய நாடுகளிலும் நடைமுறைப்படுத்தவே மூலதனம் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றது. இதன் போது அதற்கு எதிரான தேசிய கூறுகளையும் அழித்தொழிக்கின்றது. இதன் போது எங்கும் வர்த்தக உறவுகளை, மனித உறவாக்கி மோதவிடுகின்றனர். மனித குழுக்களுக்கு இடையிலான மோதல்கள், வர்த்தக உறவில் ஏற்படும் மோதலில் இருந்து கட்டமைக்கப்படுகின்றன.

மனிதர்களை மோதவிடும் இன்றைய உலக வர்த்தகம் என்பதே, மனிதனை அடிமைப்படுத்தும் சந்தைக் கட்டமைப்பாலானது. அனைத்துப் பண்பாடுகளும், அனைத்துக் கலாச்சாரங்களும் இதற்குள் தான் மூச்சுவிடுகின்றன. இதுவே ஒரு பொது மொழியாகி ஒழுக்கமாகி நிற்கின்றது. இதை நாம் புரிந்துகொள்ள முனையும் போது, மந்தைக்குரிய நமது அடிமைத்தனத்தின் சின்னங்கள் நமது நெற்றிகளில் வியாபாரச் சின்னமாக, (''மார்க்''காக) அறையப்பட்டு இருப்பதைக் காணமுடியும்.

## வியாபாரச் சின்னம் உருவாக்கும் அடிமைப் பண்பாடு

உலகமயமாதல் என்ற வர்த்தகப் பண்பாடு, பண்பாட்டு ரீதியான வியாபாரச் சின்ன ('மார்க்') அடையாளத்துடன் உலகை அடிமைப் படுத்துகின்றது. மனிதன் பொருட்களின் அடிமையாக இருந்த காலகட்டம் என்பதை கடந்து, பொருட்கள் மேல் பொறிக்கப்பட்ட வியாபாரச் சின்ன ('மார்க்') அடையாளங்கள் சார்ந்த மந்தைகளாகி விடும், புதிய சமூக அடிமைத்தனமே உலகமயமாதலின் நவீனப் பண்பாடாகி வருகின்றது. அதுவே நவீன கலையுமாகியுள்ளது. இதன் மூலம் வியாபாரச் சின்னம் ('மார்க்') சார்ந்த பன்னாட்டு, தேசங்கடந்த நிறுவனங்களை வீங்கி வெம்பவைக்கின்றன.

உதாரணமாக சிலவற்றை ஆராய்வோம். உலகில் உள்ள மக்கள் அனைவரும் தமது நிறுவனத்தில் மட்டும் உண்ணவும், தாம் போடுவதை மட்டும் உண்ண வேண்டும் என்று கருதும்



மக்டொனால்ஸ், எப்படி சமூகத்துக்கு நஞ்சிடுகின்றது எனப் பார்ப்போம். 2003-இல் 119 நாடுகளில் தனது வலைப் பின்னலை விரித்து இருந்தது. உலகெங்கும் 30,000 உணவகங்களை கொண்டிருந்தது. 4.7 கோடி பேர் நாளாந்தம் உணவு உட்கொள்ளும் ஒரு நிலை உருவாக்கியிருந்தனர். 2003-இல் இதன் மூலமான மொத்த விற்பனை 1,714 கோடி டாலராக இருந்தது. இதன் மூலம் அவர்களுக்குக் கிடைத்த நிகர லாபம் 147 கோடி டாலராகும். 2002-யை விடவும், விற்பனை 11.3 சதவீதத்தால் அதிகரித்தது. இவை அனைத்தையும் உணவிலும் ஒரு வியாபாரச் சின்னம் (மார்க்) என்ற அடையாளத்தை ஏற்படுத்தியே சாதிக்க முடிகின்றது. குழந்தைகளின் சிந்தனைத் திறனை விளம்பரம் மூலம் முடமாக்கியே, இது வக்கரிக்க முடிகின்றது. இது தலைமுறை ரீதியாக தன்னைப் பற்றிய பிரமையை உருவாக்குகின்றது. மந்தைகளைப் போல் போடுவதை உண்ணும் இப்பண்பாடு சார்ந்து, அடிமையாகவே மனிதர்கள் உருவாக்கப்படுகின்றனர். வளர்ப்பு மந்தைகள் பண்ணையில் எப்படி உண்கின்றனவோ, அப்படியே விதிவிலக்கின்றி அதேநிலையை மனிதனுக்கு உருவாக்கப் படுகின்றது. இது முதலில் மேல்மட்ட பணக்காரக் கும்பலுக்கு நடக்கின்றது என்றால், கீழ்மட்ட ஏழை மக்களுக்கு உதவிகள் என்ற பெயரில் மற்றொரு வகை உணவு போடப்படுகின்றது. விரைவில் இது முற்றாக மரபு ரீதியாக மாற்றப்பட்ட பண்ணை உணவாக மாறிவருகின்றது.

மந்தைத்தனம் கூட பண்பாட்டு ரீதியான அடிமைத்தனத்தின் பண்பாட்டுக்கு இசைவாகவே வளர்ச்சியுறுகின்றது. மேற்கில் இதன் விளைவை எடுப்பாகவே காணமுடியும். அமெரிக்காவில் விரைவு உணவகங்கள் (மக்டொனல், குவிக்) 5,500 பேருக்கு ஒன்றாகவுள்ளது. இதுவே பிரிட்டனில் 28,500 பேருக்கு ஒன்றாகவும், பிரான்சில் 48,000 பேருக்கு ஒன்றாகவும் உள்ளது. மக்களின் போர்க்குணாம்சத்துக்கு ஏற்ப இது காணப்படுகின்றது. மக்களின் விரிந்த சமூக பண்பாட்டு கூறுகள் சார்ந்த வாழ்வியல் போராட்டத்துடன் தான், தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் எதிர்நீச்சல் போடுகின்றன.

இதே போல் மற்றொரு நிறுவனமான கே.எப்.சி. (K.F.C.) 1954-இல் தொடங்கப் பெற்றது. இது 2004-இல் 83 நாடுகளில் 10,300 கிளையுடன் இயங்கியது. கோழிகளை வக்கிரமாகவே வெட்டிக் கிழித்து கொன்று உண்ணும் பண்பாடு உருவாக்கப்படுகின்றது. மனித இனத்தையே இந்த உணவுதான் சிறந்தது என்று உண்ண வைத்து அடிமைப்படுத்தும் பண்பாடுகள் மூலம் சுரண்டிக் கிடைத்த ஒரு பகுதியை, மனிதனின் ஆன்ம விடுதலைக்காக செபிப்பதாகக் கூறும் வத்திக்கானுக்கு பல கோடி டாலரை 2004-இல் தானமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கினர். வத்திகான், கே.எப்.சி தொழில் முன்னேற செபித்ததுடன், அந்த உணவை உண்ண மக்களை செபிக்க கோருகின்றனர். மனித அடிமைத்தனத்தைப் பண்பாட்டு ரீதியாகவே, பெரும் தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கு, அடிபணியக் கோருவதாக உலகமயமாதல் உள்ளது.

இதே போன்றே 2003-இல் கொக்கோகோலா விற்பனை 2104 கோடி டாலராகியது. 2002-யை விடவும், மக்களின் அடிமைப் பண்பாடு உலகமயமானதால் 2003-இல் 8 சதவீத விற்பனை அதிகரித்து காணப்பட்டது. நிகர லாபம் 435 கோடி டாலராகியது. இலாப வீதம் 2002-யை விடவும் 43 சதவீதம் அதிகமாகியது. குளிர்பானம் மீதான அடிமைப் பாண்பாடு மூலம் மனித உழைப்பு கடுமையாக்கப்பட்டதையும், உழைப்புச் சக்திகள் அதிகம் சுரண்டப்பட்டதையும் இது எடுத்துக்காட்டுகின்றது. இந்த லாப வீதம், உற்பத்தி செய்த தொழிலாளர் படையில் இருந்து 2800 பேரை வேலையை விட்டுத் துரத்தி அடித்தது. அதாவது கொக்கோகோலா உற்பத்தியில் ஈடுபட்ட 56,000 தொழிலாளர்களில் ஐந்து சதவீதம் பேரை வேலை நீக்கியது. 2003-இல் உலகில் 11,020 கோடி லிட்டர் கொக்கோகோலா என்ற சமூக நஞ்சை விற்பனை செய்துள்ளது. தேசிய குடிபானங்கள் பலவற்றை ஏப்பமிட்டதுடன், பல உற்பத்திகளை அழித்தொழித்தது. பல லட்சம் தொழிலாளர்களின் தேசிய வாழ்வை உறிஞ்சி, அவர்களின் இரத்தத்தைக் கொண்டு தனது குளிர்பானத்துக்குச் சிவப்புக் கலரிட்டது. மனிதனின் அடிமைப் பண்பாடு கொக்கோகோலா என்ற குடிபானம் மூலம் இப்படித்தான் ஆட்டம் போட்டது, ஆட்டம் போடுகின்றது.

தேசிய உற்பத்திகளை அழிக்கும் அதே தளத்தில், உற்பத்திகள் மீதான விற்பனை உரிமையை மனித சமூகத்திடம் இருந்து பன்னாட்டு நிறுவனங்கள் பறித்துவிடுகின்றது. ஒரு மனிதன் தனது உற்பத்தியையே, தான் விற்பனை செய்ய முடியாத வகையில் சமூக உருவாக்கம் கட்டமைக்கப்படுகின்றது. விளம்பரம் என்ற துறை முழுமையாக தனிமனிதன் வாழ்வியலுக்கு அப்பாலான ஒன்றாகி விட்டது. அது அவனையே அடிமைப்படுத்தி விடுகின்றது. கற்பனைத் தளத்தில் விளம்பரம் மனித அடிமைத்தனத்தை உருவாக்கி, நனவுபூர்வமாக்குகின்றது. இதன் மூலம் விற்பனை உரிமை பன்னாட்டு நிறுவனங்களின் உரிமையாகி விடுகின்றது. உதாரணமாக உலகின் மிகப்பெரியதும், பொருட்களை விற்கும் உரிமையைக் கொண்ட வால்மார்ட் (Wal Mart - Super Market) அமெரிக்காவில் மட்டும் 3,300 கடைகளையும், உலகில் 1,000 கடைகளையும் கொண்டிருந்தது.



2004-2005-இல் மொத்தமாக 5305 கடைகளைக் கொண்டிருந்தது. இது 2004-2005-இல் மட்டும் புதிதாக 389 கடைகளை உருவாக்கியது. அதாவது நாளொன்றுக்கு குறைந்தது ஒரு கடையை புதிதாக திறக்கின்றது. இப்படி சமூகத்தின் மீது ஒரு ஆதிக்கத்தையே உருவாக்கி வருகின்றது. உலகளாவிய மிகப்பெரிய விற்பனை நிறுவனத்தில் தொழில் புரிவோர் எண்ணிக்கையோ 14 லட்சமாகும். இங்கு எந்தத் தொழிற்சங்கமும் வைத்திருக்க முடியாத வகையில் அடக்குமுறைக்கு உள்ளாகின்றது. 2004-இல் இங்கு தொழில் புரியும் விற்பனையாளர்களின் சம்பளம் ஒரு மணித்தியாளத்துக்கு 8.23 டாலராகக் குறைக்கப்பட்டுள்ளது. இது 2001-இல் 13.86 டாலராக இருந்தது. இந்த நிறுவனத்தின் அடக்குமுறைக்கு எதிராகச் செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகள் 2004-2005-இல் 8000-மாகும். இதுவே ஒரு நிறுவனத்துக்கு எதிராக உலகில் அதிக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உலகில் மொத்தமாக மூலதனத்தின் கொடூரங்களுக்கு எதிராக 2004-2005-இல் 16 இலட்சம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கொடூரமான சுரண்டல் மூலம் அமெரிக்காவில் மட்டும் இதன் விற்பனையகம் 3468 உள்ளது. 2004-இல் மட்டும் புதிதாக 270 கடைகளைத் திறந்தது. அமெரிக்காவின் மொத்த விற்பனையில் 8 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. சீனாவில் இருந்தான அமெரிக்கா இறக்குமதியில் இது 10 சதவீதத்தை கட்டுப்படுத்தியது. 2003-2004-இல் மொத்த விற்பனை 25,630 கோடி டாலராகியது. இது அதற்கு முந்தைய ஆண்டை விட 11.6 சதவீதம் அதிகமாகும். அதே நேரம் நிகரலாபம் 900 கோடி டாலராகியது. இது முந்திய ஆண்டை விட 13.8 சதவீதம் அதிகமாகும். ஒருபுறம் உலக மக்களின் மேல் ஆக்கிரமிப்பையும், மறுபுறம் சொந்த தொழிலாளியை அதி உயர் விகித்தில் சுரண்டுவதன் மூலம் மிகப் பெரிய சூறையாடலையே நடத்துகின்றது. ஒரு பன்னாட்டு நிறுவனம் எப்படிக் கொழுக்கின்றது என்பதையும், சமூகச் சிதைவுகள் எப்படிக் கட்டமைக்கப்படுகின்றன என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

பொருள் வர்த்தகத்தில் உலகிலேயே முன்னணி தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனமான 'வால்-மார்ட்'டின் (Wal-mart), லாபம் என்றுமில்லாத வீதத்தில் அதிகரித்துச் செல்லுகின்றது. இந்த வால்-மார்ட் சூறையாடல் எப்படிப் பல்கிப் பெருகுகின்றது எனப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| ஆண்டு | மொத்த விற்பனை | மொத்த நிகர லாபம் |
|---|---|---|
| 1999-2000 | 16500 கோடி டாலர் | 538 கோடி டாலர் |
| 2000-2001 | 19130 கோடி டாலர் | 629 கோடி டாலர் |
| 2001-2002 | 21780 கோடி டாலர் | 667 கோடி டாலர் |
| 2002-2003 | 22960 கோடி டாலர் | 800 கோடி டாலர் |
| 2003-2004 | 25630 கோடி டாலர் | 905 கோடி டாலர் |
| 2004-2005 | 28520 கோடி டாலர் | 1030 கோடி டாலர் |

மிகப்பெரிய பன்னாட்டு விற்பனையகங்கள் பூதாகரமாக வளர்ந்து வருவதையும், அவர்களின் மிகப்பெரிய கொள்ளைகளையும் இது எடுத்துக்காட்டுகின்றது. மனிதனின் உற்பத்தி உரிமையை மட்டுமல்ல, அதன் விற்பனை உரிமையையும் கூட, எதை நுகரவேண்டும் என்ற உரிமையையும் கூடத்தான் மறுக்கின்றது. இதன் மூலம் மனிதன் தனது சொந்த உற்பத்திகளைக் கூட, சொந்தமாக நுகரும் உரிமையை இல்லாது ஒழித்து விடுகின்றது. எங்கும் அராஜகமும், பொருட்களின் குவிப்பும் சந்தையை தேங்க வைக்கின்றது. இதன் மூலம் மனிதத் தேவைகள் மறுக்கப்படுகின்றன. இதன் மூலம் அடிமைப் பண்பாடுகளை சமூக மயமாக்கி கட்டமைக்கப்படுகின்றது.

இதன் மூலம் சிலருக்கு அடிமைச் சேவை செய்யும் உலகமாக, உலகம் மாற்றப்படுகின்றது. குவியும் செல்வம் தனிநபரின் தனிப்பட்ட சொத்தாக மாறும் போது, அந்த பணத்தின் சுழற்சியில் தான் மனிதயினம் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி விடுகின்றது. பணம் உள்ளவனுக்கு சேவை செய்து வாழும் ஒரு அடிமை உழைப்பு, உலகமயமாதலின் மிகப் பெரிய உற்பத்தித் துறையாகி விடுகின்றது. இந்த அடிமை உழைப்பின் மறுபெயர் தான் சேவைத்துறை. மற்றவனுக்கு சேவை செய்வதைக் குறித்து இந்த பெயர் உள்ளது. உதாரணமாக சாதி அமைப்பில் இதன் சிறப்பான எடுப்பான வகையில் அடிமைத்தனத்தின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட, மனித வரலாற்றிலும் இதை காணமுடியும். மனித இனம் சேவைத் துறை என்ற உள்ளடக்கத்தில், இன்று உற்பத்திகள் ஒரு அடிமை நிலைக்கு சரிந்து செல்லுகின்றது. மனித உழைப்பே இதற்குள் தங்கி வாழ நிர்ப்பந்தித்துள்ளது. இது சமூக உறவு சார்ந்த மனிதனின் இயற்கையான பரஸ்பர உறவு முறையை அழித்து, வர்த்தக உறவாக மாற்றிவிட்டது. இந்த வர்த்தகம் உலகிலேயே மிகப்பெரிதானதும், உழைப்பின் பெரும் பகுதியை உள்ளடக்கியதான ஒன்றாகிவிட்டது.



இப்படி உருவான சேவைத்துறை வர்த்தகம் 1970-இல் 1,34,750 கோடி இந்திய ரூபாவாக இருந்தது. இது 1985-இல் 9,45,000 கோடி இந்தியா ரூபாவாக வளர்ச்சி பெற்றது. இன்று இதுவே பல மடங்காகி விட்டது. மற்றவனுக்குச் சேவை செய்யும் அடிமைநிலை, மனித உழைப்பில் தீர்க்கமான உற்பத்தித்துறையாகிவிட்டது.

எல்லாத் துறையிலும் உற்பத்தி மீதான அராஜகம் தலைவிரித்தாடுகின்றது. செல்வம் உள்ளவனுக்கு மட்டும் தான் உற்பத்தி. வர்த்தகத்தின் ஆன்மாக உள்ள இந்த விதி, செல்வம் இல்லாதவனின் உயிர்வாழும் உரிமையை மறுக்கின்றது. செல்வம் உள்ளவனின் நலன்களை பேணும் ஒரு சமூக அமைப்பு சார்ந்த நலனை பூர்த்தி செய்யும் எல்லையில்தான், தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் தனது உற்பத்திச் சந்தையையே நவீன நாகரீகத்தின் சின்னமாக பாறைசாற்றி உலகமயமாகின்றது.

## தலைவிரித்தாடும் மிகப்பெரிய நிறுவனங்களின் அராஜகம்

இப்படி உருவாகும் பன்னாட்டு தேசங்கடந்த நிறுவனங்கள் பல கோடி மக்களின் வருடாந்தர கூலிகளை மிஞ்சியதாக காணப்படுகின்றது. உதாரணமாக உலகில் மென்பொருள் உற்பத்தியில் மிகப் பெரிய நிறுவனமான மைக்ரோசாப்ட் (Microsoft) நிறுவனத்தின் மொத்தச் சொத்து 1999-இல் 50,000 கோடி டாலராக இருந்தது. இது பிரேசில் நாட்டில் உள்ள மக்களனைவரும் வருடாந்தரம் உழைத்து உருவாக்கும் மொத்த தேசிய வருமானத்துக்குச் சமனாக இருந்தது. அதாவது இது பிரான்சு ஏகாதிபத்தியத்தின் மொத்த தேசிய வருமானத்தில் 40 சதவீதமாக இருந்தது. இதே போல் ஷெல் நிறுவனத்தின் 1990-ஆம் ஆண்டுக்கான வருமானம் உலகில் 10 சதவீதமான மக்களின் வருமானத்துக்குச் சமனானதாக இருந்தது. இந்த பத்து சதவீதமான மக்களும் பாகிஸ்தான், சயேரே, உகாண்டா, நேபாளம், வங்காள தேசம், எத்தியோப்பியா, நைஜீரியா, கென்யா ஆகிய நாடுகளில் வாழும் அனைத்து மக்களையும் உள்ளடக்குகின்றது. மனிதன் தனது இயற்கை சார்ந்த வளங்களையும், தனது உழைப்பின் மீதான உரிமையை இழந்த போது, மிகப் பெரிய தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் தமதாக்கி சொந்தமாக்கி கொழுத்து வரும் வரலாற்றை இது எடுத்துக் காட்டுகின்றது. இவை எல்லாம் மார்க் என்ற வியாபார அடையாளச் சின்னங்கள் மூலமே, சந்தையில் குதியாட்டம் போடுகின்றது. இங்கு மார்க் என்பது ஏகாதிபத்தியத்தின் அதிகாரச் சின்னமாக இருப்பதுடன், அவை மனித இனத்தின் மேல் பொறிக்கப்படும் போது, அவை அடிமைச் சின்னமாகக் காணப்படுகின்றது. இப்படி உருவான மனித அடிமைகள் தான்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிமைச்சின்னம் பொறித்த மார்க் அடையாளங்களுடன் வீதிகளில், மானவெட்கம் இன்றி, அதையே பெருமையாகக் கருதும் அடிமைப் பண்பாட்டுடன் தான் பவனி வருகின்றனர்.

இதே போன்ற மற்றொரு மார்க் உற்பத்தியான புகையிலையை எடுத்தால், அதன் அழிவுக் கொள்கை உலகளவில் பிரமாண்டமானது. 1999-இல் புகைத்தல் என்ற போதை உற்பத்தியில், மிகப் பெரிய நிறுவனமான பிலிப்மொரிஸ், உலகில் உள்ள மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் 17-வது இடத்தில் இருந்தது. இதன் மொத்த முதலீடு 6,200 கோடி டாலராகும். இதில் ஒரு பகுதியைக் கொண்டு உலகில் உள்ள அனைவருக்குமான ஆரம்பக் கல்வி, அடிப்படை சுகாதார வசதி முதல் வாழ்வதற்கான இருப்பிடங்களைக் கூட அமைக்க முடியும். ஆனால் பிலிப்மொரிஸ் சிகரட்டைப் புகைப்பதால் ஏற்படும் புற்றுநோயாலும் (கான்சர்), புகைத்தல் சார்ந்த நோய்களாலும் மட்டும் அமெரிக்காவில் 2,800 கோடி டாலர் மருத்துவச் செலவு ஏற்படுகின்றது. புகைத்தலால் உலகில் 50 லட்சம் மக்கள் நேரடியாகக் கொல்லப்படும் நிலையில், புகையிலை உற்பத்திக்காக பல லட்சம் சதுர கிலோமீட்டர் நிலம் பயன்படுத்தப் படுகின்றது. ஏழைகளின் அடிப்படைத் தேவை சார்ந்த உற்பத்தியைத் தடுத்து நிறுத்தி, நிலங்களைப் பறித்தெடுத்தன் மூலம், கோடிக்கணக்கான மக்களின் பட்டினிச் சாவின் மேலும் இந்த வர்த்தகம் பூத்துக் குலுங்குகின்றது. பன்னாட்டு நிறுவனங்களின் கொழுப்பேறிய மனிதவிரோத வர்த்தகம் ஒன்றையொன்று சார்ந்தும், பயன்படுத்தியுமே உயிர் வாழ்கின்றன. புகைத்தல் மிகப் பெரிய மருத்துவக் காப்புறுதிகளையும், மிகப் பெரிய மருந்து உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனங்களையும் உருவாக்குகின்றது. மனிதனுக்கு நோய்களை உருவாக்கி, மனித உழைப்பைப் பிடுங்கி பணம் கறக்கும் வித்தை, இந்த வர்த்தகத்தில் ஒரு அங்கமாகவே உள்ளது. இதுவே அரசுகளின் ஜனநாயகமாகவும், கொள்கையாகவும் உள்ளது. போதையை மனிதனின் உடலில் புகுத்தி பின், புகைத்தலுக்கு விசேட வரியை புகைப்பவனிடம் அறவிடுவதன் மூலம் அதை இராணுவத்துறையில் குவிக்கின்றனர். இப்படி பன்னாட்டு மூலதனம் ஒன்றையொன்று சார்ந்து, மனிதனுக்கு எதிராகவே அடிப்படையில் இயங்குகின்றது. இந்த மனிதவிரோதச் சந்தைக் கட்டமைப்பு, அற்பமான கவர்ச்சி சார்ந்து மார்க் ஊடாக குதிராட்டம் போடுகின்றது. புகைத்தல் தொடர்பாக மற்றொரு தனிக் கட்டுரை மூலம் அடுத்துவரும் நூல்களில் விரிவாகப் பார்ப்போம்.



மனித இனத்துக்கு எதிராகவே மிகப்பிரமாண்டமான பன்னாட்டு நிறுவனங்களான இவை செயல்படுகின்றன. இந்த நிறுவனங்கள் பல கோடி மக்களின் வருடாந்தர கூலிகளின் மொத்தத் தொகைக்குச் சமமான, மிகப் பெரும் முதலீடுகளைக் கொண்டவை. 1995-இல் உலகில் இயந்திரத் தொழில்துறையில் முன்னணியில் இருந்த 20 பன்னாட்டு நிறுவனத்தினதும் மொத்தச் சொத்து 1,58,970 கோடி டாலராக இருந்தது. முதல் ஐந்து பன்னாட்டு நிறுவனத்தின் சொத்து 65,230 கோடி டாலராக இருந்தது. 1995-இல் உலகில் பொருட்களை விற்கும் மிகப் பெரிய பத்து நிறுவனங்களின் மொத்தச் சொத்து 29,856 கோடி ஈரோவாகும். 1995-இல் உலகில் மிகப் பெரிய வங்கிகளின் 15-இன் மொத்தச் சொத்து 6,37,290 கோடி டாலராகும். ஐரோப்பாவில் மிகப் பெரிய இயந்திரத் தொழிலைச் செய்த ஐந்து பன்னாட்டு நிறுவனங்களின் மொத்தச் சொத்து 52,200 கோடி ஈரோவாகும் இதில் தொழில் புரிந்தோர் எண்ணிக்கை 10.75 லட்சமாகும். ஐரோப்பாவில் மிகப் பெரிய அளவில் பொருட்களை விற்கும் ஐந்து நிறுவனத்தின் மொத்தச் சொத்து 20,000 கோடி ஈரோவாகும். இங்கு இந்த விற்பனையைச் செய்யும் தொழிலில் ஈடுபடுவோர் தொகை 10 லட்சமாகும்.

இப்படி மிகப் பிரமாண்டமான மூலதனத்தை அடிப்படையாக கொண்ட உற்பத்திகளைச் சார்ந்தே, இன்று நிலவும் இந்தச் சமூக அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சமூக அமைப்பில் சமூகத்தின் உழைப்பு, உழைப்பின் மீதான உரிமை, அதை பயன்படுத்தும் உரிமை என்று பலவற்றை சமூகத்துக்கு மூலதனம் மறுத்து விடுகின்றது. இது ஒரு வர்த்தக சமூக கட்டமைப்பாக, பணம் உள்ளவனின் தேவையைப் பூர்த்தி செய்வதாக உள்ளது. பணம் அற்றவனுக்கு எதிராக, உழைப்பை வழங்குபவனுக்கு எதிராக, மனித குலத்தின் தேவையை மறுத்தே, இந்தச் சமூக அமைப்பு இயங்குகின்றது. இந்த வர்த்தக அமைப்பு அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் என்பன பிரமாண்டமான ஏகாதிபத்திய நலனுக்கு உட்பட்ட, ஒரு உலகச் சந்தைக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. உலகமயமாதலின் லாபங்களைப் பெறும் இந்த மூன்று பிரதானமான மையங்களில் வாழும் மக்கள், உலக சனத்தொகையில் 13.1யாக 2000-ஆம் ஆண்டு காணப்பட்டனர். ஆனால், உலக வருமானத்தில் இந்தப் பிரதேசங்கள் 70.2 சதவீதத்தைப் பெற்றனர். இவர்கள் உலகளாவிய மொத்த வெளிநாட்டு முதலீட்டில் 78.8 சதவீதத்தைக் கட்டுப்படுத்தினர். உலகளாவிய முதலீட்டிலும், பங்குச் சந்தையிலும் 92 சதவீதத்தை இந்த நாடுகள் கைப்பற்றியிருந்தனர். உலகில் முதல் 500 பன்னாட்டு நிறுவனங்களில் 219 அமெரிக்காவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடையதாக இருந்தது. அதாவது இது 44 சதவீதமாகும். ஐரோப்பாவை எடுத்தால் முதல் 500-இல் 146 பன்னாட்டு நிறுவனங்களை சொந்தமாகக் கொண்டிருந்தது. அதாவது இது 29 சதவீதம். இது போல் ஜப்பான் 77 பன்னாட்டு நிறுவனங்களைக் கொண்டிருந்தது. அதாவது இது 15 சதவீதமாகும். உலகப் பங்குச் சந்தை முதலீட்டில் 50 சதவீதத்தை அமெரிக்கா கொண்டிருந்தது. அதேநேரம் ஐரோப்பா 28 சதவீகித்தையும், ஜப்பான் 13 சதவீதத்தையும் உலகளவில் கொண்டிருந்தது. உலக முதலீட்டில் அமெரிக்கா 14 சதவீதத்தையும், ஐரோப்பா 49 சதவீதத்தையும், ஜப்பான் 31 சதவீதத்தையும் கட்டுப்படுத்தியது. இப்படி உலகம் மீதான ஆதிக்கத்தை இந்த மூன்று பிரதான மையங்களும் கட்டுப்படுத்தின. அதேநேரம் தமக்கிடையிலான ஒரு ஏகாதிபத்திய மோதலையும், உள் முரண்பாடுகளைக் கொண்ட ஒரு மோதலை அடிப்படையாக கொண்டு, ஒரு வர்த்தக யுத்தத்தை அன்றாடம் ஒவ்வொரு கணமும் நடத்துகின்றனர்.

இதில் இருந்து தப்பிப் பிழைக்கவும், தமது சொந்த அழிவுகளைத் தடுத்து நிறுத்தவும் இந்த உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளி வர்க்கம் மீதான சுரண்டலையே கடுமையாக்குகின்றனர். உழைப்பில் உழைப்பின் திறனை அதிகரிக்க வைப்பதுடன், உழைப்பின் காலத்தை அதிகரிக்க வைப்பதுடன், கூலியைக் குறைப்பதையும் (இது பணப் பெறுமதியை சிதைப்பதன் மூலமும், நுகரும் பொருளின் விலையை சந்தையில் அதிகரிக்க வைப்பதன் மூலமும், கூலியை குறைப்பதன் மூலமும்) அடுக்கடுக்காகச் செய்கின்றனர். உழைக்கும் வர்க்கத்தின் எண்ணிக்கையை உற்பத்தித் துறையில் குறைப்பதன் மூலம் இலாப வீதத்தை அதிகரிக்க வைப்பதுடன், தம்மைத் தாம் தக்க வைக்க முனைகின்றனர். இதில் மனிதக் கம்ப்யூட்டர்களைப் புகுத்துகின்றனர். மனிதன் செய்த ஒரு வேலையை ஒரு இயந்திரம் செய்யும் நிலைக்கு மாற்றப்படுகின்றது. தன்னியக்கி இயந்திரங்கள் இதன் ஒரு அங்கமாக உள்ளது. 1985-இல் கம்ப்யூட்டரைக் கொண்டு இயக்கும் இயந்திர மனிதன் ஜப்பானில் 65,000-மும், அமெரிக்காவில் 14,500-ம், ஜெர்மனியில் 6,000-மும், பிரிட்டனில் 2,500-ம் உழைப்பில் பயன்படுத்தப்பட்டது. இப்படி மனித உழைப்பை அகற்றுவதன் மூலம், மனிதனைச் செயலற்ற பண்ணை மிருகங்களாக மாற்றி விடுகின்றனர்.

மிகப் பிரம்மாண்டமான பன்னாட்டு நிறுவனங்கள் மனித இனத்துக்கு எதிராகவே திட்டவட்டமான குறிக்கோளுடன் இயங்குகின்றன. உலகின் செல்வம் அனைத்தையும் தனக்குச்



சொந்தமாக்கும் நனவுபூர்வமான கனவுடன், மூலதனம் தனது லாப வேட்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. இவை அனைத்தையும் இவ் ஏகாதிபத்தியத்தில் உள்ள மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களே கட்டுப்படுத்துகின்றன. சின்டிகெட்டுகள், கார்ட்டல்களாக செயல்பட்ட தேசங்கடந்த தொழில் நிறுவனங்கள், 1960-இல் இருந்து பிரமாண்டமாக வளர்ச்சியடையத் தொடங்கின. 1982-இல் உலகில் மிகப் பெரிய 200 பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த விற்பனை 3,04,600 கோடி டாலராக இருந்தது. இது உலகின் மொத்த உள்நாட்டு மதிப்பில் மூன்றில் ஒன்றாகும். இதில் 166 நிறுவனங்கள் முக்கியமான 5 ஏகாதிபத்தியங்களுக்குச் சொந்தமாக இருந்தன. 1996-இல் உலகின் மிகப் பெரிய 200 பன்னாட்டு நிறுவனங்கள் தமது சொந்த அடையாளத்துடன் நடத்திய வர்த்தகம், உலக வர்த்தகத்தில் 25 சதவீதத்துக்கு மேலானதாக இருந்தது. இந்த வர்த்தகம் உலகின் பிரதான ஏகாதிபத்தியம் மற்றும் மிகப் பெரிய இரு நாடுகளைத் தவிர்த்த, மற்றைய நாடுகளின் மொத்த வர்த்தகத்தை விடவும் அதிகமானதாகும். அதாவது மொத்தம் உள்ள 191 நாடுகளில் 182 நாடுகளின் மொத்த வர்த்தகத்தை விட, இந்த 200 பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகத்தின் அளவு அதிகமாகும். இந்த ஒன்பது நாடும் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், கனடா, பிரேசில் மற்றும் சீனாவாகும். இது தவிர்ந்த 182 நாடுகள் இணைந்து மொத்த உற்பத்தி மற்றும் வர்த்தகம் 6,90,000 கோடி (6.9 டிரில்லியன்) டாலராகும். அதே நேரம் 200 பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் வர்த்தகம் 7,10,000 கோடி (7.1 டிரில்லியன்) டாலராகும். நாடுகளையும், அதில் உள்ள மக்களின் உழைப்பையும் மிஞ்சிய, 200 நிறுவனங்களின் வர்த்தகமே உலகின் அதிகாரத்தின் சின்னமாக மாறியது. இந்த 200 பன்னாட்டு நிறுவனங்களின் உலகளாவிய மொத்த உற்பத்தி மற்றும் வர்த்தகத்தின் பங்கு 1982-இல் 24.2 சதவீதமாக இருந்தது. இது 1992-இல் 26.8 சதவீதமாகியது. 1995-இல் 28.3 சதவீதமாக அதிகரித்தது. 2003-இல் 37,000 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் உலகளவில் 1,70,000 கிளைகளுடன் இயங்கின. உலகமே ஒரு சில நிறுவனங்களின் பொருளாதார ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருந்தது.

இந்த ஆக்கிரமிப்பு வரலாறு மூலதனத்தின் வரலாறாக இருக்கும் அதேநேரம், மனித இனத்தின் இரத்தத்தை உறிஞ்சிய வரலாறாக எதிர்தளத்தில் உள்ளது. 1986-இல் உலகளாவிய 866 பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தித் துறையில் 76 சதவீதத்தை கட்டுப்படுத்தின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பன்னாட்டு நிறுவனங்களுக்குள்ளேயான சர்வதேச வர்த்தகத்தில் 30 சதவீதத்தைக் கட்டுப்படுத்தின. வர்த்தகத்தைக் கூட தமக்கிடையில் நடத்தும் ஒரு வர்த்தகச் சூதாட்டமாக பன்னாட்டு நிறுவனங்கள் நடத்தின. இதன் மூலம் ஒன்றையொன்று விழுங்குவதும், தமக்கு இடையில் இணைவதும் அரங்கேறுகின்றது. 1989-இல் உலகம் தழுவிய தேசங் கடந்த நிறுவனங்களில், இணைப்புள்ளவைகளின் விற்பனை 44,00,000 கோடி டாலராகியது. உலக ஏற்றுமதியில் இது 25,00,000 கோடி டாலராக மாறியது. வர்த்தக அராஜகத்தை உருவாக்கி, அதை உலகளவில் ஒரு சில நிறுவனங்கள் கட்டுப்படுத்தின.

இதன் மூலம் உலக மக்களைக் கொள்ளையடித்து கொழுப்பேறியது. 1993-இல் உலகில் முதல் 500 மிகப் பெரிய தேசங்கடந்த நிறுவனங்கள் உலகின் உற்பத்தியில் 25 சதவீதத்தை கட்டுப்படுத்திய அதேநேரம், இங்கு வேலை செய்தோர் உலகளவில் வேலை செய்வோரில் 0.5 சதவீதமாகவே இருந்தது. 300 தேசங்கடந்த நிறுவனங்களின் சொத்து, உலக வளத்தில் 25 சதவீதமாக இருந்தது. உலகின் நிதி மூலதனத்தை கட்டுப்படுத்திய மிகப் பெரிய 50 நிதி நிறுவனங்கள், உலக நிதி மூலதனத்தில் 60 சதவீதத்தைக் கட்டுப்படுத்தின. இதன் பெறுமதி 20,00,000 கோடி டாலராகும். 1999-இல் மிகப்பெரிய 100 பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வர்த்தகம் 5,83,890 கோடி ஈரோவாக மாறியது. இது 1995-இல் முன்னணி 200 பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வர்த்தகத்துக்குச் சமமானதாக அதிகரித்தது. இங்கு மொத்தமாக தொழில் புரிந்தோர் எண்ணிக்கை வெறுமனே 1.9 கோடி பேர் மட்டுமே. முதல் 10 பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் 1,55,300 கோடி ஈரோவாகும். இதில் மொத்தமாக தொழில் புரிந்தோர் 32 லட்சம் பேராவார். முதல் 20 நிறுவனத்தின் வர்த்தகம் 2,49,600 கோடி ஈரோவாக இருந்தது. இங்கு மொத்தமாக தொழில் புரிந்தோர் 50 லட்சம் பேராவர்.

உலக உற்பத்தியில் முதல் நிலையில் உள்ள 200 தேசங் கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் 28.3 சதவீதமான உலக உற்பத்தியை கட்டுப்படுத்தும் அதேநேரம், இந்த நிறுவனங்கள் வெறும் 0.33 சதவீத உழைக்கும் மக்களுக்கே உலகில் வேலை வாய்ப்பை வழங்கின. 71.7 சதவீத உற்பத்தியைச் செய்யும் மற்றைய நிறுவனங்கள், உலக உழைக்கும் மக்களின் 99.67 சதவீதமான மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்றன. இன்றைய நிலையில், இதே போக்கில் உலகமயமாதல் சார்ந்து, தேசங்கடந்த நிறுவனங்கள் மூலதனத்தை விரிவாக்கிச் செல்லும் போக்கில், உலக உற்பத்தியை 100 சதவீதமாக கட்டுப்படுத்தும் போது, உலக உழைக்கும் மக்களின் 1.17 சதவீத



மக்களுக்கே வேலை வாய்ப்பை வழங்குவர். அத்துடன் முன்னணி தேசங்கடந்த நிறுவனங்களிடையே ஏற்படும் அழிவு இந்த 1.17 சதவீத வேலை வாய்ப்பைக் கூட மேலும் குறைக்கும். 99 சதவீதமான உழைக்கும் ஆற்றல் உள்ள மற்றைய மக்களின், உயிர் வாழ்வதற்கான அடிப்படைத் தேவையை எப்படி உலகமயமாதல் கையாளும்? கேவலமாகக் கையேந்தி வாழும் அடிமைப் பண்ணை மனித விலங்காக மனிதர்களை மாற்றி, படிப்படியாக பட்டினியில் கொல்லப்படுவதே நிகழும். உலகமயமாதலின் சுதந்திரமான, ஜனநாயகமான மூலதனத்திடம், இதற்கு மாற்றாக எந்தத் தீர்வும் கிடையாது. இந்த உலகமயமாதலை பாட்டாளி வர்க்கம் எதிர்த்துப் போராட வேண்டுமா? அல்லது உலகமயமாதலில் சிறு கூறுகளை முற்போக்காகக் காட்டி ஆதரிப்பதா? இங்கு இதை தெளிவுபடவே நமக்கு புள்ளிவிபரங்கள் எதைச் செய்ய வேண்டும் என்பதை நிர்வாணப்படுத்தி விடுகின்றன.

இந்த உண்மை எதார்த்தமாகவே உலகில் காணப்படுகின்றது. உலகில் மிக வறுமையில் வாழும் 450 கோடி மக்களின் மொத்தப் பொருளாதாரச் செயற்பாடு 3,90,000 கோடி (3.9 டிரில்லியன்) டாலர் மட்டுமே. ஆனால் முதல் 200 பன்னாட்டு நிறுவனங்களின் பொருளாதாரச் செயற்பாடு 7,10,000 கோடி (7.1 டிரில்லியன்) டாலராகும். இந்தப் பொருளாதாரச் செயல்பாட்டின் இடைவெளி தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது. மக்கள் எதுவுமற்ற ஒரு மந்தைக்குரிய அடிமை நிலையை அடையும் வரை, இது வளர்ச்சியுறுகின்றது. உலக மக்கள் தொகையில் அதிக வசதிபடைத்த 20 சதவீதம் மேட்டுக்குடி மக்களிடம், உலகச் செல்வ வளத்தில் 85 சதவீதம் குவிந்து காணப்படுகின்றது. மிகுதியுள்ள 80 சதவீதமான மக்கள் 15 சதவீதமான செல்வத்தையே அனுபவிக்கின்றனர். இது உலக ஜனநாயகத்தினதும், சுதந்திரத்தினதும் வெட்டுமுகம். விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசில பன்னாட்டு நிறுவனங்கள், உலகையே சொந்தமாக்குவது தான் உலகமயமாதலாகும். இதை நிறைவு செய்து உறுதி செய்ய உருவானதே உலகமயமாதல் சட்டதிட்டங்கள். இங்கு மக்கள் பற்றி எந்த விதமான சமூக அக்கறையும் உலகமயமாதலுக்கு கிடையாது.

அதாவது விரல்விட்டு எண்ணக் கூடியவர்களின் நலன்களே இங்கு முதன்மையானது. இதுவே சுதந்திரம். இதுவே ஜனநாயகம். இவைகளை போற்றுவதே உலகமயமாதலின் விரிவுரையாகும். 1991 இல் உலகின் மிகப்பெரிய 10 பன்னாட்டு நிறுவனங்கள் இணைந்த மொத்த வர்த்தகத்தின் பெறுமானம், 100 சிறிய நாடுகள் இணைந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்தியை விட அதிகமாக கொண்டிருந்தது. இவை நமக்குத் தெளிவாகவே உண்மைகளைப் போட்டு உடைக்கின்றன. 100 நாடுகளில் வாழும் மக்களின் ஜனநாயகம், சுதந்திரம் என அனைத்தும், எப்படி பன்னாட்டு நிறுவனங்களின் உரிமையாகிக் கிடக்கின்றது என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி விளக்கி நிற்கின்றது.

## சுதந்திரம், ஜனநாயகம் பற்றிய பிரகடனங்களின் பின்னால் அரங்கேறுவது ஆபாசங்களே

சுதந்திரம், ஜனநாயகம் பற்றி வாய்கிழிய பிரகடனம் செய்து எதைச் சாதிக்கின்றனர் என்பதைக் குறிப்பாகப் பார்ப்போம். உலகில் மிகப் பெரிய நிறுவனமான ஜெனரல் மோட்டார் நிறுவனம் சீனாவில் தனது விற்பனையை 2003-இல் ஆறு மடங்காக்கியது. சந்தை உருவாக்கித் தரும் ஜனநாயகம், மக்களின் அடிப்படை வாழ்வுரிமையைச் சூறையாடுவதையே பிரகடனமாகின்றது. 2002-இல் ஜெனரல் மோட்டார் நிறுவனம் 14.2 கோடி டாலரை லாபமாக பெற்ற இந்த நிறுவனம், 2003-இல் 43.7 கோடி டாலர் லாபத்தைப் பெற்றது. சீனாவின் ஜனநாயகம் மக்களின் வாழ்வை சூறையாடி விட, அதுவே லாபங்களை அள்ளிக் கொடுத்தது. மொத்தத்தில் ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளில் இந்த நிறுவனம் பெற்ற லாபம் 70 முதல் 80 கோடி டாலராகும். சீனாவில் தனது வாகன விற்பனையை இரட்டிப்பாக்கியதுடன், 7.66 லட்சம் வாகனங்களை ஒரே வருடத்தில் விற்றது. கார்கள் வீதிகளில் பவனி வர, மக்கள் தம்மைத்தாமே ஒடு பாதையாக்குகின்றனர். வாகனங்கள் பவனி வர மக்கள் குடியிருப்புகள் பலாத்காரமாகவே குடியெழுப்பப்பட்டு தகர்க்கப்பட்டு அவைகளே வீதியாகின்றன. மக்கள் அனாதைகளாக, குடியிருக்க நிலமின்றி, வீதிவீதியாக பிச்சை எடுக்கின்றனர். இது தான் சீனாவில் ஜனநாயகத்தை மீட்ட போது எதிர்ப்படும் எதார்த்தமான காட்சியாகும்.

இதுவே ரசியாவிலும் நடந்தது. ஜனநாயகத்தை மீட்டதாகப் பிரகடனப்படுத்திய பண்பான பத்து வருடங்களில், ரசியாவில் இருந்து 25,000 கோடி டாலருக்கு மேலான பணத்தை நாட்டை விட்டே கடத்தியுள்ளனர். 2000-மாவது ஆண்டில் மட்டும் இந்தத் தொகை 2,460 கோடி டாலராக இருந்தது. இது 1999-யை விடவும் 30 சதவீதம் அதிகமாகும். இவை எல்லாம் சட்டப்பூர்வமாகவே நாடு கடத்தப்பட்டவை. சட்டவிரோதமான புள்ளிவிபரங்களையும் உள்ளடக்கின், இதன் தொகை பலமடங்காக இருப்பது தவிர்க்க



முடியாது. மீட்கப்பட்ட ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் கதை இதுதான். ஏகாதிபத்தியம் எங்கெல்லாம் ஜனநாயகம், சுதந்திரம் பற்றி பாசாங்கு பண்ணி மூக்கால் அழுகின்றனரோ, அங்கெல்லாம் இதுதான் கதை. மனித வரலாறு இப்படித் தான் மனிதத் துயரங்கள் மேல் உள்ளது.

சீனாவில் ஜனநாயகத்தை மீட்கப் புலம்பிய ஏகாதிபத்தியங்களின் நலன்கள் தான் என்ன என்பதை வெளிப்படுத்திய மற்றொரு தெளிவான உதாரணம். 2003-2004-இல் கொக்கோகோலா என்ற அமெரிக்க மூத்திரத்தின் விற்பனை சீனாவில் 37 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் மூலம் ஆசியாவிலேயே தனது விற்பனையை 4 சதவீதத்தால் அதிகரித்தது. இது உலகளவில் ஒரு சதவீதத்தால் அதிகரித்தது. ஆனால் ஜெர்மனியில் இது 15 சதவீதத்தால் குறைந்தது. மக்களின் சமூக விழிப்புணர்ச்சி குறையும்போது விற்பனை அதிகரிப்பும், மக்களிடம் சமூக விழிப்புணச்சி ஏற்படும் போது விற்பனைக் குறைவும் ஏற்படுகின்றது.

சீனாவின் ஜனநாயகத்தில் அக்கறை கொண்டு கூக்குரலிட்ட ஜெனரல் மோட்டாரின் விற்பனை வருமானம் 1992-இல் 13,300 கோடி (133 பில்லியன்) டாலராகும். இது பல நாடுகளின் தேசிய வருமானத்தை விட அதிகமாகும். தான்சானியா, எத்தியோப்பியா, நேபாளம், வங்காளதேசம், உகண்டா, நைஜீரியா, கென்யா, பாகிஸ்தானின் வருமானத்தை விடவும், அதாவது அங்கு வாழும் 50 கோடி மக்களின் வருமானத்தை விட இந்த நிறுவனத்தின் வருமானம் அதிகமாக இருந்தது. இது உலக சனத்தொகையில் பத்தில் ஒரு பங்கு மக்களின் வருமானத்துக்குச் சமனாகும். உண்மையில் உலகின் மிகப் பெரிய கம்பெனிகள், பல சிறிய நாடுகளையும், அந்த நாட்டு மக்களையும் அடிமையாக சேர்த்து வாங்கும் திறனைப் பெற்று விட்டன. இந்த நிலையில் நாடுகளையும் அதில் வாழும் மக்களையும் அடிமைப்படுத்தி வாங்கும் நிகழ்ச்சி நிரல் தான் நடைமுறையில் அமலாகும் உலகமயமாதல். இதே நிறுவனம் 1999-இல் தனது சொத்துக்களின் பெறுமானம் 19,923 கோடி ஈரோவாகியது. 1992-க்கும் 1999-க்கும் இடையில் ஈரோ மற்றும் டாலர் நாணயங்களை சமனாக எடுத்து ஒப்பிடின், சொத்துக் குவிப்பு 1992-யை விட 6,923 கோடி டாலரால் அதிகரித்திருந்தது. இந்தப் பணம் எங்கு இருந்து எப்படிக் குவிந்தது. இவற்றைத் தெரிந்து கொள்வது ஒவ்வொரு மனிதனினதும் சமூகக் கடமையாகும். நமது உழைப்புத்தான் இப்படிச் சூறையாடப்பட்டுக் குவிக்கப்படுகின்றது என்பதைப் புரிந்து கொள்வது அவசியமானதாகி விடுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படி உலகை ஆட்டிப் படைக்கும் முதல் 200 பன்னாட்டு நிறுவனங்களின் தலைமையகங்களில் ஐந்து மட்டுமே ஏகாதிபத்தியம் அல்லாத நாடுகளில் காணப்பட்டது. இந்த ஐந்தில் மூன்று தென் கொரியாவிலும், இரண்டு பிரேசிலிலும் காணப்பட்டது. 1992-இல் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் 100-இல் 38 ஐரோப்பாவிலும், 29 அமெரிக்காவிலும், 16 ஜப்பானிலும் காணப்பட்டது. மற்றவை கூட ஆஸ்திரேலியா மற்றும் எண்ணெய் வள நாடுகளைச் சார்ந்த, பிரதான ஏகாதிபத்திய நிறுவனங்களாகவே இருந்தன. 1992-இல் முன்னணி 200 பன்னாட்டு நிறுவனங்களில் 25.1 சதவீதத்தை ஜப்பான் கட்டுப்படுத்தியது. 1995-இல் 38.7 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. 1995-இல் முதல் பத்து பன்னாட்டு நிறுவனங்களில் 6 ஜப்பானுடையது. 3 அமெரிக்காவினுடையது. மற்றையது பிரிட்டன் மற்றும் நெதர்லாந்துக்கு சொந்தமானதாக இருந்தது. 20-ல் 11 ஜப்பானுக்கும், 7 அமெரிக்காவுக்கும் 2 ஐரோப்பாவுக்கும் சொந்தமானதாக இருந்தது. முதல் 100 பன்னாட்டு நிறுவனத்தில் 38 ஐரோப்பாவுக்குச் சொந்தமாக இருந்தது. 37 ஜப்பானுடையது. 24 அமெரிக்காவுக்குச் சொந்தமானது. உண்மையில் பெரும் பன்னாட்டு நிறுவனங்கள்கூட, வெவ்வேறு பன்னாட்டு நிறுவனங்களால் விழுங்கப்படுவதும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாகி உள்ளது. மூலதனத்தின் இடமாற்றம் திடீர் திடீரென நடப்பதையே, உலக வர்த்தக நெருக்கடிகள் ஏற்படுத்தி விடுகின்றன. உலகமயமாதல் பற்றிய புரிதலில் பன்னாட்டு நிறுவனங்கள், எப்படி மற்றொன்றுக்கு தூக்கி எறியப்படுகின்றது என்பது பற்றிய தெளிவும் மிக முக்கியமானது.

அதேநேரம் இன்று உலகில் உள்ள அனைத்து மக்களின் உழைப்பும் உருவாக்கும் செல்வங்களின் மொத்த இருப்பிடங்களாக, ஏகாதிபத்தியங்கள் மாறிவிட்டது. 1997-இல் மிகப்பெரிய 25 காப்புறுதி நிறுவனங்களில் 9 அமெரிக்காவினுடையதாக இருந்தது. 16 ஐரோப்பாவினுடையதாக இருந்தது. உலகில் மிகப் பெரிய 25 வங்கிகளில் 4 அமெரிக்காவினுடையதாக இருந்தது. 8 ஜப்பானினுடையதாகவும், மிகுதி 13-ம் ஐரோப்பாவினுடையதாகவும் இருந்தது. மிகப் பெரிய 25 தொழில்துறை நிறுவனங்களில் 9 அமெரிக்காவினுடையதாக இருந்தது. 10 ஜப்பானுடையதாகவும், 5 ஐரோப்பாவினுடையதாகவும் இருந்தது. உழைக்கும் மக்களின் உழைப்பு உருவாக்கும் செல்வம், எல்லாவிதமான தடைகளையும் கடந்து, தனிப்பட்ட ஒரு சிலரிடமும், சில நிறுவனங்களிடமும் சென்று குவிந்து விடுகின்றது. இது அன்றாட நிகழ்ச்சி நிரலாகி விட்டது. இப்படிக் குவிந்து செல்லும், இந்தச் செல்வத்தின் அளவு என்ன எனப் பார்ப்போம்.



1997-இல் மிகப் பெரிய செல்வ ஆதாரங்களைக் கொண்ட சொத்துக்களின் பெறுமதி கோடி டாலரில்

| | உலகின் மிகப் பெரிய தொழில் துறை | உலகின் மிகப் பெரிய வங்கி | உலகின் மிகப் பெரிய காப்புறுதி நிறுவனம் |
|---|---|---|---|
| உலகில் மிகப்பெரிய நிறுவனம் | 17,817 | 71,887 | 5,269 |
| உலகில் மிகப்பெரிய 5 நிறுவனங்கள் | 75,455 | 2,80,600 | 17,520 |
| உலகில் மிகப்பெரிய 10 நிறுவனங்கள் | 1,32,540 | 5,07,405 | 27,160 |
| உலகில் மிகப்பெரிய 25 நிறுவனங்கள் | 2,42,410 | 10,28,830 | 39,230 |

1997-க்கு முந்திய ஆண்டில் மிகப் பெரிய நிறுவனங்களின் சொத்துக்களின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது, எப்படி பன்னாட்டு நிறுவனங்கள் வீங்கி வெம்புகின்றன என்பதை ஒப்பீட்டில் இனம் காணமுடியும். 1996-இல் மிகப் பெரிய தொழில்துறை பன்னாட்டு நிறுவனத்தின் சொத்து 16,836 கோடி டாலராகும். முதல் ஐந்து பன்னாட்டு நிறுவனத்தின் சொத்துக்கள் 67,165 கோடி டாலராக இருந்தது. பத்து பன்னாட்டு நிறுவனங்களின் சொத்துக்கள் மொத்தப் பெறுமதியோ 1,04,626 கோடி டாலராகும். முதல் 25 பன்னாட்டு நிறுவனங்களின் சொத்துக்கள் 1,89,865 கோடி டாலராகும். 1996-க்கும் 1997-க்கும் இடையில் ஒரே வருடத்தில் தொழில்துறை முறையே 981, 8,290, 27,914, 52,545 கோடி டாலரால் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்து இருந்தது. சொத்துக்கள் வருடாந்தரம் பெரும் தொகையில் அதிகரிக்கும் அதேநேரம், இது ஏகாதிபத்திய நாடுகளிடையே அங்கும் இங்குமாக இடமாறுகின்றது.

1998, 1999, 2000-ஆம் ஆண்டுகளில் மிகப்பெரிய 100 நிறுவனங்களை எடுத்து ஆராயும் போது, ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான கடும் முரண்பாடுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. அதைப் பார்ப்போம்.

| ஆண்டு | அமெரிக்கா | ஜப்பான் | ஐரோப்பா | சீனா | மற்றவை |
|---|---|---|---|---|---|
| 1998 | 27 | 17 | 40 | - | 6 |
| 1999 | 35 | 22 | 41 | 2 | 0 |
| 2000 | 54 | 12 | 29 | 2 | 31 |
| 2003 | 37 | 22 | 222 | - | - |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படி செல்வத்தால் வீங்கியுள்ள பெரும் பன்னாட்டு நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் அனைத்தும், பிரதான ஏகாதிபத்தியங்களின் சொந்த வளர்ப்பு பிள்ளையாக இருக்கும் அதேநேரம், அங்குமிங்குமாக இடம் மாறுகின்றது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் கடுமையான, இழுபறியான முரண்பாடுகள் உருவாகின்றன. உலகை மறுபடியும் மறுபங்கீடு செய்வது அன்றாடம் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சி நிரலாகின்றது. மோதல்கள், சதிகள் இன்றி ஏகாதிபத்தியமாக நீடிக்க முடியாத வகையில், உலகமயமாதல் பொருளாதாரக் கட்டமைப்பு பூத்துக் குலுங்குகின்றது. இப்படிப் பூத்துக் குலுங்கும் போது நடக்கும் மாற்றங்கள் தான் என்ன? 2003-இல் உலகின் அதிக மக்களை ஏமாற்றி அவர்களின் அடிமைத்தனம் மீது வர்த்தகம் செய்த, முதல் 100 நிறுவனங்களில் 37 அமெரிக்காவுடையது. இது போன்று ஜப்பான் 22-யும், ஜெர்மனி 10-யும், பிரான்ஸ் 7-யும், பிரிட்டிஷ் 5-யையும் கொண்டு இருந்தது. இது போன்று முதல் 500 பன்னாட்டு நிறுவனங்களில் 185 அமெரிக்காவுடையது. ஜப்பான் 104-யும், ஜெர்மனி 34-யும், பிரான்ஸ் 37-யும், பிரிட்டிஷ் 34-யும் கொண்டு இருந்தது.

2003-இல் உலகில் உள்ள முதல் நிறுவனத்தின் வர்த்தகம் 24,653 கோடி டாலராக இருந்தது. முதல் 5 பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வர்த்தகமோ 97,391 கோடி டாலராக இருந்தது. முதல் 10 பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் 1,65,203 கோடி டாலராக இருந்தது. முதல் 25 பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் 2,94,153 கோடி டாலராக இருந்தது. 1996-க்கும் 2003-க்கும் இடையிலான ஏழு வருடத்தில் முறையே 7,817, 30,226, 60,577, 1,04,288 கோடி டாலரால் தனது வர்த்தகத்தையே அதிகரித்து இருந்தது. மக்களை ஏமாற்றி, சூறையாடிய மிகப் பிரமாண்டமான வர்த்தகம், மக்களின் இயற்கை ஆற்றலையே மறுத்துவிடுகின்றது. மக்களின் தெரிவைச் சுருக்கி நலமடித்து விடுகின்றது. தரம், சுவை, செயல் திறன், தொழில் நுட்பம், செயல் ஆற்றல், கலைத் தன்மை என்று ஒரு பொருளில் வெளிப்படும் அனைத்துப் பண்புகளும், மக்களின் சுயதெரிவு சார்ந்த ஆற்றலில் இருந்து அழிக்கப்பட்டு, ஒரு மாடல் சார்ந்த சரக்கு உலகமாக மாற்றப்படுகிறது. இது, சாவி (கீ) கொடுத்த பொம்மையாட்டம் தனது செயலை முடக்கி, மந்தைக்குரிய வகையில் நுகர்வை, இருப்பதில் தேர்வு செய்கின்றது. உலகம் திறந்தவெளி மந்தைகளின் பட்டியாக மாற்றப்படுகின்றது. அதை நோக்கி மனித இனத்தின் சுய ஆற்றல் சார்ந்த எல்லாக் கூறுகளையும் உலகமயமாதல் அழிக்கின்றது.



இதன் அடிப்படையில் மிகப் பெரிய நிறுவனங்கள் முதல் மிகச் சிறிய பன்னாட்டு நிறுவனங்கள் வரை மக்களைக் கொள்ளை அடிப்பது மட்டுமின்றி, உலகையே தமது காலடியில் அடிமைப்படுத்துகின்றனர். 2003-இல் உலகின் மிகப்பெரிய 2000 பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வர்த்தகம் 19,00,000 கோடி (194 டிரில்லியன்) டாலராகும். இவற்றின் நேரடியான மொத்த நிகர லாபம் 76,000 கோடி (760 பில்லியன்) டாலராகும். இவற்றின் நிலையான சொத்துக்களின் மொத்த பெறுமானம் 69,00,000 கோடி (69 டிரில்லியன்) டாலராகும். இங்கு மொத்தமாக வேலை செய்தோர் எண்ணிக்கை வெறுமனே 6.4 கோடி பேராவர். அதேநேரம் உலகில் 2 டாலருக்கு குறைவான நாள் வருமானத்தைக் கொண்டோர் எண்ணிக்கையோ 280 கோடி பேராவர். இதில் 120 கோடி மக்கள் ஒரு டாலரைக் கூட பெற முடிவதில்லை. இவர்கள் குறைந்தபட்சம் ஒரு டாலரையும், 2 டாலரையும் பெறுகின்றார்கள் என்று எடுத்தால், அவர்களுக்கு வருடாந்தம் கிடைக்கும் மொத்தப் பணம் 1,60,600 கோடி டாலராகும். உலகில் அரைவாசி மக்களுக்குக் கிடைப்பது இவையே. இது முதல் 2,000 பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வர்த்தகத்துடன் ஒப்பிடும் போது வெறுமனே 12-இல் ஒரு பங்கைத்தான் வருமானமாகப் பெறுகின்றனர். இந்த நிறுவனங்களின் நிலையான சொத்தில் வெறுமனே43-இல் ஒரு பங்கு மட்டுமே வருமானமாகப் பெறுகின்றனர். ஒரு டாலருக்கும் குறைவாக நாள் ஒன்றுக்கு பெறுவோர், உலகில் ஐந்தில் ஒரு பகுதி மக்கள் உள்ளனர். இவர்களின் வருமானத்தைக் குறைந்தபட்சம் ஒரு டாலர் என எடுத்தால், முதல் 2,000 பன்னாட்டு நிறுவனத்தின் மொத்த வர்த்தகத்துடன் ஒப்பிடும் போது 43 இல் ஒரு பங்கு தான் வருமானமாகப் பெறுகின்றனர். நிலையான சொத்துடன் ஒப்பிடும் போது 158-இல் ஒரு பங்கைத் தான் வருமானமாக பெறுகின்றனர்.

## கட்டியிருக்கும் கோவணத்தைக் கூட களவாடும் உலகமயம்

இவை எதைத்தான் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. கட்டியிருக்கும் கோவணத்துக் கூட ஆபத்து என்பதைத் தான். உலக மக்களை ஒன்று அல்லது இரண்டு டாலரை நாள் வருமானமாக பெறும் நிலையைக் கூட இல்லாதாக்கி, அவர்களை அடிமைப்படுத்தி அடக்கியாளும் கொள்கையையே உலகமயமாதல் தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலட்சியமாகக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் உலக மக்கள் தொகையில் அரைவாசி மக்களை, இந்த அடிமை நிலைக்குத் தரம் தாழ்த்தியதுடன், கையேந்தும் நிலையை உலகமயமாதல் உருவாக்கி விட்டது. மேலும் மக்களை அடிமைப்படுத்தி, மக்களை பண்ணையில் வளர்க்கப்படும் மிருகங்களாக மாற்றுவதை நோக்கி, உலகமயமாதல் தேசிய வளங்களையும் சூறையாடுவது இன்றைய ஜனநாயகமாகி இதுவே சுதந்திரமாகிவிட்டது.

இந்த சுதந்திரத்தின் வக்கிரத்தைத் துல்லியமாகப் பார்த்தால், மனித இனத்தின் அலங்கோலம் சந்திக்கு வந்து விடுகின்றது. 2002-இல் உள்நாட்டு மொத்த உற்பத்தியை (GDP) எடுத்தால், 32,31,214 கோடி (32.31 டிரில்லியன்) டாலர் பெறுமதியான உற்பத்தியை உலகம் செய்தது. ஆனால் உலகில் உள்ள 619.86 கோடி மக்களிடையே இது பகிரப்பட்ட விதம் என்ன என்று பார்த்தால், ஜனநாயகம் உருவாக்கும் சுதந்திரமான சமூக அவலத்தை புரிந்து கொள்ளமுடியும். உலகில் 84.41 சதவீதம் மக்கள் அதாவது 523.25 கோடி மக்களுக்கு இதில் கிடைத்தது. 6,25,915 கோடி (6.26 டிரில்லியன்) டாலர் மட்டுமே. அதாவது உலக உற்பத்தியில் 16 சதவீதமே கிடைத்துள்ளது. இதை மேலும் துல்லியமாக ஆராய்ந்தால் அடிமட்டத்தில் உள்ள 249.4 கோடி மக்களுக்கு கிடைத்தது 1,12,386 கோடி (1.1 டிரில்லியன்) டாலர் மட்டுமே. அதாவது உலகில் உள்ள 40.29 சதவீதமான மக்களுக்கு கிடைத்தது 3.48 சதவீதம் மட்டுமே. அதேநேரம் உலகில் 15.59 சதவீதமான உயர் வர்க்கங்கள், அதாவது 96.6 கோடி பேருக்கு கிடைத்தது 26,05,281 கோடி (26.05 டிரில்லியன்) டாலராகும். உலக உற்பத்தியில் 84.41 சதவீதத்தை இவர்கள் நுகர்ந்தனர். உண்மையில் இதுவே உலக ஜனநாயகத்தின் அடிப்படையான சமூகப் பிளவின் உள்ளடக்கமாகும். இந்த பிளவு மேலும் உள்நோக்கி அகலமாகிச் செல்லுகின்றது. இதுவே உலகமயமாதலின் சுதந்திரம். இதுவே உலக சமூக அமைப்பின் ஜனநாயகமாகவும் இருக்கின்றது.

ஒருபுறம் மூலதனங்கள் கொழுக்க, தேச எல்லைகளைக் கடந்து எடுத்துச் செல்வது அதிகரிக்கின்றது. இதன் மூலம் மக்கள் உழைப்பு ஆதாரங்களை இழப்பது உலகமயமாதலின் நிகழ்ச்சி நிரலாகி விட்டது. மனித வாழ்க்கை பந்தாடப்படுவது ஜனநாயகமாகி தலைவிரித்தாடுகின்றது. உலகம் சொத்துக் குவிப்பவர்களின் சொகுசு வாழ்வாகின்றது. அதுவே நவீனமாகி விட, சேவைத்துறை அப்பட்டமாகவே பணக்காரக் கும்பலுக்கு சேவை செய்யும் ஒரு துறையாகிவிட்டது. பணக்காரக் கும்பலுக்கு மக்கள் சேவை



செய்வதே, உலகமயமாதலின் அடிப்படையான சமூக விதியாகின்றது. இன்று மற்றவனுக்குச் சேவை செய்வதே, பணம் கறக்கும் வர்த்தகத் துறையாகி விடுகின்றது. மிகப் பெரிய உற்பத்தி மற்றும் சேவைத் துறையைச் சேர்ந்த முதல் 100 பன்னாட்டு நிறுவனங்களின் சொத்து மதிப்பு 1990-இல் 3,10,000 கோடி (3.1 டிரில்லியன்) டாலராக இருந்தது. இது 1995-இல் 3,70,000 கோடி (3.7 டிரில்லியன்) டாலராகியது. இதில் 1,30,000 கோடி (1.3 டிரில்லியன்) டாலர், சொந்த நாட்டுக்கு வெளியில் இருந்து சூறையாடப்பட்டது. தேச எல்லைகளைக் கடந்த சுரண்டல், சமூகத்தின் அனைத்து துறைகளிலும் கையாளப்படுகின்றது. இதன் முழுமை பிரமாண்டமான சமூக விரோதத் தன்மை கொண்டது.

இப்படி செயல்படும் உலகின் முன்னணி 2000 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வர்த்தகம் 2003-இல் 19,00,000 கோடி (19 டிரில்லியன்) டாலராக இருக்கின்றது. உலகளாவிய மொத்த உற்பத்தியில் இவர்களின் பங்கு 58.80 சதவீதமாக இருந்தது. மிகுதியே உலகில் மற்றவர்களின் கையில் இருந்தன. 1991-இல் 40,000-க்கு மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் உலகில் இருந்தன. உண்மையில் உலகளவில் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தை மிகப் பெரியளவில் பன்னாட்டு நிறுவனங்களே கட்டுப்படுத்தியுள்ளதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

உண்மையில் இந்தச் சூறையாடலை, இவைகளை தேசிய வருமானமாகவே காட்டப்படுகின்றது. இதன் மூலம் தேசிய நலன் பற்றி பீற்றி மக்களை ஏமாற்றுகின்றனர். உண்மையில் இவை ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களின் ஆட்சியாக உள்ளது. 1998-இல் தேசிய வருமானங்களை எடுத்தால் அமெரிக்கா 8,51,100 கோடி டாலரை பெற்றது. ஜப்பான் 3,78,300 கோடி டாலரையும். ஐரோப்பா 8,60,800 கோடி டாலரையும் பெற்றது. 1999-இல் அமெரிக்கா 9,29,900 கோடி டாலரையும், ஜப்பான் 4,35,800 கோடி டாலரையும், ஐரோப்பா 8,90,700 கோடி டாலரையும் பெற்றது. ஒரே வருடத்தில் தேசிய வருமான அதிகரிப்பு முறையே 78,800, 57,500, 29,900 கோடி டாலராக இருந்தது. இது உலகில் மற்றைய எந்தப் பிரதேசத்திலும் நிகழ்வதில்லை. உண்மையில் உலகளவில் வருமானம் எப்படி 2002-இல் பகிரப்பட்டது என்பதைப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | மக்கள் தொகை கோடியில் | உலகச்சனத் தொகையில் சதவீதத்தில் | வருமானம் கோடி டாலரில் | உலக வருமா -னத்தில் சதவீதம் | சராசரியாகப் பெறுவது டாலரில் |
|---|---|---|---|---|---|
| அதி குறைந்த வருமானமுடைய வறிய மக்கள் | 249.46 | 40.24 | 1,12,386 | 3.47 | 451 |
| குறைந்த வருமானமுடைய வறிய மக்கள் | 240.84 | 38.85 | 3,42,631 | 10.6 | 1,423 |
| குறைந்த வருமானமுடைய மேல்மட்ட பிரிவு | 32.94 | 5.31 | 1,70,882 | 5.28 | 5,188 |
| உயர்வருமானம் உடையோர் | 96.61 | 15.58 | 26,05,281 | 80.62 | 26,967 |
| மொத்தம் | 619.86 | 100 | 32,31,214 | 100 | 5,213 |

சமூகப் பிளவுகள் சமூகக் கட்டமைப்பில் உள்ள அதேநேரத்தில், ஒவ்வொரு சமூகப் பிரிவிலும் ஆழமான உள் பிளவுகள் உண்டு. பணக்காரப் பிரிவை எடுத்தால் உலகில் முதல் 497 பணக்காரர்களின் தனிப்பட்ட சொத்து 2002-இல் 1,60,000 கோடி டாலராகும். அதாவது பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்த 100 கோடி டாலருக்கும் அதிக சொத்துடைய 497 பேரின் மொத்தச் சொத்து, உயர் வருமானத்தைப் பெறும் 96.61 கோடிப் பேரின் மொத்த வருமானத்தில் 16-இல் ஒரு பங்கை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இப்படி, சமூகப் பிளவுகள் ஆழமானவை, அகலமானவை.

வருமானத்தினால் ஏற்படும் சமூகப் பிளவுகள் தொடர்ந்தும் தேசங் கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் வீக்கத்துடன் மேலும் ஆழமாகி, அகலமாகின்றது. மூலதனங்கள் வீங்கிக் கொழுப்பது என்பது, உலகமயமாதலின் அடிப்படையான ஒரு விதி. இந்தக் கொழுப்பு பெரும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையே ஏற்படும் முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகின்றது. 2002-யை எடுத்தால் அமெரிக்காவின் முதல் 500 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வர்த்தகம் 6,70,000 கோடி (6.7 டிரில்லியன்) டாலராகும். இது 2001-டன் ஒப்பிடும் போது ஐந்து சதவீதத்தால் குறைந்து இருந்தது. இந்தக் குறைவு ஏகாதிபத்திய முரண்பாடுகளால் இடமாற்றப்பட்டது. ஆனால் இந்நிறுவனங்களின் மொத்த நிகர லாபம் 43,100 கோடி (431 பில்லியன்) டாலராக



இருந்தது. இது உலகத் தொழிலாளி வர்க்கத்திடம் நேரடியாகக் கொள்ளை அடித்தவை. நிகர லாபம் 2001-உடன் ஒப்பிடும் போது 13.4 சதவீதத்தால் அதிகரித்து இருந்தது. வர்த்தகம் 2001-உடன் ஒப்பிடும் போது குறைந்து காணப்பட்டது. ஆனால் 2001-உடன் ஒப்பிடும் போது 5,775 கோடியாக நிகரலாபம் அதிகரித்தது என்றால், தொழிலாளி வர்க்கத்தின் வறுமையில் பெரும் செல்வந்தர்கள் செழித்ததைக் காட்டுகின்றது.

வேலை நீக்கத்தையும், கூலிக் குறைப்பையும், விலை அதிகரிப்பையும் அடிப்படையாகக் கொண்டே நிகர லாபத்தைப் பெற்றுக் கொண்டனர். இந்த அமெரிக்க நிறுவனங்களின் நிலையான சொத்தின் மதிப்பு 20,50,000 கோடி (20.5 டிரில்லியன்) டாலராக இருந்தது. இது 2001-உடன் ஒப்படும் போது 5.4 சதவீதத்தால் அதிகரித்தது. அதாவது உலகை சூறையாடி தேச வளங்களை அமெரிக்கா கைப்பற்றியதன் முலம், முதல் 500 தேசங் கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் நிலையான சொத்து 1,10,700 கோடி டாலரால் வீங்கியது. இந்த பன்னாட்டு நிறுவனங்களில் வேலை செய்தோர் எண்ணிக்கை 2.52 கோடி பேராவர். இது 2001-உடன் ஒப்பிடும் போது 2.3 சதவீதம் குறைவானதாகும். அதாவது 5.79 லட்சம் பேரை வேலையை விட்டு மூலதனம் துரத்தி இருந்தது. உலகமயமாதலில் நவீன தொழில் நுட்பம் ஆட்களை நீக்கும் அதே நேரம், லாபத்தை அதிகரிக்க வைக்கின்றது. நிலையான சொத்தையும் பெருக்குகின்றது. இந்தளவுக்கும் அமெரிக்கா ஏகாதிபத்தியத்துக்கு சர்வதேச வர்த்தக நெருக்கடிகள் இருந்த இக்காலத்திலேயே, இவையும் நடந்துள்ளன.

மற்றைய ஏகாதிபத்தியங்களுடன் ஒப்பிட்டு இதை ஆராயும் போது, 2002-இல் உலகின் அமெரிக்கா அல்லாத மற்றைய தேசங்கடந்த பன்னாட்டு முன்னணி முதல் 500 நிறுவனங்கள் நடத்திய வர்த்தகம் 9,10,000 (9.1 டிரில்லியன்) கோடி டாலராகும். இது 2001-யுடன் ஒப்பிடும் போது 3 சதவீதத்தால் அதிகரித்தது. அதாவது 27,300 கோடி டாலராக அதிகரித்தது. இக்காலத்தில் அமெரிக்காவின் மிகப் பெரிய 500 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் நடத்திய வர்த்தகம் 6,70,000 கோடி (6.7 டிரில்லியன்) டாலராகும். 2001-இல் அமெரிக்கா அல்லாத பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் 8,80,000 கோடி (8.8 டிரில்லியன்) டாலராக இருந்தது. இது 2000-உடன் ஒப்பிடும் போது 4 சதவீதத்தால் குறைந்தது. அமெரிக்காவின் முன்னணி 500 தேசங் கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் 2001-இல் 7,10,000 கோடி (7.1 டிரில்லியன்) டாலராகும். அமெரிக்காவுக்கு அதிகரிப்பை 2000-உடன் ஒப்பிடும் போது கொடுத்தது. 2000-ஆம் ஆண்டில் அமெரிக்கா அல்லாத 500 மிகப் பெரிய தேசங் கடந்த பன்னாட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறுவனங்களின் மொத்த வர்த்தகம் 9,20,000 கோடி (9.2 டிரில்லியன்) டாலராகும். அமெரிக்காவின் முதல் 500 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் 7,00,000 கோடி (7.0 டிரில்லியன்) டாலராகும்.

| | 2000-இல் கோடி டாலரில் மொத்த வர்த்தகம் | 2000-2001 கோடி டாலரில் இழப்பு அல்லது அதிகரிப்பு | 2001 கோடி டாலரில் மொத்த வர்த்தகம் | 2001-2002 கோடி டாலரில் இழப்பு அல்லது அதிகரிப்பு | 2002 கோடி டாலரில் மொத்த வர்த்தகம் |
|---|---|---|---|---|---|
| முன்னணி 500 அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் | 7,00,000 | + 10,000 | 7,10,000 | - 40,000 | 6,70,000 |
| அமெரிக்கா அல்லாத முன்னணி 500 பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகம் | 9,20,000 | - 40,000 | 8,80,000 | + 30,000 | 9,10,000 |

அமெரிக்கா மற்றும் மற்றைய ஏகாதிபத்தியங்களின் தனித்தனியான முன்னணி 500 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வர்த்தகம் 2000-இல் 16,20,000 கோடி (16.2 டிரில்லியன்) டாலராகும். இது 2001-இல் 15,90,000 கோடி (15.9 டிரில்லியன்) டாலராகவும், 2002-இல் 15,80,000 கோடி (15.8 டிரில்லியன்) டாலராகவும் இருந்தது. 2002 நூற்றாண்டு கொண்டாட்டங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட சந்தை நெருக்கடிகள், பொருட்களை வாங்கும் திறனில் ஏற்பட்ட இழப்பு சர்வதேச மொத்த வர்த்தகத்தில் நெருக்கடியை உருவாக்கியது. 2000-2001-இல் இழப்பு 30,000 கோடி டாலர். இது போன்று 2001-2002 இழப்பு 10,000 கோடி டாலர். இந்த நெருக்கடியான காலத்தில், மொத்த வர்த்தகத்தில் இழப்புகளை சந்தித்த போதும், தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் இலாப வீதங்கள் அதிகரித்ததுடன், நிலையான சொத்துக்களின் பெறுமதியும் அதிகரித்தது என்ற உண்மை எதை நமக்கு உணர்த்தி நிற்கின்றது. அடிப்படையில் பலர் வேலையை இழந்ததன் மூலமும் கூலி குறைப்புக்குள்ளானதை பறைசாற்றி நிற்கின்றது. இக்காலத்தில் தான் தனிப்பட்ட செல்வந்தர்களின்



சொத்துக்கள் பெருகி வீங்கியதை நாம் மேலே விரிவாக பார்த்தோம். உலகளவில் நிலையான சொத்துக்களை மக்கள் இழந்ததை எடுத்துக் காட்டுகின்றது. இது சர்வதேச வர்த்தகத்தில் வாங்கும் திறனை நேரடியாக வீழ்ச்சியுறவைத்தது. அதேநேரம் நிலையான சொத்துக்களின் பெறுமானம் அதிகரித்தது. வாங்கும் திறனை மக்கள் இழக்கும் போது, மக்கள் தமது அடிப்படையான வாழ்வியல் சொத்துக்களை விற்று வாழ நிர்பந்திக்கப்பட்டதன் மூலம், பன்னாட்டு நிறுவனங்களின் சொத்துக்கள் வீங்கியது. மூலதனத்தின் கொழுப்பை ஏற்படுத்தும் வகையில் மக்களின் சேமிப்புகள் மீதான வட்டி வீதங்களை உலகளவில் குறைத்தனர். இது பன்னாட்டு நிறுவனங்களுக்கு திடீரெனத் திட்டமிட்ட அதிர்ஷ்ட தேவதையாக வானில் இருந்தே செல்வம் கீழ் இறங்கி மக்களுக்கு எதிராக சதிராட்டம் போட உதவியது.

ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் சர்வதேச சந்தையில் ஏற்படும் வர்த்தக முரண்பாடுகள், வர்த்தகத்தில் ஏற்ற இறக்கத்தை ஏற்படுத்தியது. இதை ஈடுகட்ட மக்களைச் சூறையாடுவதன் மூலமே, ஏகாதிபத்திய முரண்பாடுகளைத் தற்காலிகமாக மூடி மறைக்க முடிகின்றது. ஆனால் உலகைச் சூறையாடிக் கொள்ளையடிக்கும் போது, முன்னணி பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையில் கடுமையான முரண்பாடுகள் ஏற்படுவதையும், அவை அங்கும் இங்குமாக பந்தாடப் படுவதையும் மூடிமறைக்க முடிவதில்லை. 2002-இல் உலகத்தில் மிகப் பெரிய உள்நாட்டு வீட்டு உற்பத்தியில் (GDP) அமெரிக்காவின் பங்கு 10,38,310 கோடி (10.38 டிரில்லியன்) டாலராக இருந்தது. இது உலக உற்பத்தியில் 31.13 சதவீதமாக இருந்தது. அமெரிக்கா, உலக உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் மிகப்பெரிய ஒரு ஏகாதிபத்தியமாக இருப்பதையும், அதை தக்கவைக்க போராடுவதையும் தொடர்ச்சியான உலக நெருக்கடிகள் காட்டுகின்றன. அமெரிக்க மேலாதிக்கத்தின் மறுபெயர் தான் உலகமயமாதல் என அமெரிக்காவின் முன்னாள் அரசு செயலர் 'கிஸ்ஸிங்கர்' கூறியது உண்மை என்பதையே, இது பளிச்சென்று எடுத்துக் காட்டுகின்றது. இராணுவ ரீதியாக இதைப் பாதுகாக்கவும், உலகை மேலும் ஆழமாக ஊடுருவிக் கைப்பற்ற தொடர்ச்சியாக முனைகின்றது. இதையே அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை ஆலோசகர் ரிச்சாட் ஹால் அழகாகவே கூறிவிடுகின்றார். மூன்றாம் உலக நாடுகளின் இறையாண்மை வரம்புக்கு உட்பட்டது. ஒரு நாடு தீவிரவாதத்துக்கு ஆதரவு தருவதாக, அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராகச் செயல்படுவதாக நாங்கள் கருதினால், அந்த நாடுகளில் தலையிட எங்களுக்கு உரிமை இருக்கிறது என்று உலகமயமாதலின் அடிப்படை நோக்கத்தை பிரகடனமே செய்து விடுகின்றார். இங்கு அமெரிக்காவின் பொருளாதார நலன்களே முதன்மையாக உள்ளது. இதுவே உலகின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் பூத்துக் குலுங்குகின்றது. இதனடிப்படையில் 20-ஆம் நூற்றாண்டு முழுக்க ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு நாட்டில் அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் நேரடியாகவே அமெரிக்கா தலையிட்டது. இவைகளை நாம் பின்னால் விரிவாக மற்றொரு நூலில் ஆராய இருக்கின்றோம்.

## ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல் என்பது எப்போதும் எஞ்சியுள்ள சுயபொருளாதாரத்தையும் சுயஉழைப்பையும் அழித்தலே.

உலகமயமாதல் என்பது உலக மூலதனம் நடத்தும் வர்த்தகம் மற்றும் சுரண்டலின் தங்கு தடையற்ற கொள்ளையை அடிப்படையாகக் கொண்டது. தங்கு தடையற்ற வர்த்தகத்தையும், சுரண்டலையும் பாதுகாப்பதே உலகமயமாதலின் அடிப்படைக் கொள்கையாகும். மூலதனம் சுரண்டிக் கொழுக்கும் தனது உற்பத்தி மற்றும் வர்த்தக விரிவாக்கத்தை சுதந்திரமாகவும், ஜனநாயகப்பூர்வமாகவும் செயலாற்றும் வகையில், உலகளாவிய நாட்டு எல்லைகளையே தகர்ப்பதே உலகமயமாதலாகும். இதுவே தனிப்பட்ட பணக்காரக் கும்பலையும், மூலதனத்தில் அராஜகத்தையும், ஏகாதிபத்தியத்தின் அதிகாரத்தையும், தங்குதடையற்ற வகையில் உலகில் நிலைநிறுத்துகின்றது.

மூலதனம் கட்டமைக்கும் அராஜகம் பரந்துபட்ட மக்களின் வாழ்வியலை இல்லாதொழிக்கின்றது. உலகின் செல்வங்களை எல்லாம் பன்னாட்டு மூலதனம் தனது தனிப்பட்ட சொத்தாக்குகின்ற நிலையில், அவர்களே உலக வர்த்தகத்திலும், உற்பத்தியிலும் பெரும் பகுதியைக் கைப்பற்றியுள்ளனர். இந்த நிலையில் உழைக்கும் மக்கள் உழைப்பைப் பயன்படுத்தும் இயற்கை ஆதாரங்களையே முற்றாக இழந்து வருகின்றனர். அதாவது உண்மையில் என்ன நடக்கின்றது. மிகப்பெரிய நிறுவனங்கள் உலக உற்பத்தியையும் வர்த்தகத்தையும் தனதாக்கி வருகின்றன. உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் இருந்து அன்னியமாகும் மக்கள் கூட்டம் படிப்படியாக உலகெங்கும் பெருகி வருகின்றனர். மக்கள் சுயமாக உழைத்து வாழ்ந்த உற்பத்தித் தளங்கள், உலகெங்கும் நாள்தோறும் அழிக்கப்படுகின்றன. சுய உற்பத்தியும், அது சார்ந்த வாழ்வியல் முதல் அறிவியல் வரை அனைத்தும் பலாத்காரமாகப் புணரப்பட்டு அழிக்கப்படுகின்றது. இதன் மூலம் சுயசிந்தனை முதல் சுதந்திரமான உணர்வுகள் வரை அனைத்தும் மலடாக்கப்படுகின்றன.

இதைப் புரிந்து கொள்ள சில புள்ளிவிபரங்களை மேலும் எடுத்துப் பார்ப்போம். 1996-இல் உலக சனத்தொகையில் அரைவாசிப்



பேரின் வருமானத்துக்கு சமனாக, உலகின் மிகப் பெரிய 17 பன்னாட்டு நிறுவனங்களின் வியாபாரம் இருந்தது. ஆனால் இந்த நிறுவனங்கள் 42.5 லட்சம் தொழிலாளர்களுக்கே வேலை வழங்கினர். இந்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை, உலகத் தொழிலாளர்களில் வெறும் 0.006 சதவீதம் மட்டுமேயாகும். மறுபக்கத்தில் 200 மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் உலகளாவிய பொருளாதார செயற்பாட்டில் 25 சதவீதத்தைக் கட்டுப்படுத்தின. ஆனால் அதை உற்பத்தி செய்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 1.88 கோடி பேராவர். இது மொத்தமான 250 கோடி தொழிலாளர் படையில் 0.75 சதவீதம் மட்டுமேயாகும். ஐ.நா அறிக்கை ஒன்றின் படி தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் உலகில் ஒரு சதவீதம் பேருக்கே வேலை வாய்ப்பை வழங்குகின்றன. 2003-இல் 58.84 சதவீத உற்பத்தியை 2000 பன்னாட்டு நிறுவனங்கள் கட்டுப்படுத்தின. ஆனால் இவர்கள் 6.4 கோடிப் பேருக்கே வேலை வாய்ப்பை வழங்கினர். இதுவே 100 சதவீதமாக மாறும் போது, அதிகபட்சம் 10.87 கோடி மக்கள் உலகில் வேலை செய்தால் போதுமானது. மற்றவர்கள் உலகத்தில் தேவையற்ற உயிரியல் தொகுதியாகவே, உலகமயமாதல் கருதும். இதில் எந்தச் சந்தேகமும் மூலதனத்தைப் புரிந்து கொண்டவர்களுக்குத் தேவையற்றது.

100 சதவீத உற்பத்தியை தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் கைப்பற்றும் போது, இன்றைய நிலவரத்தின் படி எட்டு மணி நேர வேலைப்படி 86.96 கோடி மணித்துளிகள் இன்றைய உற்பத்திக்குப் போதுமானது. இதை, உற்பத்தியை, மனிதத் தேவையின் அடிப்படையில் பகிரப்படின், அதற்காகவே மனிதன் உழைக்கும் பட்சத்தில், மிகக் குறைவான நேரமே போதுமானது. இன்றைய உற்பத்தியின் அடிப்படையிலும் கூட ஒரு மனிதனின் உழைப்பின் அளவு மிகக் குறைவான அளவே போதுமானது. உண்மையில் பார்த்தால் உழைக்கும் ஆற்றல் உள்ள, உலகில் வாழும், ஒவ்வொரு மனிதனும், சராசரியாக 20 நிமிடங்கள் உழைத்தாலே போதுமானது. ஆனால் இன்று வேலை நேரம் அதிகரிக்கப்படுகின்றது. உழைப்பின் திறன் நவீன இயந்திரங்கள் மூலம் உயர்த்தப்பட்டு மனிதவலு பிழியப்பட்டு கறக்கப்படுகின்றது. மனித ஓய்வை மறுக்கும் வகையில், ஓய்வூதிய வயது அதிகரிக்கப்படுகின்றது. உழைப்பினால் முன்கூட்டியே உழைப்பாளி கொடுத்த ஓய்வூதியப் பணத்தைக் கொள்ளையடிப்பவர்கள், உழைப்பாளியின் முதுமையிலும் உழைத்து வாழவும் கோரப்படுகின்றனர். மனித வாழ்வுக்கு அவசியமானதும், உழைக்கும் வர்க்கம் உழைத்துக் கொடுக்கும் செல்வம் சார்ந்த சமூக நலத் திட்டங்கள் வெட்டப்படுகின்றன. சமூக நலத்திட்ட நிதிகள், சமூக விரோத மூலதனத்தால் உறிஞ்சப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலதனம் உருவாக்கிய அரசு என்ற நிறுவனம், இவற்றைச் செய்து முடிக்கும் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்ட இன்றைய சமூக அமைப்பே புணரப்பட்டு, உலகமயமாதலாகியுள்ளது. மக்களின் வாழ்வை அழித்தொழிக்க, அரசுகள் மூலதனத்துக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்குகின்றன. உதாரணமாக அமெரிக்கா அடுத்த 10 வருடங்களுக்கு 15,000 கோடி டாலரை அமெரிக்க நிறுவனங்களுக்கு வரிச்சலுகையாக வழங்கியுள்ளது.

இப்படிச் செல்வம் குவியும் போது, உற்பத்தி குவிகின்றது. இதன் மூலம் உழைப்பவர் எண்ணிக்கை தொடர்ச்சியாகக் குறைக்கப்படுகின்றது. உழைப்பவர்களின் உழைப்பின் சுமை அதிகரிக்க வைக்கப்படுகின்றது. மறுபக்கத்தில் தொழில்நுட்பம் உழைப்பவனின் உழைப்பைச் சுரண்டுவதில் மிகவும் நுட்பமாக மாறுவதுடன், மனிதனின் முழு உறுப்பையும் பயன்படுத்தி சுரண்டும் திறனையும் அதிகரிக்க வைக்கின்றது. இதன் மூலம் சூறையாடல் மேலும் அதிகமாகின்றது. பரந்துபட்ட மக்கள் வாழ்வை உழைப்பில் இருந்து அன்னியமாக்கும் இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள், உலகமயமாதல் ஊடாக எதைத்தான் மக்களுக்குத் தந்துவிடுவார்கள்.

உண்மையில் உற்பத்திக்கான ஆதாரமான இயற்கை மற்றும் சமூக உடைமைகள் பரந்துபட்ட மக்களுக்குப் படிப்படியாக மறுக்கப்படுகின்றன. மனித உழைப்பு மதிப்பிறக்கப்படுகின்றது. மனிதன் என்பவன் தேவையற்ற உயிரியல் தொகுதியாகக் கருதும், மூலதனச் சித்தாந்தம் கட்டமைக்கப்படுகின்றது. எங்கும் எதிலும் அராஜகம் கட்டமைக்கப்படுகின்றது. எல்லாவற்றையும் சமூகத்திடம் இருந்து கைப்பற்றும் அதிகாரமே சுதந்திரமாகவும், ஜனநாயகமாகவும் வக்கரித்து விடுகின்றது.

இந்த சுதந்திரமான அராஜகப் போக்கு எப்படி வீங்கி வெம்புகின்றது எனப் பார்ப்போம். 1993-இல் 300 பன்னாட்டு நிறுவனங்கள் உலகின் உற்பத்திக்கான உடைமையில் 25 சதவீதத்தை சொந்தமானதாகக் கொண்டிருந்தன. உலகில் மிகப் பெரிய 50 வங்கிகள் உலகளவில் 60 சதவீதமான நிதியைக் கட்டுப்படுத்தின. அதன் மொத்தப் பெறுமானம் 20,00,000 கோடி (20 டிரில்லியன்) டாலராக இருந்தது. சமூகத்துக்கு எதிரான சமூக விரோதக் கட்டமைப்புக்களை மிகவேகமாக நிறுவிவிடும் வழியில் உலகமயமாதல் முன்னேறிப் பயணிக்கின்றது. இயற்கையை மனிதனுக்கு மறுப்பதன் மூலம், உற்பத்திக்கான மூலப்பொருள்,



உற்பத்திக்கான உடமைகள், நிதி மூலதனம் அனைத்தையும் விரல்விட்டு எண்ணக் கூடிய சில நிறுவனங்களும், வங்கிகளும் கட்டுப்படுத்துகின்றன. இதை முழுமையாகக் கட்டுப்படுத்த உலகமயமாதல் ஊடாக முயலுகின்றன. இந்த நிலைமையின் சிறப்பான எடுப்பான வடிவம் தான் உலகமயமாதலாகும். ஏகாதிபத்திய சகாப்தத்தின் உயர்ந்த வளர்ச்சி கட்டத்தில் ஏற்பட்ட ஒரு வடிவம் தான், இந்த உலகமயமாதாலாகும். சொத்துக்கள் குவியும் வடிவம் எந்தளவுக்கு இழிவான சமூகப் பாத்திரத்தை வகிக்கின்றதோ, அந்தளவுக்கு மக்களின் வாழ்வு மேலும் ஆழமாகவே கற்பழிக்கப் படுகின்றது.

## மனித வாழ்வைச் சூறையாடும் ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களின் கொழுப்பு

மக்களின் வாழ்வைச் சூறையாடும் தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் உலகில் எப்படி பெருக்கெடுத்து எப்படிக் கொழுக்கின்றது என்பதை சில நாடுகள் ரீதியாக விரிவாகவும் குறிப்பாகவும் ஆராய்வோம்.

உலகில் அமெரிக்கா அல்லாத மிகப் பெரிய 500 நிறுவனங்களில், மிகப் பெரிய ஆஸ்திரேலிய நிறுவனங்களின் சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய ஆஸ்திரேலிய நிறுவனம் | 1,520 | 1,778 | 1,607 | 1,833 | 1,641 | 1,646 | 1,440 |
| மிகப்பெரிய 5 ஆஸ்திரேலியப் பன்னாட்டு நிறுவனங்கள் | 6,660 | 6,910 | 7,250 | 7,065 | 7,035 | 6,735 | 6,036 |
| மிகப்பெரிய 10 ஆஸ்திரேலியப் பன்னாட்டு நிறுவனங்கள் | 10,650 | 11,310 | 11,755 | 11,415 | 11,490 | 10,585 | 9,697 |

உலகில் அமெரிக்கா அல்லாத மிகப் பெரிய 500 நிறுவனங்களில், மிகப் பெரிய கனடா நிறுவனங்களின் சொத்துக்கள் கோடி டாலரில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய கனடா நிறுவனம் | 1,750 | 1,751 | 3,029 | 2,221 | 1,355 | 1,228 | 2,065 |
| மிகப்பெரிய 5 கனடா பன்னாட்டு நிறுவனங்கள் | 7,660 | 7,905 | 9,300 | 7,440 | 6,135 | 7,140 | 6,440 |
| மிகப்பெரிய 10 கனடா பன்னாட்டு நிறுவனங்கள் | 13,840 | 14,650 | 15,855 | 12,725 | 16,265 | 11,820 | 10,605 |

உலகில் அமெரிக்கா அல்லாத மிகப் பெரிய 500 நிறுவனங்களில், மிகப் பெரிய பிரான்ஸ் நிறுவனங்களின் சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய பிரான்ஸ் நிறுவனம் | 9,650 | 9,424 | 10,554 | 8,306 | 7,872 | 7,690 | 6,048 |
| மிகப்பெரிய 5 பிரான்ஸ் பன்னாட்டு நிறுவனம் | 32,505 | 32,760 | 35,585 | 27,720 | 22,875 | 22,140 | 21,625 |
| மிகப்பெரிய 10 பிரான்ஸ் பன்னாட்டு நிறுவனங்கள் | 52,647 | 52,285 | 52,320 | 43,805 | 38,215 | 37,190 | 36,890 |
| மிகப்பெரிய 25 பிரான்ஸ் பன்னாட்டு நிறுவனங்கள் | 82,731 | 81,450 | 80,100 | 67,890 | 65,890 | 64,265 | 62,085 |

1995-இல் பிரான்சில் 3497 இயந்திர தொழில்துறை உற்பத்தியில் 2.3 கோடி ஈரோ அதிகமான (12 கோடி பராங்) முதலீட்டை தாண்டியிருந்தது. இதில் 12.25 கோடி ஈரோவை (100 கோடி பராங்) தாண்டிய முதலீட்டைக் கொண்ட 756 நிறுவனங்கள் இருந்தன. 2000-இல் 20 பேருக்கும் குறைந்த வேலை செய்யும் உற்பத்தித்துறை



மொத்த தொழில் துறையில் 97 சதவீதமாக இருந்தது. இதில் 58 லட்சம் பேர் வேலை செய்தனர். இது பிரான்சின் மொத்த தொழில் செய்வோரில் 37 சதவீதமாகும். இதில் சம்பளம் பெறுவோர் 40 லட்சம் மட்டுமே. மிகுதிப் பேர் தனிப்பட்ட சிறிய முதலாளிமாராவர். அதாவது 18 லட்சம் பேர் அப்படி உள்ளனர். சிறு உற்பத்தித்துறை கட்டும் வரி 16,800 கோடி ஈரோவாகும். அதாவது மொத்த வரியில் 28 சதவீதமாகும் இவர்கள் தமது உற்பத்தியில் 4,800 கோடி ஈரோவுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இது மொத்த ஏற்றுமதியில் 9 சதவீதமாகும் இவர்களின் வருடாந்தர முதலீடு 2,600 கோடி ஈரோவாகும். இது மொத்த முதலீட்டில் 20 சதவீதமாகும். 20 உழைப்பாளிகளுக்கு குறைந்த நிறுவனங்கள் படிப்படியாக அழிந்து வருகின்றன. பெருமளவில் சிறு கடைகளே எஞ்சிக் கிடக்கின்றன. பெரும் தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் தான் கொழுத்து வருகின்றது. இது ஒவ்வொரு ஏகாதிபத்தியத்தினுள்ளும் நடக்கும் அன்றாட நிகழ்வாகிவிட்டது. இன்று தனிப்பட்ட உற்பத்தி முறையை அடிப்படையாக கொண்ட செயல்பாடுகள், பிரான்சில் மொத்தமாக 24 லட்சமாக உள்ளது. இது பிரிட்டனில் 34 லட்சமாகும். ஸ்பெயினில் 35 லட்சமாக உள்ளது. இவை படிப்படியாக குறைந்து வருகின்றன.

உலகில் அமெரிக்கா அல்லாத மிகப் பெரிய 500 நிறுவனங்களில், மிகப் பெரிய ஜெர்மானிய நிறுவனங்களின் சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய ஜெர்மனியப் பன்னாட்டு நிறுவனம் | 14,078 | 13,680 | 14,960 | 15,163 | 7,630 | 7,155 | 7,070 |
| மிகப்பெரிய 5 ஜெர்மனியப் பன்னாட்டு நிறுவனங்கள் | 45,668 | 44,915 | 44,295 | 42,230 | 30,575 | 29,985 | 29,860 |
| மிகப்பெரிய 10 ஜெர்மனியப் பன்னாட்டு நிறுவனங்கள் | 67,710 | 67,545 | 66,570 | 62,270 | 49,725 | 48,525 | 49,035 |
| மிகப்பெரிய 25 ஜெர்மனியப் பன்னாட்டு நிறுவனங்கள் | 1,00,560 | 1,01,565 | 1,00,340 | 93,090 | 83,045 | 79,670 | 82,650 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகில் அமெரிக்கா அல்லாத மிகப் பெரிய 500 நிறுவனங்களில், மிகப் பெரிய இத்தாலிய நிறுவனங்களின் சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய இத்தாலியப் பன்னாட்டு நிறுவனம் | 5216 | 5152 | 5307 | 4393 | 5105 | 5260 | 5049 |
| மிகப்பெரிய 5 இத்தாலியப் பன்னாட்டு நிறுவனங்கள் | 20410 | 19805 | 19880 | 17895 | 15765 | 15405 | 15385 |
| மிகப்பெரிய 10 இத்தாலியப் பன்னாட்டு நிறுவனங்கள் | 25510 | 26735 | 26855 | 23175 | 21215 | 20330 | 21110 |

உலகில் அமெரிக்கா அல்லாத மிகப் பெரிய 500 நிறுவனங்களில், மிகப் பெரிய ஜப்பானிய நிறுவனங்களின் சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய ஜப்பான் பன்னாட்டு நிறுவனம் | 13,162 | 12,075 | 10,980 | 12,370 | 10,919 | 14,275 | 14,495 |
| மிகப்பெரிய 5 ஜப்பான் பன்னாட்டு நிறுவனங்கள் | 52,475 | 51,210 | 57,925 | 58,095 | 51,780 | 61,205 | 66,400 |
| மிகப்பெரிய 10 ஜப்பான் பன்னாட்டு நிறுவனங்கள் | 86,630 | 84,420 | 96,770 | 98,600 | 87,240 | 99,910 | 1,07,175 |
| மிகப்பெரிய 25 ஜப்பான் பன்னாட்டு நிறுவனங்கள் | 1,29,090 | 1,38,640 | 1,61,630 | 1,60,115 | 1,40,440 | 1,53,905 | 1,69,620 |



உலகில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துக்கு நிகராகவே, ஜப்பான் மிகப் பெரிய அளவில் பன்னாட்டு நிறுவனம் சார்ந்த ஒரு வர்த்தகத்தைக் கொண்டுள்ளது. 1999-இல் ஆசியாவில், அதாவது ஜப்பான் தொடக்கம் ஆஸ்திரேலியா வரையில் காணப்படும் மிகப் பெரிய 1000 நிறுவனங்களில் 696 ஜப்பானுக்குச் சொந்தமானதாக இருந்தது. 70 நிறுவனங்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமானது. தென்கொரியாவுக்கு 59-ம், தாய்வானுக்கு 37-ம், சிங்கப்பூருக்கு 34-ம், ஹாங்காங் 18-ம், சீனா 25-ம், இந்தியா 20-யையும் கொண்டு இருந்தது. ஒட்டு மொத்தமாக 1,000 நிறுவனங்களின் மொத்த வர்த்தகம் 5,40,920 கோடி டாலராகும். இதன் நிகர லாபம் 9,070 கோடி டாலராக இருந்தது. நிலையான சொத்தின் பெறுமதி 6,26,840 கோடி டாலராக இருந்தது. இங்கு மொத்தமான தொழில் செய்வோர் எண்ணிக்கை 1.46 கோடியாக இருந்தது. இவற்றில் விரல்விட்டு எண்ணக் கூடிய முன்னணி நிறுவனங்கள் மிகப் பிரமாண்டமானவை. உதாரணமாக ஜப்பானின் மிகப் பெரிய 25 நிறுவனங்களின் சொத்துக்கள் 1,29,090 கோடி டாலராகும். ஆஸ்திரேலியாவின் முதல் 10 நிறுவனங்களின் சொத்துக்களின் பெறுமானம் 10,650 கோடி டாலராகும்.

ஆசியா போல் ஆப்பிரிக்காவை எடுக்கும் போது, 1999-இல் முதல் 500 நிறுவனங்களின் மூலதனத்தின் மொத்தப் பெறுமானம் 22,500 கோடி டாலராக இருந்தது. இது ஏகாதிபத்திய நாடுகளில் மிகப் பெரிய நிறுவனங்களின் சொத்தை விடவே குறைவானது. 2001-இல் ஆபரிக்காவில் உள்ள மிகப் பெரிய 500 நிறுவனங்களினது மூலதனம் 26,030 கோடி டாலராகும். முதல் 100 நிறுவனத்தின் மூலதனம் 19,000 கோடி டாலராகும். இது 2000-இல் 17,800 கோடி டாலராக இருந்தது. முதல் 10 நிறுவனத்தின் சொத்துக்கள் 7,360 கோடி டாலராகும். இது 2000-இல் 6800 கோடி டாலராக இருந்தது. எங்கும் மூலதனத்தின் குவிப்பு ஒரு அலையாகவே உள்ளது.

ஆப்பிரிக்காவின் முதல் 500 நிறுவனங்களை எடுத்தால், அவை பெருமளவில் வெள்ளையின அதிகாரத்தை நீண்ட காலம் கொண்டிருந்த தென்ஆப்பிரிக்காவிலேயே குவிந்து கிடக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| நாடுகள் | முதல் பெரிய 500 நிறுவனத்தில் - சதவீதம் | கோடி டாலரில் |
|---|---|---|
| தென்ஆப்பிரிக்கா | 66.83 | 17300 |
| அல்ஜீரியா | 10.43 | 2710 |
| மொறோக் | 7.74 | 2010 |
| எகிப்து | 2.83 | 730 |
| துனிசியா | 2.34 | 600 |
| நைஜீரியா | 1.72 | 440 |
| மற்றையவை | 8.11 | 2100 |

ஆப்பிரிக்காவில் உள்ள மிகப்பெரிய உற்பத்தி நிறுவனங்களை பெருமளவில் ஏகாதிபத்திய நாட்டு குடியுரிமை கொண்டவர்களுக்கு சொந்தமாகவும், காலனித்துவ வெள்ளை இனத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினரும் தமது கையில் குவித்து வைத்து இருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. உலகில் உற்பத்திகள், சொத்துக்கள் பெருமளவில் வெள்ளையின பிரதேசங்களிலும், காலனித்துவ வெள்ளையினப் பரம்பரையினரிடமும் குவிந்து கிடக்கின்றன. காலனிகளின் சுதந்திரம் என்ற பெயரில், சொத்துடைமை பாதுகாக்கப்பட்டு வழங்கப்பட்ட அதிகார மாற்றம் பொருளாதாரத் துறையில் மக்களைச் சூறையாடுவதை உறுதி செய்தே வழங்கப்பட்டது. அதன் கொழுப்பே முன்னைய வெள்ளையின காலனிகளில் வெள்ளையரிடமும், வெள்ளையரிடம் நக்கிப் பிழைத்த உள்ளூர்க் கும்பலிடமும் குவிந்து கிடக்கின்றது.

உலகில் அமெரிக்கா அல்லாத மிகப் பெரிய 500 நிறுவனங்களில், மிகப் பெரிய பிரிட்டிஷ் நிறுவனங்களின் சொத்துக்கள் கோடி டாலரில்

| | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய பிரிட்டிஷ் நிறுவனம் | 17,943 | 17,421 | 14,914 | 10,536 | 9,370 | 12,810 | 12,818 |
| மிகப்பெரிய 5 பிரிட்டிஷ் பன்னாட்டு நிறுவனங்கள் | 49,895 | 43,390 | 45,280 | 33,565 | 28,875 | 32,395 | 30,550 |



| | 2003 | 2002 | 2001 | 2000 | 1999 | 1998 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|
| மிகப்பெரிய 10 பிரிட்டிஷ் பன்னாட்டு நிறுவனங்கள் | 68,650 | 59,825 | 61,985 | 51,275 | 44,880 | 67,815 | 41,455 |
| மிகப்பெரிய 25 பிரிட்டிஷ் பன்னாட்டு நிறுவனங்கள் | 98,000 | 90,625 | 91,130 | 73,700 | 72,205 | 91,900 | 63,670 |

இப்படி அமெரிக்கா அல்லாத நிறுவனங்களின் சொத்துக்கள் குவிந்து வருகின்றது. அமெரிக்கா பற்றிய முழுத் தகவலையும் பெற முடியவில்லை. அமெரிக்காவில் மிகப் பெரிய தொழில் நிறுவனங்கள் 1960-இல் 13 தொழில் பிரிவுகளில் மட்டும் செயற்பட்டன. ஆனால் 1980-இல் 22 தொழில்களில் ஈடுபட்டன. 1976-இல் 17,500 கோடி இந்திய ரூபாவுக்கு மேல் வர்த்தகம் செய்த 12 மிகப் பெரிய அமெரிக்க நிறுவனங்கள், அமெரிக்காவின் மிகப் பெரிய 500 தொழில் நிறுவனங்களின் மதிப்பில் 27 சதவீதத்தையும், வர்த்தகத்தில் 29 சதவீதத்தையும் கட்டுப்படுத்தின. 50 மிகப் பெரிய வங்கிகளின் சொத்து மற்றும் வைப்புத் தொகையில் 61 சதவீதத்தை 10 வங்கிகளே கட்டுப்படுத்தின. இதுவே 1985-இல் அமெரிக்காவில் இருந்த 500 பெரும் ஏக போக நிறுவனங்கள் அங்கிருந்த ஆலைத் தொழிலாளர்களில் மூன்றில் இரண்டு பங்கையும், ஆலைச்சொத்து மற்றும் லாபத்தில் முக்கால்வாசிப் பங்கையும் கட்டுப்படுத்தின. ஆனால் இந்த 500 ஏகபோக நிறுவனங்கள் அமெரிக்கா தொழில் கழகங்களில் 0.2 மட்டுமே. இந்த 500 உற்பத்தியில் 50 சதவீதத்தைக் கட்டுப்படுத்தின.

பிரதான ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் கடும் முரண்பாட்டுக்கு இடையில், எப்படி மூலதனக் குவிப்பு நடைபெறுகின்றது என்பதையே இவை எடுத்துக் காட்டுகின்றது. அமெரிக்கா மற்றும் அமெரிக்கா அல்லாத ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் உள்ள மூலதனத்துக்கு இடையேயான முரண்பாடுகள், தவிர்க்க முடியாமல் தேசங்கடந்த சந்தைப் போட்டியைக் கூர்மையாக்கி வருகின்றது. மேலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் மற்றைய ஏகாதிபத்தியங்களுக்கும் இடையேயும் முரண்பாடுகள் கூர்மை அடைந்து சந்தையைக் கைப்பற்றுவதில் கடும் போட்டி நிகழ்கின்றது. இதனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னணி நிறுவனங்களின் வர்த்தகம் மற்றும் மூலதனத்தின் இருப்பு அங்கும் இங்குமாக அலைபாய்கின்றது.

ஏகாதிபத்திய முரண்பாடுகளை இராணுவ ரீதியாக அணுகுவதைத் தவிர்க்கவே, உலகை மேலும் உலகமயமாதலூடாகக் கடுமையாகச் சூறையாடுகின்றனர். இதன் மூலம் தமக்கிடையேயான மூலதனப் போட்டியைத் தணிக்க விரும்புகின்றனர். அதாவது உலகின் சிறு உற்பத்திகளையும், தேசிய உற்பத்திகளையும் கைப்பற்றி அழிப்பதன் மூலம், தமது சொந்த மூலதனத்தின் ஏகபோகத்தைத் தக்கவைத்து அதை உலகமயமாக்கவே விரும்புகின்றனர். இதன்மூலம் ஏகபோக மூலதனத்துக்கு இடையிலான ஏகாதிபத்தியப் போட்டியைப் பின்தள்ள வைப்பதன் மூலம், ஏகாதிபத்தியத்திற்கு இடையேயான முரண்பாட்டைத் தவிர்க்க முனைகின்றனர். ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான மூலதனப் போட்டியைத் தவிர்க்கும் மற்றொரு வழியாக, மிகப்பெரிய பன்னாட்டு தேசங்கடந்த நிறுவனங்கள் தமக்கு இடையில் ஒன்று சேருகின்றன. இதன் மூலம் மிகப் பலம் பொருந்திய வகையில், உலகச் சந்தையைக் கைப்பற்றக் களமிறங்கி நிற்கின்றன. இவை உலகமயமாதலில் புதிய ஒரு தொடர் அலையாக உள்ளது. இவற்றைக் கடந்தும் ஏகாதிபத்திய முரண்பாடு உலகமயமாதலில் அக்கம் பக்கமாகவே வழிநடை போடுகின்றது. மிகப்பெரும் வீதத்தில் உலகம் சூறையாடப் படுவதால் இந்த முரண்பாடு முதன்மை முரண்பாடாக முன்னிலைக்கு வரவில்லை. ஆனால் அவை தணலாகவே வெந்து சிவந்து நிற்கின்றது. மேலுள்ள தரவுகள் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டி நிற்கின்றன.



## 7. உலகை முழுவீச்சில் சூறையாடவே மூலதனங்கள் தமக்கிடையில் ஒன்று சேருகின்றன

மூலதனங்கள் உலகை முழுவீச்சில் சூறையாடவும், மூலதனங்கள் தமக்கு இடையிலான மோதலை தள்ளிப் போடவும், தமக்கிடையில் ஒன்று சேருகின்றன. இது பிரமாண்டமான ஒப்பந்தத் திருமணமாக அரங்கேறுகின்றது. மனித இனம் தனித்தனி மனிதர்களாகப் பிளவுபடுத்தப்படும், ஒற்றைத் துருவங்களாக வெம்பவைக்கும் ஒரு சமூக அமைப்பில் தான், மூலதனங்கள் தமக்கு இடையில் ஒன்று சேர்வது ஒரு முரணான போக்காக உள்ளது. தனிமனிதர்களாக வெம்பவைத்துச் சிதைக்கும் மூலதனம், தமக்கு இடையில் இதற்காக ஒன்று சேர்கின்ற போக்கு உலகமயமாதல் நிகழ்ச்சிப் போக்கில் குறிப்பான மூலதனச் செயல்பாடாக உள்ளது. ஆனால் இணைவுகள் பிரதான ஏகாதிபத்திய, சர்வதேசப் போட்டி மூலதனத்துடன் நடப்பதில்லை. இதனால் இதற்கிடையில் முரண்பாடுகள் உண்டு.

ஏகாதிபத்தியம் சார்ந்த தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையேயான முரண்பாடு, ஏகாதிபத்தியம் சார்ந்த தேசிய உணர்வு பெற்றே நிற்கின்றது. இதனடிப்படையில் ஏகாதிபத்தியங்கள் நாடுகள் ரீதியாகவும் தமக்கிடையில் ஒன்று சேர்கின்றன. அதேபோல் ஏகாதிபத்தியங்கள் தம்முடன் நாடுகளை இணைக்கின்றன. ஏகாதிபத்திய முகாம்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதான போட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகாம்களாக ஒன்று இணைந்து பிளவுறுகின்றன. இதன் ஒரு அங்கமாகவே சர்வதேச ரீதியாகப் போட்டியிடக்கூடிய, புதிய சர்வதேச நாணயமாக ஈரோவை உருவாக்கியது. இதன் மூலம் ஏகாதிபத்திய முரண்பாடுகள் மேலும் நுட்பமாகி ஆழமாகவே கூர்மையடைகின்றன. இதன் ஒரு அங்கமாகவே, இதற்குச் சமாந்தரமாகவே மறுதளத்தில் பெரும் ஏகபோக தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் தமக்கு இடையில் ஒன்று இணைந்து பிளவுகளை ஆழமாக்குகின்றனர். இந்த இணைவுகள் கூட ஏகாதிபத்திய தேசிய உணர்வு பெற்று, தமக்கு இடையில் அரங்கேற்றுகின்றன. உலகமயமாதலில் இந்தப் போக்கு கூர்மையாகி வருகின்றது. இந்தச் சர்வதேச இணைவும் அதன் வீச்சும் உலகமயமாதல் போக்குடன் ஆழமாகி அகலமாகி வருவதைப் புள்ளிவிபர ரீதியாகப் பார்ப்போம். இணையும் மூலதனத்தின் இணைப்புகளோ பிரமாண்டமானவை.

| | |
|---|---|
| 1988 | 11200 கோடி டாலர் |
| 1989 | 12400 கோடி டாலர் |
| 1990 | 11600 கோடி டாலர் |
| 1991 | 4900 கோடி டாலர் |
| 1992 | 7400 கோடி டாலர் |
| 1993 | 6700 கோடி டாலர் |
| 1994 | 10900 கோடி டாலர் |
| 1995 | 14100 கோடி டாலர் |
| 1996 | 16300 கோடி டாலர் |
| 1997 | 23600 கோடி டாலர் |
| 1998 | 41100 கோடி டாலர் |

இப்படி அதிகரித்து வந்த மூலதன இணைப்புகள், உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுடன் வேகம் பெறுகின்றது. பன்னாட்டு நிறுவனங்களின் இணைப்புகள் 1999-இல் 5,000-த்திற்கும் மேற்பட்டதாக இருந்தது. இதில் மொத்தமாக 80,000 கோடி டாலர் பெறுமதியான சொத்துக்களை இணைப்பாக கொண்டிருந்தது. இது 2000-ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதத்தில் 3000 இணைப்புகள் நடந்தது. இதன் மொத்த பெறுமானம் 65,000 கோடி டாலராக இருந்தது. இதைவிட மிகப் பெரிய 16 பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையிலான இணைப்பில் மொத்தமாக 1,00,800 கோடி டாலர் கொண்டதாக இருந்தது.

உலகைக் கொள்ளை அடிப்பவர்களுக்கு இடையிலான ஒரு நெருக்கமான பிணைப்பை இது ஏற்படுத்தி விடுகின்றது. இது



மூலதனத்தின் கூட்டுக் கொள்ளையை உறுதி செய்கின்றது. சுரண்டலை ஆழமாக்குகின்றது. பன்மைத் தன்மையை இல்லாதொழிக்கின்றது. ஏகாதிபத்திய முரண்பாட்டை குறிப்பாக்கி, ஒரு சர்வதேச நெருக்கடியை உருவாக்குகின்றது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் புதிய ஒருங்கிணைவுகளையும் பிளவுகளையும் உருவாக்குகின்றன. மக்களுக்கு எதிரான திட்டமிட்ட சதிப்பாணியிலான திட்டங்களை, இவர்கள் முன்கூட்டியே கூடி நடத்தி விடுகின்றனர். உதாரணமாக 1978-இல் அமெரிக்க செனட் 130 தொழில்துறை தொடர்பான ஒரு விசாரணையை நடத்தியது. இதில் ஒரு உண்மை அம்பலமானது. 530 தொழில்துறை தலைவர்கள் மற்றைய தொழில் துறை தலைமையகத்தில் திட்டமிடுபவர்களாக இருப்பது தெரியவந்தது. இதைக் கடந்து மூன்றாவது தொழில்துறை கூட்டத்தில் கலந்து கொள்ளுதல், வருடாந்திரத்தில் 13,000-மாக இருந்தது. மூலதனத்தின் கூட்டுக் கொள்ளையை, முன் கூட்டியே திட்டமிடுவதை இது அம்பலப்படுத்தியது. சந்தைக்கு வரும் பொருட்கள், திட்டமிட்ட கூட்டுச் சதி மூலமே மக்களின் மூளையில் ஒற்றைப் பரிணாமத்தில் திணித்து விடுகின்றனர். இதுவே இன்று மூலதனத்தின் இணைப்பாக மாறிவிடுகின்றது.

இதனால் பல சிறு உற்பத்திகள் இதில் அழிந்து பட்டுப் போகின்றன. உதாரணமாக 1980 முதல் பிரிட்டனில் சிறிய கம்பனிகள், மூன்றுக்கு ஒன்று என்ற ரீதியில் மூடப்பட்டது அல்லது பன்னாட்டு நிறுவனங்களால் விழுங்கப்பட்டன. இது உலகளாவிய விதியாகியுள்ளது. வெறும் மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமல்ல ஏகாதிபத்திய நாடுகளில் கூட சிறு உற்பத்திகள் புணரப்பட்டு அழிக்கப்படுகின்றன. இதன் மூலம் அனைத்து உற்பத்திகளையும் பன்னாட்டு நிறுவனங்கள் கட்டுப்படுத்தத் தொடங்குகின்றன. அழிப்பு, இணைப்பு என்று உலகமயமாதலின் சுதந்திரமான ஜனநாயகச் செயல்பாடு, மனிதனின் இயற்கைக் கூறுகளின் விளைவுகளை எல்லாம் நலமடிக்கின்றது.

இதுபோல் அமெரிக்க நிறுவனங்களுக்கு இடையிலான இணைப்பு பிரம்மாண்டமான அளவில் வளர்ச்சிகண்டது. 1980-க்கு முன் 100 கோடி டொலர் பெறுமதியான 12 இணைப்புகளே நிகழ்ந்தன. 1980-க்கும் 1985-க்கும் இடையில் இது 45 ஆக இருந்தது. இதுவே 1985-இல் 23 இணைப்பும், 1986-இல் 33 இணைப்பும் நடைபெற்றது. அதேநேரம் உற்பத்தியில் ஈடுபட்ட தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கையைக் குறைக்கும் ஒருவழியாக, தொழில் நுட்பத்தை புகுத்தல் ஒரு பெரும் வீச்சில் நடைபெற்றது. இதே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்தில் 4,000 நிறுவனங்கள் இதற்காக 20,000 கோடி டாலரை செலவு செய்தது. அதேநேரம் 1983-87-க்கு இடையில் 49,000 கோடி டாலர் மதிப்புடைய 12,200 நிறுவனங்கள் கைமாறின. இதன் மூலம் ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கம் உச்சத்தை எட்டியது. இவை சொந்த நாட்டையே கடந்து சென்றன. உதாரணமாக முதலாளித்துவ மீட்சி வெளிப்படையாகப் பிரகடனம் செய்து அரங்கேறிய 1985-1986-ஆம் ஆண்டில், ரசியாவுக்குள் ஏகாதிபத்திய மூலதனம் நேரடியாகவே புகத் தொடங்கியது. 1985-1986 ஆண்டுகளில் 250 கூட்டுத் தொழில் நிறுவனங்களை ஏகாதிபத்திய மூலதனங்கள் ரசியாவில் உருவாக்கின. 1400 கூட்டுத் தொழிலுக்கான ஒப்பந்தத்தை 1990-க்கு முன்பே கையெழுத்திட்டது. இதில் அமெரிக்காவே முன்னிலை வகித்தது. இந்தப் போக்கு உலகம் தழுவிய அளவில் வளர்ச்சியுற்றது. அதே நேரம் சிறிய மூலதனங்களை விழுங்கி ஏப்பமிடுதல், மறுபக்கத்தில் முழு வீச்சில் அரங்கேறியது. உதாரணமாக 1991-இல் உலகில் இருந்த 40,000 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள், உலகளவில் 2,50,000 உற்பத்தி நிறுவனங்களை விழுங்கி ஏப்பமிட்டன. மூலதனத்தின் கொழுப்பேறுதல், வரைமுறையின்றி, எல்லா தளங்களிலும் அரங்கேறியது. இதில் மூலதனத்துக்கு இடையிலான இணைப்பும் ஒன்று அவ்வளவே. மனித இனம் இதன் காலடியில் நசிந்து கருகிப் போகின்றது.

இப்படி மூலதனத்துக்கு இடையில் நடக்கும் இணைப்புகள், போட்டி ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையில் நடப்பதில்லை. மாறாக நட்பு ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையிலும், சொந்த நாட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையிலேயே இணைப்புகள் நடக்கின்றன. தேச எல்லைகளைக் கொண்ட நாடுகளுக்கு இடையில் எப்படி இணைப்புகள் நடக்கின்றனவோ, அதனடிப்படையிலேயே மூலதன இணைப்பும் நடக்கின்றது. இந்த இணைப்பு இன்று அதிகரித்து வருவதையே மேலுள்ள புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதன் மூலம் உலகைக் கைப்பற்றும் போட்டியானது மேலும் ஆழமாகி கூர்மையாக்கப்படுகின்றது. சந்தைப் போட்டியில் தற்காலிகமான சமரசத்தை இது ஏற்படுத்தினாலும், அடுத்தடுத்து கூர்மையான போராட்டம் ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் தொடங்கி விடுகின்றன. இதனால் தேச எல்லைகளைக் கடந்த முதலீடுகள் பெருமெடுப்பில் நடத்தப்படுகின்றது.



## 8. மூலதனத்துக்குப் பைத்தியம் முற்றும் போது, ஏகாதிபத்திய யுத்தங்கள் அரங்கேறுகின்றன

மூலதனத்தின் ஆன்ம ஈடேற்றத்துக்குத் தடையான அனைத்தையும் மூலதனம் தகர்த்தெறிகின்றது. இங்கு ஈவு, இரக்கம் என்று எதையும் மூலதனம் காட்டுவதில்லை. இன்றைய இந்த நவீன சமூகக் கட்டமைப்பு மூலதனத்தின் ஈடேற்றத்தில் கட்டமைக்கப்பட்டது. இந்தியப் பார்ப்பனர்கள் தனது சொந்த நலன் சார்ந்த சமூக ஈடேற்றத்துக்காக எப்படி சாதிகளை உருவாக்கினாரோ, அதேபோல் தான் இன்றைய நவீன நாகரிகக் கட்டமைப்பை மூலதனம் உருவாக்கியது, உருவாக்கி வருகின்றது. இந்த பொதுஅம்சம், மற்றவனை அழிப்பதையே அடிப்படையாகக் கொண்டது. மூலதனக் குவிப்புக்கு எதிரான அனைத்து விதமான போட்டியாளர்களையும் ஈவிரக்கமின்றி ஒடுக்குகின்றது. இதன் போது எங்கும் சமூக அராஜகத்தை ஆணையில் வைக்கின்றது. இது ஜனநாயகம், சுதந்திரம் என்ற பெயரிலேயே அரங்கேறுகின்றது. இதன் மூலம் மூலதனம் தங்கு தடையற்ற வகையில் வீங்கிச் செல்லுகின்றது.

தடையாக உள்ளவை அனைத்தையும் சமூகக் கட்டமைப்பிலான, ஒழுங்குமுறைக்குட்பட்ட சட்டதிட்டங்கள் மூலம், திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு வன்முறை மூலம் தகர்க்கின்றது. இதன் போது ஈவிரக்கமற்ற வக்கிரத்துடன் களமிறங்குகின்றது. மூலதனத்தைக் குவிக்கின்ற போக்கில் ஏற்படுகின்ற தடைக்கு எதிராக ஏற்படும் பைத்தியம் முற்றும் போது, தவிர்க்க முடியாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகாதிபத்திய மோதலாகத் தொடங்கி, அதுவே வெறிகொண்ட யுத்தமாக மாறிவிடுகின்றது. இது ஆரம்பத்தில் தணிவான தாழ்நிலையில் இரகசியமாகவும், (இது இரகசிய சதிகளுக்கு உட்பட்ட, எல்லைக்குள் பேசித் தீர்க்க முனைகின்றனர்), பகிரங்கமாகவும் ஏற்ற இறக்கத்துடன் தன்னை வெளிப்படுத்துகின்றது.

மூலதனம் தான் உருவாக்கிய சமூக அமைப்பில் சுரண்டப்படும் மக்களுக்கு வெளியில் சந்திக்கும் தடைகளில் மிகப் பிரதானமானது, எப்போதும், போட்டி மூலதனமே. இங்கு மூலதனத்துக்கு எதிரான வர்க்க மோதல்கள், இதன் மேல்தான் உருவாகின்றன. மூலதனத்துக்கு இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்திய மோதலாக, யுத்தமாகப் பிரதிபலிக்கின்றது. ஆனால் இது எப்போதும் வேறுயொன்றின் பின்னால் தன்னை மூடிமறைத்துக் கொண்டு, மக்களை அதற்கு பலியிடுகின்றனர். உலகச் சந்தையில் மூலதனத்துக்கு இடையில் நடக்கும் நெருக்கடிகள், அன்றாடம் ஒவ்வொரு செக்சனுக்குமுரிய ஒரு நிகழ்ச்சி நிரலாகவே உள்ளது. இதற்குள் நடக்கும் பேரங்களே ராஜதந்திரமாகக் காட்டப்படுகின்றது. இதன்போது ஒன்றையொன்று காலைவாரிக் கவிழ்த்துப் போட முனைகின்றது. போட்டி மூலதனத்தை எதிர்த்தே, சந்தை தனது செயல்பாட்டை களத்தில் வக்கிரமாகவே நடத்துகின்றது. அன்றாடம் நடக்கும் இந்த வர்த்தக நெருக்கடியில், ஒரே ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த போட்டியாளர்கள் ஒருபுறம் சந்திக்கும் அதேநேரம், மற்றைய ஏகாதிபத்தியப் போட்டியாளனை எதிர்கொண்ட பலமுனை முரண்பாடுகள் ஒருங்கே நிகழ்கின்றன.

ஒரே ஏகாதிபத்தியத்தைச் சார்ந்த மூலதனப் போட்டியாளர்கள் ஒரே சட்டவிதிகளுக்குள் இருந்து உருவாகுவதால், போட்டியை இலகுவாகவே மட்டுப்படுத்த முடிகின்றது. இந்தச் சட்டயெல்லை உள்ளூர்ப் போட்டியாளனைக் கட்டுப்படுத்தி ஒன்றையொன்று மேவி அழிப்பதற்கு ஏற்ற ஒரு அதிகார சமூக உறுப்பை, ஜனநாயகத்தின் பெயரில் மூலதனம் உருவாக்குகின்றது. இதன் மூலம் சொந்த நாட்டுப் போட்டியாளனை எதிர்கொள்வது இலகுவாகின்றது. இப்படி உருவாகும் அதிகார வர்க்கம் பெரும் மூலதனத்தை நேரடியாகச் சார்ந்து இருப்பதால், இலகுவாகவே போட்டி மூலதனங்களை அழித்தொழிப்பதற்கு சொந்த சட்டதிட்டம் மூலம் துணைசெய்கின்றனர். இதன் மூலம் உள்ளூர் மூலதனப் போட்டியாளனை இலகுவாக அழித்து விடமுடிகின்றது. ஆனால் மற்றைய ஏகாதிபத்தியப் போட்டியாளர்கள் அப்படி அல்ல. அவன் தனது நாடு என்ற எல்லையில், தனக்கான ஒரு அதிகார அமைப்பைச் சார்ந்த ஒரு சட்ட அமைப்பைச் சார்ந்து வாழ்கின்றது. இதனால் போட்டியாளனை



எதிர்கொள்ளும் போது, சதியை அடிப்படையாகக் கொண்ட ராஜதந்திரப் பேச்சு வார்த்தைகள் முதல், பலாத்காரத்தின் எல்லை வரையிலான எல்லைக்குள் ஒன்றையொன்று தற்காத்தும், தகர்த்தும் மோதுகின்றன.

சர்வதேச ரீதியாக நடக்கும் போட்டி மூலதனத்தின் மோதல், அடங்காத வெறியுடன் பல்வேறு நாடுகளை அடிமைப்படுத்தி, சுரண்டவே கடுமையாக முயலுகின்றது. இதன் போது தமக்கு இடையிலான முரண்பாடுகளை எதிர்கொள்ள ஒவ்வொரு ஏகாதிபத்தியமும், இராணுவ மோதல் என்ற எல்லை வரை வன்முறைச் செயலில் குதிக்கின்றது. ஏகாதிபத்திய மோதலில் ஒரு முதிர்ந்த வடிவமாகவே, இராணுவ ரீதியான மோதல் பரிணமிக்கின்றது. மூலதனத்தின் எல்லாவிதமான கடைகெட்ட சமூக விரோதப் பாத்திரங்களினதும் ஒருங்கிணைந்த வடிவம் தான், இதற்கான அடிப்படையாக இருக்கின்றது. ஏகாதிபத்தியத்தின் கடைகெட்ட சமூக விரோத வக்கிரம், ஏகாதிபத்தியத்தின் தோற்றத்திலேயே அதன் உயிர்நாடியாகப் புழுத்துக் கிடக்கின்றது. இதன் அடிப்படையில் தான் லெனின் ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்பதைத் தெளிவாக வரையறுத்து முன்வைக்கின்றூர்.

ஏகாதிபத்தியமானது

1. ஏகபோக முதலாளித்துவமாகும்.
2. புல்லுருவித்தனமான, அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமாகும்.
3. அந்திமக்கால முதலாளித்துவமாகும்....

அதன் சாரப் பொருள்...

1. கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள் - முதலாளிகளது இந்த ஏகபோகக் கூட்டுகள் தோற்றுவிக்கப்படும் அளவுக்கு பொருளுற்பத்தியின் ஒன்றுகுவிப்பு வளர்ந்து விடுகிறது.
2. பெரிய வங்கிகளின் ஏகபோகநிலை....
3. மூலப்பொருட்களுக்கான ஆதாரங்களை முதலாளித்துவ டிரஸ்டுகளும் நிதி ஆதிக்கக் கும்பலும் கைப்பற்றிக் கொண்டு விடுகின்றன...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4. சர்வதேசக் கார்ட்டல்கள் உலகைத் தம்மிடையே கூறுபோட்டு பாகப்பிரிவினை செய்து கொள்வது ஆரம்பமாகிவிட்டது....

5. உலகின் பிரதேசம் (காலனிகள்) பங்கிட்டுக் கொள்ளப்படுதல் நிறைவுற்றுவிட்டது.... ஏகாதிபத்தியத்தை இனம் கண்டு கொள்வதற்குரிய அடையாளமாய் இருப்பது தொழிற்துறை மூலதனத்தின் ஆதிக்கம் அல்ல, நிதி மூலதனத்தின் ஆதிக்கமே ஆகும்'' என்றார் லெனின்.

ஏகாதிபத்தியம் பற்றி மிகச் சாலச் சிறந்த எடுப்பான அடிப்படைகளே, இன்று மேலும் துல்லியமாகக் காணப்படுகின்றன. உலகின் மூலை முடுக்கு எங்கும் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவதிலும், அதிகாரத்தை அதன் மேல் செலுத்துவதிலும் மூலதனம் உயர்ந்தபட்ச நிலையைத் தொட்டு நிற்கின்றது. நிதி மூலதனத்தின் ஆதிக்கம், உலகையே விசுவாசமாக வாலாட்டும் வளர்ப்பு அடிமையாக்கி விட்டது. ஆனால் இது பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளைச் சார்ந்து காணப்படுகின்றது. இதனால் ஏகாதிபத்திய முரண்பாடுகள் தணலாக மாறிச் சிவந்து கிடக்கின்றன. அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பானுக்கு இடையிலான, ஏகாதிபத்திய பிரதான முரண்பாடுகள், கடும் மோதல் நிலையில் நடக்கின்றது. இதனால் அன்றாடம் மூலதனச் சந்தையில், பெரும் அதிர்வுகள் நடந்த வண்ணமே உள்ளது. செல்வம் சிறகு முளைத்து அங்குமிங்கும் பறந்தோடுகின்றது. வர்த்தகம் ஒரு சதிவலையாக, சதிக்கிடங்காக மாறிக் கிடக்கின்றது. இங்கு மோசடியும், சூதாட்டமும் வர்த்தகமுமே ஆன்மாவாகி, உலகை அங்குமிங்குமாக அலைக்கழித்துச் செல்கின்றது. எங்கும் நிலையாத தன்மை, வர்த்தகச் சந்தையில் பெரும் பீதியை ஆணையில் நிறுத்தி விடுகின்றது. 24 மணி நேரத்தில் வரும் ஒவ்வொரு வினாடியும் கண்விழித்து சதிகளைத் தீட்டுவதே, இன்றைய நவீன திட்டமிடலாகயுள்ளது. இதையே இராஜதந்திரம் என்று வாய் கூசாது பிரகடனம் செய்கின்றனர்.

இப்படி ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் பற்றி லெனின் கூறிய கூற்றுகள், உலகமயமாதலில் இன்றும் மிகச் சரியாகவும், சிறப்பாகவும், எடுப்பாகவும் இருக்கின்றன. லெனின் இது பற்றி என்ன கூறுகின்றார் எனப் பார்ப்போம். ''ஏகபோகத்துக்கும் அதன் கூடவே இருந்துவரும் தடையில்லாப் போட்டிக்கும் இடையேயுள்ள முரண்பாடு (பிரம்மாண்டமான இலாபங்களுக்கு) தடையில்லாச் சந்தையிலான 'நேர்மையிலான' வாணிபத்துக்கும் இடையிலான முரண்பாடு ஒரு பக்கம்



கார்ட்டல்களும் டிரஸ்டுகளுடனானவற்றுக்கும் மறுபக்கம் கார்ட்டல் மயமாகாத தொழிலுக்கும் இடையிலான முரண்பாடு'' ஏகாதிபத்தியத்தின் ஆழமானதும் மோதலுக்குமுரிய அடிப்படை முரண்பாடு என்றுர் லெனின். இது இன்று பன்னாட்டு தேசங்கடந்த மூலதனத்துக்கும் அப்படியே பொருந்தி நிற்கின்றது. எங்கும் ஒரு அதிகாரத்துடன் கூடிய சதி கட்டமைக்கப்படுகின்றது. வர்த்தகச் சந்தையை திட்டமிட்டே கவிழ்த்து விட்டு, அதை கைப்பற்றுகின்றனர். சந்தை பேரங்கள் முதல் கையூட்டுகள் (லஞ்சம்) கொடுத்தும் கவர்ந்தெடுக்கப்படுகின்றது. தமக்கு இசைவான வகையில் மற்றைய நாட்டுச் சட்டத்திட்டங்களையே திருத்தி விடுகின்றனர் அல்லது மாற்றி விடுகின்றனர். ஏகாதிபத்தியமல்லாத நாடுகளின் கழுத்தில் காலை வைத்தபடிதான், ஒப்பந்தங்களை ஏகாதிபத்தியங்கள் அமைதியாகவே திணிக்கின்றன. அங்கும் இங்குமாகக் கையெழுத்தான ஒருதலைப்பட்சமான ஒப்பந்தங்கள் மக்களுக்கு எதிராகச் செயல்படுத்துவதே இன்றைய அரசுகளின் நவீன கடமையாகி விட்டது. தடையில்லாத சந்தையின் நேர்மையான வர்த்தகம் என்பதைக் கூட, எதார்த்தத்தில் மறுக்கின்றது. மூலதனம் தனது விரிவாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தனது சொந்தக் கோட்பாட்டை மீறி, அடத்தாகவே தனது சொந்த விதியையே மறுத்து வீங்குகின்றது. இன்று ஆளும் வர்க்கங்கள் தங்களைத் தாம் பாதுகாக்க உருவாக்கிய ஜனநாயகத் தேர்தல் முறையைக் கூட, ஆளும் வர்க்கங்கள் முறைகேடாக எப்படிக் கையாளுகின்றதோ அதே போல்தான் வர்த்தகத்திலும் நடக்கின்றது.

மூலதனம் உலகளவிலான சூறையாடலுக்கான மேலாதிக்கத்துக்காக நடத்தும் மோதலினால் ஏற்படும் விளைவுகள், அனைத்து நாடுகளிலும், அனைத்து மக்களிலும் பட்டுத் தெறிக்கின்றது. இதன் போதுதான் சமாதான உலகம் பற்றியும், மனித சுதந்திரம் பற்றியும் ஜனநாயகம் பற்றியும் வாய்கிழிய ஓதி அரங்கேற்றுகின்றனர். இதை மூடிமறைக்கவே, மனித குலத்தைப் பிளந்து அதில் குளிர் காய்கின்றது ஏகாதிபத்தியம். மக்களுக்கு இடையில் திட்டமிட்டே மோதல்களை உற்பத்தி செய்கின்றனர். இதன் மூலம் மனித இனப் பிளவுகளின் மேல் கொள்ளை அடிப்பவர்கள், தம்மைத் தாம் தற்காத்துக் கொண்டு, கொடூரமான முகத்துடன் களத்தில் புதுவடிவம் எடுக்கின்றனர். இதன் ஒரு அங்கமாக உருவானதே உலகமயமாதல்.

இதன் போது எங்கும் அமைதி பற்றியும், சமாதானம் பற்றியும் உரத்துப் பேசுகின்றனர். எங்கும், அனைத்துத் துறைகளிலும் படுமோசமான வன்முறையே நவீனமாகின்றது. இதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நியாயப்படுத்தி அல்லது மூடிமறைக்கும், முதுகு சொறியும் எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், தமது சொந்த ஜனநாயகத்தின் பெயரால் மக்களின் முதுகில் ஏறி அமருகின்றனர். அமைதியான, சமாதானமான உலகம் பற்றி, வண்ணவண்ணமான கோட்பாடுகளை முன்வைக்கின்றனர். மனித இனத்தைச் சுரண்டிக் கொழுக்கும் மனிதவிரோத, சமூகவிரோத செயலையிட்டு, இந்த ஜனநாயக எழுத்தாளர்கள் யாரும் எப்போதும் கவலைப்படுவது கிடையாது. இந்தக் கொடுமையை எதிர்த்துப் போராடுவதையே, இவர்கள் கோட்பாட்டு ரீதியாக எப்போதும் மறுத்துரைக்க முனைகின்றனர். சமாதானமாகச் சுரண்டும் உலக அமைதிக்கும், சுதந்திரமாகச் சுரண்டும் உரிமைக்கும் எதிராகப் போராடுபவர்களையே, சமாதானத்தின் எதிரிகளாக இவர்கள் சித்தரிப்பவர்களாக உள்ளனர். மனித உழைப்பு மற்றொருவனால் சுரண்டப்படுவதே, உலகின் சமாதானத்துக்குச் சவாலாகின்றது என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை அல்லது சிலர் சடங்குக்காக அதை ஒத்துக் கொண்டு அதற்கு எதிராகவே எதார்த்தத்தில் உள்ளனர். இதை இட்டு இவர்கள் கவலை கொள்ளாத ஒரு நிலையிலும், ஏகாதிபத்தியத்துக்கு இடையில் மூலதனம் உருவாக்கும் பிரதான முரண்பாடு, அமைதிக்கும் சமாதானத்துக்கும் எதிராக செயல்படுவதை மூடிமறைப்பதே இன்றைய இலட்சியமாகி விடுகின்றது. இந்த மூலதனத்துக்கு இடையிலான மோதல், மனித இனத்தையே அழித்துவிடும் என்ற உண்மையைக் கூட கண்டு கொள்வதை திட்டமிட்டே மூடி மறைக்கின்றனர். இன்று மூலதனத்துக்கு இடையிலான மோதல் உலக அமைதிக்கும், சமாதானத்துக்கும் ஆபத்தான ஒன்றாகவே வளர்ச்சியுற்று வருகின்றது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முதல் இரண்டு உலக யுத்தங்களும், மூலதனத்துக்கு இடையேதான் நடந்தன. ஏகாதிபத்திய சகாப்தம் முதல் இன்று வரையில், நாடுகளுக்கு உள்ளேயான வர்க்கப் போராட்டம் அல்லாத அனைத்து மோதல்களும் கூட ஏகாதிபத்திய மூலதனத்துக்கு இடையிலானதாகவே இருந்தது. ஆனால் இதை வெறும் தனிநபர்கள், சிறு குழுக்கள் சார்ந்தாகக் கட்டுவது, மூலதனத்தின் தந்திரமான விளையாட்டாக உள்ளது. இதையே பற்பல ஜனநாயக எழுத்தாளர்களும் பிரதிபலித்து, எதிரொலிக்கின்றனர்.

இந்த மோசடித்தனமான கூச்சல் அன்று முதல் இன்று வரை ஒரேவிதமாக பல வண்ணத்தில் அரங்கேறுகின்றது. லெனின் இதைத் தனது காலத்தில் எதிர் கொண்ட போதே, அதை அம்பலப்படுத்தினார். ''சர்வதேசக் கார்ட்டல்கள், மூலதனம் சர்வதேசியமயமாக்கப்படுதலின் மிகவும் எடுப்பான வெளிப்பாடுகளில் ஒன்றாகுமாதலால்,



முதலாளித்துவத்தில் தேசங்களிடையே சமாதானம் மலர்வதற்கான நம்பிக்கையை அளிப்பனவாகும் என்ற கருத்தைச் சில முதலாளித்துவ எழுத்தாளர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். தத்துவார்த்தத்தில் இந்தக் கருத்து அறவே அபத்தமானது, நடைமுறையில் குதர்க்க வாதமும், படுமோசமான சந்தர்ப்பவாதத்தை நேர்மையற்ற முறையில் ஆதரித்து வாதாடுவதுமே ஆகும் என்றார். இந்த உண்மை இன்று பரந்த தளத்தில், ஜனநாயகத்தின் பெயரில் நடக்கின்றது. சமாதானம், அமைதி, சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் எதிர்களாக, மக்களுக்காகப் போராடுபவர்கள் மீது அவதூறாக சுமத்தப்படுகின்றது. உலகின் எஞ்சி இருக்கும் சுதந்திரம், ஜனநாயகம் என அனைத்தையும் படிப்படியாக அழித்துவரும் மூலதனம், இதை மற்றவர்கள் மேல் சுமத்தி விடுகின்றனர். யாரிடம் வாழ்வதற்கான அடிப்படையான வாழ்க்கை ஆதாரப் பொருட்கள் தாராளமாக உள்ளனவோ, அவர்கள் மட்டும் தான், குறைந்தபட்சம் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை நினைத்துப் பார்க்கமுடியும். மற்றவனிடம் கையேந்தி நிற்கும் ஒருவன் எப்படி சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை நினைத்துப் பார்க்க முடியும். தான் நினைத்ததைச் சொல்லவும், அதை எழுதவும் கூட முடியாத வகையில், மூலதனம் அனைத்து ஊடக வடிவங்களையும் கூடக் கைப்பற்றி வைத்துள்ளது.

இந்த நிலையில் உலகத்தில் ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் எப்படி இருக்கமுடியும். அமைதி முதல் சமாதானத்துக்கு எதிராக மூலதனம் நடத்தும் மோதல்கள் தான், உலக அமைதிக்கு சவால்விடுகின்றது. இதனடிப்படையில் மூலதனம் தமக்கு இடையில் அன்றாடம் மோதுகின்றது. மனிதனைப் பட்டினி போட்டே மனித இனத்தைக் கொன்று போடுகின்றது. வாழ்க்கை ஆதாரப் பொருட்களைக் கைப்பற்றி வைத்துள்ள மூலதனத்துக்கு எதிராகப் போராட வைக்கின்றது. மக்கள் கிளர்ந்து எழுவது ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்ட வடிவில் உருவாகாத எதிர்வினைகள் அரங்கேறுகின்றன. இது மக்களின் பெயரில் நடக்கும் உதிரியான கொள்ளை, கொலை முதல் தனிநபர் பயங்கரவாதம் வரை விரிந்து செல்கின்றது. ஏகாதிபத்தியம் மறுபுறத்தில் எல்லாவிதமான கொள்ளையையும், சூறையாடலையும், மனிதப் படுகொலைகளையும் கவர்ச்சிகரமாக மூடிமறைத்தபடி, மற்றவர்கள் மீது அதை குற்றம் சுமத்துகின்றனர். கேடுகெட்ட மூலதனத்தின் வல்லான்மையின் துணையுடன், உண்மைகளையே கவிழ்த்துப் போடுகின்றனர். பணத்துக்குப் பல் இளித்து நக்கிப் பிழைக்கும் அறிவுத்துறையினர், உலகத்தையே தம்மையொத்த பன்றிகளின் கூடாரமாக்குகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்மறையில் உலக எதார்த்தம் நிர்வாணமாகவே நிற்கின்றது. ஏகாதிபத்திய முரண்பாடே பிரதான முரண்பாடாக, மூலதனத்தின் முன்னே நின்று பேயாட்டமாடுகின்றது. முன்பே இந்த நூலில் சில அடிப்படையான புள்ளிவிபரத் தரவுகளை இதனடிப்படையில் பார்த்தோம். ஏகாதிபத்தியங்களான ஜப்பான், ஐரோப்பா, அமெரிக்காவுக்கு இடையில் மூலதனங்கள் எப்படி அங்குமிங்குமாக அலைபாய்கின்றது என்பதைக் கண்டோம். மூலதனம் நிம்மதியற்று, பைத்தியம் படித்த நிலையில் அங்குமிங்குமாகத் தாவிக் குதறுகின்றது. இதை நாம் மேலும் குறிப்பாகப் பாப்போம்.

உலகில் உள்ள 200 முன்னணி பன்னாட்டு நிறுவனங்கள், உலகமயமாதல் பொருளாதார நெருக்கடிக்குள் அமெரிக்காவுக்கும் ஜப்பனுக்கும் இடையில் எப்படிக் கைமாறியது எனப் பார்ப்போம்.

| ஆண்டு | நாடு | பன்னாட்டு நிறுவன எண்ணிக்கை | வருமானம் கோடி டாலரில் |
|---|---|---|---|
| 1982 | ஜப்பான் | 35 | 65,700 |
| 1982 | அமெரிக்கா | 80 | 1,30,000 |
| 1992 | ஜப்பான் | 54 | 2,00,000 |
| 1992 | அமெரிக்கா | 60 | 1,70,000 |
| 1995 | ஜப்பான் | 58 | 2,70,000 |
| 1995 | அமெரிக்கா | 59 | 2,00,000 |

14 வருடங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தரவு, அங்கும் இங்குமாக மூலதனம் நடத்திய குழிபறிப்புகளின் வெட்டுமுகத் தோற்றமே இது. இவை ஒரு இழுபறியான மோதலாக மாறி, அரங்கில் உண்மைக் காட்சியாகியுள்ளது. 1982-இல் முன்னணி 200 நிறுவனங்களில் ஜப்பான் 35 பன்னாட்டு நிறுவனங்களை சொந்தமாக கொண்டிருந்தது. இது 1992-இல் 54-ஆகவும், 1995-இல் 58-ஆகவும் அதிகரித்தது. அமெரிக்காவோ 1982-இல் மிகப்பெரிய 200 நிறுவனங்களில் 80 பன்னாட்டு நிறுவனங்களை சொந்தமாகக் கொண்டிருந்தது. இது 1992-இல் 60-ஆகவும், 1995-இல் 59-ஆகவும் குறைந்தது. மறுபக்கம் இந்த நிறுவனங்கள் சார்ந்த மூலதன திரட்சி 1982-இல் ஜப்பான் 65,700 கோடி டாலரை கொண்டு 35 பன்னாட்டு நிறுவனங்கள் காணப்பட்டது. இது 1992-இல் 54 ஆகிய அதேநேரம் மூலதனம் 2,00,000 கோடி டாலராகியது. 1995-இல் 58 நிறுவனத்தை



சொந்தமாகக் கொண்டு 2,70,000 கோடி டாலரை சொந்தமாக்கியது. அமெரிக்கா 1982-இல் 80 பன்னாட்டு நிறுவனத்தைக் கொண்டு 1,30,000 கோடி டாலரை சொந்தமாகக் கொண்டிருந்தது. 1992-இல் பன்னாட்டு நிறுவனங்கள் 60-ஆக குறைந்ததுடன் 1,70,000 கோடி டாலரையும், 1995-இல் 59 நிறுவனத்துடன் 2,00,000 கோடி டாலரைக் கொண்டு ஜப்பானுக்கு கீழ் சரிந்து சென்றது. இது ஒன்றையொன்று உறிஞ்சியதையும், ஏகாதிபத்திய முரண்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றது. மூலதனம் தனக்கிடையில் ஒரு நிலையற்ற தன்மையை அடைவதுடன், மோதல் போக்குக் கொண்ட நெருக்கடியை அன்றாடம் சந்திப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. இதுவே ஏகாதிபத்திய முரண்பாடாக இருப்பதுடன், இதுவே இராணுவ மோதலுக்குரிய முதிர்வு நிலையை அடைகின்றது. உலகச் சந்தை மறுபடியும் மீளப் பகிர்வதன் மூலமே, மூலதனம் தப்பிப் பிழைக்க முனைகின்றது.

மக்களை மிக அதிகளவில் சூறையாடுவதையே, மூலதனத்துக்கு இடையிலான முரண்பாடு கோருகின்றது. மக்களின் அடிப்படையான வாழ்வியல் கூறுகளை மூலதனம் ஒழித்துக் கட்டுவதன் மூலம், தன்னை தற்பாதுகாத்துக் கொள்ள முனைகின்றது. இதனால் இதை எதிர்த்து கீழ் இருந்து எழும் வர்க்கப் போராட்டம், மூலதனத்தின் முரண்பாட்டை மேலும் கூர்மையாக்குகின்றது. இது தொடர்ச்சியானதும், ஏற்றமும், இறக்கமும் கொண்ட ஒரு அலையாகவே எதார்த்தத்தில் எழுகின்றது.

இந்த முரண்பாடு பல பத்து வருடங்களில் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. 1960-இல் அமெரிக்கா ஜப்பானுக்கு 160 கோடி டாலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்த அதேநேரம், 110 கோடி டாலருக்கு பொருட்களை இறக்குமதி செய்தது. 1984-இல் அமெரிக்கா 3,815 கோடி டாலர் பெறுமதியான பொருட்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்த அதேநேரம், 3360 கோடி டாலருக்கு பொருட்களை இறக்குமதி செய்தது. 1988-இல் அமெரிக்கா 6,560 கோடி டாலர் பெறுமதியான பொருட்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்த அதேநேரம், 5,920 கோடி டாலருக்கு பொருட்களை இறக்குமதி செய்தது. தமக்கு இடையிலான வர்த்தகம் அதிகரித்த அதே நேரம், சர்வதேச ரீதியான வர்த்தகத்தில் பிளவுகள் அதிகரித்தது. ஜப்பான் 1960-80 இடையில் தனது பொருளாதார வளர்ச்சியை 300 மடங்காக அதிகரித்த போது, சந்தையில் புதிய நெருக்கடிகள் உருவானது. சந்தையை கட்டுப்படுத்தி வைத்திருந்தவர்கள் அதைத் தக்கவைக்க ஜப்பானுடன் மோதவேண்டிய சூழல் உருவானது. உலகளவில் ஜப்பானின் வர்த்தகம் விரிந்தபோது, உள்நாட்டில் செழிப்பு உருவானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1960-இல் ஜப்பானின் தலா வருமானம் அமெரிக்க தலா வருமானத்தில் 30 சதவீதமாக இருந்தது. இது 1980-இல் 70 சதவீதமாக வளர்ச்சி கண்டது. பெரும் மூலதனத்தின் கொழுப்பு ஏறியபோது, பணக்காரக் கும்பலின் தனிநபர் வருமானம் ஜப்பான் மக்களின் வாழ்வையே நாசமாக்கத் தொடங்கியது. ஏகாதிபத்திய முரண்பாடுகள் உலகச்சந்தையை அங்கும் இங்குமாகப் புரட்டிப் போட்ட அதேநேரம், ஏகாதிபத்தியத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வுகள் சூறையாடப்படுவது அதிகரித்தது.

ஜப்பான் மற்றும் ஜெர்மனிய ஏகாதிபத்தியங்களின் பொருளாதார மீட்சி, ஏகாதிபத்திய மோதலைக் கூர்மையாக்கியது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் அமெரிக்கப் பொருளாதாரம் பெற்ற மேன்மையான அனுகூலங்கள் தொடர்ச்சியான இழப்புக்குள்ளாகின. இந்த மோதல் உலகளாவிய வர்த்தகத்தை வெம்பவைத்து, வீங்கி அதிகரிக்க உதவிய அடுத்த கணமே, வீழ்ச்சியும் அதன் பின்னாலே அலை மோதுகின்றது. மூலதனத்தைக் கொழுக்க வைக்கும் வர்த்தக இயங்கியல் விதி என்பது, ஏற்றத்தையும் இறக்கத்தையும் ஒருங்கே கொண்டது. எங்கேயோ ஒரு இடத்தில் நடக்கும் இழப்புத் தான், மற்றொரு பக்கத்தில் குவிப்பாகின்றது. உதாரணமாக 1969-இல் அமெரிக்கா நாளாந்தம் 100 கோடி டாலருக்கு அந்நியச் செலாவணி வியாபாரத்தை செய்தது. இது 1983-இல் 3400 கோடி டாலராகியது. உலக ரீதியில் இது 750 கோடியில் இருந்து 20,000 கோடி டாலராகியது. 1969-இல் அமெரிக்காவின் உலகளாவிய வர்த்தகத்தின் பங்கு 7.5 க்கு ஒன்றாக இருந்தது. இது 1983-இல் 5.8க்கு ஒன்றாகியது. வர்த்தக நெருக்கடி தொடராகவே உருவாகின்றது. உலகளாவிய வர்த்தகத்தில் அமெரிக்காவின் பங்கு 1969-1983-க்கும் இடையில் அதிகரித்த போது, இழப்பு மூன்றாம் உலக நாடுகளினதும் மக்களினதும் தலைகள் மீது நடந்தது. ஆனால் இந்த வர்த்தக அதிகரிப்பு, அமெரிக்காவின் உலகளாவிய வர்த்தக ஆதிக்கத்தைத் தக்க வைக்கவில்லை. மற்றைய ஏகாதிபத்தியத்துடனான போட்டியில் அதை இழப்புக்குள்ளாகியது.

அமெரிக்கா 1950-இல் உலகச் சந்தையில் 50 சதவீதத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. இது 1988-இல் 25 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 1965-இல் 65 சதவீதமாக இருந்த அமெரிக்க வாகன உற்பத்தி ஆதிக்கம், 1980-இல் 20 சதவீதமாக வீழ்ச்சி கண்டது. 1980-84 இடையில் தனது மொத்த ஏற்றுமதிச் சந்தையில் 23 சதவீதத்தை இழந்தது. 1955-இல் எஃகு உற்பத்தியில் 39.3 சதவீதத்தை வைத்திருந்த அமெரிக்கா 1975-இல் 16.4 சதவீதமாகக் குறைந்து போனது. இது 1984-இல் 8.4 சதவீதமாகியது. அதாவது 1973-1983-க்கு



இடையில் எஃகு உற்பத்தி 44 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1950-இல் அமெரிக்கச் சந்தையில் அமெரிக்கப் பொருட்கள் 95 சதவீதத்தை வழங்கியது. இது 1984-இல் 60 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 40 சதவீதம் அமெரிக்கா அல்லாத அன்னியப் பொருட்களால் அமெரிக்கச் சந்தை நிரம்பியது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பாக சந்தை மீதான நெருக்கடி தொடர்ச்சியாக, மிகவும் கடுமையாகி வருகின்றது. இது உலகளாவிய சந்தைகளில் மட்டுமல்ல, உள்நாட்டிலும் இது பொருந்துகின்றது. அமெரிக்கா வகித்த மேன்மையான பொருளாதாரம், படிப்படியாகத் தகர்ந்து வருகின்றது. இது மூன்றாம் உலக யுத்தத்துக்கான ஒரு புதியநிலைக்கு உந்தித் தள்ளுகின்றது. தன்னைத் தான் தக்கவைக்க இராணுவ ரீதியான ஒரு தாக்குதல் யுத்தத்தை, அமெரிக்கா உலகளாவிய ரீதியில் மற்றைய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வலிந்து தொடங்கியுள்ளது. எந்த மூன்றாம் உலக நாடுகளில் தலையிட்டாலும், ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான முரண்பாட்டில் இருந்தே இவை தொடங்குகின்றது. இது சோவியத் சிதைவின் பின்பான, புதிய ஒரு உலக நிலையாகும். ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான முரண்பாடே, மூலதனத்துக்கு முதன்மை முரண்பாடாகியுள்ளது. எங்கும் ஒரு மூடி மறைக்கப்பட்ட இரகசிய யுத்தம் நடக்கின்றது. இது பகிரங்கமாக அரங்கேறுவது அதிகரிக்கின்றது. இது முழுமையான ஒரு ஏகாதிபத்திய உலக யுத்தமாக மாறுவதை பின்போடவும், அதில் இருந்து தப்பிப் பிழைக்கவும், மூன்றாம் உலக நாடுகள் மேலான சுரண்டல் கடுமையாகி தீவிரமாக்குகின்றனர். இதன் மூலம் பொருளாதார நெருக்கடிகள், ஒரு இராணுவ மோதலாக மாறுவதை பின்போடுகின்றனர்.

இந்தப் பொருளாதார நெருக்கடி பிரிட்டனுக்கும் கடுமையாக ஏற்பட்டது. முன்னாள் காலனிகளைக் கொண்டு பிரிட்டிஷ் மூலதனம் செழித்தோங்கிய காலம் கனவாகிவிட்டது. உலகம் மறுபங்கீடு செய்யப்பட்ட புதிய நிலையில் கடுமையான முரண்பாடுகளுடன் உள்ளது. பிரிட்டன் தொடர்ச்சியாக ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து, தனது தங்கக் கையிருப்பில் இருந்த 145 டன் தங்கத்தை 1999-2002-க்கு இடையில் விற்றது. இன்று மூலதனம் உருவாக்கும் ஏகாதிபத்திய நெருக்கடி என்பது ஒரு நிகழ்ச்சிப் போக்காகிவிட்டது. பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சி வீதம் மந்த நிலைக்குள் சென்றுள்ளது. இது உலகளவில் மூலதனத்துக்கு இடையிலான மோதலைத் தோற்றுவிக்கின்றது. இதுவும் ஏகாதிபத்திய மோதலாக அரங்கில் பிரதிபலிக்கின்றது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான பொருளாதார நெருக்கடி, தவிர்க்கமுடியாது பொருளாதார வளர்ச்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விகிதத்தை மந்த நிலைக்குள் நகர்த்துகின்றது. அதிரடியான பொருளாதாரத் தேக்கம், மூலதனத்துக்கு பீதியை உருவாக்குகின்றது.

**உலகின் பிரதான நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வீதங்கள்**

| | 1950 | 1960 | 1970 | 1980 | 1990 | 1996 |
|---|---|---|---|---|---|---|
| அமெரிக்கா | 8.7 | 2.2 | 0.0 | -0.5 | 1.2 | 1.5 |
| ஜப்பான் | 10.3 | 13.1 | 10.2 | 3.6 | 4.8 | 1.5 |
| மேற்கு ஜெர்மனி | 19.4 | 8.7 | 5.0 | 1.0 | 5.7 | 1.5 |
| பிரிட்டன் | 3.5 | 5.6 | 2.3 | -2.2 | 0.4 | 2.2 |
| சீனா | 11.4 | -5.5 | 15.5 | 4.2 | 3.3 | 9.3 |

பொருளாதார வளர்ச்சி வீதத்தில் சீனா மட்டும் விதிவிலக்காகும். இதை நாம் பின்னால் தனியாகப் பார்ப்போம். ஜப்பான், ஜெர்மனி என்பன இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பாக பொருளாதார ரீதியாக மீண்ட போது ஏற்பட்ட வளர்ச்சி, 1990-களுடன் முடிவுக்கு வந்து விடுகின்றது. 1990-ஆம் ஆண்டு இரண்டு ஜெர்மனிகளும் இணைக்கப்பட்ட போது ஏற்பட்ட அதியுயர் சுரண்டல் சார்ந்த சந்தையில், ஒரு திடீர் வீக்கமே இறுதியான வளர்ச்சியாகக் காணப்பட்டது. பின் ஏகாதிபத்திய முரண்பாடுகள் கூர்மையடைந்து நெருக்கடியான எல்லைக்குள் உலகம் புகுந்துள்ளது. இதில் இருந்து மீள உருவான உலகமயமாதல் கூட, அவர்களுக்கு இடையிலான நெருக்கடியை மட்டுமல்ல, பொருளாதார மீட்சியையும் மீட்டு விடவில்லை. ஏகாதிபத்தியப் பொருளாதாரம் ஒரு நெருக்கடி ஊடான வீழ்ச்சியையே சந்தித்தது, சந்திக்கின்றது. சந்தித்து வருகின்றது. இவை எல்லாம் மூன்றாம் உலக நாடுகளிடம் இருந்து வருடாந்தம் 35,000 கோடி டாலருக்கு மேலாக அறவீடும் வட்டி மற்றும் கடன் மீட்பு என்ற ஏகாதிபத்தியத்தின் பொற்காலத்தில் தான், ஏகாதிபத்திய நெருக்கடிகள் அக்கம்பக்கமாக காணப்படுகின்றன. உண்மையில் ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளில் இருந்து கொள்ளையிடும் பெரும் தொகை செல்வத்தினால் தான் இன்று தப்பிப் பிழைத்து உயிர் வாழ்கின்றது. இதைக் கொண்டு தான் உலகமயமாதலை ஏகாதிபத்தியம் தனக்குத் தானே பூச்சூட்டுகின்றனர்.

உலகமயமாதலூடாக தப்பிப் பிழைக்கும் பொருளாதாரக் கட்டமைப்புக்குள், மூன்றாம் உலக நாடுகளைக் கொள்ளையடிக்கும் ஏகாதிபத்திய வடிவங்கள் பலவகைப்பட்டது. உதாரணமாக 1977-இல் அமெரிக்காவின் தேசங்கடந்த தொழில் நிறுவனங்கள் ஏற்றுமதி



செய்த மூலதனம் 2,11,750 கோடி இந்தியா ரூபாவாகும். ஆனால் இவை அந்நிய நாடுகளில் தொழில் வர்த்தகம் மூலம் கட்டுப்படுத்திய வரவு செலவு 11,34,000 கோடி இந்தியா ரூபாவாகும். அதாவது இது ஐந்து மடங்காகும். எங்கும் ஒரு அராஜகம் மூலம், மனித சமூகத்தை சூறையாடித்தான் ஏகாதிபத்தியங்கள் நீடிக்கின்றன. 1976-இல் வர்த்தக ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கு 12.8 சதவீதமாகும். அதாவது 1,34,100 கோடி இந்தியா ரூபாவாக இருந்தது. அந்நிய வர்த்தகத்தில் உபரி லாபமாக அமெரிக்காவுக்கு கிடைத்த தொகையோ 35,000 கோடி இந்தியா ரூபாவாகும். 1976-இல் நேரடி முதலீட்டின் மூலம் வெளிநாடுகளில் இருந்து லாபமாக கொள்ளையிட்ட தொகை 39,200 கோடி இந்தியா ரூபாவாகும். இதைவிட 1977-இல் சேவைத்துறை, தொழில்நுட்ப வர்த்தக உபரி மட்டும் 1,00,725 கோடி இந்தியா ரூபாவாக இருந்தது. ஏகாதிபத்தியத்தின் கொள்ளைகள் பற்பல வழிகளில் சூக்குமமாகவே நடக்கின்றது. மூன்றும் உலக நாடுகள் 2003-இல் வட்டியாகவும், மீள் கொடுப்பனவாகவும் கொடுத்த தொகை 35,000 கோடி டாலர். அதாவது அண்ணளவாக 17,50,000 கோடி இந்தியா ரூபாவாகும்.

எப்படி ஏகாதிபத்திய உலகமயமாதல் சகாப்தம் தப்பி பிழைக்கின்றது என்பதை, இந்தக் கொள்ளை தெளிவாகவும் சிறப்பாகவும் எடுத்துக்காட்டுகின்றது. மூன்றாம் உலக நாடுகள் வட்டி கொடுத்தலை நிறுத்தினால் ஏகாதிபத்திய உலக சகாப்தமே தகர்ந்துபோகும். ஏகாதிபத்தியங்களின் வரவு செலவில் மூன்றாம் உலக நாடுகள் கட்டும் வட்டி மற்றும் மீள் வரவு, எந்தப் பங்கை வகித்து வருகின்றது என்பதை ஒப்பீட்டளவில் ஆராய்வோம்.

**சில ஏகாதிபத்தியங்களின் தேசிய வருமானம் கோடி டாலரில்**

| | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமெரிக்கா | 526100 | 555400 | 571100 | 602800 | 634200 | 672300 | 703400 | 775100 | 823900 | 869900 | 919200 |
| ஜப்பான் | 289900 | 297000 | 340200 | 371900 | 427500 | 469000 | 513700 | 459900 | 419700 | 378300 | 432000 |
| ஜெர்மனி | 132000 | 164000 | 172000 | 197100 | 191400 | 205100 | 240200 | 238300 | 211400 | 215000 | 211200 |
| பிரான்ஸ் | 96500 | 119500 | 120100 | 132200 | 125000 | 133100 | 153500 | 155400 | 140600 | 144500 | 143200 |
| இத்தாலி | 86900 | 109400 | 115100 | 121900 | 98500 | 101600 | 108800 | 123300 | 116500 | 119100 | 117100 |
| இங்கிலாந்து | 84100 | 97600 | 101200 | 104800 | 94300 | 102000 | 110700 | 117700 | 131600 | 140300 | 141000 |
| கனடா | 54600 | 57300 | 58700 | 56900 | 55300 | 55000 | 57300 | 60100 | 62400 | 59800 | 63500 |

மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்தியத்துக்கு கட்டும் வட்டி மற்றும் மீள் கொடுப்பனவுகள் கனடா ஏகாதிபத்தியத்தின் மொத்த தேசிய வருமானத்தில் 56 சதவீதமாகும். 1999-இல் மூன்றாம் உலக நாடுகளின் கடன் 2,43,000 கோடி டாலராகவும், வட்டி மற்றும் மீள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுப்பனவு 36,000 கோடி டாலராகவும் இருந்தது. இந்த கடன் அமெரிக்காவின் மொத்த தேசிய வருமானத்தில் 26.5 சதவீதமாக இருந்தது. இது ஜெர்மனி தேசிய வருமானத்தை விட அதிகமாகவும் காணப்பட்டது. பிரான்சின் தேசிய வருமானத்தை விடவும் இரண்டு மடங்கு அதிகமாகவே மூன்றாம் உலக நாடுகளின் கடன் இருந்தது. கனடாவின் தேசிய வருமானத்தை விடவும், நான்கு மடங்கு அதிகமாக மூன்றாம் உலக நாடுகளின் கடன் காணப்பட்டது. ஏகாதிபத்தியத்தின் வரவுகளில் வட்டி மற்றும் மீள் கொடுப்பனவு முக்கியமான ஒன்றாகி விட்டது. இப்படி ஏற்றுமதி, நேரடி வர்த்தகம், மறைமுக வர்த்தகம், பங்குச்சந்தை, மூன்றாம் உலக நாடுகளின் ஏற்றுமதி பொருட்களின் மீது திட்டமிட்டு உருவாக்கும் விலை குறைப்பு என்ற ஒரு சுற்று வழிப்பாதையிலான பெரும் கொள்ளைகள் மூலம் தான் ஏகாதிபத்தியம் தப்பிப் பிழைக்கின்றது.

இப்படி தப்பிப் பிழைக்கும் ஏகாதிபத்தியத்தின் மொத்த தேசிய வருமானம் கூட, ஏகாதிபத்திய முரண்பாடுகளால் கூடிக்குறைந்து செல்வதை நாம் மேலே காணமுடிகின்றது. உதாரணமாக ஜப்பானை எடுப்பின் 1987-யுடன் 1988 ஒப்பிடின் வருடாந்தர வருமானத்தில் 41,400 கோடி டாலர் இழப்பு ஏற்பட்டது. இந்த இழப்பை 1994-யுடன் 1998-யை ஒப்பிடின் 90,700 கோடி டாலர் இழப்பாக இருந்தது. இப்படி பல நாடுகளில் தேசிய வருமானம் ஏற்ற இறக்கம் கொண்டதாக அங்கும் இங்குமாக மற்றைய ஏகாதிபத்தியத்துடன் மோதியே வெளிவருகின்றது. ஒன்றையொன்று மிஞ்சமுனையும் அதே தளத்தில், ஏழை நாடுகளை கடுமையாகச் சூறையாடி தம்மைத் தக்கவைக்கவே முனைகின்றது.

ஏகாதிபத்திய கூர்மையான முரண்பாடுகளின் இடையே நடக்கும் ஏற்றுமதி இறக்குமதி குறித்து ஆராய்வோம். 1973-க்கும் 1987-க்கும் இடையிலான காலத்தில் நடந்த ஏற்றுமதி இறக்குமதியை இந்த அட்டவணை ஆராய்கின்றது.

| நாடுகள் | ஏற்றுமதி | | | | இறக்குமதி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1973 சதவீதத்தில் | 1987 சதவீதத்தில் | 1973-இல் உலகில் ஒழுங்கு | 1987-இல் உலகில் ஒழுங்கு | 1973 சதவீ-தத்தில் | 1987 சதவீ-தத்தில் | 1973-இல் உலகில் ஒழுங்கு | 1987-இல் உலகில் ஒழுங்கு |
| ஜெர்மனி | 11.7 | 11.8 | 2 | 1 | 4.1 | 8.8 | 2 | 2 |
| அமெரிக்கா | 12.4 | 10.2 | 1 | 2 | 12.4 | 11.4 | 1 | 1 |
| ஜப்பான் | 6.4 | 9.3 | 3 | 3 | 6.4 | 5.9 | 4 | 5 |
| பிரான்ஸ் | 6.4 | 6 | 4 | 4 | 6.3 | 6.1 | 5 | 3 |
| பிரிட்டன் | 5.2 | 5.3 | 5 | 5 | 6.4 | 5.9 | 3 | 4 |
| இத்தாலி | 3.9 | 4.7 | 9 | 6 | 4.6 | 4.9 | 6 | 6 |
| சோவியத் | 3.6 | 4.3 | 10 | 7 | 3.4 | 3.7 | 10 | 7 |
| சீனா | 1 | 1.6 | 20 | 16 | - | - | - | - |
| மலேசியா | 0.5 | 0.7 | 42 | 30 | - | - | - | - |
| யூக்கோஸ்-லோவியா | 0.5 | 0.5 | 43 | 40 | - | - | - | - |
| மற்றையவை முதல் 40க்குள் இல்லை. | | | | | | | | |

1998-இல் 92 சதவீதமான ஏற்றுமதியைக் கட்டுப்படுத்திய முதல் 30 நாடுகளும் சதவீதத்தில்

| | |
|---|---|
| ஐரோப்பா | 20.3 சதவீதம் |
| அமெரிக்கா | 17 சதவீதம் |
| ஜப்பான் | 9.7 சதவீதம் |
| கனடா | 5.3 சதவீதம் |
| சீனா | 4.6 சதவீதம் |
| ஹாங்காங் | 4.3 சதவீதம் |
| தென்கொரியா | 3.3 சதவீதம் |
| மெக்சிகோ | 2.9 சதவீதம் |
| தாய்வான் | 2.7 சதவீதம் |
| சிங்கப்பூர் | 2.7 சதவீதம் |
| சுவிஸ் | 2.0 சதவீதம் |
| மலேசியா | 1.8 சதவீதம் |
| ரசியா | 1.4 சதவீதம் |
| ஆஸ்திரேலியா | 1.4 சதவீதம் |
| தாய்லாந்து | 1.3 சதவீதம் |
| பிரேசில் | 1.3 சதவீதம் |
| இந்தோனேசியா | 1.2 சதவீதம் |
| நோர்வே | 1.0 சதவீதம் |
| சவுதிஅரேபியா | 1.0 சதவீதம் |
| இந்தியா | 0.8 சதவீதம் |
| 30வது நாடாக வெனிசுவேலா | 0.4 சதவீதம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1985-இல் பிரதேசங்களின் மொத்த உள்நாட்டு வருமானமும் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி கோடி டாலரிலும், மக்கள் தொகை கோடியிலும்

| | மக்கள் தொகை | உள்நாட்டு உற்பத்தி | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|---|
| வடஅமெரிக்கா | 26.4 | 4,30,800 | 29,700 | 42,600 |
| தென்அமெரிக்கா | 40.5 | 72,000 | 10,300 | 8,100 |
| மேற்கு ஐரோப்பா | 38 | 4,12,000 | 77,200 | 79,500 |
| கிழக்கு ஐரோப்பா | 39.1 | 95,100 | 18,000 | 17,100 |
| ஆப்பிரிக்கா | 55.5 | 38,400 | 7,600 | 7,300 |
| மத்திய கிழக்கு | 40 | 41,900 | 9,600 | 9,000 |
| ஆசியா | 266.5 | 2,47,400 | 41,300 | 38,300 |
| உலகம் | 483.7 | 12,42,000 | 1,93,600 | 2,01,900 |

2000-ஆம் ஆண்டில் முன்னணி ஏற்றுமதி நாடுகளும், ஏற்றுமதியின் அளவும் கோடி டாலரில்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | 27,500 கோடி டாலர் | 19.1 சதவீதம் |
| பிரித்தானியா | 10,000 கோடி டாலர் | 7.0 சதவீதம் |
| பிரான்ஸ் | 8,100 கோடி டாலர் | 5.7 சதவீதம் |
| ஜெர்மனி | 8,000 கோடி டாலர் | 5.6 சதவீதம் |
| ஜப்பான் | 6,800 கோடி டாலர் | 4.8 சதவீதம் |
| இத்தாலி | 5,700 கோடி டாலர் | 4.0 சதவீதம் |
| ஸ்பெயின் | 5,300 கோடி டாலர் | 3.7 சதவீதம் |
| நெதர்லாந்து | 5,200 கோடி டாலர் | 3.6 சதவீதம் |
| சீனா (ஹாங்..) | 4,200 கோடி டாலர் | 2.9 சதவீதம் |
| பெல்ஜியம் | 4,200 கோடி டாலர் | 2.9 சதவீதம் |

ஏற்றுமதி இறக்குமதி எப்படி உலகில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் பகிரப்படுகின்றது என்பதையே நாம் மேலே பார்க்கின்றோம். பிரதான ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான இழுபறியையும், ஏகாதிபத்தியம் எப்படி உலகில் உள்ள அனைத்து செல்வங்களின் சொந்தக்காரராக மாறுகின்றனர் என்பதையும் காண்கின்றோம். இங்கு சிதைந்து போன சோவியத் என்ற சமூக ஏகாதிபத்தியத்தின் பலத்தையும் நாம் கணக்கில் எடுக்கக் கூடியதாக உள்ளது. 1985-இல் உலகில் அதிக ஏற்றுமதி செய்த நாடு, முன்னாள்



சோவியத்தாக இருப்பதை நாம் காணமுடியும். தேசிய வருமானத்தை எடுப்பினும் கூட அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் காணப்பட்டது. சமூக ஏகாதிபத்தியமான சோவியத் மிக பெரிய போட்டியாளனாகவே அக்கால கட்டத்தில் இராணுவத் துறையில் மட்டுமல்ல, பொருளாதாரத் துறையிலும் காணப்பட்டது. ஜப்பான், ஜெர்மனி ஏகாதிபத்தியத்துக்கு உள்ளேயே மிகவேகமாக முன்னேறி வந்த இக்காலகட்டத்தில் தான், சோவியத் உலக ஆதிக்கத்துக்காக ஏகாதிபத்திய போட்டியில் குதித்து இருந்தது. சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்ள, மற்றைய ஏகாதிபத்தியத்துக்கு இடையில் ஒரு நெருக்கமான இணக்கப்பாடு காணப்பட்டது. ஆனால் சமூக ஏகாதிபத்தியத்தின் சிதைவின் பின்பு, இவர்களுக்கு இடையிலான இணக்கப்பாடு சிதைந்து இவர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ளது.

1985-இல் வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ரசியா என்ற மூன்று பிரதானமான ஏகாதிபத்திய மையங்கள் மொத்த ஏற்றுமதியில் 76.5 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. 1973, 1987, 2000-ஆம் ஆண்டுகளில் முதல் ஆறு பிரதான ஏற்றுமதியாளர்களும், உலக ஏற்றுமதியில் முறையே 46, 47.3, 46.2 சதவீதத்தைக் கட்டுப்படுத்தினர். இதற்குள் பல ஏற்றத்தாழ்வுகளை உலகம் சந்தித்தது. உதாரணமாக அமெரிக்கா முறையே 12.4, 10.2, 19.1 சதவீத அளவில் உலக ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தியது. 1990-இல் உலக ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கு 18 சதவீதமாகும். இது படிப்படியாக ஏற்ற இறக்கத்துடன் வீழ்ச்சி கண்டு வந்தது. இதேநேரம் ஜெர்மனியை எடுத்தால் முறையே 11.7, 11.8, 5.6 சதவீதத்தை கட்டுப்படுத்திய அதேநேரம், ஏற்றுமதியில் ஒரு சரிவைக் கொடுத்துள்ளது. இந்தச் சரிவுகள் சந்தையில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான நெருக்கடியை அதிகரிக்க வைக்கின்றது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இறக்குமதி கடும் பற்றாக்குறைக்கு வழி வகுத்துள்ளது.

உதாரணமாக 2002-யை எடுத்து ஆராய்ந்தால் அவை அப்பட்டமாக வெளிபடுத்தப்பட்டு நிற்கின்றது. 2002-இல் உலகின் முன்னணி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கோடி டாலரில்

| | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| அமெரிக்கா | 69,350 | 1,20,250 |
| ஜெர்மனி | 61,220 | 49,330 |
| ஜப்பான் | 41,500 | 33,640 |
| பிரான்ஸ் | 2,950 | 32,640 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| சீனா | 32 560 | 26 520 |
| பிரிட்டன் | 27 590 | 33 980 |
| கனடா | 25 250 | 22 760 |
| இத்தாலி | 25 200 | 24 110 |
| நெதர்லாந்து | 24 340 | - |
| பெல்ஜியம் | 21320 | - |
| [1] (ஹாங்காங் உள்ளடக்கவில்லை) | | |

2002-ஆம் ஆண்டு உலகளாவிய ஏற்றுமதி இறக்குமதி பிரதான நாடுகள் சார்ந்த அட்டவணையை நாம் மேலே காண்கின்றோம். உலகமயமாதலின் நேரடி விளைவு ஏற்றுமதி இறக்குமதியின் அளவை பல மடங்காக்கியுள்ளது. அமெரிக்காவின் ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் இடையில் உள்ள ஏற்றத்தாழ்வு இரண்டுமடங்காகி உள்ளது. இந்தப் பற்றாக்குறை சர்வதேச நெருக்கடிக்கு இட்டுச் செல்லுகின்றது. அமெரிக்க டாலர் சர்வதேச நாணயமாக இருப்பதால், அதைக் கொண்டு பெறுமதியற்ற டாலர் நோட்டுகளை சந்தையில் தள்ளி விடுவதன் மூலம், இறக்குமதியிலான பற்றாக்குறையில் இருந்து தப்பி பிழைக்க முனைகின்றனர். டாலர் பெறுமதிக்கு ஏற்பட்ட சரிவு ஈரோவுடன் ஒப்பிடும் போது மிகக் குறுகிய காலத்தில் அண்ணளவாக 30 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டது. இதனால் சர்வதேச நாணயமாக தொடர்ந்தும் டாலர் இருப்பது என்பது கேள்விக்குள்ளாகின்றது. அன்னிய நிதிக் கையிருப்புகள் கணிசமாக ஈரோவுக்கு மாறிவருகின்றது. சர்வதேச வர்த்தகங்கள் கூட டாலருக்கு பதில், ஈரோ மூலம் நிகழத் தொடங்கியுள்ளது. இது கூட ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான முரண்பாட்டையே அதிகரிக்க வைத்துள்ளது. பொதுவாக பல தளத்தில் ஏற்றுமதிச் சந்தை ஏகாதிபத்தியத்துக்கு இடையில் கடும் நெருக்கடியை உருவாக்கி உள்ளதுடன், கடும் போட்டியுடன் போராட வைக்கின்றது. சூதாட்டங்கள் முதல் சதிகள் வரையிலான வர்த்தக ராஜதந்திர மொழியில், ஒன்றையொன்று குழிபறிக்கின்றது.

2000-த்துடன் ஒப்பிடும் போது 2002-இல் ஏற்றுமதி பல மடங்காகியுள்ளது. உலகமயமாதல் நிபந்தனைகள் ஏகாதிபத்தியத்தின் ஏற்றுமதியை திடீரென வீங்கவைத்துள்ளது. மறுபக்கத்தில் மூன்றாம் உலக நாடுகளின் ஏற்றுமதி அதாவது ஏகாதிபத்தியம் நோக்கிய இறக்குமதி மிக மலிவாகவே சூறையாடப்படுகின்றது. சர்வதேச



ரீதியாக மூன்றாம் உலக நாடுகளின் பொருட்கள் மிகக் குறைந்த விலைக்கு வாங்கப்படுகின்றன. இதை தனியாக பிறிதொரு அத்தியாயத்தில் நான் தனியாக ஆராய உள்ளேன். ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களை சந்தைப் பெறுமானத்தில் குறைய வைத்துள்ளது. இதனால் ஏகாதிபத்திய நாடுகளின் நுகர்வின் அளவு அதிகரிப்பதுடன், உலகை அதிகம் சூறையாடுவது உலகமயமாகி விடுகின்றது. எதிர்மறையில் ஏகாதிபத்திய ஏற்றுமதிப் பொருட்கள் சந்தை விலையை அதிகரிக்க வைத்து, மூன்றாம் உலக நாடுகளை மேலும் ஆழமாகச் சூறையாடுவது அதிகரித்துள்ளது. இதன் மூலம் மூன்றாம் உலக நாட்டு மக்கள் சமூகத் தேவையைக் கூடப் பெறமுடியாத வகையில், இழிநிலைக்கு பெரும்பான்மை மக்கள் அன்றாடம் தள்ளப்படுகின்றனர். இப்படி மக்களை வரைமுறையின்றி சூறையாடும் ஏகாதிபத்தியம், யார் அதிகம் நுகர்வது என்ற போட்டியில் ஈடுபடுகின்றது. அதிகம் நுகரும் போது, மற்றவர் அதை இழக்க வேண்டும். இது நுகர்வின் அடிப்படையான இயங்கியல் விதி. அதிகம் நுகரும் போது, ஏழை நாட்டு மக்கள் நுகர்வு வீழ்ச்சி காணும் அதே நேரத்தில், போட்டி ஏகாதிபத்தியத்துக்கு இடையிலும் மோதல் நடக்கின்றது.

இந்த நிலையில் ஏகாதிபத்தியத்தின் ஏற்றுமதிகள் வெள்ளமாகவே திடீரென உலகெங்கும் திறந்து விடப்பட்டுள்ளது. இதுவே உலகமயமாதலின் சிறப்பான எடுப்பான வடிவமாக இங்கு காட்சி அளிக்கின்றது. ஒவ்வொரு வருடமும் நடக்கும் திடீர் ஏற்றுமதி அதிகரிப்புகள் பிரமிப்பைத் தரக் கூடியவை. 2003-ஆம் ஆண்டை எடுத்து 2000, 2002-யுடன் ஒப்பிட்டு பார்த்தாலே புரிந்து கொள்ளமுடியும்.

ஏற்றுமதி இறக்குமதி 2003-இல் கோடி டாலரில்

| | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| ஜெர்மனி | 74,840 கோடி டாலர் | 60,170 கோடி டாலர் |
| அமெரிக்கா | 72,400 கோடி டாலர் | 1,30,560 கோடி டாலர் |
| ஜப்பான் | 47,190 கோடி டாலர் | 38,330 கோடி டாலர் |
| சீனா | 43,840 கோடி டாலர் | 41,280 கோடி டாலர் |
| பிரான்ஸ் | 38,470 கோடி டாலர் | 38,840 கோடி டாலர் |
| பிரித்தானியா | 30,390 கோடி டாலர் | 38,830 கோடி டாலர் |
| நெதர்லாந்து | 29,340 கோடி டாலர் | - |
| இத்தாலி | - | 28,900 கோடி டாலர் |
| உலகம் | 7,48,200 கோடி டாலர் | 7,76,500 கோடி டாலர் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்றுமதி ஒப்பீட்டு அளவில்

| | 2003 | 2002 | 2000 |
|---|---|---|---|
| ஜெர்மனி | 74,840 கோடி டாலர் | 61,220 கோடி டாலர் | 8,000 கோடி டாலர் |
| அமெரிக்கா | 72,400 கோடி டாலர் | 69,350 கோடி டாலர் | 27,500 கோடி டாலர் |
| ஜப்பான் | 47,190 கோடி டாலர் | 41,500 கோடி டாலர் | 6,800 கோடி டாலர் |
| சீனா | 43,840 கோடி டாலர் | 32,560 கோடி டாலர் | 4,200 கோடி டாலர் |
| பிரான்ஸ் | 38,470 கோடி டாலர் | 32,950 கோடி டாலர் | 8,100 கோடி டாலர் |
| பிரித்தானியா | 30,390 கோடி டாலர் | 27,590 கோடி டாலர் | 10,000 கோடி டாலர் |
| உலகம் | 7,48,200 கோடி டாலர் | - | 1,43,980 கோடி டாலர் |

2000-க்கும் 2003-க்கும் இடையில் உலகளாவிய ஏற்றுமதி ஐந்து மடங்குக்கு மேலாகவே அதிகரித்தது. உலகமயமாதலில் உலகம் எப்படி திறந்துவிடப்பட்டுள்ள விபச்சாரச் சந்தையாக, குறுகிய காலத்தில் மாற்றப்பட்டது என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இது நுகர்வின் வடிவங்களில் மிகத் தீவிரமான மாற்றத்தை உலகளவில் ஏற்படுத்தியுள்ளது. தேசிய நுகர்வு சார்ந்த பண்பாடுகள் சிதைக்கப்பட்ட அளவு பலமடங்காக இருப்பதை, சர்வதேச ஏற்றுமதி சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது. தேசிய வளங்கள் சிதைந்து நலிந்து போவதையும், நுகர்வுப் பண்பாடுகள் குறுகிய காலத்தில் மாற்றப்பட்டதையும் எடுத்துக் காட்டுகின்றது. தேசிய நுகர்வு சார்ந்த பன்மையான பண்பாடு அழிக்கப்பட்டு, அதனிடத்தில் அன்னியரின் ஒற்றை நுகர்வு சார்ந்த பண்பாடு உலகளாவிய ஒன்றுாக திறந்துவிட்ட சந்தை உருவாக்குகின்றது. உண்மையில் தேசங்களின் சிதைவையே இது எடுத்துக்காட்டுகின்றது. உலகம் பன்னாட்டு நிறுவனங்களின் குறுகிய நலன் சார்ந்த உலகமயமாவதை எடுத்துக் காட்டுகின்றது.

2003-இல் உலகின் முன்னணி ஏற்றுமதியாளனாக ஜெர்மனி மாறியது. 2000-உடன் ஒப்பிடும் போது 2003-இல் ஏற்றுமதி ஐந்து மடங்காக மாறிய போது, இது ஏகாதிபத்தியத்துக்கு இடையில் ஒரே மாதிரி நிகழவில்லை. ஜெர்மனிய ஏற்றுமதி 9 மடங்கு மேலாக அதிகரித்தது. சீன ஏற்றுமதி 10 மடங்கு மேலாக அதிகரித்தது. ஜப்பானின் ஏற்றுமதி 6 மடங்கு மேலாக அதிகரித்தது. அமெரிக்காவின் ஏற்றுமதி 2.6 மடங்காக அதிகரித்தது. தீவிரமான ஏகாதிபத்திய மோதலூடாகவே இந்த அதிகரிப்பு நிகழ்கின்றது. உலகமயமாதலின் இலாபங்களைப் பகிர்வதில் கடுமையான ஏகாதிபத்திய முரண்பாடுகள் இருப்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. இதற்குள்



சீனாவும் குதித்துள்ளது. சோவியத் சிதைவின் பின்பு புதிதாக சீனா களத்தில் குதித்துள்ளது.

## சமூக ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையில் நிலவிய முரண்பாட்டின் அடிப்படை

2002-இல் நடந்த ஏற்றுமதியை 2003-உடன் ஒப்பிடும் போது மிகக் குறுகிய காலத்தில் உலக அளவிலான ஏகாதிபத்திய முரண்பாடுகளை தெளிவாக இனம் காணமுடியும். ஒப்பீட்டு அளவில் ஜெர்மனிய ஏற்றுமதியை எடுத்தால் 13,620 கோடி டாலரால் அதிகரித்தது. அமெரிக்கா ஏற்றுமதி 3050 கோடி டாலரால் அதிகரித்தது. சீனா ஏற்றுமதி 11,280 கோடி டாலரால் அதிகரித்தது. ஜப்பானிய ஏற்றுமதி 5,690 கோடி டாலரால் அதிகரித்து. ஏகாதிபத்தியத்துக்கு இடையில் ஒரு கடுமையான வீச்சான மோதல் நடக்கின்றது. சந்தையை யார் அதிகம் ஆக்கிரமிப்பு செய்வது என்பதில் கடுமையாகவே மோதுகின்றன. இது தேசங்கடந்த உள்நாட்டு இராணுவ மோதலாக, இராணுவ ஆக்கிரமிப்பாக மாறி வருகின்றது.

ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான சர்வதேச நெருக்கடி இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பாக ஒரு வீச்சில் நடக்கவில்லை. சோவியத்யூனியன் 1960-களில் மார்க்சியத்தை கைவிட்டு ஒரு சமூக ஏகாதிபத்தியமாக பரிணமித்த பின்பு, புதிய ஒரு நெருக்கடி உருவாகியது. 1960-க்கு முந்திய நிலையில் ஏகாதிபத்தியத்துக்கு சோவியத் நெருக்கடி என்பது, ஒவ்வொரு ஏகாதிபத்தியத்தினதும் உள்நாட்டு வர்க்கப் போராட்டத்தில் ஒரு அங்கமாக இருந்தது. ஒவ்வொரு நாடும் சொந்த நாட்டு வர்க்கப் போராட்டத்தைக் கண்டு பீதிக்குள்ளாகியது. இந்த வர்க்கப் போராட்டத்தை சோவியத் அபாயமாக ஏகாதிபத்தியங்கள் கண்டு அஞ்சின. உழைக்கும் மக்களின் போராட்டங்களே உலகின் நிகழ்ச்சி நிரலாக இருந்தன. இதனால் ஏகாதிபத்தியங்கள் காலனிகளை கைவிட்டு, தமது பொம்மை ஆட்சிகளை உருவாக்க நிர்ப்பந்தித்தது. இதுவே நாடுகளின் சுதந்திரங்கள் என்ற பெயரில் ஏகாதிபத்தியங்களால் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டவை.

1960-க்கு பின்பாக சோவியத் வர்க்கப் போராட்டத்தை கைவிட்ட நிலையில், உலக சந்தையைக் கைப்பற்றும் போட்டியில் மற்றைய ஏகாதிபத்தியத்துடன் ஈடுபட்டது. வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு தன்னை ஒரு சமூக ஏகாதிபத்தியமாக மாற்றியதன் மூலம், ஏகாதிபத்திய போட்டி மூர்க்கமாகியது. ஏகாதிபத்தியம் வர்க்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டங்களைக் கண்டு அஞ்சிய காலம் முடிவுக்கு வந்தது. மாறாக உலகை மீள புதிய வடிவில் பகிர்வது முன்னுக்கு வந்தது. உலகம் இரண்டு போட்டி ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான, சந்தைப் பகிர்வை முன்னிலைப்படுத்தியது. அமெரிக்கா தலைமையில் பல ஏகாதிபத்தியங்கள் ஒன்றாக முன்நின்று, சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்த்தே தனது மூலதனத்தை தக்கவைத்துக் கொள்ளப் போராடியது. ரசிய ஏகாதிபத்தியம் ஒரு சமூக ஏகாதிபத்தியமாக இருந்ததால், முன்னர் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டுப் போராடிய பரந்துபட்ட மக்களை ஏமாற்ற முடிந்தது. தனது சமூக ஏகாதிபத்தியமயமாதலையே வர்க்கப் போராட்டமாக முன்வைத்து, உலகில் உள்ள பரந்துபட்ட மக்களை தனக்கு பின்னால் திரட்ட முனைப்புக் கொண்டது. சமூக (மக்கள்) மற்றும் ஏகாதிபத்தியம் என்ற இரண்டு பலமான கூறுகளைக் கொண்டிருந்ததால், ஏகாதிபத்தியங்கள் சோவியத்தை எதிர் கொள்வதில் கடுமையான ஒன்று குவிந்த தற்காப்பை நடத்த வேண்டியிருந்தது.

சமூக ஏகாதிபத்தியத்தின் துணையுடன் அவர்களின் ஏகாதிபத்திய போக்கை ஏற்றுக் கொண்டு இயங்கத் தொடங்கிய நாடுகள், உலக நாடுகளின் தேசிய வருவாயில் 25 சதவீதத்தையும், உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கையும், அடிப்படை எரிபொருள் சக்தியில் 30 சதவீதத்தையும் உலகளவில் கட்டுப்படுத்தின. இதன் மூலம் மிகப் பெரும் போட்டியாளனாக மாறி, மற்றைய ஏகாதிபத்தியங்களுக்குச் சவால் விடும் நிலைக்கு வளர்ச்சியுற்றது. ரசிய சமூக ஏகாதிபத்தியம் மேற்கத்திய தேசங்கடந்த தொழில் கழகம் போல், உலகளாவிய சோசலிச தொழில் கழகங்களை நிறுவியது. ஏகாதிபத்திய தேசங் கடந்த நிதி மூலதன வங்கிகள், சர்வதேச நாணய மற்றும் நிதி மூலதன கூட்டுகளைப் போல் சமூக ஏகாதிபத்தியம் சர்வதேசப் பொருளாதாரக் கூட்டுறவு வங்கி மற்றும் சர்வதேச முதலீட்டு வங்கியை நிறுவியது. சமூக ஏகாதிபத்திய வேலைப் பிரிவினையை சர்வதேச சோசலிச வேலைப்பரிவினை என்று பிரகடனம் செய்தது. இப்படி இரண்டு ஏகாதிபத்திய சந்தை, வேலைப் பிரிவினை உலகளாவிய ரீதியில் ஒன்றையொன்று எதிர்த்து மக்களைச் சூறையாடியபடி வளர்ச்சியுற்றது. ரசிய ஏகாதிபத்தியம் ஒரு சமூக ஏகாதிபத்தியமாக இருந்ததால், அது பலம் கூடிய ஒன்றாகவும், மற்றைய ஏகாதிபத்தியம் பெற்றிராத ஒரு ஆயுதத்தையும் கொண்டிருந்தது. இந்த சமூகக் கூறுகளைச் சொந்த நாட்டில் மட்டுமல்ல, மற்றைய நாட்டு உழைக்கும் வர்க்கத்தையும் இதனடிப்படையில் பயன்படுத்திக் கொண்டது. சமூக ஏகாதிபத்தியம்



உலகளவில் ரூபிள் நாணயச்சந்தை, சமனற்ற ஒப்பந்தம், சமனற்ற வர்த்தகம், போன்றவற்றை உருவாக்கியது. வேலைப் பிரிவினையை உருவாக்கி, ரசிய ஏகாதிபத்திய பொருளாதார நலன்களுடன் இணைத்துக் கொண்டது.

இதன் மூலம் ரசியா சமூக ஏகாதிபத்தியத்தின் பொருளாதார வலிமை உலகில் பலமான ஒன்றாக மாறியது. 1976-இல் அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தி 28,58,500 கோடி இந்தியா ரூபாவாக இருந்தது. ரசியாவினுடையது 16,27,500 கோடி ரூபாவாக இருந்தது. அமெரிக்கா மற்றும் ரசியாவின் ஆலை உற்பத்தி ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டனின் மொத்த உற்பத்தியை விட அதிகமானதாக இருந்தது. இதன் மூலம் சமூக ஏகாதிபத்தியத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைந்தது. சர்வதேசச் சந்தையைக் கைப்பற்றுவதில் கடுமையான இழுபறிக்குள் உலகம் சென்றது. தொடர்ச்சியான ஆட்சிக் கவிழ்ப்புகள், ஆக்கிரமிப்புகள் பரஸ்பர நியாயப்படுத்தலுடன் உலகின் பொது நிகழ்ச்சி நிரலாகியது. மூலதனத்தின் அடங்காத வெறி எங்கும் தலைவிரித்தாடியது. இதுவே இன்றைய நிலையும் கூட.

யுத்த விளிம்புவரை தம்மைத்தாம் தயார் செய்தனர். ஒன்றையொன்று மிஞ்ச முனைப்புக் கொண்டனர். ரசிய சமூக ஏகாதிபத்தியம், அமெரிக்க இராணுவ வலிமையை எட்டிப்பிடிக்கப் போட்டியிட்டது. அணுவாயுதம், மரபுவழி ஆயுதங்கள், கடற்படையிலும் அமெரிக்காவை மிஞ்சியது. உலகைப் பதட்ட நிலைக்குள் தள்ளிச் சென்றதுடன், தாக்குதல் நிலைக்குள் நகர்ந்தனர். அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் தற்காப்பு நிலை எடுத்தது எதிர்த் தாக்குதலை நடத்த காத்து இருந்தனர்.

மறுபக்கத்தில் 1980 சமூக ஏகாதிபத்தியம் என்ற உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியமயமாதலில் சமூகம் என்ற உள்ளடக்கத்தை படிப்படியாக, முற்றாகத் துறந்த போது, சமூக ஏகாதிபத்தியக் கட்டமைப்பே தகர்ந்து போனது. சமூக ஏகாதிபத்தியம் தனது ஏகாதிபத்திய நோக்கில் உலகளவில் சமூகக் கூறுகளை தனக்கு எதிராக நிறுத்தியது. இதனால் ரசிய ஏகாதிபத்தியம் மற்றைய ஏகாதிபத்திய சமூக விரோதக் கூறுகளை, எதிர்கொள்ள முடியாது திணறியது. இதனால் சமூக ஏகாதிபத்தியம் தனது பலத்தில் ஒரு நெருக்கடியை சந்தித்தது. அமெரிக்கா தலைமையிலான போட்டி ஏகாதிபத்தியம் தற்காப்பில் இருந்து விலகி, தாக்கி அழிக்கும் தந்திரத்தை ரசிய சமூக ஏகாதிபத்தியம் மீது நடத்தியது. இதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈடுகொடுக்க முடியாது சமூக ஏகாதிபத்தியம் சிதறி, அதன் கட்டுப்பாட்டில் இருந்த பொருளாதார, இராணுவக் கட்டமைப்பே சிதைந்து போனது. போட்டியாளன் திடீரென சந்தையில் காணாமல் போனான். அமெரிக்கா தனித்துவமிக்க ஏகாதிபத்தியமாக தன்னை மாற்றியது. ரசிய ஏகாதிபத்தியம் நலிந்து போன ஒரு ஏகாதிபத்தியமாக தன்னைத் தக்கவைத்துக் கொண்டு, மற்றைய ஏகாதிபத்தியத்துடன் கூடி நின்று அங்குமிங்கமாக ஏகாதிபத்திய புதிய நெருக்கடிக்கும் தன்னை புனர்நிர்மாணம் செய்ய முனைப்புக் கொள்கின்றது.

சமூக ஏகாதிபத்தியத்தின் தகர்வுகளினால் அது கட்டுப்படுத்தி இருந்த பொருளாதார நலன்களை அடைவதில், அமெரிக்காவின் தலைமையில் இருந்த ஏகாதிபத்தியத்துக்கு இடையில் ஒரு போராட்டம் தொடங்கியது. இந்தப் போராட்டம் வளர்ச்சியுற்று புதிய முரண்பாடாக மாறிவிட்டது. முன்னாள் சமூக ஏகாதிபத்தியத்தின் நலன்கள் பகிரப்பட்டு முதிர்வுற்ற நிலையில், உலகில் மீண்டும் பொருளாதார மந்தநிலை ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான அச்சுறுத்தலாக மாறியது. இவர்களுக்கு இடையில் மோதல் கூர்மையடைந்தது. இதை ஈடுகட்ட உலகமயமாதல் என்ற பொருளாதாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இது உலகை அதியுயர்ந்த பட்சம் சூறையாடுதல் ஊடாக ஏகாதிபத்திய முரண்பாட்டை மட்டுப்படுத்த எடுத்த முயற்சியும் கூட நெருக்கடிக்குள்ளாகி வருகின்றது. இவை ஏகாதிபத்திய போட்டியை புதிய தளத்துக்கு நகர்த்தியுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் என்ற மூன்று பிரதானமான ஏகாதிபத்திய மையங்களுக்கு இடையிலான மறுபங்கீட்டை அடிப்படையாக கொண்ட இழுபறியான ஒரு யுத்தம் தொடங்கியுள்ளது.

1990-களில் மேற்கு ஜெர்மனி ஐரோப்பிய நாடுகளுக்குள் 19 சதவீத சனத்தொகை கொண்ட ஒரு நாடாக இருந்தது. மொத்த உற்பத்தியில் 22 சதவீதமும், 31 சதவீத ஏற்றுமதியையும் கொண்டிருந்தது. ஐரோப்பிய கூட்டு பலம் உலகில் ஒரு பலமான சக்தியாக முன்னேறியது. இராணுவ ரீதியாக 1985-களில் ரசியா 39 இலட்சம் பேரைக் கொண்ட படையாக இருந்த போது, ஐரோப்பாவின் படைப்பலம் 32.61 இலட்சமாகவும், அமெரிக்கப் படைபலம் 22.46 இலட்சமாகவும் இருந்தது. இந்த நிலையில் ஐரோப்பாவுக்குள் ஜெர்மனி முன்னிலை சக்தியாக வளர்ச்சியுற்றது. 1980-இல் வருடாந்தம் 4.6 சதவீத வளர்ச்சியை எட்டியது. 1990-இல் 22,80,000 கோடி இந்தியா ரூபாயை தேசிய வருமானமாகக் கொண்டு இருந்தது. ஜெர்மனியின் ஏற்றுமதி



1989 முதல் ஏழு மாதத்தில் 18 சதவீதமாக அதிகரித்தது. வர்த்தக உபரி 1,46,300 கோடி இந்தியா ரூபாவாகியது.

1989-இல் ஜப்பானை எட்டிப்பிடித்த மேற்கு ஜெர்மனியின் வெளிநாட்டுச் சொத்தின் மதிப்பு 42,57,000 கோடி இந்தியா ரூபாவாகியது. ஏற்றுமதி வர்த்தக உபரி 1,53,900 கோடியாகியது. இக்காலத்தில் கிழக்கு ஜெர்மனி இணைந்தது. இது இணையும் போது மிகப் பெரிய பொருளாதார வளத்துடனேயே இணைந்தது. கிழக்கு ஜெர்மனியின் தனிநபர் வருமானம் ஸ்பெயினை விடவும் அதிகமாகவே இருந்தது. 60 சதவீதம் உள்நாட்டு உற்பத்தி திறனைப் பெற்றிருந்தது. கிழக்கு ஜெர்மனியின் கடன் வெறும் 7,600 கோடி இந்தியா ரூபாதான். ஆனால் அதன் கையிருப்பு 34,200 கோடி இந்தியா ரூபாவாக இருந்தது. இந்த நாடு மேற்கு ஜெர்மனியுடன் இணைந்த போது, ஐரோப்பிய நாடுகளுக்கு இணையான சமாந்தரமான பலத்துடன் தான் இணைக்கப்பட்டது.

கிழக்கு ஜெர்மனி இணைக்கப்பட்ட போது மொத்த சனத் தொகை 27 சதவீதத்தால் அதிகரித்தது. அதன் நிகர உள்நாட்டு உற்பத்தித் திறன் 24 சதவீதத்தால் அதிகரித்தது. அதாவது 2,04,630 கோடி இந்தியா ரூபாவாகியது. அதன் ஏற்றுமதி 81,32,000 கோடி இந்தியா ரூபாவாகியது. ஜெர்மனியின் நிகர தேசிய வருவாய் 2,60,87,000 கோடி இந்தியா ரூபாவாகியது. வருவாயில் 20 சதவீதத்தை மறுமுதலீடு செய்தது. 1989-ஆம் ஆண்டுக்கு முன்பே மேற்கு ஜெர்மனி கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி 70,300 கோடி இந்தியா ரூபாவாக இருந்தது. இதில் கிழக்கு ஜெர்மனிக்கு மூன்றில் ஒன்றை செய்தது. ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து பெரிய அளவில் நிதி மூலதனத்தை கிழக்கு ஐரோப்பாவுக்குள் ஜெர்மனி ஏற்றுமதி செய்தது. கங்கேரியில் 700 தொழில் நிறுவனங்களில் பாதிக்கு மேல் மேற்கு ஜெர்மனியுடையதாக இருந்தது. ரசியாவில் 1,000 மேற்பட்ட நிறுவனங்களுடன் கூட்டுத் தொழிலை தொடங்கியிருந்தது. ஒன்றிணைவின் பின் ஐரோப்பாவில் ருசியாவுக்கு அடுத்த, மிகப் பெரிய அதி நவீன இராணுவமாக மாறியது. சோவியத் சிதைக்கப்பட்டவுடன் அதில் அதிக லாபங்களை ஜெர்மனியே பெற்றது. இதற்கு கிழக்கு ஜெர்மனிய முன்னைய உறவுகள் வழிவகுத்தன. ஜெர்மனிய ஏகாதிபத்தியம் மிகப் பலம் பொருந்திய ஒன்றாக மாறியது. இப்படி ஏகாதிபத்திய பொருளாதார வளர்ச்சி, ஏகாதிபத்திய முரண்பாடுகளை புதிய தளத்துக்கு மாற்றியமைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுபக்கத்தில் ஜப்பான் மிகவேகமாக வளர்ச்சியுற்றது. அதி நவீன தொழில் நுட்பம் சந்தை, ஜப்பான் பக்கம் காற்றை வீசப் பண்ணியது. 1965 முதல் ஜப்பானியப் பொருளாதாரம், இரண்டு சர்வதேச எண்ணெய் நெருக்கடி ஆண்டுகளைத் தவிர. (1973-75, 1979-80) உபரியாகவே இருந்துள்ளது. 1965-இல் ஜப்பானின் உபரி 1,900 கோடி இந்தியா ரூபாவாக இருந்தது. இது 1975-இல் பத்து மடங்காக மாறியது. 1985-இல் 90 மடங்காகியது. குவிந்த ஜப்பானின் அன்னியச் செலவானி வெளிநாட்டு முதலீடாகவும், நிதி மூலதனமாகவும் மாறியது. இது அமெரிக்காவின் தொழில் துறையை விலை பேசி வங்கியது. ஜப்பானிய நிதி மூலதனம் உலகெங்கும் புகுந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிமடியிலும் தங்கத் தொடங்கியது. அமெரிக்கப் பொருளாதாரம் அன்னிய நாடுகளின் உபரியில் வீங்கி பெருவடிவம் எடுத்துள்ளது. அதேநேரம் உலகிலேயே மிகப்பெரிய கடனாளி நாடாக அமெரிக்கா மாறிவிட்டது.

உண்மையில் சமூக ஏகாதிபத்தியம் 1980-களில் தொடங்கிய பத்தாண்டுகளில் தொடர்ச்சியாகச் சிதைந்தபோது, ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான புதிய பங்கீடுகள் தொடங்கியது. இது அமைதியாகவும் அதேநேரம் கடும் மோதலுடனும் ஆரம்பமாகியது. எங்கும் அதிர்வுகள் எதார்த்தமான ஏகாதிபத்திய மோதலுக்கு அறைகூவியது. இந்த மோதல்கள் ஐரோப்பிய ஒன்றிணைவைத் துரிதமாக்கியது. அமெரிக்காவை நேரடியாக எதிர்கொண்ட ஐரோப்பிய நாடுகள், தனித்தனியாகப் போராட முடியாது திண்டாடின. அமெரிக்காவுக்கு எதிராக பொருளாதாரம் இராணுவப்பலம் என எதிலும் தனித்தனியாக நீடிப்பது சாத்தியமில்லை என்ற நிலை, ஐரோப்பிய இணைவைத் துரிதமாக்கியது. இந்த இணைவில் முதலில் 12 நாடுகள் தம்மை இணைத்துக் கொண்டன. இதன் மூலம் உலகையும், மற்றைய போட்டி ஏகாதிபத்தியத்தையும் எதிர்கொண்டு மோதத் தொடங்கியது.

இந்த நிலையில் 1984-இல் 12 ஐரோப்பிய நாடுகள் மொத்த ஆலை உற்பத்தி அமெரிக்காவின் உற்பத்தியை விட 13.4 சதவீதம் அதிகமானதாக மாறியது. ஜப்பானை விட 2.3 மடங்கு அதிகமாகியது. ஏற்றுமதி அமெரிக்காவை விட 2.8 மடங்கு, ஜப்பானை விட 3.6 மடங்கும் அதிகமாகவும் மாறியது. 2004-இல் ஜெர்மனி மட்டும் அமெரிக்காவின் ஏற்றுமதியின் அளவைக் கடந்துள்ளது. உண்மையில் 1980-களில் சோவியத் சிதைவுடன் அக்கம்பக்கமாகவே ஏகாதிபத்திய மோதல்கள் ஆரம்பமாகின. இது ஒன்றுபட்ட பல கூட்டுப் பிராந்தியங்களை உருவாக்கியது. புதிதாக ஈரோ நாணயம் சந்தையில்



ஐரோப்பா அறிமுகப்படுத்தியதன் மூலம், டாலர் ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. எங்கும் ஒரு நிழல் யுத்தம் தொடங்கியுள்ளது. தமக்கு இடையிலான தீவிரமான மோதலைத் தவிர்க்க கூட்டாக உருவாக்கியதே உலகமயமாதல். அதில் அரசு சொத்துக்கள் முதல் தனியார் தேசிய சொத்துக்களையும் கொள்ளை அடிப்பதை அடிப்படையாகக் கொண்டே உலகமயமாதல் நிபந்தனைகள் உருவாக்கப்பட்டது. இவை என்ன எனத் தெரியாத வகையில், கையெழுத்துகள் மட்டும் மூன்றாம் உலக நாடுகளிடம் வாங்கப்பட்டன.

இந்த நோக்கில் ஏகாதிபத்திய மூலதனங்கள் மூன்றாம் உலக நாடுகளை அதிகளவில் கொள்ளையடித்தல் என்ற போட்டியில் குதித்துள்ளதுடன், அவை தமக்கு இடையில் போட்டி போடுகின்றன. மக்களின் வாழ்வியலை பாதுகாத்த அதேநேரம் அவர்களின் உரிமையாக இருந்த தேசிய சொத்துக்களை வாங்கிக் குவிப்பது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. இதன் போது, அதிக தேசிய அரசு சொத்துக்களை கொண்டிருந்த சில நாடுகளிடம், சொத்துக்களை விற்பதன் மூலம் மூலதனம் குவியத் தொடங்கியது. அதேபோல் அதிக மலிவான உழைப்பைக் கொண்டதும், அதிகம் சுரண்டக்கூடிய நாடுகளிடம் மூலதனத்தின் திரட்சி நிகழத் தொடங்கியது. இந்த வகையில் நவீனத் தொழில் நுட்பத்தை இயக்கவல்ல கல்வி அறிவு பெற்ற சீனா, மிக மலிவான கூலியுடன் உலகச்சந்தையையே ஆட்டம் காண வைக்கின்றது. அரசு சொத்துக்களை அன்னியருக்கும் உள்நாட்டிலும் விற்பதன் மூலம் பெரும் மூலதனங்களின் திரட்சியை பெறத் தொடங்கியது. இது சீன மூலதனத்தின் எல்லை இல்லாத வீக்கத்தை உருவாக்குகின்றது. உலகில் ஏகாதிபத்திய முரண்பாடுகளுக்கு தனது நாட்டிலேயே களம் அமைத்து கொடுத்துள்ளதுடன், இந்த முரண்பாட்டில் சீனாவும் தன்னை இணைக்கத் தொடங்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 9. மனித உழைப்பு சீனாவில் உயர் வீதத்தில் சுரண்டப்படுவதால், உலகளாவிய மூலதனத்தையே அதிர்வுக்குள்ளாக்குகின்றது.

சீன உற்பத்திகள் உலகமயமாதலில் ஒரு அதிர்வை உருவாக்குகின்றன. ஏகாதிபத்திய மூலதனங்களை அங்கும் இங்குமாக ஓடவைக்கின்றன. இன்றைய நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த உலகச் சந்தையின் விலையையும், பல நிறுவனங்களின் திவாலையும் தீர்மானிக்கும் நாடாக சீனா மாறி விட்டது. உலக உற்பத்தி மற்றும் விற்பனைச் சந்தையின் விலைகள் பலவற்றை, சீன உற்பத்திகளே தீர்மானிக்கத் தொடங்கி விட்டன. சீன உற்பத்திகள் உலகச் சந்தையில் பல அதிர்வுகளை, தொடர்ச்சியாகவே நாள் தோறும் ஏற்படுத்துகின்றன. எதிர்மறையில் ஏகாதிபத்திய மூலதனங்கள், அதிக இலாபவெறி தலைக்கேற, போட்டி போட்டுக் கொண்டு சீனாவில் தனது மூலதனத்தைக் குவித்தது, குவித்து வருகின்றது. இதன் மூலம் மலிந்த கூலியில் அதிக நவீன உற்பத்தியும், உற்பத்திகளில் அராஜகத்தையும் உலகெங்கும் உருவாக்கியுள்ளது. இதனால் உலகச் சந்தை கடுமையான தொடர் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. நவீன தொழில்நுட்பமும், நவீன உபகரணங்களும் கூட முழுக்க முழுக்க சீனாவில் உற்பத்தியாகி வருகின்றது. அதிக லாப வெறிகொண்ட உற்பத்திகள் தவிர்க்க



முடியாது, சீனாவில் ஒரு மூலதனத் திரட்சியை உருவாக்கியது, உருவாக்குகின்றது. இன்னுமொரு பக்கத்தில் சீனாவின் தேசிய சொத்துக்களை விற்பதன் மூலமும் கூட, ஒரு மூலதனத் திரட்சி உருவாகின்றது. மறுபக்கத்தில் சீனா அரசு மக்கள் நலத் திட்டங்களை கைவிட்டுவருவதன் மூலம், ஒரு மூலதனத் திரட்சியை உருவாக்குகின்றது. இவற்றை அடிப்படையாக கொண்டு உருவாகும் மூலதனத்தைக் கொண்டு, சீனா ஒரு போட்டி ஏகாதிபத்தியமாக மாறி வருகின்றது.

2003-இல் உலகளவில் அன்னிய மூலதனத்தை அதிகம் இட்ட நாடாக சீனா மாறியது. அமெரிக்காவில் பெரும் நிதி மூலதனத்தை சீனா முதலிட்டு உள்ளது. அமெரிக்காவின் கடனில் சீனாவின் நிதி மூலதனம் கணிசமானது. சீன உற்பத்திகள், அமெரிக்காவின் வர்த்தகத்தில் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது. ஈராக் எண்ணெய் வயல் முதல் சூடான் எண்ணெய் வயல் வரை சீன மூலதனத்தின் ஊடுருவல் அதிகரித்துள்ளது. இன்று அனைத்து துறைகளிலும் சீன மூலதனம் ஊடுருவுகின்றது. இவைகளுக்கு எதிராகவே அமெரிக்காவின் இராணுவ ஆக்கிரமிப்புகள் அரங்கேறும் நிலைக்கு, உலகம் சென்றுவிடுகின்றது. சீனா உலகில் பல துறைகளில், விரிவாகத் தலையிடத் தொடங்கியுள்ளது. மிகப் பெரிய பொருளாதார நாடாக மாறும் நிலையை எதிர்வுகூறும் அளவுக்கு, முதலாளித்துவ பொருளாதார வல்லுனர்கள் அங்கலாய்க்கின்றனர். சீனா உலகின் முதன்மையான தேசிய வருவாயைப் பெற்று பலம் பொருந்திய ஒரு நாடாக மாறும் என்ற எச்சரிக்கையை, முதலாளித்துவ அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. ஏகாதிபத்தியத்தின் அதிக லாபவெறி, கணிசமாக மூலதனத்தின் இருப்பிடத்தையே இடமாற்றுகின்றது. மேற்கில் சீனப் பொருட்கள் சந்தையை ஆக்கிரமிக்கும் போது, மேற்கின் பணம் கணிசமாக சீனாவுக்குள் சென்றுவிடுகின்றது. இது மலிவான கூலியை உடைய சீனாவில், பெரும் மூலதனமாகி உலங்கெங்கும் தனது காலை அகலவைத்து உலக மூலதனத்தையே தன்னை நோக்கிக் கவர்ந்திழுக்கின்றது.

1973-இல் உலக ஏற்றுமதி அளவில் ஒரு சதவீதத்தையே சீனா கொண்டு இருந்தது. இது 1987-இல் 1.6 சதவீதமாகியது. 2000-இல் ஹாங்காங் உள்ளடங்க 2.9 சதவீதமாகியது. இது 2002-இல் 4.5 சதவீதமாக அதிகரித்தது. இது என்றுமில்லாத வேகத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. இந்த அளவீடு டாலரின் பெறுமதியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையிலானது. உள்நாட்டு பெறுமதியின் அடிப்படையில் இது பிரமாண்டமான ஒன்றாகியது. உண்மையில் இதன் விளைவாக உலகில் கடல் மூலமான ஏற்றுமதி வர்த்தகத்தையே சீனா கைப்பற்றி முதலிடத்தை வகிக்கின்றது. 2004-இல் 245 கோடி டன் பொருட்களை சீனா துறைமுகங்கள் ஊடாக நடத்தியது. இது 1993-யை விட 25 சதவீதம் அதிகமாகும். சீனாவின் 8 துறைமுகங்கள் குறைந்தபட்சம் 10 கோடி டன்னுக்கு மேலாக பொருட்களை நகர்த்தியுள்ளது. 1999-இல் இப்படி இரண்டு துறைமுகங்களே சீனாவில் இருந்தன. நிலைமை எப்படி அதிரடியாகவே மாறியது என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

சீனாவின் உலக வர்த்தகம் 2003-இல் 7.5 சதவீதத்தால் அதிகரித்த போது, உலகளாவிய ஏற்றுமதியில் சீனாவின் பங்கு 5.85 சதவீதமாகியது. 2000-ஆம் ஆண்டில் சீன ஏற்றுமதி 4200 கோடி டாலர் மட்டுமே. இது உலகில் 9-வது இடத்தில் காணப்பட்டது. 2002-இல் சீனா ஏற்றுமதி 32,350 (ஹாங்காங் உள்ளடக்கப்படவில்லை) கோடி டாலராக இருந்த அதேநேரம், உலகின் ஐந்தாவது ஏற்றுமதியாளனாக மாறியது. 2003-இல் ஏற்றுமதி 43,840 கோடி டாலராக மாறியதுடன், உலகில் நான்காவது மிகப் பெரிய ஏற்றுமதியாளனாகவே சீனா மாறியது. அதாவது சீன ஏற்றுமதிகள், 2000-ஆம் ஆண்டுக்குப் பிந்திய நான்கு வருடங்களில் பத்து மடங்கு மேலாக அதிகரித்துள்ளது. அத்துடன் உலக ஏற்றுமதி வரிசையில் 9-வது இடத்தில் இருந்து 4-வது இடத்துக்கு வந்துள்ளது. மறுபக்கம் சீனாவில் அதிக லாபத்தை பெற்றுத்தரும் ஏகாதிபத்திய உற்பத்திகள், அவர்களுக்கு எதிரான வகையில் எதிர்மறையில் வளர்ச்சியுறுகின்றது. மூலதன முரண்பாடுகளின் ஒரு சிறப்பான எடுப்பான வடிவமே இது. உண்மையில் மிகப் பெரிய நாடுகளுக்குள், விதிவிலக்கான ஒன்றாகவே சீனா உள்ளது.

சீனாவில் உற்பத்திக்கான மனிதக் கூலி உலகளவில் மிகக் குறைவானது. இதனால் மலிவு உற்பத்திகள் மூலதனத் திரட்சிக்கான ஒரு சூழலை உருவாக்கி விடுகின்றது. சீனாவின் கம்யூனிசத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதாரக் கட்டமைப்பை முதலாளித்துவமாக மாற்றிய போது, மிகப் பெரிய தேசிய சொத்துகள் அரசின் கையில் குவிந்து கிடந்தது. இந்த நிலையை, உலகில் வேறு எந்த நாடும் கொண்டிருக்கவில்லை. இதை தனியார் மயமாக்கத் தொடங்கிய போது, பெரும் மூலதனங்கள் குவிவது



தவிர்க்க முடியாததாகியது. மறுபக்கத்தில் தேசிய வருமானத்தை மக்களின் வாழ்வாதாரங்களுக்கு பயன்படுத்திய முந்திய நிலையை சீன அரசு கைவிட்டதன் மூலமும், முந்திய சமூக நலத் திட்டங்களையும் முழுமையாக வெட்டியது. இதன் மூலம் பெரும் மூலதனங்கள் திடீரென திரளத் தொடங்கியது. இந்த பெரும் மூலதனத்தைக் கொண்ட ஒரு மக்கள் விரோதக் கும்பல் உதித்தெழுவதை துரிதமாக்கியது. இதைவிட மிக குறைவான கூலியைக் கொண்ட, பெரும் நவீன தொழில் நுட்பத்தைக் கையாளும் திறனைக் கொண்ட அடிப்படை கல்வி தகுதியுள்ள தொழிலாளி வர்க்கம், அன்னிய மூலதனத்தை உள்ளிழுத்தது. இதன் மூலம் ஒரு பகுதியை அரசுக்கு பெற்றுக் கொடுத்தது. உதாரணமாக சீனாவில் முதலீடு செய்யும் ஒவ்வொரு அமெரிக்க கம்பெனியும் 42 சதவீத இலாபத்தை பெறுகின்றது. இந்த லாபவெறியே சீனாவில் மூலதனத்தின் நகர்வை வேகப்படுத்தியது. சீனாவினுள் அன்னிய மூலதனத்தின் பெரும் படையெடுப்பு, சர்வதேச ஏற்றுமதிச் சந்தையில் பெரும் வீச்சில் புகுந்து கொள்வதை துரிதமாக்கியது. இதை ஏகாதிபத்திய மூலதனமே தனது சந்தைக் கட்டமைப்பில் நின்று ஊக்குவித்தது. சீனப் பொருளாதாரம் அன்னிய மூலதனக் கட்டமைப்புக்குள் பெரு வீக்கத்தைக் கண்டது. சீனாவின் மூலதனத்தின் திரட்சி, ஏகாதிபத்திய கனவுகளுடன் எல்லை கடந்து மற்றைய நாடுகளை ஊடுருவிச் செல்லத் தொடங்கியுள்ளது.

சீனா மற்றும் ஹாங்காங்கின் மொத்த அன்னிய மூதலீடுகள்

| ஆண்டு | சீனா | ஹாங்காங் |
|---|---|---|
| 1989 | 300 கோடி டாலர் | தெரியாது |
| 1996 | 4,018 கோடி டாலர் | தெரியாது |
| 1997 | 4,423 கோடி டாலர் | 1,899 கோடி டாலர் |
| 1998 | 4,375 கோடி டாலர் | 2,885 கோடி டாலர் |
| 1999 | 3,875 கோடி டாலர் | 2,459 கோடி டாலர் |
| 2000 | 4,077 கோடி டாலர் | 6,193 கோடி டாலர் |
| 2001 | 4,800 கோடி டாலர் | 2,284 கோடி டாலர் |
| 2002 | 5,270 கோடி டாலர் | தெரியாது |
| 2003 | 5,350 கோடி டாலர் | தெரியாது |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீனாவின் அன்னிய மொத்த முதலீடு 2004 முடிய 55,900 கோடி டாலராகியுள்ளது. சீன அரசு அனுமதித்த மொத்த அன்னிய மூதலீடுகள் மூலம் உலகளவில் 5,12,504 உற்பத்தித் துறைகளை உருவாக்கியுள்ளது. 2004-இல் 43,664 அன்னிய மூதலீட்டுக்கு சீன அரசு அனுமதி வழங்கியது. இது 2003-இல் 41,081 ஆக இருந்தது. உண்மையில் சீனாவின் அன்னிய மூதலீடுகள் உலகெங்கும் ஏகாதிபத்தியத்துக்கு நிகராகவே நகரத் தொடங்கியுள்ளது. அன்னிய முதலீட்டை அதிகம் வெளியில் நகர்த்தும் நாடாக சீனா இருக்கும் அதேநேரம், அன்னிய மூலதனத்தை உள்ளிழுக்கும் நாடாகவும் சீனா உள்ளது. இது உலகில் பல அதிர்வுகளை ஏற்படுத்துகின்றது. இவற்றை விரிவாக நாம் ஆராய்வோம்.

2002-இல் அன்னிய முதலீட்டை அதிகமிட்ட நாடுகளை எடுத்தால்,

| | |
|---|---|
| சீனா | 5,270 கோடி டாலர் |
| பிரான்ஸ் | 4,820 கோடி டாலர் |
| ஜெர்மனி | 3,810 கோடி டாலர் |
| அமெரிக்கா | 3,010 கோடி டாலர் |
| நெதர்லாந்து | 2,920 கோடி டாலர் |
| பிரித்தானியா | 2,500 கோடி டாலர் |

2002-இல் உலகளாவிய அன்னிய முதலீட்டை அதிகமிட்ட நாடாக சீனா மாறியது. சீனா கம்யூனிசத்தை கைவிட்ட பின்பாக, 2004 நடுப்பகுதியில் அன்னிய நாடுகளில் சீனா இட்டுள்ள மூதலீடு 50,000 கோடி டாலரைத் தண்டியுள்ளது. இதைவிட ஹாங்காங் மூலதனம் தனியாக உள்ளது. 2004 தை முதல் ஐப்பசி வரையிலான காலத்தில் சீனா அன்னிய முதலீடு 23.5 சதவீதத்தால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 5,378 கோடி டாலராக இருந்தது. 2004 ஐப்பசி முதல் 2005 தை வரையிலான காலத்தில் 35,202 கோடி டாலரை அன்னிய முதலீடாக நடத்தியது. இது சென்ற வருடத்தை விடவும் 7.66 சதவீதம் அதிகமாகும். வரலாற்று ரீதியாக காலங்காலமாக உலக ஆதிக்கத்தை தக்க வைத்து இருந்த ஏகாதிபத்திய உலக ஒழுங்கு மாறாக, சீனா புதிய ஏகாதிபத்திய போட்டியாளனாக வளர்ச்சியுற்று வருவதை இது தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. முதலில் சீனாவினுள் அன்னிய மூலதனம் பெருமெடுப்பில் பாய்ந்தது. பின்னால் சீனா மூலதனம் வெளிச் செல்லத் தொடங்கியது.



உண்மையில் அன்னிய மூலதனம் சீனாவினுள் ஊடுருவிப் பாய்ந்த வேகம் மலைக்க வைக்க கூடியது. 1999-2002-க்கும் இடையில் மொத்தமாக உலகளாவிய அதிக அன்னிய முதலீடுகள் இடைப்பட்ட நாடுகளை எடுத்தால், சீனாவுக்குள் தான் அதிகம் ஊடுருவிப் பாய்ந்தது.

| | |
|---|---|
| சீனா | 38,400 கோடி டாலர்<br>(1982-2002க்கு இடையில் 44,800 கோடி டாலர்) |
| பிரேசில் | 15,800 கோடி டாலர் |
| அர்ஜென்டினா | 6,500 கோடி டாலர் |
| போலந்து | 5,100 கோடி டாலர் |
| ரசியா | 2,600 கோடி டாலர் |

ஒப்பீட்டளவில் சீனாவில் குவிந்த அன்னிய மூலதனம் மிகப் பிரம்மாண்டமானது. 1982-1998-க்கும் இடையில், அதாவது சீனா முதலாளித்துவ மீட்சிக்கு பிந்திய 17 வருடத்தில், அதாவது 1998 வரை சீனாவில் ஊடுருவிய அன்னிய மூலதனம் 6,400 கோடி டாலர் மட்டும் தான். அதற்குப் பிந்திய காலத்தில் அதாவது உலகமயமாதல் வேகநடை போடத் தொடங்கியதன் பின்பாக 1999-க்கும் 2002-க்கும் இடைப்பட்ட நான்கு வருடத்தில் 38,400 கோடி டாலர் அன்னிய மூலதனம் சீனாவில் வெள்ளமாகப் புகுந்தது. 2003-இல் சீனாவில் வெளிநாட்டு முதலீடு 50,000 கோடி டாலரையும் தாண்டியுள்ளது.

அதிக இலாபம் பெறும் நினைவுடன் சீனாவை விட்டோடிய முன்னைய கம்யூனிச விரோதிகளே முதலில் சீனாவில் முதலிடத் தொடங்கினர். அவர்கள் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெரும் மூலதனங்களை நகர்த்தினர். ஆரம்பத்தில் இது 4,500 கோடி டாலரை சீனாவில் முதலிடும் அளவுக்குச் சென்றது. இது சீனாவின் ஏகாதிபத்திய நலன்களுக்கு இசைவானதாக மாறியது. இது சீனா மூலதனத்தின் சுயேட்சைத் தன்மையை, மற்றைய ஏகாதிபத்தியத்தக்கு எதிராக பறைசாற்றியது. ஹாங்காங் சீனாவுடன் இணைந்த போது, அது சீனாவின் பலத்தை அதிகரிக்க வைத்தது. ஹாங்காங் பொருளாதாரம் பலம் பொருந்திய சீனப் பொருளாதாரத்துடன் கூடிய நிலையில், மூலதனம் சதிராட்டம் போடத் தொடங்கியது.

இப்படி சீனாவை நோக்கி ஓடிவந்த, ஓடிவரும் அன்னிய மூலதனங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை எனப் பார்ப்போம். சீனாவில் உள்ள அன்னிய முதலீடுகள் 2002 செப்டம்பரில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| ஹாங்காங் | 19,984 கோடி டாலர் | 45.96 சதவீதம் |
| அமெரிக்கா | 3,842 கோடி டாலர் | 8.84 சதவீதம் |
| ஜப்பான் | 3,535 கோடி டாலர் | 8.13 சதவீதம் |
| தாய்வான் | 3,197 கோடி டாலர் | 7.35 சதவீதம் |
| வேர்ஜிதீவுகள் | 2,276 கோடி டாலர் | 5.23 சதவீதம் |
| சிங்கப்பூர் | 2,097 கோடி டாலர் | 4.82 சதவீதம் |
| பிரான்ஸ் | 545 கோடி டாலர் | 1.25 சதவீதம் |
| மற்றவை | 8,009 கோடி டாலர் | 18.42 சதவீதம் |
| மொத்தம் | 43,478 கோடி டாலர் | 100 சதவீதம் |

சீனாவில் முதலில் அதிகம் ஊடுருவியது ஹாங்காங் மூலதனமே. ஹாங்காங் உள்ளே உள்ள பெருமளவிலான மூலதனங்கள் அன்னிய மூலதனம் தான். அன்னிய மூலதனம் ஹாங்காங் வழியாகவே அதிகளவில் சீனாவில் ஊடுருவியுள்ளது. இன்று ஹாங்காங் சீனாவுடன் இணைந்த ஒரே நாடாகவும் உள்ளது. (ஒருநாடு இரண்டு அமைப்பு முறை எனக் கூறிக் கொள்கின்றது) இதற்கு வெளியில் நேரடியாக ஏகாதிபத்தியம் முதல் அயல்நாடுகளும் அதிக அன்னிய முதலீட்டை நடத்தியுள்ளனர். தாய்வானின் 80 சதவீதமான உற்பத்தி வெளிநாட்டில் செய்யப்படுகின்றது. உதாரணமாக சீனாவுடான இணைவு சம்பந்தமாக மக்களை ஏமாற்றி பிழைக்கும் தாய்வான் அரசியல் விளையாட்டைத் தாண்டி, சீனாவில் 30,000 தாய்வான் நிறுவனங்கள் முதலிட்டுள்ளன. 5 முதல் 10 லட்சம் தாய்வான் மக்கள் சீனாவில் வேலை செய்கின்றனர். தாய்வான் உள்ளடக்க ரீதியாக சீனப் பொருளாதாரக் கூறில் இணைக்கப்பட்டுவிட்டது. அரசியல் ரீதியாக முரண்பட்ட கட்சிகள், குறுகிய நலனுக்காக மட்டும் தான் சீனாவுக்கு எதிராக பூச்சாண்டி காட்டுகின்றனர். இங்கு தாய்வான் வழியாகவும் கூட ஏகாதிபத்தியம் கணிசமாகப் புகுந்துள்ளது.

உண்மையில் இந்த முதலீடுகள் சீனாவுக்குள் ஓடிவரும் காரணங்கள் பற்பலவாக இருந்தாலும், உற்பத்திக்கான குறைந்த கூலி விகிதம் ஒரு முக்கியமான அம்சமாகும். 1995-இல் ஒரு தொழிலாளியின் ஒரு மணி நேரக்கூலி ஜெர்மனியில் 32 டாலராகவும், ஜப்பானில் 24 டாலராகவும், அமெரிக்காவில் 17 டாலராகவும் இருந்தது. இதற்கு மாறாக இந்தியாவிலும் சீனாவிலும் ஒரு மணி நேரக் கூலி



0.25 டாலராகும். ஜெர்மனியில் ஒரு தொழிலாளிக்கு கொடுக்கும் கூலியைக் கொண்டு 128 இந்தியரையோ, சீனரையோ கூலிக்கு அமர்த்த முடியும். இது இலாப வீதத்தின் உயர்ந்தபட்ச எல்லையை பெற்றுத் தருவனவாக உள்ளது. ஒரு இந்தியரை விட சீனரை ஏகாதிபத்திய மூலதனம் காதலிப்பதற்குப் பற்பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமானதும் அடிப்படையானதும் பரந்த கல்வியின் உயர்ந்த தரமாகும். நவீனத் தொழில் நுட்பத்தை இயக்கவல்ல, மிக மலிவான கூலிகளைப் பெற முடியும் என்பது மிக முக்கியமான காரணங்களில் ஒன்று. அத்துடன் மூலதனத்தை எதிர்த்த உழைக்கும் மக்களின் போராட்ட பலத்தை போலி கம்யூனிஸ்ட் கட்சியின் துரோகத்தால் நலமடித்த நிலையில், மூலதனம் சுயாதீனமாக உயர்ந்தபட்ச சூறையாடலுக்குள் இயங்க முடிகின்றது. இதைவிட மேற்கில் சுற்றுச்சூழல் போன்ற பல தடைகள், சீனாவில் உள்ள முதலீட்டுக்கு எதுவும் கிடையாது. அத்துடன் எல்லாவற்றையும் கையாளக் கூடிய மாஃபிய அமைப்பு முறை, அரசின் ஆதரவுடன் கொடிகட்டிப் பறக்கின்றது.

## மலிந்த கூலியில் பெறப்படும் உயர்ந்த லாப வீதங்கள்

எதிர்மறையில் சீனச் சந்தை ஒரு மணி கூலி அடிப்படையில், ஜெர்மனியில் 128 பேரின் வேலையின்மையை உருவாக்குகின்றது. சம்பள விகிதங்களின் அடிப்படையில் வேலை இன்மையை உற்பத்தி செய்கின்றது. 128 பேரின் வேலைக்குரிய ஒரு ஜெர்மனிய தொழில்துறை தனது வேலை ஆட்களை நீக்கிவிட்டு சீனாவுக்குள் ஓடிவிடுவதையே விரும்பும். ஒரு ஜெர்மனியரின் கூலியைக் கொண்டு, சீனாவில் 128 பேரை வேலைக்கு அமர்த்த முடியும். அதாவது ஜெர்மனியில் 128 தொழிலாளிக்கு கொடுத்த கூலி மூலம் 16,384 சீனத் தொழிலாளர்களை கூலிக்கு அமர்த்த முடியும். இங்கு உற்பத்தியாகும் பொருட்கள் மேற்கில் அதியுயர் லாபவீதத்தில் சந்தைப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் ஒரு கூலியினால் கிடைக்கும் மேலதிக லாபம் 128 மடங்காக இருக்கும். அதாவது 128 பேரின் கூலி ஒரு மணித்தியாலத்துக்கு ஒப்பீட்டளவில் 4,070 டாலருக்கு மேலதிகமாக லாபத்தை ஜெர்மனியில் செய்வதைவிட பெற்றுத் தருகின்றது. இது மாதம் 7.8 லட்சம் டாலரையும், வருடம் 94 லட்சம் டாலரையும் மீதமாக பெற்றுத் தருகின்றது. இது ஒரு ஜெர்மனிய தொழிலாளிக்குப் பதிலாக அமர்த்தும் 128 சீனத் தொழிலாளர்களால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடைக்கின்றது. 128 ஜெர்மனியத் தொழிலாளர்களின் கூலியைக் கொண்ட கூலிக்கு அமர்த்தக் கூடிய 16,384 சீனத் தொழிலாளர்களின் உற்பத்திக்கு வித்திடப்படின் லாப விகிதம் ஜெர்மனிய உற்பத்தியை விட மணிக்கு 5.24 லட்சம் டாலர் அதிகமாகக் கிடைக்கும். இது மாதத்துக்கு 10 கோடி டாலராக இருக்கும். இது வருடம் 120 கோடி டாலராகும். (இவை 8 மணிநேரம் வேலையை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது) இதைவிட இதே போல் மலிவான மூலப்பொருட்கள், வரிச் சலுகைகள் என்று மூலதனம் குதூகலிக்கும் வகையில், உலகமயமாதல் நவீன அற்புதமான கொடையாக உள்ளது.

சீன உற்பத்திகள் சீனாவில் பெருமளவில் சந்தைப்படுத்தப் படுவதில்லை. மாறாக அவை பெருமளவில் ஏகாதிபத்தியத்திலும், பிரதானமாக மூன்றாம் உலக நகரம் சார்ந்த சந்தைகளில் குவிகின்றது. 2003-இல் சீனாவின் சர்வதேச வர்த்தகம் 37 சதவீதத்தால் அதிகரித்தது. சீனாவில் உள்ள அன்னிய நாட்டுக் கம்பெனிகளின் உற்பத்தியில் 56 சதவீதம் ஏற்றுமதியாகியது. சீனாவில் அன்னிய நாடுகளின் உற்பத்திகள் அதிகரிக்கும் அதேநேரம், அவை பெருமளவில் ஏற்றுமதியாகிச் செல்லுகின்றது. இதில் முக்கியமானதாக இருப்பது நவீனத் தொழில் நுட்ப உற்பத்திகளே. நவீனத் தொழில் நுட்பம் சார்ந்த உற்பத்திகள், பெருமளவில் சீனா உற்பத்தியாகியுள்ளது. உதாரணமாக உலகளவிய நவீன உற்பத்தியில் சிலவற்றில் சீனாவின் பங்கைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| உழவுஇயந்திரம் | 83 சதவீதம் |
| மணிக்கூடு, மோட்டர் | 75 சதவீதம் |
| விளையாட்டுச் சமான்கள் | 70 சதவீதம் |
| புகைப்படக்கருவி | 55 சதவீதம் |
| தொலைபேசி | 50 சதவீதம் |
| தொலைக்காட்சிப் பெட்டி | 40 சதவீதம் |
| உடுப்பு தோய்க்கும் மெசின் | 25 சதவீதம் |
| வீட்டு தளவாடங்கள் | 16 சதவீதம் |
| உருக்கு | 15 சதவீதம் |



உலக உற்பத்தியில் சீன உற்பத்திகளே பெருமளவில் சில பெரும் வர்த்தகத் துறைகளை ஆக்கிரமித்துள்ளது. 2002-இல் சீனா ஒரே வருடத்தில் இலத்திரனியல் (எலக்ட்ரானிக்) உற்பத்தியை 30,000 கோடி டாலராக அதிகரித்தது. நவீன இலத்திரனியல் மேலான முதலீடும், உற்பத்தியும் மிகப் பிரம்மாண்டமானது. நவீன தொழில்துறை சார்ந்து 2002-இல் ஜப்பான் மற்றும் தாய்வான் சீனாவில் இட்ட முதலீடு 5200 கோடி டாலராகும். 1980-க்கு பிந்திய 20 வருடத்தில் தொழில்துறையை நவீனப்படுத்த இட்ட முதலீடு 60,000 கோடி டாலராகும். மிக வேடிக்கை என்னவென்றால், 1985-இல் சீனாவில் இருந்த அன்னியநாட்டுக் கம்பெனிகளின் ஏற்றுமதி 30 கோடி டாலராக மட்டுமே இருந்தது. இது 2001-இல் 13,300 கோடி டாலராகியது. அதாவது 16 வருடத்தில் 443 மடங்கு மேலானதாக அதிகரித்தது. அமெரிக்காவுக்கான தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ரேடியோ ஏற்றுமதியை, 1998-க்கும் 2001-க்கும் இடையில் சீனா இரட்டிப்பாக்கியது. இதன் மொத்த பெறுமானம் 600 கோடி டாலராகியது. உலகமயமாதல் உருவாக்கிய நவீன உற்பத்திகளின் உற்பத்தி மையமாக, சீனா மாறிக் கொண்டிருக்கின்றது.

சீனாவின் துணி உற்பத்தியை எடுத்தால் மிகப் பிரம்மாண்டமானதாக மாறி வருகின்றது. பல ஏழை நாடுகளின் திவாலை மட்டுமல்ல, ஏகாதிபத்திய துணி உற்பத்தியின் திவாலையும் கூட இது ஏற்படுத்துகின்றது.

| | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| 1999 | 4127 கோடி டாலர் | 1392 கோடி டாலர் |
| 2000 | 4938 கோடி டாலர் | 1656 கோடி டாலர் |
| 2001 | 4983 கோடி டாலர் | 1626 கோடி டாலர் |
| 2002 | 5785 கோடி டாலர் | 1699 கோடி டாலர் |
| 2003 | 7335 கோடி டாலர் | 1929 கோடி டாலர் |

உலகளவில் ஐந்து வருடங்களில் சீனாவின் துணி ஏற்றுமதி அண்ணளவாக இரண்டு மடங்காகியுள்ளது. இதேநேரம் இந்தியத் துணி ஏற்றுமதி 1086 கோடி டாலர் மட்டுமே. துணி ஏற்றுமதி செய்த பல நாடுகள், தமது சொந்த ஏற்றுமதியை சீனாவினால் இழந்து வருகின்றன. இது எப்படி ஏற்படுகின்றது எனப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கு நோக்கிய உலகளாவிய துணி வர்த்தகம்

| | ஐரோப்பா 2002 | ஐரோப்பா 2004 | அமெரிக்கா 2002 | அமெரிக்கா 2004 |
|---|---|---|---|---|
| சீனா | 18 சதவீதம் | 26 சதவீதம் | 16 சதவீதம் | 50 சதவீதம் |
| இந்தியா | 6 சதவீதம் | 9 சதவீதம் | 4 சதவீதம் | 15 சதவீதம் |
| ஹாங்காங் | 6 சதவீதம் | 6 சதவீதம் | 9 சதவீதம் | 6 சதவீதம் |
| அமெரிக்க நாடுகள் | - | - | 16 சதவீதம் | 5 சதவீதம் |
| மெக்சிக்கோ | - | - | 10 சதவீதம் | 3 சதவீதம் |
| தாய்லாந்து | - | - | - | 3 சதவீதம் |
| பிலிப்பைன்ஸ் | - | - | 4 சதவீதம் | 2 சதவீதம் |
| இந்தோனேசிய | 3 சதவீதம் | 3 சதவீதம் | 4 சதவீதம் | 2 சதவீதம் |
| பங்களாதேசம் | 3 சதவீதம் | 4 சதவீதம் | 4 சதவீதம் | 2 சதவீதம் |
| இலங்கை | - | - | - | 2 சதவீதம் |
| ஐரோப்பா | 9 சதவீதம் | 6 சதவீதம் | 5 சதவீதம் | 0 சதவீதம் |
| தாய்வான் | - | - | 4 சதவீதம் | - |

துணி வர்த்தகத்தில் சீனாவும், இந்தியாவும் மற்றைய நாடுகளையே திவாலாக்கி வருகின்றன. இதில் சீனா மிகப் பிரம்மாண்டமான வகையில் காணப்படுகின்றது. இது இந்தியாவைக் கூட சந்தையில் இருந்து அகற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆடைத் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் ஒரு அமெரிக்கத் தொழிலாளிக்கு கூலியாக 9.56 டாலரே ஒரு மணிநேரத்துக்கு வழங்கப்படுகின்றது. தென் அமெரிக்க எல்-சால்வடோரில் அதே தொழிலாளி பெறும் கூலி 1.65 டாலர். சீனத் தொழிலாளி பெறுவதோ 0.68 டாலர் மட்டுமே. மூலதனம் சீனாவை நோக்கி ஒடுவதும், சீனா உற்பத்திகள் உலகச் சந்தையை ஆக்கிரமிக்கும் உலக எதார்த்தம், சீனாவின் மிகக் குறைந்த கூலி வீதம் மிக முக்கிய காரணங்களில் ஒன்று.

இதனால் உலகச் சந்தை திடீர் அதிர்வுகளைச் சந்திக்கின்றது. உலகமயமாதலில் வளர்ந்து வரும் சீனாவின் ஆதிக்கம், மேற்கின் சந்தைகளையே திடீர் திடீரென திவாலாக்குகின்றது. உதாரணமாக 2005 தை முதல் சித்திரை வரையான காலத்தில் சீனக் காலணி (சாப்பத்து) ஏற்றுமதி ஐரோப்பாவுக்கு 681 சதவீதமாக அதிகரித்துள்ளது.



முதல் 4 மாதத்தில் 16.1 கோடி காலணிகளை ஐரோப்பாவுக்கு சீனா ஏற்றுமதி செய்தது. இது 2004-இல் 2.37 கோடியாக மட்டுமே இருந்தது. இதனால் காலணிகளின் விலை 28 சதவீதத்தால் திடீர் வீழ்ச்சி கண்டது. இதனால் ஐரோப்பியக் காலணி உற்பத்தியாளர்கள் நெருக்கடியைச் சந்தித்ததுடன், தமது உற்பத்திகளை நிறுத்தி, தமது தொழிற்சாலைகளையே சீனா போன்ற நாடுகளை நோக்கி நகர்த்துகின்றனர். இது பொதுவாகவே அனைத்து துறையிலும் நடக்கின்றது. பெருமளவில் தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் சீனாவில் மூலதனத்தை இடுவதுடன் உற்பத்தியை குவிக்கின்றது. இது பல்துறை சார்ந்தது. அமெரிக்காவில் மட்டும் இன்று ஏறக்குறைய 40,000 சீன உணவகங்கள் உள்ளன. இது மெக்டொனால்ட், பர்கர் கிங், கே.எஃப்.சி போன்ற பிரபல அமெரிக்க பன்னாட்டு உணவகங்களின் மொத்த எண்ணிக்கையை விடவும் அதிகமானதாக உள்ளது.

பன்னாட்டு நிறுவனங்கள் உலகச் சந்தையைக் கைப்பற்ற நடத்தும் போட்டி, சீன உற்பத்தியால் உலகளவில் நெருக்கடிக்குள்ளாகின்றது. பொருட்களின் தேக்கம் மட்டுமின்றி, உற்பத்தியாகும் பொருளின் உள்ளடக்கத்தை மாற்றிய புதியதொழில் நுட்பத்தைப் புகுத்துவதால் முன்னைய உற்பத்திகள் திடீரென தனது பயன்பாட்டுத் தன்மையை இழக்கின்றது. மிகக் குறுகிய காலத்தில், உற்பத்திகள் உற்பத்தி மையங்களை விட்டு சந்தைக்கு செல்லு முன்பே, அதற்கு எதிராக மற்றைய புதிய உற்பத்திகள் போட்டியாக வருகின்றது. இதனால் உற்பத்தி தனது பயன்பாட்டுத் தன்மை இழந்து கழிவாவது உலகமயமாதலில் அன்றாட நிகழ்வாகிவிட்டது. உலகம் கழிவுகளின் கூடாரமாகும் அதேநேரம், இயற்கை நாசமாக்கப்படுகின்றது. பொருட்களின் தேக்கம், பொருட்களின் உயர் தொழில்நுட்ப அன்றாடம் புகுத்தல், உற்பத்திக்கான மிகக் குறைந்த கூலி, பொருட்களின் விலைகளில் கடுமையான சரிவை ஏற்படுத்துகின்றது. சீன உற்பத்திகளால் உலக பொருட்களின் விலை 1998-க்கும் 2001-க்கும் இடையில் வருடத்துக்கு 15 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. மிகவும் ஆடம்பரமானதும், அடிப்படைத் தேவைக்குள் உள்ளடங்காத பொருட்களில் சந்தை கவர்ச்சி காட்டுவதால், மக்களின் அடிப்படை தேவைகளுக்காக செலவு செய்வது குறைந்து வருகின்றது. கவர்ச்சியான ஆடம்பரமான வக்கிரம் மூலம், மக்களின் ஆரோக்கியமான வாழ்வு பந்தாடப்படுகின்றது. நுகர்வுவெறி பொதுவான சமூகப் பண்பாடாகக் கட்டமைக்கப்படுகின்றது. இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகாதிபத்திய நாடுகளின் திவாலையே பறைசாற்றி விடுகின்றது. உதாரணமாக உலகின் மிகப் பெரிய பொருளாதார பலம் கொண்ட அமெரிக்காவின் குரல்வளையிலேயே இது கையை வைக்கின்றது.

2004-இல் அமெரிக்காவின் இறக்குமதி 18 சதவீதமாக அதிகரித்து இது 1,76,400 கோடி டாலராக இருந்தது. ஏற்றுமதி 13 சதவீதமாக அதிகரித்து 1,14,600 கோடி டாலராக மாறியது. அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை 2004-இல் 61,770 கோடி டாலராகியது. இதில் ஜப்பானுக்கு 7,520 கோடி டாலரும், ஐரோப்பாவுக்கு 11,000 கோடி டாலரும், சீனாவுக்கு 16,200 கோடி டாலரும். கனடாவுக்கு 6,600 கோடி டாலரும், எண்ணெய் வள நாடுகளுக்கு 7,200 கோடி டாலருமாகும் 2003-இல் அமெரிக்காவின் பற்றாக்குறை 49,650 கோடி டாலர் மட்டுமே.

உதாரணமாக அமெரிக்கா சீனா வர்த்தகத்தில், அமெரிக்காவுக்கு ஏற்படும் பற்றாக்குறையால் உருவாகும் நெருக்கடியைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| 1985 | 60 | கோடி டாலர் |
| 1990 | 1 043 | கோடி டாலர் |
| 1993 | 2 277 | கோடி டாலர் |
| 1995 | 3 378 | கோடி டாலர் |
| 1997 | 4 968 | கோடி டாலர் |
| 1999 | 6 867 | கோடி டாலர் |
| 2000 | 8 383 | கோடி டாலர் |
| 2001 | 8 309 | கோடி டாலர் |
| 2002 | 10 306 | கோடி டாலர் |
| 2003 | 12 370 | கோடி டாலர் |
| 2004 | 16 200 | கோடி டாலர் |

வருடாந்தம் இறக்குமதிக்கான சீன நிலுவைகளைச் செலுத்த முடியாது, அமெரிக்கப் பொருளாதாரம் ஆட்டம் காண்கின்றது. அமெரிக்கா சீனாவுக்குச் செலுத்த வேண்டிய இறக்குமதிக்கான நிலுவை, அமெரிக்காவின் பொருளாதாரக் கட்டமைப்புக்குள் உட்புகுந்து விடுகின்றது. இது அமெரிக்காவின் கடனில் ஒரு பகுதியாகவும், அமெரிக்கப் பங்குச்சந்தையிலும், பங்கு பத்திரத்திலும்



உட்புகுந்து நிதி மூலதனமாக மாறிவிடுகின்றது. அமெரிக்க கடனில் சீனாவின் பங்கு கணிசமானதாக மாறிவிட்டது. கடனுக்கான வட்டியை அமெரிக்காவிடம் பெறும் நிலைக்கு, சீன நிதி மூலதனம் பெருமெடுப்பில் உட்புகுகின்றது. அதேநேரம் தொடர்ந்தும் சீனாவின் ஏற்றுமதியில் பெரும்பகுதி, அமெரிக்காவுக்குள் செல்லுகின்றது.

அமெரிக்காவுக்குள் உட்புகும் நிதி மூலதனத்தில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் சீனா உள்ளது. அதாவது அமெரிக்காவின் நிதி மூலதனத்தில் 8.8 சதவிகிதத்தை சீனா கைப்பற்றியுள்ளது. இதே போல் அமெரிக்காவின் பங்கு பத்திரத்திலும் சீனாவே அதிக நிதி மூலதனத்தை முதலிட்டுள்ளது. இது 2001-இல் 8,200 கோடி டாலராக இருந்தது. 2002-இல் 11900 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இதே போன்று அமெரிக்க முதலீட்டிலும் சீனா புகுந்துள்ளது. சீனாவில் உட்புகுந்த அன்னிய மூலதனத்தின் அளவுக்கு, சீனா அன்னிய நாடுகளில் முதலீட்டை நடத்தி உள்ளது. இது ஒரு வியக்கத்தக்க மூலதனத்தின் முரண்பண்பையே காட்டுகின்றது. மறுபக்கம் பெரும் நிதி பரிமாற்றத்தை சீனப் பொருளாதாரம் உள்ளிழுக்கின்றது. 2003-ஆம் ஆண்டில் சீனாவின் நிதிப் பரிமாற்றம்

| | |
|---|---|
| ஐரோப்பா | 13,430 கோடி டாலர் |
| அமெரிக்கா | 12,660 கோடி டாலர் |
| ரசியா மற்றும் ஸ்கன்டினேவிய நாடுகள் | 3,060 கோடி டாலர் |
| லத்தீன் அமெரிக்கா | 2,660 கோடி டாலர் |
| தென்கொரியா | 6,320 கோடி டாலர் |
| ஜப்பான் | 13,360 கோடி டாலர் |
| தாய்வான் | 5,840 கோடி டாலர் |
| ஆப்பிரிக்கா | 1,850 கோடி டாலர் |
| மத்தியகிழக்கு | 2,770 கோடி டாலர் |
| ஆசியா | 10,920 கோடி டாலர் |
| மிகுதி | 2,510 கோடி டாலர் |

பல கோடி பெறுமதியான நிதிப்பரிமாற்றம் சீனப் பொருளாதாரத்தின் ஊடாக நடக்கத் தொடங்கியுள்ளது. இது நிதியின் இருப்பிடத்தை மாற்றியமைக்கின்றது. சீனாவை நோக்கி நிதிகள் கூட நகர்வதை துரிதமாக்குகின்றது. நிதி மூலதனத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்குமிடமாக சீனா மாறத் தொடங்கி விடுகின்றது. இது வழமையான மேற்கு சார்ந்த வங்கிகள் என்ற உலகளவிய கட்டமைப்பில் ஒரு வெடிப்பாகவே இது மாறுகின்றது.

சில மாற்றங்கள் மிகப் பிரம்மாண்டமான அளவில் நடக்கின்றது. 2004-இல் சீன வர்த்தக உபரி 3200 கோடி டாலராகியது. இது 2003-யை விட 25.6 சதவீதம் அதிகமாகும். அத்துடன் நிதிப் பரிமாற்றம் 30 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது மொத்தமாக 1,00,000 கோடி டாலராகியது. இதில் அதிகமானவை வர்த்தக பேரங்களாகவே இருந்தது. 2003-இல் உள்நாட்டு வருமானம் 9.1 சதவீதமாக அதிகரித்த அதேநேரம், 2004-இல் இது 9 சதவீதமாக மேலும் அதிகரித்தது. 2004-இல் ஏற்றுமதி 35.4 சதவீதமாக அதாவது 59,340 கோடி டாலராக அதிகரித்தது. அதேநேரம் இறக்குமதி 36 சதவீதமாக அதிகரித்தது. அதாவது 56,140 கோடி டாலராக அதிகரித்தது. இதன் மூலம் மேலதிகமாக 3,200 கோடி டாலரை வர்த்தக மீதமாகப் பெற்றனர். இது 2003-இல் 2,092 கோடி டாலராக இருந்தது. சீனாவின் உள்நாட்டு வரி வரத்து 25 சதவீதமாக அதிகரித்து. இது 31,080 கோடி டாலராகியது. உள்நாட்டு முதலீடு 2003-ஐ விட 25 சதவீதமாக அதிகரித்தது. உலகில் எந்தப் பகுதியிலும் இப்படி நடக்கவில்லை. உலகமயமாதலின் ஏகாதிபத்திய முரண்பாடு சீனாவூடாகவே அரங்கு வரத் துடிக்கின்றது. இதை நிதிக் கையிருப்பே தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. உலகளவில் 2003-இல் நிதிக் கையிருப்பு

| | |
|---|---|
| ஜப்பான் | 65,280 கோடி டாலர் |
| சீனா | 40,330 கோடி டாலர் |
| தாய்வான் | 20,630 கோடி டாலர் |
| ஈரோ நாடுகள் | 18,800 கோடி டாலர் |
| தென்கொரிய | 15,450 கோடி டாலர் |
| ஹாங்காங் | 11,860 கோடி டாலர் |
| இந்தியா | 9,760 கோடி டாலர் |
| மெச்சிக்கோ | 5,770 கோடி டாலர் |
| பிரேசில் | 4,910 கோடி டாலர் |

நிதிக் கையிருப்பில் ஜப்பானுக்கு அடுத்த நிலையை சீனா எட்டியுள்ளது. எந்த மேற்கு நாடுகளிடமும் கூட இந்தளவு நிதிக்



கையிருப்பு கிடையாது. 2004-இல் சீனாவின் நிதிக் கையிருப்பு 60,900 கோடி டாலராகியது. உலகத்தின் ஆதிக்கத்தை நோக்கி சீனப் பொருளாதாரம் வெகு வேகமாகவே நகருகின்றது. உலகளவில் இது மிகப் பெரிய அதிர்வுகளை உருவாக்கவுள்ளது. கடந்த 200 வருட மேற்கத்திய ஆதிக்கத்தையும், மேற்கின் பொருளாதார வல்லமைக்கு எதிரான கடும் சவாலை இது ஏற்படுத்த உள்ளது.

சீனா ஏகாதிபத்தியமயமாதல் என்பது அனைத்து துறைகளிலும் வேகமாகப் படர்ந்து வருகின்றது. 2007-இல் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி 2,00,000 கோடி டாலராக மாறிவிடும் என்ற எதிர்வு கூறல்களை, முதலாளித்துவ பொருளாதார வல்லுனர்களே அதிர்வுடன் அறிவித்துள்ளனர். இது உலக வர்த்தகத்தில் 13.7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் என்றும் அறிவித்துள்ளனர். எங்கும் சீனா ஆக்கிரமிப்பு தொடங்கியுள்ளது.

சந்தையும், வர்த்தகமும் மக்களை ஏமாற்றும் விளம்பரத்தில் தான் உயிர் வாழ்கின்றது. மக்களை முட்டாளாக்கி அதில் தான் நவீனத்துவம் வக்கரிக்கின்றது. இன்று விளம்பரத்துக்காக உலகில் மூன்றாவதாக அதிகம் செலவளிக்கும் நாடாக சீனா மாறியுள்ளது. இது 2003-இல் 1980 கோடி டாலராகியது. இக்காலத்தில் அமெரிக்கா 14,700 கோடி டாலரையும், ஜப்பான் 3,540 கோடி டாலரையும் விளம்பரத்துக்காக செலவு செய்தது. உலகில் மக்களை ஏமாற்ற செய்யும் விளம்பரத்துக்கான மொத்தச் செலவு 33,100 கோடி டாலராகும். இதில் சீனாவின் பங்கு 5.98 சதவீதமாகும். இது 2000-இல் 3.58 சதவீதமாக இருந்தது. 2003-க்கும் 2004-க்கும் இடையில் சீனா விளம்பரத்துக்கான செலவை 11.11 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனால் உலகளவிலான அதிகரிப்பு 4.8 சதவீதம் மட்டுமே. சீனாவின் விளம்பரச் செலவு 2000-க்கு பிந்திய மூன்று ஆண்டுகளில் இரட்டிப்பாகியது. உண்மையில் 2000-இல் 1100 கோடி டாலராக மட்டும் இருந்தது. இது 2004-இல் 2,200 கோடி டாலராகியது. உண்மையில் சீனாவின் விற்பனை பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனியின் மொத்த வர்த்தகத்தையும் கூட தாண்டியுள்ளது. உலகில் சீனா ஏற்படுத்தும் தாக்கம் பிரமாண்டமானது. இதனால் உலகில் புதிய பதற்றங்கள் அதிகரிக்கின்றது. இதை ஈடுகட்ட சீனா இராணுவ ரீதியாகவும் தன்னைப் பலப்படுத்துகின்றது. உலகில் மூன்றாவது அதிகம் இராணுவச் செலவு செய்யும் நாடாக 2001-இல் சீனா மாறியது. 2005-இல் தேசிய வருமானத்தில் உலகிலேயே அதிகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவத்துக்குச் செலவு செய்யும் நாடாக சீனா மாறியுள்ளது. இது 4.3 சதவீதமாகியுள்ளது. அதாவது 2004-யை விட 2005-இல் 12.6 சதவீதத்தால் இது அதிகரித்துள்ளது. மொத்த இராணுவச் செலவு 2,950 கோடி டாலராகியுள்ளது. இதே நேரம் அமெரிக்கா தனது தேசிய வருமானத்தில் 3.3 சதவீதத்தையே இராணுவத்துக்கு ஒதுக்கியுள்ளது.

2001-இல் உலகில் அதிகூடிய இராணுவச் செலவு

| | |
|---|---|
| அமெரிக்கா | 39,610 கோடி டாலர் |
| ரசியா | 6,000 கோடி டாலர் |
| சீனா | 4,200 கோடி டாலர் |
| ஜப்பான் | 4,040 கோடி டாலர் |
| பிரித்தானியா | 3,400 கோடி டாலர் |
| சவூதி அரேபியா | 2,720 கோடி டாலர் |
| பிரான்ஸ் | 2,530 கோடி டாலர் |
| ஜெர்மனி | 2,100 கோடி டாலர் |
| பிரேசில் | 1,790 கோடி டாலர் |
| இந்தியா | 1,560 கோடி டாலர் |

சீனா ஒரு ஏகாதிபத்தியமாக மாறும் போது, உலகை மீளவும் பங்கிடுவதால் ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான முரண்பாடுகள் கூர்மையடைகின்றது. இந்த வகையில் தான் சூடான், ஈராக் எண்ணெய் வயல்களைக் கைப்பற்றும் சீன மூலதனத்தைத் தடுக்கவும், அமெரிக்கா நேரடியாகவே இராணுவரீதியாகத் தலையிட்டது. இவைகளை எதிர்கொள்ள, இராணுவரீதியாகவே சீனா தன்னைப் பலப்படுத்தத் தொடங்கியுள்ளது. உலகின் முன்னணி இராணுவமாகவும், பலம் பொருந்திய ஒன்றாகவும், சீனா தனது இராணுவத்தை மாற்றியமைக்கின்றது. இதன் மூலம் ஏகாதிபத்திய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் திறனை பெற முயல்கின்றது. இதுபோன்று சீனா பல துறைகளில் தன்னை திட்டமிட்டே பலப்படுத்துகின்றது. நவீனத் தொழில் நுட்பம் ஆட்சி செய்யும் உலகில், அதுவே மூலதனத்தின் நெம்புகோலாகவும் உள்ளது. இதன் அடிப்படையில் சீனா அறிவியல் கண்டுபிடிப்புகளுக்காக பெரும் தொகை நிதியை ஒதுக்குகின்றது. இது 2001-இல் 3,070 கோடி டாலராக மாறியது. இதே காலத்தில் அமெரிக்கா 25,290 கோடி டாலரையும், ஜப்பான் 9,650 கோடி டாலரையும் ஒதுக்கியிருந்தது.



இப்படி சீனாவின் ஏகாதிபத்தியமயமாதல் என்பது பல்வேறு துறைகளில் நகர்ச்சியுறுகின்றது. மறுபக்கத்தில் இது சொந்த நாட்டில் ஏற்றத்தாழ்வை வீங்கி வெம்ப வைக்கின்றது. கிராமப்புறத்தில் தனிநபர் சராசரி வருமானம் 263 ஈரோவாக இருக்க, நகரங்களில் அது 864 ஈரோவாகியுள்ளது. சீனாவில் ஒரு பணக்காரக் கும்பல் வளர்ச்சியுறுகின்றது. ஏழைகள் பெருக்கெடுப்பது சீனாவின் உள்நாட்டு விதியாகிவிட்டது. பணக்காரக் கும்பலின் நலன்கள் சீனா அரசின் நலன்களாகிவிட்டது. இதை நாம் சீனா வீதிகளில் ஓடும் தனியார் வாகனங்களில் காணமுடியும்.

சீனாவின் போக்குவரத்து

| | சைக்கிள் | அரசுத்துறை | கார் | வாடகைக்கார் | மற்றவை |
|---|---|---|---|---|---|
| 1986 | 58 சதவீதம் | 32 சதவீதம் | 5 சதவீதம் | 1 சதவீதம் | 4 சதவீதம் |
| 2000 | 38 சதவீதம் | 27 சதவீதம் | 23 சதவீதம் | 9 சதவீதம் | 3 சதவீதம் |

சீனாவில் போக்குவரத்து எப்படி தனியார் சொத்துரிமையுடன் மாறி வருகின்றது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இயற்கை சார்ந்த சுற்றுசூழல் முதல் அனைத்தும் எப்படி சிதைக்கப்படுகின்றது என்பதையே இது அம்பலப்படுத்துகின்றது. 2020-இல் 14 கோடி தனியார் கார் சீனாவில் ஓடுமாம். 2025-இல் வாகனச் சந்தை அமெரிக்காவை விட சீனாவில் மிகப் பெரிதாக இருக்கும் என்று ஜெனரல் மோட்டார்ஸ் கூறுகின்றது. அதாவது 7.5 கோடி சீனர்கள் கார் வாங்கும் வசதியை பெற்றிருப்பர் என்கின்றது. இதை நோக்கி ஏகாதிபத்திய கார் கம்பெனிகள் அங்கு அலைபாய்கின்றனர். மக்கள் பலாத்காரமாகவே குடியெழுப்பப் பட்டு வீதிகள் அகன்றதாகப் போடப்படுகின்றன. இன்று சீனாவில் 640 பேர் வீதி விபத்தில், நாளொன்றுக்கு கொல்லப்படுகின்றனர். இவையெல்லாம் முதலாளித்துவ மீட்சியின் விளைவு. சீன வீதிகளில் தனியார் வாகனங்களின் அதிகரிப்பு அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது, சீனாவில் 25 மடங்கு அதிகமாகும். இதனால் சீனப் பெட்ரோல் இறக்குமதியை ஒரு வருடத்தில் 30 சதவீதத்தால் அதிகரிக்க வைத்தது. சீனா பெட்ரோல் வாங்கு வீதம் 2003-2004-இல் 14.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு வட அமெரிக்காவில் 2.1-ஆக அதிகரித்த போது, ஐரோப்பாவில் 1.5 சதவீதமே அதிகரித்தது. ஆனால் ஆசியாவில் 5 சதவீதத்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகரித்தது. சீனாவில் பணக்காரக் கும்பலின் தனிமனித நலன்கள் அதிகரித்துச் செல்வதையே, இது தெளிவாக உறுதி செய்கின்றது. இது உலகில் எண்ணெய் வர்த்தகம் மீதான நெருக்கடியை அதிகரிக்க வைக்கின்றது. என்றுமில்லாத எண்ணெய்த் தேவையை உலகம் கோருகின்றது. உலகின் எந்த நிலையையும் எதிர்கொள்ள, 2004-இல் சீனா உலகில் அதிகளவில் பெட்ரோலை சேகரிக்கத் தொடங்கியுள்ளது. மொத்தமாக இது 280 கோடி டன் பெட்ரோலைச் சேகரித்துள்ளது. இவை எல்லாம் சீன மக்களுக்கு எதிராக, அவர்களின் வாழ்வை அழித்து உருவாக்கும் பணக்காரக் கும்பலின் நலனே சீன அரசின் நலனாகிவிட்டது.

## சீன மக்களின் சொத்தை தனியார் கைப்பற்றல்

சீனாவில் இவை எதிர்மறையில் வறுமையைப் பன்மடங்காக்கு கின்றது. இது உள்ளூர் உற்பத்தியில் நடக்கும் மாற்றத்தில் இருந்தே பிரதிபலிக்கின்றது. மூலதனத்தின் ஜனநாயகம் மக்களின் வறுமையில் பறப்பதையே, சீனாவில் நாம் தெளிவாகக் காணமுடியும்.

சீன தனியார்மயமாக்கல்

| தனியார்மயமாக்கல் | 1994 | 1998 | 2001 |
|---|---|---|---|
| தனியார்மயமான நிறுவனங்கள் | 4 லட்சம் | 12 லட்சம் | 20 லட்சம் |
| இதில் தொழில் புரிவோர் | 56 லட்சம் | 145 லட்சம் | 225 லட்சம் |
| முதலீடு | 1 730 கோடி டாலர் | 8 700 கோடி டாலர் | 22 000 கோடி டாலர் |
| தனியார் முதலீட்டாளர் எண்ணிக்கை | 9 லட்சம் | 26 லட்சம் | 46 லட்சம் |

சீனாவில் என்ன நடக்கின்றது என்பதை இந்த அட்டவணை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. தேசியமயமாக்கப்பட்ட அரசுத் துறைகளில் இருந்து உழைக்கும் மக்கள் துரத்தப்படுகின்றனர். தேசியமயமான மக்கள் சொத்துக்கள், தனியார்மயமாதல் என்பது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. 1990-க்கு பின்பாக அரசுத் துறையில் நான்கு கோடி உழைப்பாளிகளை, அவர்களின் வேலையை விட்டே சீன அரசு துரத்தியுள்ளது. தொடர்ந்து அரசுத் துறைகளில் இருந்து வருடம் 30 லட்சம் பேர் வேலையை இழந்து வருகின்றனர். இந்த



வெட்டு முகத்தை நாம் உண்மையில் எதார்த்தத்தில் காண வேண்டுமாயின், ஒரு புள்ளிவிபர தரவு மட்டும் போதுமானது. சீனாவில் 1997-இல் 2,62,000 அரசு நிறுவனங்கள் இருந்தன. இது 2002-இல் 1,59,000-மாக குறைக்கப்பட்டது. அதாவது ஐந்து வருடங்களில் 1,03,000 நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டது. இப்படி லட்சக்கணக்கான அரசு சொத்துக்கள் மக்களிடம் இருந்து பறித்து (பிடுங்கி) தனியாருக்கு விற்கப்படுகின்றன. அதாவது சுதந்திரம், ஜனநாயகத்தின் பெயரில் அவை தனியார்மயமாக்கப் படுகின்றது. சீனப் புரட்சியை அடுத்து நடந்தப்பட்ட வர்க்கப் போராட்டங்களின் போது, தனியார் சொத்துக்கள் ஒழிக்கப்பட்டு இருந்தன. ஆனால் இன்று தனியார்மயமாதல் என்ற பெயரில் அரசு சொத்துக்களை, சிலர் திருடிச் செல்கின்றனர். மக்களின் உழைப்பு உருவாக்கிய தேசியச் சொத்துக்கள், அன்றாடம் தனிப்பட்ட நபர்களால் சூறையாடப்படுகின்றன. மக்கள் வேலையை இழந்து வறுமையில் அங்கும் இங்குமாக வீதிகளில் அலைகின்றனர். அரசுத் துறையில் வேலை வாய்ப்புகள் இல்லாது ஒழிக்கப்பட்டது. தனியார் துறையில் மட்டுமே வேலை என்ற நிலையில், எந்த சமூகப் பாதுகாப்பும் அற்ற நிலையில், சட்டப் பாதுகாப்பும் அற்ற நிலையில் உழைப்பு கசக்கிப் பிழியப்படுகின்றது. இப்படி சுதந்திரமாக, ஜனநாயகமாக வரைமுறையின்றிச் சூறையாடும் சுதந்திரத்தை அனுபவிக்கவே, சீனாவின் மேல் காதல் கொண்ட அன்னிய மூலதனம் குதூகலத்துடன் உட்சென்று புணருகின்றது. இதன் நேரடி விளைவு என்ன எனப் பார்ப்போம்

சீனாவில் தனியார்மயமாதலால் 1990-1999 இடைப்பட்ட காலத்தில் வேலைவாய்ப்பும், வேலை இழப்பும் எப்படி நடக்கின்றது எனப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| அரசுத் துறை | -2.06 | சதவீதத்தில் குறைந்துள்ளது. |
| கூட்டுறவுத்துறை | -7.78 | சதவீதத்தில் குறைந்துள்ளது. |
| தனிப்பட்ட உற்பத்தி | +12.84 | சதவீதத்தில் அதிகரித்துள்ளது. |
| கூட்டுத் தனியார் உற்பத்தி | +27.07 | சதவீதத்தில் அதிகரித்துள்ளது. |
| தனியார் துறை | +31.46 | சதவீதத்தில் அதிகரித்துள்ளது. |

தனியார்துறை முதன்மை பெற்ற ஒரு சமூக அமைப்பாக, சீனா மாறி வருவதைக் காட்டுகின்றது. தனியார் அமைப்பில் கிடைக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயர்ந்த லாபம், அன்னிய மூலதனத்தின் ஆன்மாவைக் குளிர்மைப் படுத்தியது. சீன மக்களின் வாழ்வு சூறையாடப்படும் வீதம் எவ்வளவுக்கு உயர்வான நிலையை அடைகின்றதோ, அந்தளவுக்கு எதிர்மறையில் தனியார் மூலதனம் கொழுப்பேற குதூகலத்தில் ஆழ்கின்றது. மக்களின் அடிப்படையான சமூகத் தேவைகளையே அரசு கைவிட்டுவிட்டது. உதாரணமாக பொதுச் சேவையை தனியார்மயமாக்கியதால் 2 கோடி குழந்தைகள் கல்வியை இழந்துள்ளனர். 2004-இல் மட்டும் 12,000 சிறுவர் பூங்காக்களை உள்ளடக்கிய வகையில் இயங்கிய பாடசாலைகளை சீன அரசு மூடியுள்ளது. எங்கும் சமூக அவலங்கள் விதைக்கப்படுகின்றன. மருந்துகளின் விலை அதிகரிப்பாலும், வைத்தியசாலை கட்டணம் செலுத்தும் நிலை மாறியுள்ளதாலும், சீன மக்களில் பாதிப் பேர் வைத்தியசாலை செல்ல முடியாத நிலைக்குத் தரம் தாழ்ந்துள்ளனர். மனித அவலத்தில் தான் சீனப் பொருளாதாரம் முன்னேறுகின்றது.

சீனாவின் உணவு உற்பத்தி அந்த மக்களுக்கானதாக, தேவை சார்ந்தாக 1949 முதல் திட்டமிடப்பட்டது. உலக வர்த்தகக் கழகம் சீனாவில் புகுந்ததைத் தொடர்ந்து 60 கோடி விவசாயிகளின் உணவு உற்பத்தி, வர்த்தகம் சார்ந்ததாகவும், ஏற்றுமதிக்கானதாக மாற்றியமைத்தது. இதன் அடிப்படையில் 15 முதல் 22 சதவீத உணவு உற்பத்தியை முற்றாக வர்த்தக அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டது. அத்துடன் பழம், மரக்கறி மற்றும் இறைச்சி உற்பத்தியை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும் வகையில், உலக வர்த்தகக் கழகம் மாற்றியமைத்துள்ளது. இதன் அடிப்படையில் 20 லட்சம் புதிய வேலைகளை உருவாக்கியுள்ளது. ஆனால் இது எதிர்மறையில் பல கோடி விவசாயிகள் விவசாயத்தை கைவிட வைத்தது. தொழிலை இழந்த விவசாயிகளை, வேலை தேடி நகரங்களை நோக்கிப் படையெடுக்க வைத்துள்ளது. சீன நகரங்கள் வேலைதேடித் திரியும் மக்கள் கூட்டத்தால் பிதுங்குகின்றது. சீனாவில் கிராமங்களில் இருந்து மக்கள், நகரங்களை நோக்கி ஓடுவது தொடர்ந்து அதிகரிக்கின்றது.

| | நகரங்கள் | கிராமங்கள் |
|---|---|---|
| 1980 | 19.7 சதவீதம் | 80.3 சதவீதம் |
| 1990 | 27.4 சதவீதம் | 72.6 சதவீதம் |
| 2000 | 35.8 சதவீதம் | 64.2 சதவீதம் |
| 2003 | 38.6 சதவீதம் | 61.4 சதவீதம் |



சீனக் கிராமங்களில் மக்கள் வாழமுடியாத வகையில் கடுமையான, ஈவிரக்கமற்ற சுரண்டல், அந்த மக்களை அங்கிருந்து விரட்டியடிக்கின்றது. இது 2010-இல் 80 சதவீதமான மக்கள் நகரங்களை வந்தடைந்து விடுவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றது. கிராமங்கள் வறுமையில் சிக்கியுள்ளது. சீன அரசு அறிக்கை ஒன்றே ஒன்பது கோடி சீனர்கள் ஒரு டாலருக்கு குறைவான வருமானத்தை பெற்று வறுமையில் இருப்பதாக ஒப்புக் கொள்கின்றது. சீனா மக்கள் தொகையில் கிராமத்தில் 69 சதவீதமானவர்கள் வாழ்கின்றனர். இவர்களில் 50 சதவீதமானவர்கள் விவசாயத்தையே உழைப்பாக கொண்டுள்ளனர். அதேநேரம், 19 சதவீதமானவர்கள் வேறு கிராமத் தொழில்களைச் சார்ந்து வாழ்கின்றனர். 50 சதவீத விவசாயிகள் தேசிய வருமானத்தில் பெறுவது 16 சதவீதத்தை மட்டுமே. இதற்கே வேட்டு வைக்கப்படுகின்றது. 1980 முதலே இந்த நிலை வளர்ச்சி பெற்று, இன்று நிலைமை மோசமாகி ஏழைகளை உற்பத்தி செய்கின்றது. சீன விவசாயிகள் உண்ட உணவு ஏற்றுமதியாவதால், பசியும் பட்டினியும் சீனாவின் புதிய தலைவிதியாகியுள்ளது. அதேநேரம் சீனா உலகில் நாலாவது மிகப் பெரிய உணவு ஏற்றுமதி நாடாக மாறியுள்ளது.

2001-இல் அதிக விவசாயப் பொருட்களை
ஏற்றுமதி செய்த நாடுகள்

| | | |
|---|---|---|
| ஐரோப்பிய ஒன்றியம் | 23,551 | கோடி டாலரில் |
| அமெரிக்கா | 6,840 | கோடி டாலரில் |
| ஜப்பான் | 5,694 | கோடி டாலரில் |
| சீனா | 2,012 | கோடி டாலரில் (ஹாங்காங் உள்ளடக்கவில்லை) |
| கனடா | 1,555 | கோடி டாலரில் |
| மெக்சிகோ | 1,279 | கோடி டாலரில் |
| தென்கொரியா | 1,250 | கோடி டாலரில் |
| ரசியா | 1,140 | கோடி டாலரில் |
| ஹாங்காங் | 1,106 | கோடி டாலரில் |
| தாய்வான் | 699 | கோடி டாலரில் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகில் மிகப் பெரிய உணவு ஏற்றுமதி நாடாக மாறும் சீனாவினுள், மக்கள் உணவுக்காகக் கையேந்தி பிச்சை எடுக்கின்றனர். ஒரு நேரக் கஞ்சி குடிக்க முடியாது வீதிகளில் அலைகின்றனர். ஆனால், சீனா பொருளாதார ரீதியாக ஏகாதிபத்தியத்துக்கு சவால் விடும் நிலைக்கு தன்னை மாற்றி வருகின்றது. பணக்காரக் கும்பல்களின் நலன்களை அடிப்படையாக கொண்டே சகலமும் ஒழுங்கமைக்கப்படுகின்றது. சீனாவின் மிகப் பெரிய தனியார் நிறுவனத்தின் சொத்தின் பெறுமதி 220 கோடி டாலராகியுள்ளது. முதல் 5 மிகப் பெரிய நிறுவனங்களின் சொத்து 365 கோடி டாலராகியுள்ளது.

2003-இல் சீனாவின் மிகப் பெரிய 11-வது பணக்காரனையே, சீனாவின் ஜனாதிபதியின் மகள் திருமணம் செய்து கொண்டார். அவரிடம் 3.5 கோடி டாலர் சொத்துக்கள் உண்டு. அரசு இயந்திரமும் மூலதனமும் இணைந்து நடத்தும் சுரண்டல், சூறையாடலாகிய யுடன் திருமணமாக வெளிப்படுகின்றது. மறுபக்கத்தில் 9.4 கோடி விவசாயிகள் நிலங்களை இழந்ததுடன், நகரங்களை நோக்கி நகர்ந்துள்ளனர். இப்படி வரும் கூலித் தொழிலாளர்களுக்கு அன்றாட கூலிகளைக் கூட கொடுக்க முடியாத நிலையில், 1200 கோடி டாலர் நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இது ஒரு சமூக நெருக்கடியாக கொந்தளிப்பாக பரிணமிக்கின்றது. சீன மக்களின் துயரங்கள் பலவாக மாறி வருகின்றது. உதாரணமாக சீனாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் கூட, சீன உழைக்கும் மக்களின் வயிற்றில் அடிக்கின்றது. 2003-இல் அமெரிக்கா சீனாவின் துணி மற்றும் ஆடைகளுக்கு விதித்த தடை, 1.5 கோடி புடவை உற்பத்தியாளர்களையும், அதற்குத் தேவையான மூலவளங்களை உற்பத்தி செய்த 10 கோடி விவசாயிகளின் வாழ்வை நெருக்கடிக்குள்ளாக்கியது. உலகில் மேற்கு அல்லாத நாடுகளில் உயர் கடன் கொண்ட, இரண்டாவது மிகப் பெரிய நாடாக சீனா உள்ளது. 2001-இல் 17,000 கோடி டாலர் கடனை சீனா கொண்டிருந்தது. அதாவது சீனாவின் மொத்த கடன் 11,03,821 கோடி இந்தியா ரூபாவாகும். சீனாவில் 2001-2002 வருடப் பற்றாக்குறை 1,82,868 கோடி இந்திய ரூபாவாகியுள்ளது.

சீனப் பொருளாதாரம் என்பது மக்களுக்கு எதிரானதாக, அவர்களை எதுவுமற்ற ஒன்றாகி விட்டது. அதேநேரம் உலகளவில்



பல்வேறு நாடுகளில் உள்ள மக்களின் உழைப்பின் ஆற்றலை அழித்து, அவர்களின் வாழ்வைச் சூறையாடுகின்றது. குறிப்பாக ஏகாதிபத்திய நாட்டு உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வை அழித்து வருகின்றது. சீனப் பொருளாதாரம் சீனா உள்ளிட்ட உலகப் பணக்காரக் கும்பலின் நலன்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. அதேநேரம் சீன மூலதனம் உலகளவில் ஏகாதிபத்தியதுக்குப் போட்டியாகவும் களத்தில் குதித்துள்ளது. அதேநேரம் ஏகாதிபத்திய உற்பத்திகளை உள்ளிழுத்து, உலகளாவிய ஒரு புதிய சர்வதேச நெருக்கடிக்குள் உலகை நகர்த்தி வருகின்றது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான நெருக்கடிகளில் கூட, சீனாவின் பங்கு முதன்மையான ஒன்றாக மாறிவிட்டது. உலகமயமாதலில் சீனாவின் நிலைப்பாடு, உலகளாவிய பல நெருக்கடிக்கு ஊன்றுகோலாகிவிட்டது. இவற்றை நாம் மேலே விரிவாகக் கண்டோம். தொடர்ந்து விரிவாகக் காணவுள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 10. தேசம் கடந்த பன்னாட்டு மூலதனங்கள் தேச எல்லைகளையே அழிக்கின்றன.

உலகளவில் மக்கள் கூட்டம் தமது வரலாற்று ரீதியான சுயஅடையாளங்களையே, படிப்படியாக ஒரு சில பன்னாட்டு நிறுவனங்களிடம் இழந்து வருகின்றன. மறுபக்கத்தில் உழைப்பு சார்ந்து உருவாகும் மனிதனுக்கேயுரிய சுயமான சிந்தனைத் திறனை, மூலதனம் மலடாக்குகின்றது. சுதந்திரமான ஜனநாயகமான தெரிவுகள் அனைத்தும், உலகளவில் பரந்துபட்ட மக்களுக்கு படிப்படியாக மறுக்கப்படுகின்றது. தேசங்கடந்த அந்நிய முதலீட்டினால், இயற்கையான மனித தேர்வுகள் எல்லாம் பாரிய அளவில் எல்லை கடந்து அழிக்கின்றது. தேசங்கடந்த அந்நிய முதலீடுகள் தேசிய முதலீட்டை அழிக்கின்ற போது, தேசிய பண்பாடுகள், தேசிய கலாச்சாரங்கள், சுயஅறிவியல் தளங்கள் முற்றாகவே சிதைக்கப்பட்டு மலடாக்கப்படுகின்றது. தேசிய உற்பத்திகள் அழிகின்ற போது, பன்னாட்டு உற்பத்திகளே ஒரேயொரு தெரிவாகி விடுகின்றது. சுதந்திரமான தேசிய தெரிவுகள் எல்லாம் முற்றாக சிதைத்து மலடாக்கப்படுகின்றது.

இதன் விளைவுகள் கற்பனைக்கு உட்பட முடியாத வகையில் மிகப் பிரம்மாண்டமானவை. உதாரணமாக மூன்றாம் உலக நாடுகளின் அந்நிய நேரடி மூலதனத்தின் அளவு 1990-இல் 12 சதவீதமாக இருந்தது. இது 1995-இல் 38 சதவீதமாகியது. மூன்றாம் உலக நாடுகளின் தேசியம் அன்றாடம் உயிருடன் கொல்லப் படுகின்றது. இதை யாரும் மறுக்க முடியாது. உண்மையில் 1995-ஆம் ஆண்டில் மூன்றாம் உலக நாடுகளில், தனியார் மூலதனம் அரசு மூலதனத்தை விட ஐந்து மடங்கு அதிகமாக மாறியது. இது ஐந்து வருடத்துக்கு முன்பு அதாவது 1990-இல் அரசு மூலதனம் தனியார் மூலதனத்தை விடவும் அதிகமாக இருந்தது. 1990-1994-இல் மொத்த நிதிவரத்தில் 29 சதவீதம் அரசைச் சார்ந்து இருந்தது. இது 1994-இல் 6 சதவீதமாகியது. அரசு என்பது தனது அடிப்படையான சமூகக் கட்டுமானத்தை முற்றாக தனியார்துறை சார்ந்ததாக மாறி வந்ததையே இவை துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது. தேசிய சமூகப் பண்புகள் சிதைவதை இது துரிதமாக்கியது. 1980-இல் உலகளவிலான வணிகத்தில் ஈடுபட்ட நாடுகள் எண்ணிக்கை 28 சதவீதமாக இருந்தது. இது 1986-இல் 19 சதவீதமாக குறைந்த போனது. தேசங்களின் தேசிய தலைவிதி, சமூகத்துக்கு வெளியில் தனியார் கையில் தாரைவார்க்கப்பட்டது. மூன்றாம் உலக நாடுகளில் 1990-இல் உலக அளவில் மொத்த அந்நிய முதலீடு 15 சதவீதமாகவே இருந்தது. இது 1996-இல் 40 சதவீதமாகியது. ஏற்றுமதி முதலீடு 2 சதவீதத்தில் இருந்த 30 சதவீதமாகியது. தனிப்பட்ட முதலீடுகள் 1995-இல் 3200 கோடி டாலரில் இருந்து 1996-இல் 4600 கோடி டாலராகியது. சமூகக் கூறுகள் அன்றாடம் அரித்து உறிந்தெடுக்கப்பட்டது.

ஒரு நாட்டின் தலைவிதி தனியார் துறை சார்ந்து அந்நியர் வசம் கைமாறிச் செல்வதை இவை எடுத்துக் காட்டுகின்றது. ஒரு தேசத்தின் சுயாதீனம் சிதைந்து, மறுகாலனியாக தேசங்கள் திவாலாவதையே காட்டுகின்றது. இதன் வெட்டுமுகத் தோற்றமோ மேலும் துயரமானவை. உதாரணமாக 1991-இல் உலகில் உள்ள 40,000 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் உலகளவில் 2,50,000 உற்பத்தி நிறுவனங்களை விழுங்கி ஏப்பமிட்டது. அதாவது 2.5 லட்சம் தேசிய உற்பத்திகள் மட்டுமின்றி அதன் பன்மைத்துவத்தையும் கூட 40,000 நிறுவனங்கள் விழுங்கி ஏப்பமிட்டன. இதன் மூலமான பண்பாட்டுச் சிதைவுகளை, கலாச்சாரச் சிதைவுகளை, மனித அவலங்களை எந்த ஜனநாயகமும் சரி சுதந்திரமும் கூட ஏறெடுத்து கூடப் பார்த்தில்லை. இந்த பன்னாட்டு நிறுவனங்களின் வரலாறு என்பது பல கட்டங்கள் ஊடாகவே வளர்ச்சியுற்றன. ஆரம்பத்தில் காலனிகள் மூலம் உலகத்தையே அடிமைப்படுத்தி உலகைப் பங்கிட்டு கொள்ளை அடித்தன. முதலாம் உலக யுத்தம் இப்படிக் கொள்ளையடித்த காலனிகளை மறுபங்கீடு செய்யக் கோரியே ஆரம்பமாகியது. இந்த மூலதனத்துக்கான யுத்தத்தின் முன்பு இந்த நாடுகள் இட்டுயிருந்த அந்நிய முதலீடுகளைப் பார்ப்போம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1914-இல் உலகளாவிய அந்நிய மூலதனங்கள் கோடி டாலரில்

| | மேற்கு ஐரோப்பா | 9 நாடுகள் | தென் ஐரோப்பா | கிழக்கு ஐரோப்பா | தென் அமெரிக்கா | ஆசியா | ஆப்பிரிக்கா | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 26.3 | 825.4 | 24.8 | 61.8 | 368.2 | 287.3 | 237.3 | 1831.1 |
| பிரான்ஸ் | 125.5 | 38.6 | 133.2 | 266.3 | 115.8 | 83.0 | 102.3 | 864.7 |
| ஜெர்மனி | 131.0 | 100 | 83.5 | 83.4 | 90.5 | 23.8 | 47.6 | 559.8 |
| அமெரிக்கா | 67.4 | 90 | 3 | 2.9 | 164.9 | 24.6 | 1.3 | 351.4 |
| 7 நாடுகள் | 10 | 10 | 0 | 10 | 20 | 150 | 20 | 220 |
| மொத்தம் | 459.2 | 1117.5 | 325.5 | 559.4 | 839 | 610 | 466.4 | 4377 |

9 நாடுகள் -இலங்கை, பர்மா, இந்தோசீனா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தியா மற்றும் சீனாவாகும்

7 நாடுகள்- பெல்ஜியம், நெதர்லாந்து, சுவிஸ், ஜப்பான், ரஷ்யா, போர்ச்சுகல், சுவீடன்

ஏகாதிபத்தியம் நேரடிக் காலனிகள் மூலமும், மிகப் பெரிய அந்நிய முதலீட்டின் மூலமும் மிகப் பிரம்மாண்டமான வகையில் கொள்ளையிட்டன. கொள்ளைகளை எடுத்துவரும் வசதிக்காகவே அதிக அந்நிய முதலீட்டை நடத்தினர். அதாவது கொள்ளைகளை எடுத்துவர புகையிரதப் பாதைகளை அமைப்பதில் பெரும் நிதி செலவிடப்பட்டது. 1870-1913-க்கும் இடையில் 1.91 லட்சம் கிலோ மீட்டர் நீளமாக புகையிரதப் பாதைகளை 36 நாடுகளில் ஏகாதிபத்தியம் அமைத்தது. இந்த பாதைகள் ஊடாகத்தான், மூலதனம் ஏகாதிபத்தியத்துக்கு கடத்திச் சென்றனர். இந்த மூலதனங்கள் தான் இன்றைய பன்னாட்டு நிறுவனங்களின் அடித்தளமாகும். அடிமைகளின் உழைப்பையும், சொந்த நாட்டு உழைக்கும் மக்களின் உழைப்பையும் சூறையாடி பெரும் மூலதனங்களை திரட்டிக்கொண்டனர். காலனிய மூலதனத்துக்கு முன்பு, கூலிகளற்ற அடிமைகளின் உழைப்பே, மேற்கில் குவிந்த மூலதனத்துக்கு ஆதாரமாகவும் நெம்புகோலாகவும் இருந்தது. உதாரணமாக 1450-1870-க்கும் இடையில் 1.5 கோடி ஆப்பிரிக்க அடிமைகள் ஆப்பிரிக்காவில் இருந்து கடத்திச் சென்றனர். இவை பல நாடுகளில் காணப்பட்ட மனித அடிமைகளின் ஒரு பகுதி மட்டும்தான். மனித உழைப்புகள் சூறையாடப்பட்ட வடிவங்கள் பற்பல. அந்நிய மூலதனத்தின் குவியல், மனிதப் புதைகுழிகளின் மேல் கட்டமைக்கப்பட்டவைதான். இது மனிதர்களை புதிதாக மேலும் நவீனமாக அடிமைப்படுத்துவதன் மூலமே, நாகரிகமடை



கின்றது. இது சொந்த இனம் மற்றும் நிறத்தையும் கூட விட்டு விடவில்லை.

இந்த நாகரிகமானது மார்க்ஸ் மூலதனத்தில் கூறுவது போல் ஒரு சமூக இயக்கத்தின் மேல் நிகழ்கின்றது. அதை அவர் மார்னிங் ஸ்டார் பத்திரிகையில் இருந்தே எடுத்துக்காட்டுகின்றார். நம் வெள்ளை அடிமைகள் உழைத்துழைத்து சாவுக்குழியில் விழுகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் அமைதியாக வாய் பேசாமல் உழைத்து உழன்று நோயுற்றுச் சாகின்றனர். ஏன் இந்த அவலச் சாவுகள் என்றால், நாகரிகமான இந்த மூலதன அமைப்பிற்காகவே. சுதந்திரமாகவும், ஜனநாயகபூர்வமாகவும் உயிர் வாழும் முதலாளியின் ஆன்மா ஈடேற்றத்துக்காகவே. மார்க்ஸ் கூறுவது போல் ஒரு வணிகச் செயலால் மட்டும் ஆதாயம் ஈட்டுதலும் அவனது குறிக்கோள் அல்ல. செல்வத்தின் மீது எல்லையற்ற பேராசை, பரிமாற்ற மதிப்பை நோக்கி வெறியுடன் ஓடுதல். முதலாளிக்கும் கஞ்சனுக்கும் பொதுக் குணங்கள். கஞ்சன் பைத்தியம் பிடித்த முதலாளி. முதலாளியோயெனில் பகுத்தறிவுள்ள கஞ்சன் என்றார். ஜனநாயகம், சுதந்திரம் என்பது பேராசையுடன் கூடிய மூலதனத்தின் சொந்த ஆன்மாவே. இந்த வரையறையில் தான் மூலதனம் உலகெங்கும் சதிராட்டம் போடுகின்றது.

மனித இனத்துக்கே எதிராக ஊடுருவும் அந்நிய மூலதனம், மனித இனத்துக்கு எதிராக கொடூரமாக, எப்படி தேசிய எல்லைகளைக் கடந்து ஊடுருவிப் பாய்கின்றது என்பதை நாம் பார்ப்போம். 2002-இல் தேசம் கடந்த அந்நிய ஆக்கிரமிப்பு சார்ந்த முதலீடுகள் அண்ணளவாக 2,00,000 கோடி டாலரைத் தாண்டிச் சென்றது. இவற்றின் மூலம் ஏகாதிபத்தியங்களில் கொழுப்பேறியுள்ள பெரும் பணக்காரக் கும்பல்கள், மனித இனத்துக்கு எதிராக உலகைச் சூறையாடி செல்வக் கொழுப்பில் மிதந்தனர். 2001-ஐ விட 2002-ஆம் ஆண்டு செழிப்பான ஆண்டாகவே திகழ்ந்தது. 2000-உடன் ஒப்பிடும் போது, 2001-இல் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார மந்தத்துக்கு அந்நிய முதலீட்டில் ஏற்பட்ட நெருக்கடியும் ஒரு காரணமாகும். 2001-இல் உலகளவில் அந்நிய முதலீடு 2000-டன் ஒப்பிடும் போது, 51 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டிருந்தது. இது 2001-க்கு முந்திய 10 வருடத்தில் முதல் தடவையாக நடந்தது. இப்படி ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு, கடந்த 30 வருடத்தில் கூட நடக்கவில்லை. 2000-ஆம் ஆண்டில் அந்நிய முதலீடு 1,50,000 கோடி டாலர் தாண்டிச் சென்றது. இது 2001-இல் 73,500 கோடி டாலராகக் குறைந்த போது, பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஏற்பட்ட சரிவால் ஏற்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளைவை நாம் மேல் உள்ள அத்தியாயங்களில் பார்த்தோம். உண்மையில் 2001-இல் ஏழை மக்கள் பெரும் பணக்காரக் கும்பலுக்கு எதிராக, தங்கள் மூச்சுக்களை கொஞ்சம் தக்கவைக்க முடிந்தது அவ்வளவே. ஆனால் 2002-இல் மீண்டும் அந்நிய முதலீட்டை வேகப்படுத்திய தேசங்கடந்த பன்னாட்டு மூலதனங்கள், உலகை அடிமைப்படுத்துவதில் எகிறிக் குதிக்கின்றன.

2002-இல் 65,000 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள், உலகளவில் 8.5 லட்சம் அந்நிய முதலீட்டை நடத்தியது. இவற்றில் மூன்றில் ஒன்று மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களாகும். இவை மூன்றில் ஒரு பகுதி உலக ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தியது. 2001-இல் அந்நிய முதலீடுகள் வழங்கிய மொத்த வேலை வாய்ப்பு உலகளவில் 5.4 கோடியாகும். ஆனால் மறுபக்கத்தில் தேசிய உற்பத்திகள் அழிக்கப்படும்போது, கோடிக்கணக்கான மக்கள் வேலையை இழந்து விடுகின்றனர். அத்துடன் இன்று தேசிய முதலீடுகள் எதுவும் செய்யப்படுவதில்லை. ஒவ்வொரு மூன்றாம் உலக நாட்டிலும் அந்நிய முதலீடுகள் மட்டுமே ஒரேயொரு முதலீடாகியுள்ளது.

பயன்பாட்டுப் பொருட்கள் கூட பெருமளவில் அந்நிய முதலீட்டு உற்பத்தியாகவே காணப்படுகின்றது. 1995-இல் உலகில் 37,000 பன்னாட்டு நிறுவனங்கள் இருந்தன. இதில் முதல் 100 நிறுவனங்கள் 3,40,000 கோடி டாலர் சொத்தை வைத்திருந்தது. இந்த பன்னாட்டு நிறுவனங்கள் 2 லட்சம் பொருட்களை உற்பத்தி செய்தது. அதே நேரம் 15 கோடி மக்களுக்கே வேலை வழங்கியது. 1993-இல் 5,50,000 கோடி டாலர் பெறுமதியான வர்த்தகத்தை உலகளவில் கட்டுப்படுத்தியது. உலகளவில் அந்நிய முதலீடுகளின் நிரந்தர இருப்பு 1990-இல் 1,70,000 கோடி டாலராக இருந்தது. இது 2001-இல் 6,60,000 கோடி டாலராகியது. இது 2002-இல் 15,00,000 கோடி ஈரோவாகியது. 1990-உடன் 2002-யை ஒப்பிடும் போது அந்நிய முதலீட்டின் நிரந்தர இருப்பு 9 மடங்காகியுள்ளது. உலகம் படிப்படியாகவே சில பன்னாட்டு நிறுவனங்களின் சொத்தாக மாறி வருவதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

2000 ஆண்டு அந்நிய முதலீடு 1,50,000 கோடி டாலராக இருந்தது. 60,000 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் 8.2 லட்சம் அந்நிய முதலீட்டை மூன்றாம் உலக நாடுகளில் நடத்தியது. இன்று தேசங்களில் முதலீடு என்பது, அந்நிய முதலீடு மட்டும் தான். 54 நாடுகளில் 1,000 அந்நிய பொருட்கள் சார்ந்த உற்பத்தியின் பெறுமதி மட்டும், 6,00,000 கோடி டாலராக இருந்தது. மொத்த அந்நிய



முதலீட்டில் நாலில் மூன்றை, முன்னேறிய மேற்கு நாடுகள் கட்டுப்படுத்தின. 2000-ஆம் ஆண்டில் மேற்கு உலகைச் சூறையாடிய அந்நிய முதலீட்டின் அளவு 21 சதவீதத்தால் அதிகரித்த போது, இதன் தொகை 1,00,000 கோடி டாலராகியது.

இப்படி உலக மக்களையே வரைமுறையின்றிச் சூறையாடும் அந்நிய முதலீட்டின் அளவு, மறுபக்கத்தில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் சர்வதேச நெருக்கடியை கூர்மையடைய வைக்கின்றது. உலகச் சந்தையை கைப்பற்றும் ஏகாதிபத்திய போட்டியில் நாள் தோறும், ஒவ்வொரு வினாடியும் ஒரு யுத்தமாகவே தொடர்கின்றது. ஒன்றையொன்று அழிப்பது முதல், தேச எல்லை கடந்த சூறையாடலில் கடுமையாகப் போரிடுகின்றன. முதலீட்டின் அளவு சூறையாடும் அளவைத் தீர்மானிப்பதுடன், அவர்களுக்கு இடையிலான வெற்றி தோல்விகளை வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நிர்ணயம் செய்கின்றது. இந்த வகையில் அந்நிய முதலீடுகளின் அளவுகளைக் குறிப்பாகப் பார்ப்போம்.

அந்நிய முதலீடுகளைச் செய்வோர் யார் எனப் பார்ப்போம். அந்நிய முதலீட்டை 2001-இல் அதிகமிட்ட ஏகாதிபத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டது. அந்நிய முதலீடுகள் கோடி டாலரில்

| முன்னேறிய நாடுகள் | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|---|
| அமெரிக்கா | 8897.8 | 10339.8 | 17443.4 | 28337.6 | 30091.2 | 12443.5 |
| பிரிட்டன் | 2578 | 3322.9 | 7432.4 | 8797.3 | 11655.2 | 5379.9 |
| பிரான்ஸ் | 2197 | 2317.4 | 3098.4 | 4707.0 | 4293.0 | 5262.3 |
| பெல்ஜியம், லுக்கசம்பேர்க் | 1406 | 1199.8 | 2269.1 | 13305.9 | 24556.1 | 5099.6 |
| நெதர்லாந்து | 1500 | 11132 | 3696.4 | 4128.9 | 5245.3 | 5047.1 |
| ஜெர்மனி | 640 | 1224.4 | 2459.3 | 5475.4 | 19512.2 | 3183.3 |
| கனடா | ★ | 1152.7 | 2280.9 | 2443.5 | 6661.7 | 2746.5 |
| ஸ்பெயின் | ★ | 769.7 | 1179.7 | 1575.8 | 3752.3 | 2178.1 |
| இத்தாலி | ★ | 370.0 | 263.5 | 691.1 | 1337.7 | 1487.3 |
| சுவீடன் | 549 | 1096.8 | 1956.4 | 6085.0 | 2336.7 | 1273.4 |
| ஜப்பான் | 20 | 320 | 326 | 1231 | ★ | ★ |
| ரசியா | 247 | 663 | 276 | 289 | ★ | ★ |
| ★ தெரியாது | | | | | | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்நிய முதலீட்டை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் 2000, 2001-இல் அதிகமிட்டன. சில விதிவிலக்குகள் இருந்த போது நிலைமை அமெரிக்கா சார்பு நிலையில் காணப்பட்டது. ஆனால் இதற்குப் பிந்திய காலத்தில் நிலைமை முற்றிலும் நேரெதிராக மாறியது. இதை பின்னால் விரிவாகப் பார்க்கவுள்ளோம். அந்நிய முதலீடுகள் எந்த நாட்டில் அதிகமிடப்பட்டது என்பதைப் பார்ப்போம்.

அந்நிய முதலீட்டை 2001-இல் அதிகமிட்ட மூன்றாம் உலக நாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டது. அந்நிய முதலீடுகள் கோடி டாலரில்

| வளரும் நாடுகள் | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| சீனா | 4423.7 | 4375.1 | 4031.9 | 4077.2 | 4684.6 |
| மெக்சிக்கோ | 1404.4 | 1193.3 | 1253.4 | 1470.6 | 2473.1 |
| ஹாங்காங் (சீனா) | 1136.8 | 1477.0 | 2459.6 | 6193.8 | 2283.4 |
| பிரேசில் | 1899.3 | 2885.6 | 2857.8 | 3277.9 | 2245.7 |
| பெமூட்டாஸ் | 292.8 | 539.9 | 947.0 | 1098.0 | 985.9 |
| போலந்து | 490.8 | 636.5 | 727.0 | 934.2 | 883.0 |
| சிங்கப்பூர் | 1074.6 | 638.9 | 1180.3 | 540.7 | 860.9 |
| சவுதி அரேபியா | 381.7 | 56.1 | 150.2 | 88.8 | 665.3 |
| சிலி | 521.9 | 463.8 | 922.1 | 367.4 | 550.8 |
| செக்குடியரசு | 130.0 | 371.8 | 632.4 | 498.6 | 491.6 |

உலகமயமாதல் தனது விரிவான ஆக்கிரமிப்பை உலகளவில் தொடங்கியவுடன், பெருமெடுப்பில் அந்நிய மூலதனத்தை சீனாவில்தான் இட்டன. இதில் ஹங்காங் உள்ளடங்கும் போது, மிகப் பிரமாண்டமான ஒன்றாக மாறிவிடுகின்றது. எந்தளவுக்கு நாடுகளின் சுயாதீனம் இழக்கப்படுகின்றதோ, அந்தளவுக்கு அந்நிய முதலீடுகள் அதிகரிக்கின்றது. இதில் சீனா மட்டுமே விதிவிலக்காக உள்ளது. சீனா விதிவிலக்காக இருப்பதற்குக் காரணம், அதிக லாப வீதத்தை மூலதனத்தக்கு பெற்றுத் தருவதால் மூலதனம் வரைமுறையின்றி ஊடுருவிப் பாய்கின்றது. அதே தளத்தில சீன மூலதனமும் சுயதீனமாகச் செயலாற்றத் தொடங்குகின்றது.

எல்லை கடந்த அந்நிய முதலீடுகள் ஏகாதிபத்தியம் சார்ந்து இருப்பதுடன், அவை விரல்விட்டு எண்ணக் கூடிய சில நாடுகளைச் சார்ந்து இருக்கின்றது. உலகம் ஒரு சில நாடுகளுக்கு அடிமையாவதையே இவை எடுத்துக்காட்டுகின்றது. அதிலும் ஏகாதிபத்திய அரசுகளின் மூலதனத்துக்கு வெளியில், பெருமளவில் ஒரு சில பன்னாட்டு நிறுவனங்களினால் அந்நிய முதலீடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றது. இங்கு அந்நிய ஏகாதிபத்திய அரசு மூலதனங்களின் அளவு குறைக்கப்பட்டு, தேசங்கடந்த பன்னாட்டு மூலதனங்கள் பெருகிவருவது உலகமயமாதலின் ஒரு நிகழ்ச்சிப் போக்காகும்.

மூன்றாம் உலக நாடுகள் சார்ந்தும் சில அந்நிய முதலீடுகள் நடக்கின்றன. இதில் சில விதிவிலக்குடன் சீன மூலதனம் பெருமெடுப்பில் நிகழ்கின்றது. இது தவிர்ந்த மூன்றாம் உலக நாடுகள் சாந்த முதலீடுகள் என்பது, தேசிய எல்லைக்குள் உருவான சில தரகு முதலாளிகள், தாம் சூறையாடிய பெருந்தொகை மூலதனத்தை நாட்டுக்கு வெளியில் கடத்திச் செல்லுவதையே இது குறிக்கின்றது. இவை ஏகாதிபத்திய நாடுகளில் பொதுவாக போடப்படுகின்றது. இந்த முதலீடுகள் அல்லது நிதி மூலதனங்கள் எப்போதும் எடுத்துச் சென்ற தனிப்பட்ட நபரின் குடியுரிமையை அடிப்படையாக கொண்டு, நாட்டின் பெயரால் வரையறுக்கப் படுகின்றது. உண்மையில் இந்த மூலதனம் நாட்டின் எல்லையைக் கடந்து வெளியேறுகின்றதேயொழிய, குறித்த மூன்றாம் உலக நாட்டின் அந்நிய முதலீடாக இருப்பதில்லை. அரசியல் ரீதியாகவும் சரி, பொருளாதார ரீதியாகவும் சரி எந்த விதமான தாக்கத்தையும் சொந்த நாட்டுக்கு சார்பாக செயல்படுவதில்லை.

இது ஏகாதிபத்திய நாட்டுக்கு சார்பாக, சொந்த நாட்டுக்கு எதிராகவே எப்போதும் செயல்படுகின்றது. இந்த மூலதனத்தை நாட்டுக்கு வெளியில் கடத்திச் செல்லும் மூன்றாம் உலக கொள்ளைக்காரர்கள், தமது குடியுரிமையை மாற்றிக் கொள்வதன் மூலம், ஒரே நாளில் அந்த சொத்துக்கள் ஏகாதிபத்தியம் சார்ந்து விடுகின்றது. மூலதனத்தை அமெரிக்காவுக்குள் கடத்தி வரும் நபருக்கு விசேட குடியுரிமை சட்டத்தின் கீழ் விசேட அமெரிக்கப் குடியுரிமை வழங்கப்படுகின்றது. வருடாந்தரம் பெருந்தொகையானோர் இப்படி அமெரிக்காவுக்குள் மூலதனத்தைக் கடத்திச் செல்கின்றனர். உலகில் 100 கோடிக்கு அதிகமான சொத்துக்களை வைத்திருந்த பல மெக்சிகர்கள் ஒரே நாளில் அமெரிக்கராகிவிட்டனர். இது பொதுவாக மூன்றாம் உலக நாடுகளின் பெயரால் அடையாளம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படும் பெரும் மூலதனத்துக்கு, நாள்தோறும் நடக்கின்றது. இது சீனா மூலதனத்துக்கு மட்டும் விதிவிலக்காக உள்ளது. சீனா ஒரு ஏகாதிபத்தியமாக தன்னை மாற்றி அமைத்து வருகின்றது. உலக மூலதனத்தில் உயர்ந்த லாபவெறி வக்கரிக்கும் போது, சீனா ஏகாதிபத்தியமயமாதல் துரிதமாகி வருகின்றது.

அந்நிய முதலீடு சார்ந்த உலக ஆதிக்கம் ஏகாதிபத்தியம் சார்ந்தும், அதேநேரம் கடுமையான ஏகாதிபத்திய முரண்பாட்டையும் கொண்டுள்ளது. இங்கு உலகமயமாக்கலில் ஏகாதிபத்திய அரசுகள் இடும் அந்நிய முதலீடுகள் குறைந்து, ஏகாதிபத்தியம் சார்ந்த பன்னாட்டு தனியார் முதலீடுகள் அதிகரித்து வருகின்றது. ஏகாதிபத்திய அரசு சார்ந்த முதலீடுகளும் கணிசமான பெரும் தொகையாகவே இருக்கின்றது. அதேநேரம் ஏகாதிபத்திய தேசிய ஆதிக்கம் முதன்மை பெற்ற உலகளாவிய ஒழுங்கு காணப்படுகின்றது. ஏகாதிபத்திய அரசு மூலதனத்தை உள்நாட்டிலும் அந்நிய நாட்டிலும் தனியார் மயமாக்கும் போக்கில், தனியார் பன்னாட்டு நிறுவனங்கள் தேசிய உணர்வுடன் அக்கம்பக்கமாக ஒன்றிணைந்த ஏகாதிபத்திய ஆதிக்கப் போக்கு, ஏகாதிபத்திய முரண்பாட்டை ஆணையில் வைக்கின்றது. அந்நிய முதலீட்டில் தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் பங்கு இதில் முக்கியமானதும், ஏகாதிபத்திய அரசுக்கு நிகரான ஒரு பாத்திரத்தை வகிக்கின்றது.

1993-இல் வெளிநாட்டு முதலீட்டை எடுப்பின், உலகளவிலான மொத்த முதலீட்டில் அரைவாசியை, ஒரு சதவீதமான பன்னாட்டு நிறுவனங்களே முதலிட்டன. உலகளவில் தேசிய அரசுகள், சுதந்திரமான மக்கள் கூட்டம், சுதந்திரமான தெரிவுகள் எப்படி பந்தாடப்படுகின்றது என்பதை இந்த முதலீடு எடுத்துக் காட்டுகின்றது. ஒருசதவீதமான முதலீட்டாளனின் பண்பாட்டு மற்றும் அவனின் நலன்களை உறுதி செய்வதை அடிப்படையாக கொண்டே, 50 சதவீதமான முதலீடுகள் உலகைச் சூறையாடியது. 50 சதவீதமான புதிய முதலீடு ஏற்படுத்திய உற்பத்தி தவிர்க்க முடியாமல், ஒரு சதவீதமான பன்னாட்டு நிறுவனத்தின் தெரிவையே சமூகத் தெரிவாக்கியது. உலகமயமாதல், வரையறைக்கு உட்பட்ட ஒரு சில நிறுவனங்களின் தெரிவையே மனித சமூகத்துக்கு ஏற்படுத்துகின்றது. இது மனித குலத்தின் உழைப்பு சார்ந்த இயற்கை பரிணாமத்துக்கே திட்டவட்டமாகவே எதிரானது. இதற்குள் தான் மனிதனின் சுதந்திரம் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் வாய்கிழிய பிதற்றிப் பீற்றப்படுகின்றது.



1993-இல் உலகளாவிய முதலீட்டில் 50 சதவீதத்தை ஒரு சதவீதமான பன்னாட்டு நிறுவனங்களேயிட்டது என்றால், பரந்துபட்ட மக்களின் வாழ்வியல் இருப்பின் கொடூரத்தை நாம் புரிந்துகொள்ள எதுவும் நம்மைத் தடுப்பதில்லை. உண்மையில் முதலீட்டின் அளவு அந்நியனின் கைக்கும், விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசில நிறுவனங்களுக்கும் மாறிவரும் அளவு அதிகரிக்க, தேசிய முதலீடுகள் குறைகின்றது. இதன் மூலம் அந்நிய முதலீடு நவீனத் தொழில்நுட்பத்தின் துணையுடன் வேலை வாய்ப்பை இல்லாததாக்குகின்றது. மறுபக்கத்தில் தேசிய முதலீடு குறையும் போது, வேலையின்மை பெருகுவதை தாண்டி எதுவும் உலகில் நடப்பதில்லை. ஒரு நாட்டின் வறுமை, வேலையின்மை, சமூக சீரழிவுகள் அனைத்தும் முதலீட்டின் நோக்கில் இருந்தே தொடங்குகின்றது. உலக உற்பத்தியில் 25 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியவர்கள், உழைக்கும் ஆற்றல் உள்ள நூற்றுக்கு ஒருவனுக்குக் கூட வேலை வழங்கத் தயாரற்ற ஒன்றாகவே உலகமயமாதல் உள்ளது. அதாவது உழைக்கும் ஆற்றல் உள்ள 200 பேரில் ஒருவனுக்கே வேலை வழங்குகின்றது. மிகுதியாக உள்ள 199 உழைக்கும் மக்களுக்கு, மற்றைய உற்பத்தியாக விடப்பட்டு இருந்த 75 சதவீதமான துறையே வழங்கியது.

ஆனால் உலகளாவிய உலகமயமாதல் கொள்கை தேசிய உற்பத்திகளை அழித்து விரல்விட்டு எண்ணக் கூடிய பன்னாட்டு நிறுவனங்களிடம் முழுமையாக ஒப்படைப்பதை அடிப்படையாகக் கொண்டது. எந்த சுதந்திரமான ஜனநாயகமான அரசும், இதைத்தான் தனது கொள்கையாக்கி உலகமயமாக்குகின்றது. இந்த வகையில் உலக முதலீட்டில் 50 சதவீதத்தை ஒரு சதவீதமான பன்னாட்டு நிறுவனங்கள் செய்யும் நிலைக்கு 1993-லேயே உலகம் தரம் தாழ்ந்தது. சுற்றிவளைத்து ஒட்டு மொத்தமாக பார்த்தால், 1982-இல் உலக உற்பத்தியில் 30 சதவீதத்தையும், உலக வர்த்தகத்தில் 70 சதவீதத்தையும், முதலீட்டில் 80 சதவீதத்தையும் பன்னாட்டு நிறுவனங்களே கட்டுப்படுத்தின. 1992-இல் 90 சதவீதமான பன்னாட்டு நிறுவனங்களின் தலைமையகங்கள் ஏகாதிபத்திய நாடுகளிலேயே காணப்பட்டது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், பிரிட்டன், ஜெர்மனி என்பன வெளிநாட்டு முதலீட்டில் 79 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. இங்கு முதலீடுகள் என்பது நேரடி மற்றும் மறைமுக வழிகளில் விரிவாகி வருகின்றது. தேசிய அரசுகளின் முதலீடுகள் கூட, இன்று பன்னாட்டு நலனுக்கு இசைவானதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றப்படுகின்றது. இதை நோக்கி கடன்கள் நிபந்தனையுடன் வழங்கப்படுகின்றது. இம்முதலீடுகளை நேரடியாக பன்னாட்டு நிறுவனங்கள் செய்யாவிட்டாலும், பன்னாட்டு நிறுவனமே லாபத்தை முழுமையாக அடைகின்றது. பொருளாதார ரீதியாகவும், மறுபக்கத்தில் மூலதனத்துக்கான வட்டியை அறவிட்டு சூறையாடும் போது இரட்டைக் கொள்ளையே அரங்கேறுகின்றது.

உலகில் எதைத் திட்டமிட்டாலும் அதை பன்னாட்டு நிறுவனங்களே திட்டமிடுகின்றன. தேசிய அரசுகள் வெறும் வெற்றுப் பொம்மைகள்தான். மக்கள் சுதந்திரமாக வாக்குப் போட்டு தம்மை ஆள்வோரைத் தெரிவு செய்தனர் என்பது, இந்த முறுக்கி விட்ட (கீ கொடுத்த) பொம்மைகளுக்குத் தான். மக்களின் நலனை பிரதிநிதித்துவம் செய்த அரசுகள் என எதுவும் உலகில் இருப்பதில்லை. இதையே இன்றைய முதலீடுகள் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டுகின்றன.

உலகம் எப்படி அடிமையாகி விடுகின்றது என்பதை அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஜப்பானிய மொத்த முதலீட்டு இருப்பும், அவை எத்தனை முதலீடுகளில் செயல்படுகின்றது என்பது, எடுப்பாகவே எடுத்துக் காட்டுகின்றது.

| | 1999 | | 2000 | |
|---|---|---|---|---|
| | எத்தனை முதலீடுகளில் | மொத்த முதலீடு (நிரந்தர இருப்பு) கோடி ஈரோ | எத்தனை முதலீடு -களில் | மொத்த முதலீடு (நிரந்தர இருப்பு) கோடி ஈரோ |
| ஐரோப்பா | 21,835 | 3,22,300 | 25,559 | 3,55,300 |
| அமெரிக்கா | 7,791 | 6,81,500 | 8,172 | 7,48,500 |
| ஜப்பான் | 3,444 | 1,37,200 | 2,793 | 1,73,000 |

உலகெங்கும் உற்பத்தியை ஒரு சில நிறுவனங்களே திட்டமிடும் நிலைக்கு, உலகப் பொருளாதாரம் தரம்தாழ்ந்து வருவதையே இது தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இந்த நிறுவனங்கள் அதிக லாபம் தருவன என எதைக் கருதுகின்றதோ, அவைகளையே மனிதனின் தேவையாக மாற்றுகின்றனர். எவை எல்லாம் அதிக



லாபத்தைத் தரமுடியாதவை என்று கருதுகின்றதோ அவை அழிக்கப்படுகின்றது. இது தேசிய உற்பத்தியிலும் மட்டுமின்றி, லாபத்தைப் பெறமுடியாத ஏழை மக்களையும் இட்டு ஒரேவிதமான கொள்கையைத் தான் கையாளுகின்றது. இதனடிப்படையில் பன்னாட்டு மூலதனம், ஒரேவிதமான முதலீட்டை உலகளவில் நடத்துவதில்லை. மாறாக இருப்பதையும் அழிப்பதில் தான், லாபம் அதிகரிக்கின்றது என்ற பாசிச தத்துவத்துக்கு இணங்கவே அழித்தொழிக்கின்றனர். இங்கு இருப்பதை என்பது பரந்து காணப்படும் பன்மையான உற்பத்திகளையும், உற்பத்தி முறைமைகளையும் அழிக்கப்படுகின்றது. உண்மையில் மனித இனத்தை, பண்ணையில் அடைத்து வளர்க்கும் மந்தைக்குரிய நிலைக்கு மூலதனம் அடிமைப்படுத்தி வருகின்றது. அதாவது வளர்ப்புப் பண்ணைகளில் எப்படி வளர்ப்பு மிருங்களுக்கு உணவிடப்படுகின்றதோ, அப்படி பன்னாட்டு நிறுவனங்கள் மனிதனின் நுகர்வை வரையறுக்கின்றது. இங்கு தெரிவுகள் முதல் அனைத்துவிதமான மனித செயற்பாடு களும், பன்னாட்டு நிறுவனங்கள் எதை உற்பத்தி செய்கின்றதோ, அதற்குள்தான் அனைத்தும். இந்த அடிமைத்தனம் உலகமயமாதலின் சிறப்பான எடுப்பான ஒரு நிலையாகும். இதுவே உலகமயமாதலின் அடிப்படையான தத்துவமும் கூட.

இந்த அடிமைத்தனம் ஒரு சில நாடுகளின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றது. அடக்கியாளும் ஒரு மக்கள் பிரிவின் வெற்றிகரமான ஒரு உலகம் என்ற பாசிச கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இதனடிப்படையில் உலகில் அந்நிய முதலீடுகள் விரிந்த தளத்தில் உலக மக்களின் வாழ்வாதாரங்களின் மேலாகப் பாய்கின்றது. இந்த முதலீடுகள் அந்நிய நாடுகளில் ஒரு நிரந்தரமான அடிமைத்தனத்தை உருவாக்கும் அசையா மூலதனமாக மாறிவிடுகின்றன.

இந்த வகையில் அந்நிய முதலீடுகள் உலக மக்களை அடிமைப்படுத்த எங்கே இடப்படுகின்றது என்று பார்ப்போம். அந்நிய முதலீடு கோடி டாலரில்

| | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|
| உலகம் | 69,446 | 1,08,826 | 1,49,193 | 73,514 |
| ஏகாதிபத்திய நாடுகள் | 48,424 | 83,776 | 1,22,747 | 50,314 |
| மூன்றாம் உலக நாடுகள் | 18,761 | 22,514 | 23,789 | 20,480 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்நிய முதலீடுகள் ஏழை நாடு முதல் பணக்கார நாடுகள் வரை விரவிப் பாய்கின்றது. மூலதனம் குறித்த ஒரு பகுதியை மட்டும் குறிப்பாகச் சுரண்டுவதில்லை. உலகெங்கும் விரிந்த தளத்தில் சுரண்டுவதுடன், அதனடிப்படையில் உலகையே தனக்குக் கீழ் அடிமையாக்க முனைகின்றது. இதனடிப்படையில் மூலதனம் ஒன்றையொன்று ஏறிமிதித்து மேலேறவும் முயலுகின்றது. மறுதளத்தில் அதிக அந்நிய முதலீடு டாலரின் அடிப்படையில் மேற்கில் இடப்படும் நிலைமை என்பது, எந்தவிதத்திலும், ஏழை நாடுகளின் மேலான ஆக்கிரமிப்பை குறைத்ததாக புள்ளி விபரங்களை முன்வைத்து மதிப்பிட்டுக் காட்டமுடியாது. இப்படி ஒரு கோட்பாட்டு திரிபை, உலகமயமாதலை ஆதரிப்போர் சிலர் முன் வைக்கின்றனர். இதில் உள்ள உண்மை என்னவெனப் பார்ப்போம். உண்மையில் இந்த முதலீட்டின் அளவை, குறித்த நாடுகளின் பணப் பெறுமதியின் அளவில் காணும் போதே, இதைப் பூரணமாக புரிந்து கொள்ளமுடியும். இந்தப் பணப் பெறுமானம் பலமடங்காக (உதாரணமாக இந்தியா 50 முதல் இலங்கை 100 மடங்கு மேலான பெறுமதியைக் கொண்டது) பணப்பெருக்கத்தைக் கொண்டது. மற்றொரு உண்மை மூன்றாம் உலக நாடுகளில் 2 டாலரைக் கொண்டு வாழமுடியும் என்றால், அதைக் கொண்டு மேற்கில் உயிர்வாழவே முடியாது. உதாரணமாக மேற்கில் உழைப்புக்கான அடிப்படைக் கூலி மாதம் சராசரியாக 1000 டாலராக உள்ளது. ஆனால் அதைக் கொண்டு ஒரு வீட்டை வாடகைக்கு எடுப்பதே சிரமமானது. அனைத்து உழைப்பாளர்களிடமும் இருந்து அறவிடப்படும் கட்டாய வரியில் இருந்து மீள் வழங்கப்படும் சமூக உதவியைக் கொண்டே, இங்கு அடிப்படைக் கூலியை பெறுவோர் உயிர் வாழ்கின்றனர். ஆனால் இந்த 1000 டாலரைக் கொண்டு இலங்கையில் அல்லது இந்தியாவில் என்ன செய்ய முடியும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. மேற்கு மற்றும் மூன்றாம் உலக நாடுகளில் உற்பத்திக்கான கூலியில் உள்ள அடிப்படையான பாரிய வேறுபாடு சார்ந்து, அந்நிய மூலதனம் மூன்றாம் உலக நாடுகள் மேல் பாயும் போது பலமடங்காகி, பிரமாண்டமான சமூக விரோதப் பாத்திரத்தை மனிதனுக்கு எதிராக உருவாக்குகின்றது.

இப்படி உலகில் அதிக அந்நிய முதலீடுகள் ஊடுருவியுள்ள நாடுகளையும், அவற்றின் தொகையையும் கோடி ஈரோக்களில் பார்ப்போம்.



| | 1999 | 2000 |
|---|---|---|
| மொத்தம் | 1141000 கோடி ஈரோ | 1276900 கோடி ஈரோ |
| அமெரிக்கா | 681499 கோடி ஈரோ | 748549 கோடி ஈரோ |
| ஐரோப்பா | 322277 கோடி ஈரோ | 355337 கோடி ஈரோ |
| ஜப்பான் | 50045 கோடி ஈரோ | 46426 கோடி ஈரோ |
| ஆஸ்திரேலியா | ★ | 36749 கோடி ஈரோ |
| கனடா | 26858 கோடி ஈரோ | 30038 கோடி ஈரோ |
| ஹாங்காங் | 18143 கோடி ஈரோ | 21055 கோடி ஈரோ |
| பிரேசில் | 11721 கோடி ஈரோ | 15963 கோடி ஈரோ |
| தென்கொரியா | 16641 கோடி ஈரோ | 11887 கோடி ஈரோ |
| தாய்வான் | 3101 கோடி ஈரோ | 3447 கோடி ஈரோ |
| மெக்சிக்கோ | 1938 கோடி ஈரோ | 1987 கோடி ஈரோ |
| மற்றவை | 5065 கோடி ஈரோ | 5418 கோடி ஈரோ |
| ★ தெரியாது | | |

அந்நிய முதலீடுகள் தொகையின் அடிப்படையில் மேற்கில் அதிகமாக இருக்கின்றது. இதுபோல் தான் கடனும். ஆனால் பணப்பெறுமதி அடிப்படையிலும், உழைப்புக்கான கூலி அடிப்படையிலும் அந்நிய மூலதனத்தையும், கடனையும் மேற்குடன் ஒப்பிடும் போது, அவை மூன்றாம் உலகில் பல மடங்காக இருக்கின்றது. இவை நாடுகளின் திவால்தன்மையையே ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இவை மூன்றாம் உலகில் புகுந்தாலும் சரி, மேற்கில் புகுந்தாலும் சரி அனைத்து மேற்கு மூலதனமாகவே இருக்கின்றது. மாற்றாக மூன்றாம் உலகை நோக்கிய மேற்கத்திய மூலதனக் கொள்கை, நேரடியான ஈவிரக்கமற்ற சமூக அழித்தொழிப்பாகவே செயல்படுகின்றது. மேற்கில் சலுகைக்கு உட்பட்ட எல்லைக்குள் செயலாற்றுகின்றது. இதுவே உலகமயமாதலின் இன்றைய எதார்த்தம். மூலதனத்தை உற்பத்தி செய்யும் தொழிலாளி வர்க்கம் மேற்கில் ஸ்தாபனமாக இருப்பதும், மூன்றாம் உலக நாடுகளில் தொழிலாளர்கள் ஸ்தாபனமாகாத நிலைமை மூலதனத்தின் சலுகைகளையும், சுரண்டலின் அளவையும், சுரண்டலின் பன்மையையும், தெரிவையும் கூடத் துல்லியமாக மாற்றியமைக்கின்றது.

இப்படியான இந்த அந்நிய முதலீடுகள் உலகமயமாதல் ஊடாக எந்த வேகத்தில் முன்னேறி, எப்படி உலக மக்களைச் சூறையாடுகின்றனர் எனப் பார்ப்போம். அனைத்துப் பெறுமானமும் கோடி டாலரில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | 1982 | 1990 | 2000 |
|---|---|---|---|
| அந்நிய முதலீடு | 5700 கோடி டாலர் | 20200 கோடி டாலர் | 127100 கோடி டாலர் |
| அந்நிய முதலீடுகள் கடத்தியவை | 3700 கோடி டாலர் | 23500 கோடி டாலர் | 115000 கோடி டாலர் |
| அந்நிய முதலீட்டின் இருப்பு | 71900 கோடி டாலர் | 188900 கோடி டாலர் | 631400 கோடி டாலர் |
| அந்நிய முதலீடு மூலமான அந்நிய இருப்பு | 56800 கோடி டாலர் | 171700 கோடி டாலர் | 597600 கோடி டாலர் |
| உள்நாட்டில் அந்நிய பொருட்களின் விற்பனை | 246500 கோடி டாலர் | 546700 கோடி டாலர் | 1568000 கோடி டாலர் |
| உள்நாட்டில் பன்னாட்டு நிறுவனங்களின் விற்பனை | 56500 கோடி டாலர் | 142000 கோடி டாலர் | 313700 கோடி டாலர் |
| உள்நாட்டில் அந்நிய சொத்துகள் | 188800 கோடி டாலர் | 574400 கோடி டாலர் | 2110200 கோடி டாலர் |
| உள்நாட்டில் அந்நியரின் ஏற்றுமதி | 63700 கோடி டாலர் | 116600 கோடி டாலர் | 357200 கோடி டாலர் |
| அந்நிய முதலீடு வழங்கிய வேலை வாய்ப்பு | 1.74 கோடி | 2.37 கோடி | 4.5 கோடி |
| மிகப் பெரிய வீட்டு உற்பத்தியில் அந்நியர் | 1061200 கோடி டாலர் | 2147500 கோடி டாலர் | 3189500 கோடி டாலர் |

அந்நிய முதலீடுகள் எப்படி தேச எல்லைகளைக் கடந்து ஊடுருவிச் சுரண்டிச் செல்லுகின்றது என்பதையே இவை அழகாக எடுத்துக்காட்டுகின்றது. தேசங்களின் தனித்துவத்தைச் சிதைப்பதையும், தேசங்களைக் கொள்ளை அடித்துச் செல்வதையும் தாண்டி, உலகமயமாதல் எதையும் மனித குலத்துக்கு செய்து விடவில்லை என்பதையே அந்நிய மூலதனம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. வீட்டு உற்பத்தி மீதான அந்நியர் கட்டுப்பாடுகள் மற்றும் ஆதிக்கம், சிறு உற்பத்திகளை இல்லாதொழிக்கின்றது. உள்நாட்டு மற்றும்



வெளிநாட்டுச் சந்தை அந்நியரின் ஆதிக்கத்துக்குள் சென்றுவிட்டதை இவை எடுத்துக்காட்டுகின்றது. தேசங்களின் சந்தை அந்நியப் பொருட்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, தேசிய உற்பத்திகளையும் அது சார்ந்த பண்பாட்டு வேர்களையும் ஒழித்துக் கட்டுவதையே அந்நிய முதலீட்டின் விளைவுகள் நேரடியாக எடுத்துக் காட்டுகின்றது. 1982-இல் இருந்ததைவிட 2000-இல் புதிதாக 2.76 கோடி மக்கள் அந்நிய முதலீட்டு நிறுவனங்களில் புதிதாக தொழில் செய்கின்றனர். பன்னாட்டு நிறுவனங்களின் விற்பனை 2,57,200 கோடி டாலரால் அதிகரித்தது. அண்ணளவாக இது 5 மடங்கால் அதிகரித்தது. அந்நிய பொருட்களின் விற்பனை 13,21,500 கோடி டாலராக அதிகரித்தது. அதாவது 6.3 மடங்கால் அதிகரித்தது. வீட்டு உற்பத்தி பொருட்களில் விற்பனை 21,28,300 கோடி டாலரால் அதிகரித்தது. அண்ணளவாக மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. அந்நிய சொத்துக்களின் இருப்புகள் 10 மடங்காக அதிகரித்துள்ளது. அந்நிய முதலீட்டின் மூலம் நாட்டைவிட்டு கடத்திச் சென்றவை 1980-இல் 3,700 கோடி டாலர் மட்டுமே. 1990-இல் 23,500 கோடி டாலர். இது 2000-இல் 1,15,000 கோடி டாலராகியது. அந்நிய நாடுகளின் தலையீடு தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லுகின்றது. தேசங்களில் வாழ்ந்த, வாழ்கின்ற மக்கள் இவற்றை அந்நியரிடம் நாளந்தம் இழந்து செல்வதையே இவை எடுத்துக்காட்டுகின்றது.

சொந்தநாட்டின் உற்பத்தி அழிவால் சொந்த நாட்டின் நுகர்வின் அளவு வேகமாகக் குறைகின்றது. மேலுள்ள தரவுகள் உள்நாட்டு உற்பத்திகள் அழிந்து வருவதையே தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. தேசத்தினதும், மக்களினதும் சுய உற்பத்திகளை அழிப்பதன் மூலம், அதில் ஈடுபட்ட பல பத்து கோடி மக்கள் தமது உழைப்பையும் உழைப்பின் ஆற்றலையும் இழந்துள்ளனர். இதன் மூலம் பொருட்களின் மேலான அறிவையும், அதன் பன்மைத்துவம் சார்ந்த வரலாற்று பயன்பாட்டையும் இழந்து வருகின்றனர். மனித இனத்தின் இந்த இழப்பு, மனித உயிர்வாழ்வதற்கான அடிப்படையை வேட்டுவைக்கும் முதற்படிகளில் கால் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் மக்கள் இயற்கையுடன் இயற்கையாக வாழ்ந்த நீண்ட நெடிய வாழ்வுக்கு ஏற்படும் அழிவு, பாரிய சுற்றுச்சூழல் சூறையாடலாகவே மாறிவிடுகின்றது.

அளவுக்கு மீறிய வகையில் சுற்றுச்சூழலை அந்நிய மூலதனம் வரைமுறையின்றி அழிக்கின்றது. ஒட்டுமொத்த விளைவால் வறுமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரவிப் பரந்து பாய்கின்றது. அந்நியப் பொருட்களை வாங்கி நுகருமாற்றல் மேல் இருந்து கீழாக குறைந்து வருவதால், கீழ் உள்ளவர்களின் நுகரும் ஆற்றல் அழித்தொழிக்கப்படுகின்றது. பண்பாட்டு மற்றும் கலாச்சாரங்கள் உற்பத்தி உறவுகளில் இருந்து கட்டமைக்கப்படுவதால், தேசிய உற்பத்தியில் ஏற்படும் அழிவால் சொந்த தேசியப் பண்பாடுகள் கலாச்சாரங்கள் வேகமாக சீரழிவுக்குள்ளாகி பண்பாடற்ற மக்கள் கூட்டத்தை உருவாக்குகின்றது. அந்நியப் பொருள் சார்ந்த பண்பாடுகள் சமூகக் கூட்டைத் தகர்த்து, அதனிடத்தில் லும்பன் தனமான, வக்கிரமான, நுகர்வு வேட்கை சார்ந்த தனிமனிதப் பண்பாட்டை, கலாச்சாரத்தை உருவாக்குகின்றது. இது சூறையாடும் தனிமனித வக்கிரத்தால் வேட்கை அடைகின்றது. சமூக இருப்பின் அனைத்துக் கூறையும் மறுதலிக்கின்றது. பெரும் பன்னாட்டு நிறுவனங்களின் சூறையாடும் வேட்கையே, தனிமனிதனின் வேட்கையாக மாற்றப்பட்டு, அப்பண்பாடே உலகமயமாதல் பண்பாடாகி விடுகின்றது.

இப்படி உருவாகும் பண்பாட்டுக்கு அடிப்படையான கூறுகளையே அந்நிய முதலீடுகள் செய்கின்றன. தேசங்களையே கொள்ளையடிக்கும் இந்த அந்நிய முதலீடுகளை பிராந்திய ரீதியாக எடுத்துப் பார்ப்போம். அந்நிய முதலீடுகள் கோடி டாலரில்

| பிரதேசம் | 2000 | 2001 | 2002 | 2003 | 2003 | 2004 |
|---|---|---|---|---|---|---|
| அரபு மற்றும் ஆப்பிரிக்கா | 3,090 | 3,200 | 3,410 | 3,590 | 3,780 | 3,980 |
| ஆசியா மற்றும் பசிபிக் நாடுகள் | 25,060 | 25,180 | 25,810 | 27,450 | 29,240 | 31,090 |
| ஐரோப்பா | 37,560 | 37,740 | 38,460 | 39,310 | 40,200 | 41,050 |
| தென் அமெரிக்கா | 6,560 | 6,570 | 6,840 | 7,290 | 7,820 | 8,350 |
| வட அமெரிக்கா | 47,740 | 47,570 | 49,460 | 52,230 | 55,020 | 57,820 |

அந்நிய முதலீடுகள் வருடாந்தரம் சீராகவே, அனைத்து பிரதேசங்களிலும் அதிகரித்துச் செல்வதை இது எடுத்துக் காட்டுகின்றது. உலகைச் சூறையாடும் உலகமயமாக்கல் கொள்கை, உலகத்தின்



எந்தப் பிரதேசத்தையும் விட்டுவிடவில்லை. மனித குலத்தின் அடிமைத் தனங்களின் மீது உலகமயமாதல் ஆதிக்கத்தை நிறுவும் மூலதனத்தின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்கு எல்லைகள் எதுவும் கிடையாது என்பதையே தரவுகள் தெளிவாகவே பறைசாற்றி விடுகின்றது. உலகில் விதிவிலக்கற்ற வகையில் தேசங்களையும், அதில் வாழும் மக்களை சூறையாடுவதுமே உலகமயமாதலின் ஜனநாயகமாகும்.

1980-இல் பெரும் பன்னாட்டு நிறுவனத்தின் வர்த்தகத்தில் 35 சதவீதம் சொந்த நாட்டுக்கு வெளியில் போடப்பட்ட முதலீட்டில் இருந்தே கிடைத்தது. மேற்கில் காணப்படும் செல்வத்தின் கொழிப்பு வெளியில் இருந்தே கிடைக்கின்றது. தேசங்களின் எல்லைகளைக் கடந்து மக்களின் வாழ்வையே அழித்தொழிக்கும் இந்த ஆக்கிரமிப்பு, 1985-க்கு பின்பாக தலைகால் தெரியாதளவுக்கு வேகம் பெற்றது. 1990-இல் உலகளாவிய பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த முதலீடு 1,70,000 கோடி டாலராகும். இது 1985-க்கும் 1990-க்கும் இடையில் 35 சதவீதத்தால் வருடாந்தரம் அதிகரித்தது. இதன் மூலம் அந்நிய ஏற்றுமதி 13 சதவீதத்தாலும், வீட்டு பயன்பாட்டு உற்பத்தியை 12 சதவீதத்தாலும் பன்னாட்டு நிறுவனங்கள் உலகளவில் புதிதாகக் கட்டுப்படுத்தின. எதிர்மறையில் மக்கள் இதனால் தமது சுயபொருளாதார கட்டுப்பாட்டை இழந்தனர். இது சார்ந்த பண்பாட்டுச் சீரழிவுகளைச் சந்தித்தனர். உற்பத்தி சார்ந்த உலகளாவிய பன்னாட்டு அந்நிய முதலீடுகள் வருடாந்தரம் தொடர்ந்து அதிகரித்து செல்லுகின்றது. மறுபக்கத்தில் உலகைச் சூறையாடுவதில் சளையாத போட்டி, ஏகாதிபத்தியத்துக்கு இடையில் கடுமையான முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றது. இது தேசங்களின் தேசியத்தை அழித்து, தேசங்கடந்த முதலீட்டை அதிகரிக்க வைக்கின்றது. இவற்றை கீழ் உள்ள புள்ளிவிபரங்கள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது.

தேசங் கடந்த உலகைச் சூறையாடும் பன்னாட்டு நிறுவனங்களின் அந்நிய முதலீடுகள், ஏகாதிபத்திய முரண்பாடுகளாகி விடுகின்றது. போட்டி போட்டுச் சுரண்டும் இந்த அந்நிய முதலீடுகள் சதவீதத்தில்

| நாடு | 1975-79 | 1985-89 | 1991 |
|---|---|---|---|
| ஐரோப்பிய யூனியன் | 40 | 44 | 45.4 |
| அமெரிக்கா | 45 | 16.9 | 16.6 |
| ஜப்பான் | 5.9 | 17.6 | 17.3 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்நிய முதலீட்டில் ஏற்பட்ட கடுமையான சர்வதேச மாற்றத்தையே இது எடுத்துக் காட்டுகின்றது. உலகை அடிமைப்படுத்தி தக்கவைக்கும் சமூக ஆதிக்கத்தை, சுரண்டும் சுதந்திரமான ஜனநாயகம் என்ற எதார்த்த உலகப் போக்கு இணங்க, மூலதனத்தை கொண்டு நடத்தும் ஏகாதிபத்திய போராட்டத்தையே இது எடுப்பாக எடுத்துக் காட்டுகின்றது. ஜப்பான் தனது அந்நிய முதலீட்டை 1990-இல் 214.6 சதவீதத்தால் அதிகரிப்பைச் செய்தது. இதன் மூலம் அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் இடையே கடுமையான இழுபறியான போராட்டத்தை நடத்தினர். 1988-இல் ஜப்பானின் தேசிய உற்பத்தி 35,00,000 கோடி இந்தியா ரூபாவாகியது. இதன் மூலம் அமெரிக்காவையும் மிஞ்சியது. அதேநேரம் 1987-இல் ஜப்பனின் மொத்த வெளிநாட்டுச் சொத்தின் பெறுமதி 42,00,000 கோடி இந்தியா ரூபாவாகியது. ஜப்பான் அமெரிக்காவிலேயே தனது முதலீட்டை பெருக்கிக்கொண்டது. ஆனால் பின்னால் ஜப்பான் மூலதனத்துக்கு ஏற்பட்ட நெருக்கடி, அமெரிக்காவை முன்னுக்கு கொண்டு வந்தது. இவை அலையலையாக ஏற்றயிறக்கத்தை ஏற்படுத்தியது. இவற்றைத் தொடர்ந்து துல்லியமாக ஆராய்வோம்.

சொந்த நாடுகளுக்கு வெளியில் மற்றைய நாடுகளை சூறையாடப் போடப்பட்ட மொத்த அந்நிய மூலதனத்தில் தனித்தனி நாடுகளின் பங்கு சதவீதத்தில்

| நாடுகள் | 1971 | 1980 | 1990 | 1994 |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 52 | 42.8 | 26.1 | 25.6 |
| ஜப்பான் | 2.7 | 3.8 | 12.1 | 11.7 |
| பிரிட்டன் | 14.5 | 15.6 | 13.8 | 11.8 |
| ஜெர்மனி | 4.4 | 8.4 | 9.1 | 8.6 |
| பிரான்ஸ் | 5.8 | 4.6 | 6.6 | 7.7 |

இங்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் மூலதனத்துக்கு உலகளவில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான தொடர் நெருக்கடியை எடுத்துக்காட்டுகின்றது. ஜப்பானின் வெளிநாட்டு முதலீடு 2001, 2002-இல் 2,18,600 (அண்ணளவாக 2086 கோடி டாலராக) கோடி யென்னாக இருந்தது. 1992-இல் இது 50,000 (அண்ணளவாக 500 கோடி டாலர்) கோடி யென்னாக இருந்தது. 1992 உடன் ஒப்பிடும் போது, 2001, 2002-இல் ஜப்பானின் அந்நிய முதலீடு 4 மடங்கு



மேலாகியுள்ளது. உலகளாவிய பொருளாதார ஆதிக்கத்துக்கான போட்டி கடுமையானதும், இழுபறியானதுமான ஒரு போராட்டமாக மாறி இருப்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. ஈராக் நெருக்கடி முதல், ஐரோப்பிய யூனியனில் முரண்டு பிடிக்கும் பிரிட்டிஷ் கொள்கைகளுக்கு அடிப்படையான விளக்கம், மூலதனத்தின் உலகளாவிய வெற்றி தோல்விகளில் இருந்தே பிறக்கின்றது.

ஜப்பான், மற்றும் ஐரோப்பிய சர்வதேச ரீதியாக உலகை மறுபங்கீடு செய்ய முனைந்த அமைதியான, சுதந்திரப் போட்டியை, அமெரிக்கா மற்றும் பிரிட்டனால் ஈடுகொடுக்க முடியவில்லை. தற்காப்பு நிலையில் நின்று, பலாத்காரமான ஆக்கிரமிப்புகள் ஊடாக காலனிகளை உருவாக்கி உலகைத் தக்கவைக்கவே முனைகின்றன. இதேநேரம் ஐரோப்பிய யூனியன் அமெரிக்காவின் இராணுவ ரீதியான தற்காப்பை எதிர்கொள்ளும் வகையிலும், எதிர்காலத்தில் எதிர்தாக்குதல் நிலையை அடையவும் தனது சொந்த இராணுவக் கட்டமைபை ஒருங்கிணைத்து வருகின்றனர். மூலதன நெருக்கடிகள் சமகாலத்தில் இராணுவ ரீதியானதாக அதிகரித்து வருகின்றது. மறுபக்கத்தில் தொடர்ந்தும் அமெரிக்காவின் அந்நிய முதலீட்டின் அளவு சரிந்த போதும், உலகளவில் அதிக முதலீட்டை அமெரிக்காவே செய்யும் நிலை தொடர்ந்தும் அமெரிக்காவுக்குச்சாதகமாகவே உள்ளது.

**தேச எல்லைகளைக் கடந்து சென்ற அந்நிய மூலதனத்தின் பாய்ச்சல் சதவீதத்தில்**

| நாடுகள் | 1990 | 1998 | 1999 |
|---|---|---|---|
| அமெரிக்கா | 89 | 223 | 179 |
| ஜப்பான் | 119 | 91 | 95 |
| ஜெர்மனி | 54 | 329 | 334 |
| பிரான்ஸ் | 57 | 415 | - |

ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் நடக்கும் இழுபறியான போராட்டத்தை மட்டுமின்றி, அவர்கள் உலகெங்கும் எப்படி நாலுகால் பாய்ச்சலில் ஊடுருவி வருகின்றனர் என்பதையுமே இவை எடுத்துக்காட்டுகின்றது. அந்நிய முதலீடு மட்டுமின்றி, இதனுடன் நிதி மூலதனமும் அக்கம்பக்கமாகச் செயல்படுகின்றது. இது கடன் என்ற போர்வையில், வட்டி ஊடாகவும் தேசங்களையே சூறையாடுவதும், உள்நாட்டு உற்பத்திகளைக் கடுமையான கடன் நிபந்தனையூடாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழித்து ஏகாதிபத்தியத்துக்கு இசைவாக உள்நாட்டு பொருளாதாரத்தை மாற்றி விடுகின்றனர். இதன் மூலம் உலகை அடிமைப்படுத்தி, கட்டுப்படுத்துகின்றனர். நாடுகளின் திவால் தன்மையை உருவாக்கி, அதை தனக்கு இசைவானதாகவே மாற்றிவிடுகின்றனர். வருடாந்தரம் அந்நிய முதலீடு ஊடான சுரண்டல் மற்றும் கடனுக்கான வட்டியை அறவிடுவது அதிகரித்துச் செல்வதன் மூலம், ஏகாதிபத்திய உலக ஆதிக்கம் பரந்துபட்ட மக்களின் மேல் கடுமையாகி அவையே பெரும் சுமையாகி வருகின்றன. சுதேசிய மக்கள் தமது நாடுகளில் உழைத்துக் கூடி வாழமுடியாத நிலையில், பரிதாபகரமாகக் கையேந்தி நிற்கும் காட்சி உலகமயமாக்கலில் இரசனைக்குரியதாக, இதைக் காட்டியே பொறுக்கித் தின்னும் தன்னார்வக் கும்பலை உருவாக்குகின்றது. சுதேசிய மக்களைக் கொள்ளை அடித்தவர்களே, அதில் இருந்த சில சில்லறைகளை தன்னார்வக் குழுக்களுக்கு கிள்ளிப் போடுவதே கொடையாகப் பசப்பப்படுகின்றது.

இப்படி ஏகாதிபத்தியங்கள் உலகைத் தமக்குக் கீழ் அடக்கியாள்வதன் மூலம், மக்களை வரைமுறையின்றி சுரண்டவும், தமக்கு இடையில் உலகச் சந்தையைக் கைப்பற்ற நடத்தும் போராட்டம், எதார்த்தத்தில் எப்படி பிரதிபலிக்கின்றது எனப் பார்ப்போம். அந்நிய முதலீடுகள் கோடி டாலரிலும், இது உலகளவில் சதவீதத்திலும்

| நாடுகள் | 1989 | 1992 | 1994 | 1982-1986 | 1987-1991 |
|---|---|---|---|---|---|
| அமெரிக்கா | 2600 கோடி | 3900 கோடி | 4600 கோடி | 19 சதவீதம் | 13 சதவீதம் |
| ஜப்பான் | 4400 கோடி | 1700 கோடி | 1800 கோடி | 13 சதவீதம் | 18 சதவீதம் |
| பிரிட்டன் | 3500 கோடி | 1900 கோடி | 2500 கோடி | 18 சதவீதம் | 14 சதவீதம் |
| ஜெர்மனி | 1800 கோடி | 1600 கோடி | 2100 கோடி | 10 சதவீதம் | 10 சதவீதம் |
| பிரான்ஸ் | 2000 கோடி | 3100 கோடி | 2300 கோடி | 5 சதவீதம் | 11 சதவீதம் |

அமெரிக்காவும், பிரிட்டனும் உலகைச் சூறையாடும் தமது சுதந்திர உரிமையைத் தக்கவைப்பதில், தொடர்ச்சியான நெருக்கடியில் சிக்கி நிற்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றது. உலகளவில் உருவாக்கியுள்ள மூலதன ஆதிக்கத்தைத் தக்கவைக்க கடுமையாகவே போராடுவதையும் இது காட்டுகின்றது. ஜப்பான், ஐரோப்பா (பிரான்ஸ், ஜெர்மனி...) போன்ற ஏகாதிபத்தியங்கள், உலகச்



சந்தையைக் கைப்பற்றுவதன் மூலமே உலக ஆதிக்கத்தை நிறுவமுனைகின்றது. ஒரு ஏகாதிபத்திய யுத்தம், பொருளாதாரக் கட்டுமானத்தின் மேல் தொடர்ச்சியாக அலையலையாக அன்றாடம் நடக்கின்றது. இருந்தபோதும் அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் மூலதனங்கள் இரண்டாம் உலக யுத்தகால அனுகூலங்களைத் தக்கவைத்து நீடிப்பதால், உலகளவில் மிகப் பெரிய அந்நிய மூலதனத்தைத் தக்கவைக்க முடிகின்றது.

இதை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால்,
அந்நிய முதலீடு கோடி டாலரில்

| | 2001 | 2002 |
|---|---|---|
| அமெரிக்கா | 14,400 | 3,000 |
| பிரிட்டன் | 6,200 | 2,500 |
| பிரான்ஸ் | 5,520 | 5,150 |
| சீனா | 4,680 | 5,270 |
| லுக்சம்பேர்க் | ★ | 12,500 |
| ஜெர்மனி | 3,400 | 3,800 |
| நெதர்லாந்து | 5,120 | 2,910 |
| கனடா | 2,900 | 2,050 |
| ★ தெரியாது | | |

உலகச் சந்தையைக் கட்டுப்படுத்தும் புதிய அந்நிய முதலீடுகள், ஏகாதிபத்தியத்துக்கு இடையில் இடம்மாறி வருவதையே இது எடுத்துக்காட்டுகின்றது. அந்நிய முதலீட்டை உலகளவில் குவிப்பதில் சீனாவும் புதிதாகக் களமிறங்கியுள்ளது. சீனாவுக்குள் ஊடுருவிய அந்நிய மூலதனம் மலிவு உற்பத்திகள் மூலம் உலகச் சந்தையைத் திணறடிக்க வைக்கின்றது. சீனப் பாசிசச் சர்வாதிகார அரசும், சீன முதலாளிகளும் இணைந்து, 100 கோடிக்கு மேற்பட்ட சீன உழைக்கும் மக்களை என்றுமில்லாத அளவில் தாம் மட்டும் அதிகளவில் சுரண்டுவதன் மூலம், பெரும் நிதியாதாரங்களைத் திரட்டுகின்றனர். இந்த நிதியை உள்நாட்டிலும், அந்நிய நாடுகளிலும் குவிக்கின்றனர். இதன் மூலம் சீனா ஒரு ஏகாதிபத்தியமாக தன்னை மாறிவருகின்றது. இதன் மூலம் சீனா உலகில் பலமுனைகளுக்கு இடையிலான புதிய ஏகாதிபத்திய நெருக்கடிகளைத் தொடங்கி வைத்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகளாவிய நிதி மூலதனத்தை ஆராய்ந்தால், உலகமயமாதலில் சீனா வகிக்கும் சர்வதேச முக்கியத்துவத்தையும் அதன் ஏகாதிபத்தியப் போக்கையும் வெட்ட வெளிச்சமாக வெளிபடுத்துவதைக் காணமுடியும்.

2003-இல் நிதி மூலதனத்தை அந்நிய நாடுகளில் அதிகமிட்ட நாடுகள்

| | |
|---|---|
| ஜப்பான் | 20.9 சதவீதம் |
| சீனா, ஹாங்காங் | 9.8 சதவீதம் |
| ஜெர்மனி | 9.2 சதவீதம் |
| சுவிஸ் | 6.1 சதவீதம் |
| ரசியா | 5.7 சதவீதம் |
| பிரான்ஸ் | 4.8 சதவீதம் |
| தாய்வான் | 4.8 சதவீதம் |
| நோர்வை | 4.7 சதவீதம் |
| மற்றவை | 34.3 சதவீதம் |

நிதியாதாரங்கள் நாடு கடந்து செல்வதன் மூலம், சர்வதேச ரீதியான சூதாட்டத்தில் ஆழமாகவே கால்பதித்து நிற்பதை இவை குறிக்கின்றது. நிதி மூலதனத்தை நாடுகடத்திச் செல்வதில் அரசு மற்றும் மூலதனத்தின் பெரும் சொந்தக்காரராக உள்ள தனியாரும் ஈடுபடுகின்றனர். உற்பத்தியில் ஈடுபடாத நிதிகள், தன்னை பெருக்கிக் கொள்ள குறுக்கு வழியில் செயல்படுகின்றது. ஏகாதிபத்திய அரச கடன்களிலும், சர்வதேச கடன்களிலான சூதாட்டத்திலும் இந்த நிதியாதாரங்கள் ஏகாதிபத்தியத்தினால் கவர்ந்திழுக்கப்படுகின்றது. பெரும்பாலும் மூன்றாம் உலக நாடுகளில் கொள்ளையடிக்கும் பெரும் நிதிகள் முதல் ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான ஏற்றத் தாழ்வான வர்த்தகப் பற்றாக்குறைகளால் உருவாகும் நிதிகள் இப்படி மாறிவிடுகின்றது. இந்த வகையில் ஜப்பான், சீன நிதிகள் பெருமெடுப்பில் அமெரிக்காவில் குவிந்து கிடக்கின்றது. அத்துடன் மக்களின் சிறு சேமிப்புக்களையும் கூட எடுத்து சர்வதேச நிதிச் சூதாட்டங்களில் ஈடுபடுகின்றனர். மக்களின் உழைப்பில் உருவான நிதிகளை எடுத்து தனது சூதாட்டத்தில் இறக்கிவிடுகின்றன. இதற்கு மக்களின் சேமிப்பாக உள்ள ஓய்வூதிய நிதிகளையும் பயன்படுத்து கின்றனர். மக்களின் ஓய்வூதிய நிதியில் இருந்து சர்வதேச முதலீடு



1989-இல் 30200 கோடி டாலராக இருந்தது. இது 1994-இல் 79,000 கோடி டாலராகியது. 1990-இல் ஓய்வூதியம் மற்றும் பரஸ்பர நிதி சாந்த முதலீடு 20,00,000 (20 லட்சம்) கோடி டாலராகியது. இது 1980-உடன் ஒப்பிடும் போது பத்து மடங்கு அதிகமாகும். இதேபோல் நிதி மூலதனத்திலும் ஓய்வூதிய நிதி இறக்கப்படுகின்றது. இப்படி உருவாகும் நிதி மூலதனத்தை யார் தமது சொந்தப் பற்றாக்குறையுடன் இறக்குமதி செய்கின்றனர் எனப் பார்ப்போம்.

2003-இல் நிதி மூலதனம் இறக்குமதி செய்தவர்கள் யார் எனப் பார்ப்போம்.

| | |
|---|---|
| அமெரிக்கா | 75.5 சதவீதம் |
| ஓஸ்ரியா | 2.8 சதவீதம் |
| ஸ்பானியோல் | 2.5 சதவீதம் |
| பிரிட்டன் | 2.3 சதவீதம் |
| மெக்சிகோ | 2.2 சதவீதம் |
| இத்தாலி | 1.5 சதவீதம் |
| போத்துகல் | 1.4 சதவீதம் |
| மற்றைய நாடுகள் | 12.0 சதவீதம் |

உலகில் 75 சதவீதமான நிதியாதாரங்களை அமெரிக்காவே இறக்குமதி செய்துள்ளது. உலகளவில் மக்களிடம் கொள்ளை அடிக்கப்பட்ட நிதியில் 75 சதவீதம் அமெரிக்காவுக்குள் பாய்ந்து சென்றுள்ளது. இந்த நிதி தான் அமெரிக்கப் பொருளாதாரத்தை சர்வதேச நெருக்கடிகளில் இருந்து தக்கவைக்கின்றது. நிதி மூலதனம் அமெரிக்காவை நோக்கி பாய்ச்சல் என்பது, அமெரிக்கா பொருளாதார மீதான அந்நிய ஆதிக்கத்தை இறுக்குகின்றது. உதாரணமாக, சவூதி அரேபியா அமெரிக்காவில் 60,000 கோடி டாலர் முதலிட்டுள்ளது. இவை எல்லாம் அமெரிக்கப் பொருளாதாரத்தை மட்டுமல்ல, உலகில் அமெரிக்காவே மிகப்பெரிய கடனாளி நாடாகியுள்ளது. இது அமெரிக்காவின் ஏகாதிபத்திய நலன்கள் மேல், ஒரு கடுமையான நெருக்கடியை உருவாக்குகின்றது. இதன் போது அமெரிக்கா தான் உருவாக்கிய உலகமயமாதல் சட்டவிதிகளை ஒருதலைப்பட்சமாக மீறுவதுடன், தனக்கு விதிவிலக்கைக் கோரும் அளவுக்கு உலகையே தனது இராணுவ வலிமையால் மிரட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுபக்கத்தில் அமெரிக்காவில் அமெரிக்கர் அல்லாதோர் ஆதிக்கம் பெருமெடுப்பில் உள்ளது. உதாரணமாக அமெரிக்கர் அல்லாத நிதி முதலீட்டாளர்கள் அமெரிக்காவின் வணிகக் கடனில் 40 சதவீதத்தையும், பெரும் நிறுவனப் பங்குப் பத்திரத்தில் 26 சதவீதத்தையும், அமெரிக்கா பங்குகளில் 13 சதவீதத்தையும் கைப்பற்றியிருந்தனர். இந்த வகையில் ஜப்பானை அடுத்து சீனாவின் மூலதனம் அமெரிக்காவுக்குள் அதிகளவில் சென்று, அமெரிக்கப் பொருளாதாரத்திலும் ஒரு கெடுபிடியை உருவாக்கியுள்ளது. அமெரிக்காவில் ஜப்பானுக்கு அடுத்ததாக, சீனாதான் அதிக நிதி மூலதனத்தை பங்குப் பத்திரம் மூலம் முதலிட்டுள்ளது. இது 2001-இல் 8200 கோடி டாலராக இருந்தது. 2002-இல் 11,900 கோடி டாலராக அதிகரித்தது. சீனா அசுரபலத்துடன் ஒரு ஏகாதிபத்தியமாக, சீனா மக்களின் பிணங்களின் மேலாக பரிணமித்து வருகின்றது. அதே நேரம் சீனாவின் கடன் ஒரு பாய்ச்சலை நடத்துகின்றது. 2002-க்கு முந்திய ஐந்து வருடத்தை விடவும் கடன் இரண்டு மடங்காகியுள்ளது. இது 25,000 கோடி டாலரில் இருந்து 50,000 கோடி டாலராகியுள்ளது. கடன் எதற்காக வழங்கப்படுகின்றது என்று பார்த்தால் அதிர்ச்சியான விடயங்கள் வெளிவருகின்றன. உதாரணமாக சீனாவில் வாழ்பவர்களின் சராசரி வயதைக் குறைக்க உலக வங்கி கோருகின்றது.

இன்றைய சீன மக்களின் சராசரியான ஆயுள் வயதான 70 வருடங்கள், உலகச் சராசரியை விட 2 வருடம் அதிகம் என்கிறது உலகவங்கி. இதை, இரண்டு வருடங்களை, குறைப்பதன் மூலமே, மூலதனத்துக்கு அதிக லாபம் என்கின்றது. சராசரி வயதை 68 எனும் வகையில், அவர்களை உணவின் மூலம் உயிருடன் கொல்லக் கோருகின்றது. இதன் அடிப்படையில் பண்பாட்டு, கலாச்சார மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலம் இதை சாத்தியமாக்கக் கோருகின்றது. பண்பாடு ரீதியாக உணவிலும் மாற்றத்தைச் செய்ய நிர்ப்பந்திக்கின்றது. அந்த அடிப்படையில் மாட்டு இறைச்சியையும், பால் கிரீமையும் உண்ணக் கோருகின்றது. இதற்காக 1999-இல் 9.35 கோடி டாலரை கடனாக வழங்கியது. மாட்டுக் கறியை அதிகம் உண்பதன் மூலம் அதிகக் கொழுப்பை ஏற்படுத்தி மரணத்தை துரிதப்படுத்தவும், இதன் மூலம் ஏகாதிபத்திய மாட்டு இறைச்சிக்கான சந்தையாக சீனா மாறுவதையும் உறுதிசெய்ய உலகவங்கி கோரியது. அதிக மனிதர்கள் உயிருடன் இருத்தல்,



உலகமயமாதலுக்கு நெருக்கடிக்குரிய ஒன்றாக உலகவங்கி கருதுகின்றது. இப்படி உணவின் மூலம் படுகொலை செய்வது, உலக ஜனநாயகத்தினதும் அடிப்படையாகவும், சுதந்திரத்தின் உன்னதமான கோட்பாடாகவும் உள்ளது. சீனப் பாசிஸ்டுகளோ மக்களின் வாழ்வை அழிக்கவே கடன்களை வாங்கிக் குவிக்கின்றனர்.

உலகவங்கியின் வழிகாட்டலுக்கும் கட்டளைக்கும் ஏற்ப மக்களுக்கு எதிராக முன்னேறும் சீனா, 1990-க்கு பின் அரசுத் துறையில் நான்கு கோடிப் பேரை அவர்களின் வேலையை விட்டே துரத்தியது. இன்றும் வருடம் 30 லட்சம் பேர் வேலையை இழந்து வருகின்றனர். இவை எல்லாம் உலகமயமாதல் என்ற சுதந்திர அமைப்பின் நிஜமான சாட்சியங்களே. சீனாவில் உண்மையில் இன்று என்ன நடக்கின்றது என்பதே, என்ன செய்யப் போகின்றது என்பதற்கு முன்மாதிரியாக உள்ளது. சீனப் பொருளாதாரம் முற்று முழுதாகவே மாஃபிய மயமாதலுக்குள் தகவமைந்துள்ளது. எந்தவிதமான அரசியல் சட்ட திட்டத்தையும், சீன மக்கள் பயன்படுத்தும் நிலை முற்றாக மறுக்கப்படுகின்றது. பரந்துபட்ட மக்கள் சிறிய சொத்துக்களை வைத்திருக்கும் சட்டப்பூர்வமான உரிமையை, எந்தச் சட்டமும் பாதுகாக்கவில்லை. பெரும் பணக்காரக் கும்பல், மாஃபிய வலைப்பின்னலூடாக இணைத்து பலாத்காரமாகவே சீன மக்களிடம் பறிமுதலையே நடத்துகின்றனர். சீன மக்களின் அற்ப சொத்துக்களையும், நீதிமன்றம் மற்றும் போலீசாரின் துணையுடன் சட்டப்பூர்வமாகவே பெரும் முதலாளிகள் பறித்தெடுக்க அரசு துணை நிற்கின்றது. சுரண்டல் கட்டமைப்பும் கூட மாஃபிய வலைப் பின்னலின் சட்டதிட்டத்துக்கு உட்பட்டுவிட்டது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் சீனாவை ஆள்வது திடீர்ப் பணக்காரக் கும்பல் சார்ந்த ஒரு மாஃபிய கும்பல் தான். இதன் மூலம் உயர்ந்த சுரண்டல் வீதத்தை, உள்நாடு மற்றும் அந்நிய மூலதனத்துக்கு உறுதி செய்யப்படுகின்றது. சமூகப் பாதுகாப்புத் திட்டம் எதுவும் சீன மக்களுக்கு இன்று கிடைப்பதில்லை. எந்த உரிமையும் மக்களுக்குக் கிடையாது. சீனாவில் சுரண்டுவதுக்கும், சூறையாடுவதற்கும் உள்ள ஜனநாயகம் சார்ந்த சுதந்திரம், அந்நிய மூலதனத்தை இயல்பாகவே தொடர்ச்சியாகக் கவர்ந்தெடுப்பதை உறுதி செய்கின்றது. இது எந்த வேகத்தில் வெறியாட்டம் போடுகின்றது என்பதை சீனாவில் ஊடுருவியுள்ள அந்நிய முதலீடே நமக்கு எடுத்துக்காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் அந்நிய முதலீடுகள் சீனாவில் புகுந்த வடிவத்தை நாம் பார்ப்போம்.

| | |
|---|---|
| 1989 | 300 கோடி டாலர் |
| 1997 | 4200 கோடி டாலர் |
| 1999 | 3800 கோடி டாலர் |
| 2002 | 5300 கோடி டாலர் |

மற்றொரு புள்ளிவிபரப்படி சீனாவில் அந்நிய முதலீடு

| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| சீனா | 4423.7 | 4375.1 | 4031.9 | 4077.2 | 4684.6 |
| சீனா - ஹாங்காங் | 1136.8 | 1477.0 | 2459.6 | 6193.8 | 2283.4 |

சீன முதலாளிகள் முதலாளித்துவ மீட்சியை நடத்தி கம்யூனிசத்தை தூக்கி எறிந்த பின்பு, அந்நிய மூலதனம் எப்படி எல்லை கடந்து ஊடுருவி வருகின்றது என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றது. இதைத்தான் மூலதனம் சுதந்திரம், ஜனநாயகம் என்று மார்பு தட்டுகின்றனர். சுதந்திரத்துக்காவும், ஜனநாயகத்துக்காவும் குரல் கொடுத்துப் போராடுவதாக பசப்பும் எந்த ஈனர்களும், இதனால் ஏற்பட்ட சமூக விளைவை ஆராய்வதில்லை. உண்மையில் பரந்துபட்ட மக்களின் சர்வாதிகார கம்யூனிசத்துக்கு எதிராக, ஜனநாயகத்தின் பெயரிலும் சுதந்திரத்தின் பெயரிலும் நடந்த முதலாளித்துவ மீட்சியைத் தொடர்ந்து, சீன முதலாளித்துவ வர்க்கம் சிலிர்த்துக் கொண்டது. அந்நிய மூலதனம் என்றுமில்லாத குதூகலத்தில் துள்ளிக் குதித்தது. இதன் மொத்த விளைவு என்ன? 1989-இல் வெறும் 300 கோடி டாலர் அந்நிய முதலீடு என்ற நிலை மாறி, 2002-இல் இது 20 மடங்கையும் தாண்டிச் சென்றது. இது சீன மக்களின் வாழ்வியல் அடிப்படைகளையே முற்றாகத் தகர்த்துள்ளது. சமூகப் பாதுகாப்பு என எதுவுமற்ற நிலைக்குள், சீன மக்கள் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்காக தமது முதுகுத் தோலை உறித்து எடுத்து பறையாக்கும் மூலதனத்தின் வக்கிரத்துக்கு இரையாக்கப் படுகின்றனர்.

இப்படி உண்மையில் அந்நிய மூலதனம் ஊடுருவிப் பாய்ந்த வேகம் மலைக்க வைக்க கூடியவை. 1999-2002-க்கும் இடையில் மொத்தமாக உலகளாவிய அதிக அந்நிய முதலீடுகள் இடப்பட்ட மேற்கு அல்லாத நாடுகளை எடுத்து ஆராய்ந்தால்



| | |
|---|---|
| சீனா | 38400 கோடி டாலர் (1982-2002க்கு இடையில் 44800 கோடி டாலர்) |
| பிரேசில் | 15800 கோடி டாலர் |
| அர்ஜென்டினா | 6500 கோடி டாலர் |
| போலந்து | 5100 கோடி டாலர் |
| ரசியா | 2600 கோடி டாலர் |
| இந்தியா | 2400 கோடி டாலர் |
| பிலிப்பைன்ஸ் | 1300 கோடி டாலர் |
| இந்தோசீனா | 500 கோடி டாலர் |

ஒப்பீட்டளவில் சீனாவில் குவிந்த அந்நிய மூலதனம் மிகப் பிரம்மாண்டமானது. 1982-1998க்கும் இடையில், அதாவது சீன முதலாளித்துவ மீட்சிக்கு பிந்திய 17 வருடத்தில், சீனாவில் ஊடுருவிய அந்நிய முலதனம் 6400 கோடி டாலர் மட்டுமே. அதற்குப் பிந்திய காலத்தில் அதாவது உலகமயமாதலின் வேகநடை போடத் தொடங்கியதன் பின்பாக 1999-க்கும் 2002-க்கும் இடைப்பட்ட நான்கு வருடத்தில் 38,400 கோடி டாலர் அந்நிய மூலதனம் சீனாவில் வெள்ளமாக புகுந்துள்ளது. இது கட்டுக்கடங்காத வேகத்தில் செல்லுகின்றது. இது சார்ந்த உற்பத்திகள் மேற்கத்திய சந்தைகளைத் தடுமாற வைக்கின்றது. மேற்கில் உள்ள உற்பத்தி மையங்கள், தொழிற்சாலைகள் இரவோடு இரவாகவே புதிய காதலியுடன் சீனாவுக்குள் தப்பி ஓடிவிடுகின்றது.

இப்படிச் சீனாவை நோக்கி ஓடிவந்த, ஓடிவரும் அந்நிய மூலதனங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை எனப் பார்ப்போம். சீனாவில் உள்ள அந்நிய முதலீடுகள் 2002 செப்டம்பரில்

| | | |
|---|---|---|
| ஹாங்காங் | 19,984 கோடி டாலர் | 45.96 சதவீதம் |
| அமெரிக்கா | 3,842 கோடி டாலர் | 8.84 சதவீதம் |
| ஜப்பான் | 3,535 கோடி டாலர் | 8.13 சதவீதம் |
| தாய்வான் | 3,197 கோடி டாலர் | 7.35 சதவீதம் |
| வேர்ஜி தீவுகள் | 2,276 கோடி டாலர் | 5.23 சதவீதம் |
| சிங்கப்பூர் | 2,097 கோடி டாலர் | 4.82 சதவீதம் |
| பிரான்ஸ் | 545 கோடி டாலர் | 1.25 சதவீதம் |
| மற்றவை | 8,009 கோடி டாலர் | 18.42 சதவீதம் |
| மொத்தம் | 43,478 கோடி டாலர் | 100 சதவீதம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீனாவில் அதிக முதலீட்டைக் குவித்து வைத்திருப்பவர்கள் யார் என்பதை இங்கேக் காண்கின்றோம். இதில் ஹாங்காங் பெரியளவில் அந்நிய முதலீட்டை சீனாவில் கொண்டு இருக்கின்றது. ஆனால் உள்ளடகத்தில் ஹாங்காங் அல்லாத அந்நிய மூலதனம், ஹாங்காங் ஊடாகப் பின்பக்க வழியாகச் சீனாவில் ஊடுருவியதையே இது குறிக்கின்றது. இது தான் தாய்வான் முதல் பல நாடுகளின் பின் உள்ள கதை. உலகில் இக்காலக் கட்டத்தில் அதிக அந்நிய முதலீட்டை உள்ளிழுத்த நாடுகளில் சீனாவாக இருப்பது என்பது, அங்குள்ள மக்கள் மேலான அதீதமான அடிமைத்தனத்தை எடுத்துக் காட்டுகின்றது. மக்கள் மேலான வரைமுறையற்ற, பாசிசச் சுரண்டலுடன் கூடிய சூறையாடல் தான், அதிக அந்நிய முதலீட்டை கவர்ந்தெடுக்கின்றது. இதன் மூலம் உலகில் அதிக மலிவுப் பொருளை உற்பத்தி செய்வதுடன், உலகில் பல உற்பத்தியில் பெருவீதத்தை சீனாவே கைப்பற்றியுள்ளது. அந்நிய மூலதனம் குவிந்துள்ள சீனாவின் மறுபக்கத்தில், சீன முதலாளிகளின் சுரண்டலும் சூறையாடலும் பெரும் மூலதனத்தை உருவாக்கி விடுகின்றது. இந்த மூலதனம் நிதியாகவும், மூலதனமாகவும் எல்லை கடந்து செல்வது அதிகரித்து வருகின்றது. உள்வருவதும், வெளிச் செல்வதும் தலைகால் தெரியாத வேகத்தில் ஒருங்கே நடக்கின்றது. மறுபக்கத்தில் சீன முதலீடுகள், ஏகாதிபத்தியங்களுக்கு இணையாக புதிதாக உலகெங்கும் பாய்கின்றது.

அந்நிய முதலீடுகள் கோடி டாலரில்

| | 2001 | 2002 |
|---|---|---|
| அமெரிக்கா | 14,400 | 3,000 |
| சீனா | 4,680 | 5,270 |
| பிரான்ஸ் | 5,520 | 5,150 |
| பிரிட்டன் | 6,200 | 2,500 |
| ஜெர்மனி | 3,400 | 3,800 |
| கனடா | 2,900 | 2,050 |
| நெதர்லாந்து | 5,120 | 2,910 |

2002-இல் அந்நிய முதலீட்டை அதிகமிட்ட நாடுகளை எடுத்தால், சீனாவே அதிக முதலீட்டையிட்டது.



| | |
|---|---|
| சீனா | 5,270 கோடி டாலர் |
| பிரான்ஸ் | 4,820 கோடி டாலர் |
| ஜெர்மனி | 3,810 கோடி டாலர் |
| அமெரிக்கா | 3,010 கோடி டாலர் |
| நெதர்லாந்து | 2,920 கோடி டாலர் |
| பிரிட்டன் | 2,500 கோடி டாலர் |
| கனடா | 2,140 கோடி டாலர் |
| ஸ்பனியோல் | 2,120 கோடி டாலர் |
| பிரேசில் | 1,920 கோடி டாலர் |
| அயர்லாந்து | 1,900 கோடி டாலர் |
| பெல்ஜியம் | 1,830 கோடி டாலர் |
| இத்தாலி | 1,460 கோடி டாலர் |
| ஹாங்காங் | 1,370 கோடி டாலர் |

2002-இல் சீனாவே அதிக அந்நிய முதலீட்டை உலங்கெங்கும் நடத்தியது. இதன் மூலம் உலகம் புதிய கெடுபிடிக்குள் நகர்கின்றது. பாரம்பரியமான ஏகாதிபத்தியங்கள் கடும் நெருக்கடியில் சிக்கி நிற்கின்றன. ஜப்பான் முன்னணி பட்டியலில் இருந்தே காணாமல் போனது. ஒன்றுபட்ட ஐரோப்பிய முதலீடுகளே அதிகரித்துச் செல்லுகின்றது. இதனுடன் சீனா மற்றும் ஹாங்காங் கணிசமான ஒரு அந்நிய முதலீட்டை உலகெங்கும் நடத்துகின்றது. உண்மையில் சர்வதேச ரீதியான நெருக்கடி புதிய வடிவில் சிக்கலாகி, கோரமாகி வருகின்றது.

2000-இல் மொத்தமாக ஏகாதிபத்திய அரசுகளின் அந்நிய முதலீடு 73,500 கோடி டாலராகும். இது 2002-இல் அரைவாசியாகியது. இந்த நெருக்கடியான காலத்தில் சீனா முழு வேகத்தில் உலகில் தலைநீட்டியது. 5270 கோடி டாலரை நேரடியாக முதலீடு செய்தது. சீனா 1991 தொடங்கி 2002 முடிந்த 12 வருடத்தில் மொத்த அந்நிய முதலீடாக 44,800 கோடி டாலரை உலகெங்குமிட்டது. அதேநேரம் ஹாங்காங்குடன் சேர்ந்ததால், அந்நிய முதலீடு 89,100 கோடி டாலராக மாறியுள்ளது. இது உலகில் இரண்டாவது மிகப் பெரிய அந்நிய முதலீடாகும். முதலாவது இடத்தில் உள்ள அமெரிக்காவோ, 1,35,100 கோடி டாலரை அந்நிய முதலீடாக உலகெங்கும் கொண்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதேநேரம் அமெரிக்கப் பன்னாட்டுக் கம்பெனிகளின் முதலீடு கடந்த 12 வருடத்தில் 1,50,100 கோடி டாலராகும். பிரிட்டிஷ் பன்னாட்டு நிறுவனங்களின் அந்நிய முதலீடு 1,03,300 கோடி டாலராகும். இது போல் பிரான்ஸ் 63,200 கோடி டாலரும், ஜெர்மனி 57,800 கோடி டாலருமாகும். ஒருபுறம் அரசின் அந்நிய முதலீடும், ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் அக்கம் பக்கமாகவும், ஒன்றுக்குச் சார்பாக மற்றொன்றாக இயங்கி உலகையே சூறையாடுகின்றது.

உலகில் ஏகாதிபத்தியங்களின் (தொழில்வள நாடுகளின்) மொத்த அந்நிய முதலீடுகள் 2002 முடிய உலகளாவில் 7,10,000 கோடி டாலராகும். இது அந்நிய மொத்த முதலீட்டில் 90 சதவீதமாகும். இந்த அந்நிய முதலீட்டில் 4,60,000 கோடி டாலர் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி சொந்தமாக இருந்தது. மறுபக்கத்தில் பெர்லின் சுவர் தகர்க்கப்படும் முன்பாக, 1990-இல் மத்திய ஐரோப்பாவின் அந்நிய முதலீடு 300 கோடி டாலரே இருந்தது. இது 2002-இல் 18,800 கோடி டாலராகியது. அதாவது 12 வருடத்தில் 60 மடங்கு மேலாகவே, அந்நிய மூலதனம் மத்திய ஐரோப்பாவில் ஊடுருவியது. கம்யூனிசத்துக்கு எதிரான சுதந்திரம், ஜனநாயகம் என்ற கோசத்தின் பின் உள்ள உள்ளடக்கம் இப்படி வக்கிரமாக வெளிப்பட்டு நிற்கின்றது. அங்கு வாழ்ந்த மக்களின் தலைவிதி சூறையாடலுக்குட்பட்டு, இருந்த கோவணத்தையும் இழப்பதையே துரிதப்படுத்துகின்றது.

இது தனித்து ஒரு பக்கம் மட்டும் ஒரு போக்கில் நிகழவில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின் பண்பான அமெரிக்காவின் தனிப் பலத்தையும் கூட சிதைக்கத் தொடங்கியுள்ளது. உண்மையில் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் அமெரிக்காவின் உலக ஆதிக்கம் என்பது மிகப் பிரம்மாண்டமானதாக இருந்தது. தனது பலத்தைக் கொண்டு 1949-இல் அமெரிக்கா 30 முதலாளித்துவ நாடுகளின் பணமதிப்பை ஒரே நேரத்தில் குறைக்க வைத்தது. 1950-இல் அமெரிக்காவின் அந்நிய முதலீடு 20,550 கோடி ரூபாவாகியது. இது 1976-இல் இது 2,40,000 கோடி ரூபாவாகியது. இது ஏகாதிபத்தியங்களின் மொத்த மூலதன ஏற்றுமதியில் 52 சதவீதமாக இருந்தது. மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்காவின் தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடு 1957-இல் 10880 கோடி ரூபாவாக இருந்தது. இது 1982-இல் 384360 கோடி ரூபாவாக



மாறியது. தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடு 35 சதவீதமகவும், அரசு முதலீடு 13 சதவீதத்தாலும் அதிகரித்தது. 1970-க்கும் 1978-க்கும் இடையில் அந்நிய முதலீடு 1920 கோடி டாலரில் இருந்து 4050 கோடி டாலராக அதிகரித்தது. அதேநேரம் இந்த முதலீட்டால் கிடைத்த லாபம் 290 கோடி டாலரில் இருந்து 890 கோடி டாலராக அதிகரித்தது. 1970-இல் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் மற்றும் ஜெர்மனியின் அந்நிய வெளிநாட்டு முதலீட்டில் 84.2 சதவீதம் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவிலேயே இட்டுயிருந்தனர். இதில் மாற்றங்கள் நிகழத் தொடங்கின. முதலீடுகள் அதிகளவில் ஏகாதிபத்தியத்தின் உள்ளும் நகரத் தொடங்கியது.

1999-இல் அமெரிக்காவில் மூலதனம் உலகளவில் பரவிய விதம்

| | மொத்த மூலதனத்தில் சதவீதத்தில் | மூலதனத்தின் அளவு |
|---|---|---|
| தென் அமெரிக்கா | 19.7 | 22,300 கோடி டாலர் |
| தென் கடல் தீவுகள் | 3.5 | 4,000 கோடி டாலர் |
| ஆசியா | 13 | 14,600 கோடி டாலர் |
| கனடா | 10 | 11,200 கோடி டாலர் |
| ஐரோப்பா | 51.5 | 58,200 கோடி டாலர் |
| மத்திய அரேபியா | 1 | 110 கோடி டாலர் |
| ஆப்பிரிக்கா | 1.3 | 130 கோடி டாலர் |

1955-இல் மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்க ஏகாதிபத்திய அரசு முதலீடு 25840 கோடி ரூபாவாக இருந்தது. அதேநேரம் ஏகபோக தனியார் முதலீடு 11,840 கோடி ரூபாவாக இருந்தது. இந்த அந்நிய முதலீடு மேற்கில் 1999-இல் 58,200 கோடி டாலராகியது. இது உலகளாவிய அமெரிக்காவின் அந்நிய முதலீட்டில் 51.5 சதவீதமாகியது. லெனின் கூறியது போல் ஏகாதிபத்தியத்தை இனங் காண்பதற்குரிய குணாதிசயமாக இருப்பது விவசாயப் பிரதேசங்களை மட்டும் அது கைப்பற்ற முனைகின்றது என்பது அல்ல. வெகுவாய்த் தொழில் வளர்ச்சியடைந்த பிரதேசங்களையும் அது கைப்பற்ற முனைவது ஆகும் என்றார். ஏகாதிபத்திய அமெரிக்கா உலகெங்கும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னான தனது பொருளாதார பலத்தின் மூலம் உலகெங்கும் கால் பரப்பியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் நிலைமை இன்று தலை கீழாகியுள்ளது. சீனா, ஜப்பான், ஐரோப்பா உலகளவில் அதிக அந்நிய முதலீடுகளை இட்டு உலகை அன்றாடம் மறுபங்கீடு செய்கின்றது. இதேபோல் 2002-இல் ரசியா கிழக்கு ஐரோப்பாவில் நேரடியாக இட்ட அந்நிய முதலீடு 400 கோடி டாலராகியது. இது 2003-இல் 680 கோடி டாலராகியது. 2003-இல் ரசியா தனது வெளிநாட்டு அந்நிய முதலீட்டை 65 சதவீதத்தால் உயர்த்தியது. மொத்தத்தில் இவற்றுக்கு எதிராக பிரிட்டன், அமெரிக்கா கடுமையான தற்காப்பில் ஈடுபடுவதுடன், பகிரங்கமான பலாத்காரமான ஆக்கிரமிப்பில் ஈடுபடுகின்றது. உலக வர்த்தகத்தைக் கைப்பற்றும், உலகளாவிய நெருக்கடியின் மொத்த விளைவு என்ன எனப் பார்ப்போம். அமெரிக்கா, பிரிட்டன் 2003-க்கு முந்திய இரண்டு வருடத்தில் தனது அந்நிய முதலீட்டின் அளவை 37,000 கோடி டாலரால் இழந்தது. 2003-க்கு முந்திய பத்து வருடத்தில் அந்நிய முதலீட்டின் அளவு 37,000 கோடியால் குறைந்துள்ளது. அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் அந்நிய முதலீடுகளின் சரிவு வேகமாக நடக்கின்றது.

அமெரிக்காவின் அந்நிய முதலீடு

| | |
|---|---|
| 2002 | 3010 கோடி டாலர் |
| 2001 | 13080 கோடி டாலர் |
| 2000 | 30770 கோடி டாலர் |
| 1999 | 28950 கோடி டாலர் |

இதேபோல் பிரிட்டனின் அந்நிய முதலீடு

| | |
|---|---|
| 2002 | 2500 கோடி டாலர் |
| 1999 | 6200 கோடி டாலர் |

அந்நிய முதலீட்டின் சரிவால் ஏகாதிபத்தியத்துக்கு இடையில் ஏற்படும் சர்வதேச நெருக்கடிகள் கடுமையானவை. இது இராணுவ ரீதியான ஆக்கிரமிப்பாக மாறுகின்றது. இது தவிர்க்க முடியாமல், ஏகாதிபத்தியத்துக்கிடையிலான ஒரு போருக்கான சர்வதேச நெருக்கடிக்குள் இழுத்துச் செல்லுகின்றது. அமெரிக்காவின் அந்நிய முதலீடு 2002-இல் மிக குறைந்த அளவை எட்டியது. இது 2002-இல் 3010 கோடி டாலராகியது. பிரான்சை எடுத்தால் 2002-இல் 5,150 கோடி டாலராக இருந்த அந்நிய முதலீடு 2001-இல் 5,260 கோடி டாலராக இருந்தது. மேற்கத்திய அந்நிய முதலீடு 2002-இல் 49,000 கோடி டாலராக இருந்தது. இது 2001-இல் 61,500 கோடி டாலராக இருந்தது. பொதுவான சரிவு அந்நிய முதலீட்டில் காணப்பட்ட போதும், அதில் ஏற்றத்தாழ்வு ஏகாதிபத்தியத்துக்கு இடையில் கடுமையாகவே பிரதிபலித்தது. 2002-இல் பிரான்சின் 22,119 பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் உலகெங்கும் உற்பத்தியில் ஈடுபட்டது. இது உலகளாவிய அந்நிய முதலீட்டில் 4 சதவீதமாகும். இதன் மொத்த பெறுமதி 60,000 கோடி ஈரோவாகும்.



பிரான்சின் உலகளாவிய முதலீடுகளின் எண்ணிக்கை
பிராந்திய ரீதியாக

| | |
|---|---|
| ஆசியா | 3,371 |
| மத்திய கிழக்கு | 772 |
| ஆப்பிரிக்கா | 2,733 |
| தென் அமெரிக்கா | 1,346 |
| வட அமெரிக்கா | 2,766 |
| ஐரோப்பா | 11,131 |
| மொத்தம் | 22,119 |

பிரெஞ்சு அந்நிய முதலீடுகள் தொடர்ந்தும் அதிகரித்து செல்லுகின்றது. இது பிராந்திய ரீதியாக சில பிரதேசங்கள் குறித்த ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தைக் கூட உருவாக்குகின்றது. இன்று அந்நிய மூலதனம் பிராந்திய ஆதிக்கத்தைக் கூட உருவாக்குகின்றது. உதாரணமாக தென் அமெரிக்காவை அமெரிக்காவும், ஆப்பிரிக்காவை குறிப்பாக பிரான்சின் ஆதிக்கத்தையும் பிராந்திய ரீதியாகவே தக்க வைக்கின்றது. அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தலைமையிலான புதிய சர்வதேச இராணுவ ஆக்கிரமிப்புகள் பிரெஞ்சு மூலதனத்துக்கு, சர்வதேச நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றது. இக்காலத்தில் பிரான்சின் அந்நிய முதலீடுகளின் எண்ணிக்கையை எடுத்தால்

| | |
|---|---|
| 2000 | 2,994 |
| 2001 | 1,926 |
| 2002 | 1,778 |
| 2003 | 1,755 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ச்சியாக முதலீடுகளின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டிருப்பதை, இது எடுத்துக்காட்டுகின்றது. சர்வதேச ரீதியாக பொது நெருக்கடி ஒன்று, அங்குமிங்குமாக அலைபாய்கின்றது. வரலாற்று ரீதியாகப் பார்த்தால், பிரிட்டனின் வெளிநாட்டு முதலீடுகளே உலகளாவியதில் மிகப் பெரிய பங்கு வகித்தது. 1914-இல் பிரிட்டிஷ் முதலீடு உலகளாவிய அந்நிய முதலீட்டில் 45.5 சதவீதமாக இருந்தது. இது 1978-இல் 16.2 சதவீதமாகவும், 1990-இல் 13.8 சதவீதமாகவும், 1994-இல் 11.8 சதவீதமாகவும் வீழ்ச்சிக் கண்டது. இந்த வீழ்ச்சி தொடர்ந்து வருகின்றது. இந்த வீழ்ச்சி கடுமையான ஏகாதிபத்திய நெருக்கடிகளை அலையலையாக உருவாக்கி வருகின்றது. ஈராக், சூடான்... என்று தொடரும் பல நேரடி இராணுவ ஆக்கிரமிப்புக்கள் எல்லாம், உலகை மறுபங்கீடு செய்யும் சர்வதேச நிகழ்ச்சி நிரலின் வெளிப்பாடாகவே தொடருகின்றது. இந்த நிலைமை என்பது தொடர்ந்தும் ஒரு நெருக்கடியான காலகட்டத்தின் ஊடாகவே நகருகின்றது. உதாரணமாக நெதர்லாந்து 1999-க்கும் 2002-க்கு இடையில், அந்நிய முதலீடு 5120 கோடி டாலரில் இருந்து 2920 கோடியாகக் குறைந்துள்ளது. பிரான்சின் அந்நிய முதலீடு 5260 கோடி டாலரில் இருந்து 4820 கோடியாகக் குறைந்துள்ளது. 2002-இல் உலகளவில் மொத்தமாக அந்நிய முதலீடு 61500 கோடி டாலராக இருந்தது. இது 2003-இல் 49000 கோடி டாலராக குறைந்தது. இது ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலும், அது போல் ஏகாதிபத்தியத்துக்கும் மக்கள் கூட்டத்துக்கும் இடையில் கடுமையான முரண்பாட்டைக் கொண்ட கெடுபிடியான காலகட்டத்துக்குள் நுழைந்துள்ளதையே எடுத்துக் காட்டுகின்றது. அந்நிய முதலீடுகள் வரலாற்று ரீதியான ஒரு தொடர்ச்சியான ஏகாதிபத்திய நலன்களுடன் பின்னிப் பிணைந்ததாகவே இருந்து வந்துள்ளது.

உலகையே கொள்ளை அடிக்க, எல்லை கடந்த ஏகாதிபத்திய அந்நிய முதலீடுகளின் மொத்த வரலாற்றையும் பார்ப்போம்.

| | |
|---|---|
| 1960 | 6,800 கோடி டாலர் |
| 1967 | 11,200 கோடி டாலர் |
| 1973 | 21,100 கோடி டாலர் |
| 1980 | 51,300 கோடி டாலர் |
| 1985 | 68,600 கோடி டாலர் |
| 1990 | 1,71,400 கோடி டாலர் |



| | |
|---|---|
| 1993 | 2,13,500 கோடி டாலர் |
| 1994 | 2,41,200 கோடி டாலர் |
| 1995 | 2,84,000 கோடி டாலர் |
| 1996 | 3,14,500 கோடி டாலர் |
| 1997 | 3,42,300 கோடி டாலர் |
| 1998 | 4,11,700 கோடி டாலர் |
| 2002 | 7,10,000 கோடி டாலர் |

1960-க்கும் 1998-க்கும் இடையிலான அதாவது 38 வருடத்தில், எல்லை கடந்த வெளிநாட்டு மூலதனம் 60 மடங்கு மேலாக பெருகிக் கொழுத்துள்ளது. அதாவது மூலதனப் பாய்ச்சல் 6,000 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது 2002-உடன் ஒப்பிடும் போது 104 மடங்காகியது. அதாவது மூலதனப் பாய்ச்சல் 10,400 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 1990-க்கும் 1998-க்கும் இடைப்பட்ட காலத்தில் 2.4 மடங்கால் மூலதனப் பாய்ச்சல் நடந்துள்ளது. அதாவது 240 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2002 உடன் ஒப்பிடும் போது 414 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. உண்மையில் உலகமயமாதல் என்பது எல்லை கடந்து பாய்ந்து செல்லும் அந்நிய மூலதனத்தின் சூறையாடும் நலன்களுடன், இறுகப் பின்னிப் பிணைந்தவையே என்பதை மீண்டும் இவை துல்லியமாக நமக்குச் சுட்டி நிற்கின்றது. இங்கு தேசியம் என எதுவும், இன்று நிலவும் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தில் கிடையாது என்பதை, மூலதனம் முகத்தில் அறைந்தாற் போல் பளிச்சென்று பதிலளிக்கின்றது.

அந்நிய மூலதனத்தின் ஆதிக்கமே ஜனநாயகமாகி அதுவே சுதந்திரமானதாகிவிட்டது. தேசிய அரசுகள் என்று நாம் நம்பும் எல்லைகளைக் கடந்து ஏகாதிபத்தியங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதை ஏகாதிபத்தியம் சார்ந்த தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் கட்டுப்படுத்துகின்றன. இப்படி 1991-இல் 40,000 பன்னாட்டு நிறுவனங்களும், அதனுடன் இணைந்த 2.5 லட்சம் வெளிநாட்டுக் கிளை நிறுவனங்களும் உலகு எங்கும் எல்லை கடந்து விரிந்து கிடந்தன. 2000-இல் 60,000 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் 8.2 லட்சம் அந்நிய முதலீட்டை நடத்தி இருந்தது. 2002-இல் 65000 தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள், உலகளவில் 8.5 லட்சம் அந்நிய முதலீட்டை நடத்தி இருந்தது. அந்நிய முதலீடு தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லை கடந்து, தேசிய அரசுகளின் மேல் தமது ஆதிக்கத்தை நிறுவி வருகின்றது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. இவற்றைப் பாதுகாக்கும் சட்டதிட்டங்கள் தான், உலகமயமாதல் என்னும் சட்டதிட்டங்கள். இவற்றையே தேசிய அரசுகள் தமது சட்டதிட்டமாக்கி வருகின்றது. 1991-இல் இவற்றின் மொத்த விற்பனை வருமானம் 4,80,000 கோடி (4.8 டிரில்லியன்) டாலராகும். அதாவது 1980-இல் கிடைத்த வருமானத்தைப் போல் இது இரண்டு மடங்காகும். தேசங்களின் எல்லை கடந்து சூறையாடும் உலகமயமாதலின் வெற்றி என்பது, 11 வருடத்தில் அதன் வருமானம் இரண்டு மடங்கானதைக் காட்டுகின்றது. இது இன்று பல மடங்காகிவிட்டதை மேலுள்ள தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

உலகைக் கைப்பற்றும் சர்வதேச நெருக்கடியில், 1994-இல் உலகளவில் பன்னாட்டு நிறுவனங்களின் நிலையான வெளிநாட்டு முதலீடு 2,60,000 கோடி டாலராக அதிகரித்த அதே நேரம், அதன் உற்பத்தி 23,000 கோடியாக இருந்தது. அதாவது அந்நிய முதலீட்டின் மூலம் செய்த உற்பத்தியை, 19 நாடுகளின் தேசிய வருமானம் மட்டுமே இதைவிட அதிகமாக இருந்தது. வருடாந்தரம் நடக்கும் புதிய முதலீடுகள் மூலம் செய்யும் உற்பத்தி, பல தேசங்களின் வருடாந்தர தேசிய உற்பத்தியை விட அதிகமாகும் போக்கு, சர்வதேச போக்காகவே இது பரிணமித்துள்ளது.

மிக வறுமைக்குள்ளான மிகவும் பின்தங்கிய நாடுகளைக் கூட ஏகாதிபத்தியம் சூறையாடுவதில் இருந்து விதிவிலக்காக விட்டு விடுவதில்லை. நிதி மூலதனத்துக்கான வட்டி முதல் நேரடி அந்நிய மூலதனம் மூலம் சுரண்டுவது வரை விதிவிலக்கற்ற பொது நடைமுறையாக இருப்பதே உலகமயமாதலாகும். ஏகாதிபத்தியம் சூறையாடுவதால் அதிக மரணவீதத்தைக் கொண்ட ஆப்பிரிக்காவில், 1996-இல் போடப்பட்ட பன்னாட்டு மொத்த முதலீடு 550 கோடி டாலராகும் இது உலகளாவிய முதலீட்டில் 1.5 சதவீதமாகும். 1997-இல் இந்த முதலீடு 900 கோடி டாலராகியது. இது 1970-இல் 100 கோடி டாலராக மட்டுமே இருந்தது. 1983 முதல் 1987 வரையான காலத்தில் சராசரி வருடம் 190 கோடி டாலர் முதலீடாக அமைந்தது. வறுமை தலைவிரித்தாடும் ஆப்பிரிக்காவில், பண்ணை மந்தைகளாகி கையேந்தி நிற்கும் மக்கள், ஏகாதிபத்தியக் கொள்ளையால் அன்றாடம் பல லட்சக்கணக்கில் இறக்கின்றனர். அதையிட்டு கவலைப்படாத ஏகாதிபத்தியம் முன்பைவிட கொடூரமாகவே அங்கிருந்து செல்வத்தைக்



கவர்ந்து வருகின்றனர். இதையே அதிகரித்து வரும் பன்னாட்டு முதலீட்டின் அளவு சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது.

1997-இல் மேற்கு அல்லாத நாடுகளில் அந்நிய முதலீடுகளை பிராந்திய ரீதியாக எடுத்து ஆராய்ந்தால்

| | |
|---|---|
| தென் அமெரிக்கா மற்றும் கரிபிய நாடுகள் | 11891.8 கோடி டாலர் |
| கிழக்கு ஆசிய மற்றும் பசிபிக் நாடுகள் | 10425.7 கோடி டாலர் |
| ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா | 4987.5 கோடி டாலர் |
| தென் ஆசியா | 1111.0 கோடி டாலர் |
| வட ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு | 789.9 கோடி டாலர் |
| ஆப்பிரிக்கா | 667.4 கோடி டாலர் |

1997-இல் மேற்கு அல்லாத பிரதேசங்களில் அந்நிய முதலீடுகள் 29,873 கோடி டாலராக இருந்தது. அதேநேரம் அந்நிய முதலீடு உலகளவில் 3,42,300 கோடி டாலராக இருந்தது. ஆனால் 1970-இல் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், ஜெர்மனியின் மொத்த அந்நிய முதலீட்டில் 84.2 சதவீதம் ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் லத்தீன் அமெரிக்காவில் போட்டிருந்தது. உலகமயமாதல் வேகம் பெற்ற போது ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் நடந்த மாற்றங்கள், அந்நிய மூலதனத்தில் ஒரு பகுதியை உள்ளிக்க தொடங்கியது. இதையே 1997-இல் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றது. பின்தங்கிய பிரதேசங்களில் செய்த முதலீட்டை விடவும் மேற்கில் 9 மடங்கு மேலானதாக இருந்தது. ஆனால் மேற்கத்திய நாடுகளில் உற்பத்தி மற்றும் வாழ்க்கைச் செலவுடன் கூடிய கூலியை ஒப்பிடும் போது, மேற்கு அல்லாத நாடுகளின் முதலீட்டின் அளவு உயர்ந்தது. பணத்தின் பெறுமானத்தை டாலருடன் ஒப்பிட்டால், அவை பல பத்து மடங்காகவே இருக்கின்றது. உதாரணமாக 2003 பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு சிலியை எடுத்தால் 635 மடங்காகும். இதே போல் இந்தியா 45 மடங்காகவும், இலங்கை 100 மடங்காகவும், நைஜீரியா 136 மடங்காகவும், நேபாளம் 74 மடங்காகவும், வங்காளதேசம் 60 மடங்காகவும், தாய்லாந்து 40 மடங்காகவும் உள்ளது. உதாரணமாக மேற்கு அல்லாத முதலீடு மற்றொரு நாட்டில் ஊடுருவும் போது, ஒரு நாட்டின் பணத்தின் பெறுமானத்துக்கு ஏற்ப பலமடங்காகின்றது. இங்கு கூலியுடன் ஒப்பிடும் போதும் இதே நிலைதான் உள்ளது. உதாரணமாக பணம் 50 மடங்கால் பணப் பெறுமதி உயரும் போது, மேற்கு அல்லாத முதலீடு 14,93,650 கோடியாகின்றது. இது 100



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மடங்காகும் போது 29,87,300 கோடியாகி விடுகின்றது. நாட்டின் தேசிய வருமானத்துடன் ஒப்பிடும் போது, இந்த முதலீட்டின் பெறுமானம் மிகப் பெரியதாக இருப்பதுடன், அனைத்தையும் மாற்றி அமைக்க கூடிய ஒன்றாக இருப்பதைக் காணமுடியும். மொத்த முதலீட்டை அந்தந்த நாட்டின் பணப் பெறுமதியில் ஒப்பிடும்போது, மேற்கு அல்லாத முதலீட்டை மேற்குடன் ஒப்பிடும்போது அது பல மடங்காகி விடுகின்றது. தேசங்கள் எப்படி அழிந்து சிதைந்து வருகின்றது என்பதையும், தேசிய முதலாளித்துவம் எப்படி சூறையாடப்பட்டு வருகின்றது என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது. தேசங்களின் தலைவிதியை நாம் இதன் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. இது ஒரு தொடர்கதையாகின்றது. இதைப் புரிந்து கொள்ள, தேசங்கடந்த அந்நிய முதலீட்டின் அளவை ஒப்பீட்டில் சில நாடுகளைச் சார்ந்து பார்ப்போம்.

அந்நிய முதலீடு நேரடியாக கோடி டாலரில்

| | இஸ்ரேல் | எகிப்து | இந்தியா | பிரிட்டன் | செக் குடியரசு | கங்கேரி | இலங்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1997 | 174.3 | 89.1 | 300.6 | 6300.5 | 100.2 | 16.68 | 43.3 |
| 1998 | 49.4 | 107.6 | 200.6 | 11900.7 | 200.7 | 21.44 | 20.6 |
| 1999 | 141.4 | 106.5 | 200.2 | 20600.5 | 500.1 | 23.72 | 20.1 |
| 2000 | 383.2 | 123.5 | 200.5 | 25900.5 | 400.6 | 28.22 | 17.8 |
| 2001 | 120 | 40 | 300.2 | 18500.3 | 400.8 | 29.26 | 17.2 |
| 2002 | 150 | 30 | 400.3 | 16300.7 | 400.9 | 26.12 | - |

2001-இல் அந்நிய முதலீடு

| | |
|---|---|
| மொறக் | 265.8 கோடி டாலர் |
| அல்ஜிரியா | 118 கோடி டாலர் |
| எகிப்து | 51 கோடி டாலர் |
| துருக்கி | 86.2 கோடி டாலர் |
| சிரியா | 20.5 கோடி டாலர் |
| ஜோர்டான் | 10 கோடி டாலர் |

தேசங்கடந்த அந்நிய மூலதனங்களைக் கொண்டு நிலையான மூலதனத்தை உருவாக்கி உலகத்தையே அடிமைப்படுத்தி சுரண்டும் ஏகாதிபத்தியம், புதிய நாடுகளை அடிமைப்படுத்த புதிய



மூலதனங்களை நகர்த்துகின்றது. பெரும் மூலதனங்கள் மூலம் பல நாடுகளை அடிமைப்படுத்திய மூலதனம், புதிய நாடுகளை நோக்கி பெருமெடுப்பில் நகர்வது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. உலகில் மிகப் பலவீனமான மக்கள் கூட்டங்களை அடிமைப்படுத்தவும், உயர்ந்த சுரண்டல் வீதமே எப்போதும் முன்நிபந்தனையாக உள்ளது. இதை நிறைவு செய்ய உயர்ந்த தொழில் நுட்பத்தை இயக்கவல்ல, இலவசமாக பயிற்சி அளிக்கப்பட்ட நாடுகளில் மூலதனத்தில் பாய்ச்சல் அலை அலையாக இடமாறி நகர்கின்றது. அதாவது உயர்ந்த சுரண்டல் வீதத்தைக் கோரும் அதேநேரம், அதிலும் பணப் பெறுமதியில் உயர்ந்த டாலர் விகிதத்தையும் கோருகின்றது. இதற்குத் தொழில் நுட்ப அறிவை இலவசமாகப் பெறக் கூடிய இலவச தொழிலாளர் படை உள்ள நாடுகளைத் தெரிவதுடன், வேலையின்மை அதிக வீதத்தில் உள்ள நாடுகளைத் தெரிவு செய்கின்றனர். தொழிலாளர்களின் நிரந்தர அடிமைத்தனத்தை விலைபேசி விற்றுவிடக் கூடிய நாடுகளையும், மூலதனத்தின் சுயேச்சையான கட்டுப்பாடுகளற்ற இலகுவான சூறையாடலுக்கு இசைவான நாடுகளையே மூலதனம் தெரிவு செய்கின்றது. மூலவளங்களை மிக மலிவு விலையில் பெறக் கூடிய நாடுகள் தெரிவு செய்யப்படுகின்றன. இதனடிப்படையில் தான் மூலதனம் உலகெங்கும் எகிறிக் குதிக்கின்றது.

உண்மையில் இவை தேசவளங்களை, தேச எல்லைகள் கடந்து சூறையாடப்படுவதைக் காட்டுகின்றது. உலகளவில் மக்கள் தமது வாழ்க்கையை இழந்து வந்ததையும், இழந்து வருவதையும் எடுத்துக் காட்டுகின்றது. இந்த இரத்தம் குடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களும், இதன் தொங்கு சதைகளும் நாட்டின் எல்லையைக் கடக்கும் முன்பு, அங்கிருந்த வளங்களை நுகர்ந்தவர்கள் அந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள்தான். ஆனால் அதை இன்று பன்னாட்டு நிறுவனங்கள் தேச எல்லை கடந்து தேசத்தை பலாத்காரமாகப் புணர்ந்து, மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்த பின்பு, வீதிகளில் வெற்று உடல்களாக எறிந்து விடுவதை உலகமயமாதல் செய்கின்றது. உலகமயமாதல் பற்றி பல்வேறு விதண்டாவாதமான, வக்கிரமான கருத்துக்கள் அனைத்தும், எதார்த்தத்துக்கு நேர்மாறானதாகவே உள்ளது. அறிவுத் துறை சார்ந்த பூச்சூடல்கள் எல்லாம் எதார்த்தத்தைக் கடந்த வக்கிரமானதாக இருப்பதையே புள்ளிவிபரங்கள் துல்லியமாக எடுத்துக் காட்டி நிறுவுகின்றது. அதே போல் மக்களின் எதார்த்தமான வாழ்க்கையும், தேசங்களில் நடந்துவரும் மாற்றங்களும் உலகமயமாதலின் கோரமான விளைவுகளாகி எதார்த்தத்தில் காட்சிப் பொருளாகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 11. மக்களின் சமூக வாழ்வைச் சூறையாடுவதே சர்வதேச வர்த்தகமாகும்.

இயற்கைக்குப் புறம்பாக மனித வரலாற்றில் எதை சக மனிதனுக்கு மறுக்கின்றனரோ, அதுவே வர்த்தகமாகின்றது. மற்றொரு மனிதனுடன் தனது சொந்த உழைப்பிலான உற்பத்தியை பகிர்ந்து கொண்ட சமூக நிகழ்வை மறுப்பதே, இன்றைய நாகரீகமாகும். இதுவே வர்த்தகமாகும். எல்லாவிதமான இன்றைய சிந்தனைகளும், செயல்களும் இதற்குள் தான் கட்டமைக்கப்படுகின்றன. மற்றைய மனிதனுடன் தனது சொந்த உழைப்பை பகிர்ந்து கொள்வதை, இன்றைய ஜனநாயகமும் சுதந்திரமும் காட்டுமிராண்டித்தனமாகக் காண்கின்றது. இதையே ஜனநாயக மறுப்பாகவும், சுதந்திரமின்மையாகவும் கூட சித்தரிக்கின்றது. இதுவே அனைத்து அரசுக் கட்டமைப்பினதும் சித்தாந்த உள்ளடக்கமாகும். இதனடிப்படையில் மற்றவனின் உழைப்பை பறித்தெடுத்தலையே, இன்றைய ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் அதியுன்னதமான கோட்பாடாகிவிட்டது. அதாவது மனித நாகரீகம் என்பதும், அது கூறும் ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் என்பது, மற்றவனின் உழைப்பைத் திருடுவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பாகக் காணப்படுகின்றது. மற்றவன் உழைப்பை எந்தளவுக்கு நாகரீகமாக அதிகம் திருட முடியுமோ, அதுவே உன்னதமான சமூக ஒழுக்கமாக உலகமயமாதல் கருதுகின்றது.



இன்றைய சிந்தனைகள் செயல்கள் அனைத்தும் இதற்கு ஆதரவாக அல்லது எதிராகவே சமூகத்தில் கட்டமைக்கப்படுகின்றது.

இந்த நிலையில் சமூக உணர்வுடன் மற்றவன் மீதான கொடூரமான சுரண்டலை கண்டு கொதித்து எழுவது, அநாகரீகமானதாக கருதும் மனித உணர்வுகளே கட்டமைக்கப்பட்டுள்ளது. இதைப் பயங்கரவாதமாகவும், பிழைக்கத் தெரியாத ஒன்றாகவும், காட்டும் நாகரீகமே வக்கிரமாகி சமூக ஒழுக்கமாகின்றது. மற்றவனின் உழைப்பைச் சுரண்டுவதை எதிர்ப்பது, சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் விரோதிகளாகவும், பயங்கரவாதச் செயலாக முத்திரை குத்தப்படுகின்றது. மனித உழைப்பைச் சுரண்டி, அதை மற்றவனுக்கு ஏமாற்றி விற்றுப் பிழைக்கும் உறவுதான் வர்த்தகம். மற்றவனுக்கு ஒரு உற்பத்தியை விற்கும் வர்த்தக உறவின் போது, அந்த உற்பத்தி மீதான உழைப்பை வழங்கியவனை உயிருடன் படிப்படியாக கொன்றுவிடுவது வர்த்தகப் பண்பாடாகும். இந்த நிகழ்ச்சிப் போக்கு இன்று உலகம் தழுவியதாகவேயுள்ளது. முன்னைய மனித வரலாறுகளில் இந்த வர்த்தகம் என்பது, நாடுகளுக்கு இடையில் கூட ஒரு சமச்சீரான போக்கு இருந்தது. உழைப்பாளிகளின் எண்ணிக்கைக்கு இசைவாகவே சர்வதேச நாடுகளிடையே ஏற்றத்தாழ்வு குறைந்த ஒரு வர்த்தகமாக இருந்தது. ஆனால் இன்று அப்படி அல்ல. மாறாக வர்த்தகம் சிலரின் கையில் குவிந்து கிடக்கின்றது. அதாவது உலகில் உள்ள மனிதர்களின் உழைப்பை, ஒரு சிலர் தமது தனிப்பட்ட சொத்தாக சொந்தம் கொண்டாடிக் கொண்டு உலகையே ஆள்கின்றனர். இதை நியாயப்படுத்தும் சமூக அமைப்பு தான் இன்றைய ஜனநாயகம். இதை உருவாக்கும் உரிமைதான் சுதந்திரமாகும். இந்த சர்வதேச வர்த்தகச் சூதாட்டம் பல இடைவெளிகள் ஊடாக மாறிவந்த வரலாற்றை நாம் தெரிந்து கொள்வோம்.

### காலனித்துவ மூலதனத் திரட்சியும் காலனிகளும்

1750-இல் உலக ஏற்றுமதியில் சீனா மூன்றில் ஒரு பங்கைக் கொண்டிருந்தது. இந்தியா நான்கில் ஒரு பங்கைக் கொண்டிருந்தது. மேற்கு ஐரோப்பா அண்ணளவாக நான்கில் ஒரு பகுதியை கொண்டிருந்தது. மிகுதியான 20 சதவீதத்தையே மற்றைய நாடுகள் கொண்டிருந்தன. இங்கு உழைப்பவரின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒரு சமச்சீரான சர்வதேசப் போக்கு காணப்பட்டது. செல்வத்தைப் பகிர்வதில் இடைவெளிகள் குறைந்து காணப்பட்டது. இடைப்பட்ட மத்தியதர வர்க்கம் சமூகத்தின் பெரும் போக்காகக் காணப்பட்டது. ஒவ்வொருவரும் தனது உழைப்பைக் கொண்ட இயற்கையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழும் ஒரு இயங்கியல் போக்கு, பெரும்பான்மை மக்களின் சமூகப் போக்காக இருந்தது. ஆனால் காலனிகளை உருவாக்குவது 17-ஆம் மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் கூர்மையடைந்த போது, சமச்சீர் தன்மை சிதைவது முன்பைவிட வேகம் பெற்றது. 1830-இல் மேற்கு நாடுகள் சீனாவின் எல்லையைத் தாண்டி காலனிகளை உருவாக்கியது. தொடர்ச்சியாக உலக வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்கை மேற்கு நாடுகள் கைப்பற்றின. 1928-இல் இது 84.2 சதவீதமாகியது. காலனித்துவத்தின் விரிவான உலகம் தழுவிய ஆக்கிரமிப்புகள், மேற்கின் செல்வச் செழிப்புக்கு அத்திவாரமாகியது. உண்மையில் இந்த உண்மையை இன்று பலர் புரிந்து கொள்வதில்லை. ஏதோ மேற்கு மிகப் பெரிய பொற்குவியலில் பிறந்ததாகவும், மற்றைய நாடுகள் கையேந்தும் பிச்சைக்கார நாடுகளாக இருந்ததாகவும் கட்டுவதும், நம்புவதும் இன்றைய மலட்டு அறிவாக உள்ளது. மனித அறிவை மலட்டு சமூகப் போக்கில் கட்டமைப்பது, உன்னதமான வர்த்தக சமூக அமைப்பன் ஆன்ம ஈடேற்றத்துக்கு அவசியமாகி விடுகின்றது. உண்மையில் உலகம் ஏற்றத் தாழ்வுகள் குறைந்த ஒரு சமூக அமைப்பாக, இயற்கை மீது தமது சொந்த உழைப்பை செலுத்தி வாழ்ந்த ஒரு சமூக அமைப்பாக கொண்டு பெரும்பான்மை மக்கள் வாழ்ந்தனர். இதை கடந்த 135 வருடங்களுக்கு உட்பட்ட சர்வதேச வர்த்தகங்களை ஆராயும் போது, இந்த உண்மை பளிச் சென்று அனைத்தையும் வெட்டவெளிச்சமாக்கிவிடுகின்றது.

சர்வதேச ஏற்றுமதியை 1990 டாலரின் பெறுமதியின் அடிப்படையில், அன்றைய காலத்தில் எப்படி நிகழ்ந்தது என்ற ஆராயும் போது, இயற்கை மீதான தனிமனித உழைப்பின் பலத்தையும் அதன் முக்கியத்துவம் பளிச்சென்று தெரிவித்து விடுகின்றது. கீழ் உள்ள பெறுமதிகள் 1990 டாலர் பெறுமதியின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளது. சர்வதேச வர்த்தகம் அனைத்துப் பெறுமானமும் கோடி டாலரில்

| | 1820 | 1870 | 1913 | 1929 | 1950 | 1973 | 1992 |
|---|---|---|---|---|---|---|---|
| ஓஸ்ரியா | 4.7 | 46 | 202 | 174 | 134 | 1390 | 4578 |
| பெல்ஜியம் | 9.2 | 123 | 731 | 784 | 808 | 6176 | 12241 |
| பிரான்ஸ் | 48.7 | 351 | 1129 | 1660 | 1684 | 10416 | 23605 |
| ஜெர்மனி | - | 676 | 3820 | 3506 | 1317 | 19417 | 40908 |
| இங்கிலாந்து | 112.5 | 1224 | 3935 | 3199 | 3935 | 3467 | 19454 |
| கனடா | - | 72 | 404 | 781 | 1258 | 6021 | 14029 |



| | 1820 | 1870 | 1913 | 1929 | 1950 | 1973 | 1992 |
|---|---|---|---|---|---|---|---|
| அமெரிக்கா | 25.1 | 250 | 1920 | 3037 | 4311 | 17455 | 45103 |
| வங்காளதேசம் | - | - | - | - | 28.4 | 44.5 | 212 |
| சீனா | - | 140 | 420 | 626 | 634 | 1168 | 8494 |
| ஜப்பான் | - | 5.1 | 168 | 434 | 354 | 9511 | 29949 |
| இந்தியா | - | 347 | 948 | 821 | 549 | 968 | 2010 |
| தாய்லாந்து | - | 8.8 | 50 | 64 | 115 | 308 | 3084 |
| தாய்வான் | - | - | 7 | 26 | 18 | 576 | 8221 |
| தென்கொரியா | - | 0 | 17 | 129 | 11 | 789 | 7780 |
| இந்தோனேசியா | - | 17.2 | 99 | 261 | 225 | 960 | 3805 |
| பிரேசில் | - | 85 | 189 | 259 | 349 | 1000 | 3671 |
| மெக்சிகோ | - | 24 | 236 | 371 | 200 | 524 | 3049 |

இவை கடந்த 1820-க்கு பிந்திய வருடங்களை அடிப்படையாக கொண்டு, 1990-களில் டாலரின் பெறுமதியின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தை ஆராய்கின்றது. நாடுகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வற்ற போக்கு இருந்ததையும், அது படிப்படியாகவே மாறி வந்ததையும் கூட எடுத்துக்காட்டுகின்றது. மேற்கு நாடுகள் உலகை ஆக்கிரமித்து காலனிகளை உருவாக்கிய போது நிலைமை முற்றாகவே மாறியது. காலனிகளைச் சுரண்டியதன் மூலம், வறிய மூன்றாம் உலக நாடுகளை உலகில் மேற்கு நாடுகள் உருவாக்கின. இதன் விரிவான கொடூரமான சூறையாடலைப் புரிந்து கொள்ள, மேற்கு நாடுகளின் விரிந்து சென்ற ஆட்சிப் பரப்புகள் இவற்றை எடுத்துக்காட்டுகின்றன. 15-ஆம் நூற்றாண்டில் உலக நிலப்பரப்பில் 2.2 சதவீதமான நிலமே (உலகின் மொத்த நிலப்பரப்பு 8 கோடி சதுர கி.மீட்டர்) மேற்கின் ஆதிக்கத்தில் இருந்தது. ஆனால் முதலாம் உலக யுத்தத்தின் பின்பாக, அதாவது 1920-இல் உலக நிலப்பரப்பில் 50 சதவீதத்தை மேற்கு தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. முதலாம் உலக யுத்தத்தின் முன்பாக, அதாவது 1900-இல் உலக சனத் தொகையில் ஐரோப்பியர் 30 சதவீதமாக இருந்த போதும், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டோர் 45 சதவீதமானவராக இருந்தனர். அதாவது 75 சதவீதமான மக்கள் மேற்கு ஆட்சியாளர்களால் ஆளப்பட்டனர். மேற்கில் குவிந்த செல்வத்தின் அடிப்படை, உலகை கொள்ளையடித்ததன் மூலம் தான் உருவானது. இதன் மூலமே சர்வதேச முதலீடு, சர்வதேச வர்த்தகம் மேற்கு சார்பாக மாற்றியமைக்கப்பட்டது. படிப்படியாக சர்வதேச வர்த்தகம் சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளின் தனிப்பட்ட சொத்தாகியது. இதுவே சில பன்னாட்டு நிறுவனங்களின் சொத்தாகின்றது.

இந்த சர்வதேச வர்த்தக ஏற்றுமதியை அன்றைய டாலரின் பெறுமதியில் பார்க்கும் போது மேலும் துல்லியமாக இந்த ஏற்றத் தாழ்வை காணமுடியும். ஏற்றுமதி அன்றைய டாலர் பெறுமானத்தில் கோடியில்

| | 1870 | 1913 | 1929 | 1950 | 1973 | 1992 |
|---|---|---|---|---|---|---|
| ஒஸ்ரியா | 16 | 56.1 | 30.8 | 32.6 | 955.9 | 4441.5 |
| பெல்ஜியம் | 13.3 | 71.7 | 88.4 | 165.2 | 2245.5 | 12297.6 |
| பிரான்ஸ் | 54.1 | 132.8 | 196.5 | 308.2 | 3663.5 | 23577.2 |
| ஜெர்மனி | 42.4 | 245.4 | 321.2 | 199.3 | 6756.3 | 42227.1 |
| இங்கிலாந்து | 97.1 | 255.5 | 355 | 632.5 | 2963.7 | 19000 |
| கனடா | 5.8 | 42.1 | 114.1 | 302 | 2643.7 | 13405.6 |
| அமெரிக்கா | 40.3 | 238 | 515.7 | 1028.2 | 7140.4 | 44816.4 |
| சோவியத் | 21.6★ | 78.3★ | 48.2 | 180.1 | 2145.8 | 4080★ |
| வங்காளதேசம் | -- | - | - | 30.3 | 35.8 | 209.8 |
| சீனா | 25.5 | 78.6 | 117.7 | 114.5 | 291.7 | 1955.4 |
| ஜப்பான் | 1.5 | 31.5 | 96.9 | 82.5 | 3701.7 | 33988.5 |
| இந்தியா | 3.1 | 27 | 58.2 | 80 | 321.1 | 2932.2 |
| தாய்லாந்து | 0.7 | 4.3 | 9.4 | 30.4 | 156.4 | 3247.3 |
| தாய்வான் | - | 2.6 | 12.5 | 7.3 | 448.3 | 8141.9 |
| தென்கொரியா | 0 | 1.5 | 15.9 | 2.3 | 322.5 | 7663.2 |
| இந்தோசீனா | 3.1 | 27 | 58.2 | 80 | 321.1 | 2932.2 |
| பிரேசில் | 7.6 | 31.7 | 46.2 | 135.9 | 619.9 | 3610.3 |
| மெக்சிகோ | 2.5 | 4.3 | 11.7 | 19.3 | 111.2 | 348.4 |
| தென்கொரியா | 1.4 | 34.2 | 45.4 | 115.8 | 611.4 | 2389.2 |
| சையிர் | - | - | 4 | 26.1 | 101.3 | 43.7 |
| எத்தியோப்பியா | - | - | - | 3.7 | 23.9 | 16.9 |
| ★1870, 1913 ரசியா | | | | | | |

1870-க்கு பிந்திய வருடங்களில் சர்வதேசப் பொருளாதாரம் மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிராக மாறி வந்ததையே இது தெளிவாக



எடுத்துக் காட்டுகின்றது. அன்று மிகவும் சுயேச்சையாக இருந்த உற்பத்தி முறைமைகள், இன்று முற்றாக மாற்றி அமைக்கப்பட்டு விட்டது. அன்று நாடுகளின் பணப்பெறுமதியுடன் தொடர்புடைய டாலரிலான இந்த வர்த்தகம், அடிப்படையில் நமக்கு எடுத்துக்காட்ட முனைவது, பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் சமச்சீரான வாழ்க்கை முறைமையைக் கொண்டிருந்தனர் என்பதைத் தான். மக்கள் தமது சொந்த உற்பத்தி சார்ந்து உழைத்து வாழ்ந்த வாழ்வு பறிக்கப்பட்டு, அவை சில நாடுகளின் சொத்தாகியதையும், சொத்தாகி வருவதையுமே எடுத்துக்காட்டுகின்றது. இவை சில பன்னாட்டு நிறுவனங்களின் சொத்தாக மாறி வரும் இன்றைய வரலாற்றில், தேசங்களின் அடிப்படையான தேசியக் கூறுகள் அழிக்கப்படுகின்றது. உலகமயமாதல் ஊடாக, சிலரிடம் உலகின் அனைத்துச் செல்வங்களும் குவிந்து விடுவதையே எடுத்துக் காட்டுகின்றது.

மக்களின் சமச்சீரான வாழ்க்கை எப்படிச் சிதைந்து வந்தது என்பதை, சில நாடுகளின் சராசரியான தனிநபர் வருமானத்தை ஆராய்வதன் மூலம் வரலாற்று ரீதியான உண்மைகள் பளிச்சென்று எடுத்துக்காட்டி விடுகின்றது. 1990 டாலர் பெறுமதியின் அடிப்படையில் தனிநபர் வருமானம் டாலரில்

| | 1820 | 1870 | 1913 | 1929 | 1950 | 1973 | 1992 |
|---|---|---|---|---|---|---|---|
| ஒஸ்ரியா | 1295 | 1875 | 3488 | 3723 | 3731 | 11308 | 17160 |
| பெல்ஜியம் | 1291 | 2640 | 4130 | 4947 | 5346 | 11905 | 17165 |
| பிரான்ஸ் | 1218 | 1858 | 3452 | 4666 | 5221 | 12940 | 19351 |
| ஜெர்மனி | 1476 | 1913 | 3833 | 4335 | 4281 | 13152 | 17959 |
| இங்கிலாந்து | 1756 | 3263 | 5032 | 5115 | 6847 | 11992 | 15738 |
| கனடா | 893 | 1620 | 4213 | 4799 | 7047 | 13644 | 18293 |
| அமெரிக்கா | 1287 | 2457 | 5307 | 6577 | 9573 | 16607 | 21558 |
| சோவியத் | 751 | 1023 | 1488 | 1386 | 2834 | 6058 | 4671 |
| வங்காளதேசம் | 531 | - | 617 | 619 | 551 | 478 | 720 |
| சீனா | 523 | 523 | 688 | 779 | 614 | 1186 | 3098 |
| ஜப்பான் | 704 | 741 | 1334 | 1949 | 1873 | 11017 | 19425 |
| இந்தியா | 531 | 558 | 917 | 665 | 597 | 853 | 1348 |
| தாய்லாந்து | - | - | - | 799 | 848 | 1750 | 4694 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | 1820 | 1870 | 1913 | 1929 | 1950 | 1973 | 1992 |
|---|---|---|---|---|---|---|---|
| தாய்வான் | - | - | 794 | 1107 | 922 | 3669 | 11590 |
| தென்கொரியா | - | - | 948 | 1164 | 876 | 2840 | 10010 |
| இந்தோசீனா | 614 | 657 | 917 | 1207 | 874 | 1538 | 2749 |
| பிரேசில் | 670 | 740 | 893 | 1106 | 1673 | 3913 | 4637 |
| மெக்சிகோ | 760 | 710 | 1467 | 1489 | 2085 | 4193 | 5112 |
| சையிர் | - | - | - | - | 636 | 757 | 353 |
| எத்தியோப்பியா | - | - | - | - | 277 | 412 | 300 |

★ 1920, 1870, 1913 ரசியா

இவை நமக்கு காலனித்துவத்தின் ஆரம்ப காலங்களில், உலகளவில் மக்களிடையே இருந்த பகிர்வு முறைமையை தெளிவாகவே எடுத்துக் காட்டுகின்றது. ஏற்றத்தாழ்வு குறைந்த சமூகங்களாகவே உலகம் இருந்துள்ளது. தமது உழைப்பைச் சார்ந்த வாழ்வு என்பது, பரந்துபட்ட பெரும்பான்மை மக்களின் பண்பாடாகவும் வாழ்வு முறைமையாகவும் இருந்துள்ளது. 1820-களில் மேற்கு மற்றும் மூன்றாம் உலக நாடுகளுக்கு இடையில் உள்ள இடைவெளி இரண்டு மடங்கு மேல் வித்தியாசம் காணப்படவில்லை. இக்காலத்தில் பல நாடுகளில் காலனித்துவம் நிறுவப்பட்ட நிலைமை மற்றும் உள்ளூர் பணப் பெறுமதியின் வேறுபாடுகள், சராசரி வருமான வேறுபாட்டை பொதுவான வாழ்வில் இல்லாத ஒன்றாகவே நாடுகளுக்கு இடையில் கொண்டிருந்தது. ஒரு நாட்டின் சொந்தப் பணப்பெறுமதி, கூலியை அடிப்படையாக கொண்டு மாறுகின்றது. கூலி வீதம் குறைவாக உள்ள போது, மூன்றாம் உலக நாடுகளின் வாழ்க்கை மேற்கு நாட்டுக்கு சமாந்தரமானதாகவும் அல்லது மேலானதாகவும் கூட இருந்தது.

இதை நாம் மேலும் குறிப்பாக பிரதேச ரீதியாக 1990 டாலர் பெறுமதியின் அடிப்படையில் ஆராயமுடியும். சராசரி வருமானம் டாலரில்

| | 1820 | 1870 | 1913 | 1929 | 1950 | 1973 | 1992 |
|---|---|---|---|---|---|---|---|
| மேற்கு ஐரோப்பா | 1292 | 2110 | 3704 | 4385 | 5126 | 12289 | 17387 |
| 9 நாடுகள் | 1205 | 2440 | 5237 | 6653 | 9255 | 16075 | 20850 |
| தெற்கு ஐரோப்பா | 804 | 1108 | 1750 | 2153 | 2021 | 6015 | 8287 |
| கிழக்கு ஐரோப்பா | 772 | 1085 | 1690 | 1732 | 2631 | 5745 | 4665 |



| | 1820 | 1870 | 1913 | 1929 | 1950 | 1973 | 1992 |
|---|---|---|---|---|---|---|---|
| தென் அமெரிக்கா | 679 | 760 | 1439 | 1832 | 2487 | 4387 | 4820 |
| பசிபிக் மற்றும் ஆசியா | 550 | 580 | 742 | 858 | 765 | 1801 | 3252 |
| ஆப்பிரிக்கா | 450 | 480 | 575 | 660 | 830 | 1311 | 1284 |
| மத்திய கிழக்கு | 651 | 895 | 1639 | 1806 | 2238 | 4123 | 5184 |

★ 9 நாடுகள் -அமெரிக்கா, கனடா, நியுசிலாந்து, ஆஸ்திரேலியா...

இவை மேலும் துல்லியமாக சமச்சீர் போக்கு பிரதேச ரீதியாகவே எப்படிக் காணப்பட்டது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இன்று பல நாடுகள் 1820-இல் பெற்ற சராசரி வருமானத்தைவிடவும் மிக மோசமான நிலைக்கு எப்படி மாற்றப்பட்டது என்பதையும், நாடுகளுடன் ஒப்பிட்டு காணமுடியும். குறிப்பாக ஆப்பிரிக்காவின் சில பகுதிகள் மிக மோசமாகவே காலனித்துவவாதிகளால் சிதைக்கப் பட்டுள்ளதை காணமுடியும். உண்மையில் காலனித்துவத்தின் சூறையாடல், அந்த நாடுகளையே திவாலாக்கிவிட்டதை எடுத்துக் காட்டுகின்றது. காலனித்துவ சூறையாடல்கள் மூலம் தான், மேற்கில் செல்வங்கள் குவிந்தன. அதாவது காலனித்துவ மக்களின் சொந்த இழப்புத்தான், மேற்கில் செழிப்பை உருவாக்கியது. இந்த வரலாற்று நீட்சி, சில சமூக அதிர்வுகளின் ஊடாகவே பயணித்தது, பயணிக்கின்றது.

## பொதுவான போக்கில் ஏற்படும் சமூக அதிர்வுகள் உலகையே உலுக்குகின்றன.

முதலாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து சோவியத்தின் உருவாக்கம், உலகளவில் ஒரு அதிர்வை சர்வதேச வர்த்தகத்தில் ஏற்படுத்தியது. காலனிகளில் இருந்து செல்வங்களை அபகரித்து வந்த மேற்கின் நலன்களில், இது ஒரு அதிர்வை உருவாக்கியது. சோவியத் உலகில் மிகவும் தனித்துவமான, சுரண்டலுக்கு எதிரான, உழைக்கும் வர்க்கத்தின் அதிகாரத்தில் இருந்தமையால், மேற்கின் காலனிகள் எங்கும் கடுமையான கொந்தளிப்பான சர்வதேச நிலைக்கு சென்றது. காலனிய மக்கள் தமது சொந்த விடுதலையில் புதிய நம்பிக்கைகளை பெற்று, போராடத் தொடங்கினர். உழைக்கும் மக்களின் சொந்த அதிகாரத்தை கோரும் சர்வதேச நிலைமை, உழைப்பையே சுரண்டி வாழ்ந்த மேற்கின் நவீன போக்கு பலத்த அடியாக இருந்தது. இதேநேரம், மேற்கின் உள்ளும் கடுமையான வர்க்கப் போராட்டங்களை மூலதனம் எதிர்கொண்டது. மேற்கு மக்கள் தமது உழைப்பின் மீதான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமையைக் கோரியதுடன், தமது சொந்த அதிகாரத்துக்காகவும் போராடினர். மற்றைய நாடுகளை சுரண்டுவதையும், காலனிகளை வைத்திருப்பதையும் கூட எதிர்த்தனர். இந்த சர்வதேச பொது நிலைமை, இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் பல காலனிகள் மேற்கில் இருந்து விடுதலை பெறுவதற்கு வழிவகுத்தது. மறுபக்கத்தில் காலனிகளை தமது பொம்மை ஆட்சிகள் மூலம் கைமாற்றிவிட்டு செல்ல வேண்டிய நிலைமை மேற்கு மூலதனத்துக்கு ஏற்பட்டது. காலனிகளைத் தக்கவைக்க சில நாடுகளில் கடுமையான யுத்தத்தில் மேற்கு ஈடுபட்டது. ஒரு கொந்தளிப்பான சர்வதேச நிலைமையை சோவியத்தின் உருவாக்கம், மூலதனத்துக்கு ஏற்படுத்தியது. பரந்துபட்ட ரீதியில் உழைக்கும் மக்கள், இந்த நிலைமையால் கொஞ்சம் மூச்சுவிட்டு, தம்மை ஆசுவாசப்படுத்தினர். இதனால் மேற்கின் ஆதிக்கத்தில் இருந்த சர்வதேச வர்த்தகத்தில் ஒரு கடுமையான நெருக்கடி உருவானது. மேற்கு தொடர்ச்சியான பல இழப்புகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தேசங்களின் தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய உற்பத்திகள், சர்வதேச வர்த்தகத்திலும் எதிர்நீச்சலிட்டது. மேற்கு சார்ந்த சர்வதேச வர்த்தகப் போக்கை மறுதலிக்கும் போக்கு, பொதுவாக உற்பத்தி சார்ந்து எழுந்தது. உலகளவில் ஏற்பட்ட நெருக்கடி உள்நாட்டிலும் பிரதிபலித்தது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் முதலீட்டு மூலதனத்துக்கு லாப வீதங்கள் 1966 இல் 13.4 சதவீதமாக இருந்தது. இது 1976-இல் 9.2 சதவீதமாக குறைந்து போனது. அமெரிக்காவின் நிதி மூலதனம் அல்லாத மூலதனத்தின் இலாபவீதம் 1963-66-இல் 15.5 சதவீதமாக இருந்தது. இது 1967-70-இல் 12.7 சதவீதமாகவும், 1971-74-இல் 10 சதவீதமாகவும், 1978-இல் 9.7 சதவீதமாகவும் வீழ்ச்சி கண்டது. 1965-இல் லாப வீதங்கள் தேசிய வருமானத்தில் 14 சதவீதமாகவும், 1970 -இல் 8.8 சதவீதமாகவும், 1980-இல் 8.2 சதவீதமாகவும், 1982 இல் 6.7 சதவீதமாகவும் வீழ்ச்சி கண்டது. ஏகாதிபத்திய மூலதனத்துக்கு சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் கூட ஒரு தொடர் நெருக்கடி உருவானது.

இதன் விளைவாக உலகளவில் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. ஏகாதிபத்தியத்தின் சர்வதேச ஆதிக்கத்தில் சில கீறல்கள் வீழ்ந்தன. உதாரணமாக 1960-இல் உலக பொருள் உற்பத்தியில் மேற்கு நாடுகளின் பங்கு 71 சதவீதமாக இருந்தது. இது 1980-இல் 60 சதவீதமாக குறைந்தது. இது 1985-இல் 50 சதவீதமாக மாறியது. காலனிகளில் இருந்து விடுதலையும், நேரடி காலனிக்கு பதில்



உருவான பொம்மை ஆட்சிகளும் தேசிய உற்பத்தியில் மேற்கின் பங்கை குறைத்தது. ஆனால் இது நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. சர்வதேச ரீதியாக உழைக்கும் மக்களின் அதிகாரம் தகர்ந்து மறுபடியும் ஏற்பட்ட முதலாளித்துவ மீட்சி, மேற்கத்திய மூலதனத்துக்குக் குதூகலிப்பை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக சர்வதேச ரீதியாகவே உழைக்கும் மக்களின் நாளாந்த போராட்டங்களில், முதலாளித்துவ சித்தாந்தம் நுழைந்ததன் மூலம் நிலைமை மேற்கு மூலதனத்துக்கு சார்பாக மாறியது. அதேநேரம் காலனிகளை பொம்மை ஆட்சிகள் மூலம் கைவிட்ட மூலதனம், சும்மா இருக்கவில்லை. நவகாலனித்துவ, அரைக்காலனித்துவ வழிகளில் உற்பத்தி மீதான ஆதிக்கத்தை மீளப் பெறத் தொடங்கியது. உற்பத்தியை தேசங்கடந்த நிறுவனங்கள் மூலம் நகர்த்தி, உற்பத்தி மீதான ஆதிக்கத்தைப் மீளப் பெறத் தொடங்கினர்.

சம காலத்தில் அதாவது 1960-1982 இடையிலான காலத்தில் சீனா உள்ளடங்கிய ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8 சதவீதத்தில் இருந்து 16.4 சதவீதமாக அதிகரித்தது. இதை அமெரிக்காவின் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 18 சதவீதத்தில் இருந்து 53 சதவீதமாக அதிகரித்தது. உலக ஏற்றுமதியில் 7.5 சதவீதத்தில் இருந்து 17 சதவீதமாக அதிகரித்தது. உண்மையில் இது நமக்கு எதைக் காட்டுகின்றது என்றால், நேரடி காலனித்துவத்தில் இருந்து நாடுகள் விடுவிக்கப்பட்ட போது, தேசிய உற்பத்திகள் முன்னிலைக்கு வந்ததை உறுதி செய்கின்றது. ஆனால் இவை எல்லாம் குறுகிய காலத்திலேயே தலைகீழாகியது. 1960-இல் சோவியத்தில் நடந்த முதலாளித்துவ மீட்சியும், 1980-இல் சீனாவில் நடந்த முதலாளித்துவ மீட்சியும், உலகளவில் தேசிய உணர்வு சார்ந்த சர்வதேசப் போக்கையே தலைகீழாக்கியது. உழைக்கும் மக்களின் கைகளில் இருந்த உற்பத்திகள் மீதான கட்டுப்பாடுகளை இழந்த சர்வதேசப் போக்கு, தேசிய உற்பத்தி மீதான சிதைவை துரிதமாக்கியது. நேரடி காலனிகள் பெற்ற பெயரளவிலான சுதந்திரம், நவகாலனியாகவும் அரைக்காலனியாகவும் ஆழமாக சிதைந்து, ஏகாதிபத்திய தரகு அரசுகளாக வெளிப்படும் போக்கு மூடுமந்திரமின்றி மிக ஆழமாகவே அதிகரித்தது. தேசிய உற்பத்திகளை கைவிடுவது, அதை அழிப்பது, அரசுகளின் தேசிய கொள்கையாக மாறியது. இதையே நவீன தேசியமாக வேறு வரைவிலக்கணம் செய்கின்றனர். 1950-களில் ஏகாதிபத்தியம் இழந்த ஆதிக்கம் படிப்படியாக மீள நிறுவப்பட்டதுடன், தேசியக் கூறுகள் அனைத்தும், சுவடுகள் கூட தெரியாத வகையில் அழித்தொழிக்கப்படுகின்றது. இதுவே இன்று நவீனஉலகமயமாதலின்அடிப்படையானகொள்கையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதை அவர்கள் ஒரே நாளில் செய்துவிடவில்லை. தேசங்களின் தேசிய அடிப்படைக்கு நஞ்சிடுவதை படிப்படியாக மிகவும் திட்டமிட்ட வகையில் தொடர்ச்சியாக, நவீனமாகச் செய்தனர். அதிஉயர் தொழில்நுட்பத்தை இதற்காகவே உற்பத்தி செய்தனர். இதன்போது உற்பத்தி மீதான கட்டுப்பாட்டையும், வரி அறவிடுவதையும் தடுக்கும் சட்டவிதிகளை தேசங்களின் மீது ஏகாதிபத்தியம் திணித்தனர். உழைக்கும் வர்க்கத்தை உயர்ந்த பட்சம் சுரண்ட அனுமதிக்கும் வகையில், சட்டதிட்டங்கள் மாற்றியமைக் கப்பட்டன. இந்த உயாந்தபட்ச நிபந்தனைகளுடன் சுதந்திரமான ஏற்றுமதி மையங்களை 1980-இல் உலகின் பல பாகத்திலும் நிறுவப் பட்டது. சுங்கவரிக்கு உட்படாத ஒரு பிரதேசத்தை உருவாக்கி, அன்னிய நாட்டில் இருந்து வரும் பொருட்களுக்கு மதிப்பேற்றி (குறைந்தது ஒரு மாறுதலுடன்) மீள ஏற்றுமதி செய்தல் இந்த பிரதேசத்தின் குறிப்பான நடவடிக்கையாகும். இப்படி 1981-இல் ஆசியாவில் 24 ஏற்றுமதி மையங்களும், மத்திய கிழக்கு மற்றும் மத்திய தரைக்கடலில் 10-ம், ஆப்பிரிக்காவில் 4-ம், லத்தீன் அமெரிக்காவில் 15-ம், கரிபியன் பிராந்தியத்தில் 4-ம் நிறுவப்பட்டது. இங்கு மனித உழைப்பு வரைமுறையின்றி சூறையாடப்பட்டதுடன், உற்பத்திக்கு வரிவிலக்கு உள்ளாகியது. இப்படி தொடங்கிய நவீன சூறையாடலே, இன்று குறித்த பிரதேசங்களை கடந்து வரைமுறையற்ற சூறையாடலுக்கு மொத்த தேசமே ஏற்றுமதி மையங்களாகிவிட்டது. தேசங்களின் உற்பத்தி ஆற்றலை நலமடித்து, சில பணக்கார நாடுகள் உற்பத்தி ஆற்றலை கட்டுப்படுத்துகின்றன. அதாவது விதையில் மலட்டுத்தனத்தை உருவாக்கி விதை மீதான கட்டுப்பாட்டை கைப்பற்றி வரும் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கம் போல், தேசங்களின் உற்பத்தி ஆற்றலை மலடாக்குகின்றனர். தேசங்களையே வெறும் உற்பத்தி கருவியாக மாற்றுகின்றனர். உற்பத்தி மீதான ஆற்றலை ஏகாதிபத்தியங்கள் தமதாக்கிவிடுகின்றனர்.

உண்மையில் உற்பத்தி மட்டுமின்றி சர்வதேச வர்த்தகமும் ஏகாதிபத்தியமயமாகியதுடன், தேசங்களின் சுயேட்சைத் தன்மை மலடாக்கப்படுகின்றது. 1980-இல் உலகளவில் வணிகத்தில் ஈடுபட்ட நாடுகள் 28 சதவீதமாக இருந்தது. இது 1986-இல் 19 சதவீதமாக குறைந்து போனது. எங்கும் ஒரு வர்த்தக அராஜகத்தை ஏகாதிபத்தியம் உருவாக்கியது. தேசங்களின், தேசிய உற்பத்திகளின் பன்மைத் தன்மையை அழித்து வருவதுடன், ஒற்றைப் பொருளாதாரத்தை திணித்து தேசியத்தின் அடிப்படையான பலத்தையே சிதைத்தனர், சிதைக்கின்றனர். ஒற்றைப் பொருளாதாரத்தைக் கொண்ட தேசங்களின்



தேசிய தலைவிதியை, சர்வதேச சந்தையில் முட்டி மோதப் பண்ணுவதுடன், நாட்டையே அடைமானமாக எழுதி கைநாட்டு போடவைத்து வாங்குகின்றனர்.

தேசங்களின் தலைவிதியை தற்கொலை செய்யத் தூண்டும் வகையில், சர்வதேச வர்த்தகம் என்பது இன்று மிகப் பெரிய ஒன்றாக மாற்றிவிட்டது. அதாவது அடிநிலையில் உள்ள மனிதர்களின் தேவைகளை மறுக்கும் அதிகாரம் தான் வர்த்தகம். இதற்கு வேறு விளக்கம் கிடையாது. பகிர்ந்து உண்ட மனிதன், இன்று ஒருவனையொருவன் குழிபறித்தே உண்கின்றான். இந்த நாகரிகத்தின் பெயர்தான் வர்த்தகம். இதைத்தான் சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் என்று, இன்று அரசியல் பொருளாதாரம் விளக்குகின்றது. நவீன சிந்தனைகள் அனைத்தும் இதற்குள் தான், தம்மைதாம் மலடாக்கி சந்தைப்படுத்துகின்றன. நவீன சிந்தனைகள் என்று உற்பத்தியாகும் தத்துவங்கள், மனித உழைப்பைச் சுரண்டுவதை எதிர்ப்பதில்லை. மாறாக அதன் மேல் தான் பரிணமிக்கின்றது.

மனித உழைப்பைச் சுரண்டி உருவாகும் சர்வதேச வர்த்தகம், மிகப்பெரிய ஒரு பூதமாகவே அடைக்கப்பட்ட போத்தலில் இருந்து வெளிக் கிளம்புகின்றது. 1990-இல் அன்னியச் செலாவணி வர்த்தகம் ஒரு நாளைக்கு 15,00,000 (15 லட்சம்) கோடி டாலராக இருந்தது. இது 1986 உடன் ஒப்பிடும் போது எட்டு மடங்கு அதிகமாகியது. அதாவது 1.87 லட்சம் கோடி டாலராக 1986-இல் காணப்பட்டது. வாங்கி விற்கும் தரகுச் சந்தை மிகப் பிரமாண்டமான ஒன்றாக மாறியது. அத்துடன் வர்த்தகத்தின் மற்றொரு உண்மை பளிச்சென்று வெளி வருவதை தடுத்து நிறுத்தமுடியது. 1995-இல் உலக வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பகுதி பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையில் நடைபெற்றது. இது தொடர்ந்து மூன்று வருடமாக உறுதியான நிலையைப் பேணியது. ஐ.நா அறிக்கை ஒன்றின் படி 1990-இல் பொருட்கள் மற்றும் சேவைத்துறை வர்த்தகம் 3.3 டிரில்லியன் (3,30,000 கோடி) டாலராகும். இதில் 1.1 டிரில்லியன் (1,10,000 கோடி) டாலர் உள்சுற்று தரகு வியாபாரமாகும். தரகு வர்த்தகம் என்னும் உள்சுற்றில் மிகப்பெரும் வர்த்தகக் கொள்ளை அடிக்கப்படுகின்றது. உற்பத்திகள் நேரடியாக மக்களைச் சென்று அடைவதில்லை. இங்கு இடைத் தரகரிடம் பல தரம் அவை கைமாறுகின்றன. இதன் மூலம் பொருட்களின் விலை பல மடங்கால் அதிகரிக்கின்றது. விற்பனைக்கும் உழைப்பற்கும் இடையில், ஒரு சங்கிலித் தொடராகவே கொள்ளை அடிக்கப்படுகின்றது. உழைப்பவனின் கூலிக்கும் விற்பனைக்கும் இடையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடைத்தரகர்களால் ஏற்படும் இடைவெளி, உழைப்பவனின் நுகர்வையே இல்லாது ஒழிக்கின்றது. அதாவது உற்பத்தி செய்தவன், அதைத் தானே நுகர்வது என்ற அடிப்படையான இயற்கை விதியில், சேர்க்கையாக இடையில் ஒரு பெரும் கொள்ளைக் கூட்டம் புகுந்து கொள்கின்றது. உழைப்பவனிடம் இருந்து உற்பத்தியை அபகரித்து, பல இடைத்தரகர்கள் மூலம் மீண்டும் உற்பத்தி செய்தவனுக்கே விற்றுக் கொள்ளையடிப்பவனின் ஒழுக்கமே வர்த்தகமாகின்றது.

இந்த வர்த்தக ஒழுக்கத்தை மார்க்ஸ் புல்லுருவிக் கூட்டம் என்றார். மூலதனத்தில் மார்க்ஸ் ''செய்பண்டவுற்பத்தி செய்முறையில் மூலதனமானது உழைப்பின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது.'' அதாவது உழைப்பாற்றல் செயல் ஈடுபாட்டின் மீது அல்லது பாட்டாளி மீதே ஆதிக்கம் செலுத்துகின்றது. மூலதனம் ஆள்வடிவம் பெற்ற முதலாளி, பாட்டாளி ஒழுங்காக வேலை செய்கின்றானா, போதிய அளவு ஆற்றல் செறிவுடன் வேலை செய்கின்றானா என்பதைக் கவனித்துக் கொள்கின்றது. இப்படி உழைப்பின் மீது மூலதனம் என்ற முதலாளி என்னும் ஆள்வடிவம் பெற்று உழைப்பவனை கட்டுப்படுத்தியது. உழைப்பவனின் உற்பத்தியை முதலாளி எடுத்துக் கொண்டு, அதை வர்த்தகமாக சந்தையில் பல இடைத்தரகர்கள் மூலம் சந்தைப்படுத்தும் போது, பெருமெடுப்பில் ஒரு புல்லுருவிக் கூட்டம் உழைப்பின் மீதான ஆதிக்கத்தையும், சுரண்டலையும் கூட நடத்திவிடுகின்றது.

மார்க்ஸ் மூலதனத்தில் இதை தெளிவுபடவே விளக்கிக் காட்டுகின்றார். ''**விற்பவர் வாங்குபவர் இடையே மரத்தின் சாரத்தை உறிஞ்சிக் கொள்ளும் புல்லுருவிபோல், வணிகர் புகுந்து இரு திறத்தாரும் உற்பத்தி செய்த மதிப்புகளை உறிந்து கொண்டனர். ... போர் என்பது வழிப்பறிக் கொள்ளை; வணிகம் என்பது பொதுவாக ஏமாற்றும் மோசடி**'' என்று அழகுபடவே எதார்த்தத்தை நிர்வாணப்படுத்தி விடுகின்றார். உழைப்பை வழங்கியவனும், உற்பத்தியை அவன் மீள வாங்கும் போது கூட பல அடுக்கில் சுரண்டும் வடிவம் வர்த்தகமாக உள்ளது.

இந்த வர்த்தகமே உலகமயமாகியுள்ளது. 1997-இல் நாளொன்றிற்கான ஏற்றுமதி 2500 கோடியாக, அதாவது வருடம் 6,60,000 கோடி டாலராக காணப்பட்டது. மக்கள் உழைப்பைச் சூறையாடி, தேவைகளையே நுகரும் ஆற்றலை இல்லாதாக்கும் போதே ஏற்றுமதிச் சந்தை வெம்பிவிடுகின்றது. இப்படித்தான் உலக ஏற்றுமதி சந்தை கொடிகட்டிப் பறக்கின்றது. இந்த ஏற்றுமதிச் சந்தை



மீது மிகப் பெரிய வர்த்தகக் கட்டுப்பாட்டைக் கொண்ட அமெரிக்க அரசு 1969-இல் நாளாந்தம் 100 கோடி டாலருக்கு அந்நியச் செலாவணி வியாபாரத்தை செய்தது. இது 1983-இல் 3,400 கோடியாகியது. இது உலக ரீதியில் 7,500 கோடியில் இருந்து 20,000 கோடி டாலராகியது. சர்வதேச ரீதியாக வளர்ச்சியுறும் வர்த்தகத்துக்கான உற்பத்திகளை யாரோ இழந்தேயாக வேண்டும். உண்மையில் உலகளவில் பரந்துபட்ட நிலையில், அடிநிலையில் வாழும் மக்கள் இழந்து உற்பத்தியையும், உழைப்பையும் மற்றவனிடம் விடுவதன் தொடர்ச்சியில் தான் இவை வளர்ச்சியுறுகின்றது.

பிரமிப்பூட்டும் சர்வதேச வர்த்தக ஆக்கிரமிப்புகள், தேசங்களின் மூச்சுகளையே நிறுத்தி வைக்கின்றது. எங்கும் சர்வதேச ரீதியான ஆதிக்கத்தை சில நிறுவனங்கள் கைப்பற்றும் நிலைக்கு, உலகம் மாற்றி அமைக்கப்படுகின்றது. உலகின் உழைக்கும் மக்கள் தமது சொந்த உழைப்பின் மீதான உரிமையை இழக்கும் போது, சர்வதேச ரீதியான பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் உலகமயமாகிவிடுகின்றது. 1986-இல் 866 பன்னாட்டு நிறுவனங்கள், உலகளாவிய உற்பத்தி துறையில் 76 சதவீதத்தை கட்டுப்படுத்தின. பன்னாட்டு நிறுவனத்துக்குள்ளேயான சர்வதேச வர்த்தகம் 30 சதவீதமாக இருந்தது. இதன் தொடாச்சியாக 1989-இல் உலகம் தழுவிய தேசங்கடந்த நிறுவனங்களிடையே இணைப்புள்ளவைகளின் விற்பனை 44,00,000 (44 லட்சம்) கோடி டாலராகியது. இவற்றின் உலகளாவிய ஏற்றுமதியை எடுப்பின் 25,00,000 கோடி டாலராகியது. வரலாறு காணாத மனித அவலங்களின் மேல் ஒரு உலகம் கட்டமைக்கப்பட்டு வருகின்றது. உண்மையில் மக்களின் இழப்பு என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவை. உலகம் தழுவிய அளவில் அடிநிலையில் உள்ள பரந்துபட்ட மக்களின் நுகர்வின் அளவு, மிக ஆழமாக வீழ்ச்சி கண்டு வருகின்றது. 1948-யுடன் ஒப்பிடும் போது, சனத்தொகை, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அளவு, எப்படி மக்களுக்கு எதிராக உள்ளது என்பதைப் பார்ப்போம்.

| | 1950 சதவீதத்தில் | 1998 சதவீதத்தில் |
|---|---|---|
| சனத்தொகை அதிகரிப்பு | 2 | 142 |
| உற்பத்தி அதிகரிப்பு | 9 | 602 |
| ஏற்றுமதி அதிகரிப்பு | 24 | 1769 |

மக்கள் தொகை அதிகரிப்பு 1948-உடன் ஒப்பிடும் போது 1950-இல் 2 சதவீதத்தாலும், 1998-இல் 142 சதவீதத்தாலும் அதிகரித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் உற்பத்தி 9 சதவீதத்தாலும் 602 சதவீதத்தாலும் அதிகரித்தது. ஏற்றுமதி 24 சதவீதத்தாலும் 1769 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. இவை சில உண்மைகளை நிர்வாணமாக்கி விடுகின்றது. உற்பத்தி அதிகரிப்பு சிலரிடம் குவிவதையும், நுகர்வு சில பிரிவினருக்கு மட்டும் அதிகரித்துச் சென்றதையும் காட்டுகின்றது. மக்கள் உற்பத்தி மீதான கட்டுப்பாட்டை இழப்பதுடன், நுகர்வின் அளவை இழப்பதையும் ஏற்றுமதி தெளிவாக்கி விடுகின்றது. வறுமைக்கு மக்கள் தொகை அதிகரிப்பே காரணம் என்று கூறும் அறிவின் புரட்டலுக்கு, இது நேரடியாகவே சவால் விடுகின்றது. 1948 உடன் 1998-யை ஒப்பிடும் போது சனத்தொகை 142 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனால் உற்பத்தி 602 சதவீதத்தால், ஏற்றுமதி 1769 சதவீதத்தாலும் அதிகரித்த இக்காலத்தில், வறுமை எதிர்நிலை அதிகரித்துள்ளது. வறுமைக்கான காரணம் சனத்தொகை அல்ல. மாறாக உற்பத்தி மீதான கட்டுப்பாட்டை மக்கள் இழப்பதும், மக்களின் நுகர்வு ஏற்றுமதியாவதுமே அடிப்படையான சமூகக் காரணமாகும். மேலைநாட்டினர் பயன்படுத்தும் 12000 பொருட்களில் 8,000 வெப்பமண்டல நாடுகளில் இருந்து இறக்குமதி செய்பவையாக உள்ளது. செல்வத்தை சிலர் குவிப்பது மட்டுமல்ல, அதை முழுமையாக சிலர் நுகர்வதும் கூட உலகமயமாதலின் உள்ளடக்கமாகும். இந்த உள்ளடக்கத்தை ஆழமாக உலகமயமாக்குவதே, சுதந்திரம் மட்டுமின்றி ஜனநாயகமாகவும் உள்ளது.

இந்த ஏற்றுமதி, நுகர்வும் எப்படி மக்களிடம் இருந்து சூறையாடப்படுகின்றது என்பதை உலகின் மிகவறிய நாடுகள் ஊடாகப் பார்ப்போம். ஜினேபசு (கிழக்காப்பிரிக்க நாடு) என்ற நாட்டின் தேசிய வருமானத்துடன் ஒப்பிடும் போது அவர்களின் கடன் 417 சதவீதமாக இருந்தது. மாட்டினிக்கின் (கரிபியன் தீவு) கடன் 240 சதவீதமாகவும், லாவோஸ்சின் (Loas) கடன் 205 சதவீதமாகவும் இருந்தது. இப்படி மிக அதிகக் கடன் உள்ளதும், அதிக வறுமையில் உழலும் 49 நாடுகள் உலகில் இருந்தன. ஆனால் 2000 ஆண்டில் உலகளவிலான மொத்த முதலீடு 1,10,000 கோடி டாலராக இருந்த அதேநேரம், 520 கோடி டாலர் மட்டுமே (0.5 சதவீதம் மட்டுமே) இந்த நாட்டில் முதலிடப்பட்டது. ஆனால் இந்த 49 நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 50 சதவீதம் கனடா, அமெரிக்கா, ஜப்பானுக்குச் செல்ல மிகுதி ஐரோப்பாவுக்குச் செல்லுகின்றது. நாட்டின் கடன் சொந்த தேசிய வருமானத்தையும் தாண்டிச்



சென்றுள்ள நிலையில், வட்டி மற்றும் மீள்கொடுப்பனவுக்காக மக்களிடம் அடிப்படைத் தேவைகளைப் பிடுங்கி (பறித்து) ஏற்றுமதியாகின்றது. அதை நுகர்பவர்கள் மேற்கத்தியவராக இருப்பது மட்டுமின்றி, இந்த ஏற்றுமதி வர்த்தகத்தை சிலர் கட்டுப்படுத்தி அதன் மூலம் செல்வத்தைக் குவிப்பவர்களும் மேற்கத்தியவரே. இதன் மூலம் இந்த நாடுகளில் வறுமை பெருக்கெடுக்கின்றது. மக்களின் நுகர்வின் அளவு ஏற்றுமதிக்காக அன்றாடம் குறைந்து செல்லுகின்றது.

இதன் மூலம் உழைப்பின் மீதும், உற்பத்தி மீதான கட்டுப்பாடுகளும் மேற்கின் கைகளில் குவிந்து செல்லுகின்றது. உதாரணமாக 1995-2002-கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்கா உலக பொருளாதாரத்தின் பங்கு 323 சதவீதமாக அதிகரித்தது. அதேநேரம் உலகெங்கும் இருந்து உள்நாட்டில் உற்பத்தியின் குவிப்பு அமெரிக்காவில் 96 சதவீதமாக அதிகரித்தது. எங்கும் ஒரு அராஜகத்தை உருவாக்குவது, உலகமயமாதலின் உள்ளடக்கமாகும். மேற்கு வெளியில் உள்ள நாடுகளின் வீழ்ச்சி துரிதகதியில் நடக்கின்றது. உலகில் தனிமனித வருமானம் 900 டாலருக்கு குறைந்த நாடுகளின் எண்ணிக்கையை 1971 உடன் ஒப்பிடும் போது, 2001-இல் இரண்டு மடங்கு அதிகமாகியது. இந்த நாடுகளின் கடனோ 15,000 கோடி டாலராகும். ஆகக்குறைந்த நடுத்தர தனிநபர் வருமானம் 278 டாலராகும். அதேநேரம் பணக்கார நாடுகளின் தனிநபர் வருமானம் 25,000 டாலரை விட அதிகமாகும். இந்த நாடுகளில் 74 சதவீதமான மக்களுக்கும் மருத்துவ வசதி கிடையாது. 50 சதவீதமான மக்களுக்கு பாடசாலை வசதி கிடையாது. 43 சதவீதமான மக்களுக்கு குடிக்கும் தண்ணீர் வசதி கிடையாது. இந்த மக்களின் சராசரி ஆயுள் 51 வயதாகும். இப்படி மக்களின் பணங்களின் மேல்தான் உலகமயமாதல் தன்னை செழுமைப்படுத்துகின்றது. இந்த உலகமயமாதல் உலகில் 10 சதவீதமான மக்கள் உலக வருமானத்தில் ஒரு சதவீதத்தைக் கொண்டு, சுதந்திரம் பெற்றுக் கொடுத்த ஜனநாயகத்தில் வறுமையை அனுபவிக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 12. மனித உழைப்பு சார்ந்த உற்பத்திகள் மீது பன்னாட்டு நிறுவனங்களின் ஏகபோகம்.

தேசங்களின் சுயேச்சையான வாழ்வு என்பது எங்கும் எப்போதும், மக்களின் சொந்த உற்பத்தியில் தங்கிநிற்பதில் சார்ந்துள்ளது. மக்களின் அடிப்படையான சமூகத் தேவையை சொந்த நாட்டில் உற்பத்தி செய்யும் போதே, தேசத்தின் உட்கூறுகள் நீடித்து நிலைத்து நிற்கமுடியும். இதுவே தேசியப் பண்பாடுகளையும், தேசியக் கலாச்சாரத்தையும், தேசத்தின் தனித்துவத்தையும் பாதுகாக்கத் தேவையான அடிப்படையாகும். சொந்த தேசிய பலத்தில், எந்த நெருக்கடியையும் எதிர்கொள்ளும் பலத்தை இது தேசங்களுக்கு வழங்குகின்றது. அனைத்து வகையான காலனிய வடிவங்களும் இந்தக் கூறுகள் வளர்ச்சியுறுவதை தடுத்து நிறுத்தியிருந்தன. மாறாக ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதை நாடகவும், ஏகாதிபத்தியத்தின் தேவைகளை உற்பத்தி செய்து வழங்கும் ஒரு இழிநிலை நாடுகளாக காலனிகள் நீடித்திருந்தன.

சோவியத் புரட்சியும் அதை தொடர்ந்து தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தை சோவியத் நிறுவியதைத் தொடர்ந்து, காலனிய நாடுகள் தமது சொந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் உத்வேகம் பெற்று போராடத் தொடங்கின. இதன் விளைவாக முதலாம், இரண்டாம் உலக யுத்த முடிவில், உலகில் பல காலனிகள் நேரடிக் காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்றன. இதை தொடர்ந்து தேசிய பொருளாதாரத்தின் மீதான கவனம் குறிப்பானதாக மாறியதால், சுயேட்சையான நாடுகள் தேசிய பலத்தைப் பெறத்



தொடங்கின. ஏகாதிபத்தியத்தை சார்ந்து நிற்றல் என்பதைத் தவிர்த்து, சொந்தக் காலில் நிற்க முனைந்தன. இதற்கு சோவியத் மற்றும் சீனப் புரட்சிகள் அக்கம்பக்கமாகவே ஊக்கம் அளித்தன. பரஸ்பர பொருளாதார உதவிகள், இதை மேலும் வளப்படுத்தின.

இந்த புதிய சர்வதேசப் போக்கை ஏகாதிபத்தியம் சகித்துக் கொள்ளவில்லை. திட்டமிட்டே தேசியக் கூறுகளை அழிக்கும் வகையில், உற்பத்தி மீதான சீரழிவுகளை திட்டமிட்டே உருவாக்கினர். நவீன உற்பத்தி என்ற பெயரில், இயற்கைக்கு மாறான உற்பத்தி முறைமைகளைத் திணித்தனர். உதாரணமாக விவசாயத்தில் இயற்கை உற்பத்தி முறைமை என்ற பொதுவான உற்பத்தி முறைமையை, முற்றாகவே மாற்றி அமைத்தனர். உரங்கள், கிருமிநாசினிகள், சில விதைகளை கொண்ட பெரு உற்பத்தி என்று தொடங்கிய விவசாயம், தேசங்களின் சுயேச்சைப் போக்கை முற்றாகவே அழித்துவிட்டது. இன்று விதையைக் கூட, ஏகாதிபத்தியம் தந்தால் தான் விதைக்க முடியும் என்ற நிலைமை உருவாகி வருகின்றது. இப்படி தேசியக் கூறுகளின் மேலான ஏகாதிபத்திய ஆதிக்கத்தை, திட்டமிட்ட வகையில் பெறத் தொடங்கியது. அதேநேரம் தேசத்தின் அடிப்படையான தேசியக் கூறுகளை, சுவடுகள் கூடத் தெரியாத வகையில் அழித்தொழித்து வருகின்றனர்.

இப்படித் தொடங்கிய தேசிய அழித்தொழிப்புக் கொள்கை மூலம், தேசங்களின் சுயேட்சைப் பண்புகள் சிதைக்கப்பட்டு வருகின்றது. முன்பு காலனிகள் ஏகாதிபத்தியங்களுக்கான தேவைகளை உற்பத்தி செய்யும் ஒரு உறுப்பாகவே இருந்தது. அதையே இன்று வேறுவடிவில் மாற்றிவிட்டனர். இன்று ஏகாதிபத்தியத்தின் தேவையை பூர்த்தி செய்யும் பன்மைக் கூறில் ஒன்றை மட்டும் உற்பத்தி செய்யும் வகையில், தேச உற்பத்திகளையே முழுமையாக மாற்றிவிட்டனர். குறித்த உற்பத்தியை சந்தையில் ஏகாதிபத்தியம் தான் விரும்பிய விலையில் வாங்குவதுடன், நாடுகளின் திவாலை பிரகடனம் செய்யும் உரிமையை கத்தி விளிம்பில் நிறுத்தி விடுகின்றனர். இவற்றை நாம் விரிவாக ஆராய்வோம்.

நேரடி காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்றதைத் தொடர்ந்து, தேசிய உற்பத்திகள் நாட்டின் பிரதான போக்காக இருந்தது. தவிர்க்க முடியாது அரசின் தேசிய முதலீடுகள் பெருகின. தேசிய தனியார் முதலீடுகளும் பெருகின. உதாரணமாக பின்தங்கிய நாடுகளின் உள்நாட்டு உற்பத்தி *1950-1985*-க்கும் இடையிலான *35* வருடங்களில் *5.4* மடங்காக உயர்ந்தது. பின்தங்கிய நாடுகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்றுமதியின் பங்கு 4.7 சதவீதத்தில் இருந்து 12.7 சதவீதமாக அதிகரித்தது. இந்தப் போக்கை ஏகாதிபத்தியம் தொடர்ந்து அனுமதிக்கத் தயாராக இருக்கவில்லை. ஏகாதிபத்தியம் வர்த்தக காப்புத் தடையை முன்வைத்தன் மூலம், திட்டமிட்டவகையில் ஏற்றுமதியை வீழ்ச்சி காணவைத்தது. ஏற்றுமதி அதிகரிப்பு வீதம் 1970 இல் 13 சதவீதமாக இருந்தது. இது 1980-இல் 8 சதவீதமாக வீழ்ச்சி கண்டது. மூன்றாம் உலக உற்பத்தி மீதான விலையை குறைத்தது. அதேநேரம் ஏகாதிபத்தியம் தனது சொந்த உற்பத்தி மீதான விலையை உயர்த்தியது. 1979-ஆம் ஆண்டுடன் 1988-ஆம் ஆண்டை ஒப்பிடும் போது, ஆலை உற்பத்தி பொருட்களின் விலை 33 சதவீதம் உயர்ந்த அதேநேரம், பின்தங்கிய நாடுகளின் ஆதாரப் பொருட்களின் விலை 2.7 சதவீதமே உயர்ந்தது.

ஏகாதிபத்திய ஆலைகளுக்கு மூன்றாம் உலக நாடு வழங்கிய மூலப் பொருட்களின் விலையை உயரவிடாது தடுத்துநிறுத்திய ஏகாதிபத்தியம், தனது உற்பத்திக்கான விலையை உயர்த்தியது. இப்படிச் சர்வதேச உற்பத்தியில் ஒரு நெருக்கடியை உருவாக்கியதன் மூலம், பின்தங்கிய நாடுகள் பற்றாக்குறையில் சிக்கிக் கொண்டது. இதன் மூலம் தன்னிடமே கடன் வாங்க நிர்ப்பந்தித்தனர். 1980-க்கும் 1990-க்கும் இடையில் உலகில் முக்கிய 10 பொருட்களின் ஏற்றுமதி விலை, 25 சதவீதத்தால் குறைந்து போனது. 1980-களில் சர்வதேச நிலைமை முற்றாகவே ஏகாதிபத்தியத்துக்கு சார்பாக மாறத் தொடங்கியது. பின்தங்கிய நாடுகளின் மூலப்பொருட்கள் சந்தையில் தொடர்ந்து விலைச் சரிவை சந்தித்த அதேநேரம், ஏகாதிபத்திய உற்பத்திகள் விலை அதிகரித்துச் சென்றது. மூன்றாம் உலக நாடுகளின் மூலப்பொருட்களை ஆதாரமாக கொண்டு ஏகாதிபத்தியம் உற்பத்தி செய்த பொருட்களின் விலை அதிகரித்ததால், ஏகாதிபத்திய லாப வீகிதம் என்றுமில்லாத அளவில் அதிகரித்தது. இந்த லாப அதிகரிப்பே, பின்தங்கிய நாடுகளை அடிமைப்படுத்திய கடனாக மீளச் சென்றது. உண்மையில் மூன்றாம் உலக நாடுகளுக்கு சேர வேண்டிய தொகையையே, ஏகாதிபத்தியம் சர்வதேச வர்த்தக மோசடிகள் மூலம் அபகரித்து, அந்த நிதியைக் கொண்டே பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகளை மீளமுடியாது அடிமைப்படுத்தியுள்ளனர்.

ஏகாதிபத்தியத்தின் வர்த்தக மோசடிகள், தேசங்களின் ஏற்றுமதி என்ற குறிக்கோளைக் கொண்ட தேசிய உற்பத்தி முறைமையையே, சடுதியான நெருக்கடியில் சிக்கவைத்தனர். உற்பத்தி விலைக்கும் விற்பனை விலைக்கும் இடையில் உள்ள இடைவெளி அகன்று



சென்றது. உற்பத்திக்கான செலவைக் கூட மீட்க முடியாது போன நிலைமை, தேசிய உற்பத்திகளை கைவிடுதலை துரிதமாக்கியது. இது தேசிய உற்பத்தியாளனின் கடனை உயர்த்தியது. ஏகாதிபத்திய உற்பத்திகள் உள்ளூர்ச் சந்தையை கைப்பற்றத் தொடங்கியது. தரகு முதலாளித்துவம் முழு வீச்சில் ஆதிக்கம் பெறத் தொடங்கியது. சர்வதேச ரீதியாக ஏகாதிபத்தியம் தனது வர்த்தக ஆதிக்க உரிமையை முழுமையாக தீர்மானிக்கும் வகையில் தேசங்களின் சுயேச்சை கூறுகளையே அழித்தொழித்தது. மறுபக்கத்தில் பொருட்களை ஏற்றியிறக்கும் சர்வதேச கடல் போக்குவரத்து மீதான ஆதிக்கத்தை ஏகாதிபத்தியம் வைத்திருந்ததன் மூலம், மூன்றாம் உலக நாடுகள் தமது பொருட்களை சர்வதேச சந்தையில் விற்கவே, கையேந்த வேண்டிய நிலை உருவானது. சரக்கை ஏற்றியிறக்க அதிக கட்டணத்தை ஏகாதிபத்தியம் கோரின. இதன் மூலம் மேலும் தேசிய உற்பத்திகள் கடுமையான நெருக்கடியில் சிக்கி சிதையத் தொடங்கின.

1979-இல் உலக முழுவதும் இருந்த சரக்குக்கப்பலில் ஒன்பது சதவீதம் மட்டுமே மூன்றாம் உலக நாடுகளுக்கு சொந்தமாக இருந்தது. இதே நேரம் 1978-இல் ஏகாதிபத்தியம் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டணமாக 2700 கோடி டாலரை மூன்றாம் உலக நாடுகளிடம் அறவிட்டது. இது இறக்குமதியின் மொத்த மதிப்பில் 9 சதவீதமாக இருந்தது. இதைவிட காப்பீடு, சிப்பம் கட்டுதல், விற்பனை ஏற்பாடு என்று ஒரு தொகை ஏகாதிபத்தியத்துக்குச் சுற்று வழியாக சென்றது. ஒரு பொருளின் மதிப்பில், பெரும் பகுதி பொருட்களைக் கொண்டு செல்லுதல் மற்றும் இடைத்தரகர்களுக்கு மூன்றாம் உலக நாடுகள் வழங்க நிர்பந்திக்கப்பட்டது. தேசியப் பொருளாதாரத்தைச் சொந்த மக்களின் நலனுக்குப் புறம்பாக, ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்ட போக்கு, கடுமையான சர்வதேச வர்த்தக நிபந்தனைக்குள் சிக்கி நெருக்கடிக்குள்ளாகியது. படிப்படியாக உலகளாவிய வகையில் தேசிய உற்பத்திகள் மேல் ஏகாதிபத்திய நிர்ப்பந்தங்களை உருவாக்கியது. பல உற்பத்திகளின் சந்தை அடிப்படைகளையே இல்லாதாக்கியது. தேசிய உற்பத்திகளுக்குப் போட்டியாக, ஏகாதிபத்திய உற்பத்திகளை சந்தையில் கொண்டு வந்து குவிக்கத் தொடங்கினர். தரகு முதலாளித்துவ வர்த்தகம் தேசிய உற்பத்திகளின் கழுத்தில் பிடித்தே தூக்கி நெரித்தது. ஏகாதிபத்திய பொருட்கள் சந்தையை ஆக்கிரமித்தது மட்டுமின்றி, தேசிய உற்பத்திகளை அழித்து விழுங்குவது அன்றாட நிகழ்ச்சி நிரலாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மனிதத் தேவையை மறுக்கும் உற்பத்திக் கொள்கை

மனிதனின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யும் உணவு முதல் அனைத்துப் பொருட்களையும் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் கட்டுப்படுத்தத் தொடங்கியுள்ளன. அத்துடன் ஒரு உற்பத்தியில் காணப்படும் இயற்கையின் பன்மையை அழித்து, ஒருமையான, ஒற்றை உற்பத்தியை நோக்கி மாற்றி அமைக்கின்றனர். ஒரு பொருளின் பன்மையான கூறுகள் சார்ந்த இயற்கைத் தெரிவை, மற்றவன் உபயோகிக்கக் கூடாது என்ற தனிமனித நலன் சார்ந்து இயற்கையிலேயே இருந்து ஒழித்துக் கட்டப்படுகின்றது. 1995-இல் 15 பன்னாட்டு நிறுவனங்கள் உலகளவில் மனிதத் தேவையைப் பூர்த்தி செய்த 20 முக்கியமான அடிப்படை பொருளில், பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தின. இப்படிக் கட்டுப்படுத்திய சில பொருட்களையும், அதன் அளவையும் நாம் பார்ப்போம்

| | |
|---|---|
| கோதுமை | 90 சதவீதம் |
| அரிசி | 70 சதவீதம் |
| தேயிலை, காபி | 80 சதவீதம் |
| மரம் | 90 சதவீதம் |
| செம்பு | 80 சதவீதம் |
| எண்ணெய் | 60 சதவீதம் |
| இரும்புத்தாது | 90 சதவீதம் |
| அன்னாசிப்பழம் | 90 சதவீதம் |

இதே போன்று 1989-யை அடிப்படையாக கொண்டு சில உற்பத்திகளை பார்த்தால், 3 முதல் 6 பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் கீழ் உள்ள உற்பத்தியைக் கட்டுப்படுத்தின.

| | |
|---|---|
| கோதுமை | 85 - 90 சதவீதம் |
| சர்க்கரை | 60 சதவீதம் |
| காபி | 85 - 90 சதவீதம் |
| கொக்கோ | 85 சதவீதம் |
| தேயிலை | 80 சதவீதம் |
| வாழைப்பழம் | 70 - 75 சதவீதம் |
| அன்னாசிப்பழம் | 90 சதவீதம் |
| வன உற்பத்தி பொருட்கள் | 90 சதவீதம் |
| பருத்தி | 85 - 90 சதவீதம் |
| சணல் | 85 - 90 சதவீதம் |



மனிதனின் பிரதான உணவை ஒரு சில நிறுவனங்கள் 15 வருடங்களுக்கு முன்பாகவே பெரும் பகுதியை தமது சொந்தக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன. இந்த நிறுவனங்களின் லாப நலனுக்கு உகந்த உணவே மனித உணவாகிவிட்டது. இவை ஒரே நாளில் உருவாகிவிடவில்லை. 1980-களில் ஒரு சில பன்னாட்டு நிறுவனங்கள் உலகச்சந்தையை பெரும்பகுதியைக் கட்டுப்படுத்தின. உதாரணமாக 60 சதவீதமான சர்க்கரை (சீனி) மற்றும் பாஸ்போட்டையும், 70 முதல் 75 சதவீதமான அரிசி, வாழைப்பழம், இயற்கை ரப்பர், எண்ணெய் மற்றும் ரின்னையும், 80 முதல் 90 சதவீதமான கோதுமை, காபி, சோளம், கொக்கோ, மூங்கில், பருத்தி, சணல், புகையிலை, செப்பு, இரும்புத்தாது மற்றும் பாக்சைட் போன்றவற்றைக் கட்டுப்படுத்தியிருந்தன. சர்வதேச ரீதியாக இயற்கை மீதான ஆதிக்கத்தை சில பன்னாட்டு நிறுவனங்கள் பெறுவதன் மூலம், மக்களின் மேலான தமது உற்பத்தி சர்வாதிகாரத்தை நிறுவுகின்றன. மனிதன் எதை எப்படி உண்ண வேண்டும் என்பதை, தனது லாப நட்ட கணக்குள்ளாக்கி சர்வாதிகாரமாகவே உலகெங்கும் திணிக்கின்றான். மக்களின் அடிப்படைத் தேவைகளை எந்தளவில் எதை எப்படி வழங்குவது என்ற முடிவு, சில நிறுவனத்தின் குறித்த நலன் சார்ந்த விடையமாகி விட்டது. மனித உழைப்பை எங்கு, எப்போது, எதனால், எப்படி, எந்த நிபந்தனையில் வழங்க வேண்டும் என்ற விரிந்த தளத்தில் ஒரு பாசிச சர்வாதிகாரத்தை பொருளாதாரத் துறையில் உருவாக்கி அதுவே ஆட்சிவடிவமாக்கி விடுகின்றனர்.

இப்படி மனித வாழ்வு சார்ந்த பொருட்களை உலகளவில் சில நிறுவனங்கள் பெருமெடுப்பில் கட்டுப்படுத்தத் தொடங்கியுள்ளன. இதை 100 சதவீதமாக கட்டுப்படுத்தவும், பன்மையான உற்பத்திக் கூறுகளை அழித்து ஒரேவிதமான உற்பத்தியை உருவாக்குவதே, உலகமயமாதல் திட்டத்தின் இணைபிரியாத ஒரு அங்கமாகும். எத்தனையோ பன்மையான இனங்களாக உள்ள இயற்கையை, வக்கிரமாகவே அழிக்கப்படுவதையே சுதந்திரம், ஜனநாயகம் என்று இன்று போற்றப்படுகின்றது. இதுவே இன்றைய உலகமயமாதலின் உலகளாவிய சமூக ஒழுக்கமாகிவிட்டது. சூறையாடுவதும், அழிப்பதும், திணிப்பதும் ஜனநாயகமாகிவிட்ட நிலையில், இதையே சுதந்திரமானதாக காட்டுவதே மயிர்பிளக்கும் ஒரு சமூக விவகாரமாகியுள்ளது.

கனடாவைச் சேர்ந்த 'கார்க்கில்' என்ற பன்னாட்டு நிறுவனம், உலகளாவிய தானிய வர்த்தகத்தில் 60 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் மொத்த வர்த்தகமோ பாகிஸ்தானின் தேசிய வருமானத்தையும் தாண்டியது. உலகளாவிய மனிதத் தேவையினைப் பூர்த்தி செய்யும் தானியத்தில் 60 சதவீதத்தை ஒரே நிறுவனம் கட்டுப்படுத்தி வைத்துள்ளது. இப்படிக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் உரிமையைத் தான் சுதந்திரம், ஜனநாயகம் என்கின்றனர். இங்கு மொத்த சமூகத்துக்கு எதிரான தனிமனித உரிமைதான், சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் வக்கரித்துக் கிடக்கின்றது. இந்த நிறுவனம் இது மட்டுமின்றி தானிய உற்பத்திக்கான விதைகளையும் கூட பெருமெடுப்பில் கட்டுப்படுத்துகின்றது. இயற்கையில் மனிதன் உருவானது முதல் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியில், மனிதன் கண்டறிந்த அறிவுகள், தனிப்பட்ட ஒரு வர்த்தக நிறுவனத்தின் தனிப்பட்ட சொத்தாகி வருவதையே ஜனநாயகம் என்கின்றோம். பல அறிவியல் கூறுகள் இரவோடு இரவாகவே அழிக்கப் படுவதையும் நாங்கள் சுதந்திரம் எனப் போற்றுகின்றோம். உலகின் முதன்மையான சரக்குகளின் சந்தையை, ஆறு வர்த்தகர்கள் கட்டுப்படுத்துகின்றனர். இதில் ஒன்று தான் கார்க்கில். இந்த நிறுவனம் பருப்பு வர்த்தகத்தில் 60 சதவீதத்தைக் கட்டுப்படுத்து கின்றது. இந்த நிறுவனம் விற்கும் காபியின் அளவுக்கு, இந்த நிறுவனத்துக்கு காபியை வழங்கும் எந்த ஆப்பிரிக்க நாட்டினதும் தேசிய வருமானம் அதிகமானது அல்ல.

### சுயமான சமூக உற்பத்திக்குச் சாவுமணி

மனித அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதான உற்பத்திகளை ஒரு சில நிறுவனங்கள் கட்டுப்படுத்தும் போது, அவை பெரும்பாலான நாடுகள் மேலான ஆதிக்கத்தைப் பெற்று விடுகின்றன. குறித்த நாட்டின் பிரதான வருவாயாக குறித்த ஒரு பொருள் உள்ள போது, அதை அன்னிய ஒரு நிறுவனம் அல்லது ஒரு சில நிறுவனம் கட்டுப்படுத்தும் போது, நாடே குறித்த நிறுவனத்தின் அடிமையாகி விடுகின்றது. இதனடிப்படையில் தான் பன்மையான பொருளாதார உற்பத்திக் கூறுகளை அழித்து, ஒற்றைப் பொருளாதாரத்தில் தங்கி நிற்கும் நிலைமையை ஏகாதிபத்தியம் திணிக்கின்றது. குறித்த ஒரு பொருளின் ஏற்றுமதியே, நாட்டின் அனைத்துத் தேவைக்குமான இறக்குமதிக்கான வளத்தை வளங்கும் நிலைமையை ஏகாதிபத்தியம் உருவாக்கின்றது. ஒரு நாட்டின் திவாலை எப்படி அறிவிப்பது என்பதையே, ஏகாதிபத்தியமும் இறுதியாகப் பன்னாட்டு நிறுவனங்களும் தனது கையில் எடுத்துக் கொள்கின்றன. இந்தவகையில் பல நாடுகளின் ஒட்டுமொத்த ஏற்றுமதியே ஒற்றைப் பொருளாதாரமாகியதுடன், அது ஏகாதிபத்திய சந்தைத் தேவைகளை பூர்த்தி செய்வதாக மாறியுள்ளது. உதாரணமாக பார்ப்போம்.

| | |
|---|---|
| சிம்பாவே | 71 சதவீதமான செப்பு |
| புரண்டி | 73 சதவீதமான காபி |
| கினி பசோ | 74 சதவீதமான கறுப்பு காயூ |
| யேமன் (மத்திய தரைக்கடல்) | 84 சதவீதமான பெட்ரோல் |

இப்படி ஒற்றைப் பொருளாதாரத்தில் தேசிய வருமானத்தையுடைய வகையில், உலகில் பலநாடுகள் உருவாக்கப்பட்டுவிட்டது, உருவாக்கப்படுகின்றது. குறிப்பாக இப்படி உருவாகியுள்ள 22 நாடுகளின் தேசிய வருமானத்தை விட, அந்த நாடுகளின் கடனின் தொகை அதிகமாகும். பன்மையான பொருளாதார வளங்களை அழித்து உருவாக்கப்படும் ஒற்றைப் பொருள் சார்ந்த உற்பத்தி முறைமை ஏகாதிபத்தியம் என்ற இயந்திரத்தின் ஒரு கூறாகவே நாட்டை மாற்றி விடுகின்றது. ஒற்றைப் பொருளாதார உற்பத்திகளை நம்பி நாடுகள் இருக்கும் போது, நாடுகளின் தலைவிதியை ஏகாதிபத்தியம் தனது கையில் எடுத்துக் கொள்கின்றது. இந்த வகையில் ஏற்றுமதியாகும் பொருட்களின் விலையை, ஏகாதிபத்தியம் சுயேட்சையாகவே கட்டுப்படுத்துகின்றது. இதைப் பயன்படுத்தி மூன்றாம் உலக நாடுகளின் ஏற்றுமதியாகும் பொருட்களின் விலையை, என்றுமில்லாத வகையில் சர்வதேச சந்தையில் திடீர் சரிவை உருவாக்கினர், உருவாக்குகின்றனர். இதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தியதுடன், விலைச் சரிவு மூலம் உயர்ந்த தரத்திலான, அதிகளவிலான நுகர்வை மேற்கு பெற்றுக்கொண்டது, பெற்றுக் கொள்கின்றது. மறுபக்கத்தில் மேற்கின் நலனையே பூர்த்தி செய்யும், நவீன அடிமைகளை உருவாக்கி விடுகின்றது. 1980-க்கும் 1990-க்கும் இடையில், உலகில் மிக முக்கிய 10 பொருட்களின் ஏற்றுமதி விலை 25 சதவீதத்தால் குறைந்து போனது. 1980-க்கும் 1989-க்கும் இடையில் மூன்றாம் உலக நாடுகளின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் சர்வதேச விலை தொடர் வீழ்ச்சியைக் கண்டது. இந்த விலை வீழ்ச்சியை சதவீதத்தில் பார்ப்போம்.

| | |
|---|---|
| கோதுமை | -17 சதவீதத்தால் விலை குறைந்தது |
| பருத்தி பஞ்சு | -32 சதவீதத்தால் விலை குறைந்தது |
| காபி | -30 சதவீதத்தால் விலை குறைந்தது |
| சீனி | -64 சதவீதத்தால் விலை குறைந்தது |
| வெள்ளீயம் | -57 சதவீதத்தால் விலை குறைந்தது |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| ஈயம் | -28 சதவீதத்தால் விலை குறைந்தது |
| பெட்ரோல் | -53 சதவீதத்தால் விலை குறைந்தது |
| இரும்பு | -17 சதவீதத்தால் விலை குறைந்தது |

இப்படி சர்வதேசச் சந்தையில் மனிதத் தேவையின் ஆதாரப் பொருட்களின் விலையை ஏகாதிபத்தியம் சரிய வைத்ததன் மூலம், மூன்றாம் உலக நாடுகளின் ஏற்றுமதி வருவாய் பாதாளத்தை நோக்கிச் சென்றது. இதன் மூலம் அந்த நாடுகளின் அடிமைத்தனத்தையும் சரணடைவையும் நிபந்தனை இன்றிப் பெறும் உரிமையை மேற்கு பெற்றுக் கொண்டது. உண்மையில் பொருட்களின் விலைச்சரிவு, மூன்றாம் உலக நாடுகளின் நுகர்வோருக்கு கிடைக்கவில்லை. சந்தையில் பொருட்களாகவே நுகரப்படும் போது, விலைச் சரிவை அது கொண்டு இருக்கவில்லை. மாறாக விலை அதிகரிப்பே காணப்பட்டது. மறுபக்கத்தில் ஏற்றுமதி மூலமான விலை வீழ்ச்சியும், உற்பத்தி பின்னான நுகர்வில் விலை அதிகாரிப்புக்கும் இடையில், சந்தை விலையைக் கட்டுப்படுத்தியதன் மூலம், மூலதனத்தின் பெரும் கொள்ளையாக இது மாறியது. இன்னுமொரு பக்கத்தில் விலைச்சரிவு மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்திக்கான மனிதக் கூலியை குறைக்க நிர்ப்பந்தித்தது. இதிலும் கூட ஒரு வரைமுறையற்ற கொள்ளை படிந்து காணப்படுகின்றது. மனித உழைப்பைச் சூறையாடும் வடிவங்கள், பாசிச வழிகளில் தன்னை புடமிட்டுக் கொண்டது. சர்வதேச ரீதியாக விலை குறைக்கப்பட்ட பொருட்கள், மூன்றாம் உலக நாடுகளில் விலை அதிகரிப்பையே எதிர்மறையில் கொடுத்தது. அக்கம் பக்கமாக விலை குறைவு, கூலி குறைப்பை உருவாக்கியது. இதனால் மூன்றாம் உலக நாடுகளில் நுகர்வின் அளவு குறைந்ததுடன், உள்ளூர்ச் சந்தையில் இந்தப் பொருட்களின் தட்டுப்பாடு உருவாகியது. கடன் மற்றும் வட்டிக்காக அதிக ஏற்றுமதியை செய்யக் கோரும் நிபந்தனைகள், உற்பத்தியாளனின் தேவைக்கு பொருட்களை இல்லாததாக்கியது. மனிதனுக்கு சக்தியை வழங்கிய உணவு மீதான ஆதிக்கத்தை, சில நிறுவனங்கள் பெற்றுக் கொண்டது.

உலகில் மனிதனுக்கு எந்த உணவுகள் அதிக சக்தியை வழங்குகின்றது எனப் பார்ப்போம்.

| | |
|---|---|
| அரிசி | 26 சதவீதம் |
| கோதுமை | 23 சதவீதம் |
| சீனி | 9 சதவீதம் |



| | |
|---|---|
| சோளம் | 7 சதவீதம் |
| தானியங்கள் மற்றும் மப்புச் சோளம் | 4 சதவீதம் |
| உருளைக் கிழங்கு | 4 சதவீதம் |
| சோயா எண்ணெய் | 3 சதவீதம் |
| மற்றைய எண்ணெய் மற்றும் மரக்கறி | 6 சதவீதம் |
| மற்றவை | 18 சதவீதம் |

இவைதான் மனிதனின் உடல் வலுவுக்கு ஆதாரமான சக்தியை உலகளவில் வழங்குகின்றது. இதில் ஒரு உண்மை வெளிப்படுவதை நாம் காணமுடியும். மனிதனுக்கு சக்தி வழங்கும் பொருட்களின் எண்ணிக்கை குறைந்து போயுள்ளதை இது காட்டுகின்றது. விரல் விட்டு எண்ணக் கூடிய சில பொருட்கள் மட்டுமே, மனித உணவின் ஆதாரமாகியுள்ளது. பன்மையாகவே மனிதனுக்கு சக்தியை வழங்கி வந்த உணவுப் பொருட்கள் காணாமல் போயுள்ளது. கிடைக்கும் இந்த உணவுப் பொருட்கள் விலைச் சரிவையே நாம் மேலே பார்த்தோம். இந்தப் பொருட்கள் ஏகாதிபத்திய நாடுகளில் விலை குறைந்து செல்லுகின்றது. ஆனால் இவை மூன்றாம் உலக நாடுகளில் தொடர்ச்சியாகவே விலை அதிகரித்துச் செல்லுகின்றது. உண்மையில் மேற்கில் ஒரு சீரான போக்கு காணப்பட்டது. உண்மையில் உற்பத்திக்கும் விற்பனைக்கும் இடையில் உள்ள இடைத்தரகர்களின் இலாப வீதமே என்றுமில்லாத அளவில் அதிகரித்தது. உதாரணமாக வாழைப்பழத்தைக் கட்டுப்படுத்தும் பன்னாட்டு நிறுவனங்கள், அதை நுகர்வோருக்கு விற்கும் விலையில் 11.5 சதவீதத்தை மட்டுமே உற்பத்தியாளருக்கு வழங்குகின்றது. உற்பத்தியாளன் இந்த தொகையில் இருந்து தான், மனித உழைப்புக்கு கூலியை வழங்குகின்றான். ஒட்டுமொத்தத்தில் இடையில் உற்பத்தியாளனுக்கும் நுகர்வுக்கும் இடையில் 88.5 சதவீதம் இடைத்தரகர்களே பெறுகின்றனர். இந்த இடைத்தரகரை அடிப்படையாகக் கொண்ட சமூக விரோத வர்க்கம் தான், உலகின் செல்வங்களின் அதிபதிகளாகி வருகின்றனர்.

### உலகச் சந்தையைக் கட்டுப்படுத்தல்

ஏற்றுமதிச் சந்தையைக் கட்டுப்படுத்திய ஏகாதிபத்தியம், மூன்றாம் உலக நாடுகளின் தலைவிதியை பலதுறையில் முடமாக்கியது. சர்வதேச சந்தையில் வர்த்தகப் பொருட்களுக்குத் தேவையான ஆதாரப் பொருட்கள், 1979-இல் 40.5 சதவீதமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்து. இது 1987-இல் 28.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதாவது மூலப் பொருட்களின் விலை வீழ்ந்து, அதனிடத்தில் விலை அதிகம் கொண்ட உற்பத்திப் பொருட்கள் ஆக்கிரமித்துக் கொண்டன. 1980-க்கும் 1986-க்கும் இடையில் ஆதாரப் பொருட்களின் விலை 30 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டது. சில மூலாதாரப் பொருட்களின் விலை கடந்த 50 ஆண்டுகளுக்கு முந்திய அடிமட்ட விலைக்கு வீழ்ச்சி கண்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பான தேசங்களின் வளர்ச்சியை, இதன் மூலம் ஏகாதிபத்தியம் பல்வேறு வழிகளில் தடுத்து நிறுத்தின. சொந்த மக்களைப் பற்றி அக்கறைப்படாத சந்தைப் பொருளாதாரம் என்ற தேசிய கூக்கூரலை, குரல் வளையில் நெறிக்கப்பட்ட நிலையில் ஏகாதிபத்தியங்களால் சிலுவையில் அறைப்பட்டன. உயிர்த்தெழும் அனைத்து வாய்ப்புகளையும், இந்தச்சமூக அமைப்பில் இல்லாது ஒழித்தன.

மூன்றாம் உலக நாடுகளின் மொத்த தலைவிதி படுபாதாளத்தில் வீழ்ந்தது. உண்மையில் 1984-இல் 130 பின்தங்கிய நாடுகளின் மொத்த தொழிலுற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியில் கூட, 73 சதவீதத்தை எட்டு பின்தங்கிய நாடுகளே கைப்பற்றியிருந்தன. இந்த எட்டு நாடுகளும் பிரேசில், மெக்சிகோ, அர்ஜென்டினா, இந்தியா, தென்கொரியா, சிங்கப்பூர், ஹாங்காங், தாய்வான் ஆகியனவாகும். பின்தங்கிய 130 நாடுகளில் 15 சதவீதத்தினர் வாழும் நாடுகள், மொத்த இந்த நாடுகளின் உற்பத்தியில் 53 சதவீதத்தைக் கட்டுப்படுத்தினர். 59 சதவீத மக்கள் வாழும் நாடுகள், மொத்த பின்தங்கிய நாடுகளின் உற்பத்தியில் 17 சதவீதத்தையே கொண்டிருந்தனர். 1981-1985-க்கு இடையில் இந்த 130 நாடுகளின் தேசிய உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வீதம் 1.4 சதவீதமாக இருந்தது. ஆனால் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வளர்ச்சி வீதம் 3.6 சதவீதமாக இருந்தது. உண்மையில் பின்தங்கிய நாடுகளுக்கிடையிலேயே கடுமையான ஏற்றத்தாழ்வு காணப்பட்டது.

அதாவது மூன்றாம் உலக நாடுகளிலும் ஏற்றத்தாழ்வான சமூக இருப்பை ஏகாதிபத்தியம் திணித்தது. ஆழமாக ஏகாதிபத்தியம் புகமுடிந்த பிரதேசங்களில், வளர்ச்சி விகிதம் கூடுதலாக காணப்பட்டது. ஆனால் இதில் உள்ள உண்மை என்னவென்றால், அவை சொந்த தேசிய உற்பத்தியைச் சார்ந்ததாக இருக்கவில்லை. மாறாக அன்னிய மூலதனத்தின் ஊடுருவல் அதிகரிப்பும், அது சார்ந்த உற்பத்தி அதிகரிப்புமே வளர்ச்சியாகக் காட்டப்பட்டது. மூன்றாம் உலக நாடுகளின் தேசிய எல்லைக்குள்ளான தேசிய உற்பத்திகள்,



கடுமையான நெருக்கடிக்குள் சிக்கிச் சிதைந்தன. புதிதாக நவீனத் தொழில் நுட்பத்தின் வருகை, மரபான இயற்கை சார்ந்த இலகுவாக எல்லோராலும் உற்பத்தி செய்யக்கூடிய தொழில் நுட்பத்தை இல்லாது ஒழித்தது. உற்பத்தி மீதான கட்டுப்பாட்டை தேசிய மக்கள் படிப்படியாக இழப்பதை, இந்த நவீனத் தொழில் நுட்பம் துரிதமாக்கியது. ஏகாதிபத்தியத்தின் நவீனத் தொழில் நுட்பம், சந்தையை கட்டுப்படுத்தும் புதிய ஆயுதமாகியது. உற்பத்தித் துறையில் தொடங்கி இது அனைத்துத் துறையிலும் புகுந்து கொண்டது. குறிப்பாக இயற்கை சார்ந்த பரந்த உற்பத்தி வடிவத்தையே முற்றாக மறுதலித்தது. இயற்கை சார்ந்த மனித வாழ்வியல், தொழில் நுட்பம் சார்ந்த எல்லைக்குள் நுட்பமான ஒரு அடிமைக் கருவியானான். மனிதஇனம் மீதான ஏகாதிபத்தியத்தின் மிகக் கொடூரமானதும் வக்கிரமானதுமான இயற்கை விரோதப் போக்காக இது உள்ளது.

மனிதன் வெறுமனே தொழில்நுட்பத்தின் ஒரு உறுப்பாகி, சந்தையில் செல்லாக்காசாகி விட்டான். தொழில்நுட்பச் சந்தை உலகை ஆட்டிப் படைக்கத் தொடங்கியது. இதை அடிமையாக கிடக்கும் மூன்றாம் உலக நாடுகள் நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலையில், சந்தை தனது சொந்தப் புதிருடன் மற்றொரு போக்கில் காணப்படுகின்றது. 1993-இல் பன்னாட்டு நிறுவனங்கள் இலத்திரனியல் துறையில் உள்ள தொழில்நுட்பத்தில் 80 சதவீதத்தை, உலகளாவிய ரீதியில் கட்டுப்படுத்தியது. எல்லா ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் 70 முதல் 80 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. பொதுவான தொழில்நுட்பத்தை 80 முதல் 90 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. இது எதைத்தான் நமக்கு வழிகாட்டுகின்றது. அறிவியல் துறையும், தொழில்நுட்பமும் உலகளவில் கட்டுப்படுத்தும் உலகமயமாதல் என்ற அமைப்பின் சுதந்திரம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்றால், மக்கள் வெறும் வளர்ப்பு மந்தைகள் தான் என்பதை சொல்லாமல் சொல்லி விடுகின்றது. அதாவது மனிதனின் இயற்கையான அறிவியல் தெரிவை மறுத்து, அறிவியல் சூனியத்தையே உலகமயமாக்குவது முதன்மைப் பொருளாகியுள்ளது. அறிவியல் உற்பத்தியை விரிவாக்கும் என்பதால், அறிவியலை பரந்துபட்ட மக்களுக்கு மறுப்பது உலகமயமாதலின் அடிப்டையான விதி. அறிவியலை தனது வர்த்தகம் சார்ந்த உற்பத்திக்கு மட்டும் என்ற எல்லைக்குள் மட்டும்தான் உலகமயமாதல் அறிவை அனுமதிக்கின்றது. மற்றவை அனைத்தும் இருந்த இடம் தெரியாது அழிக்கப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது போன்று பொது அறிவில் கூட இதே நிலை பேணப்படுகின்றது. 1993-இல் ஐ.நா வெளியிட்ட அறிக்கை ஒன்றில், கல்விக்காக உலகில் தனிநபருக்கு வருடம் செலவு செய்வது 207 டாலராகும். இதில் மேற்கு அல்லாத வறிய நாடுகளில் 33 டாலரே செலவு செய்யப்பட்டது. மிக வறிய நாடுகளில் இந்த செலவு புறக்கணிக்கத்தக்க அளவில் மிகச் சிறிதாகவே உள்ளது. உண்மையில் வறிய நாடுகள் 33 டாலரை செலவு செய்ய, மிகுதி மேற்கு நாடுகளில் பங்கிடப்படுகின்றது. பொதுவான அடிப்படையான அறிவின் விருத்தி கூட, வறிய நாடுகளுக்கு அவசியமற்ற பொருளாகிவிட்டது. வறிய நாடுகளின் அறிவும், தொழில் நுட்பமும் திட்டமிட்டே, அடிப்படைக் கல்வி மூலமே மறுக்கப்படும் போது, மேற்கில் இது பன்னாட்டு நிறுவனத்தின் எல்லைக்குள் வக்கிரப்படுகின்றது. லாபம் தரும் சந்தையின் எல்லைதான், அறிவின் வளர்ச்சி விதியாகி விடுகின்றது. இது மூன்றாம் உலக நாடுகளின் நவீன அடிமைத் தனத்துக்கு கம்பளமிட்டுவிடுகின்றது.

அறிவின் மீதான சூறையாடலும், அழிப்பும், திணிப்பும், உலகின் சுதந்திரமான அனைத்து தெரிவையும் மறுக்கின்றது. மறுபக்கம் நவீன அறிவை சில நிறுவனங்கள் தமது தனிப்பட்ட சொத்தாக்கி விடுகின்றனர். 1995-இல் ஐந்து பன்னாட்டு நிறுவனங்கள், இயந்திர வர்த்தகத்தில் 50 சதவீதத்தைக் கட்டுப்படுத்தின. இதன் மூலம் குறிப்பாக நவீன தொழில் நுட்பத்தை ஏகபோகமாக்கி உள்ளனர். இதன் மூலம் 1993-இல் நவீன தொழில் நுட்பம் சார்ந்த உலக வர்த்தகத்தில் பெரும் பகுதியை ஐந்து பன்னாட்டு நிறுவனங்கள் கட்டுப்படுத்தின. உதாரணமாக

| | |
|---|---|
| பாவனைப் பொருட்கள் | 70 சதவீதம் |
| கார் மற்றும் சரக்குகள் | 58 சதவீதம் |
| விமானம் | 58 சதவீதம் |
| வான்வெளிப் பொருட்கள் | 55 சதவீதம் |
| இலத்திரனியல் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகம் | 53 சதவீதம் |
| ஒயில், தனிப்பட்ட கம்ப்யூட்டர், தகவல் உற்பத்தி | 50 சதவீதம் |
| உருக்கு | 50 சதவீதம் |

சர்வதேச சந்தையில் 1993-இல் நவீனத் தொழில் நுட்பம் சார்ந்த உற்பத்திகளை சில நிறுவனங்களே கட்டுப்படுத்தின. இந்த நிலையில் உலகளவில் தேசங்களின் தனித்துவமான தேசியப் பண்புகள் அனைத்தும், இருந்த இடம் தெரியாது போய்விடுகின்றது.



உண்மையில் உற்பத்தி சார்ந்த வளர்ச்சிக்கான தொழில் நுட்பமும் மற்றும் அடிப்படையான மூலவளங்கள் என அனைத்தையும் தேச எல்லைகளைக் கடந்த ஏகாதிபத்தியங்களைச் சார்ந்த சில பன்னாட்டு நிறுவனங்களே கட்டுப்படுத்தின. சுயமான தெரிவும், அது சார்ந்த உற்பத்தியும் உலகளவில் மறுக்கப்பட்டு விட்டன. மக்களின் அடைப்படைத் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றது. மாறாக சந்தைப் பொருளாதாரம் என்ற எல்லைக்குள், உலகளவில் உற்பத்திகள் திட்டமிடப்படுகின்றன. பொருட்களை வாங்கும் திறனை எந்த வர்க்கம் கொண்டுள்ளதோ, அவர்களின் தேவை சார்ந்த பொருள் உற்பத்தி என்ற எல்லைக்குள் உலகப் பொருளாதாரம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பொருளை வாங்கும் திறனற்ற மக்களின் தேவை சார்ந்த உற்பத்தியை மறுப்பதை, உலகமயமாதல் தனது சொந்த நிபந்தனையாகவே கொண்டுள்ளது. உலகமயமாதல் கோட்பாட்டை உருவாக்கிய விரல்விட்டு எண்ணக் கூடிய சில பன்னாட்டு நிறுவனங்கள் பொருளாதாரம், அடிமட்ட மக்களின் தேவையை உற்பத்தி செய்வதில்லை. அவர்களுக்கான உற்பத்திகளையும் அங்கீகரிப்பதில்லை. இப்படி அடிநிலையில் எதையும் வாங்க முடியாத மக்கள் தொகை, மொத்த உலக சனத் தொகையில் அரைவாசிக்கு மேலாக உள்ளது. அடிமட்ட மக்களின் தேவையை மறுப்பவர்களுக்கு, சுதந்திரமான சந்தை விதிகளைக் கூட அனுமதிப்பதில்லை. மாறாக உலகச் சந்தையில் வாங்கத் திறனற்ற மக்களிடம் அடிப்படையாக எஞ்சிக் கிடக்கும் உற்பத்திகளையும், வளங்களையும், கைப்பற்றுவதே உலகமயமாதலின் அடிப்படையான செயல் திட்டமாகும். இதையே இன்று உலகமயமாக்குகின்றனர். இதை விட்டு வேறு எந்த விளக்கமும் உலகமயமாதலுக்கு கிடையாது. இப்படி உருவாகி வரும் உலகம் மீதான ஆதிக்கம் மிகப்பிரம்மாண்டமானது.

2000 ஆண்டில் முதல் மிகப் பெரிய 500 நிறுவனங்களும் அவற்றின் முதலீடுகளும்

| | | |
|---|---|---|
| கம்ப்யூட்டர், தொலைபேசி | 54 நிறுவனங்கள் | 3,47,100 கோடி டாலர் |
| தொலைபேசி சேவைத்துறை | 51 நிறுவனங்கள் | 3,46,100 கோடி டாலர் |
| வங்கி | 65 நிறுவனங்கள் | 1,98,000 கோடி டாலர் |
| கம்யூட்டர் தரவுகள் (அடிப்படைதரவுகள்) | | |
| கம்யூட்டர் சேவைத் துறையும் | 42 நிறுவனங்கள் | 1,92,100 கோடி டாலர் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| மருந்து உற்பத்தி | 21 நிறுவனங்கள் | 1,46,700 கோடி டாலர் |
| பெட்ரோல், வாயு | 13 நிறுவனங்கள் | 1,01,900 கோடி டாலர் |
| மின்சாரம், இலத்திரனியல் பொருட்கள் | 17 நிறுவனங்கள் | 97,700 கோடி டாலர் |
| செய்தி அமைப்பு | 32 நிறுவனங்கள் | 70,700 கோடி டாலர் |
| பெரிய விற்பனையகங்கள் | 15 நிறுவனங்கள் | 70,500 கோடி டாலர் |
| காப்புறுதி | 14 நிறுவனங்கள் | 66300 கோடி டாலர் |

இப்படி நவீனத் தொழில் நுட்பம் சார்ந்த 500 பன்னாட்டு நிறுவனங்கள், உலகளவில் பெரும் ஆதிக்கம் வகிக்கின்றன. சில தனி நிறுவனங்களே பல தேசங்களின் தேசிய வருமானத்தையும் கடந்து ஆதிக்கம் வகிக்கின்றன. இதன் வர்த்தக ஆதிக்கம் என்பது மிகப் பிரம்மாண்டமானது. இது ஒரு புள்ளியை நோக்கிக் குவிகின்றது. எல்லாவற்றையும் சில நிறுவனங்கள் தமதாக்குகின்றன. அத்துடன் ஒரு சில பொருட்கள் என்ற எல்லைக்குள் மனிதனின் நுகர்வைக் கட்டுப்படுத்தி, இயற்கையின் பன்மைக் கூறுகளையே இந்த நிறுவனங்கள் அழிக்கின்றன. சில பொருட்கள் சார்ந்த நுகர்வு என்ற மந்தைத் தனத்தை உலகமயமாக்குகின்றனர்.

உதாரணமாக 1999-இல் முதல்தரமான மார்க்காக இருந்த 20 பொருட்களில் 14 அமெரிக்காவுடையது. முதல் பத்தும் அமெரிக்காவுக்குச் சொந்தமாக இருந்தது. இதே போல் 4 ஐரோப்பாவினுடையதாகவும், 2 ஜப்பானுக்கு சொந்தமாக இருந்தது. இந்தப் பொருட்களின் நுகர்வு சார்ந்த சந்தைப் பண்பாடு, உலகமயமாதலில் வீறுகொண்டு வளர்ச்சியுறுகின்றது. பெருமெடுப்பில் உருவாகும் மனித மந்தைகளைச் சார்ந்த மார்க் நுகர்வே, இன்றைய நவீன சந்தைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. உதாரணமாகச் சிலவற்றைப் பார்ப்போம். நவீன சந்தையில் உலகளவில் 13 இடத்தில் தரநிர்ணயம் செய்யப்பட்ட கொக்கோகோலாவின் சொத்து 4560 கோடி டாலராகும். உலகமயமாக்கும் உலகில், கொக்கோகோலா 200 நாடுகளிலில் 400 விதமான பொருட்களை சந்தைப்படுத்துகின்றது. உலகில் 10 இடத்தில் தரநிர்ணயம் செய்யப்பட்ட பெப்சிக் கோலாவின் சொத்து 5610 கோடி டாலராகும். அமெரிக்க குடிபான விற்பனையில் மூன்றில் ஒன்றை இது கைப்பற்றியுள்ளது. சந்தை வர்த்தகத்தில் மொத்தமாக 8680 கோடி டாலராக உள்ளது. இப்படி அமெரிக்காவில் தொடங்கி உலகெங்கும் தனது ஆதிக்கத்தால் இறுக்கி விரிகின்றது. உலகின்



குடிபானம் இவைகள் மட்டுமே என்ற நிலை மாறி வருகின்றது. உண்மையில் வளர்ப்பு மந்தை நிலையில், ஒரே குடிபானம் என்ற நிலைக்கு மனிதனை மூலதனம் மாற்றி வருகின்றது. அற்கோல் அல்லாத குடிபான உற்பத்தியில் 41 சதவீதத்தை கொக்கோகோலா, பெப்சிக்கோலா, நெஸ்ரில், டான் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் கைப்பற்றியுள்ளன. அதாவது 2002-இல் மொத்தமாக உலகில் விற்பனைக்கு 65,000 கோடி லிட்டர் குடிபானம் விற்கப்பட்டது. இதில் 26,650 கோடி லிட்டரை இந்த நான்கு நிறுவனங்களுமே சந்தைப்படுத்தின. 65,000 கோடி லிட்டர் குடிபானத்தை உலகளவில் நுகர்வோரில் மேற்கு ஐரோப்பியர் தலா வருடம் 105 லிட்டரும், வடஅமெரிக்கர் 68 லிட்டரும், தென்அமெரிக்கர் 44 லிட்டரும், கிழக்கு ஐரோப்பியர் 20 லிட்டரும், மத்திய ஆப்பிரிக்கர் 11 லிட்டரும், ஆசியா மற்றும் பசிபிக் நாடுகள் 6 லிட்டர் வீதமாக இருந்தது. மந்தைப்புத்தி கொண்ட மார்க் நுகர்வு மேற்கில் அதிகமாகவும், பின்தங்கிய நாடுகளில் குறைவாகக் காணப்படுகின்றது. தேசிய உணவு மற்றும் குடிபானப் பண்பாடுகள் அன்னிய குடிபான ஊடுருவலை மட்டுப்படுத்தி எதிர் நீச்சலடிக்கவே முனைகின்றது. ஆனால் பெரும் பன்னாட்டு நிறுவனங்கள் தேசியக் குடிபான உற்பத்திகளைக் கட்டுப்படுத்த பலவிதமான குறுக்குவழி சூழ்ச்சிகளை ஆதாரமாகக் கொள்கின்றது. ஆட்சி அமைப்பையும் சட்டதிட்டங்களையும் தனக்கு இசைவாக மாற்றி, சந்தையில் தேசியக் குடிபானங்களை இல்லாது ஒழிப்பதே அவர்களின் முதல் பணியாக உள்ளது. சந்தையை முற்றாக ஆக்கிரமிப்பது இந்த நிறுவனங்களின் சுதந்திரமான பணியாக உள்ளது.

இதற்கு தனது மிகப் பெரிய உலக வர்த்தக ஆதிக்கத்தையே பயன்படுத்துகின்றது. இந்தியாவை எடுத்தால் ஆயிரக்கணக்கான தேசிய குளிர்பான உற்பத்திகள், மிகக் குறுகிய காலத்திலேயே அழிக்கப்பட்டது. உலகில் மிகப் பெரிய குடிபான உற்பத்தி சார்ந்த மூலதனம் இதற்கு துணையாக இருந்தது. கொக்கோகோலாவின் மொத்த விற்பனை 2002-இல் 1680 கோடி ஈரோவாக இருந்தது. இதன் நிகர லாபம் மட்டும் 260 கோடி ஈரோவாக இருந்தது. இந்த நிறுவனம் தண்ணீர் விற்பனையில் உலகளவில் 6 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. இதே நேரம் பெப்சிக்கோலா 2002 மொத்த விற்பனை 2700 கோடி ஈரோவாக இருந்தது. இதன் நிகர லாபம் 360 கோடி ஈரோவாகும். உலகளவில் நீர் விற்பனையில் 4 சதவீதத்தைக் கட்டுப்படுத்தியது. 1996-இல் உலகில் மிகப் பெரிய குடிபானத்தை தயாரித்த பெப்சிக்கோலா நிறுவனம் உலகில் 500



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிற்சாலைகளை உருவாக்கி இருந்தது. இந்த உற்பத்தியில் 100-க்கும் மேற்பட்ட நாடுகளில் 3.35 லட்சம் தொழிலாளர்களைக் கொண்டு இயங்கியது. இப்படி குடிபான உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தும் இந்த நிறுவனங்கள் எதை உற்பத்தி செய்கின்றதோ, அதையே மக்கள் குடிக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. இங்கு தெரிவு மற்றும் சுதந்திரம் என எதுவும் சிந்திக்கும் மனிதனுக்கு கிடையாது. இதே போல் தான் உணவும். அடைக்கப்பட்ட உணவுகளை பெருமளவில் தயாரிக்கும் நெஸ்ரில் 126 நாடுகளில் 2 லட்சம் தொழிலாளர்களுடன் இயங்குகின்றது. குடிபானம் முதல் உணவுப் பொருட்கள் வரை சில நிறுவனங்கள் தனதாக்குகின்றன. அத்துடன் இந்த நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பொருட்களே அன்றாட மனித உணவாக்கப்படுகின்றன. இதற்கு வெளியிலான மாற்று மற்றும் சுதந்திரத் தெரிவை மறுப்பதே உலகமயமாதல். உதாரணமாக மக்டொனால் என்ற உணவக உணவு 1955-இல் ஒரேயொரு நாட்டில் சிலரால் மட்டும் உண்ணப்பட்டது. ஆனால் 1975-இல் 20-க்கு உட்பட்ட நாடுகளில் இந்த உணவு உண்ணும் நிலை உருவானது. ஆனால் 1999-இல் 109 நாடுகளில் அன்றாட உணவாகியுள்ளது. மனிதன், உழைப்பும் அதனால் உருவாகும் பண்பாடு சார்ந்து வெளிப்பட்ட, பன்மை சார்ந்த உணவுக் கலாச்சாரம், எப்படி அழிந்து வருகின்றது என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. மாறாக மந்தைக்குரிய பண்பாடு சார்ந்த உணவைப் பெறும் வழிகளில், சந்தை மனிதப் பண்பாட்டையே மாற்றுகின்றது.

மூன்றாம் உலகில் அடிநிலையில் வாழும் மக்கள் இந்த உலகச் சந்தையில், இந்த உணவை வாங்கி உண்ண முடியாது. இதனால் பாரம்பரியமான சில உணவு பழக்கங்கள் தக்கவைக்கப்படுகின்றன. ஆனால் அதேநேரம் தனது அன்றாட உணவுக்கான உற்பத்திகளை இழந்துவிடுகின்ற பரிதாபம் நடக்கின்றது. உற்பத்திகள் கூட ஏற்றுமதியாகி விடுகின்றன. மக்கள் தமது உற்பத்தி முறைமைகளை இழப்பது மட்டுமின்றி, பன்மையான பண்பாட்டு கலாச்சாரங்களையும் இழக்கின்றனர். ஒட்டு மொத்தமாக நுகர்வின் முறைமை மாறுகின்றது. பண்ணையில் மந்தைகள் எப்படி வாழ்கின்றனவோ, அப்படி மக்கள் சில நிறுவனங்களின் உற்பத்தி சார்ந்த அடிமையாக வாழக் கோருவதே உலகமயமாதல்.



## 13. மனித குலத்தை நலமடிப்பதற்காகக் கட்டமைக்கப்பட்டதே உலகமயமாக்கம்

உலகமயமாதல் எப்படி மனித குலத்துக்கு எதிராகச் செயல்படுகின்றது என்பதையே மேலே பார்த்தோம். மனித வாழ்விற்கான சகல அடிப்படைக் கூறுகளையும், மனிதன் ஒரு சமூகக் கூறாக நெருங்க முடியாத வகையில், நலமடிப்பதே உலகமயமாதலின் அடிப்படை குறிக்கோளாகவே உள்ளது. இயங்கியலின் போக்கையே இது மறுதலிக்கின்றது. இயற்கையின் உள்ளடக்கத்தை, மனிதன் தனது சமூக இருப்பின் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திய இயங்கியல் போக்கில் இருந்து, அவனைத் துண்டிக்கும் பணியை மூலதனம் செய்கின்றது. அதாவது மனிதர்களின் மிகப் பெரும் பகுதியை மந்தைக்குரிய நிலைக்குத் தரம் தாழ்த்தி, அடைத்து வளர்க்கும் ஒரு மந்தையின் பண்பின் நிலைக்கு இட்டுச் செல்வதே உலகமயமாதலாகும்.

மனித உழைப்பை வரைமுறையின்றிச் சுரண்டவும், அவனின் தேவையை வெறும் மந்தைக்குரிய நிலையில் தான் கொடுப்பதை மட்டும் நுகரப் பண்ணுவதன் மூலம், உலகை ஒரு குடையின் கீழ் சொத்துடைய சிலர் அடக்கியாள நினைப்பதே இன்றைய உலகமயமாதலாகும். மனிதனுக்கு நிகழும் இந்த அவலநிலையை முழுமையாக புரிந்து கொள்ளும் வகையில், இதையொட்டிய பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுரைகள் உள்ளடங்கிய வேறு சில நூல்கள் மிக விரைவில் வெளிவரவுள்ளது. உலகளாவிய கடன், சுற்றுச்சூழல், தண்ணீர், அகதிகள், போர்கள், கடல் வளம், நிலவளம், இயற்கை, மரபணு மாற்றங்கள், தன்னார்வக் குழுக்கள் என பற்பல விடையங்களை எனது இந்த நூல் உள்ளடக்கவில்லை.

மனித இரத்தத்தை உறிந்து வெறியாட்டம் போடும் மூலதனத்தின் அடங்காவெறியுடன் உலகம் சூறையாடப்படுகின்ற இன்றைய நிலையில், அவற்றை சுயமாகப் புரிந்து கொள்வதற்கு இந்த நூல் சுயாதீனதமாகவே உங்களை அழைத்துச் செல்கின்றது. ஒவ்வொரு தரவும் இந்த உலகமயமாதலின் கோரத்தை எடுத்துக் காட்டுவனவாக இருப்பதை இது உறுதி செய்கின்றது.

பொருட்களே மனித சிந்தனையினை உருவாக்குகின்றது என்ற உள்ளடக்கத்தை, மூலதனம் மிகச் சரியாக உள்வாங்கியபடி, மனிதனின் உணர்வை நுகர்வுக் கண்ணோட்டத்தில் உலகமயமாக்கிச் சிதைக்கின்றது. இதன் மூலம் பொருட்களின் மீதான நுகர்வு வெறியூட்டப்பட்டு, மனிதனை மந்தப்புத்தி உள்ள ஒருவனாகவே உருவாக்குகின்றது. அதாவது உலகமயமாதலில் ஊடகவியல் இப்படித்தான், இதற்குள் தான் இயங்குகின்றது. பொருளாதார ரீதியாக ஆதிக்கம் பெற்ற வர்க்கங்கள், முதலில் இந்த நுகர்வு வெறி பண்பாட்டுக்குள் பலியாகின்றனர். இது விதிவிலக்கின்றி உலகின் மூலைமுடுக்கெங்கும் பரவிச்செல்லுகின்றது.

சாதாரண ஏழைக் குடும்பங்களில் கூட, உழைப்பில் இருந்து அன்னியமாகும் குழந்தை கூட தனது அற்பக் கூலியைக் கொண்டு ஆடம்பரமான நுகர்வை அடையத் துடிக்கும் வகையில், சிந்தனைத் தளம் மிக மோசமாகவே சமுதாயத்தில் ஒரு நஞ்சாக ஊடுருவிப் பாய்கின்றது.

மக்கள் தமது உழைப்பையும், சொத்துக்களையும் மூலதனத்திடம் வரைமுறையின்றி இழந்து வரும் இன்றைய நிலையில், வறுமையும் இயலாமையும் உலகத்தின் நியதியாகி விடுகின்றது. இதுவே சுதந்திரம், இதுவே மனித ஜனநாயகம் என்ற விளக்கமே உலகின் பொதுவாக அங்கீகாரம் பெற்ற ஒன்றாகவும் அடிப்படைக் கோட்பாடாகவும் உள்ளது. சிலர் உண்டு வாழும் வாழ்க்கையே, எதார்த்த உலகின் உன்னதமான ஜனநாயகமாகவும், சுதந்திரமாகவும்



புனையப்பட்டுள்ளது. இந்த வாழ்க்கை வாழ்பவனின் இருப்பை ஏற்றுக் கொள்வதே, ஜனநாயகமாகவும் சுதந்திரமாகவும் அங்கீகரிக்கும் சித்தாந்தம் மிக நுட்பமாகவே மனித சிந்தனையில் புகுத்தப்படுகின்றது.

உழைக்கும் மக்கள் தமது உழைப்பை விற்றபின், அவர்கள் வாழவழியற்ற நிலையில் இட்டுச் செல்கின்றது உலகம். உழைப்பை வாங்கியவன் செல்வங்களின் உச்சியில் ஏறியமர்ந்து கொண்டு, உலகை தனக்கு இசைவாக வழிகாட்ட முனைகின்றான். தனக்கு உலக மக்கள் சேவை செய்வதன் மூலமே, மக்கள் சந்தோசமாக வாழமுடியும் என்ற மனிதவிரோத உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட, உலகளவில் மிகப் பெரிய பணக்காரக் கும்பலுக்கு சேவை செய்வதே இன்று மிகப் பெரிய சேவைத்துறையாக திரிபடைந்து விட்டது.

இந்த உலகமயமாதலின் கோரமுகத்தை நாம் புரிந்து கொள்ள, ஒவ்வொரு சின்ன விடையங்களையும் நுணுகிப் புரிந்து கொள்வது மனிதனின் இன்றைய அறிவியல் தேவையாகும். இதை நாம் செய்யும் போது நாம் காண்பது, மிகப் பிரம்மாண்டமான அழிவில் மனித இனம் நின்று கொண்டிருப்பதைத்தான். ஒரு அடிமையாய், தெருவோர நாயாய், மனிதன் மாற்றப்பட்டதைப் புரிந்து கொள்ள முடியும். இந்த உலகமயமாதல் இதைத் தான் மனித சமூகத்துக்கு வழிகாட்ட முனைகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும். மனிதன், தனக்காக, தான் போராட வேண்டிய அவசியத்தை இது வழிகாட்டுகின்றது.

★★★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இந்த நூலை எழுத உதவிய நூல்கள்

இந்த நூலை எழுதப் பயன்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்கள், தரவுகளை தந்த நூல்கள், பத்திரிகைகள் மற்றும் கட்டுரைகளின் பட்டியல்.

| | | |
|---|---|---|
| 1 | நெல்சன் மண்டேலா | தியாகு |
| 2 | வேளாண்மை தொழிலா? கலாச்சாரமா? வாழ்வுமுறையா? | கோ.நம்மாழ்வார் |
| 3 | சிஐஏ குறியிலக்கு | நிக்கோலாய் யாகேவ்லெவ் |
| 4 | மூன்றாம் உலகம் வளர்ச்சியா, நெருக்கடியா? | மூன்றாம் உலக மாநாட்டின் அறிக்கை -1984 |
| 5 | தமிழக சுற்றுச்சூழல்பிரச்சனைகள் | எஸ்.டி.மணா |
| 6 | சிலந்தி வலை | பூவுலகின் நண்பர்கள் |
| 7 | சரணாகதிப் பொருளாதாரம் | டி.எம்.தாமஸ் ஐசக், கே.என்.ஹரிலால் |
| 8 | தடங்கல் | பூவுலகின் நண்பர்கள் |
| 9 | உலக வங்கியின் ஆரோக்கியமற்ற போக்குகள் | பூவுலகின் நண்பர்கள் |
| 10 | மூன்றாம் உலகப்போர் தண்ணீருக்கா? | சான்ட்ரா போஸ்டல் |
| 11 | அமெரிக்க மோகம் | வி.வி.மு, பு.மா.இ.மு, ம.க.இ.க, பு.ஜ.தொ.மு |
| 12 | நிதிகளின் உலகமயமாக்கம் | கவால்ஜித் சிங் |
| 13 | வரும்முன் காக்கும் தடுப்பு மருத்துவம் | டாக்டர் ஐ. சிவசுப்ரமணிய ஜெயசேகர் |
| 15 | தடைசெய்யப்பட்ட, தடை செய்யப்பட வேண்டிய, மற்றும் அவசியமான மருந்து | டாக்டர் ப.இக்பால் |
| 17 | வேண்டும் இந்த மருந்துகள் | டாக்டர் தி.சுந்தரராமன் |
| 18 | வேண்டாம் இந்த மருந்துகள் | டாக்டர் தி.சுந்தரராமன் |
| 19 | காட்-டாட்சி | புதிய ஜனநாயகம் வெளியீடு |
| 20 | வஞ்சக வலை விரிக்கும் தன்னார்வக் குழுக்கள் | கீழைக்காற்று |
| 21 | தனியார்மயமாக்கம் ஒரு தேசத்துரோகம் | கே. அசோக்ராவ் |
| 22 | மண்ணை விற்று முன்னேற்றமா? | வி.வி.மு, பு.மா.இ.மு, ம.க.இ.க |
| 23 | அமெரிக்க மான்சாண்டோ விதைக் கம்பெனியை விரட்டியடிப்போம்! | வி.வி.மு |
| 25 | விளைநிலங்களை பாலையாக்கும் இறால் பண்ணைகள் | வி.வி.மு |
| 26 | நாட்டை மீண்டும் காலனியாக்காதே! மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே! | வி.வி.மு, பு.மா.இ.மு, ம.க.இ.க |
| 28 | பெல் - ஐ அழிக்கும் தேசத்துரோக காங்கிரசின் புதிய மின் கொள்கை | பெல் தொழிற்சங்கங்கள் |
| 30 | நீலப்புரட்சியின் நெருக்கடி | மு.பாலசுப்ரமணியன் |
| 31 | இந்தியாவின் ஏற்றுமதி உற்பத்தி வளாகங்கள் | பூவுலகின் நண்பர்கள் |
| 32 | ஏகாதிபத்தியத்தின் உலகமயமாக்கல் | ஃபிடல்காஸ்ட்ரோ |
| 33 | உலகமுதலாளித்துவ நெருக்கடியும் நான்காம் அகிலத்தின் பணிகளும் | நான்காம் அகிலம் |
| 34 | உயிரியல் புரட்சியின் ஒடுக்குமுறை | மு.பாலசுப்பிரமணியன் |
| 35 | உலகமயமாக்கல் சூழலும் | |
| 36 | பொதுவுடைமை இயக்கத்தின் பிளவும் - பின்னடைவும் | எல்ஜியெஸ் |
| 37 | ஊழலும் ஊழலின் பரிமாணங்களும் | பி.எஸ்.பன்னீர்செல்வம் |
| 38 | அணுவாற்றல்: ஓர் அறிமுகம் | பூவுலகின் நண்பர்கள் |
| 39 | வாழ்வுக்கும் பிழைப்பிற்கும் இடையில் ஆரோக்கியம் அடிப்படை உரிமையா? பாதுகாப்பு வலையா? | தி.சுந்தரராமன் |
| 41 | பா.ஜ.க.வின் அணு ஆயுத சோதனையும் விளைவுகளும் | மொழி பெயர்ப்பு கட்டுரைகள் |





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | | |
|---|---|---|
| 42 | புதிய உலக நிலைமைகளின் கீழ் சர்வதேசப் புரட்சிக் கடமைகள் | இந்தியப் பொதுவுடமைக்கட்சி (மா-லெ) மாநில அமைப்புக் கமிட்டி தமிழ்நாடு |
| 44 | நர்மதா ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டம் ஓர் ஆய்வு | பூவுலகின் நண்பர்கள் |
| 45 | இயற்கை வளங்களை பாதுகாப்போம் | பிடல் காஸ்ட்ரோ |
| 46 | நம்மை பாதிக்கும் நச்சுக் கழிவுகள் | பூவுலகின் நண்பர்கள் |
| 47 | பசுமைப் புரட்சியின் வன்முறை | வந்தனா சிவா |
| 48 | அணுசக்தி | பீட்டர் பன்யார்ட் |
| 49 | மக்கள் கலாசாரத்தை மண்ணாக்கும் சக்திகள் | வல்லிக்கண்ணன் |
| 50 | விதைகள் | மொழி பெயர்ப்பு கட்டுரைகள் |
| 51 | லத்தீன் அமெரிக்காவில் ஏகாதிபத்திய நிகழ்ச்சிகள் | கரீன் கச்சதுரோவ் |
| 52 | உலக வங்கி கடன் மீள முடியுமா? பகுதி -3 | சூசன் ஜார்ஜ் |
| 53 | சூழலியல் | பூவுலகின் நண்பர்கள் |
| 54 | புதிய மருந்துக் கொள்கை மக்கள் நலனா? கொள்ளை லாபமா? | நீதிபதி சுப்ரமணியன் போத்தி |
| 55 | புகையால் எங்களை புதைக்காதீர்கள் | பினாங்கு பயனீட்டாளர் சங்கம் |
| 56 | விளைநிலத்தில் தேக்கு விவசாயிகளின் கழுத்துக்கு தூக்கு | விவசாயிகள் விடுதலை முன்னணி |
| 57 | டங்கல்திட்டம் ஒரு விமர்சனம் | க.சந்தானம் எம்.ஏ. |
| 58 | குற்றவாளிக் கூண்டில் முதலாளித்துவம் | ப.வி.கக்கிலாயா |
| 59 | வாழ்வே அறிவியல் | கே.கே.கிரஷ்ணகுமார். |
| 60 | ஆசிய சமாதானத்துக்கு யாரால் ஆபத்து? | வி.வி.சுவாமிநாதன் |
| 61 | கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை | மார்க்ஸ் ஏங்கெல்ஸ் |
| 62 | சட்டத்தை மதிக்காமல். | இவான் அர்ட்சிபசோவ் |
| 63 | சமர் | பாரிசில் இருந்து வெளிவரும் மார்க்சிய பத்திரிகை |
| 64 | தினக்குரல் | இலங்கையில் வெளிவரும் செய்திப் பத்திரிகை |
| 65 | ஆப்கன் வரலாறும் அமெரிக்க வல்லூறும் | சு.பொ. அகத்தியலிங்கம் |
| 66 | நீதிக்குப் போராடும் பாலஸ்தீன மக்கள் | என்.ராமகிருஷ்ணன் |
| 67 | சிஐஏ | பாலி வி பாரக்கல் |
| 68 | பறை | நோர்வை தமிழ் சஞ்சிகை |
| 69 | அதிகார ஆணவம் | எவ்கெனி லுகவோய் |





| | | |
|---|---|---|
| 70 | பயங்கர அமைப்பிலிருந்து வரும் பயங்கரங்கள் | முன்னோடி வெளியீடு |
| 71 | மதவாத சக்திகளின் சவால்களை முறியடிப்போம்! | செங்கொடி வெளியீடு |
| 72 | உலகமயம் பண்பாடு சமூக மாற்றம் | கட்டுரைத் தொகுப்பு |
| 73 | மார்க்சிய சர்வதேசியம் எதிர் தீவிர எதிர்ப்பு முன்னோக்கு | இணைய மொழி பெயர்ப்பு கட்டுரை |
| 74 | மூலதனம் | மார்க்ஸ் |
| 75 | புதியஜனநாயகம் | இந்திய மார்க்சிய லெனினியப் பத்திரிகை |
| 76 | சனநாயகப் புரட்சியின் சமூக சனநாயகவாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் | லெனின் |
| 77 | ECONOMIC RESEARCH DEPARTMENT | |
| 78 | THE WORLD'S WOMEN 2000: TRENDS AND STATISTICS | |
| 79 | HDRO homepage | |
| 80 | உறவு-12 | |
| 81 | திருத்தல்வாதம் எதிர்ப்போம், மார்க்சியம் காப்போம். | லெனின் |
| 82 | மார்க்ஸ் எங்கெல்ஸ் மார்க்ஸியம் | |
| 83 | புதிய கலாச்சாரம் | இந்திய மார்க்சிய பத்திரிகை |
| 84 | விதைகள் | |
| 85 | சரணாகதிப் பொருளாதாரம் | |
| 86 | CHALLENGES | |
| 87 | MARIANNE - 11.2000 | |
| 88 | LIBERATION | |
| 89 | உயிரோடு உலாவ இந்தியப் பெண்களின் வாழ்க்கைப் போராட்டமும் சுற்றுச் சூழலும். | வந்தனா சிவா |
| 90 | குற்றவாளிக் கூண்டில் சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும் | பகுதி -2 |
| 91 | ஏகாதிபத்தியம் முதலாலாளித்துவத்தின் உச்சக்கட்டம் | |
| 92 | புதிய உலக நிலைமைகளின் கீழ் சர்வதேச புரட்சிக் கடமைகள் | இ.பொ.க (மா-லெ) மா.அ.க தமிழ்நாடு |
| 93 | உலக வங்கி கடன் மீள முடியுமா? | சூசன் ஜார்ஜ் |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

94 இலங்கையில் மலையகத் தமிழர்
95 முன்னணிச் செய்தி இதழ் -5 -1885 இல் என்.எல்.எப்.டியின் பத்திரிகை
96 COURIER - INTERNATIONAL
97 LE FIGARO ECONOMIE
98 PARISIEN
99 சரிநிகர்
100 ஆதவன்
101 IMPERIALISM - Decadent; Parasitic, Moribund, Capitalism Harpal Brar
102 தொழிலாளர் பாதை
103 Challenges
104 ECONOMISTE
105 ALTERNATIVES ECONOMIQUES
106 ECONOMIA
107 COURIER
108 Banque Mondiale
109 L'Economie Mondiale 1820-1992
110 La dette dans le tiers monde
111 Peches, alimentation et development
112 Courier
113 Newsweek
114 L'Express
115 Jonas
116 OBSERVATEUR
117 Population Mondiale - 1997
118 Forbes.com
119 la pauvrete des enfants - 2000
120 உலக வங்கி இணையம்
121 ஐ.நா இணையம்
122 Faim Development
123 கூரியர்
124 ILO
125 உலகமயமாக்கலும் தலித் மக்களும் சேது
126 உலகமயமாக்கலும் மார்க்சியமும்
127 இணையத்தளம் வாசு
128 திடீர் ஜனநாயகம் அருந்ததிராய்
129 மூலதனம் மார்க்ஸ் (ஜமதக்னி)
130. Courier International



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



உலகைச்சுருக்கி, உள்ளொளி பெருக்க வந்ததாய்,
உலகமயத்தைப் பார்த்து
கன்னத்தில் போட்டுக்கொள்ளச் சொல்கிறார்கள்
சில 'முன்னேறிய பக்தர்கள்'.

உலகைச்சுருட்டி,
மனித உழைப்பையும், வாழ்வையும் சூறையாடுவதே
உலகமயம் என்பதை
உள்ளத்தில் உரைக்கும்படி புள்ளிவிவர உண்மைகளுடன்
புரிந்து கொள்ள வைக்கிறது இந்நூல்.

ஐ.நா. நரிகளை பரியாக்கி,
ஏகாதிபத்திய மேலாதிக்கத்திற்காக,
எண்ணெய்க் கொள்ளைக்காக
ஈராக்கையே கந்தகவெறியுடன் கரியாக்கி,
தேசம் கடந்து, மலைகளை விழுங்கி,
காடுகளை மென்று, விளைநிலங்களைப் பறித்து
முந்தைய வரலாற்றுப் பேய்க்கதைகளை எல்லாம்
பின்னுக்குத் தள்ளி, முன்னுக்கு வந்து
உலகத்தையே அலறவைக்கிறது
மூலதனத்தின் திருவிளையாடல்.